நாவலர் நறுமலர்

சிறப்பு மலர் – ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு 2016

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும்

இந்துமத அலுவல்கள் அமைச்சு

நாவலர் நறுமலர்

உ

நாவலர் நறுமலர்

சிறப்பு மலர் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு 2016

பதிப்பாசிரியர்கள்

க. இரகுபரன்

ஸ்ரீ. பிரசாந்தன்

மு. கௌரிகாந்தன்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்

இந்துமத அலுவல்கள் அமைச்சு

நாவலர் நறுமலர்

பதிப்பாசிரியர்கள்
க. இரகுபரன்
ஸ்ரீ. பிரசாந்தன்
மு. கௌரிகாந்தன்

பதிப்பு: 2016

வெளியீடு
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு

அச்சு
குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06

விலை: ரூபா 1000.00

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்குக!

இலங்கையில் சைவமும் தமிழும் தனது இரு கண்க என அவை தழைத்தோங்க அரும்பணியாற்றியவர் நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆவார். சமயத்தின் பொருட்டும் தமிழ் மொழியின் பொருட்டும் சமுதாயத்தின் பொருட்டும் பல பணிகள் அவரால் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய சிறப்பு மிக்க நாவலர் பெருமான் அவர்களின் பணிகளை இன்றைய சமுதாயத்தினரும் அறிந்து கொள்ளும் வகையில் அவரின் பெருமையை எடுத்தியம்பும் வகையில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அதன் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு' ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளமையை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். இம்மாநாடு சிறப்பாக அமைய வேண்டும் என்பதுடன் இம் மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள், பேச்சாளர்கள், கலைஞர்கள் முதலான அனைவருக்கும் இதய பூர்வமான வாழ்த்துக்கள். மேலும் இம்மாநாடு தொடர்பாக வெளியிடப்படும் இச்சி றப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

இரண்டாவது குருமகாஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை ஜனாதிபதி
President of Sri Lanka

Message from His Excellency the President

I am pleased to send this message to the 30th anniversary celebration of the Department of Hindu Religious and Cultural Affairs, which is under the Ministry of Hindu Affairs.

The decision to hold a conference on Arumuga Navalar, who was described as the Champion Reformer of the Hindus by Sir Ponnambalam Ramanathan is most appropriate as it would help recall the great revival of Hinduism, which had suffered under colonial rule in the Maritime Provinces.

The dedication of Arumuga Navalar for the defence of Saivism is noteworthy. He was eminently successful in his efforts. Modern Saivism in its present form had its regeneration under Arumuga Navalar. I commend his service performed for the modernization of the Tamil language through an immense contribution to the Tamil Renaissance in the 19th century.

I deeply appreciate the work done by the Department of Hindu Religious and Cultural Affairs during the past 30 years. It has made a remarkable contribution to Hinduism and Hindu education.

I congratulate the Department of Hindu Religious and Cultural Affairs for organizing this event in honor of Arumuga Navalar, one of the greatest sons of Sri Lanka.

I wish the 30th anniversary celebration every success!

Maithripala Sirisena

November 08, 2016

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம அமைச்சர்

Prime Minister of Sri Lanka

Message from the Hon. Prime Minister

I am highly delighted to hear that the Department of Hindu Religious and Cultural Affairs, which is under the Ministry of Hindu Affairs is celebrating its 30th anniversary in this year and a Conference on Arumuga Navalar is a part of the programme.

Arumuga Navalar was the greatest Tamil scholar of the 19th century. He was accorded the highest honours in Tamil Nadu because of his achievements. The regeneration of Hinduism in Sri Lanka during the 19th century was a result of his work. He has left behind a school of followers who have made a remarkable contribution to studies on Tamil and Saivism until recently.

I have great pleasure in sending my felicitations to the Department of Hindu Religious and Cultural Affairs on this occasion. I deeply appreciate that the Department of Hindu Religious and cultural Affairs has made a great contribution to the development of Hinduism and Hindus. I earnestly wish that their programme of activities relating to the 30th anniversary will be very successful.

Ranil Wickremesinghe
Prime Minister

10th November 2016

විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கைப் பாராளுமன்றம்
Leader of the Opposition - Parliament of Sri Lanka

எதிர்க்கட்சித் தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான கௌரவ இரா.சம்பந்தன் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நவம்பர் மாதம் 18, 19, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் யாழ்நகரில் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வுகளையொட்டி வெளியிடப்படும் விழாமலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்வெய்துகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இளமையிலேயே தமிழ்ப் பற்றும் சமயப் பற்றும் கொண்ட பன்முக ஆளுமை பொருந்திய ஒருவராக விளங்கினார். அவர் தமிழ் இலக்கண வித்தகராகவும், சாத்திரங்கள், சிவாகமங்கள் கற்றவராகவும் விளங்கியவர். ஆங்கிலத்திலும் சமஸ்கிருத்திலும் புலமை பெற்ற ஒருவராகவும் சிறப்புப் பெற்றிருந்தார். நீண்ட வசனநடைகள் பாவனையிலிருந்த காலத்தில் சிறிய வசன நடைகளை அறிமுகப் படுத்தியதன் மூலம் வசனநடை கைவந்த வல்லாளர் எனப் போற்றப்பட்டுப் பெருமை பெற்றவர்.

நல்லாசிரியராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும் விளங்கிய அவர், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த தகைமையாளராக விளங்கியதுடன் இல்லறம் ஏற்காது நற்பணிகள் பல புரிந்த பெரியாராகவும் வாழ்ந்தவராவார். சைவசமயம் மற்றும் தமிழ் மொழி மீதான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு இவர் அதிக அளவில் தொண்டாற்றியுள்ளார். இவர் ''சைவமும் தமிழும் எனது இரு கண்கள், அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன்'' என்ற உயர்ந்த குறிக்கோளுடன் செயலாற்றிய பெருந்தகையாவார்.

விவியிய நூலுக்குச் சிறந்த மொழிபெயர்ப்பைச் செய்தமை, திருக்குறளுக்கான பரிமேலழகர் உரையை முதலில் பதிப்பித்தமை, நன்னூல் காண்டிகை உரை என்ற தமிழ்

இலக்கண நூலைப் பதிப்பித்தமை, பெரிய புராண வசனம் எழுதியமை போன்ற பெரும் பணிகள் அவரது பெருமைக்குச் சான்று பகர்வனவாகும். அவர் இயற்றிய சைவ வினாவிடை, பாலபாடம் ஆகிய நூல்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் அறிவு நூல்களாக இன்றும் போற்றப்படுபவை.

அவர் சென்னையில் அச்சியந்திரசாலையை நிறுவியதோடு யாழ்ப்பாணத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையையும் மேலும் பல கல்விச்சாலைகளையும் நிறுவி தமிழ் மக்கள் கல்வி, சமயம் போன்ற துறைகளில் முன்னிலை பெற ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கியிருந்தார். திருவாவடுதுறை ஆதீனம், அவருக்கு 'நாவலர்' எனப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

தமிழுக்கும் சைவத்துக்கும் தன் வாழ்நாள் முழுவதும் இடையறாது பெரும் தொண்டாற்றிய பெருமகனார் 1879 மார்கழி மாதம் இறைவனடி எய்தினார்.

இத்தகைய பெருமையும் சிறப்பும் வாய்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பற்றிய மாநாட்டையும் அவரது குருபூசையையும் இந்துசமய கலாசாரத் திணைக்களம் திணைக்களத் தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடாத்துவது பாராட்டத்தக்கதாகும். இந்நிகழ்வு சிறப்புற நடந்தேற எனது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி!

இரா.சம்பந்தன், பா.உ.
எதிர்க்கட்சித் தலைவர்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம்
மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

மாண்புமிகு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அவர்களின்

வாழ்த்துரை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நம்மை உய்விக்க வந்த அவதார புருடர். அவர் பிறந்திலரேல் தமிழ்மொழியும் வைதிக நெறியும், புராண ஆகமங்களும், சைவசித்தாந்தத் தெளிவும் இன்னபிற நமக்குரித்தாம் முதுசொம் யாவும் நமக்கு உரியனவல்ல என்று ஆகியிருக்கும். தெளிந்த அறிவும் ஆற்றலும், நெறிப்பட்ட ஒழுக்கமும், மனிதாபிமானமும், அடக்குமுறைகளுக்கு அஞ்சாத துணிவும், நீதியை நிலைநாட்டும் போராட்ட குணமும், ஓய்வொழிச்சல் இல்லாத செயற்பாட்டுத் திறமும் என்று இன்னோரன்ன ஆளுமைகளின் திரண்ட வடிவமாய் நம் மண்ணில் உலாவிய நாவலர் பெருமான் இன்றும் நம்மை வழிப்படுத்த வல்லவர்; வழிப்படுத்த வேண்டியவர். நமக்கும் நமது சந்ததிக்கும் அவரை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை அத்தியாவசியமானது. அவ்வகையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய அரும்பணியை போற்றி நாவலரின் கருத்துக்களை சிந்திக்கும் வண்ணம இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி ஒரு மாநாட்டினை இவ்வாண்டு நடத்தும் வாய்ப்பினைத் திருவருள் துணையால் பெற்றுள்ளோம். மாநாட்டின் நினைவாகச் சிறப்பு மலரையும் வெளியிடக் கிடைத்துள்ளது. இம்மலர் நாவலரின் குன்றாப் புகழ் மணம் என்றுங் கமழும் படியாக நின்று நிலவ வாழ்த்துகிறோம். நாவலர் மாநாட்டைச் சிறப்புற நடாத்தும் பணியில் ஈடுபட்ட எமது அமைச்சகத்தினருக்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினருக்கும் மாநாடும் மலரும் சிறக்கப் பணியாற்றிய அறிஞர்களுக்கும் பிற அநுசரணையாளர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தே.ம. சுவாமிநாதன்
அமைச்சர்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம்
மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

வாழ்த்துரை

தென்னாட்டுச் சைவ வரலாற்றிலும் தமிழ்மொழி, இலக்கிய வரலாறு களிலும் தனது தடங்களை ஆழப்பதித்த ஆளுமையாளர் ஆறுமுகநாவலர் அவர்கள். தமது மதத்தையும் மொழியையும் நமது நாட்டில் முழுவது மாகப் பரவச் செய்து நிலைநிறுத்தி விடவேண்டும் என்று கங்கணங் கட்டிநின்ற ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த நாவலர் கால தேச வர்த்தமானங்களுக்கு அமைவாக ஆற்ற வேண்டிய பணிகளை மிகத் துணிச்சலான முறையிலே சைவத்துக்கும் தமிழுக்கும் சமுதாயத் துக்கும் ஆற்றினார். இலங்கையின் தேசிய வீரர்களுள் முன்னோடியாகத் துலங்கினார். தமிழ்ச் சைவ மக்களால் அன்று தொட்டு இன்றளவும் குன்றாத பெருமதிப்போடு போற்றப்பட்டு வருகிறார். அவ்வகையில் நாவலர் பெருமானுக்குக் காலந்தோறும் மாநாடுகளும் அவர் பொருட்டான கருத்தரங்குகளும் விழாக்களும் ஆங்காங்கே நடைபெற்று வந்துள்ளன. அவற்றையொட்டியும் பிற வகைகளிலும் பல சிறப்பு மலர்களும் வெளியிடப்பட்டுள்ளன. சில சமய, இலக்கிய நிறுவனங்கள் தங்கள் தொடர் வெளியீடுகளுள் ஒவ்வொன்றை நாவலர் சிறப்பிதழாகவும் வெளிப்படுத்தியுள்ளன.

நமது சமுதாயத்தில் நாவலருக்கு இருக்கும் குன்றா மதிப்பும் அவரது சிந்தனைகளதும் செயல்முறைகளதும் குறைவிலாத் தேவையும் இன்றும் நின்று நிலவுவதால் எமது மாண்புமிகு அமைச்சர் தே.ம. சுவாமிநாதன் அவர்களது சிந்தனையில் இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நாவலர் மாநாடு ஒன்றினை ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதயமானது. அந்த எண்ணம் செவ்விய முறையில் செயலுருப் பெற்றுள்ளது. அதன் பிரதான அம்சங்களுள் ஒன்றாக இச்சிறப்பு மலர் அமைகின்றது. நாவலர் பெருமானின் குன்றாப் புகழை என்றும் நின்று நிலைபெறச் செய்யும் வகையில் இம்மலர் நன்றே அமைய, மன்றிலாடும் கூத்தன் திருவடிகளை வாழ்த்துகிறேன்.

வே. சிவஞானசோதி
செயலாளர்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு

வெளியீட்டுரை

பல நூற்றாண்டுகளாக அன்னியர் ஆட்சிக்குள் சிக்கியிருந்த போதிலும் நமது நாடு தனது சுயத்தை இழந்துவிடாது நிலைபெற்று நின்றது. லௌகீகமான விடயங்களால் நமது சமுதாயத்தை ஈர்த்து மேலைத்தேய மயமாக்கி விடமுயன்ற அன்னிய ஆட்சியாளர்களின் எண்ணமும் ஏற்பாடுகளும் தோல்வியிலேயே போய் முடிந்தன. நமது சமயமும் மொழியும் முன்னைய காலத்தில் இருந்ததை விடவும் சீர்திருந்தவும் புதிய உத்வேகத்தோடு வளரவும் வழியேற்பட்டது. இவையெல்லாம் நமது நல்லை நகர் ஆறுமுகநாவலர் போன்ற பெருமக்களாலேயே சாத்தியமாகின.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நமது சமயத்தின் பொருட்டும் தமிழ் மொழியின் பொருட்டும் சமுதாயத்தின் பொருட்டும் தீர்மும் முற்போக்குத்தனமும் வாய்ந்த பணிகளைச் செய்தவர்கள் பலர். அவர்களுளெல்லாம் தலையாயவராகக் கருதப்படுபவர் நமது நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்.

நாவலரது போதனைகளும் அவர் வழிப்பட்ட சாதனைகளதும் தேவை இன்றளவும் நம் மத்தியில் நிலவவே செய்கிறது. சமயத் துறையிலும் தமிழ்க் கல்வித் துறையிலும் போலித்தனமே மலிந்து வருகின்றது. செம்மையான முறையில் பழந்தமிழ் நூல்களையும் உரைகளையும் புத்தாக்கங்களையம் பாடநூல்களையும் பதித்தளித்து நல்ல பதிப்புக்கு மறுபெயர் நாவலர் பதிப்பு என்ற நற்புகழை உருவாக்கிவிட்ட ஆறுமுகநாவலர் வாழ்ந்த நமது நாட்டில் பல அறிஞர்கள் கூடி வெளிப்படுத்தும் அரசாங்கப் பாடசாலைகளுக்கான பாடநூல்கள் பொருட்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை என்று பிழைகளே மலிந்து வெளிவருவதும் கற்றறிந்த சமூகம் அதைக் கண்டும் காணாதிருப்பதும் சாதாரண விடயங் களாகி விட்டன.

சமயத் துறையிலும் மொழித் துறையிலும் தடியெடுத்தவன் எல்லாம் தம்பிரான்களாகி விட்டார்கள். உண்மை அறிவையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்திய நாவலர் வாழ்ந்த பூமியில் பொய்மையும் போலித்தனமும் போதைவஸ்து வியாபாரமும் வாள் வெட்டுக் களும் தாண்டவமாடுகின்ற நமது நாட்டுக்கு முன்னைய காலத்தைவிட நாவலரின் தேவை இன்று அதிகரித்து விட்டது.

ஆழ்ந்த அறிவும், நெறிபிறழா வாழ்வும், துணிவும் தீரம் மிக்க செயல்திறனும் கொண்ட நாவலரது ஆத்மா நமது சமுதாயத்துக்கு ஒளியூட்ட வேண்டிய அத்தியாவசிய நிலைக்கு ஆளாகியுள்ளோம். அதை உணர்ந்தோ உணராமலோ நமது அமைச்சர் மாண்புமிகு தே.ம. சுவாமிநாதன் அவர்களது எண்ணத்திலே இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி இவ்வருடம் நாவலர் மாநாடொன்றை நடத்த வேண்டும் என்ற எண்ணம் உதயமானது. அது திருவருளின் வெளிப்பாடுபோலும்!

அமைச்சர் அவர்களின் எண்ணம் மாநாடாகப் பரிணமித்த நிலையில் மாநாட்டு நினைவுமலர் ஒன்றும் வெளிவருகின்றது. அம்மலர் நாவலர் பெருமான் நமது சமயத்துக்கும் மொழிக்கும் சமுதாயத்துக்கும் ஆற்றிய செவ்விய பணிகளைத் தெளிவுறுத்தி நிற்கும்; அவர் வாழ்ந்து காட்டிய ஈரமும் தீரமம் நீதியும் ஒழுக்கமும் வாய்ந்த வழியை விளக்கி நிற்கும். அவையெல்லாம் நமது தலைமுறையைச் சென்றடைந்து செம்மையுறச் செய்யும் என்ற நம்பிக்கையோடு இந்த மலரை வெளியிடுகிறோம். மலர் சிறக்கப் பணியாற்றிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

அ.உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

பதிப்புரை

ஈழத்துத் தமிழ்ப் புலமையாளர்களுள் புலம் கடந்த புகழுக்குரியவர்களாய்த் திகழ்பவர்களுள் தலையாயவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். அந்நியர் ஆட்சியில் பிற மத தாக்குதலிலிருந்து சைவத்தைக் காத்த வகையாலும் அதன் செம்மையைப் பேணிய வகையாலும் இவர் சைவத்தின் காவலர் - ஐந்தாம் குரவர் - சமய சீர்திருத்தவாதி.

தமிழிலக்கிய உலகில் வெகுசனத்துக்குரிய செவ்விய தெளிந்த உரைநடையை உருவாக்கித் தந்தமையாலும் முறையான நிறுத்தக் குறிப் பாவனை முதலியவற்றை மேற்கொண்ட வகையாலும் வசன நடை கைவந்த வல்லாளர் - தமிழ் வசன நடையின் தந்தை.

நூற்பதிப்புத் துறையில் செம்மையும் உண்மையும் பேணிய வகையில் செவ்விய தமிழ் நூற் பதிப்புத் துறையின் முன்னோடி.

வெகுசனத்துக்கான தமிழ்ச் சொற்பொழிவு மரபின் முன்னோடி.

மேற்குலக மயமாதலிலிருந்து தமிழ்ச் சமூகத்தைப் பாதுகாத்த பண்பாட்டுக் காவலர்.

பாடசாலைகளை நிறுவி தாய்மொழிக் கல்வி, சுதேச பண்பாட்டுப் பின்னணியில் ஆங்கிலக் கல்வி, இலவசக் கல்வி என்பவற்றை வழங்கிய வகையாலும் பாடநூலாக்கம், கலைத்திட்டவாக்கம் முதலானவற்றாலும், நல்லாசிரியராய் விளங்கி ஆற்றலும் செயல்திறனும் வாய்ந்த மாணவர் பரம்பரையொன்றை உருவாக்கிய வகையாலும், பிறரையும் கல்விப்பணி செய்யத் தூண்டிய வகையாலும், உண்மை அறிவை வலியுறுத்திய வகையாலும் சிறந்த கல்வியியலாளர்.

பஞ்சம் கொடுநோய் முதலானவற்றால் சமூகம் பாதிப்புற நேர்ந்தபோது சாதி, சமய பேதங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் களத்தில் இறங்கிப் பணியாற்றிய வகையால் மனிதாபிமானி - சமூகப் பணியாளர்.

தமிழ்ச் சமூகத்தின் பொருளாதார விருத்திக்கான புதிய வழிவகைகளை இனங்கண்டு வழிப்படுத்திய வகையால் தூரநோக்குள்ள பொருளியலாளர்.

தமிழ்ச் சமுதாயத்துக்குத் தலைமை தாங்கக் கூடிய அறிவும் செயல்திறமும் நேர்மையும் வாய்ந்த அரசியல் தலைமையை உருவாக்கி வழிப்படுத்திய வகையால் சிறந்த அரசியல் ஞானி.

சமயத் துறையிலும் அறிவுத் துறையிலும் சமுதாயத்திலும் என்றும் நீதியை வலியுறுத்தியும் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்தும் வெகுசனத்தைத் திரட்டியும் களத்தில் இறங்கிப் போராடிய சமூகப் போராளி.

தனிமனித, சமூக ஒழுக்கங்களை வலியுறுத்தியும் தான் வலியுறுத்திய ஒழுக்க நெறிகளிலிருந்து இம்மியளவும் பிறழாது வாழ்ந்து காட்டியும் நின்ற மெய்ம்மையாளர்.

தன்னை விசுவசிக்கின்ற ஒரு மாணவர் பரம்பரையை, பின்பற்றுகின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கித் தனது எண்ணங்கள், செயற்பாடுகளின் செல்வாக்கை இன்றளவும் நிலை நிறுத்தியுள்ள ஆளுமையாளர்.

ஆறுமுகநாவலர் என்னும் அத்தகைய தீரர் - தேசிய வீரர் தொடர்பான மேலான எண்ணங்களை மீளவும் மனங்கொள்ளும் வகையிலான ஒரு மாநாட்டை, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் திரு தே.ம. சுவாமிநாதன் அவர்களின் எண்ணம், திணைக்களப் பணிப்பாளர் திரு. உமா மகேஸ்வரனதும் ஏனைய அலுவலர்களதும் அர்ப்பணிப்புணர்வோடு கூடிய உழைப்பினால் செயலுருப் பெற்றுள்ளது. இம் மாநாடு தொடர்பாக ஆலோசனைச் சபை ஒன்றுகூடிய வேளையில் மாநாட்டின் நினைவாக ஒரு சிறப்பு மலர் வெளியிடப்படல் வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

நாவலர் தொடர்பாக ஏலவே பெறுமதிவாய்ந்த மலர்கள் சில வெளிவந்துள்ளன. அவற்றுள் 1938ஆம் ஆண்டில் பண்டிதர் க.பொ. இரத்தினம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த நாவலர் நினைவு மலர், 1969ஆம் ஆண்டு வெண்கலத்தால் ஆன நாவலர் திருவுருவம் ஒன்றை உருவாக்கி நாடெங்கிலும் அதனை ஊர்வலமாக எடுத்து வந்து, அவர் பிறந்து வளர்ந்த நல்லூரில் அதை நிறுவிய நாளில் வெளியிடப்பட்ட நாவலர் மாநாட்டு மலர், அதனையடுத்து 1972 இல் வெளிவந்த நாவலர் பெருமான் 150வது ஜெயந்தி மலர், பின் நாவலரது அமரத்துவத்தின் நூற்றாண்டு நிறைவின்போது பேராசிரியர் க. கைலாசபதி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மலர் ஆகிய நான்கும் பெறுமதிமிக்கவை. அது காரணமாக அம் மலர்களுள் மூன்று நாவலர் நற்பணி மன்றத்தால் மீள அச்சிடவும்பட்டுள்ளன. எனவே, இந்த மாநாட்டின்போது வெளியிடப்படும் மலர் புதிதாக எழுதப்பட்ட கட்டுரைகளைத் தாங்கியதாக வெளிவர வேண்டும். ஆய்வாளர்களைக் கொண்டு புதிதாக எழுதுவிப்பதற்குப் போதிய கால அவகாசமும் இருக்கவில்லை. புதிதாக எழுதிவிக்கும் பட்சத்தில் அக்கட்டுரைகளின் ஆய்வுப் பெறுமானம் எத்தகையதாக இருக்கும் என்பது குறித்தும் எதிர்வுகூற முடியாது. ஆகையால் புதிதாகக் கட்டுரைகளை எழுதும் எண்ணம் கைவிடப்பட்டது. புதிய மலர் தொடர்பாகத் தெய்வாதீனமாக நல்லதொரு உபாயம் புலனாகியது.

இப்பதிப்புரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட காரணங்களாலோ அல்லது அவற்றுக்கும் மேற்பட்ட காரணங்களாலோ நாவலர் அறிவுலகின் கவனத்துக்குரிய ஆளுமையாளராக என்றும் விளங்கி வருகிறார். அது காரணமாக, ஆற்றல் வாய்ந்த அறிஞர்கள் பலரின் ஆய்வுப் பொருளாக நாவலர் தொடர்ந்து விளங்கி வருகிறார். அறிஞர்கள் அவ்வப்போது தமது இயல்பான மன உந்துதல் காரணமாகவும் தேவைகளின் நிமித்தமும் நாவலர் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு கனதியான கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். அவையெல்லாம் ஆங்காங்கே பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் மலர்களிலும் கட்டுரைத் தொகுதி நூல்களிலும் வாசகர் கண்ணுக்கு ஒருசேர அகப்படாதனவாய் உதிரியாகச்

சிதறிக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் திரட்டித் தொகுப்பின் சிறப்புமிகு நாவலர் மலர் ஒன்று இலகுவாகவே உருவாகிவிடும்.

இந்த எண்ணம் திணைக்களத்தின் ஆலோசனைச் சபையால் ஏகமனதாக அங்கீகரிக்கப் பட்டது. ஏலவே குறிப்பிட்ட, நாவலர் தொடர்பான மூன்று மலர்களிலும் வெளிவந்த கட்டுரைகள், நாவலரையே பொருளாகக் கொண்ட தனிநூல்கள் என்பவை தவிர்த்து பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைத் தொகுப்பாயமைந்த நூல்களிலும் காணப்பட்ட, நாவலர் தொடர்பான கட்டுரைகள் - எமது கண்ணுக்கு அகப்பட்டவை - இம்மலரில் தொகுக்கப்பட்டுள்ளன. உள்ளடங்குகின்ற கட்டுரைகளின் தரத்தால் முன்னைய மலர்களின் தரத்துக்கு எள்ளளவும் குறையாத தரம்மிக்க ஒரு மலராக இம்மலர் அமைந்து விட்டது. எல்லாம் தெய்வாதீனம். ஆங்கில மொழியிலே எழுதப்பட்ட கட்டுரைகள் சிலவும் தமிழ்ப்படுத்தித் தரப்பட்டுள்ளமை இம்மலரின் சிறப்பம்சம். மதிப்புக்குரிய பேராசிரியர்கள் சி. பத்மநாதன், சி. தில்லைநாதன் ஆகியோரின் ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் எமக்கு வாய்த்தன. கட்டுரைகளைத் தொகுப்பதில் இலங்கை நிர்வாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றவரும் தமிழார்வலருமான திரு க. சண்முகலிங்கம், பேராசிரியர் செ. யோகராசா ஆகியோரின் பங்களிப்புப் போற்றுதற் குரியது. ஆங்கில மொழியிலமைந்த கட்டுரைகளைத் தமிழார்வலர் திரு. திருவேணிசங்கமம் தமிழ்ப்படுத்தித் தந்தார். இத்தனை கட்டுரைகளையும் குறுகிய காலத்தில் மிகச் செம்மையாகக் கணினிப்படுத்தித் தந்தவர் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை நிர்வாக உதவியாளர் திருமதி ஜெஸ்மின் பைஸர். குமரன் பதிப்பகத்தார் மலரை வடிவமைத்து அழகாக அச்சேற்றித் தந்திருக்கிறார்கள். எல்லாரையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்தியவர் திணைக்கள ஆராய்ச்சி அலுவலர் திருமதி தேவகுமாரி ஹரன். நாவலர் பணியில் ஈடுபட்ட இவர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி!

பதிப்பாசிரியர்கள்

பொருளடக்கம்

வரலாற்றியல்

1. ஆறுமுக நாவலர் தோன்றிய சூழல் 3
   - *ஆ. வேலுப்பிள்ளை*

2. சரித்திரத்தில் நாவலரின் பாத்திரம் 6
   - *பிரேம்ஜி*

3. நவீன இந்துமத சிந்தனையாளர் வரிசையில் ஆறுமுகநாவலர் 13
   - *வி. சிவசாமி*

4. நாவலரின் இந்தியப் பிரயாணங்கள் 27
   - *மு. இராமலிங்கம்*

5. இலங்கையில் கிறிஸ்தவ மிஷனறிகளும் ஆறுமுகநாவலரும் 36
   - *சி. பத்மநாதன்*

6. ஆறுமுகநாவலர் வரலாற்றின் சிறப்பம்சங்கள் 48
   - *பொ. பூலோகசிங்கம்*

சமயவியல்

7. சைவத்தைக் கைதூக்கி விடுவதற்கு அவதரித்த நாவலர் பெருமான் 57
   - *பெரியதம்பிப்பிள்ளை*

8. சைவசமய மறுமலர்ச்சியில் ஆறுமுகநாவலர் 64
   - *ப. கோபாலகிருஷ்ண ஐயர்*

9. தமிழர் சமயப் பாரம்பரியத்தில் நாவலர் 73
   - *மௌ. சித்திரலேகா*

10. சைவசித்தாந்த மெய்யியலில் ஆறுமுகநாவலரின் பங்களிப்பு 85
    - *இரா.வை. கனகரத்தினம்*

தமிழியல்

11. நாவலர் அடிச்சுவட்டில் இலக்கியம் 113
- சி. தில்லைநாதன்

12. உரைநடைக்கு ஒருவர்: ஆறுமுகநாவலர் 120
- சொக்கன்

13. பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன உரைநடை இயக்கமும் ஆறுமுக நாவலரும் 127
- எம்.ஏ. நுஃமான்

14. ஆறுமுகநாவலர் பதிப்புகள் 146
- மோ.கோ. கோவைமணி

15. பதிப்பாசிரியர்: நாவலர் 163
- க. கைலாசபதி

16. பதிப்பாள மன்னன்: விமரிசனங்கள் தொடர்பான பார்வை 167
- ஸ்ரீ. பிரசாந்தன்

17. ஆறுமுக நாவலர் செய்த பைபிள் மொழிபெயர்ப்பு 174
- சோ. பத்மநாதன்

18. ஆறுமுகநாவலர்: 1850 அளவில் சைவப் பிரசங்க மரபும், சமயத்தின் நிர்ணயமும் 193
- பேனாட் பேற்

19. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் வரலாற்று நாடக மூலவரும் 210
- செ.து. தெட்சணாமூர்த்தி

கல்வியியல்

20. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கல்வி மறுமலர்ச்சி 225
- ப. சந்திரசேகரம்

21. நாவலர் தொடக்கிவைத்த சைவசமயக் கல்வி மறுமலர்ச்சி 235
- வ. ஆறுமுகம்

22. நாவலர் அடிச்சுவட்டில் கல்வி 241
- எம்.எம். சமீம்

23. நாவலர் கல்வி மரபும் இன்றைய தேவையும் 247
- இ. குமாரவடிவேல்

24. நாவலர் தாபித்த வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை 274
- சி. கணபதிப்பிள்ளை

25. நாவலர் தாபித்த சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை 281
- எஸ். பத்மினி கபாலிமூர்த்தி

26. சிதம்பரம் ஆறுமுகநாவலர் மேனிலைப் பள்ளி 286
- சு. அருள்மொழிச்செல்வன்

சமுதாயவியல்

27. நாவலரும் வேளாண்மையும் 293
- ச. தனஞ்சயராசசிங்கம்

28. பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கையில்
கிறித்தவ மத மாற்றுகைக்கும் மேற்கு மயமாக்கலுக்குமான
இந்துக்களின் எதிர்வினை 302
- கார்த்திகேசு சிவத்தம்பி

29. நாவலரை முன்னிறுத்தி இனக்குழுமக் கோட்பாடு 328
- சபா ஜெயராசா

பொதுவியல்

30. விஜயத் துவஜம் 335
- சுவாமி விபுலாநந்தர்

31. ஆறுமுகநாவலர் 339
- அ. சின்னத்தம்பி

32. ஆறுமுகநாவலர் 343
- ஏ.வி. சுப்பிரமணிய ஐயர்

33. நாவலர் நிலைநாட்டிய சாதனைகள் 346
- சு. வித்தியானந்தன்

34. நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்... 349
- சி.க. சிற்றம்பலம்

35. நாவலரும் செந்திநாதையரும்: ஒரு ஒப்பீட்டு ஆய்வு 352
- யோகேஸ்வரி கணேசலிங்கம்

36. மேனாட்டு பாதிரிமார் பார்வையில் ஆறுமுகநாவலர் 361
- எஸ். ஜெபநேசன்

37. 'நாவலர் பிரபந்தத் திரட்டு' ஊடாக நாவலரை விளங்கிக் கொள்ளல் 366
- க. இரகுபரன்

நாவலர்
வரலாற்றியல்

ஆறுமுக நாவலர் தோன்றிய சூழல்

ஆ. வேலுப்பிள்ளை

தமிழ் வரலாற்றிலுஞ் சைவ வரலாற்றிலும் ஆறுமுகநாவலருக்குச் சிறப்பிடம் உண்டு. நாவலரை நீக்கிவிட்டு இலங்கைத் தமிழின் வரலாற்றையும், இலங்கைச் சைவ வரலாற்றையும் எழுத முடியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவிலுள்ள ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளை நாவலர் காலம் என்று குறிப்பிடலாம். அந்த நூற்றாண்டில் பொதுவாகத் தமிழ் நாட்டிலுஞ் சிறப்பாக ஈழத்திலும் நிலவிய சூழ்நிலையே ஆறுமுக நாவலரைத் தோற்றுவித்தது. சூழ்நிலையையும் நாவலரையும் தொடர்பு படுத்துவது, நாவலரின் பெருமையைக் குறைப்பதாகாது. ஆறுமுகநாவலர் காலத்திலும் பல இலட்சம் தமிழ்ச் சைவர்கள் வாழ்ந்தனர். ஆனால், தமிழ்ச் சைவருள் ஒருவரே நாவலராக முடிந்தது. அதிலே தான், நாவலரின் பெருமை காணப்படுகிறது.

நாவலர் தமிழுக்கா சைவத்துக்கா அதிக அளவிற் பணியாற்றினார் என்பது விவாதத்துக்குரிய பொருளாக்கப்படுவது உண்டு. நாவலர் பணி செய்தது சைவத் தமிழுக்கு எனக் கூறலாம். அவர் பணியாலே தமிழ் மொழியும் இலங்கையும் நன்மையடைந்தன. எனவே, அவரைத் தமிழுரை நடையின் தந்தை எனவும் தேசிய வீரர் எனவும் கூறலாம்.

பல்லவர், பாண்டியர், சோழர், ஆரிய சக்கரவர்த்திகள் என்போராற் சைவமும் தமிழும் பாராட்டி வளர்க்கப்பட்டன. தமிழ் நாட்டிற் பாண்டியர் வீழ்ச்சியின் பின்பு சைவத் தமிழ் மன்னர் தலையெடுக்க முடியவில்லை. பதினான்காம் நூற்றாண்டின் பின்பு சைவத் தமிழர் தமிழ் நாட்டிலே பிறர் தயவில் வாழக் கற்றுக் கொண்டனர். பதினேழாம் நூற்றாண்டு முற்பகுதிவரை யாழ்ப்பாணத்திற் சைவத் தமிழராட்சி நிலை பெற்றது. தமிழகத்தாரில் ஒரு சாராரே சைவராக இருந்தனர். அவருள் இன்னொரு சாரார் தமிழ் நாட்டின் இன்னொரு பழஞ் சமயமாகிய வைணவத்தைத் தழுவியிருந்தனர். சைவ சித்தாந்தம் மட்டுமல்லாது வேதாந்தமும் அங்கு செல்வாக்குடன் விளங்கியது. இவை யாவும் பாரம்பரிய தமிழ்க்

கலாச்சாரத்தோடு பிணைந்திருந்தமையால், இலங்கையிலே தோன்றிய சைவத் தமிழியக்கம் போன்ற ஒன்று இந்தியாவிலே தோன்றவில்லை. இந்தியத் தமிழகத்தில் அங்கிருந்த சூழ்நிலைக்கேற்ப சமரச சன்மார்க்க இயக்கங்களே தோன்றின.

சைவ மறுமலர்ச்சிக்காக நாவலர் கையாண்ட வழிவகைகள் பல அவர் கிறித்தவப் பாதிரியாரிடமிருந்தே அறிந்து கொண்டவையாகும். பல்லவர் காலத்தொடக்கத்திலே திருநாவுக்கரசர் சமணருடன் பயின்று பின்பு சைவ மறுமலர்ச்சிக்குப் பணியாற்றியது போல, சென்ற நூற்றாண்டிலே ஆறுமுக நாவலர் கிறித்தவருடன் பயின்று பின்பு சைவ மறுமலர்ச்சிக்குப் பணியாற்றினார்.

நாவலரையும் சைவத்தையும் இணைத்துக் கூறும்போது பொதுவாக ஏற்படுகிற தவறு, கிறித்தவத்துக்கு எதிராகப் போராடிய சைவத்துக்கு நாவலர் தலைமை தாங்கினார் என்று நினைப்பது. சைவம் அக்காலத்திற் கிறித்தவத்தை எதிர்த்துப் போராடவில்லை. 'சைவம்' எனத் தனியமைப்பு ஒன்று இருக்க வில்லை. குருக்கள்மார், கோவிலதிகாரிகள், சைவப் பொதுமக்கள் என்போரின் தொகுதியே நாவலர் காலச் சைவம். 'யாழ்ப்பாணச் சமயநிலை', 'நல்லூர்க் கந்தசுவாமி கோயில்' என்ற நாவலர் துண்டுப் பிரசுரங்களில் அவர் காலச் சைவ நிலையை உணர்ந்து கொள்ளலாம். 'முன்னோர் வழக்கம்' என்ற பெயரில் பரம்பரைச் சைவர்கள் சைவத்தின் அன்றைய இழிநிலையை உணராமலும் நீக்க முயலாமலும் வாழ்ந்தமையை நாவலர் கண்டித்திருக்கிறார். அவருடைய இக்கண்டனம் பாரதியாருடைய நடிப்புச் சுதேசிகளைக் கண்டிக்கும் பாடல்களோடு ஒப்பிடத்தக்கது.

நாவலரின் கடைசிப் பிரசங்கத்தை நோக்கும் போது, நாவலரை ஒரு பக்கம் கிறித்தவரும் மறுபக்கம் சைவப் பரம்பரையினரும் எதிர்த்து நின்றது தெளிவாகத் தெரிகிறது. எதிர்த்த கிறித்தவர் தம்மை மதித்ததாகவும், எதிர்த்த சைவர் தம்மைத் தூற்றியதாகவும் நாவலரே கூறிக் கவலைப்படுகிறார். எனவே சைவ சமயத்தவருள் ஒரு சாராரின் ஆதரவுடனேயே நாவலர் சைவத் தமிழுக்குப் போராட வேண்டியிருந்தது.

பெரிய மனிதர்கள் பலர் பிறநாட்டில் மதிப்புப் பெற்ற பின்பே சொந்த நாட்டில் மதிப்புப் பெறுகிறார்கள். நாவலரை முதலில் மதித்தது தமிழ்நாடே. தமிழ் நாட்டிலே, சைவத்தைப் பேணி வளர்க்கும் மடங்களும் ஆதீனங்களும் காணப்பட்டன. சைவப் பிர சாரகர் ஆறுமுகத்துக்கு நாவலர் என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது திருவாவடுதுறை ஆதீனம். பதினெட்டாம் நூற்றாண்டில் சிவஞான முனிவரை ஆதரித்த இந்த ஆதீனம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாவலரைப் போற்றும் பேறுபெற்றது. நாவலர் காலத்தில் இராமநாதபுரம் சேதுபதி பொன்னுச்சாமித் தேவர் தமிழ் வளர்ப்பதற்காக உழைத்தவர், நாவலரின் திறமையை அறிந்து நூல்கள் சிலவற்றைப் பதிப்பிக்கும்படி கேட்டுக் கொண்டார். பிற நாட்டில் நாவலர் பெற்ற சிறப்பு, யாழ்ப்பாணத்தில் அவருக்கிருந்த மதிப்பை உயர்த்திற்று.

அருட்பா - மருட்பா விவகாரம் தமிழ் நாட்டில் நாவலருக்கு எதிர்ப்பை வளர்த்தது. மேலைப் புலோலி கதிரைவேற்பிள்ளையும் நாவலரோடு சேர்ந்து கொண்டார். இராமலிங்க

சுவாமிகளின் பாடல்கள் அருட்பாவல்ல, மருட்பாவே என்று சாதிக்க வேண்டிய நிலையில் நாவலர் இருந்தார். நால்வரையும், அவர்கள் வரலாற்றுச் சிறப்புக்களையும், அவர்கள் பாடற் சிறப்புக்களையும் எடுத்துக் காட்டிய நாவலருக்கு, இராமலிங்கர் எவ்வகையிலும் அவர்களோடு ஒப்பிடத்தகுதியற்றவராகத் தோன்றினார். இராமலிங்கரோடு நாயன்மாரை ஒப்பிட்டால், நாயன்மாரின் மதிப்புக்குப் பங்கமேற்படும் என்று நாவலர் கருதியிருக்கலாம்.

நாவலர் காலத்திற் கிறித்தவ மதப்பிரசாரம் யாழ்ப்பாணத்தில் மிகத் தீவிரமாக நடைபெற்றது, அப்பிரசாரமே நாவலர் மனதில் சைவசமய உணர்ச்சியை வளர்த்தது. நாவலரை உந்திய சக்தி கிறித்தவ மதப் பிரசாரமே என்று கூறலாம். சைவர்களைப் பெருந்தொகையாக மதமாற்றம் செய்வதே கிறித்தவர்களின் நோக்கமாக இருந்தது; கிறித்தவ மத முதனூலாகிய விவிலிய நூலை நாவலர் கிறித்தவருக்கு மொழிபெயர்த்துக் கொடுத்தார். கிறித்தவர்கள் சைவ சித்தாந்தத்தை உணராமல் யாழ்ப்பாணத்தில் சீரழிந்த நிலையிலிருந்த சைவசமயத்தின் நிலையைப் பிழையாக உணர்ந்தும், வேண்டுமென்று திரித்துக் கூறியும் கிறித்தவத்தைப் பரப்புவதைக் கண்டார். சைவ சித்தாந்த அறிவு சிறிதுமில்லாத பரம்பரைச் சைவர் பதில்கூற வகையறியாது வாய்மூடி மௌனிகளாக வாழ்வதை நோக்கி வருந்தினார். சைவ சமயத்தைப் பற்றிப் பாதிரிமார் கூறிய குறைபாடுகள் சைவத்தின் உயரிய தத்துவங்களுக்குப் பொருந்தாதெனவும் கிறித்தவத்துக்கே அவை ஏற்புடையன எனவும் நாவலர் விவாதிக்கும் 'சைவ தூஷண பரிகாரம்' நாவலருடைய இரு சமய அறிவுக்குச் சான்று பகர்கின்றது.

நாவலர் தோன்றிய காலத்தில், இலங்கைத் தமிழரினதும் பெரும்பாலான இந்தியத் தமிழரினதும் பாரம்பரிய கலாசாரமாகிய சைவத் தமிழுக்கு ஆபத்துத் தோன்றியது. எழுத்துவன்மை, பேச்சுவன்மை, துணிவு, ஆழ்ந்த அறிவு என்பவற்றின் துணை கொண்டு போராடிய நாவலர் ஆபத்தை அகற்றினார்.

சரித்திரத்தில் நாவலரின் பாத்திரம்

பிரேம்ஜி

நாவலர் ஒரு சரித்திர புருஷர். சரித்திரத்தால் உருவாக்கப்பட்ட மாபெரும் புருஷர். சரித்திரம் உருவாக்கிய நாவலர், சரித்திரத்தையே உருவாக்கினார்.

இத்தகைய பெரியாரைப் பற்றியும் அவர் சரித்திரத்தில் வகித்த பாத்திரம் பற்றியும் பல தரப்பட்ட கருத்துக்களும், கணிப்பீடுகளும் நிலவுகின்றன. நாவலர் பெருமானை சைவம் வாழ வந்த பெரியாராகவும், சைவம் வளர்த்த சைவக் கோமானாகவுமே இதுவரை தமிழ் மக்கள் கருதி வந்துள்ளார்கள்.

சைவத்திற்கு நாவலர் ஆற்றிய தொண்டை யாரும் மறக்க முடியாது. அவர், ஐந்தாவது குரவர் என்று நியாயமாகவே சைவப் பெருமக்களால் கருதப்படுகிறார். நாவலரைப் பற்றிய சைவ மக்களின் இந்த மதிப்பீட்டையும் அவருக்குத் தமது ஆசார கோசார நெறிப்படி சைவ மக்கள் நடத்தும் குருபூசை வழிபாட்டையும் கௌரவிப்பது நமது பண்பாட்டுக் கடமை.

நாவலர் தமது சரித்திரத்தில் வகிக்கும் பாத்திரத்திற்கான முக்கிய காரணங்களில் இது ஒன்றே தவிர, முழுக்காரணமுமல்ல. இதைத் தவிர வேறு பல காரணங்களும் இருக்கின்றன.

சரித்திரத்தில் நாவலரின் முழுமையான பூரணத்துவமான பாத்திரத்தையும் பங்கையும் சரியான முறையில் கணிப்பீடு செய்ய வேண்டுமானால் நமது மரபின், பாரம்பரியத்தின், வரலாற்றின் செழுமையையும் இயக்க நியதியையும் சரியாகப் பார்க்க வேண்டும். அப்போதுதான் பல காரணங்களும் தெளிவுறும்.

இதற்கு முதலில் நாவலர் வாழ்ந்த காலத்தையும் அந்தக் காலத்தின் சரித்திரச் சூழலையும் அக்கால கட்டத்தின் தேவையையும் புரிந்துகொள்ள வேண்டும்.

நாவலர் வாழ்ந்த காலம் ஆங்கில ஆதிக்கம் தலைதூக்கி ஆடிய காலம். அரசியல் ரீதியாக நமது மக்கள் அடிமைப்படுத்தப்பட்டதுடன் ஆத்மீக ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் அந்நிய ஆதிக்கம் ஊடுருவி வந்தது. நமது மக்களின் மதம், கலாசாரம்,

பழக்கவழக்கங்கள் ஆகிய நமது மரபு வழிவந்த பண்பாட்டுச் சொத்துக்கள் அனைத்தும் அழித்து ஒழிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அந்நிய மோகம் ஆங்கிலப் பித்து, சொந்த மக்களைத் துச்சமாகக் கருதுவது, நமது மக்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை இகழ்வது போன்ற நச்சுப்போக்குகள் தலைதூக்கின. நமது உயிரினுமினிய அன்னை மொழியும், அதன் இலக்கியச் செல்வங்களும் உதாசீனம் செய்யப்பட்டன. வேறு வார்த்தையில் நமது மக்களின் தேசிய உணர்வும், தேசிய சம்பத்துக்கள் அனைத்தும் பரதேசி ஆட்சியினரால் படுகொலை செய்யப்பட்டன.

அறங்கொன்ற பறங்கிய ராட்சியின் நேரடியான நிர்ப்பந்தம், மூர்க்கத்தனமான அடக்குமுறை, நயவஞ்சகமான தந்திரங்கள் போக, ஏகாதிபத்தியம் தன்னுடன் அழைத்து வந்த ஆத்மீகத் திருக்கூட்டத்தினரையும் நமது நாட்டின் ஆத்மாவைக் கொல்லும் திருப்பணியில் ஈடுபடுத்தியது.

மிருக பலத்தை அச்சாணியாகக் கொண்ட அந்நிய ஆட்சி வீறுபெற்று மக்கள் கிளர்ந் தெழும்போது திமுதிமுவென அடிசாய்க்கப்படும் என்ற உண்மையை நன்றாகத் தெரிந் திருந்த ஏகாதிபத்தியம் இலங்கையில் தனக்கு விஸ்வாசமாக இருக்கக்கூடிய ஒரு அடிமைக் கூட்டத்தை உருவாக்கத் திட்டமிட்டது. சொந்த மண்ணில் வேர்விட்டிராத, சொந்தக் கலா சாரத்தில் காலூன்றி நிற்காத நம்பிக்கை ஒன்றுக்கு ஆத்மீக அடிமைகளைச் சிருஷ்டிக்கக் கூடிய பரதேசி மதத்தைப் பரப்புவதன் மூலமே பரதேசர் ஆட்சியை நிலை நிறுத்த முடியும் என்று அன்றைய ஆளும் கூட்டம் கணக்குப் போட்டது.

இதன் பிரகாரம் ஏகாதிபத்தியம் தனது மதத்தைத் திட்டமிட்டுப் பரப்பியது. மத மாற்றம் அசுரவேகத்தில் நடைபெற்றது. கைலஞ்சம் வழங்குவது, ஊணும் உடையும் அளிப்பது, உத்தியோகம் கொடுப்பது, கல்வி போதிப்பது, அதிகார வட்டாரத்தின் அனுக்கிரகம் போன்ற 'எலும்புத் துண்டுகளை' எறிவது போன்றவைகளாலும் நமது மக்கள் கபடத்தனமாக மதம் மாற்றப்பட்டு வந்தார்கள். இதை,

''நல்வழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நாளுநா ளுந்தருவோம்
நாஞ்சொல்வதைக் கேளும்என மருட்டிச் சேர்த்து
நாணமுஞ் செய்து விட்டார்''

என்றும்,

''அள்ளிப் பணங்கொடுத் தாளேன் பிடிக்கிறா
ரவர் வார்த்தை கேட்பதறிவோ''

என்றும்,

''தாங்க ளிடரொடு கொடுத்த
பொங்கு பல நிதியாடை போசனங் கல்விதரு
புத்தக மெலாங் கவர்ந்து''

என்றும் வரகவி முத்துக்குமாரக் கவிராசர் அழகுற வர்ணிக்கிறார்.

இந்த உண்மையை நமது நாவலர் பெருமான் ''யாழ்ப்பாணத்துச் சைவ நிலை'' என்ற நூலில் பின்வருமாறு விபரிக்கிறார்.

''இங்கே வரும் பாதிரிமார் நமது வேதாகாமங்களைக் குருட்டு வழி என்றும், சிவன் முருகன் முதலிய தெய்வங்களைப் பேய்களென்றும், நம்மவர்களை அஞ்ஞானிகள் என்றும் தூற்றுகிறார்கள். புத்தகம் போட்டுக் கூலிப் பிரச்சாரகர் மூலம் ஊர் ஊராகப் பரப்புகிறார்கள்.

''இம்முறை சரியான பலனைத் தரவில்லை. ஏனெனில், பொதுஜனங்களுக்கு எழுத் தறிவு குறைவு. ஆதலால் பாதிரிமார் பள்ளிக் கூடங்கள் வைத்து பிழைப்பதற்கு வேண்டிய ஆங்கிலம் புகட்டி, அத்துடன் பைபிளையும் நுழைத்தனர். மாணவர்களை மயக்கினர்.

''ஆடை, உணவு, படிப்பு, வேலை, சம்பளம் இவையே பலரை மதம் மாறச் செய்தன. அழகான பெண்களையும், பணக்காரிகளையும் மணந்துகொள்ளச் சிலர் மதம் மாறினர். உத்தியோகம் பெற்று வயிறு வளர்க்கப் பலர் கிறிஸ்தவர்களானார்கள்.''

ஏகாதிபத்தியம் எதிர்பார்த்தபடியே 'பஞ்சத்திற்கு ஆண்டிகளான' நம்மவர்கள் நமது நாட்டின் தேசிய அபிலாஷைகளையும், தேசிய உணர்வுகளையும், தேசியப் பண்பாட்டினையும் வெறுத்து ஏகாதிபத்தியத்திற்குத் தாசானுதாசத்தனம் செய்தனர். தேசிய எழுச்சியின்பாற்பட்ட இயக்கங்களை எதிர்த்தனர். அந்நிய ஆட்சியையும், ஆத்மீகத் திணிப்பையும் எதிர்த்தவர் களைக் காட்டிக் கொடுத்தனர். ஆத்மார்த்த சோரம்போன இவர்களின் உதவி ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைகளுக்கும் ஆத்மீக சீரழிப்புகளுக்கும் மத்தியில் தேசத்தையும் தேசிய கலா சாரத்தையும் சொந்த ஆத்மீக சம்பத்தையும் பாதுகாக்கும் இயக்கம் நமது நாட்டில் உடலெடுத்து உயிரெடுத்து வந்தது. வடக்கே (இந்தியா) தயானந்தர் போன்றவர்களும் தெற்கே வண. பத்தறமுல்ல ஸ்ரீ சுபஹீர்த்தி, வண. ஸ்ரீ சமங்கல வணசிங்ஹ ஹரிச்சந்திரா போன்றவர்களும் ஏகாதிபத்தியத்தின் ஆத்மீக ஊடுருவலை எதிர்த்துப் போர் தொடுத்தனர். பரதேசி ஆட்சியினர் அமைத்த கிறிஸ்துவக் கல்லூரிகளுக்கு எதிராகத் தெற்கே ஆனந்தா கல்லூரி போன்ற பௌத்த கல்லூரிகள் அமைக்கப்பட்டு வந்தன. அரசியல் துறையிலும் எப். (F) ஆர். சேனநாயக்கா, டபிள்யூ பெரைரா, டி.பி. ஜயத்திலக்கா போன்றவர்கள் தேசிய உணர்வை ஓரளவு ஏற்படுத்தி வந்தனர்.

இந்தச் சரித்திரப் பின்னணியில்தான் நல்லை நகர் ஆறுமுகநாவலர் தோன்றினார். அந்நியரை விரட்டும் அறப்போரில் தம் மின்னுயிடகந்த புவிராசர் பண்டாரம், வீதிராயன் போன்ற வீரதேசபக்தர்களின் உதிரத்தால் செழுமை பெற்றது நல்லைநகர். பறங்கிக்காரரின்

அட்டூழியங்களை எதிர்த்த ஞானப்பிரகாச சுவாமிகளைத் தந்தது நல்லை நகர். இந்த நல்லை நகரில் தமிழ் வளர்த்த குடும்பத்தில் தோன்றினார் ஆறுமுக நாவலர்.

வசதி படைத்தவர்கள் ஆங்கில மோகம் பிடித்து அலைந்தபோது யாழ்ப்பாணத்து விவசாய வர்க்கமே தமிழைப் பேணியது. இந்த உழவர் வர்க்கத்தின் குழந்தைகளான தமிழ் ஆசிரியர்களே அன்னைத் தமிழின் அருமை அறிந்து அவளது உயிர் காத்தனர். இத் தமிழ் ஆசான்களின் மரபில் வளர்ந்த ஆறுமுகத்தின் உள்ளத்தில் தமிழுடன் சேர்ந்து மொழிப்பற்றும், தேசியப்பற்றும், மதப்பற்றும் சுடர்விட்டெழுந்தன.

சைவத் தொண்டராக சிவநெறிச் சீலராக வாழ ஆரம்பித்த நாவலர் சைவத்திற்கும், தமிழுக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் அந்நியரால் ஏற்பட்டு வந்த தாக்கத்தைத் தடுக்கவும், தமிழ்ச் சமூகத்தைப் பாதுகாக்கவும் பாடுபடுவது தனது தலையாய கடமை என்பதை உணர்ந்து, அரசியல், மதம், கலை, இலக்கியம் முதலில் சகல துறைகளிலும் அந்நிய ஊடுருவலை எதிர்த்து மூர்க்காவேசமாகப் போராடினார். இப்போராட்டத்திற்கு எழுத்தையும், பேச்சையும் கருவிகளாகக் கொண்டதோடு, சைவசமய பாடசாலைகளையும் ஸ்தாபனங் களையும் அமைத்து ஆக்கவேலைகளையும் செய்தார்.

நாவலரின் இப்போராட்டம் அவரது உயிரையே பறிக்குமளவுக்கு அபாயகரமானதாக இருந்தது. என்றாலும் நாவலர் நிலைகுலையவில்லை. உறுதியான நெஞ்சோடு போராடினார்.

இதன்மூலம் தான் வாழ்ந்த காலத்தில், அந்தக் காலகட்டத்தின் தேவையை நாவலர் பிரதிபிம்பப்படுத்தியதுடன் காலத்தின் தேவையை நிறைவேற்றவும் செய்தார். இவ்வாறு காலத்தின் குரலாகவும், மனச்சாட்சியாகவும் நாவலர் மாறினார்.

அன்று அந்நிய மத, கலாசாரத் திணிப்பே ஏகாதிபத்திய ஊடுருவலின் பிரதான கருவியாக, ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் விஷமேறிய ஆயுதமாக இருந்தது. இந்த நிலையில் சைவத்தை அந்நிய ஊடுருவலை எதிர்த்த கேடயமாகக் கொண்டார் நாவலர். அவர் சமய கலாசார, இலக்கியத் துறைகளில் நடத்திய போராட்டம் உண்மையில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டமே. ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் அதே காலத்தில் அந்த உருவத்தைப் பெற்றே இருந்திருக்க முடியும். அந்நியருக்கு அஞ்சியும், சலுகைகளுக்காகக் கெஞ்சியும் தேசியப் பண்பாடுகளை மக்கள் விலைபேசிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் சுதேசிய மதங்களில் ஒன்றான சைவ மதத்தையும், தேசிய கலாசாரத்தையும் காக்கப் போராடுவதே சரித்திரத்தின் கடமை. இதை நிறைவேற்றியதன் மூலமே நமது நாவலர் சரித்திர புருஷன் என்ற பாத்திரத்தைப் பெறுகிறார்.

நாவலரின் சரித்திர ரீதியான பாத்திரத்தில் கல்வி, இலக்கியம் ஆகிய இரு துறைகள் முக்கிய ஸ்தானம் வகிக்கின்றன. படித்த வர்க்கத்தின் சொத்தாக இருந்த இலக்கியங்களைச் சாதாரண மக்களின் உடமையாக்க வேண்டும் என்பதை முதலில் உணர்ந்து உழைத்தவர் நாவலர். இலக்கியத்தைத் தனது தேசியப் போராட்டத்தின் ஒரு புதிய அர்த்த பாவத்தையும் இலட்சிய நோக்கையும் ஏற்படுத்தியவர் நமது நாவலர் அவர்களே. இலக்கியம்

இலக்கியத்திற்காக என்ற பொய்மை வாதத்தை - இன்றுகூடச் சில நபுஞ்சகமாகிப்போன வித்துவசிரோமணிகள் கட்டிக்காக்கும் வாதத்தை - நாவலர் வெறுத்துத் தள்ளினார் என்பதை அவருடைய கூற்றுகள் நிரூபிக்கின்றன. அவர் இயற்றிய சில பாடல்களில் கூட அவரது மூச்சே ஒலிக்கிறது.

வசனம் கைவந்த நாவலரின் தமிழ் நடை ஒரு போர் நடையாகும். இலக்கிய நயத்திற்கும் மேலாகத் தேவையை ஒட்டி சொல்லின் காத்திரத்திற்கே அவர் முக்கியத்துவம் கொடுத்தார். 'குளிர் நடை' வாதிகளுக்கு நாவலரின் 'கொதிநடை' ஒரு நல்ல வாந்திபேதி.

கல்வித் துறையிலும், அவர் காலத்தின் தேவையைப் பிரதிபலித்து நின்றார். அவர் சமயத்தைக் காக்கப் பாடசாலை நிறுவியது ஒரு முக்கிய அம்சமாயினும் கல்வி முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியதுதான் மிக முக்கியமான அம்சமாகும்.

குரு குல முறையே தமிழ்க் கல்வி. கல்வியை ஒரு சிலர் மத்தியில் அடைத்து வைத்திருந்த இந்த மரபை மாற்றி பெருவாரி மக்கள் கல்வி பெறக்கூடிய முறையில் புதிய பாடசாலை முறையை நாவலர் ஏற்று அதற்காகத் தீவிரமாகப் பாடுபட்டார். ஒரு சிலரின் மேதாவித்தனத்திற்கல்ல, பலரின் (மக்களின்) அறிவு வளர்ச்சிக்கே நாவலர் முக்கியத்துவம் கொடுத்தார்.

இதை ஒரு மக்கள் இயக்கமாகவே நடத்த எண்ணினார். ''ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் தாவித்து உங்களுக்குள்ளேயே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைக் கொண்டு அவைகளை நடத்துவியுங்கள்'' என்று மக்களைப் பார்த்து அழைத்தார். பாட சாலைகள் ஒரு சில 'ஸ்தாபகர்'களின் உடைமையல்ல. அவை மக்களுக்குரியவை என்று வெற்றியீட்டிவரும் கருத்தை நாவலர் அன்றே தனது பாணியில் முன்வைத்தார். இதுமட்டு மல்ல, பாதிரிமார்கள், கல்விக்குப் பணம் வசூலித்து வந்தபோது கல்வியை இலவசமாக அளித்தார். இப் புண்ணிய கைங்கர்யத்தைச் செய்ததன்மூலம் பிற்காலத்தில் அமுலுக்கு வந்த இலவசக் கல்வித் தத்துவத்தின் முதல் வித்தகரானார்.

இவை மட்டுமல்ல, அவருடைய பாத்திரத்திற்குச் சரித்திரத்தால் அளிக்கப்பட்ட தேவைகள் ஒவ்வொன்றிலும் அவர் கவனஞ் செலுத்தினார். சரித்திர ரீதியான அவருடைய உணர்வுகளுக்கு ஸ்தாபன வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன் சைவ சமாஜத்தையும் தோற்றுவித்தார். அக்கால நவீன சாதனமாக விளங்கிய அச்சகத்தை நிறுவினார். இந்த ஸ்தாபனங்களின் மூலம் பொதுஜனங்களுக்கு விளங்கக் கூடிய முறையில் வசன நூல்களும் ஆக்கினார்.

இவை அனைத்தும் சிவசக்தியில் நம்பிக்கை வைத்த நாவலர் அதேவேளையில் ஜன சக்தியிலேயே தனது இயக்கத்திற்கான ஜீவ ஓட்டத்தைக் கண்டார் என்பதைப் புலப்படுத்து கின்றன.

ஜனசக்தியில் நம்பிக்கை வைக்கும் புதிய ஞானோதயம் பெற்றதும், நாவலர் சமய வரம்பைக் கடந்து வெளியிலும் வரத்துவங்கினார். ஏனைய சிவயோகிகள் போல் தன்னுள்

தானாகி தனக்குள் லயித்து தனிமையை நாடாது ஜனங்களை நாடிய நாவலர் அந்த ஜனசமூகத்தைத் தாக்கும் பல பிரச்சினைகளைக் கண்டார். இதன்மூலம் சிவனடியாராக இருந்த நாவலர் வலுமிக்க, ஆக்குரோஷம் நிறைந்த கிளர்ச்சிக்காரராக மாறினார். கோயில்களில் நடக்கும் ஊழல்களையும், அக்கிரமங்களையும் அவற்றிற்கு மூலகர்த்தாக்களான கோவில் தர்மகர்த்தாக்களையும் காரசாரமாக விமர்சித்து எதிர்த்துப் போராடினார். பொதுஜனங்களின் முன்னால் அம்பலப்படுத்தி கண்டன முழக்கம் செய்தார். அன்று சமூகத்தில் ஆதிக்கஞ் செலுத்தியவர்களான நிலப்பிரபுக்கள், சீமான்கள் ஆகியோரின் அதர்மத்தையும், ஆபாச வாழ்க்கையையும் பேயென வெறுத்தார். அவர்கள் தர முன்வந்த பெருநிதியைத் தொடவும் மறுத்தார். கந்தையா, மாணப்பர் போன்ற கொழுத்த செல்வர்களையும், கோயில் தர்ம கர்த்தாக்களையும் எதிர்த்து அவர் நடத்திய போராட்டம் ஒரு புரட்சிக்காரரின் உள்ளத்தை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு மதச்சீர்திருத்தத்தை விரும்பும் கிளர்ச்சிக்காரராக மாறிய நாவலர் மக்கள் சார்பில் பொருளாதார, அரசியல் கிளர்ச்சிக்காரராகவும் மாறிவிடுவதையும் அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஆராய்வதன்மூலம் காணமுடிகிறது. அப்போது முகிழ்த்துக் கொண்டிருந்த ஜனநாயகக் கருத்தோட்டங்களை ஏற்று அவற்றையும் பிரதிபலித்தார். ''ஜன சம்மதத்தை மதிப்பதில்லை, மரியாதைக்குரிய ஜனங்களை மதிப்பதில்லை'' என்று ஆட்சியினரைக் குற்றம் சுமத்தும்போது நாவலரின் ஜனநாயகத் தன்மை ஜெகஜோதியாக ஒளிர்கிறது. பொதுஜனங்களின் ஆட்சி ஜனங்கள் மத்தியிலிருந்து வரவேண்டும் என்பதற்கு அடிப்படையான கருத்துக்களை அவர் தெரிவித்தபோதும், வாதாடியபோதும் ஜனயுகத்தின் பிரதிநிதியாக அவர் மாறுவதையும் பார்க்க முடிகிறது.

''தக்காருக்கு இடமில்லை. உழைப்பவர்களுக்குச் சரியாகக் கூலியும் கிடைப்பதில்லை'' என்று நாவலர் கூறுவதன்மூலம் 'ஆற்றலுக்குத் தகவேலை, உழைப்புக்குத் தக்க ஊதியம்' என்ற இன்றைய யுகத்தை முன் நிறுத்துகிறார்.

''இக்கோயில் யாருடையது? இக்கோயில் அதிகாரியுடையதா? ஜனங்களுடையதா? இக்கோயில் சைவ சமயிகள் எனப்படுவோர்கள் எல்லோருக்கும் உரிய பொதுத்தனமாகும்'' என்று 'உடமைகள் பொது' என்ற பொதுமை உணர்வினை முற்று முழுதாகப் பிரதிபலித்து நின்றார். அதுமட்டுமல்ல, ''இக்கோயில் அதிகாரி உங்களுடைய பேடிமையினாலே தமக்கே உரிய வர்த்தகசாலையாக்கிக் கொண்டார்'' என்று பொதுச் சொத்து தனியுடமையாக்கப்பட்ட விதத்தைச் சுட்டிக்காட்டி பேடித்தனத்தை ஒழித்து, பொதுச் சொத்தாக்குங்கள் என்கிறார். இதன்மூலம் இன்று சமுதாய, அரசியல், பொருளாதாரத் துறைகளிலும் நம்மவர்களுக்கு முன்னுள்ள கடமையைச் சுட்டிக் காட்டுகிறார்.

நாவலர் சிறந்த சைவயோகி; சைவமும் தமிழும் தமிழர் பண்பாடும் காத்த தீரர்; சீர்திருத்த கிளர்ச்சிக்காரர்; மக்கள் நலனுக்கான போராளி; தேசிய ஜனநாயக உணர்வின்

முன்னோடி; தர்மத்தின், நியாயத்தின், நேர்மையின் சமராளி. இவர்தான் நாவலர்; இதுதான் நாவலரின் முழுமை.

என்றாலும், நாவலர் நிலப்பிரபுத்துவ அமைப்பின் வெளியீடுகளான சில சிந்தனைகளையும், அமைப்பு முறைகளையும் தன்னகத்தே கொண்டிருந்ததோடு, அவற்றிற்காகவும் அவர் உழைத்தார் என்பதை மறுக்க முடியாது. அதே சமயத்தில் காலத்தின் குரலாகவும், காலத்தின் பிரதிநிதியாகவும் திகழ்ந்ததன் மூலம் அவர் காலத்தை வென்ற நமது சரித்திரத்தின் முக்கிய புருஷராக விளங்குகிறார். இதுவே நாவலரின் சரித்திர பாத்திரம்.

'மரகதம்', 1962, பக். 31 - 36.

நவீன இந்துமத சிந்தனையாளர் வரிசையில் ஆறுமுகநாவலர்

வி. சிவசாமி

மணிவாசகப் பெருமான் சிவபெருமானை ''முன்னைப் பழம் பொருட்கும், முன்னைப் பழம்பொருளே! பின்னைப் புதுமைக்கும் பெயர்த்துமப் பெற்றியனே!'' என விதந்து கூறியுள்ளது போல. இந்துசமயமும் பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கி வந்துள்ளது. இதனுடைய தொடக்கத்தினை அறுதியிட்டுக் கூறமுடியாது. ஆதிகாலம் தொடக்கம் பெருக்கெடுத்துப் பாய்ந்து கொண்டிருக்கும் கங்கை போன்ற பேராறு போலத் தொடர்ந்து நிலவி வந்துள்ளது. பேராறுடன் கிளைநதிகள் காலம்தோறும் ஒன்றிணைவதுபோல, இத்துடன் பல சமயப் பிரிவுகள், வழிபாட்டு முறைகள் முதலியன ஒன்றிணைந்துள்ளன. சில காலங்களிலே சில கிளைநதிகள் அற்றுப் போவது போல சில சமயப் பிரிவுகளும் வழக்கற்றுப் போயுள்ளன. ஆனால், பேராறோ தொடர்ந்து பாய்ந்து கொண்டே இருக்கும். அதிலே சிலவேளைகளில் நீர்ப்பெருக்குக் கூடியும், குறைந்தும் காணப்படும். இந்து சமய வரலாற்றிலும் மிகச் சிறப்பான காலங்களும், சிறப்புக் குன்றிய காலங்களும் நிலவி வந்துள்ளமையினை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக வட இந்தியாவிலே குப்தர் பேரரசுக்காலம் இந்து சமயத்திற்கு ஒரு சிறப்பான காலம். தமிழக வரலாற்றிலே பல்லவ - பாண்டியப் பேரரசுகளின் (கி.பி. 575 - 900 வரை) ஆரம்ப கட்டத்திலே பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்தமும் குறிப்பாகச் சமணமும், சைவ நாயன்மார்களாலும், வைஷ்ணவ ஆழ்வார்களாலும் முன்னெடுக்கப்பட்ட பக்தி இயக்கத்தின் விளைவாகச் செல்வாக்கு இழந்தன. சைவமும், வைணவமும் புத்துயிர்ப்பு பெற்றுப் பெருஞ்சிறப்படைந்தன. இதுபோலவே இடைக்கால இந்திய வரலாற்றிலே (சுமார் கி.பி. 1200 - 1600 வரை), முஸ்லிம்கள் நிருவாக, படைப்பலத்துடன் இஸ்லாமிய சமயத்தினைப் பரப்பி வந்தபோது, அக்காலத்திலே முகிழ்த்த பக்தி இயக்கத்தினை முன்னெடுத்த ஞானிகளான ஞானேஸ்வரர், துகாராம், ராம்தாஸ் போன்றோர் மஹாராஷ்டிரத்திலும், சைதன்யர் போன்றோர் வங்காளத்திலும், துளசிதாசர் போன்றோர் வடஇந்தியாவின்

மத்திய, வடக்குப் பிரதேசங்களிலும் மக்களோடு மக்களாய் வாழ்ந்து அவர்களுக்கு ஆத்மிக பலத்தினை அளித்து இந்துசமயம் அழியாது புது மெருகுடன் தொடர்ந்து நிலவ வழி வகுத்தனர். இதே காலப்பகுதியிலே தெற்கே பசவண்ணரால் உருவாக்கப்பட்ட வீரசைவமும் குறிப்பிடற்பாலது.

மேற்குறிப்பிட்ட காலங்களிற் போலவே 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையுள்ள காலப்பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவிலும், இலங்கையிலும் ஏற்பட்டு நிலவிற்று. இவ் ஆட்சி 18ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் ஏற்பட்டு 19ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் உச்ச நிலை அடையத் தொடங்கி விட்டது. இதனால் மேலைத்தேய நாகரிகம், கிறிஸ்தவ சமயம் முதலியன அரசு ஆதரவுடனோ அல்லது இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவ நிறுவனங்களின் ஆதரவுடனோ பரவத் தொடங்கின.

அக்காலத்திலே, இந்து சமயமும், சமூகமும் ஓரளவு தேக்கமடைந்திருந்தன. ஆனால், இங்கிலாந்திலேற்பட்ட தொழிற்புரட்சியினாலும் விஞ்ஞான முன்னேற்றத்தாலும், தாராண்மை வாதக் கருத்துக்கள் எழுந்தமையாலும் அந்நாடு நன்கு மேம்பட்டுக் காணப்பட்டது. அதேவேளையில் இங்கிலாந்திலே நிலவிய புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ திருச்சபைகள் சில, குறிப்பாக ஜோன்வெஸ்லி, வில்லியம் வில்பவோர்ஸ் போன்றோரின் செயற்பாடுகளாலே வெஸ்லியன், அங்கிலிக்கன் திருச்சபைகளிலே கிறிஸ்தவ சமயத்திலே புதிய விழிப்பும், ஆர்வமும் ஏற்பட்டன. கிறிஸ்தவ சமயத்தைக் குடியேற்ற நாடுகளிலே பரப்ப வேண்டும் எனும் பேரார்வமும் பிறந்தது. எனவே, கிறிஸ்தவ மிஷனரிமார் இங்கிலாந்திலிருந்தும், ஐக்கிய அமெரிக்காவிலிருந்தும் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் குறிப்பாக 1813ஆம் ஆண்டிற்குப் பின் பெருந்தொகையினராக வரலாயினர். 1813 வரை பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டிருந்த பிரதேசங்களிலே மிஷனரிமார் செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வாண்டளவிலே பிரித்தானியரின் ஆட்சி இந்தியாவிலும், இலங்கையிலும் முதன்மை நிலையடைந்து விட்டது. பிரித்தானிய பாராளுமன்றத்திலும் மிஷனரிமாரின் செல்வாக்கு அதிகரித்து விட்டது. இன்னோரன்ன காரணங்களால் கிறிஸ்தவ மிஷனரிமார் இந்நாடுகளுக்கு வரத்தொடங்கினர். கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்குக் கிறிஸ்தவ நற்செய்தியைக் கூறி அவர்களைப் பயனற்ற, கெட்டவழிகளிலிருந்து - அவர்களின் சமயங்களிலிருந்து - விடுவித்துக் கிறிஸ்தவராக்கி நற்கதியடையச் செய்வதே தம்முடைய தலையாய நோக்கம் எனக் கூறினர். கிறிஸ்தவராயினோருக்குப் பொருளாதார நன்மைகளும் பிற நன்மைகளும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

எனவே, ஒருபுறம் பாரம்பரிய சமய பண்பாடுகள் கொண்ட சமூகங்கள் நிலவின. மறுபுறத்திலே இகபர நன்மைகளை அளிப்பதாகக் கூறிக்கொண்டு, மேற்குலக விஞ்ஞான முன்னேற்றம், தொழிற்புரட்சியால் ஏற்பட்ட மேம்பாடுடனும் அரசியல் பொருளாதார பலத்துடனும் கூடிய கிறிஸ்தவ சமயமும், பண்பாடும் கொண்ட சமூகம் ஏற்படலாயிற்று. முற்குறிப்பிட்ட சமூகங்கள் வலுவுள்ள பின்னையதன் தாக்கங்களுக்கு முகம்கொடுக்க

வேண்டிய சூழ்நிலை உருவாகிற்று. இந்து சமூகம் இத்தகைய இக்கட்டான சூழ்நிலையை ஏற்கனவே குறிப்பிட்ட பல்லவர் - பாண்டியர் காலம், மத்திய காலம் ஆகியவற்றின் போது வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளது. ஆனால், இப்பொழுது நவீன தொடர்பு சாதனங்கள், விஞ்ஞான மேம்பாடு முதலியனவற்றுடன் தம்மை எதிர்நோக்கியோரை இந்து ஞானிகளும் அறிஞர்களும் தம்முடைய பாரம்பரியங்களிலே நிலவிவந்த வலுவான சிந்தனைகளையும் அணுகுமுறைகளையும் காலத்திற்கேற்றவாறு பொருத்தமாகப் பயன் படுத்தினர். அதேவேளையிலே தம்மை எதிர்நோக்கியோர் கையாண்ட அணுகுமுறைகள், கருத்துக்கள் சிலவற்றையும் காலத்திற்கேற்றவாறு பயன்படுத்தினர்; பெருமளவு வெற்றி கண்டனர்.

இந்த வகையிலே பீற்றர் சிலேற்றர் என்ற மேனாட்டுச் சமயப் பேராசிரியர் கூறியுள்ள கருத்துக்கள் கவனித்தற்பாலன. அவையாவன: ''சமய வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை உண்மையின் வெளிப்பாடுகளாகக் கொள்ள வேண்டும். அவ்வாறன்றி நம்பிக்கையின் இழப்பாக அவற்றை நோக்கக் கூடாது.'' ''கடந்தகால, வருங்கால நோக்கங்களுக்கான சமயச் செயற்பாடுகளின் அடிப்படையை வைத்துக்கொண்டே ஒரு சமயத்தினுடைய வலுவினைப் புரிந்துகொள்ள வேண்டும்.'' ''கடந்த கால நம்பிக்கைகளின் படிவுகளாலேயே மரபு உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் சமகால நம்பிக்கையும் சேர்ந்ததாகவே (இன்று) வாழும் சமயம் விளங்கும்'' என்பனவாம். 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இந்து சமயப் புத்துயிர்ப்பு அல்லது மறுமலர்ச்சியினை நோக்கும் போது மேற்குறிப்பிட்ட கருத்துக்களை யும் கவனித்தல் பயனுடையதாகும்.

இக்கட்டுரையின் தலைப்பிலுள்ள 'நவீன இந்துமதம்' பற்றியும் சிறிது விளக்குதல் அவசியமாகும். இந்து மதம் எனும்போது வைதிக மரபையொட்டிய சமயப் பிரிவுகளான சைவம், வைணவம் முதலியனவும் தரிசனங்களான வேதாந்தம் முதலியனவும் அடங்கும். பரந்த கருத்திலே வைதிக மரபுக்குப் புறம்பான வழிபாடுகளும், பௌத்தம், சமணம் போன்றவற்றையும் ஒருசாரார் கொள்ளுவர். இங்கு முதற்குறிப்பிட்ட கருத்திலேயே இப்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'நவீன' எனும் பதம் முற்றிலும் புதுமையானது என்ற கருத்திலே பயன்படுத்தப்படவில்லை. பழைய கருத்துக்களுடன் அவற்றைக் காலத்திற்கு ஏற்றவாறு புதிய நோக்கிலே பார்த்தலும் காலத்திற்கேற்ற புதிய கருத்துக்களைப் பழைய மரபு குலையாது உள்வாங்குதலும் இப்பதம் கருதும் பொருளில் அடங்குவன. இக்காலத்திலே தோன்றிச் செயற்பட்ட ஞானிகள், சிந்தனையாளர்களின் கருத்துக்களிலே மேற்குறிப்பிட்ட கருத்தின் சாயலைக் காணலாம்.

ஏற்கனவே, குறிப்பிட்டவாறு, இக்காலச் சூழ்நிலையிலே இந்து சமயத்திலே புதிய விழிப்பும், விளக்கமும், காலத்திற்கேற்ற செயற்பாடுகளும் தோன்றின. இக்காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் தோன்றிய இந்து ஞானிகள், சிந்தனையாளர்கள் தென்னாசியாவின் பல இடங்களிலும் தோன்றினர். 1828இலே பிரம சமாஜத்தினைத் தொடங்கிய ராஜாராம் மோகன்ராய் (1773 - 1833) வங்காளத்தினைச் சேர்ந்தவர். ஆரிய

சமாஜத்தினைத் தோற்றுவித்த சுவாமி தயானந்த சரஸ்வதி (1824 - 1883) குஜராத்தைச் சேர்ந்தவர். இராமகிருஷ்ண இயக்கத்தைத் தொடங்கியவராகிய இராமகிருஷ்ண பரமஹம்சரும் (1836 - 1886) அவருடைய பிரதம சிஷ்யரும், அவரின் கருத்துக்களை உலகளாவிய ரீதியிலே முன்னெடுத்தவருமாகிய விவேகானந்தரும் (1863 - 1902) வங்காளத்தினைச் சேர்ந்தவர்கள். சமரச சுத்த சன்மாக்கத்தினை உருவாக்கிய இராம லிங்கம்பிள்ளை - வள்ளலார் (1823 - 1874) தமிழகத்தைச் சேர்ந்தவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (1823 - 1879) வட இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் களைவிட, 1878இலே சென்னையிலே பிரமஞான சங்கத்தை நிறுவிய அமெரிக்கரான கேணல் ஒல்கொற், ரூஷியராகிய பிளவற்ஸ்கி அம்மையார் ஆகியோரும் குறிப்பிடற்பாலர். இவர்களும் இந்து, பௌத்த மத, பண்பாட்டின் விழுமியங்களை முன்னெடுத்தனர். இவர்கள் அனைவரினதும் கருத்துக்களை இவர்களின் சிஷ்ய பரம்பரையினர் முன் னெடுத்தனர்.

இவ் அனைவரினதும் செயற்பாடுகள் இந்து சமயத்திலே குறிப்பிட்ட சீர்திருத்தங்கள் ஏற்படவும், இந்துசமயம் புத்துயிர்ப்பு ஏற்படவும் வழிகோலின. இவர்களுடைய சமய, சமூக, பண்பாட்டுச் சிந்தனைகளில் ஒற்றுமை, வேற்றுமைகள் காணப்படுகின்றன.

இவர்களில் இராமகிருஷ்ணரையும், இராமலிங்கம் பிள்ளையையும் தவிர்த்த ஏனையோர் கிறிஸ்தவசமயப் பிரசாரங்களை எதிர்த்துக் கிறிஸ்தவமத பிரசாரகர்களுடன் காரசாரமான, கடுமையான விவாதங்கள் நடத்தினர். சிறிய, பெரிய பிரசுரங்கள், கடுமையான கண்டனங்கள் வெளியிட்டனர். ராஜாராம் மோஹன்ராய் சமரச நோக்குடையவராயினும் கிறிஸ்தவத்தைக் கண்டித்தவர். ஆனால், யேசுபெருமானிடத்துப் பெருமதிப்புக் கொண்டிருந்தார். இராமகிருஷ்ணரும் பாரம்பரியமான இந்து மத சமரசத்தை வலியுறுத்தினார். ஆனால், இவருடைய சிஷ்யரான சுவாமி விபுலானந்தரும் சமரச நோக்குள்ளவராயினும், கிறிஸ்தவ சமயப் பிரசாரத்தினை வன்மையாகக் கண்டித்தவர்.

மேற்குறிப்பிட்ட ஞானிகள் பொதுவாகப் பன்மொழித் தேர்ச்சி பெற்றிருந்தனர். ராஜாராம் மோகன்ராய் உலக சமயங்களின் உண்மைகளை அவ்வவற்றின் மூலமொழிகள் மூலமும் அறியமுற்பட்டவர். இந்து சமய தத்துவத்தினை சம்ஸ்கிருதம் மூலமாகவும், கிறிஸ்தவத்தை எபிரேயம், கிரேக்கம் ஆகிய மொழிகள் மூலமும் இஸ்லாமை அராபியம் பாரசீகமாகிய மொழிகள் மூலமும் அறிந்தவர். மூலமொழியிலிருந்து பிறிதொரு மொழிக்குப் புனித நூல்கள் மொழி பெயர்க்கப்படும்போது கருத்துத் திரிபுகள் முதலியன ஏற்படலாமென அவர் கருதினார். இவர் மேலும் ஆங்கிலம், சம்ஸ்கிருதம், தாய் மொழியாகிய வங்காள மொழி முதலியவற்றிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். கிறிஸ்தவ புனித நூலை வடமொழியிலே மொழிபெயர்க்க உதவினார். நாவலர் கிறிஸ்தவ வேதத்தினைத் தமிழிலே மொழிபெயர்த்தமையை இத்துடன் ஒப்பிடலாம். இவருடைய பிரமசமாஜம் பல சமயங்களிலுள்ள கருத்துக்களைக் கொண்டிலங்கிற்று. காலப்போக்கில் இது செல்வாக்கு இழந்தது. சுவாமி தயானந்த சரஸ்வதி, ஆறுமுக நாவலர் போன்றோர் சமஸ்கிருத அறிவு

நன்கு பெற்றிருந்தனர். தயானந்த சரஸ்வதி வடமொழி, ஹிந்துஸ்தானி போன்ற சில வடஇந்திய மொழிகளையும் நன்கு அறிந்தவர். ஆனால், ஆங்கிலம் சிறிதளவு கற்றாராயினும் தமது செயற்பாடுகளுக்குச் சமஸ்கிருதம், ஹிந்துஸ்தானி மொழிகளையே பயன்படுத்தினார். நாவலர் பெருமான் மேற்குறிப்பிட்டவாறு வடமொழியுடன், குறிப்பாகத் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை நன்கு கற்றவர், பயன்படுத்தியவர்.

மேற்குறிப்பிட்ட ஞானிகளிலே பெரும்பாலானோர் சமகாலத்திலே இந்து சமயத்தைக் கிறிஸ்தவ சமய பிரசாரத் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றி, அதனை மேலும் மிளிரச் செய்யும் செயற்பாடுகளிலே தம்மை அர்ப்பணித்தனர். குறிப்பாகச் சுவாமி தாயானந்தர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர் முதலியோரின் இந்து சமயப் பணிகள் குறிப்பிடத்தக்கவை.

இருசாராரும் - இந்துக்களும் கிறிஸ்தவர்களும் - தத்தம் சமயத்தினை நிலைநாட்ட விவாதங்கள் மட்டுமன்றிச் சமய நூல்கள், கண்டனங்கள் முதலியவற்றைப் பிரசுரித்தல், கல்விக் கூடங்களை அமைத்தல், கற்பித்தல், மதமாற்றம், மதம் மாறியவர்களை மீண்டும் தத்தம் மதத்திலே சேர்த்தல் எனப் பலவகையான வழிவகைகளைக் கையாண்டனர்.

இருசாராரும் அவ்வப் பிராந்திய மொழிகளையே பெரிதும் பயன்படுத்தினர். சில இடங்களில் ஆங்கிலமும் ஓரோவிடத்தில் சமஸ்கிருதமும் விவாதங்களுக்கும் பிரசுரங்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. கிறிஸ்தவ சமயத்தினை இந்துக்களின், புனித மொழியான சமஸ்கிருதத்திலே போதித்தல், புனித நூலையும், இந்து சமயம் பற்றிய கண்டனங்களையும் வெளியிடுதல் மூலம் இந்துக்கள் எளிதில் கிறிஸ்தவராவார்கள் என முயர், மோனியர் வில்லியம்ஸ் போன்றவர்கள் கருதினர். ஆனால், இம் முயற்சி பலன் அளிக்கவில்லை. இது வட இந்தியாவிலே மேற்கொள்ளப்பட்டது.

இரு சாராருக்குமிடையிலே (இந்துக்கள், கிறிஸ்தவர்களிடையே) வாதப் பிரதிவாதங்கள் மிக விறுவிறுப்பாகவும், காரசாரமாகவும் நடைபெற்றன. இரு சாராரும் தத்தம் சமயங்களிலே மட்டுமன்றி, ஒருசாரார் மற்றவருடைய சமயத்திலும் நன்கு புலமை பெற்றிருந்தனர். ஒருவர் மற்றவருடைய கருத்தினை நிராகரிக்க, அதனை நிராகரித்து மற்றவர் தமது கருத்தினை நிலைநாட்ட முயன்றார். நிராகரிப்புகள், மறுநிராகரிப்புகள், கண்டனங்கள், கண்டன கண்டனங்கள் எனப் பல வெளியிடப்பட்டன. இந்துசமய அறிஞர்கள் சிலர் கிறிஸ்தவ சமயத்தை நன்கு கற்றுத் தம்முடைய சமயத்திலுள்ள ஆழமான அறிவினாலும், தர்க்க ரீதியிலான வாதங்களாலும் மற்றவர்களைத் திடமனத்துடன் எதிர்நோக்கி இந்து சமயம் நிலை குலையாது காப்பாற்றினர். சில இடங்களிலே இவர்களின் வாதத்திறனை மற்றவர்கள் வியந்தனர்.

கிறிஸ்தவப் பிரசாரகர் கையாண்ட அணுகுமுறைகள், உத்திகளை இந்துக்கள் தம்முடைய நோக்கத்திற்குப் பயன்படுத்தி வெற்றிகண்டனர் என்ற கருத்தும் உற்றுநோக்கற் பாலது. சமய விவாதங்கள் இந்தியாவிலே நீண்ட காலமாக நிலவி வந்துள்ளமைக்கு சங்கராச் சாரியாருடைய விவாதங்கள், மணிமேகலை தரும் சான்று போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வினாவிடை மூலம் ஒரு கருத்தினை விளக்கும் பாங்கு உபநிஷதங்கள், மிலிந்தபஞ்ஞ (பௌத்த நூல்), கந்த புராணம் தத்தீசி உத்தரப்படலம், சிவஞானசித்தியார் போன்ற சைவ சித்தாந்த நூல்கள் போன்றவற்றால் அறியலாம். ஆனால் 19ஆம் நூற்றாண்டிலே மேல்நாட்டு விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்ட அச்சியந்திரம் போன்றவற்றால் எளிதிலே சமய நூல்களையும், பிரசுரங்களையும் வெளியிடுதல் போன்றவை இந்தியாவிலும், இலங்கை யிலும் புதிதாக அறிமுகம் செய்யப் பட்டவையே. எவ்வாறாயினும் கிறிஸ்தவர்கள் கையாண்ட சில வழிமுறைகளைத் தம்முடைய நோக்கத்திற்குத் தக்கவாறு இந்துக்களும் பயன்படுத்தினர். கிறிஸ்தவர்கள் அன்று எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை என்பது உண்மையே. அக்காலத்தில் அவர்கள் சந்தித்த மக்களும், அறிஞர்களும் தம்முடைய பாரம்பரிய சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவராக இருந்தனர். இந்துக்கள் பொதுவாகச் சமய சமரசத்தைப் பின்பற்றுவார்கள். எனவே, 19ஆம் நூற்றாண்டிலே பல பிரபல இந்துத் தலங்களுக்கு மிக அண்மையில் கிறிஸ்தவப் பிரசாரம் நடைபெற்றாலும் ''மக்கள் அதைக் கேட்பார்கள், பொறுமையாகக் கேட்பார்கள். ஆனால், தமது சமயத்தை எளிதிலே கைவிட மாட்டார்கள்.'' 19ஆம் நூற்றாண்டிலே காசியிலே இத்தகைய நிகழ்வினை நேரே கண்ட ஒரு பிராஞ்சியர் மிகவும் வியப்புற்றார் எனக் கூறப்படுகிறது. இந்த அவதானிப்பு பொதுவாகப் பல இடங்களுக்கும் பொருத்தமானதே. மேலும் 19ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலே குறிப்பாகத் தேசீயவாத சிந்தனைகள் படிப்படியாகத் தோன்றின. சுவாமி தயானந்த சரஸ்வதி ஸ்வதேச, ஸ்வராஜ்ய பற்றிய கருத்துக்களையும் கூறி வந்தார். மகான் அரவிந்தர் ''தேசியவாதமே சநாதனதர்மம்'', ''தேசியவாதம் கடவுளிடமிருந்து வந்த சமயம்'' என முழங்கினார். இவர்கள் இருவரும் பிரித்தானிய ஆட்சியை எதிர்த்தவர்கள். இத்தகைய சிந்தனைகள், இந்து சமயத்தைத் தேசப்பற்றுடன் இணைத்து மெருகூட்டின.

இக்கால ஞானிகளிலே சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தின் சிறப்புகளைக் கிறிஸ்தவ நாடாகிய ஐக்கிய அமெரிக்காவில் எடுத்துக் கூறி இந்துக்கள் தலை நிமிரச் செய்தார். அவரே இது பற்றிக் குறிப்பிடுகையில் முன்னர் கிறிஸ்தவ மிஷனரிமார் இந்தியாவுக்குத் தம் சமயப் பிரசாரத்திற்கு வந்துள்ளனர் எனவும் தற்பொழுது இந்துவாகிய தாம் கிறிஸ்தவ சமய நாட்டிற்கு இந்துமதப் பிரசாரம் செய்யச் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இக்கால ஞானிகளிலே இவரும் ராஜாராம் மோஹன்றோயுமே இந்தியாவுக்கு வெளியே மேற்குலகிற்குச் சென்றவர்கள்.

யாழ்ப்பாணத்தவராகிய ஆறுமுகநாவலர் தமிழகத்திலும் தமிழ், சைவப் பணியாற்றிய வர். இலங்கையிலும் தமிழகத்திலும் ஏற்பட்ட கிறிஸ்தவ சமய, பண்பாட்டுத் தாக்கத்தினைக் குறிப்பிடத்தக்கவகையில் எதிர்கொண்டவர் எனலாம். இவருடைய செயற்பாடுகளால் ஏற்பட்ட இந்து சமயப் புத்துயிர்ப்பு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பின்னரே தமிழகத்தில் ஏற்பட்டது. இதன் பின்னரே தென்னிலங்கையிலே பௌத்த சமயப் புத்துயிர்ப்பு ஏற்பட்டது. இவருடைய சைவ சமயப் பணிகள், தமிழ்ப் பணிகள் நன்கு குறிப்பிடத்தக்கவை 'தமிழ் வசன நடை கைவந்த வல்லாளர்' என இவருடைய வசன நடையின் திறன் பாராட்டப்படு

கிறது. தமிழிலே தர்க்க ரீதியிலான வாதங்களைத் திறம்பட நடத்தலாம் என்பதை இவரும் உணர்த்தியுள்ளார். இவருடைய பேச்சுத்திறன், எழுத்துத் திறன் ஆகியன நன்கு குறிப்பிடத் தக்கவையே. சிறுவரும், ஏனையோரும் சமயத்தை எளிதிலே புரிந்துகொள்ளக்கூடிய வகையிலே சைவ வினாவிடைகள் மற்றும் பிரசுரங்களை விட, தமிழிலுள்ள பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் முதலியவற்றின் கதைகளை எளிமையான வசன நடையில் எழுதியுள்ளார். தமிழ் தமிழ்ப் புலமை பற்றிய இவரின் கட்டுரைகளும் மிக முக்கியமானவை. இவ்வாறு இவர் தமிழ்ப்பணி செய்ததுபோல ராஜாராம் மோகன்றோய் வங்காள மொழிப்பணியும், தயானந்த சரஸ்வதி ஹிந்தி, சம்ஸ்கிருதப் பணியும் செய்துள்ளனர்.

பாடசாலைகள் அமைத்தலும், சமயம், சுதேச மொழி, ஆங்கிலம், மற்றும் உலகியல் சார்பான சில பாடங்களைக் கற்பிப்பதிலே ராஜாராம் மோகன்றோய், ஆறுமுக நாவலர் போன்றோர் அதிக கவனம் செலுத்தினர். சுயமொழி, ஆங்கிலக் கல்வி ஆகியனவற்றிலும் முக்கிய கவனம் செலுத்தினர்.

இக்கால ஞானிகள் பொதுவாகத் தேசாபிமானமும், சமயாபிமானமும் கொண்டிருந்தனர். தேசப்பற்றும் தாய்மொழிப் பற்றும் பிரிக்க முடியாதவையே. இக்கால ஞானிகள் இவை பற்றிச் சுட்டிக் காட்டியுள்ளனர். இவற்றில் ஒரு சாரார் பிரித்தானியர் ஆட்சியை எதிர்த்திலர். அவ்வாட்சியில் ஏற்பட்ட நன்மைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், பிரித்தானியர் ஆட்சியின் ஆதரவுடனோ அல்லது அனுதாபத்துடனோ ஏற்பட்ட கிறிஸ்தவ சமயப் பிர சாரம் செய்தோரைக் கடுமையாக எதிர்த்தனர். ராஜாராம் மோஹன்றோய், ஆறுமுகநாவலர் போன்றோர் இத்தகையரே.

இந்து சமூகத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகிய வருணாசிரம தர்மத்தினை இக்கால ஞானிகளிற் பலர் கருத்தியலளவில் ஏற்றுக்கொண்டவராயினும் இதற்குக் காலத்திற்கேற்ற விளக்கமளித்துள்ளனர். சுவாமி தயானந்த சரஸ்வதி, சுவாமி விவேகானந்தர் போன்றோர் செயன்முறையிலே வருணத்தைக் கவனித்திலர். மக்கள் அனைவரையும் ஒரே விதமாக நோக்கினர். ராஜாராம் மோஹன்றோயும் இதே கருத்தினைக் கொண்டிருந்தார். தூய்மையான சமய வாழ்வு, நல்லொழுக்கமுள்ளவர்கள் எல்லோரையும் அவர்கள் மதித்தனர். நாவலர் பெருமானிடத்தும் இதே கருத்துக் காணப்படுகின்றமை குறிப்பிடற் பாலது. அதாவது ''பிராமணர் முதல் சூத்திரர் இறுதியாக உள்ள நான்கு வருணத்தாரும் தீஷையினாலே துவிஜத்துவம் (இது பிறப்பாளருக்குரிய நிலை) அடைந்தார்களாயின், ஆகமம் ஓதுவதற்கு அதிகாரிகளாவர். சூத்திரர்களும் நான்கு வருணத்துப் பெண்களும் தீஷைபெற்றவர்களாயின் ஆகமக் கிரியைகள் அனுஷ்டிக்க வேண்டும். ''தீஷையுடைய வராயினும், ஒழுக்கமில்லாதவராயின் தீஷையில்லாதவ ரோடொப்பர். சூத்திரராயினும் ஒழுக்கமுடையவராயிற் பிராமணரெனப்படுவர். பிராமணனாயினும் ஒழுக்கமில்லாதவன் சூத்திரனெனப்படுவான். பிராமணருள்ளும், பிராமண, ஷத்திரிய, வைஷ்ய, சூத்திரர் உண்டு.ஷத்திரியருள்ளும் பிராமண, ஷத்திரிய, வைஷ்ய, சூத்திரர் உண்டு. வைஷ்யருள்ளும்

பிராமண, ஷத்திரிய, வைஷ்ய, சூத்திரர் உண்டு. சூத்திரருள்ளும் பிராமண, ஷத்திரிய, வைஷ்ய, சூத்திரர் உண்டு. அவரவர் நடைகளினாலே அவரவரைப் பகுத்தறிந்து கொள்ளலாம்'' என்பதாகும். மேலும் தொடர்ந்து கூறுகையில் ''நான்கு வருணத்தாரும், மற்றும் சாதியினரும் ஆசாரியரை அடைந்து தீஷைபெற்று இறைவனை உணர்ந்து உய்திபெறலாம்'' எனவும், அவர் நாலாம் பால பாடத்திலே குறிப்பிட்டுள்ளார். பிறிதொரு நூலிலே ''பிராமணர் முதலாக உள்ள அனைத்துச் சாதியாருள்ளும் சிவனை வழிபடுவோர் உள்ளனர் எனவும் அவர்களெல்லாம் சைவர்கள்தாமே'' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் வேறு சில பிரசுரங்களிலே ஒழுக்கமில்லாத காரணத்தினாலே சில சமூகத்தினரைச் சமயக் கிரியைகள், சுவாமி தரிசனம் போன்றவற்றிலே பங்குபற்றாது தவிர்க்குமாறு கூறியுள்ளார். ஆகம விதிகளை இறுக்கமாகப் பின்பற்றியதாலும், சம காலத்திலேற்பட்ட தீவிரமான கிறிஸ்தவப் பிரசாரத்தாலும் இவர் பழைய சமூக விதிகளை இறுக்கமாகப் பின்பற்ற முயன்றாலும் மேற்குறிப்பிட்டனவற்றிலே நெகிழ்ச்சியும், சமய ஆளுமையும் காணப்படுவதை அவதானிக்கலாம். ஆனால், சுவாமி தயானந்தரும், சுவாமி விவேகானந்தரும் அன்றாட வாழ்க்கையிலே வருண விதிகளைப் பொதுவாகப் பின்பற்றிலர். ''அனைவரையும் பிராமணராக்குவதே (சிறந்த தெய்வீகத் தன்மையுள்ளவராக்குவதே) தமது நோக்கமாகும்'' என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

ஆறுமுகநாவலரும், சுவாமி தயானந்தரும் தத்தம் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது, மக்களுக்கு இயன்ற அளவு உதவி செய்தனர். 1876ஆம் ஆண்டளவிலே பருவ மழை பெய்யாமையினாலே தானிய விளைச்சலின்றி உணவுத் தட்டுப்பாடும், கொள்ளை நோயும் பஞ்சமும் 1877இலே யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டன. இச்சூழ்நிலையிலே சமகால வடமாகாண அரசு நிர்வாகம் வாளாவிருந்தது. நாவலர் கிபிறிற்றோ போன்ற சில அன்பர்களின் உதவியுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையிலே கஞ்சித் தொட்டித் தருமம் மூலம் அவர்களுக்குத் தக்க நேரத்தில் உதவி செய்தார். அரசாங்கம் செய்ய வேண்டியதை இவர் மனிதாபிமான ரீதியிலே செய்தார். குருநகரிலேற்பட்ட கலகத்தின்போது இவர் பாதிக்கப்பட்ட மக்களையே ஆதரித்தார். மேற்குறிப்பிட்ட விடயங்களிலே மக்கள் அனைவரையும் தமிழர் என்ற வகையிலே நோக்கினார். அவர்களின் சமூகம், சமயம் பற்றிக் கவனித்திலர்.

நாவலர் காலத்தின் பிற்பகுதியிலிருந்த இலங்கைத் தேசாதிபதியான வில்லியம் கிரகெறி (1827 - 1877) விவசாய அபிவிருத்தியில் ஈடுபட்டவர். கிழக்கு மாகாணத்தில் உள்ள கந்தளாய்ப் பிரதேசத்திலுள்ள காடுகளை அழித்து அங்கு விவசாயம் செய்வதற்கு ஐரோப்பியர் மட்டுமன்றிச் சுதேசிகளான சிங்களவர், தமிழர், முஸ்லிம்களும் அரசாங்கத்திற்குக் குறிப்பிட்ட பணம் செலுத்தி விவசாயப் பெருக்கத்தில் ஈடுபட வழிவகுத்தார். இதன் விளைவாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் உருவாகிற்று. நாவலரும் இச்சங்கத்திலே பல பங்குகளை விலைக்கு வாங்கி அதிலே ஒரு முகாமைக் காரராகவும் விளங்கினார். சமகால இலங்கைநேசன் பத்திரிகை மூலமும் கூட்டங்கள்

மூலமும் மக்களை விவசாயத்தில் ஈடுபடுமாறு ஊக்கப்படுத்தினார். அதனால் வரும் நன்மைகளை விளக்கினார். வேளாண்மையே மிக மேலான தொழில் என நாலாம் பாலபாடத்திலே குறிப்பிட்டுள்ளார். இக்காலப் பகுதியிலே வடமாகாண அதிபராக இருந்த துவைனம்துரை பல வகையான அநீதி, ஊழல்கள் நிறைந்த நிருவாகம் நடத்தினார். எடுத்துக்காட்டாக மழை பெய்யாமையால் விளைச்சல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விதை நெல்லை அரசாங்கம் வழங்க முன்வந்தது. ஆனால், வடமாகாணத்திலே தேசாதிபதியாக இருந்த துவைனம்துரை இதனைப் பல விவசாயிகளுக்கு முறைப்படி வழங்கிலர். இதை யறிந்த நாவலர், அவர்கள் சார்பாக தேசாபதிக்கு முறையிட்டார். அப்போது இலங்கைச் சட்டசபையிலே உறுப்பினராக இருந்த ஸ்ரீ குமாரசாமி மூலம் இது பற்றிச் சட்டசபையிலே தெரிவிப்பித்தார். அரசாங்கம் இதனை விசாரிப்பதற்காக ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. ஆனால், அந்த விசாரணைக் குழு துவைனம்துரையின் முறையற்ற செயற் பாட்டினால் ஒழுங்கான விசாரணை செய்யாது துவைனம்துரை சரியாகவே நடந்துள்ளார் என நியாயப்படுத்தி அறிவித்தது. நாவலர் இதற்கெதிராகக் கொதித்தெழுந்தார். மக்கள் அரசாங்க அதிபருக்கு எதிராக உண்மையினைக் கூறவில்லை எனக் கவலைப்பட்டார். தாங்களாகவே தங்களுக்குத் துன்பம் இழைத்துள்ளார்கள் என மன வருத்தமுற்றார். சைவ சமயப் பிரசாரகராக இருந்து வந்த நாவலர் அத்துடன் பொருளாதார அபிவிருத்தி, மக்களின் இன்னல்களை நீக்கும் பணிகள், அரசாங்கத்தின் அநீதிகளையும் ஊழல்களையும் சகிக்க முடியாது, அவற்றைத் துணிகரமாகக் களையும் முயற்சியில் ஈடுபடல் போன்ற வற்றிலே தமது வாழ்வின் பிற்பகுதியிலே மிகுந்த கவனம் செலுத்தியுள்ளமை குறிப்பிடற் பாலது.

மேற்குறிப்பிட்ட ஞானிகள், அறிஞர்கள் அனைவரும் கல்வியின் முக்கியத்துவத்தினை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளனர். கல்வியின் மூலமே ஒருவர் சமய, உலகியல் நன்மையை அடைய முடியுமென்பதை இவர்கள் உணர்ந்து உபதேசித்தனர். தாய்மொழிக் கல்வியை அனைவரும் நன்கு வலியுறுத்தியுள்ளனர். ஒழுக்கத்துடன் கூடிய கல்வியை இவர்கள் நன்கு விரும்பினர். நல்லொழுக்கத்தினை அனைவரும் வலியுறுத்தியுள்ளனர். ராஜாராம் மோகன்றோய், நாவலர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் ஆங்கிலக் கல்வியையும், உலகியல் கல்வியையும் வலியுறுத்துவதில் தவறிலர். இ஼து அவர்களுடைய யதார்த்த நோக்கினையும் எடுத்துக் காட்டுவதாகலாம். ஆங்கிலக் கல்வி மூலம் வெளியுலக அறிவினைப் பெறக் கூடியதாயிற்று. இவர்களுடைய இத்தகைய செயற்பாடுகள் தாய்மொழிக் கல்வி வளர்ச்சியையும், அறிவுப் பரவலையும் அதேவேளையில் தேசியவாதம் தோன்றவும் ஏதோவகையில் ஊக்குவித்தன எனலாம்.

ஆகம முறையிலான கோவில் வழிபாட்டினையும், கலைகளையும் வலியுறுத்திய நாவலர் இசைக்கலையிலே இயல்பான அறிவும் திருமுறைகளைப் பாடுவதில் ஈடுபாடும் உடையவராக இருந்தார். அவர் தெய்வீகப் பண்ணிசையிலே நன்கு கவனம் செலுத்தினார். குறிப்பாகச் சைவத்திருமுறை இசை கோவில்களில் முறைப்படி இசைக்கப் பட வேண்டு

மென்னும் நோக்கத்துடன் இந்தியாவிலிருந்து ஓதுவார்களை வரவழைத்து அவர்கள் மூலம் இவ் இசை கோவில்களில் இடம்பெறவும், இங்குள்ளவர்கள் இதனைக் கற்றுப் பயன்படுத்தவும் வழிவகுத்தார்.

கர்நாடக இசையிலும் இவருக்கு ஈடுபாடு இருந்தது. கதிர்காமக் கந்தன்மீது ஆறு சிறந்த கீர்த்தனைகள் பாடியுள்ளார். இவருடைய தமிழிசைப் பணிகளை நன்கு நோக்கிய சுத்தானந்த பாரதியார் ''தமிழிசைக்கு விதை போட்டவரும் நமது நாவலரே'' எனக் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடற்பாலது.

நடனக் கலையில் இவருக்கு ஈடுபாடு இருந்தாலும் சமகாலத் தேவதாசிகள் மிகவும் சீர்கெட்ட ஒழுக்கம், வாழ்க்கை முறையைப் பின்பற்றியதால் தேவதாசி நடன முறையை மிக வன்மையாகக் கண்டித்தார். ஆனால், ஆகம முறையிலான கோவில் வழிபாட்டிலே புனிதமான நடனமும் முக்கியமான ஓரிடம் பெற வேண்டும். அன்றைய சூழ்நிலையில் அது சாத்தியமற்றதாயிற்று. ''ஆனால், உருத்திரகணிகையர் (முன்னாள் தூயதேவதாசி கள்) வியபிசாரம், மது, மாமிச பஷணம் முதலிய பாதகங்களின்றி சிவவேடம் பூண்டு சிவபக்தியிற் சிறந்தவர்கள் என்று சிவாகமங்கள் கூறுகின்றன. இதற்கு மாறாக இக்காலத்துக் கோயில்கள் எங்கும் மதுமாம்சபஷண முடையவர்களாய் வரைவின்றி யாவரையும் புணரும் ஸ்திரிகளை உருத்திர கணிகையரென்று நியமிக்கின்றனர்கள்'' என அவர் கூறியதிலிருந்து நல்லொழுக்கமுடைய நடன மாதர் அக்காலத்திருந்தால் கோயில்களில் அவர்களின் நடனம் இடம்பெறுவதை ஆதரித்திருப்பார் எனலாம்.

தமிழ் பேசும் மக்கள் எச்சமயத்தவராயினும், சமூகத்தவராயினும் அவர்கள் அனை வரும் தமிழரே என்ற கருத்துடையராக இவர் விளங்கினார் என்பது ஏற்கனவே குறிப்பிட்டன வற்றால் நன்கு புலனாகும். அவருக்குத் தமிழிலே மிகுந்த பற்றும், விருப்பமும் இருந்தது. 'வடமொழியும் தமிழும் சமம்' என நாலாம் பாலபாடத்திலே கூறிய இவர் பிறதோரிடத்திலே ''எம்மொழியிலும் இனிய எமது தமிழ்மொழி மிக வளர்ந்தோங்குமே'' எனக் கூறியிருப்பது கவனித்தற்பாலது. மகாகவி பாரதியார் ''யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்'' எனக் கூறியிருப்பதற்கு முன்னரே நாவலர் தமிழின் இனிமை பற்றி ஒப்பீட்டு ரீதியிற் கூறியுள்ளார். பாரதியார் போல இவரும் பல மொழி களிலே (தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம்) மிகுந்த தேர்ச்சி பெற்றவர். ''நமது தமிழ் மொழி'' என இவர் கூறியிருப்பது உள்ளார்ந்த உணர்வுபூர்வமான கருத்தாகும். தமிழ் மேலும் மிக வளர்ச்சியும் பெருஞ் சிறப்பும் அடைய வேண்டுமென்ற யதார்த்தமான தீர்க்கதரிசனக் கருத்தும் இதில் உள்ளது.

இவருடைய நாட்டுப் பற்றும் மிக வலுவானதாகும். சமகால யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல்யமான தமிழறிஞரான சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் பிரசுரம் குறித்துத் தமிழகத்தைச் சேர்ந்த நரசிங்க முதலியார் யாழ்ப்பாணத் தமிழரை மிக இழிவாகவும் யாழ்ப்பாணம் பற்றிய விபரம் தெரியாமலும் எழுதிப் பதிப்பித்த பத்திரிகைக்கு எதிராக 'நல்லறிவுச் சுடர் கொளுத்தல்' எனும் தலைப்பில் ஒரு மிக வலுவான கண்டனப் பிரசுரம்

எழுதி வெளியிட்டார். இதிலே யாழ்ப்பாணத்தின் பெருமை, யாழ்ப்பாணத் தமிழர், தமிழ் பற்றிய சிறப்புகள், தமிழுக்கு அன்றுவரை அவர்கள் அளித்துள்ள பங்களிப்புகளையும் நூல்களையும் முக்கியமான அறிஞர்களின் பெயர்களையும் பட்டியல் போட்டுக்காட்டி அந்த நபர் எந்தவகையிலும் பதிலளிக்காத வகையில் காரசாரமாகப் பத்திரிகை மூலம் வன்மையாகக் கண்டித்தார். இவருடைய பதிலுரை பொதுவாக அன்று வரை யாழ்ப்பாணத் தமிழின் சிறப்பியல்புகள், தமிழரின் பல்வேறு வகையான நூலாக்கங்கள் முதன் முதலாகப் பட்டியலிட்டுக் காட்டும் வகையில் அமைந்துள்ளமை உற்றுநோக்கற் பாலது. யாழ்ப்பாணத் தமிழிலக்கிய மரபு வரலாறு பற்றிய முதல் பிரசுரமாகவும் இது காணப்படுகின்றது.

ஆறுமுகநாவலர் தேசபிமானம், சமயாபிமானம் மட்டுமன்றி, தமிழ் மக்களிடத்து மிகுந்த பற்றுள்ளவராக அவர்களுக்கு நல்லுபதேசம் புகட்ட விரும்பினார் என்பதும், அதே வேளையிலே தமது உபதேசத்தை அவர்கள்மீது திணித்திலர் என்பதும் பின்வருவன வற்றால் புலப்படும். அதாவது ''நம்மன்பர்களை நெடுங்கால அனுபவத்தால் அறிந்த உண்மைகளைத் தேசபிமானத்தினாலும், சமயாபிமானத்தினாலும் உங்களுக்கு வெளிப் படுத்திய நம்மைப் பகைவரெனக் கொண்டு தூஷித்துத் திரியாது. மேலே பேசப்பட்ட குறைபாடுகளை விரைவிலகற்றி உங்கள் இகபர லாபங்களை அடையும்படி முயலக்கடவீர்கள். நம்மை நீங்கள் எப்படித் தூஷித்திடினும் உங்களுக்கு நன்மையாக முடிபவைகளை உங்களுக்கு வெளிப்படுத்துவதற்கு நாம் சிறிதும் தடைப்படா வண்ணம் சிவபெருமான் திருவருள் செய்க. பொதுப்படப் பலருக்கும் நன்மைகளைச் சொன்னோம். திருந்த விருப்பமில்லாதவர் தமக்குப் பயன்படாதாயினும் பிறர் சிலருக்காயினும் பயன்படலாமே என்றெண்ணி வாய்மூடிக் கொண்டிருக்கட்டும்'' என்பதாகும். ''நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்'' எனச் சங்ககாலப் புலவர் பெருமான் கூறியுள்ள கருத்தும் இங்கு காணப்படுகின்றது.

இக்காலத்திய ஞானிகள் பொதுவாக ஒரே தெய்வக் கோட்பாட்டினையே வலியுறுத்தினர். பல்தெய்வங்கள் வணங்கப்பட்டாலும் அவர்கள் அனைவரும் ஒரே தெய்வத்தின் பல்வேறு வடிவங்கள் என்று கொள்ளப்படுதல் இந்து சமயத்தின் முக்கியமான அம்சங்களிலொன்றே. அதேவேளையில் இறைவனை உருவமாகவும், அருவமாகவும் வழிபடும் முறைகள் இந்து சமயத்தில் ஏற்கனவே பன்னெடுங் காலமாக நிலவி வந்துள்ளன. குறிப்பாக உபநிஷதங்கள் கூறும் ஸகுண (குணம், குறி - உருவமுள்ள) பிரமம், நிர்குண (எவ்வகைய குறியும் குணமுமற்ற, அருவமான) பிரமம் மேற்குறிப்பிட்ட கருத்தினை யொட்டியவையே. இக்கால ஞானிகளில் ராஜாராம் மோகன்றோய், சுவாமி தயானந்தர் போன்றோர் இறைவன் அருவமானவன் என்ற கருத்தினையே கூடுதலாக வலியுறுத்தினர். இராமகிருஷ்ணர், நாவலர் போன்றோர் கூடுதலாக இறைவன் உருவத் திருமேனியும் உடையவன் என்ற கருத்தினையே வலியுறுத்தினர்.

மேற்குறிப்பிட்ட ஞானிகளுடைய செயற்பாடுகளாலே இந்துசமயத்திலே புத்துயிர்ப்பும், புதுவிழிப்பும் சீர்திருத்தங்களும் ஏற்பட்டன. இவர்கள் கிறிஸ்தவர்கள் பின்பற்றிய சில

அணுகுமுறைகளைத் தமது நோக்கத்திற்கு ஏற்ற வகையிலே பயன்படுத்தினாலும், தம்முடைய பாரம்பரியத்திலிருந்து பெருமளவு விலகவில்லை. இவ் அணுகுமுறைகளில் சில ஏற்கனவே இந்து சமய மரபிலே நிலவிவந்தாலும் அவை சில காலம் முன்னெடுக்கப் பட்டில. ஒரு வகையில் அவை புதிய தாக்கத்தினால் கூர்ப்படைந்தன எனலாம். அச்சியந்திரம் போன்ற நவீன சாதனங்கள் மேலைத்தேயத் தொடர்பால் ஏற்பட்டவையே.

சுவாமி விவேகானந்தர் உலகளாவிய ரீதியிலே இந்து சமயத்தினைச் சிறப்பாக முன்னெடுத்து வெற்றி கண்டார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாவலர் தமிழ் நாட்டிலுள்ள பெரிய சைவ நிறுவனங்களிலே நன்கு மதிக்கப்பட்டுப் பாராட்டப்பட்டார். யாழ்ப்பாணத்திலும் பார்க்கச் சமகாலத் தமிழ் நாட்டிலே கூடுதலாகப் புகழ் பெற்றிருந்தார் எனலாம்.

இக்கால ஞானிகள் பொதுவாகச் சாதிமுறையைக் கவனித்திலர். நாவலர் குறிப்பிட்ட சில சமூகத்தினரைப் புறக்கணித்துள்ளார் என்று கருதப்படுகின்றது. அவர்கள் அவர் பின்பற்றிய ஆகம ரீதியிலான சைவ சித்தாந்த ரீதியிலான ஒழுக்கத்தையும், சமய வாழ்வினையும் கடைப்பிடிக்காமையாற்றான் இவ்வாறு செய்தார் எனலாம். அவரால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்று கருதப்படுவோர்களில் சைவ சமய ஆசாரமுள்ளவர்களை அவர் பாராட்டியுள்ளமையும், சைவ சமய ஆசாரமற்ற சமய குருமாரையும் கோவில் முகாமைக்காரரையும் மற்றும் உயர் சாதியினரையும் மிக வன்மையாகக் கண்டித் துள்ளமையையும் ஒப்பிட்டு நோக்குதலும் அவசியமாகும். வேறு அரசியல், சமய பண்பாட்டுத் தாக்கம் ஏற்படும்போது அத்தாக்கத்தை எதிர்கொள்ளும் சமயம் கூடுதலாகத் தனது பழைய பாரம்பரியத்திருந்து தான் உந்து சத்தியைப் பெற்று வந்துள்ளது என்பது வரலாறு கண்ட ஓர் உண்மையாகும். சைவ சமய அறிவும், பற்றும், நல்லொழுக்கமும், கட்டுப்பாடும், திடகாத்திரமும், தூயசிந்தனையுமுள்ள சமூகத்தினை உருவாக்குவதன் மூலமே சைவ சமயத்தையும், சமூகத்தையும் பாதுகாத்து வளர்க்கலாம். கிறிஸ்தவத் தாக்கத்தினை வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம் என உறுதியாக நாவலர் நம்பினார் என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற கருத்துச் சமகால ஞானிகள் பலரிடம் காணப்பட்டது. சம கால ஞானிகளைப் போல இவரும் பாரம்பரியமான சமய சகிப்புத் தன்மை உடையவர். ஆனால், கிறிஸ்தவ சமயப் பிரசாரம் குறிப்பாக மதமாற்றம் ஆகியனவற்றையே இவர்கள் மிக வன்மையாகக் கண்டித்தனர். எவரும் தத்தம் சமயக் கருத்துக்களைப் பின்பற்றுவதை எதிர்த்திலர்.

சுவாமி தயானந்தர் முன்னர் ஏதோ காரணத்தினாலே பிற சமயங்களைச் சேர்ந்தவர்கள், அவர்களின் சந்ததியினர் மீண்டும் இந்து சமயத்தினைத் தழுவும்வகையில் சுத்தி எனும் தூய்மைப்படுத்தும் கிரியையைப் பயன்படுத்தினார். இவருடைய இம் முயற்சி வட இந்தியாவின் மேற்குப் பகுதியில் வெற்றியளித்ததாகக் கூறப்படுகிறது.

எனவே, நவீன இந்து சமய சிந்தனையாளர் வரிசையிலே சமகாலப் பின்னணியில் நாவலரை ஏனையோரோடு ஒப்பிட்டு நோக்குகையில் இவருடைய சாதனைகள் ஏனையோருடையவற்றிற்குக் குறைந்தவை அல்ல. ஏனையோருக்கு இருந்த உறுதுணை

கள் இவருக்குக் குறைவு. ஏனையோருடைய சிந்தனைகளை அவர்களுடைய சிஷ்யர்கள் தனித்தனி இயக்கங்களை உருவாக்கி அவற்றை முன்னெடுத்தனர். ஆனால், இவருடைய சிந்தனைகளைத் தனித்தனியாகச் சில சிஷ்யர்கள் முன்னெடுத்தனரேயன்றி ஒரு வலுவான இயக்கமாக முன்னெடுத்திலர். குறிப்பிட்ட சில சமூகப் பிரிவினர் பற்றிய இவரின் சில கருத்துக்கள் சர்ச்சைக்குரியவை. அவற்றை நிவர்த்தி செய்யும் வகையிலும் அவர் கூறிய சில கருத்துக்கள் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டன. அதேவேளையில் அனைத்துத் தமிழ் மக்கள், சைவ மக்களையும் ஒரேவிதமாகவும் நோக்கியுள்ளார் என்பதும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. ஆனால், சமகால மற்றைய ஞானிகளுக்கு இத்தகைய பிரச்சினைகள் பொதுவாக இருக்கவில்லை. எனினும் இவர் தாம் கொண்ட கருத்திலே வலுவான நம்பிக்கையுடையர். தன்னுடைய கொள்கைக்காக தம்மைத் தியாகம் செய்யவும் முன்வந்தனர்.

இவருடைய மன உறுதி, அஞ்சாநெஞ்சம், உறுதியான கொள்கை, வீரம் முதலியன குறிப்பிடற்பாலன. இப் பண்புகள் ஏனைய ஞானிகளிலும் பொதுவாகக் காணப்பட்டன. ஒருவர் வாழ்ந்த காலப் பின்னணி, அக்கால சமூகச் சூழ்நிலை முதலியவற்றின் அடிப் படையிலேயே அவருடைய சாதனையினை மதிப்பிடுதல் அவசியமாகும். அதேவேளையில் பல சகாப்தங்களுக்கு முன் வாழ்ந்த ஒருவரின் செயற்பாடுகளைச் சமகாலத்திலே நிலவும் சமூகவியற் சிந்தனைகளின் அடிப்படையிலே சீர் தூக்கி மதிப்பிடுதல் சரியானதன்று. அதேவேளையில் சமகாலத்திற்கு ஒவ்வாத பழைய கருத்துக்களைச் சமகாலத்திற்குப் பொருத்தமானதென வாதிப்பதும் மிகத் தவறேயாகும். இவ்வகையிலே நோக்கும்போது நாவலர் தமிழ், சைவம், தமிழ்ச் சமூகம் ஆகியனவற்றிற்குச் செய்த நற்பணிகள் நினைவு கூரத்தக்கவையே. தமிழ்த் தேசியம் பற்றிய கருத்துக்கள் நாவலரிடத்தில்தான் முதன் முறையாகக் காணப்பட்டன என்ற கருத்துச் சரியானதே.

தொகுத்து நோக்கும்போது அக்கால ஞானிகள் பொதுவாகத் தத்தம் சிந்தனைகளுக்கு ஏற்றவாறு இந்து சமயத்திற்குக் காலத்திற்கேற்ற செயற்பாடுகளை மேற் கொண்டனர் என்பதும், இச்சிந்தனைகளிலே புதிய கருத்துக்கள் மட்டுமன்றி பழைய பாரம்பரியக் கருத்துக்களும் காலத்திற்கேற்றவாறு புது மெருகு பெற்றோ, பெறாமலோ இடம்பெற்றுள்ளன எனலாம். சுருங்கக் கூறின் புதுமையும் பழமையும் காலத்திற்கேற்றவாறு இடம்பெற்றுள்ளன எனலாம்.

சில முக்கியமான உசாத்துணை

1. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, (பதிப்பாசிரியர் த. கைலாச பிள்ளை), இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1996.
2. ஆறுமுகநாவலர்,
   (i) சைவ வினாவிடை, முதலாம் புத்தகம், சென்னை.
   (ii) சைவ வினாவிடை, இரண்டாம் புத்தகம், சென்னை, விசய வருஷம்.
   (iii) நாலாம் பாலபாடம், சென்னை, 1950.
3. கணபதிப்பிள்ளை, சி. இலக்கிய கலாநிதி, ஆறுமுகநாவலர், சாவகச்சேரி, 1979.

4. கனகரத்தின உபாத்தியாயர், வே. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், யாழ்ப்பாணம், 1968.
5. கைலாசபதி, க., (பிரதம ஆசிரியர்), நாவலர் நூற்றாண்டு விழாமலர், சுன்னாகம், 1979.
6. கைலாசபிள்ளை, த., ஆறுமுகநாவலர் சரித்திரம், பருத்தித்துறை பிரமோதூத வருஷம்.
7. சிவபாதசுந்தரனார், சு. ஆறுமுகநாவலர், (ஆங்கில மூலத் தமிழாக்கம் வை. ஏரம்பமூர்த்தி), யாழ்ப்பாணம், 1992.
8. சுத்தானந்த பாரதி யோகி, நாவலர் பெருமான், புதுச்சேரி, 1948.
9. தனஞ்சயராச சிங்கம், ச. நாவலர் பணிகள், கண்டி, 1961.
10. Bhattacharya Haridas, Cultural Heritage of India, Vol. iv, Calcutta, 1956.
11. Rcchards Glyn (ed.), Source Book of Indian Tradition, Great Britain, 1985.
12. Joshe, V.C., Ram Mohan Roy and the Process of Modernization in India, New Delhi, 1975.
13. Muttucumaraswamy, M., Sri la Sri Arumuga Navalar Champion Reformer of Hinduisim, Colombo, 1965.
14. Sitta Ram Goel, History of Hindu Christian Encounters, New Delhi, 1989.
15. Swami Dayananda Saraswati, Satyarth Prakash.

'இந்துப் பண்பாடு - அன்றும் இன்றும்', பக். 177 - 194.

நாவலரின் இந்தியப் பிரயாணங்கள்

மு. இராமலிங்கம்

பெரியோர்களுட் சிலர் தமது வாழ்க்கை வரலாற்றைத் தாமே எழுதித் தந்துள்ளனர். சிலர் தம் வரலாற்றைத் தம்முடன் பழகியோர் எழுதிவிடுமாறு உதவி செய்துள்ளனர். இன்னுஞ்சிலர் தம்மைப்பற்றிப் பிற்காலத்தவர் எழுதிக்கொள்ளுமாறு குறிப்புக்கள் விட்டுச் சென்றனர். பெரும்பாலார் தம்மைப்பற்றிப் பிற்சந்ததியார் அறிவதற்கு ஏதுவாக அகச் சான்றோ புறச்சான்றோ தராதுபோயினர். நாவலர் சம்பந்தப்பட்டமட்டில், அவர் தாமியற்றிய நூல்களில் தம்மைப்பற்றி அதிகம் கூறவில்லை என்பது பெரியோர் கவலை. எனினும் கனகரத்தின உபாத்தியாயரால் எழுதப்பட்ட நாவலர் சரித்திரம் (1882) வியஷக்கிரமம், காலக்கிரமம் வழுவாது எழுதப்பட்ட ஒரு நூல் என நாம் கொள்ளலாம். அன்னாருக்கு நான் தலை வணங்குகிறேன்.

பெரும்பான்மையான சம்பவங்கள் நிகழ்ந்த காலங்களை வாசகர்கள் தெரிந்து கொள்ளும்பொருட்டு அவை நிகழ்ந்த தமிழ் வருஷப் பெயர்களைத் தந்துள்ளார். அவற்றிற்கு எதிரே ஓரங்களில், ஆங்கில ஆண்டுகளைக் குறித்தால் முதலிலிருந்து கடைசிவரை காலக்கிரமம் விஷயக்கிரமம் வழுவாது அவர் தமது நூலை இயற்றியிருப்பது புலனாகும். சம்பவங்கள் நிகழ்ந்த காலங்கள் தெரியாதவிடங்களில் வருஷப் பெயர்கள் தரப்படவில்லை. அப்படியான சம்பவங்களுள் ஒன்று பேர்சிவல் - நாவலர் சென்னைப் பிரயாணம் (ஆறுமுகநாவலர் சரித்திரம், ப. 11), அதுதான் நாவலரின் முதலாம் இந்தியப் பிரயாணமெனக் கூறினாரும் அல்லர். பின் நிகழ்ந்த பிரயாணங்களை இரண்டாம், மூன்றாம், நாலாம், ஐந்தாம் பிரயாணங்களெனக் குறிப்பிட்டாரும் அல்லர். ஆனால், அவருக்குப் பின்வந்த சரித்திர ஆசிரியர்களும் கட்டுரையாளர்களும் நாவலரின் பிரயாணங்கள் ஐந்தென அறுதியிட்டு அவற்றைப் பின்வருமாறு நிரற்படுத்தித் தந்துள்ளனர். (நாவலர், ப. 11)

நாவலர் சரித்திரங்கள் கூறும் பிரயாணங்கள்

1. பேர்சிவல் பாதிரியாரவர்களுடன் பைபிள் மொழிபெயர்ப்பு அரங்கேற்றம். அச்சிடு தல் சம்பந்தமாகச் சென்றது. காலம் குறிக்கப்படவில்லை.

2. சௌமிய வருஷம் ஆடிமாதம் (1849) மாணாக்கருட் சிரேட்டராகிய நல்லூர் சதாசி வப்பிள்ளையையும் கூட்டிக்கொண்டு அச்சியந்திரம் வாங்கச் சென்றது.

3. ஆனந்தவருஷம் ஐப்பசிமாதம் (1854) நல்லூர் சதாசிவப்பிள்ளையையும் கூட்டிக் கொண்டு சிவபூசை எழுந்தருளப்பண்ணச் சென்றது.

4. காலயுத்தி வருஷம் ஆனிமாதம் (1858) புத்தகங்கள் சிறப்பாக அச்சிடத் தனித்துச் சென்றது.

5. ருதிரோற்காரி வருஷம் தைமாதம் (1864) சிதம்பரம் வித்தியாசாலை தாபிக்கவும் பிறவிஷயங்கள் ஒப்பேற்றவும் தனித்துச் சென்றது.

பைபிள் மொழிபெயர்ப்பு அரங்கேற்றம்

பைபிள் மொழிபெயர்ப்பு அரங்கேற்றம் சம்பந்தமான நாவலரின் முதல் இந்தியப் பிரயாணம் 1857ஆம் ஆண்டை அடுத்ததாயிருக்கும் என்பது பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் அபிப்பிராயம் (நாவலர், ப. 11) பண்டிதர் உத்தியோகத்தைத் தான் கீலக வருஷம் புரட்டாதி மாதம் (1848) பரித்தியாகம் பண்ணியதாகக் கூறிய நாவலர்கூற்று பண்டிதமணி அவர்களை அப்படி நினைக்கச் செய்கிறதுபோலும்.

1848ஆம் ஆண்டில் அப்பிரயாணம் நிகழ்ந்தது என்பர். கிறிஸ்தவ வேதாகமத்தின் வரலாறு எழுதிய அத்தியட்சகர் வண. கலாநிதி சபாபதி குலேந்திரன் அவர்கள் (ப. 129) வேதாகம மொழிபெயர்ப்பைப் பேர்சிவல் பாதிரியார் சுதேச உதவியாளருடன் 1846 ஜூலை மாதத்தில் ஆரம்பித்தாலும், பாகம்பாகமாய் அச்சிட்டுச் சென்னைக்கு அனுப்பப்பட்ட யாழ்ப்பாண மொழிபெயர்ப்புப் பற்றிய ஆட்சேபனைகள் 1847இல் யாழ்ப்பாணம் வந்தெட்டியதாலும், யாழ்ப்பாண மொழிபெயர்ப்பை மேற்பார்வையிட்டு அறிக்கைகூற 20.09.1847இல் யாழ்ப்பாணத்தில் ஒரு கமிட்டியைச் சென்னைச் சங்கம் நியமித்ததாலும் அத்தியட்சகர் அவர்கள் அப்பிரயாணம் 1848இல் நிகழ்ந்ததாகக் கருதுகின்றார் போலும்.

சரித்திரம் கூறாப் பிரயாணம்

சென்ற மாதம் யாழ்ப்பாணக் கல்லூரி நூல் நிலையத்தில் பழைய உதய தாரகை இதழ்களைப் படித்துக்கொண்டு போகும்போது 11.06.1846 இதழில் பின்வரும் செய்தியைக் கண்டு திகைப்புற்றேன்.

யாழ்ப்பாணம்

இலக்கண இலக்கியங்களில் மகாநிபுணர்களாகிய கனம்பொருந்திய மகாஸ்ரீ அருளம்பல முதலியார் குமாரர் அம்பலவாண முதலியாரும் மகாஸ்ரீ க. ஆறுமுகப்பிள்ளை அவர்களும்

சென்னை மாநகரத்திலுள்ள வித்தியாசாலைகளைப் பார்க்கவும் வித்துவான்களைக் காணவும் இந்த மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து பிரயாணப்பட்டார்கள்.

இப்படிக்கு

அவர் நேசன்

பைபிள் மொழிபெயர்ப்பு அரங்கேற்றத்தோடு சம்பந்தப்பட்ட பிரயாணமோ இது, அல்லது நாவலர் சரித்திரத்தில் இதுவரை வெளிவராத ஓர் இந்தியப் பிரயாணமோ இது என்பதே என் வியப்பிற்குக் காரணம்.

பைபிள் மொழிபெயர்க்க ஆரம்பிப்பதற்கு (ஆடி 1846) ஒரு மாசத்திற்குமுன் (ஆனி 1846) இப்பிரயாணம் நிகழ்ந்திருப்பதால் நாவலர் சரித்திரத்தில் இதுவரை வெளிவராத ஓர் இந்தியப் பிரயாணம் இ◌ஃது எனக் கொள்ளல் வேண்டும்.

அம்பலவாண முதலியார்

மேற்கூறிய பிரயாணத்தோடு சம்பந்தப்பட்ட அருளம்பல முதலியார் குமாரர் அம்பலவாண முதலியார் யாராயிருக்கலாமென ஆராய்ந்தகாலை ஓர் இடியப்பச் சிக்கலுள் அகப்பட்டேன். அதன் விளைவே ஈழநாடு (29.10.1970) இதழில் நான் எழுதிய கட்டுரையாகும்.

அருளம்பல முதலியார் என்னும் பெயருடன் இருவர் 1800ஆம் ஆண்டுக்கு முன்னும் பின்னும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருக்கின்றனர். ஒருவர் தென்கோவை பெரிய அருளம்பல முதலியார், மற்றவர் உடுப்பிட்டி அம்பலவாண முதலியார் குமாரர் அருளம்பல முதலியார்.

தென்கோவை பெரிய அருளம்பல முதலியார் குமாரர் பெயர் அம்பலவாண பண்டிதர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெல்லிப்பழையில் வாழ்ந்தவர். மூத்தப்பு என்னும் மறுநாமம் உடையவர். அவர் வாழ்க்கை வரலாறு சகல தமிழ்ப்புலவர் சரித்திரங்களிலும் கூறப்படுகிறது.

உடுப்பிட்டி, அருளம்பல முதலியார் குமாரர் பெயர் அம்பலவாண முதலியார். இவரும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோப்பாயில் வாழ்ந்தவர். சின்ன அம்பலவாணர் என்னும் மறுநாமம் உடையவர். (இவருடைய மைத்துனர் நீதிவான் சுப்பிரமணியம் அம்பலவாணர் C.C.S. பெரிய அம்பலவாணர் என அழைக்கப்பட்டார்.) தமிழுடன் ஆங்கிலமும் கற்றவர். இவர் வாழ்க்கை வரலாறு நாவலர் பிரபந்தத் திரட்டு (1954) முதற்பாகம் (பக். 165 - 166) 'வெகுசனத் துரோகம்' என்னும் பகுதியினும் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு (பக். 81 - 98) 'மயில்வாகன வம்ச வைபவம்' என்னும் பகுதியிலும், இவரது வம்சாவளி யாழ்ப்பாண வைபவ கௌமுதி (பக். 249 - 250)யிலும் உதய தாரகை இதழ்களிலும் கூறப்படுகின்றது.

அம்பலவாண பண்டிதரின் தௌகித்திரி (மகளின் மகள்) அம்பலவாண முதலியாரின் மகன் பிறக்டர் அருளம்பல முதலியாரை 1850இல் மணந்ததால் இரு குடும்பங்களுக்கு மிடையே தொடர்பும் ஏற்பட்டது.

நாவலரின் மேற்கூறிய பிரயாணத்தோடு சம்பந்தப்பட்டவர் அம்பலவாண பண்டிதரல்லர். அம்பலவாண முதலியாரே என்பது தெளிவு.

இச் சிக்கலுள் நான் அகப்பட்டுத் தவித்தபோது அச்சிக்கலை அறுத்துத்தந்த பெருமை உடுப்பிட்டி, ஆசிரியர் திரு. கா. நீலகண்டன் அவர்களையும் சுன்னாகம், குமார சுவாமிப் புலவரவர்களின் புதல்வர்கள் இருவரையும் சாரும்.

நாவலரும் அம்பலவாண முதலியாரும் ஒன்றுகூடிய காரணத்தை இனி ஆராய்வோம்.

கூட்டுப் பிரயாணம்

உடுப்பிட்டி, அருளம்பல முதலியார் 1800ஆம் ஆண்டுக்கு முன்னும் பின்னும் வாழ்ந்தவரென முன்னர் கூறினோம். (வல்லிபட்டி, குமாரசுவாமி முதலியார் இயற்றிய அருளம்பலக்கோவையின் பாட்டுடைத் தலைவன் அவரே போலும் - ஈழகேசரி 16.08.1936 - அந்நூலினை நாம் பார்த்ததில்லை).

நாவலர் காலத்திற்குச் சிறிது முன்னர் அருளம்பல முதலியார் உடுப்பிட்டியில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். தமிழ் - ஆங்கிலம், மருத்துவம், சோதிடம், சங்கீதம் யாவும் இலவசமாகக் கற்பிக்கப்பட்டன. அருளம்பல முதலியார் இறந்த பின்பு அவர் குமாரர் அம்பலவாண முதலியார் அப்பள்ளிக் கூடத்தைப் பரிபாலித்து வந்தார்.

1845ஆம் ஆண்டு பேர்சிவல் - நாவலர் உறவு மெலிவுற்றதெனப் பாவலர் சரித்திர தீபகமும் (ப. 32) உதய தாரகையும் கூறுவன. 1846ஆம் ஆண்டு தை மாதம் முதலாக நாவலர் பிள்ளைகளைச் சேர்த்துக் கற்பிக்கத் தொடங்கினார். யாழ்ப்பாணத்தில் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டு உழைத்த அம்பலவாண முதலியாரும் ஆறுமுக நாவலரும் தாய்நாட்டிலுள்ள வித்தியாசாலைகளைப் பார்க்கவும் வித்துவான்களைக் காணவும் அவ்வாண்டு ஆனி மாதத்தில் மேற்கூறிய இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டனர் போலும்.

1847ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் நாவலர் நிகழ்த்திய கன்னிப் பிரசங்க வைபவத்துக்கு இவ் அம்பலவாண முதலியார் அவர்களே தலைமை தாங்கினரெனவும் கூறப்படுகிறது.

முடிவுரை

''1848ஆம் வருஷ முற்பகுதியில்... ஸ்போல்டிங் ஐயரும் பேர்சிவல் ஐயரும் சென்னையில் நியமிக்கப்பட்டிருந்த உப கமிட்டிக்கு யாழ்ப்பாணத் திருப்புதலைச் சமர்ப்பிக்குமாறு போயினர். அவர்களுடன் நாவலரும் போனதாகக் காணப்படுகின்றது'' என்பது அத்தியட்சகர் கூற்று (ப. 129).

''சென்னையில் நடந்த வேதாகம மொழிபெயர்ப்புக்கு 1848ஆம் வருஷம் ஸ்போல்டிங் பண்டிதருடன் சந்திரசேகர பண்டிதரும் நாமும் போயிருந்தோம்'' என்பது ஆணல்ட் சதாசிவம்பிள்ளையவர்களின் கூற்று (பா.ச.தீ., ப. 125).

இவ்விரு கூற்றுக்களும் பேர்சிவல் - நாவலர் சென்னைப் பிரயாணம் 1848ஆம் ஆண்டில் நிகழ்ந்ததென ஐயந் திரிபற அறுதியிட்டு நிலைநாட்டப் போதுமானவை.

1845இல் மெலிவுற்ற பேர்சிவல் - நாவலர் உறவு பைபிள் மொழிபெயர்ப்பு அரங் கேற்றம் சம்பந்தமாக 1848இல் வலுவுற்று சென்னையிலிருந்து திரும்பி வந்ததும் துண்டிக்கப்பட்டதுபோலும்.

நாவலரின் வண்ணைச் சிவன்கோயிற் கன்னிப் பிரசங்கம் (31.12.1847) தொடக்கம் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயில் பிரசங்கம் (13.03.1848) வரை நாவலர் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்ததற்குப் போதிய ஆதாரங்கள் உள.

1848 ஆடியில் நிகழ்ந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழாவிலே நாவலரின் பிரசங்கத்தைக் கண்டித்து ஒரு பிரசங்கம் செய்யப்படுமென விளம்பரமொன்று வெளிவந்த தெனினும் அப்பிரசங்கம் நிகழவில்லை. ஆவணியில் வண்ணார்பண்ணை வித்தியா சாலை தாபிக்கப்பட்டது. புரட்டாதியில் பண்டித உத்தியோகம் பரித்தியாகஞ் செய்யப்பட்டது.

ஆகவே பேர்சிவல் - நாவலர் இந்தியப் பிரயாணம் 1848 பங்குனிக்கும் ஆடிக்கும் இடையில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். 1848ஆம் வருஷ முற்பகுதியில் என்னும் அத்தியட்சகரின் கூற்றுடன் இது பொருத்தமுடைத்தாதல் காண்க.

வேதாகம மொழிபெயர்ப்புச் சம்பந்தமாக சென்னை சென்றவர்களின் நாமாவலியில் சந்திரசேகர பண்டிதரவர்களையும் ஆணல்ட் சதாசிவம்பிள்ளையவர்களையும் அத்தியட்ச கர் அவர்கள் தமது நூலின் இரண்டாம் பதிப்பில் சேர்த்துக் கொள்வார்களாக.

கனகரத்தின உபாத்தியாயரின் கைவண்ணம்

கனகரத்தின உபாத்தியாயரின் காலக்கிரமம் விஷயக் கிரமம் பற்றி முன்னர் கூறினோம். இரண்டொரு எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:

கந்தப்பிள்ளையின் மரணம்

கந்தப்பிள்ளை (நாவலரின் தந்தை) 1842ஆம் ஆண்டு ஆனி மாதம் 2ஆம் திகதி புதன்கிழமை தமது 76ஆம் பிராயத்திலே இறந்தார். அவர் பாடத்தொடங்கி விட்டிருந்த இரத்தினவல்லி விலாசத்தை நாவலர் பாடி முடித்தார் எனப் பாவலர் சரித்திரதீபகம் (ப. 75) கூறுகிறது. தந்தையார் இறக்கும்போது நாவலருக்கு (1822 - 1842) வயது இருபது. பேர்சிவல் பாதிரியாருக்குத் தமிழ்ப்பண்டிதனாயிருந்த காலம் அது. தந்தை விட்ட குறையைத் தனயன் பூர்த்தி செய்தான்.

> ''(நாவலருக்கு) ஒன்பதாம் வயசாகும்போது, ஆனித் திருமஞ்சன உற்சவகாலத்தில் இவருடைய தந்தையார், ஒரு நாடகம் பாடிக் கொண்டிருந்த சமயத்தில் கையில் எழுத் தாணியும், சட்டமும் பிடித்தபடியே சடுதியாக சிவபதமடைந்து விட்டார். அந்த நாட கத்தின் குறையை அப்போதே இவர் பாடி முடித்தார்.''

என நாவலரின் தமையனார் புதல்வர் த. கைலாசபிள்ளையவர்கள் தமது ஆறுமுக நாவலர் சரித்திரத்தில் (ப. 6) கூறக் காண்கிறோம். தகப்பனார் இறக்கும்போது நாவலருக்கு வயது ஒன்பது எனக் கனகரத்தின உபாத்தியாயரும் (1882) பாவலர் சரித்திர தீபகமும் (1886)

கூறாததைக் கைலாசபிள்ளையவர்கள் (1916) எங்கிருந்து பெற்றனரோ தெரியவில்லை. நாவலரின் தகப்பனார் கந்தப்பிள்ளை இறந்த தினமெனப் பாவலர் சரித்திர தீபகம் குறிப்பிடும் ஆண்டு, மாதம், தேதி, வாரத்தை மறுத்துரைத்தாரும் அல்லர்.

இவரைப் பின்பற்றிச் சுத்தானந்த அடிகளாரும் (ப. 23) பண்டிதை திருமதி பொன். பாக்கியமவர்களும் (ப. 2) இது விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கக் காண்கிறோம்.

பம்பாயிலிருந்து வெளிவரும் 'பவன் சஞ்சிகை'யின் (Bhavn's Journal 10.08.1969) விசேட மலரில் கொழும்பு, திரு. ம.சி. சிதம்பரப்பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இந்து சாதனம் (20.11.1970) இதழில் தரப்பட்டுள்ளது.

> ''பிறக்கும்போதே மேதாவிலாசம் உடையவராகையினால் இவரது தந்தையார் பாடி அரைவாசியில் விட்டுப்போன ஒரு நாடகத்தைத் தமது ஏழாம் வயதில் பூர்த்தி செய்தார்.''

என மேலும் வயது இரண்டு குறைக்கப்பட்டிருத்தல் காண்க.

ஆதாரமில்லாக் கூற்றுக்களை நுழைப்பது உண்மைச் சரித்திரத்துக்கு ஊறுவிளைப்பதாகும்.

சின்னப்பபிள்ளை

நாவலருடன் ஆங்கிலம் கற்றவர்களுள் இருவராகிய மு. தில்லைநாதபிள்ளையும், சு. சின்னப்பபிள்ளையும் சைவ சமயத்தின் உண்மையை அறியாதபடியினாலே, கிறீஸ்து மதத்திலே பிரவேசித்தற்கு உடன்பட்டு, இன்னகிழமை ஞானஸ்நானம் பெறுவோம் என்று பேர்சிவல் பாதிரியாருக்கு வாக்குக் கொடுத்திருந்தனர். முந்தியவர் பேர்சிவலுடைய ஆங்கில வித்தியாசாலை உபாத்தியாயர். பிந்தியவர் உபாத்தியாயர் உத்தியோகத்தை எதிர்பார்த்து நின்றவர். இவ்விருவருடைய சமாசாரங்களைக் கேள்வியுற்ற நாவலர் சைவ சமயத்தினது உயர்வையும் கிறீஸ்து சமயத்தினது தாழ்வையும் போதித்து அவர்களை ஞானஸ்நானம் பெறாது செய்தனர்.

ஞானஸ்நானம் பெறாமையினால் தில்லைநாதபிள்ளை உபாத்தியாயர் உத்தியோகத்தினின்றும் நீக்கப்பட்டார். சின்னப்பபிள்ளை உபாத்தியாயர் உத்தியோகத்தைப் பெறாது விட்டு வியாபார முயற்சியில் ஊக்கங்கொண்டு கொழும்புக்குப் போயினர். அங்கே அக்காலத்திலே சிவில் உத்தியோகத்தவருக்குள் அதிகௌரவமாயிருந்த மோர்கன் துரையினுடைய சகாயத்தினாலே சுப்பிடகங் கோட்டுத் தரணி உத்தியோகத்தைப் பெற்று யாழ்ப்பாணம் வந்து அதிசமர்த்தரெனப் பெயர்பெற்றுச் சிறப்புற்று வாழ்ந்து, சிலகாலஞ் சென்றபின் இறந்தனர் என்பது கனகரத்தின உபாத்தியாயரின் கூற்று (பக். 13 - 15).

இது விவரம் பின்வரும் யாழ்ப்பாண உத்தியோகத்தர் லஷணக்கும்மிப் பாடல்களால் (ப. 22) வலுப்பெறுதல் காண்க.

சின்னப்பா வென்பவர் நியாயம் படிக்கச்
சிறந்த கொழும்பினின் மோர்க்கனி டஞ்சென்று
நன்னய மாகப் படித்துத் தரணியின்
நல்லவ ராய்வந்தார் ஞானப் பெண்ணே.

எத்தனை பேர்தான் தரணிக ளானாலு
மிவரைத்தான் சோதனை பண்ணிக் கொடுத்து
அத்தனை பேரிலும் நியாய வுணர்ச்சி
யதிக நுணுக்கமாம் ஞானப் பெண்ணே.

இது விஷயத்தை விளக்கக் குறைவினால் சுத்தானந்த அடிகள் (ப. 45) பின்வருமாறு கூறுகின்றார்.

> ''சின்னப்பாபிள்ளை.... கொழும்பு சுப்பிடகம்கோர்ட்டில் (உயர் நீதிமன்றம்) நியாய துரந்தரராயிருந்தார்.''

சேர் றிச்சாட் மோர்கன் (Sir Richard F. Morgan) அவர்கள் முதலில் இராணி அப்புக்காத் தாகவும் பின்னர் நீதியரசராகவும் இலங்கையில் அக்காலத்தில் கடமை புரிந்ததுவும், குருகுல முறையில் சட்டக்கல்வி பயிற்றப்பட்டதுவும், தரணிமார் இல்லாமையால் தமிழ்கற்ற சிலருக்குப் பயிற்சி அளித்துத் தரணிப்பட்டம் கட்டியதுவும் ஈண்டு நோக்கத்தக்கன.

மத்தியஸ்தர் மகாலிங்க ஐயர்

பேர்சிவல் பாதிரியாரும் ஆறுமுகநாவலரும் யாழ்ப்பாண மொழிபெயர்ப்பை அரங்கேற்றச் சென்னைக்குச் சென்றபோது அங்குள்ள மிஷனரிமார், யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வி குறைவானதென்றும், செந்தமிழ் பேசுவோர் அரியர் என்றும், யாழ்ப்பாணத் தமிழ்ப் பண்டிதராற் திருத்தப்பட்ட பைபிள் தமிழகத்துப் பண்டிதர் முன்னிலையில் வாசிக்கப்பட்டு அவர்கள் பிழையில்லையென்றும் வசன நடை, நன்றாயிருக்கிதென்றும் சொல்வார்களாயின் அச்சிற் பதிப்பிக்கலாமென்றும் நிபந்தனையிட்டனர். அதற்கு நாவலர் இணங்கவே. அக்காலத்திற் சென்னையிற் சிறந்த வித்துவானாயிருந்த மழவை மகாலிங்க ஐயரிடம் மொழிபெயர்ப்பு பார்வைக்கு ஒப்படைக்கப்பட்டது.

> ''மகாலிங்க ஐயர் பைபிள் முற்றும் வாசித்து, அதிலே பிழையில்லையென்றும், வசன நடை நன்றாயிருக்கின்றதென்றும், இந்தப் பிரகாரம் அச்சிடுதலே தகுதியென்றும் அவர்களுக்குச் சொல்லி, யாழ்ப்பாணத்துத் தமிழையும் நன்கு பாராட்டி வியந்தனர்.''

என்பது கனகரத்தின உபாத்தியாயரின் கூற்று (பக். 11 - 12).

> ''யாழ்ப்பாணத் திருப்புதலைக் கலைஞர் என்வளவு வியந்தபோதிலும், அதை வாங்கி உபயோகிக்க வேண்டியவர்களுள் வேறு அபிப்பிராயம் நிலவியது. தஞ்சாவுவூர், திருநெல்வேலியிலுள்ளவர்களே அக்காலம் தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்குள் நாலில் மூன்று பங்கானவர்கள். அப்பாகங்களிலிருந்த மிஷனரிமார் ஏகமனதாய் யாழ்ப்பாணத் திருப்புதலை ஏற்க மறுத்தனர். ஆகவே, கிறிஸ்தவர்களும் மறுத்தனர். இத்துடன் அத்திருப்புதலின் கதி தீர்க்கப்பட்டது.''

என்பது அத்தியட்சகர் கூற்று (ப. 140).

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு அரங்கேற்றம் பெற்றும் அங்கீகாரம் பெறவில்லை என்பது அத்தியட்சகர் கருத்து.

> ''(நாவலர்) பேர்சிவல் என்னும் பாதிரியாருக்குப் பண்டிதராயிருந்து பைபிள் மொழி பெயர்க்கும் காலத்தில், அந்தப் பைபிள் சென்னைப் பட்டணத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வந்தது.''

என்பது கைலாசபிள்ளை அவர்களின் (ப. 12) கூற்று. இரு மொழிபெயர்ப்புக்கள் ஏக காலத்தில் இருந்தனவெனக் கனகரத்தின உபாத்தியாயர் கூறாததைக் கைலாசபிள்ளை அவர்கள் எங்கிருந்து பெற்றனரோ தெரியவில்லை.

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு 1846இல் ஆரம்பிக்கப் பெற்று 1848இல் முற்றுப்பெற்று 1850இல் அச்சேற்றப் பெற்றதும் சென்னை மொழிபெயர்ப்பு 1858இல் ஆரம்பிக்கப்பெற்று 1869இல் முற்றுப்பெற்று 1871இல் அச்சேற்றப் பெற்றதும் ஈண்டு நோக்கத்தக்கன. ஒப்புநோக்கிப் பார்க்க இரு மொழிபெயர்ப்புக்கள் ஏக காலத்தில் இருக்கவில்லை.

அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள நூல்களிலும் கட்டுரைகளிலும் இரு மொழி பெயர்ப்புக்கள் ஏக காலத்தில் இருந்தனவெனச் சிருஷ்டிக்கப்பட்டிருத்தல் கவலைக்கு இடமாகின்றது.

நல்லூர்க் கந்தசாமி கோயில்

> ''நல்லூர்க் கந்தசாமி கோயில் அதிகாரியாகிய இரகுநாத மாப்பாணருக்கு, பிலவங்க வருஷம் ஆடி மாதம் (1847) ஒரு மகோற்சவ தினத்திலே, அக்கோயில் சிவாகமத்துக்கு விரோதமாகக் கட்டப்பட்டிருத்தல் தகாதென்றும், சிவதீஷையில்லாத பிராமணர் பூசை செய்தல் தகாதென்றும் போதித்தார்.''

என்பது கனகரத்தின உபாத்தியாயர் கூற்று (ப. 16).

உதய தாரகை (13.08.1846) இதழில் வெளிவந்த பின்வரும் கடிதத்தால் இது வலுப்பெறுதல் காண்க.

விளைவேலியில் நெல்லு நல்லூரில் திருவிழா

நல்லூர்க் கந்தசாமி கோவில் உண்டான நாள் முதல் வருஷத்திற் கொஞ்ச நாளைக்குத் திருவிழா நடத்தி வருகிறதுண்டு. அதில் யாகமென்னும் சந்நிதியில் ரட்சை என்னும் கறுப்புத் திலதம் சுவாமிக்குச் சாத்திவருவது. அந்த வழமையைச் சாத்திரத்திற் சொல்ல வில்லை என்று மறுதலித்து இந்த வருஷம்தான் தானே திருழாக் குருக்களாக வந்து ரட்சையென்னும் திலகம் இதுவரைக்கும் வழங்கி வந்தது தவறென்று நினைத்து அதைத் தள்ளிப் போட்டார். சாத்திரங்களை அறியாத நாங்கள் இந்த நடப்பைப் பற்றி எப்படி எண்ண வேண்டும். முன் நடத்தி வந்த குருக்கள்மாரோ இப்போ நடத்தி வரும் வேதக் குட்டிக் குருவினது செய்கையோ எது சரியென்று நினைக்க வேண்டும். சகல சாத்திரங் களையும் கற்றறிந்த பெரியவர்களே எது சரியென்று சொல்லுங்கள். யாகத்திலே ரட்சை

கொடுக்கிறது சாத்திரமல்லவென்று சொல்லுகிறவர் வேலாயுதம் வைத்துப் பத்து நாளைக்கு அதிகம் திருவிழாப் பண்ண வேண்டிய சாத்திரமென்ன? திருவிழாவை வழமைப்படி இருபத்து மூன்று நாளைக்கு நடத்தி வருகிறார். யாகத்தில் வழமையாய் நடப்பித்து வந்த ரட்சையென்னும் திலதத்தைச் சாத்திரத்தில் இல்லையென்று தள்ளிப் போட்டார்.

காரியமென்ன, இப்படியிருப்பதினால் எது சரியென அறிய விரும்புகிறேன்.

இது கோப்பாயிலிருக்கும் மயில்வாகனம் சரவணமுத்து எழுதித் தந்தபடி சுப்பர் கந்தப்பன் அச்சுப் போடும்படி கொடுத்தது.

கந்தப்பன் அக்காலத்தில் (1846) யாழ்ப்பாணத்தில் நல்லூர்க் கந்தசாமி கோயில் பற்றி நிலவிய அபிப்பிராயம் இதுபோலும். இதுவும் இது போன்றவையுமே நாவலருக்கும் நல்லூர்க் கந்தசாமி கோயிலாருக்குமிடையே நடந்த சொற்போர்களுக்குக் காரணமாம்.

'ஈழநாடு', வாரமலர், 24.02.1971

இலங்கையில் கிறிஸ்தவ மிஷனரிகளும் ஆறுமுகநாவலரும்

சி. பத்மநாதன்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே, யாழ்ப்பாணத்திலே, முன் எக்காலத்திலும் நடைபெறாத வகையிலே, சமூக மாற்றங்களும் சமய வளர்ச்சிகளும் ஏற்பட்டன. யாழ்ப்பாணம் இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாக உருவாகிப் பிரித்தானியர் ஆட்சியில் மேலும் வளர்ச்சியடைந்தது. இன்றைய தலைமுறையினருக்கு இதனைப் புரிந்து கொள்வது சற்றுக் கடினமாகலாம். ஏனெனில், அந்த நிலை தலைகீழாக மாறிவிட்டது. முற்காலங்களில் நல்லூர் தமிழரசர்களின் இராசதானி. கந்தசுவாமி கோயில் இராசதானிக் கோயில். போர்த்துக்கேயர்களின் ஆட்சியில் சைவசமயத்திற்குப் பேரிடர் ஏற்பட்டது. சைவாலயங்கள் எல்லாவற்றையும் போர்த்துக்கேயர் தகர்த்தனர். யாழ்ப்பாணத் தமிழரிடையே தொடர்ந்தும் நிலைபெற்று வந்த பௌத்தப் பள்ளிகளும் இவ்வண்ணமாகவே இடித்தழிக்கப்பட்டன.

போர்த்துக்கேயர் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தை அரச சமயமாகப் பிரகடனம் பண்ணினார்கள். அவர்களைத் தொடர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஒல்லாந்தர் (1658 - 1796) கத்தோலிக்க சமயத்திற்குப் பதிலாக இறப்பிறமாதுக் கிறிஸ்தவத்தை அரச சமயமாகப் பிரகடனப்படுத்தினார்கள். அத்துடன் சுதேசிகள் எவரும் அஞ்ஞானமயமாகிய தங்கள் சமய வழிபாட்டு முறைகளைப் பொதுவிடங்களிலே நடத்தக்கூடாது என்று காலாகாலம் கடுமையான பிரகடனங்களை வெளியிட்டனர். எனினும் ஒல்லாந்தர் தங்கள் இறுக்கமான சமயக் கொள்கையைச் சமசீராகக் கடைப்பிடிக்கவில்லை. வர்த்தகமே அவர்களின் பிரதான குறிக்கோளாகியபடியால் அவர்களின் தரகராக விளங்கிய செட்டியார்கள், வேறு பிரதானிகள் என்போர் சைவசமய வழிபாட்டுத் தலங்களை அமைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கினார்கள். இந்த நிலையிலேதான் ஒல்லாந்தர் அரசாங்கத்திற் செல்வாக்குப் பெற்றிருந்த வைத்திலிங்கச் செட்டியார் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்டினார். அதேபோல இரகுநாதமாப்பாண முதலியார் 18ஆம் நூற்றாண்டிலே, நல்லூரிலே, கந்தசுவாமி கோயிலை ஒரு சிறிய ஆலயமாக நிர்மாணித்தார். நீர்வேலி, சாவகச்சேரி, இணுவில் போன்ற இடங்களிலும் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்காலத்திற் சைவக் கோயில்கள்

இருந்தமை பற்றிய சான்றுகள் இப்பொழுது தெரியவந்துள்ளன. ஆயினும் ஒல்லாந்த அதிகாரிகளின் அறிக்கைகளின்படி யாழ்ப்பாணத்து மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் என்று கணிக்கப்பட்டு, அந்த அடிப்படையில், தங்கள் மேலதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்தார்கள். உதாரணமாக 1722ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்தில் 189,388 கிறிஸ்தவர்கள் இருப்பதாக வலென்ன்ரையின் (Valentyn) தனது அறிக்கையிலே குறிப் பிட்டுள்ளார்.

பின்பு 1760இற் குடாநாட்டிலே 182,226 கிறிஸ்தவர்கள் இருந்தார்களென்று சொல்லப்பட்டது. எனினும் அரசாங்கத்தினரின் மதிப்பீடுகள் பொருத்தமற்றவை என்பது 19ஆம் நூற்றாண்டுக்குரிய விபரங்களினால் அறியப்படுகிறது. ஒல்லாந்தர் யாழ்ப்பாண இராச்சியத்தின் பல பகுதிகளிலே போர்த்துக்கேயர் அமைத்த தேவாலயங்களைத் தங்கள் சமயப் பிரிவிற்கு உரியனவாக மாற்றினார்கள். அவற்றோடு போதனாசாலைகளையும் உருவாக்கினார்கள். சுதேசிகள் அவற்றுக்குச் சென்று கல்வி கற்பது கட்டாயம் என்பது நியதி. கிறிஸ்தவ வினாவிடை வழியான சமய போதனையும் தமிழ், கணிதம் என்பன பற்றிய அடிப்படை அறிவும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த முறையானது யாழ்ப்பாணத் தமிழர்கள் எழுதவும் வாசிக்கவும் பழகிக் கொள்வதற்கு வழி வகுத்தது. அத்துடன் கிறிஸ்தவ சமயத்தின் சில அடிப்படையான அம்சங்களையும் ஓரளவிற்கு அறிந்து கொண்டனர்.

ஒல்லாந்தர் ஆட்சியில் யாழ்ப்பாணப் பட்டினம் அவர்களின் நிர்வாகத்தில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றது. பழைய இராச்சியத்தை ஒரு தனியான நிர்வாகப் பிரிவாக ஆட்சி புரிந்தனர். அத்தோடு யாழ்ப்பாண நகரமும் பிரதான நகரம் என்ற முறையில் மேலும் வளர்ச்சியடைந்தது. பொருளாதார வளர்ச்சியும் குறிப்பிடத்தக்களவில் ஏற்பட்டது. இலங்கையிலுள்ள நிர்வாகப் பிரிவுகளிலே யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து தான் செலவினைக் காட்டிலும் கூடுதலான வருமானம் கிடைத்தது. புகையிலைச் செய்கையும் புகையிலை வியாபாரமும் செல்வம் ஓரளவிலே பெருகுவதற்கு ஏதுவாய் இருந்தன.

பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணப் பட்டினமும் அதை மையமாகக் கொண்ட இராச்சியப் பகுதியும் படிப்படியாக முக்கியத்துவத்தை இழந்தன. கொழும்பு பிரித்தானி யரின் பிரதானமான நிர்வாக நிலையமாகும். வடமாகாணம் ஒரு எல்லைப்புற மாகாணமாகி விட்டது. அரசாங்கத்தின் மூலமாக ஐரோப்பியரின் பிரசன்னம் அங்கு ஏற்படக் கூடிய சூழ்நிலை காணப்படவில்லை. அங்கிருந்த ஆட்சி அதிகாரிகளும் படையினரும் சுதேசி களோடு எந்தநிலையிலும் பழகிக் கொள்ளக்கூடிய நிலை காணப்படவில்லை. இவ்விதமான ஒரு காலகட்டத்திலே, இலங்கையின் வடபுலத்தில் முன்னொரு காலத்திலும் இடம்பெறாத மிகவும் துரிதமான மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றின் காரணமாக, கல்வி வசதிகளைப் பெற்றதனால் இலங்கைத் தமிழர், குறிப்பாக யாழ்ப்பாணத்தவர் இலங்கையிலே முன்னிலைச் சமுதாயமாக முனைப்புப் பெற்றனர். இவ்விடத்தில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மாற்றங் களுக்கு மிஷனறிமாரின் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியும் அவற்றின் பிரதிபலனாக ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சியும் அடிப்படையானவை.

இக்காலத்தில் ஏற்பட்ட சமூக, சமய மாற்றங்களை இலகுவிலே புலமை நோக்கில் மதிப்பீடு செய்யவியலாது. அதற்கு வலுவான காரணங்களுண்டு. யாழ்ப்பாணத்தின் நவீனகால வரலாறு இருண்ட அத்தியாயமாகவே இன்றும் காணப்படுகின்றது. மிகப் பெருமளவில் ஒல்லாந்தர்களும் பிரித்தானியரும் எழுதிய ஆவணச் சுவடிகள் கொழும்பி லுள்ள ஆவணச் சுவடிகள் நிலையத்திலும் பிற தேசங்களிலும் உள்ளன. இவற்றைப் படிப்பதற்கு எவரும் இதுவரை முன்வரவில்லை. நாவலர் பணிகள் என்னும் நூலின் ஆசிரியரான ச. தனஞ்செயராசசிங்கம் மட்டுமே தனது நூலை எழுதுவதற்கு ஆவணச் சுவடிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. ஆவணங்களைப் பேணிக் கொள்வதும் ஆவணக் காப்பகங்களை உருவாக்குவதும் சைவர்களுடைய மரபுகளுக்கு அந்நியமானவை. சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆவணங்களுக்கு நிகழ்ந்த கதி இதற்குத் தக்கவோர் உதாரணமாகும் (யாழ்ப்பாணத்திலே முன்னிலை வழக்கறிஞர் என்று புகழ்பெற்ற கனவான் ஒருவர், இச்சங்கத்தின் அதிபராக இருந்த காலத்தில், இந்த ஆவணங்களெல்லாம் தேவைப் படாதவை என்று அவற்றை நெருப்பில் எரிக்குமாறு செய்தார்).

யாழ்ப்பாணத்திலே சேவை புரிந்த மூன்று கிறிஸ்தவ மிஷன்களைச் சேர்ந்த பாதிரிமாரும் ஆண்டறிக்கைகளையும் தங்கள் கடிதங்களையும் தங்கள் மூலத்தானங்களுக்கு அனுப்பி னார்கள். அவை இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றிலே சைவசமயம் தொடர்பாகவும் ஆறுமுகநாவலர் பற்றியும் இடையிடையே சில குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றையேனும் படித்து ஆராய்கின்ற வாய்ப்பு நம்மவர்களுக்குக் கிடைப்பதில்லை. அத்தகையவற்றை ஆராய வேண்டிய அவசியம் பற்றிய எண்ணப்பாங்கும் இல்லை. இவ்வாறான ஒரு நிலையிலே புலமை நெறிக்கேற்ப நாம் எடுத்துக்கொண்ட விடயம் பற்றி ஆழமாக ஆய்வு செய்து கூறவியலாது. இந்தக் கட்டுரையில் ஆராயப்படும் காலத்தை மூன்ற பகுதிகளாகப் பிரித்து நோக்குவது பொருத்தமானது. அப்பிரிவுகள் மேல்வருவனவாகும்.

1. பிரித்தானியர் ஆட்சியின் முதற்கால் நூற்றாண்டுப் பகுதி (1796 - 1820)
2. அதனைத் தொடர்ந்து வந்த மூன்று தசாப்தங்கள் (1822 - 1850)
3. 1852 - 1875 ஆகிய காலப்பகுதி

முதலாவது காலப்பகுதியிலே சைவசமயம் புறத்தோற்றத்தில் மீட்சி பெற்றது. இக்காலத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய தேசங்களிலிருந்தும் வந்த மிஷனறிமார் யாழ்ப்பாணத்திலே காலூன்றினார்கள். அவர்களில் அமெரிக்க மிஷனறிமார் முதன்மையானவர்கள்; கூடிய வளம் பெற்றவர்கள். மற்றைய மிஷனறிமார்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் பரந்த நோக்கமுடையவர்கள். அவர்களின் மூல கர்த்தாக்கள் பிறதேசங்களிலே சமய போதனைகளை மேற்கொள்ளுகின்ற பொழுது சமய மாற்றத்தைப் பெருமளவிலே சாதனைப்படுத்த முடியாவிட்டாலும் அங்கு சமூக சேவை செய்வதும் கிறிஸ்தவம் சார்ந்த திருப்பணியாகும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாடு, தீவுப்பற்று ஆகியவற்றிலே பரந்தளவிற் சுவிஷேசம் பரப்புவதற்கு வேண்டிய நிலையங்களை அமெரிக்க மிஷனறிமார்கள் உருவாக்கினார்கள். அங்கிளிக்கன் திருச்சபை இங்கிலாந்தின் அரச திருச்சபையின் நிறுவனமாகும். அச்சபையின் யாழ்ப்பாணப் பட்டினம், நல்லூர் ஆகியவற்றிலே மட்டுமே தங்கள் நிலையங்களை நிறுவினார்கள். இங்கிலாந்திலிருந்து வந்த வெஸ்லியன் மிஷனறிமார் பருத்தித்துறையிலும் யாழ்ப்பாண நகரத்திலும் தங்கள் கல்லூரிகளை அமைத்தார்கள். கிழக்கு மாகாணத்தில் கிறிஸ்தவ சமயப்பிரசாரம் அவர்களின் தனி உரிமையாகியது.

பறங்கியர் காலம் போலன்றிப் பிரித்தானியர் ஆட்சியில் கிறிஸ்தவம் அரசாங்க சமயமாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை. அரசாங்க பதவிகளைப் பெறுவதற்கும் நில உடைமைகளை உரிமை கொள்வதற்கும் கிறிஸ்தவரென்ற அத்தாட்சிப் பத்திரம் புதிய ஆட்சியினருக்கு ஒப்படைக்க வேண்டுமென்ற நியதி இல்லை என்பதை மக்கள் உணர்ந்தனர். கரையோர மாகாணங்களில் வாழ்ந்த இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர் ஆகியோர் பகிரங்கமாகவும் சுதந்திரமாகவும் தங்கள் வழிபாட்டைச் செய்வதற்கு முற்பட்டார்கள். சைவர்களைப் பொறுத்தவரையில் மரபுவழியாக ஆலய வழிபாடு பிரதானம் என்பதால், முற்காலங்களில் கோயில்கள் இருந்த இடங்களிலே, புதிய ஆலயங்களை அமைக்கத் தொடங்கினார்கள். முன்னொரு காலத்திலும் நடைபெறாத வண்ணமாக ஆலயத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேசமயம் சமுதாயத்திற் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையிற் பெருவீழ்ச்சி ஏற்பட்டது. 1802ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்து கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 136,000 என்று கொள்ளப்பட்டது. ஆனால், நான்கு வருடங்களில் நிலை முற்றாக மாறிவிட்டது. 1806ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த குளோடியஸ் புக்கானன் (Cladius Buchanan) மேல்வருமாறு குறிப்பிட்டார்:

> ''இங்கு முன்பு மேலோங்கியிருந்த சீர்திருத்தவாதக் கிறிஸ்தவம் முற்றாக அழிந்து விட்டது. சிறப்பாக அமைந்த கிறிஸ்தவ தேவாலயங்கள் பாழடைகின்றன. முன்னாட்களிற் போதனை செய்த குருமார்களைப் பற்றிய நினைவுகளெல்லாம் அருகிவிட்டன. இந்த மாகாணத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது உபதேசியார் ஒருவர் மட்டுமே கடமை புரிகின்றார். இங்குள்ளவர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் இந்துக்களாவர். அவர்கள் ஏறக்குறைய 120,000 பேர்களாவர்.''

முன்பு அவதானித்தவாறு பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்பத்தில் ஒல்லாந்தர்கள் பரப்பிய கிறிஸ்தவ சமயம் முழுமையாக மறைந்து விட்டது. இது எவரது தூண்டுதலும் இன்றி, தலைமைத்துவமுமின்றி, இயல்பாகவே மக்களிடையில் ஏற்பட்ட மனோபாவத்தின் விளைவாகும். பிரித்தானியரின் அரசாங்கம் வழங்கிய சுதந்திரமே அதற்கு ஏதுவானது.

யாழ்ப்பாணத்தவர்கள் மீண்டும் சைவர்களானதும் தங்கள் பகிரங்கமான வழிபாட்டிற்கு வேண்டிய நிறுவனங்களைத் தங்குதடையின்றி நிர்மாணித்தார்கள். அமெரிக்க மிஷனறிமாரின் தலைமைப் பாதிரியான டானியல் பூவர் (Daniel Poor) மேல்வருமாறு கூறுவார். ''நெடுங் காலமாக இங்கு ஆட்சி புரிந்த அந்நியரின் கட்டுப்பாட்டின் கீழ் அடங்கி ஒடுங்கி

வாழ்ந்தவர்கள். பிரித்தானியர் ஆட்சியிலே, ஒருவகையான சமய சுதந்திரத்தை அனுபவிக் கின்றார்கள். தங்களுடைய விக்கிரக வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட சமயமே மேலானது என்று கருதத் தொடங்கிவிட்டார்கள். முன்பு பெயரளவிலே கிறிஸ்தவராக இருந்தவர்கள் ஆயிரம் ஆயிரமாக விக்கிரக வழிபாட்டு மரபைச் சேர்ந்து விட்டனர். அவர்கள் இந்த நாட்டின் வரலாற்றிலே முன் எப்பொழுதும் காணப்படாத அளவிலே ஆலயங்களை அமைக்கின்றார்கள். 1816ஆம் ஆண்டில் நாம் இங்கு வந்தபொழுது இந்த நிலையே காணப்பட்டது.'' மற்றுமொரு அமெரிக்க மிஷனறியான மைன் வின்ஸ்லோ பாதிரியாரும் இவ்விதமாகவே யாழ்ப்பாணச் சமய நிலையை வர்ணித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தவர் சமய சுதந்திரங்களைப் பெற்றுக் கோயில்களை அமைத்த பொழுதிலும் அவர்கள் பெயரளவில் மட்டுமே சைவராகக் காணப்பட்டனர். சைவசமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், கடவுள் எத்தகையவர்? வழிபாடு ஏன் அவசியமானது? சைவசமயத்தின் சிறப்புக்கள் யாவை? என்பவற்றை அறியாதவர்களாகவே காணப்பட்டனர். சைவசமயத்தின் மூலநூல்கள், மறைநூல்கள், வழிநூல்கள் என்பன பற்றி எதுவித விளக்கமும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. அவர்களின் சமயஞானம் சூனியமானது என்று சொல்வது பொருத்தமானது.

பறங்கியரின் இரண்டு நூற்றாண்டுக்கால ஆட்சி சைவசமயத்தை உள்ளக டகதியாகவும் புறத்தோற்றத்திலும் பெருமளவிற்கு அழித்துவிட்டது. இவ்வாறான நிலையிலே பிரித்தானி யாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் மிஷனறிமார்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வருகின்ற பொழுது அதிகளவான ''அறுவடை'' கிடைக்கும், சிரமம் இன்றி யாழ்ப் பாணத்தவரைக் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றிவிடலாம், அங்கிருந்து துணைக் கண்டத்திலே பின்பு தளம் பதிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடையே காணப்பட்டது. ஆயினும் மிகவிரைவில் அவர்கள் ஏமாற்றத்தை அடைய நேர்ந்தது. கால்நடையாகவும் குதிரைகளிலும் சென்று சாலைகள் சந்திக்குமிடத்திலும் சந்தைகளிலும் சுவிஷேத்தின் அம்சங்களை ஓலைச் சுவடிகளில் எழுதிப் பெருந்தொகையிலே வழங்கினார்கள். அத்துடன் தமிழ் மொழியை அரைகுறையாகக் கற்று தங்களுக்கே உரிய ஒலியமைதிகளோடு போதனை செய்தார்கள். இவற்றை எவரும் பொருட்படுத்தவில்லை. வீடு வீடாகச் சென்றும் கிறிஸ்தவமே மெய்ஞ்ஞானம் என்று சொல்லி வலியுறுத்தியும் அவர்களை எவரும் கவனிக்கவில்லை. இந்த நிலையிலே முதியவர்களோடு கலந்து உரையாடுவதில் எதுவிதமான பலனும் ஏற்படப் போதில்லை என்று உணர்ந்தார்கள். அதனால் பச்சிளம் பாலகர்களை வசப்படுத்தி, அவர்களுக்குப் பாடசாலைகளிலே கல்வி கற்பித்தலின் மூலம்தான் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். இது யாழ்ப்பாண வரலாற்றில் எதிர்பாராத மாற்றங்களை, முன்னேற்றங்களுக்கேதுவான மாற்றங்களை ஏற்படுத்தியது.

தென்னிலங்கையிற் போலன்றி, யாழ்ப்பாணத்தில் மூன்று திருச்சபைகளைச் சேர்ந்த மிஷனறிமார்களும் இணைந்து செயற்பட்டார்கள். இது துணைக்கண்டத்தில் வேறெங்கும் நடைபெறாத ஒரு முயற்சியாகும். மாதந்தோறும் இந்த மூன்று பிரிவினரும் கூடித் தங்கள் அனுபவங்கள், வருங்காலத் திட்டங்கள் என்பவற்றைப் பற்றி முடிபு எடுப்பது வழமை

யாகிவிட்டது. அவர்கள் எல்லோரும் பெரும்தொகையான பாடசாலைகளை உருவாக்கினார்கள். வெஸ்லியன் மிஷன் பாதிரிமார்கள் யாழ்ப்பாணப் பட்டணத்தில் அமைத்த சென்ற் போல் (St. Paul) கல்லூரி வரலாற்றுச் சிறப்புடைய நிறுவனமாக வளர்ச்சி பெற்றது.

அமெரிக்க மிஷனறிமார்களே மிகக் கூடுதலான பாடசாலைகளை அமைத்தார்கள். பாலர் பாடசாலைகள், உயர்தரப் பாடசாலைகள், மகளிர் பாடசாலைகள் என்பவற்றை அமைத்தார்கள். அவர்கள் அமைத்த உடுவில் மகளிர் கல்லூரியே ஆசியாவில் உருவாக்கப் பட்ட முதலாவது பெண்கள் பாடசாலையாகும். இவை எல்லாவற்றிலும் தமிழ்மொழியிற் போதனை நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கானோர் எழுத வாசிக்கப் பழகிக்கொண்டனர். அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய எழுத்தறிவைப் பெற்றனர். அமெரிக்க மிஷனறிமார்கள் இலவசமாக நூல்களையும் உணவு, உடை போன்றவற்றையும் தமது பள்ளிக்கூட விடுதிகளில் இருந்த மாணவர்களுக்கு வழங்கினார்கள். இவற்றிற்கும் மேலாக வேறெந்த நாட்டிலும் மிஷனறிமார்கள் மேற்கொள்ளாத காரியமொன்றைச் செய்தார்கள். மருத்துவ சேவையினை மக்களுக்கு வழங்கினார்கள். மருந்துச்சாலை மருத்துவ போதனாசாலை என்பவற்றை ஏற்படுத்தினார்கள். கொள்ளை, பேதி நோய் என்பன பரவி அந்நாட்களிலே பல்லாயிரவர் மடிவதுண்டு. இவ்வாறான சூழ்நிலையில் மிஷனறிமார்களின் சேவைகள் அவர்களுக்குச் சாதகமான, அபிமானமான உணர்வினை ஏற்படுத்தின. அவர்கள் யாழ்ப் பாணத்திலே அச்சியந்திரத்தை அறிமுகம் செய்து அச்சியந்திரசாலை ஒன்றினை மானிப்பாயில் அமைத்தார்கள். தங்கள் பாடசாலைகளுக்கு வேண்டிய நூல்களையும் சமயப் பிரசாரத்திற்கு வேண்டிய பத்திரங்களையும் சைவ சமயத்தைக் கேலி செய்வதற்கான பத்திரங்களையும் அவர்களால் வெளியிட முடிந்தது.

வட்டுக்கோட்டையில் அதி உயர் கல்வி நிலையமான சாத்திரசாலை (Batticotta Seminary) ஒன்றை அவர்கள் நிறுவினார்கள். அதிலே விஞ்ஞானம், பல மொழிகள், இலக்கியம், சமூக விஞ்ஞானம், கிறிஸ்தவ சமயஞானம் முதலானவற்றைப் போதிப்பதற்கு ஏற்றவகையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டன. சுதேசிகள் இடையிலே அறிவியல் பூர்வமான கல்விஞானம் ஏற்படுவதற்கும் தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கான தகைமைகளைப் பெறுவதற்கும் ஏற்ற சாதகமான இந்நிறுவனம் எழுச்சிபெறும் என்று அதன் நிறுவனர்கள் கட்டியம் கூறினார்கள். அது தராதரத்திலே, ஐரோப்பிய தேசங்களில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு நிகரானது என்று இலங்கை அரசாங்கத்தின் செயலதிபரான எமேர்ஸன் தெநந்து (Emmerson Tennent) குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியரின் ஆட்சியில் ஆங்கிலக் கல்வி பெறவேண்டிய அவசியத்தைச் சுதேசிகள் உணர்ந்தனர். அதனை மிஷனறிமாரின் கல்வி நிறுவனங்களினூடாகவே பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை காணப்பட்டது. சமகாலத் தமிழ்நாட்டிற் போலன்றி, யாழ்ப்பாணத்திலே நவீன கல்வியானது மிஷனறிமாரின் ஏகபோகமாயிருந்தது. அரசாங்கம் சமய விடயங்களில் தடையிடுவதில்லை என்ற கொள்கை இருந்தபொழுதிலும் தேசாதிபதி முதலாகக் கீழ்நிலை வரையிலுள்ள அதிகாரிகள் எல்லோரும் கிறிஸ்தவ சமயச் சார்புடையோராக இருந்தனர்.

அவர்கள் மிஷனறிமாருக்கு ஆதரவாகவும், சைவர்களுக்கு வாய்ப்புக்களை மறுக்கும் வண்ணமாகவும் செயற்பட்டனர்.

யாழ்ப்பாணத்தவர்களுக்கு இவ்வாறான சூழ்நிலையில் இரு வழிகள் மட்டுமே இருந்தன. அவற்றில் ஒன்று கிறிஸ்தவ பாடசாலைகளிலே பயின்று கிறிஸ்தவராகி அரசாங்க அதிகாரிகளின் அனுசரணையோடு மாவட்டத்திலுள்ள கீழ்நிலையிலுள்ள பதவிகளைப் பெறுதல். மற்றையது தங்கள் மனச்சாட்சிக்கேற்ப சமய மாற்றம் பெறாது சைவசமயத்தில் பற்றுறுதி கொண்டு, அதேசமயம் தமது வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வேண்டிய நவீன கல்வியைப் பெற்றுக்கொள்ளுதல். அவர்கள், இவற்றில் இரண்டாவது வழியிலே செல்லத் தீர்மானித்தனர் என்பது இங்கு கவனித்தற்குரியதாகும். பொருளாதார வாய்ப்புக்களையும், தொழில் வசதிகளையும் பெறுவதற்காக அவர்கள் சமயமாற்றம் பெற்று விலைபோக விரும்பவில்லை. அவர்களின் இந்த மனோநிலையே பிரித்தானியரின் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சிக்கான காரணமாகும். அதனைப் புரிந்து கொள்வதற்குக் காலநிலையை, சூழ்நிலையை, பிராந்திய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் நோக்குவது அவசியமாகும்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சி தென்னிலங்கையில் ஏற்பட்ட பௌத்த சமய எழுச்சியைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டது. அவ்விரண்டிற்கும் எதுவிதமான பரஸ்பரத் தொடர்புகளும் இருக்கவில்லை. ஆயினும் பாதிரிமார் பௌத்த சமய கண்டனங்களையும் எழுதி வெளியிட்டார்கள். பௌத்தர்களும் எதிரான கண்டனங் களைப் பிரசுரித்தனர். இருசாராருக்குமிடையில் உணர்ச்சிபூர்வமான விவாதங்களும் நடைபெற்றன. ஆயினும் இவை நீர்க்குமிழி போன்று மறைந்தவை. கொள்கை ரீதியிலும் கருத்து நிலையிலும் குறிப்பிடத்தக்க பரஸ்பர தாக்கங்களை ஏற்படுத்தவில்லை. யாழ்ப் பாணத்தில் ஏற்பட்ட சமய வாதங்களும் போட்டிகளும் வேறுவிதமான விளைவுகளை ஏற்படுத்தலாயின. கிறிஸ்தவ சமயத்தின் உக்கிரமான பிரவேசத்தினால் சைவர்களிடையில் அதிர்ச்சி ஏற்பட்டது. அதற்கு எதிரான இயக்கம் மூன்று கட்டங்களைக் கொண்டதாகும். அதிலே முதலாவது மிஷனறிமாருக்கும் குறிப்பாக, அமெரிக்க மிஷனறிமாருக்கும் சைவப்பிராமணர்களுக்கும் இடையில் நடைபெற்ற விவாதமாகும். அவர்களுடைய விவாதம் வானசாஸ்திரம் தொடர்பானது. நவீன, விஞ்ஞான அறிவினையும், கருவிகளை யும் ஆதாரமாகக் கொண்டு மிஷனறிமார் பிராமணரை வாதத்திலே வென்றனர். ஆயினும் சைவர்களுக்கு ஏற்பட்ட தோல்வி சமயக் கோட்பாடுகள் தொடர்பானதன்று.

சென்னை மாநகரத்திலும் மிஷனறிமாருக்கும் சைவ வைணவர்களுக்கிடையிலும் சமய மாற்றம் தொடர்பாக நெருக்கடி நிலை ஏற்பட்டது. அங்கே உயர் கல்வியானது யாழ்ப்பாணத்தைப் போல மிஷனறிமாரின் ஏகபோகமாக இருக்கவில்லை. பச்சையப்ப முதலியார் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னோடியான கல்லூரியை நிறுவினார். அதேபோல சென்னை உயர்தர கல்லூரி (Madras High School) என்னும் நிறுவனமும் எழுச்சி பெற்றது. இவற்றைப் போன்று வேறும் பல சுதேசிகளின் கல்லூரிகள் உருவாகி இருந்தன. மிஷனறிமார்களினுடைய கல்லூரிகளிற் கூடுதலாகத் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச்

சேர்ந்தவர்கள் பயின்று, பட்டம் பெற்று, அரசாங்கப் பதவிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. அதுவரை காலமும் அரசாங்க பதவிகளெல்லாம் பிராமண சமூகத்தவரே பெற்றிருந்தனர். சாதி அடிப்படையில் கலகம் விளையக்கூடிய சூழ்நிலையை சென்னைப் பட்டணத்திலே ஏற்படுத்தக் கூடிய வகையில் மிஷனறிமாரின் ஊடுருவல்கள் இடம்பெற்றன. திருநெல்வேலியில், மிஷனறிமார்களின் முயற்சியின் பயனாகத் தாழ்த்தப்பட்டவர்களென்று கருதப்பட்ட நாடார் முதலானோர் கிறிஸ்தவராயினர். இதனால் அங்குள்ள வெள்ளாளர் பீதியுற்றனர். இலங்கையிலுள்ள பிரித்தானிய அதிகாரிகளைப் போலன்றி சென்னை மாகாணத்து அதிகாரிகள் சமய விவகாரங்களில் ஓரளவு நடுநிலை பேணினார்கள். அரசாங்க வெளியீடுகளிலும் கல்லூரிகளின் போதனைக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்களிலும் இந்துக்களையும் அவர்களின் சமய வழிபாடுகளையும் நிந்தனை செய்யும் சொற் பிரயோகங்கள் அரசாங்கத்தினாலே தடை செய்யப்பட்டன. ஆனால் இலங்கையிலே தேசாதிபதிகள் சிலரும் வேறு அதிகாரிகள் பலரும் வேறுவிதமான போக்கைக் கடைப் பிடித்தார்கள்.

இந்து, பௌத்த சமயங்கள் அஞ்ஞான மயமானவை என்றும் நல்லறிவிற்கு இடரானவை என்றும் சொல்லி வந்தார்கள். முன்னே குறித்த இரண்டாவது காலகட்டத்திலே தான் மிஷனறிமாருக்கும் சைவர்களுக்கும் இடையிலான வாக்குவாதங்கள் உச்சகட்டத்தை அடைந்தன. அந்தக் காலத்திலே மிஷனறிமார்களின் கல்வி நிலையங்கள் பலவாகிப் பெருகி வளர்ச்சியடைந்தன. வட்டுக்கோட்டை சாத்திரசாலை (1823 - 1856) பெருவளர்ச்சி அடைந்தது. சமுதாயத்திலே மேல் நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பலர் அதிலே சேர்ந்து உயர்கல்வி பெற்று, சைவ சமயத்திலிருந்து கிறிஸ்தவ சமயத்திற்கு மாறினார்கள். அது சைவர்களுக்குப் பெரும் சவாலாக அமைந்தது. கோல்புறூக் கமெரன் (1833) சீர்திருத்தங்களின் பயனாக ஆங்கிலக் கல்வியின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. குடித்தொகை பெருகிய, போதியளவில் வளமான நிலங்கள் கிடைக்காத யாழ்ப்பாணத்திலே வாழ்க்கை முன்னேற்றம் கருதி ஆங்கிலத்தைக் கற்க வேண்டியதன் அவசியம் சைவர்களால் உணரப்பட்டது.

யாழ்ப்பாணத்தவர்கள் வடக்கிலே தமிழ்நாட்டில் நடைபெற்ற மாற்றங்களை நன்கு அறிந்து கொள்ள முடிந்தது. அங்கு இந்துக்கள் தங்கள் நலன்களைப் பாதுகாப்பதற்குத் திருநெல்வேலியில் விபூதிச் சங்கம் என்ற நிறுவனத்தையும் சென்னைப் பட்டணத்தில் 1841ஆம் ஆண்டு சதுர்வேத சித்தாந்தசபை என்னும் கழகத்தினையும் உருவாக்கினார்கள். இவை குறுகிய காலத்திற்கு மட்டுமே நிலைபெற்றன. பின்பு சென்னையிலே சாலைத் தெருச்சங்கம் என்பதனை உருவாக்கினார்கள். அவற்றின் முயற்சிகளினால் அரசாங்கம் தலையிட்டு சில விடயங்களில் மிஷனறிமாரைக் கட்டுப்படுத்த நேர்ந்தது. அது மட்டுமன்றி சைவ வினாவிடை, சைவசமய விளக்க வினாவிடை என்ற நூல்களும் தமிழ்நாட்டில் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில், மேலே சொல்லப்பட்ட இரண்டாவது காலகட்டத்திலே வாதப் பிரதிவாதங்களில் மிஷனறிமார் தோல்வி கண்டார்கள். சுன்னாகம் முத்துக்குமார கவிராயர்

எழுதிய ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம் என்பன பேரதிர்ச்சியை ஏற்படுத்தின. யாழ்ப் பாணத்துச் சைவர்கள் சமயக் கோட்பாடுகளை அறிவியல் பூர்வமாகவும் தத்துவார்த்த பூர்வமாகவும் எதிர்கொள்ளத் தகைமை பெற்றுவிட்டனர் என்பதற்கு முத்துக்குமாரகவிராயரின் நூல்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்காலம் அமெரிக்காவிலே டார்வினிஸம் பெரும் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. கிறிஸ்தவ சமயத்திலே சொல்லப்படும் மனிதகுல படைப்பினைப் பற்றிய கோட்பாடுகள் அதன் செல்வாக்கினாற் பலவீனமுற்றன. அத்துடன் விஞ்ஞான வளர்ச்சியும் கிறிஸ்தவ சமயத்திற்குப் பாதகமாக அமைந்தது. யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானத்தைச் சிறப்புப் பாடமாகப் போதித்த மிஷனறிமார்கள் எதிர்பாராத விளைவுகள் ஏற்படுவதற்கு விஞ்ஞானம் ஏதுவாகியது. மேல்நாடுகளிற் கிறிஸ்தவத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட வாதங்களை இக்காலத்துச் சைவர்கள் அறிந்திருந்தனர் என்பதற்கு ஞானக்கும்மி ஓர் உதாரணமாகும். பாதிரிமார்கள் சைவ சமயத்திலுள்ள திருமூர்த்திக் கோட்பாட்டை ஏளனம் பண்ணி பத்திரங்களை வெளியிட்டார்கள். ஆனால், அவர்களின் பரிசுத்த திரித்துவம் பற்றிய கோட்பாடுகளை ஞானக்கும்மி தகர்த்துவிட்டது. அந்நூல் ஓலைச்சுவடி வடிவமாகவே பல்லாண்டு முடங்கியிருந்தது. பின்பு அதனை ஆறுமுகநாவலர் தனது சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய கிளர்ச்சி

ஆறுமுகநாவலர் வாழ்க்கை வரலாற்றிலே பல பரிமாணங்களுண்டு. யாழ்ப்பாணத்தில் வெஸ்லியன் மிஷனறிமார் உருவாக்கிய தலைமைக் கல்லூரியிற் கற்றுப் பட்டம் பெற்றவர். அதிலே ஆங்கிலமும், தமிழும் போதிக்கும் ஆசிரியராக நியமிக்கப் பெற்றவர். யாழ்ப் பாணத்தில் வெஸ்லியன் மிஷனின் தலைமைக் குருவான பீற்றர் பேர்சிவல் (Peter Percival) பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதர்; கிறிஸ்தவ கீர்த்தனங்களையும் வேறு வழிபாட்டு நூல்களையும் உருவாக்குவதற்கு உதவி புரிந்தவர்; பாதிரியார் உருவாக்கிய விவிலியத் தமிழ் நூலைச் செம்மைப்படுத்தி, அதற்குச் சென்னையிலே அங்கீகாரம் பெற்றுக்கொடுத்தவர். அதனால் அந்த நூல் ஆறுமுக நாவலரின் மொழிபெயர்ப்பு என்று வழங்குகின்றது. இவ்வாறான பணிகளைச் செய்த காலத்தில் சைவ சமயத்தின் மீதான தனது நம்பிக்கையை அவர் எள்ளளவும் கைவிடவில்லை. அச்சமயத்திற்கு மூலமான நூல்களைப் படிப்பதிலும் புண்ணிய ஷேத்திரங்களைத் தரிசிப்பதிலும் ஈடுபட்டார்.

இவ்வாறாக மிஷனறிமாரோடு நெருங்கிப் பழகி அவர்களுக்குப் பணிபுரிந்து கிறிஸ்தவ சமய நூல்களைக் கற்று, அவற்றைப் பற்றியும் தெளிவான அறிவைப் பெறும் வாய்ப்பைப் பெற்றவர். அதனாலேயே காலநிலைக்கேற்பச் சுயமாகச் சிந்தித்து மீட்சி பெற்றிருந்த சைவத்திற்கு உள்ளார்த்தமான பலத்தை அவரால் ஏற்படுத்த முடிந்தது. இதன் பொருட்டு இளமைக் காலத்திலே அவர் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். அந்தப் புரட்சி சமுதாயப் புரட்சி. கிறிஸ்தவ சமயம் பரவுவதைத் தடுத்து, சைவ சமயத்தை நிலைநாட்டுவதற்கு மேற்கொண்ட புரட்சியாகும். பேர்சிவல் பாதிரியாரோடு பணிபுரிந்த காலத்திலே அவர் இளைஞர்கள் சமயம் மாறுவதற்கு எதிராக முயற்சி மேற்கொண்டவர். தனது தொழிலையும்

தியாகம் செய்வதற்கு அவர் பின்னிற்கவில்லை. நல்லநாதபிள்ளை, சின்னப்பாபிள்ளை என்பவர்கள் வெஸ்லியன் கல்லூரியில் அவருடைய காலத்தில் கல்வி கற்றுப் போதானா சிரியர் பதவியைப் பெற்றவர்கள். அவர்கள் இருவரும் கிறிஸ்தவ சமயத்தில் சேர விரும்புவதாகவும் இந்நாளிலே ஞானஸ்ஞானம் பெறுவது என்றும் குறித்து பேர்சிவல் பாதிரியாருக்கு அறிவித்தனர். இவற்றை அறிந்த தமிழ்ப் பண்டிதரான ஆறுமுகம் அவர் களை அழைத்துச் சைவ சமயமே மெய்ச்சமயம் என்றும் அவர்கள் தங்கள் முன்னோரின் சமயத்தைக் கைவிடலாகாது என்றும் அறிவு புகட்டினார். அவர்களும் அவர் வழிச் சென்றனர். இது அவருடைய முதலாவது முயற்சியின் பயனாகும். இதனைத் தொடர்ந்து அவர் சைவ சமயத்தைக் காப்பாற்றுவதற்குப் பல திட்டங்களை வகுத்து அவற்றை நிறைவேற்றுவதற்கு முற்பட்டார்.

நாவலருடைய பிரசங்கங்களையும் வெளியீடுகளையும் கண்ட இளைஞர்கள் பலர், மிஷனறிமாரின் கல்லூரிகளினிற் படித்துக் கிறிஸ்தவராகியவர்கள் கிறிஸ்தவ சமயத்தைக் கைவிட்டு மீண்டும் சைவராகியது ஒரு அபூர்வமான சாதனையாகும். 1856ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைச் சாத்திரசாலை மூடப்படுவதற்கு நாவலர் ஏற்படுத்திய சைவசமய மறுமலர்ச்சியே காரணமாகும்; பலாபலனாகும். அந்தக் கல்லூரியிலே கற்றுப் பெரும்புகழ் பெற்ற விஸ்வநாதபிள்ளை, தாமோதரம்பிள்ளை ஆகிய இருவருமே முதன்முதலாக பல்கலைக்கழகம் ஒன்றிடமிருந்து பீ.ஏ. பட்டம் பெற்ற இலங்கைத் தமிழர். அவர்கள் இருவரும் கிறிஸ்தவ சமயத்தைக் கைவிட்டு சைவசமயத்தை மீண்டும் ஒப்புக் கொண்டவர்கள் என்பதும் இங்கே கவனிக்கத்தக்கது. விஸ்வநாதபிள்ளை நாவலரிடம் சரணடைந்தார். நாவலரின் அபிமானியாகிவிட்ட தாமோதரம்பிள்ளை நூல்களின் பதிப்பாசிரியர் என்ற வகையில் நாவலரோடு இணைந்து விட்டார். அவர் தனது பிற்காலத்தில் நாவலர் மீது கொண்ட அபிமானம் பேரபிமானமாகும். நாவலரின் சமயப் பணிகளின் வரலாறு மிகவும் நீளமானது. விரிவாக அதை இங்கு விரித்துரைத்தலாகாது. இங்கே சொன்ன விடயங்கள் யாழ்ப்பாணத் தமிழரின் வரலாற்றில் அவர் தாரகையாக விளங்கினார் என்பதை நன்கு உணர்த்தும். அவருடைய சமயாபிமானம், பாண்டித்தியம், ஆளுமை என்பவற்றைக் கண்ட தமிழகத்தார் வியப்புற்றனர். திருவாவடுதுறை ஆதீனம் அவருக்கு நாவலர் என்னும் பட்டத்தை வழங்கியது. தருமை ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், மதுரை ஆதீனம் ஆகியனவும் அவருடைய ஆழமான சமய ஞானத்தையும் தமிழ்ப் பாண்டித்தியத்தையும் மெய்ச்சிப் புகழ்ந்து இணையிலாத கௌரவம் வழங்கின.

ஆறுமுகநாவலர் சைவசமயம் தொடர்பாகப் புரிந்த சாதனைகளைப் பற்றி இதுவரை பலரும் எழுதியுள்ளனர். அவரது சரிதத்தைச் சமகாலத்தவரான ஆறுமுக உபாத்தியாயரும் தம்பு கைலாசபிள்ளையும் சுருக்கமாக எழுதியுள்ளனர். நாவலரைப் பற்றிய பிரதானமான விடயங்களை இவற்றின் மூலமே அறியமுடிகிறது. சுத்தானந்த பாரதியார் நாவலர் பெருமான் என்ற நூலை எழுதி அவரைச் சிறப்பித்துள்ளார். அண்மையில் வேறு பலரும் அவரைப் பற்றிய நூல்களை எழுதினர். அவற்றிலே முன்னே குறிப்பிட்டது போல 'நாவலர் பணிகள்' சிறப்பானவை. பண்டிதமணி எழுதிய கட்டுரைகள் இவை எல்லாவற்றிலும்

மேலானவை. நாவலர் பிரபந்தத் திரட்டில் அவர் எழுதிய கட்டுரைகள் சில அடங்கியுள்ளன. சைவதூஷணபரிகாரம் என்னும் நூல் வேறாகக் கிடைக்கின்றது. வைச்சிர தண்டம் என்னும் நூல் மறைந்துவிட்டது.

சைவசமயம் தொடர்பாக நாவலர் புரிந்த பணிகளை இரண்டு வகையினவாகப் பிரித்துப் பார்க்கலாம். ஒன்று சைவசமயத்திற்கு புத்துயிர் அளித்தது. மற்றையது சைவ சமயத்தவரிடையே சீர்திருத்தங்களை ஏற்படுத்தியது என்பதாகும். இவற்றிலே முதலாவது மிக முக்கியமானது. அவர் ஏற்படுத்திய மாற்றங்களும் சிந்தனை மரபும் காலப்போக்கில் சைவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு இன்றுவரை தொடர்ச்சியாக நிலைபெறுகின்றன. இந்நிலையிலே அவர் புரிந்த சேவைக்கு கிறிஸ்தவ சமயத் தொடர்பும் அதனைப் பற்றிய அறிவுமே முதற்காரணமாகும். பாதிரிமார்களுடைய வழிமுறைகளையும் பலவீனங்களை யும் அவரால் மட்டுமே அறிந்துகொள்ள முடிந்தது. சமகால கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படையில் அவர் சைவசமயத்தை நோக்கினார். சைவர்கள் தங்கள் மரபுகளை இழந்து, மறந்திருந்த காலத்திலே அவர் தமது பணியினைச் செய்தமை குறிப்பிடற்குரியது. மூலநூல்களையும், கருவி நூல்களையும், அச்சிட்டு வெளியிட்டதோடு, தனது உரைநூல்கள் மூலமாகவும் கல்வி நிறுவனங்கள் மூலமாகவும் அவற்றிலே போதனைக்கு என்று உரு வாக்கிய சைவ வினாவிடை, பாலபாடம் முதலிய நூல்கள் வாயிலாகவும் சைவசமயத்தின் இயல்புகளை விளக்கினார். யாழ்ப்பாணச் சைவர்களிடையே சைவசமயத்தை அடிப் படையாகக் கொண்ட பாடசாலைகளை அவரே முதன் முதலாக உருவாக்கினார். பின்பு சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினரும் இந்துக் கல்லூரிகளின் தாபகர்களும் அவருடைய குறிக்கோளை நிறைவேற்றினார்கள். 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையும் அவர் எழுதிய பாடநூல்கள் கல்லூரிகளிலே பயன்படுத்தப்பட்டன.

மிஷனறிமாரைப் பின்பற்றியே அவர் சென்னைக்குப் போய் அச்சியந்திரமொன்றை வாங்கி வந்து யாழ்ப்பாணத்தில் சைவப் பிரகாச இயந்திரசாலை என்ற பெயரோடு இயந்திரசாலை ஒன்றினைத் தொடக்கினார். இதன் மூலமாகவே அவர் பெருந் தொகையான நூல்களை வெளியிட்டார். கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றையும் அவற்றின் வசனநடை நூல்களையும் பரிசோதித்தும் எழுதியும் வெளியிட்டார். அதனுடன் நில்லாது தொல்காப்பியம், நன்னூல், திருக்குறள் பரிமேலழகர் உரை முதலிய பெருநூல்களையும் அவர் அச்சிட்டு வெளியிட்டார். தமிழ் இலக்கியங்களை மிகப் பேரளவிலே அச்சிட்டு வெளியிட்டவர்களில் அவரே காலத்தால் முதன்மையானவர். தமிழிலக்கியம் பேணப்படுவதற்கும், பயிலப்படுவதற்கும் பணி புரிந்தவர்களில் அவருக்குச் சிறப்பான இடமுண்டு. பரிமேலழகருக்குப் பின்பு அவரைப் போன்று சிறப்பாகவும் தெளிவாகவும் 20ஆம் நூற்றாண்டு வரை எவரும் வசனநடையில் நூல்களை எழுதவில்லை. அதனால் வசனநடை கைவந்த வல்லாளர் என்னும் சிறப்பு நாமம் அவருக்குரித்தானது.

சைவத்திற்கு புதுவடிவம் கொடுத்த ஆறுமுகநாவலர் சைவசமய சீர்திருத்தங்களையும் ஏற்படுத்த விழைந்தார். அவருடைய பிரசங்கங்களும் நூல்களும் பெருஞ் செல்வாக்கை ஏற்படுத்தின. பஞ்சமாபாதங்களைத் தவிர்த்து ஒழுக்க சீலராக வாழப் பலரும் பழகிக்

கொண்டனர். ஆறுமுகநாவலருடைய பிரசுரங்களிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை, நல்லூர் கந்தசுவாமி கோயிலைப் பற்றியனவாகும். அதன் கட்டுமான முறையும் அங்கே நிகழுகின்ற வழிபாட்டு முறையும் சிவாகம விதிகளுக்கு விரோதமானவை என்பதை உறுதியாக நிலைநாட்டினார். ஆகமங்களையும் சிற்ப சாத்திரங்களையும் ஆதாரமாகக் கொண்டு தனது கருத்துக்களை அவர் வலியுறுத்தினார். அவர் இக்கட்டுரைகளிலே அவர் கூறுவனவற்றைப் பார்க்கின்ற பொழுது உரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கெதிராக மாட்டின்லூதர் (Martin Luther) தனது திருச்சபையின் வாசலில் எழுதிவைத்த பிரகடனங்கள் நினைவிற்கு வருகின்றன. ஒரு சமயத்தில் ஆறுமுகநாவலரின் வேண்டுகோளை ஏற்று அறங்காவலர் கட்டடத்தை மாற்றியமைப்பதற்கு இணங்கியிருந்தார். ஆனாலும், அவர் அதைச் செய்யவில்லை. இன்றுவரை அது செய்யப்படவில்லை. ஆகமங்களே சைவ சித்தாந்தத்தின் முதனூல் என்று நம்மவர் என்றும் சொல்லி வருகின்றார்கள். ஆயினும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தொடர்பாக அவர்கள் எதனையும் சொல்லத் துணிவதில்லை. ஆசாரியார் அபிஷேகம் பெற்று ஆலயப் பிரதிஷ்டாபனம் பண்ணும் பிராமணோத்தமரும் இதிலே தவறி விடுகின்றனர். நாவலரும் ஆலய சீர்திருத்தங்களைப் பற்றியவரையில் தோல்வி கண்டுள்ளார்.

இதனை ஒப்புக்கொண்டு ஆவனவற்றைச் செய்வது சைவர்களுடைய கடமையாகும். அதனைச் செய்ய முற்படாதவிடத்து ஆகமப் பிரமாணங்களைப் பற்றிப் பேசிக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

உசாத்துணை

1. ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், (மூன்றாம் பதிப்பின் மீள் பிரசுரம்), கொழும்பு, 1996.
2. கனகரத்தின உபாத்தியாயர், ஆறுமுகநாவலர் சரித்திரம்.
3. கைலாசபிள்ளை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், 4ஆம் பதிப்பு, வித்தியாநுபாலயந்திரசாலை, 1995.
4. சுத்தானந்த பாரதியார், நாவலர் பெருமான், புதுச்சேரி, 1948.
5. தனஞ்செயராசசிங்கம், ச., நாவலர் பணிகள், பேராதனைப் பல்கலைக்கழகம், 1969.
6. நாவலர் நூற்றாண்டு மலர், கொழும்பு, 1979.
7. கனகரத்தினம், வை., ஆறுமுகநாவலர் வரலாறு ஒரு புதிய பார்வை, பூரணம் வெளியீடு, சென்னை, (ஆண்டு குறிப்பிடப்படவில்லை).
8. Pathmanathan, S., "Religion and Social Change in Northern Sri Lanka 1976 – 1875: Protestant Missionary Activity and Social Change" Modern Sri Lanka, Pp. 15 – 42 Studies Vol. I, No. 1, Peradeniya, 1986.
9. Young, R.F. and Jebanesan, S., The Bible Trembled the Hindu – Christian Controversies & the Nineteenth Century Ceylon, Vienna, 1995.

'பிரித்தானியர் ஆட்சியும் நவீன மயமாக்கமும்',

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2012, பக். 461 - 476.

ஆறுமுகநாவலர் வரலாற்றின் சிறப்பம்சங்கள்

பொ. பூலோகசிங்கம்

இந்தப் பூமியிலே ஆறுமுகநாவலர் வரலாறு நடந்தது 56 வருடம் 11 மாதம் 16 நாள்; ஏறக்குறைய 57 வருடம். அது நூறு வருடங்களுக்கு முன்பு நடந்த வரலாறு. தனி ஒருவர் வரலாறு, அவர்தம் சமூகத்தின் வரலாறாகத் தொடர்ந்தது. அவ்வரலாற்றின் சிறப்பே அதற்குக் காரணம். அவ்வரலாறு செயற்கரிய செய்த சிறப்புடையது.[1]

சம்பந்தப் பெருமான் உண்மைச் சரித்திரம் ஞானப்பால் குடித்ததோடு தொடங்குகிறது; அப்பருடையது சூலைநோயுடன் தொடங்குகிறது; சுந்தரருடையது மணவினையைத் தடுத்து ஆட்கொண்டதோடு தொடங்குகிறது; மணிவாசகருடையது திருப்பெருந்துறைக் குருந்தமர நீழலிலே தொடங்குகிறது. நாவலர் அவர்களுடையது கிறித்துவச் சூழலிலே தொடங்குகிறது. ஜய வருஷம் ஆவணி மாதம் (1834) முதல் கீலக வருடம் புரட்டாதி மாதம் (1848) வரை நாவலர் அவர்கள் பதினான்கு வருடம் கிறித்துவச் சூழலிலே புடமிட்ட சைவரானார்.

நாவலர் அவர்களுக்கு முன்பு வைதிக சமய எழுச்சியிற் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியவர் ராஜாராம் மோகன்ராய் (1772 - 1833). அவர் பன்மொழிப் புலவர்; ஆங்கிலேயப் பிரபுக்களுடன் பழகியவர்; ஆங்கிலத்திலும் புலமையுடன் பேசியும் எழுதியும் வந்தவர்; ஆய்ந்தறியும் திறமையாற் சமயப் பிரிவுகளின் நுணுக்கங்களைக் கண்டறிந்து அவற்றிடையே இணைப்பைக் காண விழைந்தவர்; சமய அறிவுடன் அரசியல் சமுதாயக் கொள்கைகளிலும் சீர்திருத்தங்களிலும் ஆழ்ந்த ஈடுபாடுடையவர்.

ராஜாராம் மோகன்ராய் தோற்றுவித்த பிரம சமாஜம் அறிவுபூர்வமாகக் கற்றோர் மத்தியில் இயங்கியது. வங்காளத்திற் கல்வி கற்ற உயர் வகுப்பினரிடையே காணப்பெற்ற மேனாட்டு நாகரிகத்தின் நல்லமிசங்களையும் இந்திய பாரம்பரியத்தின் சிறந்த இயல்பு களையும் இணைப்பதை நோக்கமாகக் கொண்டது பிரமசமாஜம். ஆயினும், அடிப்படையில் இந்திய பாரம்பரியத்திலும் மேனாட்டுத் தாக்கமே பிரம சமாஜிகளைக் கவர்ந்திருந்தது என்று கூறுவது மிகையாகாது. வெள்ளைக்காரர் முறைகளைப் பின்பற்றுவதால் இந்திய

சமூகம் விரைவாக முன்னேறும் என்று அவர்கள் நம்பினார்கள். இதனால் சமூக சீர்திருத்தத்தையும் ஆங்காங்கே வற்புறுத்தினர். சமயநெறியிலே, கிறித்துவத்துக்கும் வைதிகத்திற்கும் பொதுவான அமிசங்களை இனங்கண்டு புதியதொரு ஒருமைத்துவ வழிபாட்டு முறையை முன்வைக்க பிரமசமாஜம் முயன்றது.

இரு பண்பாடுகளுக்குள் அறிவுபூர்வமாக இணைப்பும் இயைபும் காணும் பிரம சமாஜத்தின் இலட்சியங்களுக்கு முற்றும் மாறாக, தயானந்த சரஸ்வதி (1824 - 1886) தோற்றுவித்த ஆரிய சமாஜம் செயற்பட்டது. பரசமயங்களுடன் எத்தகைய சமரசமும் சகஜீவனமும் இன்றி இந்தியர் சுத்தமான வைதீக வாழ்க்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே தயானந்தர் போதனை. வேதங்களுக்குப் பிற்பட்ட நூல்கள் எதனையும் பிரமாண மாக ஆரிய சமாஜம் ஏற்கவில்லை. புராணங்களைத் தயானந்தர் கண்டித்தார். அறுவகைத் தரிசனத்தையும் அவர் ஏற்கவில்லை. வேதத்துக்கு மாறானவை எனத் தாம் கருதிய யாவற்றையும் தயானந்தர் அஞ்சாது கண்டித்தார்.

வேத வழக்கைப் பிரமாணமாகக் கொண்டு ஏனைய யாவற்றையும் கிறித்துவத்தையும் மறுத்துத் தயானந்தர் நின்ற காலகட்டத்திலே சிவாகமங்களின் அடிப்படையில் சைவப் பிரசாரகராக விளங்கியவர் ஆறுமுகநாவலர். வேதத்திற்குத் தயானந்தரும் ஆகமத்திற்கு நாவலரும் ஒரே காலகட்டத்தில் சிறந்த பிரசாரகராகத் திகழ்ந்தனர்.

சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்ற எண்ணம் நாவலர் அவர்களுக்குக் கிறித்தவச் சூழலிலே தோன்றியது. கிறித்துவசமயம் தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்று அவர்களை ஆகர்ஷிப்பதையும், சைவசமயம் வலுவிழந்து குன்றுவதையும், அதற்கான காரணங்களையும், அந்நிலையை மாற்றியமைக்க வேண்டிய வழிதுறைகளையும் கிறித்துவச் சூழலிலே நாவலரவர்கள் கண்டுகொண்டனர். முதலிலே சமய அறிவைக் கசடறத் தாம் பெறவேண்டிய தேவையை உணர்ந்து சைவசித்தாந்தத்தையும் சைவத் திருமுறைகளையும் எழுத்தெண்ணிப் படித்தவர். சைவத்தின் முகங்களாகிய வேதாகமங்களைக் கற்கவேண்டிய இன்றியமையாமையை உணர்ந்து, அவை எழுதப்பெற்ற சங்கதமொழியை நன்கு கற்று, அவற்றின் பொருளை ஐயந்திரிபறக் கற்றுக்கொண்டார். கிறித்துவ வேதாகமகத்தையும் கிறித்தவர் சமயப் பரம்பலுக்குப் பயன்படுத்திய உத்திகளையும் நன்கு அறியக்கூடிய சூழல் அவருக்குத் தானே வாய்த்தது. நாவலரவர்களுடைய உண்மைச் சரித்திரம் விரியத் தொடங்கிவிட்டது.

நாவலரவர்களுடைய வரலாற்றிற்குச் சிறப்பிடம் பெறும் அமிசங்களிலே முன்வருவது வித்தியா தருமம். முன்பு பௌத்தரும் சைனரும், சமகாலத்தில் கிறித்தவரும் கல்வியைச் சமயப் பரம்பலுக்குச் சிறப்பாகப் பயன்படுத்தியதை நாவலரவர்கள் அறியாதாரில்லை. நாவலரவர்களின் வித்தியா தருமத்தின் மூலவேராகக் கருதத் தக்கது அவர் தோற்றுவித்த திண்ணைப்பள்ளியாகும். விசுவாவசு வருஷம் தை மாசம் (1846) காலையிலும் இரவிலும் சைவ சமயப்பிள்ளைகளைச் சேர்த்துக் கருவிநூல்களையும் சமய நூல்களையும் வேதனம் பெறாது கற்பிக்கத் தொடங்கியது. திண்ணைப் பள்ளிகள் அக்காலத்திலே நாட்டின் பல்வேறு

இடங்களிலும் நடைபெற்று வந்தபோதும் நாவலர் அவர்களுடையது அவற்றிலிருந்து நோக்கால் வேறுபட்டுச் சிறப்படைந்த பெற்றியுடையது. இத்திண்ணைப் பள்ளியை அவர்கள் தாம் செயற்படுத்தத் திட்டமிட்டிருந்த காரியத்திற்கு முன்னோடியாகவே தொடங்கினார். எத்தனையோ ஐந்தாண்டுத் திட்டங்களும் பத்தாண்டுத் திட்டங்களும் பிரகடனமாகிக் குப்பைக் கூடையை அடையும்போது, மூன்றாண்டினை இலக்காகக் கொண்ட திட்டத்திற்குத் திண்ணைப்பள்ளி அடிக்கல்லாக அமைந்தது. ஓய்வு ஒழிவு இன்றித் தம்மாசிரியர் வழங்கிய வித்தியாதானத்தையும், அதனையும் சுயலாபம் கருதாது செய்ததையும் உணர்ந்த மாணாக்கர் தம்மாசிரியரின் லட்சியப் பாதையிலே பின்செல்ல ஆயத்தமானார். தம்முன்னோடித் திட்டம் அளித்த வெற்றியைக் கண்ட நாவலரவர்கள், திண்ணைப்பள்ளி தொடங்கிய 32ஆம் மாதத்திலே, மூன்றாண்டுத் திட்டத்தின் காலக்கெடு முடியுமுன்பு, கீலக வருஷம் ஆவணி மாதம் ஐந்தாம் தேதி (1948) வண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தார்.

நாவலரவர்கள் பிதிரார்ச்சிதம் பெறவில்லை. தமையன்மாரின் பொருளுதவியையும் பெறவில்லை. அதனால் தமக்கே உரிய கட்டிடமோ அதனை அமைக்கக் கூடிய வளவோ அவருக்கு இருக்கவில்லை. ஆசிரியருக்கு வேதனம் கொடுக்கக்கூடிய பொருள் வசதியும் அவருக்கு இருக்கவில்லை. அப்படி இருந்தும் திண்ணைப்பள்ளி அளித்த ஊக்கத்தினாலும் இறை நம்பிக்கையாலும் துணிந்து வித்தியாசாலையைத் தாபித்தார். சாதாரண வருஷம் தை மாதம் (1851) முதலாகத்தான் வண்ணை வித்தியாசாலை 'பூதானம்' பெற்ற நிலத்திலே, 'பொருள்தானம்' கொண்டு நிறுவப்பெற்ற கட்டிடத்திலே நிரந்தரமாக நடைபெறத் தொடங்கியது. 1858ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதலாகத்தான் ஆசிரியர் அங்கு முறையாக வேதனம் பெற்றனர். அதுவரை காலமும் நாவலர் திண்ணைப்பள்ளி மாணாக்கர் சுயலாபம் கருதாது தம்மாசிரியர் வித்தியா தருமத்திலே பங்கு கொண்டனர்.

வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை நன்முறையிலே செயற்படத் தொடங்கியதை அடுத்து நாவலரவர்கள் தம் வித்தியா திட்டத்தினை மேலும் விரிவாக்கினார். ''தமிழ் நாடெங்கும் சைவசமயம் வளர்ந்தோங்குதற்கு ஏதுவாகச் சிதம்பர ஸ்தலத்திலே தாபிக்கப்படும் சைவப்பிரகாச வித்தியாசாலை குறித்து மகிமை பொருந்திய சைவ சமயிகளுக்கு யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் எழுதிய விக்கியாபனம்'' ரௌத்திரி வருடம் வைகாசி மாதம் (1860) சென்னையிலே வெளிவந்தது. இரத்தாஷி வருடம் ஐப்பசி மாதம் 28ஆம் தேதி (1864) சிதம்பரத்திலே சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவப்பெற்றது.

வண்ணையிலும் சிதம்பரத்திலும் வித்தியாசாலைகளை நிறுவி வெற்றிகண்ட நாவலரவர்கள் விபவ வருஷம் சித்திரை மாதம் (1868), பிரமோதூத வருஷம் (1870) என்பனவற்றிலே இரு விக்கியாபனங்களை வெளியிட்டனர். இவை நாவலரவர்களின் வித்தியா திட்டத்தின் கொடுமுடிகளாம். வித்தியாசாலைத் திட்டத்தினை அடுத்துப் பயிற்சிக் கல்லூரித் திட்ட மொன்றினை இவ்விக்கியாபனங்களில் நாவலரவர்கள் முன்வைத்தார்கள். முக்கிய தலந்தோறும் வித்தியாசாலை தாபிக்கவும் சைவப் பிரசாரணஞ் செய்விக்கவும் கிரமமாய்க்

கற்றுவல்ல ஆசிரியர்களையும் சைவப் பிரசாரகர்களையும் உருவாக்க வேண்டிய பயிற்சிக் கல்லூரியை அமைப்பதற்கு வேண்டிய திட்டங்களை இவ்விரு விக்கியாபனங் களிலும் விரிவாக விளக்கியுள்ளார்.

உண்டி உடை உறையுள் வழங்கி, இலவசமாகப் பயிற்றுவதைக் கூறும் இத்திட்டம் ஐந்தாண்டிலே பலன்தரத்தக்கதாக அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை மனேஜர் கைலாசபிள்ளை ஆறுமுகநாவலர் சரித்திரத்தின் ஐந்தாம் அதிகாரத்திலே பதிப்பித்துள்ளார்.

எல்லாத் தருமங்களுக்கும் மூலமாய், அவ்வெல்லாத் தருமங்களையும் தன்னுள் அடக்கி, அவ்வெல்லாத் தருமங்களுக்கும் மேற்பட்டு விளங்கும் வித்தியா தருமத்தினைச் செவ்வனே நடாத்த இன்றியமையாதவை நூல்கள். அக்காலத்திலே அவற்றை எளிதிலும் குறைந்த விலையிலும் எல்லாரும் பெறக்கூடிய வழிதுறைகளை ஆராய்ந்து செயற்பட வேண்டிய நிலைமையும் இருந்து வந்தது. மேலும் அச்சகவசதி அன்று புறச்சமயிகளுக்குச் சமயப் பரம்பலுக்குப் பேருதவியாகக் காணப்பட்டது. துண்டுப் பிரசுரங்களைத் தாராளமாக அச்சிட்டுப் பல்வேறு இடங்களுக்கும் விநியோகித்துச் சமயப் பிரசாரத்தினை இலகுவாக்க அச்சியந்திரம் உதவிற்று. அவர்கள் தம் பிரசாரத்தினை முறியடிக்க வேண்டுமாயின் அவர்களைப் போன்று அச்சியந்திர வசதி பெற்றுத் துண்டுப் பிரசுரங்களைத் தாராளமாக அச்சிட்டு விநியோகிக்க வேண்டியிருந்தது. இவ்விரு காரணங்களாலும் நாவலரவர்கள் அச்சியந்திரம் தம் கருமங்களுக்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்திலே நாவலரவர்கள் சௌமிய வருஷம் (1849) வித்தியாநுபாலன இயந்திரசாலை என்ற பெயரிலே அச்சகம் நிறுவினார். இவ்வச்சகமே ஈழத்திலே சைவர் நிறுவிய முதல் அச்சியந்திரசாலை என்பது குறிப்பிடத்தக்கது. எழுபதுகளிலே சென்னை யிலும் வித்தியாநு பாலனயந்திரசாலை என்ற பெயருடன் இரண்டாவது அச்சியந்திரம் நிறுவப்பட்டதாக அறிய முடிகின்றது. வித்தியாசாலைக் கல்விக்கும் சைவப் பிரசாரணத் திற்கும் நாவலரவர்களுக்கு அச்சியந்திரம் பேருதவியாக அமைந்தது. வித்தியாசாலைத் திட்டத்திற்கு வேண்டிய நூல்களை எழுதியும் பதிப்பித்தும் விளக்கியும் நின்ற நாவலரவர்கள் சமயப் பிரசாரணத்தினைக் கருத்தினில் கொண்டு துண்டுப் பிரசுரங்களையும் கண்டனங் களையும் சிறு நூல்களையும் எழுதிப் பிரசுரித்தனர். ஆயினும், சமய நூல்களை மட்டுமே பதிப்பிக்க வேண்டும் என்ற வரையறைக்குள் அவர் நிற்கவில்லை. இதனால் உலகியல் நூல்களையும் புறச்சமய நூல்களையும் கூட அவர் பதிப்பிக்கத் திட்டமிட்டனர். திருக்கோவையாருரை (1960) பதிப்பில் இடம்பெறும் அநுபந்தமும் பிரகடனப் பத்திரிகையும் இக்கருத்தினை ஆதரிப்பன. சமய நூல்களையும் கருவி நூல்களையும் சமயப் பிரசாரணத்திற்கு வேண்டிய பிரசுரங்களையும் வெளிக் கொணரப் புறப்பட்ட நாவலரவர்கள் விதானம் அழிந்து போகும் நிலையில் இருந்த தமிழ் நூல்களையும் உள்ளடக்கியதாக இருந்ததை மனங்கொளல் வேண்டும்.

நாவலரவர்கள் வரலாற்றிலே உயர்ந்து ஓங்கி நிற்கும் அமிசம் சைவப் பிரசாரணமாகும். 1847 டிசம்பர் 31 முதல் 1879 ஆடி வரை அவர் கைவிடாது தொடர்ந்து செய்து வந்தது

சைவப்பிரசாரணமாகும். 32 வருடம் அவர்கள் புரிந்த சைவப்பிரசாரணம் பன்முகப்பட்டது. சைவசமயத்தின் உண்மைகளை மக்களுக்குப் புரிய வைத்து, சைவ சமயத்துள்ளே புகுந்துவிட்ட மாசுகளை நீக்கி, புறச்சமயங்களின் தீவிரமான பிரசாரத்தினை முறியடித் தாலன்றி சைவம் பாறிவிடும் என்பதைக் கிறித்தவ சூழலிலே நாவலரவர்கள் நன்கு புரிந்துகொண்டனர். ஆயினும், இம்மூன்று காரியங்களிலும் அகச்சமய புனருத்தாரணம் ஏனைய இரண்டினையும் சாதிக்க இன்றியமையாதது என்பதைத் தெளிவாக நாவலரவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இதனால் அவ்வழியிலே அவர்தம் சைவப் பிரசாரணம் மேலோங்கி நிற்கின்றது.

சமயவுண்மைகளைப் போதிப்பதிலோ புறச்சமயிகளை எதிர்ப்பதிலோ நாவலரவர்கள் சளைத்துவிடவில்லை. சைவத்துள் புகுந்துவிட்ட மாசுகளை நீக்க முற்பட்டபோதுதான் அவர்கள் எதிர்பார்க்காத எதிர்ப்பினை நோக்க வேண்டியிருந்தது. கோயில் அதிகாரம், பிராமணீயம், வீரவணக்கம் என்பன அவ்வழியிலே நாவலரவர்கள் எதிர்ப்பட்டனவற்றிலே குறிப்பிடத்தக்கவை.

> ''பூர்வகாலத்திலே சைவ சமய விருத்திப்பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவா சமயிகளாலே நன்கு மதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமய விருத்திப்பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை என்னை அவமதிக்கவுமில்லை. இஃதென்னையாச்சரியம்''

என நாவலரவர்கள் கூறுவது காண்க.[1]

சைவப் பிரசாரணத்தை இரு வழிகளிலே நாவலரவர்கள் சிறப்பாகச் செய்தார்கள். அவை புராணபடனமும் பிரசங்கமுமாம். சைவ உண்மைகளை விளக்கப் புராணபடனத்தினை அவர் சிறப்பாகப் பயன்படுத்தினார். பிரசங்கத்தைச் சைவநெறி விளக்கத்திற்கும் சுத்தி கரணத்திற்கும் பயன்படுத்தியவாறு, அவர் புறச் சமய கண்டனத்திற்குப் பயன்படுத்தவில்லை. அவருடைய புறச்சமய கண்டனங்கள் பெரும்பாலும் பிரசுரக் கணைகளாகவே புறப்பட்டன.

வண்ணை வைத்தீசுவரன் கோயில் வசந்தமண்டபம், வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை, சென்னை வாசஸ்தலம் என்பன நாவலரவர்களின் பிரசங்க மேடைகளாக விளங்கின. ஆயினும் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் பல்வேறு இடங்களையும் தம் சைவப் பிரசாரணத்திற்கு நாவலரவர்கள் பயன்படுத்தினார். ஆறுமுகநாரை ஆறுமுகநாவலர் ஆக்கியது பிரசங்கமே என்பதை ஈண்டு மனங்கொளல் வேண்டும்.

நாவலரவர்கள் ஆரம்பகாலத்தில் பிரசங்கங்களுக்குப் பொருளாகக் கொண்ட விடயங் களையும் அப்பிரசங்கங்கள் சைவ சமூகத்தினரிடையே ஏற்படுத்திய தாக்கத்தினையும் வண்ணை வே. கனகரத்தின உபாத்தியாயர் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். அச்சமய விளக்கத்திலும் சுத்தீகரணத்திலும் அப்பிரசங்கங்கள் முக்கிய இடம் வகித்ததை உணர முடிகின்றது.

சுந்தபுராண கலாசாரம் நிலவும் யாழ்ப்பாணத்திற் சிறப்பிடம் பெறும் நல்லை முருகன் கோயில் அமைப்பும் நடவடிக்கைகளும் சிவாகம விரோதங்களுக்கு இடமாக அமைந் திருந்ததைப் பொறாது சிவாகம முறைப்படி செய்விக்க நாவலரவர்கள் எடுத்த முயற்சி கள் கோயில் அதிகாரத்தின் கோபத்திற்கு அவரை ஆளாக்கியது. பிராமணீயத்தின் சிவாகம விரோதங்களைக் கண்டிக்கப் புறப்பட்ட நாவலர், சிதம்பரத்திலும் ஈழத்திலும் அவர்களுடைய விரோதத்தினைத் தேடிக் கொண்டார். சிவநிந்தை மறைநிந்தை பொறாமனம் படைத்த நாவலரவர்கள், கருங்குழி இராமலிங்கரைச் சுற்றி எழுப்பப்பெற்ற வீரவணக்கத் திற்கும் எதிரியானார். இவற்றினாலே சிவாகமத்தின் பாதுகாவலராக நாவலர் அவர்கள் திகழ்ந்தனர். சிவபக்தியை நீக்கமற நிலைபெறச் செய்தனர்.

நாவலரவர்கள் வாழ்க்கையின் அந்தத்திலே இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சி இராமநாதன் தேர்வு. தமிழ் மக்களின் பிரதிநிதி எத்தன்மையராக இருத்தல் வேண்டும் என்று துணிந்து அவர் அன்று செய்த காரியம் தீர்க்கதரிசனம் என்று புகழப்படுவது.

அடிக்குறிப்பு

1. த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், (1919), பக். 45 - 46.

நாவலர்
சமயவியல்

சைவத்தைக் கைதூக்கி விடுவதற்கு அவதரித்த நாவலர் பெருமான்

பெரியதம்பிப்பிள்ளை

நமது நாயன்மார்களும், உண்மைத் தலைவர்களும் நாம் நாள்தோறும் உண்ணும் உணவினும், பருகும் நீரினும், நமது உயிரினும் நமக்கு இனியவராவர். அவர்களை நாம் நினைவு கூருவதால் நமக்கு உடலுறுதியும், மனத்துணிவும், உணர்ச்சியும் உண்டாகி உண்மையான சேவையிலே நாம் நிறைவடைதலும் சித்தியாகும்.

வெவ்வேறு சமயங்கள் பல்வேறு நாடுகளிலே தோன்றி வளர்ந்து பின்னர் அந்நாடுகளிலே அவை வீழ்ந்துபட்ட வரலாறுகளை நாம் சரித்திரங்களிலே படிக்கும்போது, மிகவும் வருந்துதற்குரியதோர் நிகழ்ச்சியினைக் காண்கின்றோம். சமய வளர்ச்சிக்கும் அது நிலைபெறுதற்கும் சிறந்த கருவிகள் கல்வியறிவு, ஒழுக்கம் முதலிய அடிப்படை அமைப்புகளாகும். இவை சமய வாழ்வுக்கு உயிர் போன்று ஆக்கம் அளிப்பனவாம். இது இவ்வாறு அமைய வேண்டியிருக்க, தென்தமிழ் நாட்டிலே இதற்கு மாறானதோர் முறையிலே சமயங்கள் சில மக்களிடையே வலிந்து புகுத்தப்படலாயின. சமயத் தலைவர்களும், பிரசாரகர்களும் தத்தம் சமயங்களைத் தமிழ் நாட்டிலே பரப்புதற்கு, அவ்வச் சமயக் கொள்கைகளை முதன்மையாகக் கொள்ளாமல் அரசியற் செல்வாக்கையே முதன்மையான கருவியாகக் கொண்டனர். இதனால் 'அரச னெவ்வழி, குடிகளு மவ்வழி' என்னும் முதுமொழிக்கேற்ப மக்கள்தம் சமயவாழ்வும் மாறுபடலாயிற்று. கொள்கை களையும் நடைமுறைகளையும் நன்கு தெரிந்து கொள்வதை விடுத்துப் பெரும்பாலான மக்கள் கண்மூடித்தனமாகச் சமயங்களைப் பின்பற்றி வருவாராயினர். இதனாலே நாட்டில் அமைதியின்மை, ஒழுக்கக்கேடு முதலியன தாண்டவமாடத் தொடங்கின.

தூய சைவநெறி

பௌத்தம், சமணமாகிய இரு சமயங்களும் இவ்வாறு தென்னாட்டிலே அரசியற் செல் வாக்கினாலே மக்களிடையே பரப்பப்பட்டமையால் தூய சைவ சன்மார்க்கமானது குன்றப் போவதற்குரிய நிலையினை அடைந்த அல்லற் காலையிலே சிவபெருமானின் திருவருள்

நோக்கமானது தென்தமிழ் நாட்டின்மீது செல்லலாயிற்று. கி.பி. 8ஆம் நூற்றாண்டு தொடக்கம் 13ஆம் நூற்றாண்டுவரை தென்தமிழ் நாட்டிலே சமயங்களின் பேரால் நிகழ்ந்து வந்த கொடுமைகள் நீங்கி உண்மை வழியிலே மக்கள் வாழ்தற்கு வழிகாட்டும் சமய குரவர்கள் தோன்றலாயினர். மாணிக்கவாசகரவர்களின் அவதாரத்தினாலே பௌத்த மதமும், திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஆகிய இருவரது அவதாரங்களினாலே சமண மதமும் பொய் வழியைவிட்டு உண்மை வழியைப் பின்பற்றும் முறையிலே நிலை நிற்பனவாயின. சைவ சமயமும் சமயக் கொள்கைகளையும் ஒழுக்க நெறியையும் பின்பற்றுவதால் மாத்திரம் வளர்ச்சி பெற்று வந்த தனது தனிப்பெரும் சிறப்பு நிலையிலே மீண்டும் நன்கு உறுதியடைந்து திகழ்வதாயிற்று.

ஈழநாட்டிலும் ஐரோப்பியர் காலத்திலே கிறிஸ்துமார்க்கம் வளர்ந்த வரலாறும் இது போன்றதே. மேல்நாட்டுக் குருமார் தங்கள் சமயக் கொள்கைகளின் உயர் தனிச் சிறப்பியல்புகளை மக்களிடையே பரப்பி அன்பு நெறியிலே அவர்களை நிலை பெறுத்தும் வழியினைக் கைக்கொள்ளாமல், உலக ஆசைகளாலும் அரசியற் செல்வாக்கினாலும் தமது மத சேவைகளை நிறைவுறச் செய்தற்கு முயல்வராயினர். இதனாலே நாட்டில் இருவேறு கிறிஸ்தவர்கள் உண்டாதற்குரிய நிலைமை ஏற்படலாயிற்று. உண்மைக் கிறிஸ்தவர்கள் ஒருசிலரும், இரண்டும் கெட்ட கிறிஸ்தவர்கள் ஆயிரக் கணக்கானோரும் நாட்டிலே தோன்றலாயினர். பாதிரிமார் முதலிய சமய குரவர்களுக்கு முன்னே உத்தம கிறிஸ்தவராக நடித்துத் தமது வீடுகளிலே குளித்து முழுகித் திருநீறுபூசி விரதம்பிடித்துச் சைவர்களாக மறைந்து வாழ்கின்ற கூட்டத்தினர் தொகை நாட்டில் அதிகரிக்கலாயிற்று இதனாலே நாட்டில் உண்மைச் சைவம் குன்றுவதாயிற்று போலிக் கிறிஸ்தவமும் வளர்வதாயிற்று.

நாவலர் அவதாரம்

தமிழும் சைவமும் தலைகீழாகித் தமிழும் சைவமும் அஞ்சி வாழ்க்கை நடத்திய இந்த அல்லற்காலையிலே, கிறிஸ்துநாதரின் உண்மைப் பண்பினை யுணராது போலிக் கிறிஸ்தவர்களாக இரண்டுங் கெட்ட வாழ்வு நடத்திய ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வுலக சுகங்களை மாத்திரம் அனுபவித்தற்காக உள்ளொன்றும் புறம்பொன்றுமாக நடந்து பொய்மையே பெருக்கிய இருட்காலையிலேதான் ஆறுமுகநாவலர் அவதாரஞ் செய்தார்.

சமய குரவர் நால்வரையும் ஆறுமுக நாவலரையும் காலம் நமக்களித்தது. அவர்களின் அரிய பெரிய சேவைகளைக் காலமானது வேண்டி நின்றது. அவர்களின் திருத்தொண்டு களின் பெறுபேறுகள் நிலையானவை; என்றும் நிலைத்து நின்று மக்கட் கூட்டத்துக்கு உறுதியளிக்கும் ஆற்றல் வாய்ந்தவை; திருவருள் வடிவமானவை.

கி.பி. 1822ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து நல்லூரிலே திருவருட் குறிப்பினாலே அவதரித்த ஆறுமுகநாவலர் அவர்கள் ஐம்பத்தேழு ஆண்டுகள் இவ்வுலகிலே வாழ்ந் திருந்தார். தமிழ்மொழி, வடமொழி, ஆங்கிலமொழி முதலியவற்றிலே நல்லறிவு படைத்த பெருந்தகையாளர் அவர். தமது வாழ்நாளின் முதற் பகுதியிலே அவர் கிறிஸ்தவ குருமாருடன் மிகவும் அன்போடு பழகிவந்தார். கிறிஸ்தவர்களின் வேதாகமம் நூலாகிய

பைபிளைத் தமிழிலே மொழிபெயர்த்து என்றும் நின்று நிலவும் நிலைமையைத் தந்த பெருந்தகையாளரும் அவரேயாவர். கிறிஸ்தவ உலகம் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது. இங்கே ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. சென்னையில் ஒரு மொழி பெயர்ப்பும் யாழ்ப்பாணத்தில் ஒரு மொழிபெயர்ப்புமாகப் பைபிளுக்கு இரண்டு தமிழ் மொழிபெயர்ப்பு கள் செய்யப்பட்டன. இரு பகுதியினரும் தத்தம் மொழிபெயர்ப்பே சிறந்ததென வாதாடினர். இரண்டு மொழிபெயர்ப்புகளும் நடுத் தீர்ப்புக்கு விடப்பட்டன. அக்காலத்திலே மிகுந்த மதிப்புப் பெற்றிருந்த பேரறிஞராகிய மழவை மகாலிங்க ஐயரவர்கள் மத்தியஸ்தராயிருந்து நாவலரின் மொழிபெயர்ப்பே சிறந்ததென்று தீர்ப்பு அளித்தார். நாவலரின் பன்மொழிப் புலமைக்குப் பைபிள் மொழிபெயர்ப்பு ஓர் உரை கல்லாகும்.

துறவு வாழ்க்கை

கிறிஸ்தவ குருமாருடன் நெருங்கிப் பழகிய நாவலர் அக்குருமாரின் போக்கிலே வெறுப்புக் கொள்ளுதற்குரிய நிகழ்ச்சிகள் பல காலந்தோறும் உண்டாயின. இதனால், நாவலரது மனம் வேறுபட்டது. அவர்களை விட்டு நீங்கினார். சைவப் பாடசாலைகளைத் தொடங்க வேண்டுமென்றும், சமயப் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் துணிவு கொண்டார். உயர்தரக் கல்வி கற்று ஆங்கிலப் பட்டதாரியாக வரக்கூடிய வசதி அவருக்கு இருந்தது. அதையும் வெறுத்தார். நல்ல உத்தியோகம் கிடைக்கக் கூடிய நிலையும் இருந்தது. அதையும் வெறுத்தார். நல்ல சீதனம் பெற்றுக் கலியாணம் பண்ணக் கூடிய தகுதியிருந்தது. அதையும் வெறுத்தார். சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்தற்காக இளமையிலேயே துறவு வாழ்க்கையை மேற்கொள்ளலானார். இத்தகைய துறவு அரிதினும் அரிதாகும்.

தமது அறிவாற்றல்களையெல்லாம் சமயத் தொண்டிலும் தமிழ்த் தொண்டிலும் பயன்படுத்திய நாவலர் பெருமான் சிவபெருமானுடைய திருவடிகளின்மீது வைத்த தளராத நம்பிக்கையில் நிலைத்து நின்றார். தமது தரும கைங்கரியங்களுக்கு இடையூறோ, பணமுடையோ ஏற்படும் போதெல்லாம் தமது உடையவராகிய சிவபெருமானிடம் முறையிட்டுத் தமது குறைகளை நிறைவாக்கிக் கொள்ளும் அன்பு நெறியிலே அவர் சித்தி பெற்றமைக்குப் பல உதாரணங்களை அவரது வாழ்க்கை அனுபவத்திலிருந்து நாம் காணுதல் கூடும்.

சீர்திருத்தங்கள்

தாம் பிறந்த நன்னாட்டிலே தமது தொண்டுகளைத் தொடங்கினார். பல சீர்திருத்தங்களைச் செய்தற்கு முன் வந்தார். கோயில்களிலே தாசியர் நடனமும், மிருக பலியும் நிகழ்வதைக் கண்டு அவர் மனம் வருந்தினார். சைவமும் தமிழும் வளர்வதற்கு இவையிரண்டும் பெரிய தடைகளாயிருப்பதை உணர்ந்த அவர் மிகவும் வன்மையாகக் கண்டித்து இவற்றை நீக்குதற்கு அரும்பாடுபட்டார். இதுவரையிலே கிறிஸ்தவர்களால் வந்த எதிர்ப்பைப் பார்க்கிலும் சைவர்களால் வந்த எதிர்ப்புகளோ மிகவும் அதிகமாயின. தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நடத்துவோருக்கு நாவலர்மீது கோபமுண்டாயிற்று. தாசியர் நடனத்

தாலும் மிருக பலியாலும் பொருளீட்டும் புன்மைவாய்ந்த மக்கள், பல நேர்மையற்ற வழிகளிலே நாவலரை எதிர்க்கலானார்கள் நாவலரோ அஞ்சா நெஞ்சம், பொதுநலத்தின் பொருட்டுத் துறவு பூண்ட உண்மைத் தியாகி, திருவருளை நம்பித் தொண்டு செய்பவர். நண்பர், பகைவர், உற்றார் உறவினர் என்பதற்காக நீதியைக் கைவிடாத நேர்மையாளர். எதிர்ப்புகளையெல்லாம் இறைவன் ஏற்றுக்கொள்ள நாவலர் தமது திருத்தொண்டுகளை முன்னிலும் வேகமாகச் செய்து வரலானார்.

நேர்மை தவறாதவர், உற்றார், உறவினர் பொருட்டும், நண்பர் பகைவர் பொருட்டும், நேர்மை தவறாதவர் என்றேன். ஒருமுறை ஒரு வழக்கு வந்தது. அவ்வழக்கிலே நாவலரின் மருகர் வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையவர்கள் எதிரியாவார். அவர் குற்றவாளி யல்லர் என்று நாவலர் நீதி மன்றத்தில் ஒரு சொற் சொன்னாலே பிள்ளையவர்கள் விடுதலையாகி விடுவார். நாவலரைப் பலரும் பலவாறு வேண்டியும் அவர் இணங்கவில்லை. மருமகனைப் பார்க்கினும் உண்மையும் நேர்மையுமே தமக்குச் சிறந்த உறவுடையவை என்று கூறி முற்றாக மறுத்துவிட்டார். இதுவன்றோ தலைவர்களுக்கு அழகாவது?

அஞ்சா நெஞ்சம்

நாவலர் அஞ்சா நெஞ்சு படைத்தவர், பிறரிடத்திலிருந்து தமக்கெனச் சன்மானங்கள் பெறுவதை அடியோடு வெறுத்தவர். ஈழநாட்டிலிருந்து தென் தமிழ் நாட்டுக்குச் செல்லுவோர் இராமநாதபுர வழியாகப் போகவேண்டும். தமிழறிஞர்கள் அவ்வழியாகப் போக நேர்ந்தால் இராமநாதபுரத்து மன்னரைத் தரிசித்து அவர் புகழ்பாடிப் பரிசில் பெற்றுச் செல்லுதல் வழக்கம். அவ்வாறு செய்ய வேண்டுமென்பதும் சமஸ்தானத்தின் கட்டளை யாகும். நாவலர் பெருமானும் ஒருக்கால் அவ்வழியாகச் செல்ல நேர்ந்தது. அங்குள்ளோர் நாவலரைக் கண்டு இவ்வழியாகச் செல்வோர் மன்னரைத் தரிசித்து வாழ்த்துக்கூறிப் பரிசில்கள் பெற்றுச் செல்வது வழக்கம். அவ்வாறு செய்யாமற் செல்வது அரச தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் என்று கூறி நாவலரை வழி மறித்தார்கள். அஞ்சாநெஞ்சம் படைத்த நாவலர், இறைவனுக்குக் குடிமை செய்வதற்குத் தம்மை உரிமையாக்கிய துறவி சுயநலத்தையும் மதிப்பாரோ? சமண மன்னன் அனுப்பிய தூதுவரைப் பார்த்து ''நாமார்க்குங் குடியல்லேம்'' என்று கூறித் தலை நிமிர்ந்து நின்ற நாவுக்கரசர் பரம்பரையில் வந்த நாவலரல்லரோ அவர்! ''இது உங்களரசன் நடைமுறையானால் இந்த நடைமுறையையும், பிற ஒழுங்கீனங்களையும் சென்னை அரசாங்கத்துக்குத் தெரிவித்த பின்புதான் நாவலன் மறவன் கையாலிறப்பது என்று நான் கூறுவதாக உங்கள் அரச னுக்குப் போய்ச் சொல்லுங்கள்'' என்று தலை நிமிர்ந்து நின்று கூறிய நாவலர் பெருமானை நமது தமிழர்கள் பின்பற்றி நிற்றல் வேண்டும். நமது தமிழ்த் தலைவர்களும் இவ்வாறு நாவலரை முன்மாதிரியாகக் கொண்டு நிற்றல் வேண்டும். நாவலர் பெருமான் இராமநாதபுர மன்னருக்கு இனிய நண்பரானதும், அம்மன்னரின் சீரிய நண்பினாலே தமிழ்த் தொண்டு செய்து சைவம் வளர்த்தற்குப் பேராதரவு பெற்றதும் நமது தலைவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாயமைதல் வேண்டும். எதிர்க்கும் ஆற்றலும் நண்பு பூணும் தகுதியுமில்லாமல்

அடித்த காற்றுக்கெல்லாம் சாயும் ஏழமை படைத்த தலைவர்கள் நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழையும் தமிழரையும் நாட்டையும் பாதுகாத்தற்குப் புதுப்பெலன் பெறுவார்களாக.

நாவலர் பெருமான் தனது தாய் நாட்டிலே தமது சொந்தச் சகோதரர்களால் - சைவ சமயிகளால் பெரிதும் இடர்களுக்குள்ளானார். மத சேவைகளை நன்கு திட்டமிட்டுச் செய்வதற்கும், அச்சேவைகளின் அருமை பெருமைகளைத் தமது சொந்த நாட்டினர் அறிந்து தமக்குத் துணையாக நிற்றற்கும் வேண்டிய நிலைமையை அடைதற்காக நாவலர் தென்னாடு புகுந்தமை மிகவும் மனம் வருந்தத்தக்க செய்தியாகும். இதனைப் பற்றிக் கூறும்போது நாவலர் பெருமான் வெளியிட்ட கருத்துகள் நமது உள்ளங்களைப் பிளந்து விடுகின்றன. அப் பெருந்தகையாரை நாடு கடத்தியது போன்ற பெருங்குற்றத்துக்கு மக்கள் ஆளாகின்றனர்.

''யாழ்ப்பாணத்தால் உவாத்திக்கப்பட்ட அகதிப் பிராணியாகிய நான்'' என்று கூறும் போது நாவலரின் உள்ளம் என்ன நிலையிலிருந்திருக்கும் என்பதை நினைக்க நினைக்க நமது மனம் எவ்வளவு வேதனையடைகின்றது! தாம் கூறும் உண்மைகளை மக்கள் அலட்சியம் செய்வதை நினைத்து மனம் நொந்து அவர் வேறொரு சந்தர்ப்பத்திற் கூறிய சொற்களும் நம்மை மிகவும் வாட்டுகின்றன. ''சக்கரவர்த்தியின் வாயிலிருந்து வெளிவரும் உண்மைகள் புலையனுடைய வாயிலிருந்து வெளிவருதற்காக அவைகளைத் தள்ளி விடலாமா?'' என்று கூறுவதை நோக்கிப் பாருங்கள். இது நம்மிடத்திலுள்ள பெரும் குறை. நாம் நம் நாட்டுப் பெரியார்களை வேண்டிய அளவு மதிப்பதில்லை. அவர்களுடைய நன் முயற்சிகளை ஆதரிப்பதில்லை. இனிமேலும் நாம் இவ்வாறு வாழ்தல் நமக்கு அழிவைத் தேடுவதாகும்.

பாராட்டுகள்

நாவலர் பெருமானைத் திருவாவடுதுறை ஆதீனம் அவரது இருபத்தேழாவது வயதிலே பாராட்டி மதிப்புச் செய்த பின்புதான் நமது நாட்டினர் விழித்தெழுந்தார்கள். மதுரைத் திருஞான சம்பந்த மடத்தின் ஆதீனகர்த்தர், நாவலர் பெருமானை நோக்கித் ''தாங்களே உண்மைக் குரவர்: நானல்லேன். தங்களுக்கே இந்தச் சிவ சின்னங்கள் தகும். எனக்கில்லை'' என்று கூறித் தமது கழுத்திலணிந்திருந்த உருத்திராட்ச மாலையைக் கழற்றி நாவலர் பெருமானுக்கு அணிந்து பெருமைப்படுத்திய பின்புதான் நமது மக்களுக்குக் கண்கள் திறப்பட்டன. நமது நாட்டுப் பெரியார்களை நாம் நன்கு மதித்தலிலேதான் நமது வாழ்க்கையின் சிறப்பு அடங்கியிருக்கிறது என்பதை நாம் உணருதல் வேண்டும். இதனாலேதான் நமது நாட்டில் காலந்தோறும் பெரியார்களைத் தோற்றுவிக்கின்ற சூழ்நிலையுண்டாகும். பெரியார்கள் அவதாரஞ் செய்கின்ற பெரும் பேறும் நமது நாட்டுக்கு வந்து வாய்க்கும்.

நாவலர் பெருமான் சைவசித்தாந்தக் கொள்கைக்காக வாழ்ந்தவர். கல்வியைப் பார்க்கினும் அறிவும் அறிவைப் பார்க்கினும் ஒழுக்கமும் சிறந்தனவாகும். நமது சமய குரவர்களும் சந்தான குரவர்களும், தமது புனிதமான சைவ ஒழுக்கத்தினாலே தமது

கல்வியையும் அறிவையும் பயன்படச் செய்தோராவர். அறிவை மாத்திரம் மதிக்கும் பரம்பரையை நாம் சேர்ந்தவர்களல்லோம். ஒழுக்கத்தினாலே புனிதம் பெற்ற அறிவை மதிக்கும் பரம்பரையிலே நாம் பிறந்திருப்பதை உணர்தல் வேண்டும். இன்று நாட்டிலே பல வேறுபட்ட கொள்கைகளைப் பற்றிப் பேசுவோர் இருக்கின்றார்கள். நான் பொதுவுடைமை வாதி, நான் சனநாயகவாதி, நான் சைவ சித்தாந்தி, நான் வேதாந்தி, நான் வகுப்புவாதி, நான் சமத்துவவாதி என்றெல்லாம் பேசுவோரைக் காண்கின்றோம். இவர்களுள் பலர் ஒரு கொள்கையையும் பற்றி வாழ்பவர்களல்லர். ஒரு கொள்கையைச் சொல்வதில் அவர்களுக்கு ஒருவித திருப்தி, அல்லது மதிப்பு, இவர்களுள் பலருக்கு இன்றொரு கொள்கை, நாளை வேறொரு கொள்கை. பெயரளவில் மாத்திரம், வாழ்க்கையிலே கடைப்பிடித்து ஒழுகும் வகையிலன்று. கொள்கைக்காக உயிர்வாழாது வாழ்க்கைக்காகக் கொள்கைகளை மாற்றிக் கொள்கின்ற மக்களால் இன்று உலகம் சீர்கேட்டுக்குள்ளாகின்றது. இந்தப் போலித் தலைவர்கள் நாவலர் பெருமானை நோக்கிப் பார்ப்பார்களாக சந்தர்ப்ப வாதத்தைக் கைவிடுவார்களாக.

இனிய வசனநடை

வசன நடையின் தந்தை என்று நாவலர் பெருமானைக் கூறுதல் தகும். அவரது தமிழ் நடை ஆற்றொழுக்குப் போன்றது. தமிழ் மரபு கடவாதது, தெளிவும் இனிமையும் பொருட் செறிவும் உடையது. குறியீடுகளை முதல் முதல் வசனநடையிற் புகுத்திய முதலுரிமையும் நாவலர் பெருமானுக்கே உரியதாகும். நாவலர் பெருமானுக்குப் பெரிய புராணத்திலே பெரியதோர் பற்றுதலுண்டு. அதிலே பரிபூரண நம்பிக்கையுமுண்டு. பெரிய புராணம் வசன மான செய்தியைக் கேளுங்கள். பெரிய புராணச் செய்யுட் பிரதியையும் கொண்டு நாவலர் அச்சுக் கூடத்துக்குப் போவார். அங்கே அச்சுக் கோப்பவர் முன்னின்று செய்யுள்களை வசனமாக்கி நேருக்கு நேரே வாயாற் சொல்வார். அச்சுக் கோப்பவரும் காதாற் கேட்டு அச்சுக்கோப்பார். பின்னர் நாவலர் பிழைதிருத்தஞ் செய்து கொடுப்பார். இவ்வாறு உருவாகியதுதான் பெரிய புராண வசனம். பலமுறை எழுதித் திருத்திக் கடதாசிகளை வெட்டிக் கீறிக் கிழித்துப் பிரதி பண்ணிய தொல்லைகள் பெரிய புராண வசனத்துக்கு ஏற்படவில்லையென்பதை நாமறியும்போது நாவலரின் நுண்மதியும், தெளிந்த அறிவும், திடநெஞ்சம், ஞாபக சக்தியும் எவ்வளவு அதி தீவிரமானவைகள் என்பது நமக்குப் புலனாகின்றது.

நாவலர் பதிப்புகளில் ஒரு தனிச்சிறப்பைக் காணலாம். அங்கே பாடபேதங்கள் கிடையா; பிழைதிருத்த அனுபந்தங்களைக் காணமுடியாது. இத்தகைய பதிப்புத்திறமை நாவலருக்கு அமைந்ததுபோல் வேறறொருவருக்கும் வாய்த்ததில்லை.

கலைத்தொண்டு

12ஆம் வயதிலே ஆங்கிலம் பயிலத்தொடங்கி, 19ஆம் வயதிலே இருமொழித் திறமை பெற்று, வடமொழிப் பயிற்சியும் ஆகம நூலுணர்ச்சியும் நிரம்பி, 24ஆம் வயதிலே பாட

சாலைகள் தாபிக்கும் கலைத்தொண்டில் ஈடுபட்டு, 25ஆம் வயதிலே சமயப் பிரசங்கங்கள் செய்வதிலே வீறு கொண்டெழுந்து வெற்றியும் பெற்று 26ஆம் வயதிலே வண்ணைச் சைவ பிரகாச வித்தியாசாலையை நிறுவித் தமது மாணவர்களை ஆசிரியர்களாக நியமித்து, 27ஆம் வயதிலே திருவாவடுதுறை ஆதீனத்தால் நாவலர் என்னும் சிறப்புப்பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப் பெற்று, அருளொளிக்குள்ளான நாவலர் பெருமான் (57 ஆண்டு கள் இவ்வுலகிலே வாழ்ந்தார்). ஈழநாட்டுக்குச் சிறப்பாகவும் தென் தமிழ் நாட்டுக்குப் பொதுவாகவும் தொண்டு பூண்டு சிறப்படைந்தார். நாவலர் பெருமான் காலத்தாற்பெற்ற கற்பகம் போன்று வேண்டியவற்றையெல்லாம் நமக்கு உபகரித்துத் தமது உடற்பொறையை விட்டு உண்மை ஒளியிற் புகுந்தார். அவர் மறைந்து 76 ஆண்டுகள் கழித்தன. ஆயினும் அவரது நிலைபெற்ற திருத்தொண்டின் பெறுபேறாக நமக்குக் கிடைத்துள்ள நூல்களும், கல்விச் சாலைகளும், பிற தருமத் தாபனங்களும் சைவமும் தமிழுங் கலந்து கமழும் வாசத்தால் நாடு முழுவதையும் புனிதமாக்கி விளங்குகின்றன.

நாவலர் போன்ற ஒரு மகானை நாம் உண்டாக்குதல் முடியாது. உருவாக்குதலும் முடியாது. ஆயினும் நாவலரைப் பின்பற்றி வாழ நம்மால் முடியும். அது நமது கடமையு மாகும். நாவலரது சைவசித்தாந்த ஒளியிலே நமது நாடு மறுமலர்ச்சியடைவதாக.

சைவசமய மறுமலர்ச்சியில் ஆறுமுகநாவலர்

ப. கோபாலகிருஷ்ண ஐயர்

நல்லைநகர் ஆறுமுகநாவலர் (1822 - 1879) மறைந்து 132 ஆண்டுகள் ஆகி விட்டன. இக்காலப் பகுதியில் எமது நாட்டிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் எண்ணரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் சைவசமயம் ஒரு காலகட்டத்தில் மறுமலர்ச்சி பெறுவதற்கு எமது நாட்டிலே அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முக்கிய புருஷர்களில் ஒருவராக நல்லைநகர் நாவலர் விளங்குகிறார் என்ற கருத்து இந்த ஒரு நூற்றாண்டு காலத்திற்கும்மேல் இன்னும் அதிகளவு உறுதி பெற்றுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைவன நாவலர் ஆய்வுகளும் மதிப்பீடுகளும் ஆகும்.

19ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் நம் நாடும் மொழியும் சமயமும் மேலைத் தேசத்தவரின் படையெடுப்புக்களாலும் அவர்கள் புகுத்திய நம் நாட்டிற்கு ஒவ்வாத நாகரிக அம்சங்களாலும் மிக்க வீழ்ச்சியும் தடுமாற்றமும் எய்துவதாயின. இக்கட்டான இந்தச் சூழ்நிலையில்தான் ஆறுமுகநாவலர் 1822ஆம் ஆண்டு தோன்றினார். இவரது அருந்தொண்டால் சைவசம்யம் மறுமலர்ச்சியடைந்தது. பிரிட்டிஸ் அரசினரின் ஆட்சி ஆரம்பித்து சில வருடங்களில் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேலைத் தேசங்களிலிருந்து பல திறத்தினரான கிறிஸ்தவ சங்கத்தினர், பாதிரிமார்களைத் தொகையாக அனுப்பித் தமது மதத்தையும் நாகரிகத்தையும் நம் நாட்டிற் பரப்ப பெரிதும் முயன்று வந்தனர். இவர்கள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றும்பொழுது கையாண்ட உபாயங்கள், வழிவகைகள் பலவாகும். இத்தகையோர் தமது பாரிய சித்தியை நாடியதே அன்றித் தாம் மேற்கொண்ட முறைகள் பழிப்புக்கிடமானவை என்பதை நோக்கினார் இல்லை. இவர்களது முயற்சிகட்கெல்லாம் வேண்டியளவு உதவிகளும் ஒத்தாசைகளும் ஆங்கில அரசிடமிருந்து தாராளமாகக் கிடைத்துவந்தன. பல்வேறு முறைகளை மேற்கொண்டு தமது மதத்தைப் பரப்பிவந்த பாதிரிமார்களை எதிர்த்துப் போராடி சைவ சமயத்தைப் பாதுகாத்து வெற்றி கண்டவர் நாவலர் பெருமான். இத்தகைய செயற்திறனை சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பொருத்தமான முறையில் பின்வரும் வசனங்களினால் பாராட்டுகின்றார்.

''நாவலர் பெருமான் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே, சுருதி எங்கே, சிவாகமங்கள் எங்கே. ஏத்தும் புராணங்கள் எங்கே, பிரசங்கங்கள் எங்கே, ஆத்தனறிவெங்கே'' ஆகிய வசனங்கள் குறிப்பிற்பாலன.

இன்று யாழ்ப்பாணம் சிந்தாந்த சைவத்திற்கும் தூய செந்தமிழிற்கும் பேர்போன பிரதேசமாக மிளர்வது நாவலர் பெருமான் அரிதிற் செய்து முடித்த பெருந்தொண்டினால் ஆகும் எனில் மிகையன்று.

நாவலரின் உண்மையான சமயப்பணி யாது? நாவலரின் கோட்பாடு யாது? எதைச் சாதிக்க முயன்றார்? அதில் அவர் கண்ட வெற்றி யாது? இன்று நாவலரின் தாக்கம் எது? காலத்தை வென்று நிற்கின்ற சமயப்பணியின் அம்சம் எது? என்பன போன்ற வினாக்களுக்கு நாம் விடை காண முற்படுமிடத்து நாவலரின் சமய மறுமலர்ச்சியின் முக்கிய பரிநாமங்களை நாம் மதிப்பிட முடியும்.

நாவலர் ஒரு யுகத்திலே பிறந்து வளர்ந்தவர். இன்னுமொரு யுகத்திலே வாழ்ந்தவர். எனினும் ஒரு யுகத்தை உருவாக்க உழைத்தவர். நிலமானிய அமைப்பு முறையிலே சிறந்து விளங்கிய குடும்பம் ஒன்றிலே இவர் பிறந்து வளர்ந்தார். பழைய கல்வி மரபை ஒட்டியே இவரின் கல்வி வளர்ச்சியடைந்தது. இதனைத் திண்ணைப்பள்ளி கல்வி முறை எனலாம். இன்னாரிடம் பாடம் கேட்டவரென்றுதான் அக்காலத்திலே ஒருவரைப் பாராட்டும் மரபு இருந்தது. அந்த யுகத்திற்கேற்பவே நாவலரின் கல்வி அமைந்தது. அதேசமயம் வேறொரு யுகமும் ஈழத்திலே தோன்றியது. ஆங்கிலேய ஆட்சியின் பயனாகப் புதிய மத்தியதர வகுப்பினர் தோன்றினர். இந்த வகுப்பினரின் எழுச்சி கிறிஸ்தவ சூழ்நிலையில் ஆங்கிலக் கல்விமூலம் - புதுமுறைக் கல்விமூலம் ஏற்பட்டது. இதற்கேற்ப நாவலரும் ஆங்கிலக் கல்வி பெறச் சென்றார். இந்த யுகம் என்ற சூழலில் நாவலரை உருவாக்க அவரது குடும்பத்தினர் முயன்றனர். எனினும் நாவலர் சைவ சமயத்தினருக்கு அக்காலத்தில் ஏற்பட்ட பல்வேறு சோதனைகளால் இந்தப் புதுயுகத்தை விட்டு மற்றொரு புதுயுகத்தைக் காண விழைந்தார். சைவசமயத்தை மறுமலர்ச்சி பெறச் செய்யத்துணிந்தார். ஆங்கிலேயர் தோற்றிவிக்க முயலுகின்ற புதுயுகம் பழமையைக் கழித்து பெருங்கேட்டைக் கொண்டுவரும் என்பதை நாவலர் நன்கு உணர்ந்தார். நாவலர் புதுயுகம் காண முயன்றார் என்பதிலும் பார்க்க பழமைக்கு மெருகு கொடுத்து அதன் மூலம் பழமையை நிலைநாட்டிப் புதுயுகம் காண முயன்றார் என்பதே பொருத்தமாகும். பழமையான சூழலில் தன் கல்வியைத் தொடங்கி புதுமையில் அதனை வளர்த்த நாவலர் கற்றாய்ந்து ஒழுகினார். பிறரையும் கற்கச் செய்தார். ஆய்வு செய்ய வைத்தார். அதன்படி ஒழுக வைத்தார். இதுவே நாவலருக்கு பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தது. இத்தகைய ஆளுமை காரணமாக மேலைத்தேய காலனித்துவ சூழல் காரணமாக ஏற்பட்ட இன்னல்களிலிருந்து சைவசமயம் பண்பாடு ஆகியவற்றை மீட்டெடுக்க அவர் பெற்ற ஆங்கிலக் கல்வி மற்றும் சமகால சமூகப் பிரச்சினைகளும் அவருக்கு உதவியமை குறிப்பிடற்பாலது. சைவசமய மறுமலர்ச்சியில் நாவலர் பற்றி நாம் சிந்திப்பதற்கு அனுசரணையாக 19ஆம் நூற்றாண்டு ஆரம்பகால யாழ்ப்பாணச் சமய நிலை பற்றி சற்று விளக்குவதும் இங்கு அவசியமாகும்.

சேர் றொபேட் பிறவுண்றிக் 1812 - 1822 என்னும் தேசாதிபதி இலங்கையை ஆண்ட காலத்தில் கிறிஸ்தவசமயத் தொண்டர்கள் பெருமளவு வரக்கூடிய சூழ்நிலை உருவாகியது. இத்தேசாதிபதி மக்களின் கல்வியையும் ஒழுக்கத்தையும் ஓங்கச் செய்வதற்கு சமய நிறுவனங்கள் இன்றியமையாத சாதனங்களென உணர்ந்தார். அவ்வுணர்வின் விளைவாக பப்றிஸ்ட்டு மிஷன், வெஸ்லியின் மிஷன், அமெரிக்கன் மிஷன் ஆகிய நிறுவனங்களிலிருந்து தொண்டர்கள் முறையே 1811, 1812, 1815ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வந்து தத்தம் சமயப் பணியினைத் தொடங்கினர். தமது சமயப் பணியினை புதியதாகத் தொடங்கியதால் முதியோரைவிட இளையோரிடையே செல்வாக்குப் பெறுவதையே தமது குறிக்கோள் எனக் கொண்டு செயற்படலாயின. சுதேசிகளின் கல்வி முறைகளில் குறைபாடுகள் நிலவின. போதிய வசதிகளின்றி இன்னலுற்றனர். இந்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்களின் கல்வியின் பொருட்டு பாடசாலைகளை நிறுவி அவற்றின் மூலம் தமது சமயத்தைப் பரப்ப முயன்றனர். இவர்களது முயற்சியினால் யாழ்ப்பாணத்தில் பல பள்ளிக்கூடங்கள் எழுந்தன. இவை நவீன கட்டடங்களைக் கொண்டனவாயும் நவீன பாடத்திட்டத்தினைக் கொண்டனவாயும் விளங்கின. மேனாட்டிலிருந்து அச்சியந்திரங்கள் கொண்டுவரப்பட்டு பல நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. புதிய கட்டடங்களும் பாடநூல்களும் தளபாடங்களும் சுதேசிகளைக் கவரத் தவறவில்லை. அவர்கள் ஆர்வத்துடன் தங்கள் பிள்ளைகளை இப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பத் தலைப்பட்டனர். இப்பள்ளிக்கூடங்களில் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் கிறிஸ்தவரே. கிறிஸ்தவ சமய நூல்கள் அப்பாடசாலைப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றன. பிள்ளைகள் எச்சமயத்தவரெனினும் விவிலியம் முதலிய கிறிஸ்தவ இலக்கியங்களைக் கற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சைவப் பிள்ளைகள் விபூதி முதலிய சிவசின்னங்கள் இன்றியும் தம் தேவார திருவாசகம் முதலிய சமய இலக்கியங்களைக் கற்கும் வாய்ப்பின்றியும் இப்பள்ளிக்கூடங்களுக்குச் சென்றுவரும் நிலை ஏற்பட்டது. இம்மாணவர்களது உள்ளத்தினை மாற்றுவதில் கிறிஸ்தவ ஆசிரியர்கள் பெரிதும் முயன்றனர்.

இச்சமயத் தொண்டர்கள் தமது குறிக்கோளாகிய சமய மாற்றத்திற்கு அரசாங்கம் நடத்தும் பாடசாலைகள் இடையூறு என உணர்ந்து அப்பள்ளிகளை மூடப்பண்ணி தம் பாடசாலைகளை மாத்திரம் நடத்தின் சுதேசிகளைத் தம்வசப்படுத்தலாமென உணர்ந்தனர். இந்நிலையை நாவலர் வன்மையாகக் கண்டித்ததிலிருந்து அவரது எதிர்ப்பை நாம் உணரலாம்.

> ''சில காலத்திற்கு முன்பே (1843) கவர்மெண்டார் இத்தேசத்தில் சில இங்கிலிசுப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்துச் சில வருடம் நடத்தினார்கள். அவைகளிலே கிறித்துசமய புத்தகமொன்றும் படிப்பிக்கப்படவில்லை. அங்கே சைவசமயப் பிள்ளைகள் எல்லோரும் விபூதி தரித்துக்கொண்டே படித்து வந்தார்கள். அதைக் கண்ட பாதிரிமார்கள் கவர்மெண்டுப் பள்ளிக்கூடங்கள் நிலைபெற்றால் தங்கள் கருத்து வாய்க்காது என்று நினைத்து இங்கிருந்த சில துரைமாரைத் தங்கள் வசப்படுத்தி கவர்மெண்டுக்கு வேறு நியாயம் காட்டி எழுதுவித்து அப்பள்ளிக் கூடங்களை எடுப்பித்துவிட்டு அவைகளுக்குக் கவர்மெண்டால்

செலவளிக்கும் பணத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களுக்கு ஆக்குவித்துக்கொண்டு அந்தியாகிய தங்கள் கருத்தையே நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். கவர்மெண்டும் பொருளுதவியைப் பெறும் பள்ளிக்கூடங்களிலே விபூதியை அழிக்கும் பொருட்டும் சமய நூல்களைப் படிப்பிக்கும் பொருட்டும் சமயப் பிரசங்கத்தைக் கேட்கவரும் பிள்ளைகளை வலாற்காரம் பண்ணுதல் கவர்மெண்டாருடைய கருத்துக்கு முழு விரோதமாம்.''

இலங்கை அரசினர் வில்லியம் கோல்புறூக், கமெறன் இருவரைக் கொண்ட கொமிஷன் 1831ஆம் ஆண்டு சமர்ப்பித்த அறிக்கையில் அரசினர் நடத்தும் தாய்மொழிப் பாட சாலைகள் மூடப்படல் வேண்டுமென சிபார்சு செய்ததன் விளைவாக 1843ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் அரசினர் நடத்தி வந்த தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டன. இக்காலம் தொட்டு நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை (1848) தொடங்கும் வரையும் சைவப்பிள்ளைகள் கிறிஸ்தவ சமய இயக்கத்தினர் நடத்தி வந்த பாடசாலைகளுக்கே செல்லும் இக்கட்டான நிலை ஏற்பட்டது. கிறிஸ்தவ பாடசாலைகளில் போதிக்கப்படும் ஆங்கில கல்வி மோகம் சைவசமயத்தவர் பலரைத் தம் சமயத்தை விடச்செய்தது.

கிறிஸ்தவ மதப் பரப்பும் இயக்கத்தினர் மதம் பரப்பும் முயற்சிகள் மேற்கொண்ட வெறுப்பின் விளைவாகப் பிறந்தவைதான் பல கல்வி நிலையங்களும் சமய சீர்திருத்த நடவடிக்கைகளும் ஆகும். தம் சமயத்திற்கு ஏற்பட்ட இன்னல்களை அகற்றி அதனை மறுமலர்ச்சியடையவும் சீர்பட வளர்க்கவும் வேண்டுமென்ற பேரார்வமே நாவலரை பின்னின்று இயக்கியது என அறிஞர் கருதுவர். அவரிடமிருந்த அளவிறந்த சமயப்பற்றே இதற்குக் காரணமாகும்.

சைவர்களது பண்பாடு கோயிலையே நீண்டகாலமாக பெருமளவு சார்ந்திருந்தது. அதனால் திருக்கோயில் பண்பாடு மறுமலர்ச்சி பெறச்செய்யும் நோக்கத்தையே நாவலர் கொண்டிருந்தார். நாவலர் காலத்தில் கோயில்கள் குருக்கள்மார்களையும் சைவ மக்களையும் ஆலய அறங்காவலர்களையும் சார்ந்தே இருந்தன. கோயில் சமய கைங்கரியங்களில் ஈடுபடுபவர்கள் ஒழுக்க சீலர்களாகவும் சமய உணர்வு மிக்கவர்களாயும் கடமை உணர் வுடையவர்களாயும் சமய அறிவுடையவர்களாயும் மக்களால் மதிக்கப்படத் தக்கவர் களாகவும் விளங்கினாலன்றி சமயம் சிறப்பாக விளங்க முடியாது என்பதில் நாவலர் உறுதியாக இருந்தார்.

நாம் மேற்குறிப்பிட்டவாறு சமயம் இன்னலுற்ற காலத்தில் அதன் நிலைக்களனாக விளங்கிய கோயில் சீரழிந்தும் செம்மையிழந்தும் கிறிஸ்தவர்களது கேலிக்கிடமாய்க் கிடந்தன. குருக்கள்மாரின் கிரியை சார்ந்த அறியாமை நீங்க வேண்டுமெனவும் கோயில் பரிபாலகர்கள் ஒழுக்கசீலர்களாக மிளிர வேண்டுமெனவும் சைவப்பெருமக்கள் சிறந்த சமய அறிவுடையவராகத் திகழ வேண்டுமென விரும்பிய நாவலர் இம் முத்திறத்தாரிடையே நிலவிய குறைகளைக் களையும் நோக்கில் கண்டிக்கவும் தவறவில்லை.

கோயில்கள் ஆகம முறைப்படி அமைய வேண்டுமென்றும் அங்கு வேத பாராயணமும் தேவார திருவாசக பாராயணமும் சைவப்பிரசங்கங்களும் நிகழ வேண்டும் என்றும் நாவலர் வற்புறுத்தினார். சமுதாய வாழ்வினை ஆற்றுப்படுத்தும் கோயில்களிலே பொதுப் பெண்கள் நடனம், வாணவிளையாட்டு, சிற்றின்பப் பாடல்கள், உயிர்ப்பலி போன்றவை இடம்பெற்றதை நாவலர் பெரிதும் கண்டித்தார். திருவிழாக் காலங்களில் ஒழுக்கச் சீர்கேடுகள் தவிர்க்கப்படுவதை நாவலர் விரும்பினார். கோயில் ஒழுங்கு அனைவராலும் உறுதியாகப் பேணப்படுவதை நாவலர் விரும்பினார். சுருங்கக் கூறின் சமய நம்பிக்கைக்கு முதன்மை தராத விடயங்களை நாவலர் சீர்திருத்த முனைந்தார். பிற மதத்தவரின் தாக்குதல்களினால் சிதைவடைந்து காணப்பட்ட கோயில்களைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமெனவும் நாவலர் எடுத்துக் கூறினார். தமிழகத்திலும் இப்பிரசாரத்தை மேற்கொள்ள அவர் தவறவில்லை. சைவசாஸ்திர பிரமாணங்களைக் காட்டி அவர் திருப்பணியின் மேன்மை யையும் பயன்களையும் பிரசங்கங்களின் மூலம் எடுத்துக் கூறினார். பொதுமக்களுக்கு சைவசமய உண்மைகளை எடுத்துரைக்கும் சைவப் பிரகாசர் உருவாக வேண்டுமென நாவலர் வற்புறுத்தினார்.

சைவசமயத்தினர் மதம் மாறுதலை நாவலர் கடிந்தார். சம்பளம், சிபார்சு, பொருள், உத்தியோகம் முதலியவற்றின் பொருட்டு மதம் மாறியவர்களை நாவலர் எதிர்த்ததன் மூலம் சமயத்தின் பாதுகாவலனாகத் திகழ்ந்தார். புறச்சமய பரவலைத் தடுக்க வேண்டியது அவசியம் என உணரப்பட்ட காலத்தில் சமய ஒழுக்கச் சிறப்புக்கு நாவலர் முதன்மை யளித்தார்.

ஒருவரது எழுத்திலும் நடையிலும் அவரது ஆளுமை வெளிப்படுகின்றது. அவர் எவ்வாறு சிந்தனை செய்கிறாரோ? எவ்வாறு உணர்கிறாரோ? அவ்வாறே எழுதுகின்றார். அவரது சிந்தனையில் தெளிவும் வரையறையும் இருந்தால் அவருடைய எழுத்தில் இப்பண்புகள் காணப்படும்.

''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்'' என்ற பாரதியார் கூற்றும் ''உள்ளத்தின் குரலே ஒருவரின் உரைநடை'' என்ற எமர்சனின் (Emerson) கூற்றும் இந்த உண்மையை எடுத்துரைக்கின்றன. ஒருவரது எழுத்து நடை அவரது ஆளுமையின் வெளிப்பாடேயாகும்.

நாவலர் உரைநடை நூல்கள் பலவற்றை சமய விரிவாக்கத்திற்காக எழுதித் தந்துள்ளார். சிறுவருக்கும் பொதுமக்களுக்கும் கற்றோருக்குமாக அவர் எழுதிய நூல்களையெல்லாம் ஓர் ஒழுங்கில் வைத்து ஆராய்ந்தால் அவரது ஆளுமையை நாம் உணரலாம்.

நாவலர் வாழ்க்கையின் இலட்சியம் கடவுள் உபாசனையே என்பார். இரண்டாம் பால பாடத்தின் முதல் வாக்கியத்தில் அவரது ஆளுமையின் அடிப்படையை அறிந்து கொள்ளலாம்.

> ''இந்தச் சாகரம் நமக்குக் கிடைத்தது. நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்''.

இந்த வசனம் வேதசாரம், சாத்திரச்சத்து, புராணநிதியம், பெறுபேறு என்று இதன் அருமை பெருமைகளை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பாராட்டுகின்றார். சைவசித்தாந்தத்தின் உயிர்நிலை இந்த வாக்கியத்தில் பொதிந்துள்ள கருத்தாகும். நாவலரின் சொல், செயல் யாவும் சமய இலட்சியத்தையே கொண்டன என்பது இதன் வழி புலப்படுகின்றது. நாவலரது வாழ்க்கைக் குறிக்கோளுக்கு அரண்செய்வன அவர் உறுதியாய்க் கடைப்பிடித்த ஒழுக்கவிதிகள்.

சைவசமய மறுமலர்ச்சியில் நாவலர் தம்மை இணைத்துக் கொள்வதற்கு அனு சரணையாக அமைந்தது அவரது கடமை உணர்ச்சியும் அர்ப்பணிப்புமாகும். நாவலர் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர். இது மக்களுட் சிறந்த சான்றோர் ஒரு சிலருக்கே இயலுமானது. இவர்களாலேயே உலகம் நிலை பெற்றுள்ளது என்று புறநானூறு பேசுகின்றது. இச்சான்றோர் வரிசையைச் சேர்ந்தவர் நாவலர் என்பது அவரது வாக்கிலிருந்து புலனாகின்றது.

> ''நான் இங்கிலிஷிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும் என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சக்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சக்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும் அஃதில்லாமையால் வரும் அவமதிப்பைப் பார்த்தும் உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித்துணை மாத்திரங்கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும் அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடம் ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகம் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்ம தேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்.''

நாவலர் தமது காலச் சூழலால் உருவானவர். சூழ்நிலை அவரைக் கடமை வீரனாகத் திகழத் தூண்டிவிட்டது.

மேனாட்டுக் கல்வி, புதிய அறிவினைப் பரப்பி வரலாற்று அறிவும் தேசிய உணர்வும் சொந்தப் பண்பாட்டைப் பேணி வளர்க்கும் ஆர்வமும் பெருகக் காலாயிற்று. சுதேச மக்களின் பண்பாட்டிற்குப் பங்கம் விளைவித்த அம்சங்களை அகற்றி, மேனாட்டுக் கல்வி முறையில் நல்ல அம்சங்களைக் கைக்கொண்டு கல்விச் சீர்திருத்த முயற்சிகளை மேற் கொண்டு அதன்வழி சமய மறுமலர்ச்சி காண விழைந்தவர் நாவலர்.

நாவலரது இத்தகைய அரிய சாதனையை கைலாசபதி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். நாவலர் வகுத்த புதுப்பாதை பற்றிய அவரது குறிப்பில்,

> ''தனது காலத்திற்கேற்றவை எவை என்பதனையும் இன்றியமையாதன எவை என்பதனை யும் சிந்தித்துத் தெளிந்து அவற்றைச் செயற்படுத்தியமையே நாவலரின் சிறப்பிற்கும் தனித்துவத்திற்கும் அடிப்படையாகும். அதாவது நாவலரின் தற்கால உணர்வே அவரை

அவரது சமகாலத்தவர் பலரினின்று வேறுபடுத்தி தனிச்சிறப்பு உடையவராய்க் காட்டுகின்றது. நாவலர் வரலாற்றுப் பெருமகன் 19ஆம் நூற்றாண்டிலே தமிழ்ச் சமுதாயத்திற்கு அவசியமாயிருந்த சில கருமங்களை நிறைவேற்றியவர். நன்கு ஆற்றப்பட்ட அக்கருமங்கள் பிறருக்கு ஆதர்சமாக அமைந்தன. அவையே புதுப்பாதைக் காட்டும் புதுப்பணிகளாயும் அமைந்தன.''

என்ற மதிப்பீடு அவர் சமயத்தை மறுமலர்ச்சி பெறச் செய்வதில் வல்லவராக விளங்கியதைச் சுட்டி நிற்கின்றது.

நாவலர் தாம் போன இடங்களிலெல்லாம் லோகோபகாரமான சைவப்பிரசங்கங்கள் செய்து வந்தமை அவரது சமய மறுமலர்ச்சிச் செயற்பாட்டில் மற்றொரு சிறப்பம்சமாகும். தமிழிலே கட்டுரை என்பது நாவலரால் நல்ல முறையில் எழுதப்பட்டது. சிறந்த உரை நடையைக் கையாண்டவர். சைவ ஆங்கிலப் பாடசாலையை முதன்முதலில் ஆரம்பித்தவர். பிற மத தூஷணங்களுக்குத் தகுந்த பரிகாரம் கண்டவர். சமய நூல்களைப் பதிப்பித்தவர். இத்தகைய நற்பணிகளால் நாவலர் தனது காலத்தில் பழைமையில் அமிழ்ந்து போகாமலும் புதுமையில் அடிபட்டுப் போகாமையிலும் இரண்டையும் உரியவாறு இனங்கண்டு தமக்கென ஒரு வெற்றிப் பாதையை வகுத்தமையால் பலராலும் நன்கு மதித்துப் போற்றப் பட்டவர். ''சென்னை முதல் ஈழ மீறாகவுள்ள இத்தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர்'' என நாவலரைத் தத்துவ விசாரணை பத்திராதிபர் வர்ணித்துள்ளமை வெறும் புகழ்ச்சியன்றி முற்றிலும் உண்மையே.

சைவசமயத்தை மறுமலர்ச்சி பெறச் செய்த நாவலரின் சிறப்பை கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார் ''நாவலர் சைவக்காவலர்'' என்ற கவிதை மூலம் நாம் உவந்து நயக்கும் வண்ணம் எடுத்துக் கூறுகின்றார்.

'தவத்திரு நாவலர் தமிழ்மணிப் புரவலர்
சிவத்திரு நாவலர் சைவக் காவலர்
உள்ளந் தோறும் உருக்கொண்டுள்ளார்
தமிழும் சைவமும் தழைத்திடு மட்டும்
ஆறுமுக நாவலர் அமரராய் வாழ்வார்.
கச்சியப்பரின் கந்தபுராணமும்
சேக்கி ழாரின் செவ்விய வாக்கும்
விளங்கு மட்டும் விளங்கும் எங்கள்
நாவலர் பெருமை நவிலப் போமோ?
.....
எத்தனை எத்தனை இயற்பணி செய்தார்
சைவத்திற்குச் சிகரம் போன்றார்
தமிழுக் கரியணை தந்தார்; தமிழர்
மரபு வாழ மாண்பணி புரிந்தார்.
காலக் கேட்டைக் கலக்கிடத் தாக்கி
ஆலயத் திருத்தம் அஞ்சா தியற்றினார்

ஆகம விதிப்படி அதன் வழிபாடு
நடக்க வூக்கிய நாவலர் பெருமான்
திருக்குறள் வழியே தீந்தமிழ் மக்கள்
ஒழுகி உயர்நிலை ஓங்கிடச் செய்தார்
உலகெல்லாம் அவரிசை ஓங்குக நீடே
நாவலர் பெருமை நமக்கே பெருமை
நாவலர் வழியே நடந்துய் வோமே.

நாவலரது அரிய தன்னலமற்ற பணிகளால் சைவசமயம் மறுமலர்ச்சி பெற்றது. நாவலர் பெருமானால் சைவசமூகம் பெருமையுற்றது. அவர் தோன்றிய காலம் யாழ்ப்பாண மக்கள் தமது தனித்துவமிழந்து அறிவு மயங்கி அந்நிய ஆட்சிக்கும் அந்நிய மொழிக்கும் வேற்று மத்திற்கும் ஈடுபாடுகாட்டிய காலம். இந்நிலையிலேயே நாவலர் சைவத்தின் காவலனாக உறுதியுடன் செயற்பட்டார். சைவத்தையும் தமிழையும் மறுமலர்ச்சிப் பாதையில் வழிநடத்தினார். இவரது மகத்தான தூய பணியினால் மக்கள் மத்தியில் நன்மாற்றம் ஏற்படலாயிற்று. எழுத்து மூலமாகவும் பேச்சு மூலமாகவும் அவர் வாழ்ந்து காட்டிய புனித வாழ்வின் மூலமாகவும் சைவம் புத்துயிர் பெற்றது. சைவர்கள் சைவவாழ்வு வாழத் தலைப்பட்டனர். திருக்கோயில்களில் வழிபாடுகள் மேலோங்கின. விரத அனுட்டாங்கள் பின்பற்றப்பட்டன. திருநீறு முதலிய சிவசின்னங்கள் போற்றப்பட்டன. புராணங்கள் இதிகாசங்கள் திருமுறைகள் சைவமக்களால் போற்றிப் படிக்கப்பட்டன. ஆலயங்களில் பிரசங்கம், புராணபடனம் என்பவை தொடரலாயின. இதற்கெல்லாம் உதவும் வண்ணம் பல நூல்களை எழுதியும் உரை வகுத்தும் வெளியிட்டார். சைவவினாவிடை, பாலபாடம், பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், கந்தபுராண வசனம் என்பவை சைவமக்களுக்குப் பெரும் பயன் நல்கின. நாவலரைத் தொடர்ந்து வந்த ஞானபரம்பரை யினரும் அவர் காட்டிய வழியில் சமயப் பணியாற்றி சைவம் மேலோங்கப் பணியாற்றினர். நாவலரது பணிகளை முன்னெடுக்க உருவாக்கிய மன்றங்களும் சபைகளும் தொடர்ந்தும் அவர் நினைவாக மகாநாடுகள் நடத்தியும் நூற்றாண்டு விழா கொண்டாடியும் நாவலர் சிறப்பு மலர்கள் வெளியிட்டும் சிறப்புச் செய்தமையால் இவை ஈழத்துச் சைவமக்களுக்கு ஒரு புத்துணர்ச்சியைக் கொடுத்தன எனில் மிகையில்லை. எம்மவர்கள் மொழி அபிமானமும் மத அபிமானமும் உடையோராய் வாழ வழிகாட்டினார் நாவலர். அவர் கந்தபுராணச் சிந்தனை வழி மேற்கொண்ட சைவ மறுமலர்ச்சிக்கான பணிகள் யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசாரம் மேலோங்க வழிவகுத்தன. அவரது அர்ப்பணிப்பு மிக்க சமயப் பணிகளுக்குக் கிடைத்த உன்னதமான வெற்றியே கந்தபுராண கலாசாரம் என்பது அனைவராலும் உணரப்பட வேண்டிய உண்மையாகும்.

உசாத்துணை

1. ஆறுமுகநாவலர், கந்தபுராண வசனம், (1981), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, கொழும்பு, (மறுபதிப்பு), சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம்.
2. ஆறுமுகநாவலர், நான்காம் பால பாடம்.

3. ஆறுமுகநாவலர், பிரபந்தத் திரட்டு, (இரண்டு பாகங்கள்) தொ.ஆ.த. கைலாசபிள்ளை, 3ஆம் பதிப்பு மீள் பிரசுரம், (1996). இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

4. சி. கணபதிப்பிள்ளை, நாவலர் (1969), யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வெளியீடு, சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.

5. கனகரத்தின உபாத்தியாயர், வே., ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், 2ஆம் பதிப்பு (1969), யாழ்ப்பாணம் நாவலர் நூற்றாண்டு விழாச்சபையினர் வெளியீடு, திருமகள் அச்சகம், சுன்னாகம்.

6. த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், (1955), 4ஆம் பதிப்பு, வித்தியாநுபாலயந்திரசாலை.

7. சுத்தானந்த பாரதியார், நாவலர் பெருமான், (1948), புதுச்சேரி புதுயுக நிலைய வெளியீடு, ஸ்ரீ அரவிந்தா ரஸ்ரம அச்சுக்கூடம், புதுச்சேரி.

8. தனஞ்செயராசசிங்கம், ச., நாவலர் பணிகள், (1969), பேராதனைப் பல்கலைக்கழகம்.

9. நாவலர் நூற்றாண்டு மலர், (1979), (பதி. ஆசி. க. கைலாசபதி) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை வெளியீடு, கொழும்பு, திருமகள் அச்சகம், சுன்னாகம்.

10. நாவலர் குரல், (1986), குருபூசை மலர், ஸ்ரீலஸ்ரீ நாவலர் பணிமன்றம், திருநெல்வேலி, திருமகள் அச்சகம், சுன்னாகம்.

11. நாவலர் மாநாடு - விழா மலர், (1969), நல்லூர் யாழ்ப்பாணம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, கொழும்பு, மெய்கண்டான் அச்சகம், கொழும்பு.

12. மயாண்டி பாரதி, கா., நாவலர் பெருமான், (1955), பழனியப்பர் பிரதர்ஸ், சென்னை.

'பிரித்தானியர் ஆட்சியும் நவீன மயமாக்கமும்',
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு, 2012, பக். 461 - 476.

தமிழர் சமயப் பாரம்பரியத்தில் நாவலர்

மௌ. சித்திரலேகா

சமயம் சமூகப் பாரம்பரியத்தின் முக்கிய கூறாகும். சமூக வரலாற்றிலும் சமயம், முக்கிய பங்கு கொண்டதாக விளங்குகிறது. இவ்வகையில் சமயம் தனி மனித, சமூக நடவடிக்கை களை நெறிப்படுத்தியும் இந்நடவடிக்கைகளால் நெறிப்படுத்தப்பட்டும் வந்துள்ளதைக் கண்டுணரமுடியும். பெரும் சமய இயக்கங்களும் சமய தத்துவங்களும் சமூகத்தில் நடைபெறும் முக்கிய மாற்றங்களின் தத்துவார்த்த வடிவங்களாகக் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் பல்லவராட்சிக் காலத்தில் நிகழ்ந்த பக்தியியக்கம் நிலவுடமையின் எழுச்சியுடன் இணைந்திருந்தது. வட இந்தியாவில் பிராமணிய மேலாதிக்கத்தை எதிர்த்தோரின் தத்துவ வடிவமாகவே பௌத்தம் தோன்றியது. கிறித்தவ புரொட்டஸ்தாந்து மதத்திற்கும் ஐரோப்பாவின் நிலமானியச் சிதைவிற்கும் தொடர்பிருந்தது. இவ்வுதாரணங்கள் சமயத்தின் சமூகவியலைச் சுட்டப் போதுமானவை. சமயத்தில் காணப்படும் வளர்ச்சியும் மாறுதலும் அடையும் நெகிழ்ச்சியால்தான் அது பாரம்பரியத்தில் தன்னை மீண்டும் மீண்டும் நிலைநிறுத்தும் வலுவையும் பெறுகிறது.

தமிழர் சமயப் பாரம்பரியம் நீண்டதோர் வரலாறுடையது. புராதன இயற்கைப் பொருள் வழிபாட்டிலிருந்து இன்றைய சாயிபாபா வணக்கம்வரை இதனுள் அடங்கும். எனினும், இக்கட்டுரையில் தேவையும் பொருத்தமும் கருதி தமிழர் சமயப் பாரம்பரியத்தின் ஒரு பிரிவில் - அதாவது அதிகாரபூர்வமான சமயப் பெரும் பாரம்பரியத்தின் பின்னணியில் நாவலரை மதிப்பிட முற்படுகிறேன். இவ்விடத்தில் சமயப் பாரம்பரியத்தின் இருபோக்கு களைக் குறிப்பிடுதல் தகும். நீண்ட வரலாறுடைய சமூகங்களின் சமயம், பண்பாடு ஆகியவற்றில் இரு போக்குகள் செயற்பட்டிருப்பதைக் காணலாம். ஒன்று உயர் சமூகத்தினர் சார்ந்தது, அதிகாரச் சார்பானது. மற்றது சமூகத்தில் பொதுசனமட்டம் சார்பானது, ஜனரஞ்ச கமானது. இதனையே சமூகவியலாளர் உயர் பாரம்பரியம், உப பாரம்பரியம், பெரும் பாரம்பரியம், சிறு பாரம்பரியம் முதலிய தொடர்களால் அழைப்பர். இத்தன்மை பற்றிப் பேராசிரியர் ஜோர்ஜ்தொம்சன் பின்வருமாறு கூறுவர்:

> சமய வரலாறு நெடுகிலும் இரு போக்குகளைக் காண்கிறோம். ஒன்று அதிகாரச் சார்பானது. இன்னொன்று, மக்களால் பரவலாகப் பின்பற்றப்படும், ஜனரஞ்சகமானது. அதிகாரச் சார்பான சமயத்தை அரசு கட்டுப்படுத்தி, தன் வர்க்கச் சுரண்டலை நியாயப் படுத்துவதற்கு ஒரு கவசமாகப் பயன்படுத்தும். ஜனசரஞ்சகமான சமயப் பிரிவு மக்க ளிடையே தன்னிச்சையாக எழுச்சிபெற்று, மக்களுக்கு ஆறுதல் வழங்கி, ஆளும் வர்க்கச் சுரண்டலை எதிர்த்துக் குரல் எழுப்பும். வர்க்கப் போராட்டம் கூர்மையடையும்போது, இத்தகைய இரு போக்குகளும் ஒன்றையொன்று தாக்கிக்கொள்கின்றன. ஒரு புதிய வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியவுடனே அதனோடு இணைந்த சமயப் பிரிவு அதிகாரச் சார்பானதாக மாறித் தன் ஜனரஞ்சகமான குணாம்சத்தை இழந்து விடுகிறது.[1]

தமிழர் சமயப் பாரம்பரியமும் இப்போக்கிற்கு விதிவிலக்கன்று.

தமிழர் சமயப் பாரம்பரியத்தில் முக்கியமான, முனைப்பான மூன்று காலகட்டங்களைக் காணலாம். ஒன்று கி.பி. 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளை ஒட்டியது. பக்தியியக்கம் எனக் கூறப்படுவது. அடுத்தது, சைவசித்தாந்தம் சாத்திரவடிவம் பெற்ற காலகட்டம். 13ஆம் நூற்றாண்டுக்குரியது. மூன்றாவது, மேற்கைரோப்பிய சமய, கலாசாரப் பாதிப்பிற்கும் தமிழ் சமூகத்தில் ஏற்பட்ட புதிய நிலைமைகட்கும் மாறுதல்களுக்கும் சைவம் உட்பட்ட 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகள்.[2]

பக்தியியக்கத்தின் முக்கிய தன்மை குறித்துப் பேராசிரியர் வானமாமலை பின்வருமாறு கூறுவார்:

> நமசிவாயம் என்ற சொல்லே இகபரசெல்வங்களை அளிக்குமென்றது. மக்கள் புரிந்து கொள்ள இது எளிதாயிருந்தது. சிவன் எவரும் வழிபடக் கூடிய பொதுக் கடவுளாக இருந்தார். பிறவிப் பெருங்கடலை நீந்த பிரபுக்களின் தர்மபோதனையோ, சமயக்குரவர் குரத்தியரது துணையோ தேவையில்லை. சைவம் தழைக்கப் பணிசெய்த முதன் நாயன் மார்கள் நாடு முழுவதும் அலைந்து மக்களிடையே வழங்கிவந்த இனிய பண்புகளில் சிவனை மனிதருக்கு எட்டும் தந்தையாகத் தாயாக வருணித்துப் பாடினார்கள். அறிவைப் பின்தள்ளி உணர்ச்சியை ஆழமாக்கிப் பக்தி வெள்ளத்தில் நாட்டை மூழ்கடித்தனர்.[3]

அறிவைப் பின்தள்ளி உணர்ச்சியை ஆழமாக்கியமை சமயத்தை மனித உணர்ச்சி தொடர்பானதாக ஆக்கியது. இறை நம்பிக்கை சமய ஒழுக்கம் ஆகியவற்றை மனித அனுபவம் சம்பந்தமானதாய் ஆக்கிய பக்தியியக்கம், முன்பு தமிழ்நாட்டில் வலிமை பெற்றிருந்த பௌத்த சமண சமயங்களின் அறிவியற் கோட்பாடுகளுக்கு எதிர்மாறாக அமைந்தது. சமயத்தைத் தத்துவரூபமாகவும் சமய ஒழுகலாற்றைக் கட்டுப்பாடான நடைமுறைகளின் தொகுதியாகவும் கண்ட மக்களுக்கு இது ஆறுதலளித்தது. இவ்வகையில் சமணத்தின் பிடியிலிருந்து தமிழ்நாட்டை விடுவிக்கும் பெருங் கைங்கரியத்தைப் பக்தியியக்கம் செய்தது.

இக் கட்டுரையின் முற்பகுதியில் பெரும் சமய இயக்கங்கள், சமூகத்தில் நடைபெறும் முக்கிய மாற்றங்களின் தத்துவார்த்த வடிவங்களாக அமைகின்றன எனக் கூறப்பட்டது.

பல்லவர் காலத்துப் பக்தியியக்கம் இதற்கு விதிவிலக்கன்று. உண்மையில் சமணரான வணிகருக்கும் சைவராகவிருந்த நிலவுடைமையாளருக்கும் இடையே ஏற்பட்ட பொருளா தாரப் போட்டியின் மேற்கட்டுமானப் பிரதிபலிப்பாகவே பக்தியியக்கம் தோன்றியது.[4] சமயப் போரில் சைவம் வெற்றி பெற்றபோது வணிகரது அதிகாரமும் செல்வாக்கும் வீழ்ச்சியடைந்தமை உடனிகழ்ச்சியாகும். தமிழ் நாட்டரசர்கள் செல்வாக்குப் பெற்ற சைவ சமயத்தைச் சார்ந்தனர், ஆதரித்தனர். சமண பௌத்த மடங்களின் சொத்துகள் புதிதாகத் தோன்றிய சிவாலயங்களுக்கு மாற்றம் பெற்றன. வேள்விக்குடிச் செப்பேடுகளும், திருநெல்வேலிச் செப்பேடுகளும் களப்பிரர் காலத்தில் அந்தணர்களிடம் இருந்து பறித்துக் கொண்ட நிலங்களை மீண்டும் அவர்களுக்கு உரிமையாக்கியதைக் கூறுகின்றன. மகேந்திரன், மாமல்லன் காலத்துச் சாசனங்கள், காஞ்சி கைலாயநாதர் கோயிலுக்குப் பண்டைச் சமயப் பள்ளிகளின் நிலங்கள் அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றன.

வணிகரான சமணருக்கு எதிராகச் செயற்பட்டபோது சமூகத்திலே பல மட்டங்களில் இருந்து மக்களை ஒருமைப்படுத்தி அவர்களது ஆதரவைப் பெறும் தேவை பக்தியியக்கத்துக்கு இருந்தது. பெரிய புராணம் பாடும் சிவனடியார் அறுபத்து மூவரின் குலவரிசை இதற்குச் சான்றாகும். சமூக சமய நிலைமைகளில் இறுக்கமான வரையறைகளைப் பேணாமல் கூடியளவு நெகிழ்ச்சியைக் கையாண்டமை பக்தி இயக்கத்தின் முக்கிய அம்சமாகும். சமயத்தின் ஆக்கத் தன்மைக்கும் வளர்ச்சிக்கும் இதுவே காரணமாயிற்று.

இது மாத்திரமன்றி இசை, நடனம், ஓவியம், சிற்பம் முதலிய கலைகளும் இக்காலத்தில் புதுமலர்ச்சி பெற்றன. சமணத்தின் கடும் அறவியல் இக்கலைகளின் வளர்ச்சிக்குக் குந்தகமாயிருந்தது. இறைவனை ஆடிப்பாடிப் போற்ற, சைவம் மக்களை அழைத்தபோது இசையும் நடனமும் புனர்ஜன்மம் பெற்றன. இறைவனது திருமேனியழகைச் சித்திரித்த தேவாரங்கள் சிற்பத்துக்கும் ஓவியத்துக்கும் உயிர் கொடுத்தன.

இவற்றைத் தொகுத்து நோக்கும்போது தமிழர் சமயப் பாரம்பரியத்தில் பக்தி இயக்கம் முக்கியமான சமூகக் கடமையுடையதாக விளங்கியதென்பது தெரிகிறது. ஐந்தாம் குரவராக மதிக்கப்பெறும் ஆறுமுகநாவலரைச் சைவப் பாரம்பரியத்தின் பின்னணியில் மதிப்பிடு வதற்கு இவ்விளக்கம் துணைபுரியும்.

சைவப் பாரம்பரியத்தின் இரண்டாவது பிரதான கட்டம், பக்தியியக்கத்தின் தோத்திர முறையிலிருந்து மாறிச் சாத்திர முறைமைக்குச் சைவம் வளர்ந்த கட்டமாகும். ஆனால், பக்தியியக்கம்தான் அதற்குரிய அடிப்படையையும் உருவாக்கியது. தேவார திருவாச கங்களில் காணப்பட்ட இறைவன், ஆன்மா, உலகு பற்றிய கருத்துக்களைத் திரட்டி வளர்த்துக் கட்டிறுக்கமான தத்துவக் கோட்பாடுகளையுடையதாய் சைவசித்தாந்தம் உருப்பெற்றது. சைவசித்தாந்தத்தின் முதனூலான சிவஞானபோதம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுந்தது. இக்காலத்துக்கு முன்னரே சோழப் பெருமன்னர்களாகிய இராச ராசன், இராசேந்திரன் காலத்தில், சோழராச்சியம் தமிழ்நாடு முழுவதையும் ஒரு குடைக்குள் அடக்கிய சோழப் பேரரசாக மாறியது. இன்னோர் வகையிற் சொல்வதானால் பல்லவர்

காலத்தில் மேல்நிலைக்கு வந்த நிலவுடமை வர்க்கத்தின் உறுதியும் நிலைபேறுமுள்ள அரசியல் நிறுவனமாகச் சோழப் பேரரசு அமைந்தது. இந்நிறுவனத்தில் தத்துவார்த்த வடிவமாக உருப்பெற்றது சைவசித்தாந்தம்.[5] இது பதின்மூன்றாம் நூற்றாண்டில் நிலை பெற்றமைக்குப் பின், இதனளவு செல்வாக்கும் அங்கீகாரமும் உறுதியுமுடைய தத்துவமெதுவும் தமிழ்ப் பாரம்பரியத்தில் இடம்பெறவில்லை. இன்றுவரை சைவசித் தாந்தம் உறுதியும் உயர்நிலையும் பெற்றிருப்பதற்குத் தமிழ்ச் சமூக அமைப்பில் தலைகீழ் மாற்றமெதுவும் நேராமை முக்கிய காரணமாகும். எவ்வாறாயினும் சைவ சித்தாந்தம், தமிழர் சமயப் பாரம்பரியத்தில் அறிவார்ந்த - தருக்கம் - சார்ந்த சாத்திர முறைமை ஒன்றை தோற்றுவித்தமை முக்கியமானதாகும்.

சைவசித்தாந்தம் சாத்திர ரீதியாகப் பேணப்பட்டு சமய நிறுவனங்களான மடங்களிலும் ஆதீனங்களிலும் வளர்ந்து வந்தபோதிலும் பக்தியியக்கத்தில் இடம்பெற்ற தோத்திர முறையும் தொடர்ந்து வந்தது. பக்திக் காலத்திற்போல இப்போக்குப் பலம் வாய்ந்ததாக அமையவில்லை. ஆனால், அருணகிரிநாதர், குமாரகுருபரர், பட்டினத்தார், தாயுமானவர் போன்ற அனுபூதிமான்கள் இத்தன்மையையும் காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தினர்.

இத்தகைய ஒரு நிலையிலேதான் தமிழர் சமயப் பாரம்பரியத்தின் மூன்றாவது கட்டம் ஆரம்பிக்கிறது. ஐரோப்பியருடைய ஆதிக்கத்தின் விளைவுகளிலொன்று கிறித்தவ மதப் பரம்பலாகும். கிறித்தவர் மேற்கொண்ட சமய நடவடிக்கைகள் இலங்கையிலும் இந்தியாவிலும் வெவ்வேறளவிலும் வகையிலுமான பாதிப்பை ஏற்படுத்தின. பதினெட் டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஒல்லாந்திலிருந்து கிறித்தவமிசன் தமிழ்நாட்டுக்கு வந்தது. தரங்கம்பாடியில் தனது மிஷனை நிறுவி திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கிளைகளை அமைத்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமெரிக்கமிசன் தமிழ்நாட்டிற்குச் சென்றது. மதுரை, திண்டுக்கல், திருபுவனம், சிவகங்கை, திருமங்கலம் முதலிய பல்வேறு இடங்களிலும் இம் மிசனரியின் மதப் பிரசாரப் பணி நடைபெற்றது. எனினும், தமிழ் நாட்டில் இடம்பெற்ற கிறித்தவமிசன் நடவடிக்கைகள் இலங்கையிற் போன்று அங்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த வில்லை.

இலங்கையில் நிலைமைவேறு. இலங்கையில் பிரித்தானியர் புகுத்திய புதிய பொருளாதார அமைப்பு பாரம்பரிய நிலவுடமைச் சமூக அமைப்பில் சிதைவினை ஏற்படுத்தியது. இச்சிதைவும் மாற்றமும் பரம்பரையாகச் சமூகத்தில் உயர்நிலை பெற்று இருந்தோரையும் நிலை தடுமாறச் செய்தது. யாழ்ப்பாணச் சைவர்களைப் பொறுத்தவரை இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1840ஆம் ஆண்டுகளிலிருந்த இலங்கையின் கல்வித் துறையில் கிறித்தவ மிசனரியினரே ஆதிக்கம் வகித்தனர். உயர்கல்வி நிலையங்கள் அவர்கள் பிடியிலேயே இயங்கின. ஆங்கில உயர்கல்வி, அதனால் கிடைக்கும் உத்தியோக வாய்ப்புகள், சமூக அங்கீகாரம் ஆகியவை நிலத்தைச் சார்ந்த தொழில் வசதி அதிகமற்றிருந்த யாழ்ப்பாணத்தவருக்கு உவப்பாயிருந்தன. ஆனால், உயர்கல்வி என்பது மத மாறுதலாகவும் இருந்தது. எனவே, பாதிப்புக்குள்ளானோர் தமிழ்ச் சைவர்களே. மத மாற்றத்தின் அச்சு

றுத்தலை யாழ்ப்பாணத்தவர் மிக உக்கிரமாக எதிர்கொள்ள வேண்டி இருந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தையே ஆறுமுகநாவலரின் (1822 - 1879) சமயப் பணிகள் ஆரம்பமாகின. தமது காலத்தில் தமிழர் சமயப் பாரம்பரியத்திற்கு ஏற்பட்ட இடரினைக் களைந்து சைவ சித்தாந்தத்தை நிலைநிறுத்த நாவலர் முயன்றார். அவ்வாறு நிலைநிறுத்த முயன்றபோது மூன்று வகைகளில் அவர் தமது பணிகளை அமைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அவை, கிறித்தவப் பாதிரிகளின் குற்றச் சாட்டு களுக்குப் பதிலளித்தல், சைவக் கோயில்களிலும் கோயில் நிர்வாகத்தினரிடமும் மலிந்திருந்த குறைபாடுகளைக் கண்டித்தல், சைவசமய வளர்ச்சிக்கு ஏதுவானவற்றைச் செய்தல் ஆகியவையாகும்.

கிறித்தவப் பாதிரிகள் சைவ சமயத்தில் காணப்பட்ட பல தெய்வ வணக்கம், பலியிடுதல், கோயில் திருவிழாக்களில் நடைபெறும் ஒழுக்கக் கேடுகள் என்பவற்றை எடுத்துக்காட்டிக் குறை கூறினர். இக்குறைபாடுகள் பின்னாளில் வந்தவை எனவும் சிவாகமங்களுக்கு விரோதமானவை எனவும் இதனால் சமயத்தில் எத்தகைய குறைபாடும் இல்லை எனவும் ஆறுமுகநாவலர் ஆணித்தரமாக எடுத்துக் காட்டினார். தமது சுப்பிரபோதம் என்னும் பிரசுரத்திலே பின்வருமாறு இதனை விளக்கினார்:

> பாதிரிகள், சண்டை, சலஞ் சாதித்தல், தாசி, சதுர், சங்கீதர், பரஸ்திரி கூட்டம், வாத்ய முழக்கம், வாண விளையாட்டு முதலிய வேடிக்கைகள் யாவும் திருவிழாவில் உண் டென்றும் அவை கந்தருக்கும் காமுகருக்கும் வாய்ப்பென்றும் இகழ்கிறார்கள். நமது சைவாகமங்களிலே ஆலயங்கள் கட்டுமுறைமையும் அவைகளிற் பிரதிட்டை, பூசை முதலியவை செய்யுமுறைமையும், அவைகள் செய்தற்குரிய ஆசாரியர்களது இலக்கணமும், அவைகளில் தரிசனஞ் செய்யு முறைமையும், இவைகளில் வழுவினோர் பெறுந் தண்டமும் விரிவாக உணர்த்தப்படும். இக்காலத்தில் கோயிலதிகாரிகள் பெரும்பான்மையும் சைவாகம உணர்ச்சியும் நல்லொழுக்கமும் சிவபக்தியும் இல்லாதவர்களாயும் சிவத்திர வியாபகாரத்திலும் வியபிசாரத்திலுமே கருத்தைச் செலுத்துவோர்களாக இருத்தலாலும் அவ்வாறே புண்ணிய பாவப் பகுப்புணர்ச்சியின்றிக் கோயில்களில் வெகுசனங்கள் முன் தாங்கள் பெறும் உபசாரத்தையும் தாசிகள் கூட்டம், வாண விளையாட்டு முதலிய வேடிக்கைகளையுமே பொருளென மதித்தலாலும் சில கோயிலதிகாரிகள் பூசை திரு விழாக்களைக் குத்தகை கூறி விற்றலாலும், பொய், களவு, வியபிசாரம், சிசுவதை, வழக்கோரம் பேசல் முதலிய பெரும் பாதகங்களைச் செய்யும் பிராமணர்கள் கோயிலதி காரிகளிடத்தே பொருள் கொடுத்துப் பூசை திருவிழாக்களையும் அவற்றோடு சிவத்திர வியாபகாரமகிய அதிபாதகத்தையும் விலைக்குக் கொள்ளுதலாலும், அதனால் சைவாகம உணர்ச்சியும் நல்லொழுக்கமும் சிவபக்தியுமுள்ள பிராமணர்கள் விலக்கப் படுதலாலும் நமது தேவாலயங்கள் சைவாகமப்படி நடவாதொழிந்தன. பாதிரிகள் இவைகளை எல்லாம் ஆராயாமல் நமது சைவசமயிகள் பலராலே தேவாலயங்களில் நடத்தப்படும் தீயொழுக்கங்களைக் கண்டு சைவசமயத்தை இகழ்தல் பேதைமை அன்றோ?[6]

இந் நீண்ட மேற்கோள் நாவலரின் உள்ளடக்கிடக்கையைத் தெற்றெனப் புலப்படுத்துகிறது. சமய நடவடிக்கைகளில் கடும் ஒழுக்கத்தை நாவலர் வற்புறுத்துவது அவதானிக்கத்தக்கது. சமயத்துடன் இணைந்திருந்த புலனின்பப் பொழுதுபோக்குகளை விடுத்து அறிவுக்கு விருந்தாக அமையும் பொழுதுபோக்குகளையே கோயில்களில் கைக்கொள்ள வேண்டும் என்று நாவலர் கூறியபோதும் அவரது கடுந்தூய்மை வாதத்தையே கவனிக்க முடிகிறது. சுப்பிரபோதத்தில் பின்வருமாறு கூறினார் நாவலர்:

நமது சைவசமயிகள் ஒற்றுமையுடையவர்களாய்த் திரண்டு தேவாலயங்கள் எங்கும் சைவாகமங்களில் விதித்த இலக்கணங்கள் அமைந்த பிராமணர்களைக் கொண்டே பிரதிட்டை, பூசை, திருவிழா முதலியவற்றை விதிவழுவாது இயற்றுவித்தலும், வாண விளையாட்டு முதலிய வேடிக்கைகளின் பொருட்டு பொருளைச் செலவழித்தலை யொழித்து, சிவபக்திமான்களும் பண்ணோடோதவல்வர்களுமாகிய ஓதுவார்கள் பலரை நியோகித்துப் பூசா காலத்தும் உற்சவ காத்தும் யாவருக்கும் மனங்கசிந்துருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரியச் சிவன்மேல் அன்புசெனிக்கும் பொருட்டுத் தேவாரமுந் திருவாசகமுமாகிய தமிழ் வேதத்தை ஓதுவித்தலும் சைவப் பிரசாரகர்களை நியோகித்து வாரந்தோறும் கடவுளது மகிமையையும் புண்ணிய பாவங்களையும் அவற்றின் பலன் களையும் கடவுளை வழிபடும் முறைமையையும் குறித்துச் சனங்களுக்குப் போதிப்பித்தலும் செய்வார்களாயின் அறியாமை நீங்கும், பாவந்தேயும், புண்ணியம் வளரும். சிவபக்தி தழைக்கும்.[7]

நாவலர் இங்கு வற்புறுத்தும் விஷயங்கள் சமயத் தூய்மையையும் அறிவையும் வேண்டி நிற்பவை என்பது வெள்ளிடைமலை. இவை சைவப் பாரம்பரியத்தில் புதிதாக ஏற்பட்ட தன்மைகளாகும். நாவலருக்குப் பின்னரும் இக்கருத்துக்கள் பலராற் கூறப்பட்டன. இக்காலத்தில் பெருந்தெய்வக் கோயில்களில் நாவலர் குறிப்பிடும் புலனின்பப் பொழுது போக்குகள் இல்லாதொழிந்தமைக்கு அவரது பிரசாரமும் முக்கிய காரணமாகும்.[8]

சைவத்துக்குச் சவாலாகவிருந்த கிறித்தவம் ஒழுக்கத்தை வற்புறுத்தியதோடு சமயத்தை அனுசரிப்போர்க்கு வேண்டிய ஒழுகலாறுகளையும் வரையறுத்திருந்தது. இத்தகைய தன்மையை சைவத்துக்கும் அளிக்க விரும்பினார் நாவலர். கிறித்தவ சமயிகட்குக் கட்டுத்திட்டமான ஒழுகலாறுகள் இருந்ததை அவர் கண்டார். குறிப்பிட்ட நாளில் கோயிலுக்குச் செல்லுதல், செபம் பண்ணுதல், பாவசங்கீர்த்தனம் செய்தல் முதலியவை உண்மைக் கிறித்தவனின் தவறாக் கடமைகளாகும். நாவலர் இத்தகைய பின்னணியிலிருந்தே சமய ஒழுக்கங்களை வற்புறுத்தினார். சமய குருமாரிலிருந்து சாதாரண மனிதன்வரை சமயவிதிகளைத் தவறாது அனுசரிக்க வேண்டுமென்பது அவரது கருத்தாகும். இறைவனில் மெய்யன்பு கொள்ளுதலுடன் மாத்திரம் அவர் திருப்தியடைந்து விடவில்லை. அதனைக் குறிப்பிட்ட நியமநிஷ்டைகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும் என்றார். சைவ சமயி, அநாசாரம், திருக்கோயிலிலும் திருவீதியிலும் செய்யத்தகாத குற்றங்கள் முதலிய பிரசுரங்களும் சைவ வினாவிடைகளும் இதற்குச் சான்று பகரும். சிதம்பரத்தில் நாவலர் வெளியிட்ட பிரசுரமொன்றில் பின்வருமாறு கூறியிருந்தார்:

யாதானும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாதபொழுது பயன்பெறான். அந்தச் சமயத்திற்கு உரிய கடவுள் இவரென்பதும், அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங் களும், விலக்கப்பட்ட பாவங்களும், அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுகதுக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும் அந்த வழிபாட்டினாலே பெறப்படும் பிரயோசனமும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாதபொழுது, அந்த ஒழுக்கம் உண்டாகாது.[9]

கல்வி, அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றுடனும் நியமநிஷ்டைகளுடனும் சமயத்தை வற் புறுத்தவே அங்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கோ 'தான்' சம்பந்தமான அம்சங் களுக்கோ (Personal element) இடமற்றுப் போகிறது. சமயக் கருத்தின் பொதுமைத் தன்மையையே நாவலர் வற்புறுத்தினார். கடவுளை அறியும் பேரின்பம் புறத்தார்க்குப் புலனாகாதென்பது வேறு, கடவுளை அறிபவன் குறிப்பிட்ட ஒழுங்கில் ஒழுக வேண்டு மென்பது நாவலர் விதி. (சமயத்தைத் 'தான்' சம்பந்தமான அனுபமாகக் கண்டு தான் கலந்துபாடிய வள்ளலாரை மிக்க வன்மையாக நாவலர் கண்டித்தமைக்கு இதுவும் முக்கிய காரணம். இருவருக்கிடையேயும் காணப்பட்ட இம் முரண்பாடு நாவலர் வள்ளலார் வழக்கை மேலும் விளக்கஞ் செய்யும்).

பக்தியியக்கத்தின்போது நாயன்மார்கள் சமயத்தைத் தனிப்பட்ட அனுபவமாகவும் கண்டார்கள் என்பது முன்பு கூறப்பட்டது. ஆனால், ஐந்தாம் குரவர் என்று போற்றப்படும் நாவலர் இதில் முந்தைய சமய குரவர்களிடமிருந்து வேறுபடுகிறார். நாயன்மார் புத்துருவாக்கத்திலும் ஈடுபட்டனர். சமய உண்மைகளைப் பொறுத்தவரை நாவலர்பணி அத்தகையதன்று. சாத்திரங்களைத் துணைகொண்டு ஏலவே நிறுவப்பட்டிருந்த சமயக் கருத்துக்களைப் பேணவே முனைந்தார். இவ்வகையில் சமய குரவர்களை விடப் பின்வந்த சந்தான குரவர்களுடன் ஒப்பிடத்தகும் நாவலர், தமிழர் சமயப் பாரம்பரியத்தில் சாத்திர முறைமையின் பக்கம் சார்ந்தவராகவும், அதனையே சரியெனப் போதித்தவராயும் விளங்குகிறார். ஆறுமுகநாவலர் சரித்திரத்திலே த. கைலாசபிள்ளை குறிப்பிடும் நிகழ்ச்சி, சாத்திரவிதிகளில் ஆறுமுகநாவலர் எவ்வளவு பற்றுறுதியோடிருந்தார் என்பதை அளவிடு வதாக அமையும்.

> இவர் தமக்கு முன்னிருந்த ஆசிரியர்களது துணையில்லாமல், சித்தாந்தத்திலாவது, இலக்கணத்திலாவது, வேறு எவற்றிலாவது தமது யுத்தியினாலே ஒன்றையுஞ் சொன்னதே யில்லை. இவர் 'றோசாப்' பூவில் மிக்க பிடகதியுடையவர். அதனை அதிகமாக உபயோகித்துத் தமது பூசையைச் செய்கின்றவர். அப்படி அவ்வளவு விருப்பமுடையவராக இருந்தும் இரண்டாம் சைவ வினாவிடை எழுதும்போது அதிற் பூசைக்குரிய புட்பங்கள் எழுதுமிடத்து, இந்த ''றோசா''வுக்கு ஜபா முதலிய பெயர்கள் சம்ஸ்கிருத அகராதிகளிலிருந்தும், அதனைப் பூசைக்குரிய புட்பங்களோடு சேர்க் கலாகாதோ என்று பலமுறை ஆலோசித்து இறுதியிற் புட்பவிதி முதலிய நூல்களில் இல்லாமையினாலே சேர்க்காதுவிட்டார்.[10]

இது சிறிய நிகழ்ச்சியாயினும் நாவலரது சாத்திரப் பற்றை உணர்த்தும் சிறந்த உதாரணமாகும்.

சாத்திரவிதிகளை வற்புறுத்தியமையும், சாதாரண மக்களும் அவற்றை அறிய வேண்டும் என்று அவாவியதும் வேறொருவகையில் ஆக்கபூர்வமான அம்சமொன்றுக்குத் துணை புரிந்தது. அன்றைய நிலையில் சைவசாத்திர அறிவு, மடங்களிலும் ஆதீனங்களிலும் முடங்கிக் கிடந்தது. 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகள் முதல் தமிழ்நாட்டில் ஆதீனங்களினதும் மடங்களினதும் தோற்றத்தையும் வளர்ச்சியையும் காணலாம். இவையே சாத்திர அறிவின் மையங்களாக விளங்கின. இவற்றைச் சார்ந்து குருத்துவம் பூண்டும் துறவறத்தில் ஒழுகியும் வந்தோரே சமய அறிஞர்களாகக் கொள்ளப்பட்டனர். இவ்வகையில் ஜனரஞ்சகமான, சாதாரண மக்களிடையே நிலவிய சமயத்துக்கும் அதிகார பூர்வமான சாத்திர ரீதியான சமயத்திற்கும் இடைவெளி அதிகமிருந்தது. அதிகாரபூர்வமான சைவசித்தாந்தம் நிலவிய உலகம் குறுகியது.

இந்நிலையில் நாவலர் அதிகாரபூர்வமான சமயத்தைப் பரவலாக்க முயன்றார். மடங்களுக்கும் ஆதீனங்களுக்கும் வெளியே சாத்திர உண்மைகளை வெளிக்கொணர விரும்பினார். அவருடைய பாலபாடங்கள் முதலியன இக் கைங்கர்யத்தை ஆற்றின. சாதாரண மக்களும் உலகியல் வாழ்வில் ஊக்கமுடன் ஈடுபடுவோரும் அறியவும் உணரவும் தக்கவை சமய உண்மைகளும் சமய சாத்திரங்களும் என்ற உணர்வு நாவலருக்கு இருந்தது. இவ்வகையில் ஒரு சிலரின் தனி உடைமையாகவிருந்த சமய, சாத்திர அறிவினைப் பரவலாக்கி அதற்கிருந்த பூடகத் தன்மையைக் குறைக்கும் பணியை நாவலர் ஆற்றினார் என்பது தகும். இதன் தொடர்ச்சியே கோயில்களுக்கும் மடங்களுக்கும் புறம்பான, சமய சம்பந்தமான சபைகளின் தோற்றமாகும். நாவலரது மாணவர் சிலர் சேர்ந்து சைவப்பிரகாச சமாஜியம் என்னும் நிறுவனமொன்றைத் தொடக்கியதாகத் தெரிகிறது. இச்சங்கம் அச்சுக் கூடமொன்றைச் சொந்தமாக வைத்திருந்து, உதயபானு என்ற பத்திரிகையையும் வெளியிட்டது. சைவ பரிபாலன சபையும் இவ்விடத்தில் விதந்து குறிப்பிடற்குரியது. நாவலரது மாணாக்கரும் மருகருமாகிய வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளையும் வேறு சில ஆர்வலர்களும் சேர்ந்து 1888ஆம் ஆண்டு இதனை நிறுவினர். இன்றும் வெளிவந்து கொண்டிருக்கும் Hindu Organ இந்து சாதனம் ஆகிய பத்திரிகைகளை இச்சபையே வெளியிட்டது. இன்றுகூடப் பாடசாலை மட்டத்தில் சமயப் பரீட்சைகளையும் போட்டிகளையும் இச்சபை நடத்துவதைக் காணலாம். இத்தகைய போக்கு தமிழ்நாட்டிலும் காணப்பட்டது. 1905ஆம் ஆண்டில் தோன்றிய சைவசித்தாந்த சமாஜியம் போன்றவற்றைக் கூறலாம்.

இதனை மேலும் கூர்ந்து நோக்கினால் ஒருண்மை புலப்படும். பழைய நிலமானிய சமூக நிறுவனங்களது தனியுடமையாகவிருந்த சமயத்தைப் புதிய மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த உயர் குழாத்தினரிடம் (Elite) கையளித்தது நாவலரின் முக்கிய பணியாகும். பரம்பரை பரம்பரையாகக் கைமாறப்பட்டு வந்த சமய அறிவைப் பரவலாக்கி அறிவு, ஒழுக்கம், ஆர்வம் வாய்ந்தவர் எவரும் அதனைக் கற்கலாம் என்ற நிலையை ஆறுமுக நாவலர் ஏற்படுத்தினார். இது அக்காலத்து வரலாற்றுத் தேவையாகவும் இருந்தது.[11] இதை

அறிந்தோ அறியாமலோ செயற்பட்டார் நாவலர். இத்தகைய வரலாற்றுத் தேவைகள் சிலவற்றை நிறைவேற்றி வைத்தமைதான் தமிழர் சமயப் பாரம்பரியத்தில் நாவலருக்கு அழியா இடத்தைக் கொடுத்தது எனலாம். (இவ்வகையில் தமது பாரம்பரியச் சமூக மரபுகளைப் பேணுவது மட்டுமன்றி காலத்தின் போக்கை உட்கிரகித்துச் செயலாற்றிய அறிவு ஜீவியாகவும் தென்படுகிறார் நாவலர்).[12]

நாவலர் பணிகளின் இன்னோர் அம்சம் கோயிலிலும் கோயிலதிகாரிகளிடையிலும் காணப்பட்ட குறைகளை எடுத்துக் கூறியமையாகும். உண்மையில் கிறித்தவ பாதிரிகளுக்கு எதிரான கண்டனங்களைவிட கோயிலதிகாரிகட்கும் குருமாருக்கும் எதிரான கண்டனங்களே அதிகமானவையாகவும் ஆத்திரங் கொண்டவையாகவும் உள்ளன. இது ஏன்? இதனால் யாது விளைந்தது? என்ற வினாக்களை எழுப்பும்போதே நாவலரின் சரித்திர முக்கியத்துவத்தைச் சரியானபடி உணர்ந்து கொள்ளலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தின் சமயநிலையை அறியவிரும்பும் எவரும் அசட்டை செய்ய முடியாத பிரசுரம் ஆறுமுக நாவலரின் 'யாழ்ப்பாணச் சமயநிலை' என்னும் பிரசுரம். இப்பிரசுரத்தில் யாழ்ப்பாணத்துச் சைவசமயிகளிடம் காணப்பட்ட அநாசாரங்களையும் ஆகம விரோதமான செயல்களையும் கடும் ஒழுக்க வாதியின் நிலைநின்று கிண்டலுடன் எடுத்துரைத்தார் நாவலர். சைவ விரோதம் என்னும் பிரசுரத்திலும் சைவத்தின், பிரதிநிதிகளெனச் சமூகத்தால் அங்கீகாரம் பெற்றோரை, சிறப்பாகப் பிராமணக் குருமார்களைக் கண்டித்தார். அக்கண்டனத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

> உண்மையென்று நிறுத்தப்பட்டவைகளைச் சைவசமயிகள் எல்லோரும் கைக்கொண்டு நடக்கக் கடவர்கள். பொருளாசை கொண்டும், அதிகாரத்துக்குப் பயந்தும், வழக்கம் வழக்கம் என்று நழுவியும் சிவாகம விரோதஞ் செய்பவர்கள் சிவபெருமானுடைய சாபத்துக்கு ஆளாவார்கள்... மேலே சொல்லப்பட்ட துராசாரங்கள் பூண்ட போலிக் குருமார்களை விலக்குவாருங் கண்டிப்பாரும் இல்லை. இதனாலே சைவ சமயநிலை பாறுகின்றது. இவர்கள் இப்படிச் செய்யலாமா இப்படிச் செய்யலாமா என்று இராப்பகல் ஓயாது வாய்ப்பறை அறைகின்ற சைவசாத்திர பண்டிதர்களும் இந்தப் போலிக் குருமார்களைக் கண்டவுடனே புலித்தோலாசனம் கொடுத்து உபசாரஞ்செய்து விடுகிறார்கள். இப்படியானால் இவர்களைக் கண்டித்து விலக்குகிறவர்கள் வேறு யாரோ? யோக்கியர்களுக்கும் அயோக்கியர்களுக்கும் பேதம் எப்படி விளங்கும்?[13]

சமூகத்தின் எத்தகைய உயர்மட்டத்திலிருப்பவர்களையும், எதுவித பயமுமின்றிக் கேள்வி கேட்கும் முறையைச் சமய மட்டத்தில் தொடக்கி வைத்தார் நாவலர். இவ்வாறு சமய குருமார் கேள்விக்கு உள்ளான நிலை முன்பு காணப்படாததொன்று. ஜனநாயகப் பண்பினை வெளிக்காட்டும் இம்முறையைத் தொடக்கியவர் நாவலர் எனலாம். நவீன காலத்தில் சமயம் ஜனநாயக மயப்பட்டதின் (Democratization of Religion) ஒரு அம்சமாக இதனைக் கூறலாம். மேலும் சில உதாரணங்கள் மூலம் நாவலரின் இப்பணியை விபரிக்கலாம்.

ஆறுமுகநாவலர் தமது காலத்தில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற் பல குறைபாடு களைக் கண்டார். கோயில் அமைப்பு, அங்கு நடக்கும் பூசை, திருவிழா வழிபாடு, கோயில் நிர்வாகம் ஆகியவற்றில் காணப்பட்ட தவறுகளையும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி நல்லூர்க் கந்தசுவாமி கோயில் என்ற தலைப்பில் மூன்று பிரசுரங்களை வெளியிட்டார். இவற்றுடன் அமையாது கோயில் யாருடையது? கோயிலுக்குப் பொதுசனங்கள் கொடுக்கும் பொருள் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது? அதன் கணக்கு விபரம் எத்தகையது என்ற கேள்விகளையும் எழுப்பினார் நாவலர். பாரம்பரியம் என்றும் வழக்கம் என்றும் கருதிக் குறைகளை அசட்டை பண்ணாது எடுத்துக்காட்ட வேண்டும் என்று நாவலர் கூறியதை மேலே பார்த்தோம். யாழ்ப்பாணத்துச் சைவ சமயிகளே என விளித்துத் தொடங்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பிரசுரத்தில் பின்வருமாறு எழுதினார் அவர்.

> இக்கோயில் கட்டப்பட்டுள்ள நிலம். இக்கோயிற் கட்டடம், திரு மதிற்கட்டடம், இக்கோயிலுக்குரிய விளைநிலங்கள், தோட்டங்கள், வாகனங்கள், மஞ்சம், சப்பிரம், தேர், வெள்ளி பித்தளை வெண்கலப் பாத்திரங்கள், திருவாபரணங்கள் முதலானவைகள் எல்லாம் வெகுசனங்களால் உபகரிக்கப்பட்டனவன்றோ! இங்கே பண்டுதொட்டு நடந்துவரும் அபிஷேகம், பூசை, நைவேத்தியந் திருவிழா முதலியவைகளெல்லாம், இத்தேசத்தார்களும் நாட்டுக் கோட்டையார்களும், உதவும் பொருள் கொண்டே வருகின்றனவன்றோ! இக்கோயிலதிகாரிகள் பண்டுதொட்டு இன்றுவரையும் இங்கே காவடிக்காரர்களிடத்தில் வாங்கிய பணம் எங்கே? உண்டி வைத்து வாங்கிய பணம் எங்கே? திருப்பணிக்குத் திருப்பணிக்கென்று ஊர்தோறும் பலதரந் திரிந்து வாங்கிய பணம் எங்கே?... இப்பணத்திலே இக்கோயிலதிகாரிகள் தாங்களாக இக்கோயிலுக்கு யாதாயினும் திருப்பணி செய்திருக்கிறார்களா? யாதாயினும் திருவாபரணஞ் செய்து வைத்திருக்கிறார்களா? யாதாயினும் நிலம் வாங்கி விட்டிருக்கிறார்களா? பல வழியாலும் கோயிற் பணத்தொகை முழுதும் இக்கோயிலதிகாரிக்கே சம்பளமாய் விடுகிறது.[14]

மேற்காணும் பகுதியில் கோயில் என்ற நிறுவனத்துக்குப் புறம்பேயுள்ளவர்கள் அதன் தனியாண்மை குறித்து எழுப்பும் சந்தேகம் தென்படுகிறதல்லவா? தனியாண்மைக்குச் சவால் விட்டது மாத்திரமல்ல, கோயிலதிகாரிகள் சனங்களின் சேவகர் என்ற புதுக்கருத்தை யும் அழுத்தம் திருத்தமாகக் கூறினார் நாவலர்.

> இக்கோயில் யாருடையது? இக்கோயிலதிகாரியுடையதா? சனங்களுடையதா? மேற் காட்டிய வகையினாலே சனங்களுடையது என்பது எல்லோருக்குந் தெரியுமே. வேறு சீவனோபாயம் ஒன்றுமின்றி இக்கோயிலதிகாரியாகிச் சனங்கள் கைப்பொருள் கொண்டு சீவிக்கிறவர் கடவுளுக்கு மாத்திரமோ, அச்சனங்களுக்கும் வேலைக்காரரன்றோ! இவ் வேலைக்காரர் இக்கோயில் வேலைகளைக் கடவுள் அருளிய சாத்திரத்துக்குஞ் சனங் களுடைய திருப்திக்கும் ஏற்ப நடத்தித், தம்முடைய வேலைக்குத் தக்க சம்பளம் பெற்றுக் கொண்டு, வரவு செலவு இருப்புக் கணக்கு அச்சனங்களுக்கு ஒப்பித்தல் வேண்டுமே. அப்படிச் செய்கின்றாரா?[15]

மேற்காணும் குரல் எமது சமயப் பாரம்பரியத்தில் புதியதாகும். அதுகாலவரை சமூகத்தில் உறுதியும் உயர்நிலையும் பெற்றிருந்த தனிமனிதரையும், நிறுவனங்களையும் விமரிசனம் செய்யும் போக்கு கூர்மையடைவதை நாவலரது இக்கண்டனம் நன்கு எடுத்துக்காட்டுகிறது. இது சமயத்தில் மாத்திரம் காணப்பட்ட தனிப்பண்பன்று. அரசியலில் இருந்து ஆன்மீகம் வரை பல துறைகளிலும் காணப்படுவதாகும்.

ஆனால், இந்த விமரிசனம் எத்தகைய மறுப்புமின்றி உடனே, ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. மிகத் தீவிரமான எதிர்ப்பு ஆறுமுகநாவலரை எதிர்நோக்கியதென்பதை அவர் வார்த்தைகளாலேயே உணர்ந்து கொள்ளலாம்.

> நாம் உலகத்தாருக்குப் பயன்படும் பொருட்டு எழுதி அச்சிற் பதிப்பித்து வெளிப் படுத்திய கந்தசுவாமி கோயில் என்னும் பத்திரிகையை வாசித்தவர்களுள்ளே தக்கவை கள், தகாதவைகள் பகுத்தறியும் அறிவும் மனச்சான்றுக்கு ஒரு சிறிதும் விரோதமறப் பேசும் பேச்சும் உடைய மேன்மக்களொழிய மற்றவர்களுள்ளே பலர் உண்மை அறிந்தும் பொறாமை, துரபிமான முதலிய காரணங்களினாலும், வேறு பலர் இன்னும உண்மை அறியமாட்டாமையினாலும் அப்பத்திரிகையை வாசியாதவர்கள் பலர் இவர்கள் கற்பித்த பொய் வார்த்தைகளால் விளைந்த மயக்கத்தினாலும் அநியாயமாகவே நம்மைத் தூசித்துக் கொண்டு திரிகிறார்கள்.[16]

இத்தகைய எதிர்ப்புகள் நாவலருக்கு இருந்தும்கூட தான் பிழையென்று கருதியவற்றுடன் எத்தகைய சமரசமுஞ் செய்தாரில்லை. தமது நிலையில் நாவலர் உறுதியுடன் நின்றமைக்குச் சமூகத்தின் ஒருபாலார் அவருக்குக் காட்டிய ஆதரவு முக்கிய காரணமாகும். அதிலும் அக்காலத்துப் புதிய புத்திஜீவிகள் நாவலரை நன்கு ஆதரித்தனர். இவர்களுள் தா. செல்லப்பாபிள்ளை, தி. சௌந்தரநாயகம்பிள்ளை, சி.வை. தாமோதரம்பிள்ளை, த. கைலாசபிள்ளை, தா. பொன்னம்பலபிள்ளை ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் மாத்திரமல்ல, அக்கால அரசியலிற் பிரபலமாயிருந்த சேர் பொன். இராமநாதன், சேர். முத்துக்குமாரசாமி ஆகியோரும் நாவலர் பணியை ஆதரித்தோரே. நாவலர் வாழ்ந்த காலத்திலேயே அவரை Hindu of Hindus என்று சட்டசபையிற் பேசும்போது புகழ்ந்தார், சேர். முத்துக்குமாரசாமி. 1884ஆம் ஆண்டு சட்டசபையிற் பேசும்போது நாவலரை Champion Reformer of the Hindus என்று சேர். பொன். இராமநாதன் போற்றினார். இவையெல்லாம் நாவலரின் சமயப் பணியை ஆதரித்தோரின் சமூக நிலையைக் காட்டுவன.

இதுவரை இக்கட்டுரையில் விவரித்தவற்றைத் தொகுத்து நோக்கும்போது சில உண்மைகள் புலப்படும். தமிழர் சமயப் பாரம்பரியத்தில் பக்தியியக்க காலம் போலவும் சைவ சித்தாந்தம் சாத்திர வடிவம் பெற்ற காலம் போலவும் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளும் முக்கியத்துவம் வாய்ந்த காலமாகும். இம் முக்கிய காலகட்டத்தில் நாவலருக்கும் கணிசமான பங்குண்டு. சாத்திர முறைமையை மீண்டும் நிலைநிறுத்தியும் அதனைப் புதிய சமூகத்தின் புத்தி ஜீவிகளிடமும் உயர் குழாத்தினரிடமும் கையளித்தும், சமய நிறுவனம், அதிகாரம் என்பவற்றில் ஜனநாயகப் பண்பினைத் தோற்றுவித்தும்

அப்பங்கினை அவர் ஆற்றினார். நாவலர் பற்றி சேர். பொன். இராமநாதன், Champion Reformer of the Hindus என்று கூறிய வாசகத்தை ஒரு வரலாற்று மாணவன் மேற்கண்டவாறு விளக்கிக் கொள்ளல் தகும்.

அடிக்குறிப்பு

1. தொம்சன், ஜோர்ஜ், மனிதசமூக சாரம் (மொழிபெயர்ப்பு) சென்னை, 1981, ப. 93.
2. பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, சமய இலக்கியமும் கால மாறுதலும் என்ற கட்டுரையொன்றில் தமிழர் சமயப் பாரம்பரியம் காலமாற்றத்தில் அடைந்த வளர்ச்சியைக் கூறும்போது இம்மூன்று கட்டங்களையும் அழுத்தியுள்ளார். வேலுப்பிள்ளை, ஆ., ''சமய இலக்கியமும் காலமாறுதலும்'' தமிழர் சமய வரலாறு, சென்னை, 1980, பக். 18 - 20.
3. வானமாமலை, நா., தமிழர் வரலாறும் பண்பாடும், சென்னை, 1972, ப. 47.
4. இக் கருத்தைப் பேராசிரியர் கைலாசபதி தமது நாடும் நாயன்மாரும் என்ற கட்டுரையொன்றில் மிக விரிவாக விளக்கியுள்ளார். முதல் முதல் இக் கருத்தை முன் வைத்தவர் அவரே. இத் தொடர்பில் நா. வானமாமலையும் மூடுதிரை என்ற கட்டுரையில் சில குறிப்புகள் கூறியுள்ளனர்.
   (a) கைலாசபதி, க., ''நாடும் நாயன்மாரும்'', பண்டத் தமிழர் வாழ்வும் வழிபாடும், சென்னை, 1966, பக். 85 - 126.
   (b) வானமாமலை, நா., முற்குறிப்பிட்ட நூல்.
5. க. கைலாசபதியின் 'பேரரசும் பெருந்தத்துவமும்' என்ற கட்டுரை இக்கருத்தினை மிக நிறுவுவதாகும். கைலாசபதி, க., முற்குறிப்பிட்ட நூல், பக். 145 - 197.
6. நாவலர் ஆறுமுக 'சுப்பிரபோதம்' ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, யாழ்ப்பாணம், 1921, பக். *கo ___ கக*
7. மேற்படி நூல், ப. *கஙு.*
8. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை முக்கிய உதாரணமாகக் கொண்டே கோயிற் திருவிழாக்களில் நடைபெறும் வாணவேடிக்கை, நடனம், பலியிடுதல் போன்றவற்றை நாவலர் கண்டித்தார். இவரது கண்டனத்தாலும் பிரசங்கத்தாலும் சிறிது காலம் கோயிலில் இவை நிறுத்தப்பட்டமையை நல்லூர்க் கந்தசுவாமி கோயில் 2ஆம் பத்திரிகை எடுத்துக் கூறுகிறது.
9. கைலாசபிள்ளை, தா., ஆறுமுகநாவலர் சரித்திரம், சென்னை, 1920, பக். *ஙரு ரூ ஙசு.*
10. மேற்படி நூல், ப. *சுரு.*
11. சமயத்தில் மாத்திரமின்றி இலக்கியம், நாடகம் போன்ற துறைகளிலும் இக் காலத்தில் நவீன வடிவங் களைத் தோற்றுவித்தோரும், புதிய போக்குகளை ஆரம்பித்தோரும் மத்திய தரவர்க்கத்தினரும் புத்தி ஜீவிகளுமே. இவர்களே கலை இலக்கிய உலகில் அதிகளவு முக்கியத்துவம் வகித்ததை நோக்கும்போது இதனைத் தவிர்க்க முடியாத வரலாற்றுப் போக்கெனவே கூறத் தோன்றுகிறது.
12. முக்கியமான வரலாற்றுக் கால கட்டங்களில் அறிவு ஜீவிகளின் பங்களிப்புக்கும் பணிக்கும் ஏற்ப அவர்களை நான்கு வகைப்பட்டவர்களாகச் சிலர் பகுப்பர். இந்தியச் சூழலின் பின்னணியில் R. Khatkhate Deena என்னும் ஆய்வாளர் இப் பாகுபாட்டினைச் செய்தார். Imitative, Assimilative, Assertive, Creative என்பது அவரது பகுப்பாகும். இவற்றுள் ஆறுமுகநாவலர் இரண்டாவது பிரிவில் வைத்து எண்ணத்தக்கவர். Deena, R., Khatkhate, "Intellectuals and the India Polity 'Asian Survey', XVII, 3 March 1982, pp. 251 – 263.
13. நாவலர் ஆறுமுக, முற்குறிப்பிட்ட நூல், ப. *உக.*
14. மேற்படி நூல், ப.. *ஙஙு*
15. மேற்படி நூல், ப. *ஙசு.*
16. மேற்படி நூல், ப. *ஙஎ.*

சைவசித்தாந்த மெய்யியலில் ஆறுமுகநாவலரின் பங்களிப்பு

இரா.வை. கனகரத்தினம்

''இந்தச் சாகரம் நமக்குக் கிடைத்தது கடவுளை
வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' *- நாவலர் பாலபாடம் - 11*

என்ற நாவலர்தம் கூற்று அவர் சமய நோக்கினையும் சித்தாந்த நோக்கினையும் வெளிப்படுத்தி நிற்கும். இந்திய தத்துவ மரபில் சமயமின்றி தத்துவம் அமைவதில்லை. ஆப்த வாக்கியங்களை ஒப்புக்கொள்பவை யாவும் சமயம் என்றே கொள்ளல் வேண்டும். சமயமும் தத்துவமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் எனலாம்.

நாவலர் அவர்களின் சைவ சித்தாந்த முயற்சிகளை ஆராய்வதற்கு முன்பாகச் சைவ சித்தாந்த தத்துவத்தின் தோற்றத்தை அல்லது உருவாக்கத்தைச் சுருக்கமாக நோக்குதல் அவசியம்.

சைவ சித்தாந்தம் தமிழர் கண்டநெறி. சைவ சித்தாந்தத்தின் முதன் நூல் சிவஞான போதம் ஆகும். இம் முதல் நூல் என்னும் பதம் முதன் முதலில் எழுந்த நூல் என்னும் பொருளில் வழங்குவதில்லை. சிவஞான போதத்துக்குக் காலத்தால் முற்பட்ட நூல்களாக திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய திருவுந்தியாரும் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் இயற்றிய திருக்களிற்றுப்படியாரும் விளங்குகின்றன. திருக்களிற்றுப்படியார் திருவுந்தியாரின் வழிநூல் என்பர். இவ்விரு நூல்களிலும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுப் பேசப்படவில்லை. முதன் முதலாக சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அவை பற்றிப் பேசும் முதன் நூலாக அமைவது சிவஞான போதமேயாகும். இதன் வழிநூல்களாக ஏனைய பதினொரு சைவ சித்தாந்த நூல்களும் அடங்கும். இவற்றைத் தவிர்ந்த ஏனைய சைவ சித்தாந்த நூல்கள் சார்பு நூல்களேயாகும்.

சைவ சித்தாந்த உருவாக்கத்துக்கு சோழர்கால மக்களின் சமய உணர்வும் அது பற்றிய தெளிந்த அறிவும் இருமொழிப் புலமையும் வைதிக மதங்களுக்கிடையிலான பரஸ்பர உறவும் அவைதிக மதங்களுக்கிடையிலான கருத்துப் பரிமாறல்களும் சைவ சமயத்தில்

தெளிவான கோட்பாட்டை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்தன எனக் கூறலாம். பொதுவாக இக்காலத்தில் வைதீக மதங்களிடையே, தெளிந்த தத்துவக் கோட்பாடுகள் உருப்பெற்றிருந்தன. குறிப்பாகச் சங்கர வேதாந்தத்தையும் இராமானுசரது விசிட்டாத் வைதத்தையும் குறிப்பிடலாம். மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி முதலான காப்பியங்களுக்கூடாக பௌத்த - சமணக் கோட்பாடுகள் தமிழ் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தன. சைவசித்தாந்தத்துக்கு முன்னெழுந்த சமய தத்துவங்கள் நன்கு சிந்தித்து ஒழுங்குபடுத்தப்பட்டு சமய தத்துவக் கோட்பாடுகளைக் கொண்டவையாக இருந்தன. இத்தகைய ஒரு சமய தத்துவப் பின்னணிகளும் சைவ சமயத்தில் சைவ சித்தாந்தம் என்ற மெய்யியல் வளர்வதற்கு உறுதுணையான படிக்கல்லாக அமைந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

அத்துடன், தமிழ் நாட்டில் ஆலயங்களோடு இயைந்த ஆகம நூல் வளர்ச்சியும், அது கூறும் பொருள் மரபும் ஆலயங்களிலும் மக்களிடத்தும் திருமுறைகள் பெற்ற சிறப்பும் தனித்துவமும் சைவத்தில் சைவ சித்தாந்தக் கோட்பாடு உருவாக்கப்பெற வேண்டும் என்பதன் அவசியத்தை வற்புறுத்தி நின்றன. ஆகமங்கள் திருமுறைகள் ஆகியன தத்துவக் கோட்பாடுகளில் எழும் தர்க்கங்களுக்கு விடையளிக்கக் கூடியனவையாகவும் உண்மைகளை வெளிப்படுத்தக் கூடியனவாகவும் அமைந்திருந்தமையால் இவற்றை முதல் நூல்களாகக் கொண்டும் ஏனைய சமயவாதிகள் பேசும் தத்துவ ஒழுங்கு முறைகளில் தள்ள வேண்டியதைத் தள்ளி ஏற்க வேண்டியதைத் தழுவியும் சைவசித்தாந்தக் கோட்பாட்டினை உருவாக்கினர். சைவசித்தாந்திகள் திருமுறைகளையும் ஆகமங்களையும் முதன் நூலாகக் கொள்வதினால்தான் திருமுறைகளினதும் ஆகமங்களினதும் சாரமாக அமைவது சைவசித்தாந்தம் என்னும் சமய வாய்ப்பாடு சமய மரபில் இன்றும் நிலவி வருவதை யாம் அவதானிக்க முடிகின்றது.

சுமார் 13ஆம் நூற்றாண்டளவிலே முழு வடிவம் பெற்ற சைவசித்தாந்தம் 17ஆம் நூற்றாண்டுவரை பெரிதும் எவ்வித கண்டனங்களுக்கும் உட்படாது தெளிந்த ஓடையாக ஓடிக் கொண்டிருந்தது. 19ஆம் நூற்றாண்டில் மிஷனறிமார்களின் வருகையால் சைவ சமயம் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்ட பொழுது அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய 'தமிழ்' விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படாது சைவத்தின் கோட்பாடாகிய சைவ சித்தாந்தம் விமர் சனத்துக்கு உள்ளாக்கப்பட்டது. இந்த நிலையில்தான் நாவலரவர்கள் சைவத்தையும் சைவசித்தாந்தக் கோட்பாட்டினையும் வளர்க்க முற்பட்டார்.

நாவலரவர்கள் சுத்த சைவர், செல்வப் பிரபு, பல மொழி வல்லுனர், கல்விமான், தமிழறிஞர், சைவசித்தாந்தி. அவர் வாழ்ந்த காலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம், கிறிஸ்தவம் அரசாங்க மதமாக அங்கீகரிக்கப்பட்டு அந்நூற்றாண்டுக்குரிய உத்வேகத்துடன் பல்துறைகளிலும் நுழைந்து சைவத்தமிழ் மக்களிடையே சமூக, பொருளாதார, கல்வி, சமய ஊழியங்களைச் செய்து வந்தது. அதன் ஊதியம் மதமாற்றம் என்னும் உள்நோக்கத்தைக் கொண்டிருந்தது. எந்தச் சுதேசிய சமய நிறுவனங்களும் கிறிஸ்தவ ஊழியத்துடன் போட்டியிட்டு வெல்ல முடியாது தத்தளித்தன. ஒவ்வொரு சுதேசிய சமய நிறுவனமும் தமது சமயத்தையும் அதன் கோட்பாட்டையும் காப்பாற்ற வேண்டின் சமய மாற்றத்தைத்

தடுத்து நிறுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டன. அவ்வகையில் வஸ்கடுவ ஸ்ரீசுபுதிதேரர், ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் முதலான பௌத்த துறவிகளினதும், உடுப்பிட்டி அ. அருளம்பல முதலியார், வல்வை குமாரசுவாமி முதலியார், வண்ணார் பண்ணை வேதக்குட்டிக் குருக்கள், ஆறுமுகச் செட்டியார், க. ஆறுமுகநாவலர் முதலான சைவர்களின் பணிகளும் குறிப்பிடத்தக்கன. இவர்களுள் ஆறுமுகநாவலரின் பணிகள் வரலாற்று ஆவணங்கள்போல் அமைந்துவிட்டன. நாவலரவர்கள் தமது வாழ்க்கையின் இலட்சியத்தை தாம் வெளியிட்ட விஞ்ஞாபனம் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கதாகும்.[2]

> ''நான் ஐயஸ்ரீ (1834) முதலாக பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஷ் வித்தியா சாலையிலே இங்கிலிஷ் கற்றேன். பலவ ஷ (1841) பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாக இருப்பவும் அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும் மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக ஷ புரட்டாதி (1949) பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல்துரை, நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன் தாங்கள் என்னை விடலாகாது என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்க வில்லை. நான் இங்கிலீஷிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும் என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களும் எனக்குப் பின் இங்கிலீஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சத்திக் கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கு மென்ற றிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும் உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித்துணை மாத்திரம் கொண்டும் செய்யப்படும் உத்தி யோகம் வலிய வாய்த்தபொழுதும் அதனையும் யான் விரும்பவில்லை.''
>
> ''கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகம் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமேயாகவும், நான் இல்வாழ்க்கையில் புகவில்லை. இவையெல்லா வற்றுக்கும் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேராசையேயாம்.''

இவ்விஞ்ஞாபனத்தில் வரும் ''சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல்'' என்னும் தொடர் சிந்திக்கத் தக்கதாகும். இதில் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வி என்பதற்குத் தமிழ் மொழியெனப் பொருள் கொண்டு, நாவலர்கள் சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்டார் என்றும் சைவமும் தமிழும் என்னும் கோசத்தை முன்வைத்தார் என்றும் பொருள் உரைப்பர். ஆனால் உண்மையில் சைவத்தை யும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய சைவ சித்தாந்தத்தையும் வளர்த்தல் என்றே பொருள் கொள்ளல் வேண்டும். சைவத்துக்குக் கருப்பொருளாக அமைவது சைவ சித்தாந்தம் என்பதை யாவரும் அறிவர், அவ்வகையில் விளக்கத்தை மறுப்பது கடினம்.

நாவலரவர்கள் சைவசித்தாந்தம் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் சிலவற்றைச் சுருக்கமாக நோக்கலாம்.

(1) ''உலகத்திலே, சமயங்களும் அந்த அந்தச் சமய சாத்திரங்களும் அந்தச் சாத்திரங்களிலே சொல்லப்படும் பொருள்களுள்ளும், ஒன்றோடொன்று ஒவ்வாது பல திறத்தனவாய் இருக்கும். இவைகள் எல்லாவற்றுள்ளும், மேலாகிய சமயம் யாதெனில் இச்சமயப் பொருள்கள் எல்லாம் இது அதுவாகும்; அது அன்று என்னும் பிணக்கின்றி தன்னிடத்தே காண நிற்பது எந்தச் சமயமோ அந்தச் சமயமே சமயம், அந்தச் சமய சாத்திரமே சாத்திரம், அந்தச் சாத்திரத்தில் சொல்லப்படும் பொருளே பொருள். இப்படி எல்லாச் சமயப் பொருட்களையும் தன்னிடத்தே அடக்கி நிற்கும் சற்சமயம் சைவ சித்தாந்தமேயாம். ஆதலால் அந்தச் சமயமே சமயம், அந்த சமய சாத்திரங்களாகிய வேதசிவாகமங்களே சாத்திரம், அந்தச் சாத்திரங்களில் சொல்லப்படும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுமே மெய்ப் பொருள்கள்.''[3]

(2) ''முன் முன் உள்ள சமயங்கள் பின் பின் உள்ள சமயங்களால் வாதிக்கப்படும். வாதிக்கப்படுவது பூருவபஷமும், வாதிப்பது சித்தாந்தமுமாம்; சைவ சித்தாந்தம் மற்ற சமயங்களையும் பூருவபஷம் பண்ணி நிற்றலானும், அதனைப் பூருவபஷம் பண்ணுதற்கு ஒரு சமயமும் இன்மையாலும் அதுவே சித்தாந்தம் எனப்படும். சித்தாந்தமே சித்தாந்தம்; அவைக்கு வேறானவை பூருவபஷங்கள்.''[4]

(3) ''சைவசித்தாந்த நூல்களைப் பசுக்களாக்கிய நாம் பரதந்திரர்களாதலால் ஒன்றினையும் உள்ளவாறு உணர்தலும் அதன் வழி நிற்றலும் இயலாவாம் எனத் தெரிகின்றது. சுவதந்திரராகிய சிவனை மறவாது அவரது திருவருளையே முன்னிட்டு நின்று, விதிப்படி கற்றுணர்தல் வேண்டும். இவ்வாறே திருவருளை முன்னிடாது எத்துணை நூல்களைக் கற்பினும், எத்துணைத் தருமங்களைச் செய்யினும் சைவசித்தாந்தமே உண்மை நெறி என்று ஐயந்திரிபறத் துணிதலும் அந்நெறியில் வழுவாது நிற்றலும் கூடாவாம்.''[5]

இத்தகைய பின்னணியில் நாவலரவர்களின் சைவசித்தாந்த முயற்சிகளைப் பின்வரும் அடிப்படையில் நோக்கலாம்.

(1) பிரசங்கம், புராணபடனம் ஆகியன வாயிலாகச் சைவசித்தாந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தல்.

(2) சைவசித்தாந்தக் கருத்துக்களை உணர்த்தும் வகையில் நூல்களை எழுதி வெளியிடல்.

(3) சாதனைகளையும் தத்துவங்களையும் வெளிப்படுத்தும் நூல்களுக்கு உரை எழுதியும் பதிப்பித்தும் வெளியிடல்.

(4) சைவசித்தாந்தக் கோட்பாடுகளைப் பிழையாக விளங்கியும் வேண்டுமென்றும் கண்டனஞ் செய்வோருக்கு எதிராகப் பிரதிகண்டனங்கள் செய்து சைவசித்தாந்த உண்மையை நிறுவுதல்.

(5) சித்தாந்த வாதிகளைத் தனது மானசீகமான குருவாகக் கொண்டு சைவசித்தாந்தக் கோட்பாடுகளை வளர்த்தல்.

(6) தனது சிவானுபூதி நெறியினைத் தத்துவங்களோடு இணைத்து தனிப்பாடங்களாகத் தரல்.

(7) தனது மாணவ பரம்பரையினரைச் சைவசித்தாந்த நெறியாளராக வளர்த்தெடுத்துப் புதிய பரம்பரையை உருவாக்குதல்.

இவற்றைத் தனித்து நோக்கியோ ஒன்றிணைத்து நோக்கியோ நாவலரவர்களின் சைவ சித்தாந்த நோக்கினையும் முயற்சியினையும் மதிப்பிடலாம். மேற்கூறிய பகுப்புக்களின் பொதுவான அம்சங்களை நோக்கின்,

(1) பிரசங்கம், புராணபடனம் வாயிலாக சைவசித்தாந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தல்.

இச் சைவசித்தாந்த முயற்சியினைப் பின்வரும் வகையில் பகுத்து நோக்கலாம்.

(அ) பிரசங்கம் (ஆ) புராணபடனம்

(அ) பிரசங்கம்

நாவலரவர்கள் ஆற்றிய பிரசங்கப் போக்கு இரண்டு வகையில் அமைந்திருந்தது. (1) சாதனைகளையும் அதனோடு இயைந்த ஒழுகலாறுகளையும் பிரசங்கப் பொருளாக எடுத்து விளக்கல். (2) சைவசித்தாந்தக் கோட்பாடுகளைப் பிரசங்கப் பொருளாக எடுத்து விளக்கல். நாவலரவர்கள் பிரசங்கித்த கடவுள் வாழ்த்து, உருத்திரா'தாரணம், சிவதீஷை, சிவபத்தி என்பன சாதனையின் பாற்பட்டனவாகும். மகளிரொழுக்கம், இகபர சிலாக்கியங்கள், தருமம், செய்ந்நன்றி அறிதல், பிஷையிடுதல், பசுக்காத்தல், கொல்லாமை, பேதைமை, வியபிசாரம், கள்ளுண்ணல், சிவத்திரவியங்களைக் கவர்தல் முதலானவை சித்தாந்தம் சார்ந்த படித்திறன்களாகும்.

நாவலரவர்கள் தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் ஆலயங்களிலும் மடாலயங்களிலும் பொது விடங்களிலும் பிரசங்கம் செய்த பொழுதும் ஆலயங்களிலும் மடாலயங்களிலும் செய்த பிரசங்கங்கள் சைவசித்தாந்தம் சார்ந்தனவாகவே பெரிதும் அமைந்திருந்தன. மதுரையாதீனத்தில் சொக்கலிங்கப் பெருமானின் பெருமையும் சைவ சித்தாந்த உயர்வும் பற்றிப் பேசியமையும்[7] திருண்ணாமலை ஆதீனத்தில் சைவசித்தாந்தத்தினது உயர்வும் அதன்வழி ஒழுகுவோர் எய்தும் பயனும் பற்றிப் பேசியமையும்[8] திருவாவடுதுறை ஆதீனத்தில் சிவாகமங்களில் பிரதிபாதிக்கப்படும் பதி, பசு, பாசங்கள் பற்றிப் பிரசங் கித்தமையும்[9] நெடுங்குடி ஆலயத்தில் சிவபெருமானுடைய மகிமையும் சிவசின்னங்களின் வரலாறும் பற்றிப் பிரசங்கித்தமையும்[10] தொண்டை நாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபையில் ''சிவபுண்ணியப் பெருமை'' பற்றி பிரசங்கித்தமையும்[11] வரலாற்று ஆவணங் களாக அமைந்துள்ளன. இவற்றிலே தொண்டை நாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபை யில் (1867) பிரசங்கித்த ''சிவபுண்ணியத்தின் பெருமை'' பற்றிய பிரசங்கமே முழுமையான

வடிவிலே கிடைக்கப்பெற்றுள்ளது. இப்பிரசங்கம் நாவலருக்கிருந்த சைவ சித்தாந்தப் புலமையை நன்கு வெளிப்படுத்தி நிற்கின்றது. அது படிப்போரை அதன்பால் ஈர்க்கும் வல்லமை கொண்டது. கருத்தும் தத்துவப் பொருளும் மிக்கது.

> ''சைவ சமயத்தை அடைந்தவர் சிவபெருமானுடைய திருவடியைச் சேர்தற்குரிய மார்க்கம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும். அவைகளுள்ளே சரியையாவது புறத்தொழிலினாலே உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. கிரியையாவது புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டினாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. யோகமாவது அகத்தொழிலினாலே அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. ஞானமாவது புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டுமில்லாமல் அறிவுத் தொழில் மாத்திரத்தினாலே அம்மூன்று திரு மேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவத்தினிடத்தே செய்யும் வழிபாடு. இந்த நான்கு மார்க்கத்தில் ஒழுகுவோர் களே மெய்யடியார்கள். இவ்வடியார் திருமேனி அசைவுடையதாதலாற் சங்கமம் எனப்படும்.''

என்பது அப்பிரசங்கத்தின் ஒரு பகுதியாகும்.[12] இங்கு நாவலரவர்கள் சைவசித்தாந்த மார்க்கங்கள் பற்றி உறுதியுடனும் மிகுந்த தெளிவுடனும் கூறியிருப்பது அவரது ஆற்றலைப் புலப்படுத்தி நிற்கும்.

(ஆ) புராணபடனம்

புராணபடனம் என்பது சந்நிதி விரோதமின்றி, ஒருவர் வாசிக்க மற்றொருவர் பயன் சொல்லுகின்றமுறை. இந்த முறை யாழ்ப்பாணத்திற்கே உரியதொரு முறை.[13] வடக்கே இறைசந்நிதியில் நடப்பதில்லை, அங்கு வித்தியா மண்டபம் புறம்பாய் உண்டு. இங்கு அவ்வாறு இல்லை. ஆயினும் சிறிய கோயில்களிலும் இறை சந்நிதியிலே சந்நிதிவிரோதம் நிகழாத வகையில் புராணபடனம் நிகழ்ந்து வருகின்றது.[14] இம்முறை எமது நாட்டில் எவ்வாறு தோன்றிற்று என்பது ஆய்வுக்கு உரியதாக இருந்தாலும் அது ஈழநாட்டிலேதான் வளர்ந்தோங்கி வருகின்றது. கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலான புராணங்கள் இங்கு புராணபடனஞ் செய்யும் சிறப்பான புராணங்களாகும்.

இப்புராணபடனம் வாசித்துப் பயன் சொல்லுதல் என்பது ஒரு வித்துவப் பாங்குக்குரிய செயற்பாடாகும். இதற்கு இசை ஞானம், இலக்கிய இலக்கணப் புலமை, சைவசித்தாந்த அறிவு, வைதீக மதங்களின் கோட்பாடு பற்றிய அறிவு முதலானவை இன்றியமை யாதனவாகும். நாவலரவர்கள் இம்முறையை வளர்த்துச் செல்வதற்கு முன்பாக இது சில ஆலயங்களிலும் பிரபுக்கள் இல்லங்களிலுமே நடைபெற்று வந்தது. நாவலரவர்கள் இதனை சைவம், சைவசித்தாந்தம் பற்றிய அறிவை வளர்ப்பதற்கான பிரசாரக் கருவியாக மாற்றினார். நல்லூர், வண்ணை - சிவன் கோயில் முதலான ஆலயங்கள் எங்கிலும் தமது மாணவ குழாத்துடன் இப்படன முறையைச் செய்து வந்தார். மேற்கூறிய புராணங்கள் ஒரு காவிய ரசனைக்குரிய இலக்கியங்களாக அமையவில்லை. அவை புறத்தோற்றத்தில்

இலக்கியமாகவும் அகத்தோற்றத்தில் சித்தாந்தச் செழும் புதையல்களாகவும் அமைவன. எனவே, புராணம் புறத்தோற்றத்தில் சைவமாகவும் அகத் தோற்றத்தில் சைவசித்தாந்த மாகவும் அமைந்திருக்கும். பிறிதொரு வகையில் கூறுவதானால் புராணபடனம் என்பது இரசனைக்குரியதாக அமையாது சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்கிச் செல்லும் சாதனமாக அமைகின்றது எனலாம். நாவலரவர்கள் புராணப்படன முறையினை அவ்வாறே கருதினர். தமிழ்ப் புராண அமைப்பு முறைகள் பெரிதும் அவ்வாறே அமைந்திருப்பது கவனத்திற்குரிய தொன்றாகும்.

நாவலரவர்கள் ஆண்டுதோறும் புராணப்படனம் செய்துவந்த பொழுதும் அவரது உரைகள் பதிவு செய்யப்படவில்லை. ஆயினும் அங்காங்கே சில பதிவுகள் கிடைக்கத் தான் செய்கின்றன. அவற்றுளொன்று நல்லூர்க் கந்தசாமி கோவிலிலே நாவலர்கள் மருகர் வித்துசிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை வாசிக்க நாவலரவர்கள் உரை சொல்லிய வரலாற்று நிகழ்ச்சியாகும்.

அப்பொழுது படனத்துக்கு எடுத்துக் கொண்ட பாடல்[15]

''வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்
மூதக் கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்''

(கந்தபுராணம் - சூரனமைச்சியற் படலம்)

இப்பாடல் சுத்தாத்துவிதத் தன்மையை விளக்கும் பாடல். சிவஞானபேதம் கூறும் 'அவனே தானேயாய்' என்னும் மகாவாக்கியத் தொடரை நினைவு கூருவதாகும். இப் பாடலுக்கு நாவலரவர்கள் உரை விரித்த முறைமையினைப் பண்டிதமணி சி.க. அவர்கள்,

> ''பதவுரை பொழிப்புரை நடந்ததன்மேல் விரிவுரை நடந்தது. வேதக்காட்சி சாத்திர ஞானம், அது பாசஞானம், உபநிடத்துச்சியில் விரித்த போதக் காட்சி பசு ஞானம், பசுவாகிய ஆன்மா பாசத்தை விலக்கித் தன்னைப் பிரமமயமாகக் காணும் ஞானம். பசுவாகிய ஆன்மா விலக்கித் தன்னைப் பிரமமயமாகக் காணும் ஞானம் அந்த ஞானம். 'நான் பிரமம்' என்னும் ஞானம் அது. பாச, பசு ஞானங்கள் இரண்டுக்கும் இறைவன் எட்டாதவன், அவனருளாலே தான் அவனை எட்டுதல் கூடும். அவனருள் பதிஞானம்.
>
> ''மூவகை ஞானத்தின் இயல்பையும், நேற்றைப் பாலனின் பிரபாவத்தையும் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள், உபநிடதங்கள், சிவாகமங்கள் என்னும் அதிப்பிரபல பிரமாணங்கள் வாயிலாகவும், அநுபவ அநுபூதிமான்கள் வாயிலாகவும் விரிவுரை ஊற்றெடுத்துப் பெருகியது. நீண்டகால தத்துவம் அணுப் பிரமாணமாய்ச் சுருங்கிக் கழிந்தது.''

எனக் குறிப்பிடுவார்.[16] இக்கூற்றின் மூலம் நாவலர்கள் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில சைவசித்தாந்த கோட்பாடுகளையும், அதற்குப் பிரமாணமாக அமையும் நூல்களான திருமுறைகள், சிவாகமங்கள், உபநிடதங்கள் முதலான ஆப்தவாக்கிய நூல்களையும் இவற்றின் ஊடாகத் தெரியும் அநுமான உண்மைகளையும் வெளிப்படுத்தி

அவர்களுக்குச் சைவசித்தாந்த உண்மைகளை அறியச் செய்ததோடு தனது புலமையின் ஆழத்தையும் அகலத்தையும் ஞானத்தையும் காட்டவும் தவறவில்லை. இதனாற்போலும் பண்டிதமணி சி.க. அவர்கள் ஈழநாட்டில் ''புராணபடனம் தனித்ததொரு முறையில் யௌவன தசையை அடைந்து உச்ச நிலையில் விளக்கமுறைச் செய்தவர் ஆறுமுகநாவலர்''[17] எனச் சிறப்பித்துக் குறிப்பிட்டார்.

(2) சைவசித்தாந்தக் கருத்துக்களை உணர்த்தும் வகையில் நூல்களை எழுதி வெளியிடல்

இவ்வகையில் நாவலரவர்கள் எழுதிய சைவ வினாவிடை முதலாம் புத்தகம், சைவ வினாவிடை இரண்டாம் புத்தகம், பெரிய புராண (1884) சூசனம் முதலானவற்றைக் குறிப்பிடலாம். முதலாம் சைவ வினாவிடை நூற்றிமுப்பத்தைந்து வினாக்களையும் தோத்திரத் திரட்டினையும் கொண்டது. நூற்றிமுப்பத்தைந்து வினாக்களும் ஏழு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கடவுள் இயல், புண்ணிய பாவ இயல், விபூதி இயல், சிவமூல மந்திர இயல், நித்திய கரும இயல், சிவாலய தரிசன இயல், தமிழ் வேத இயல் என்பன இவ்வியல்களாகும். இவற்றுள் முதலாம் இயல் தவிர்ந்த ஏனைய இயல்கள் இயமம், நியமம் ஆகியவற்றைச் சார்ந்த மார்க்க நெறிகளைப் புலப்படுத்துவன. கடவுள் இயலில் இறைவனின் பரத்துவத்தை மிகவும் எளிமையான முறையிலே சிறுவர்களின் உளப்பாங்கு அறிந்து அறிமுகப்படுத்தி வைப்பதை அவதானிக்கலாம்.

சைவ வினாவிடை இரண்டாம் புத்தகம் பதினாறு இயல்களையும் தோத்திரப் பாடல்களையும் கொண்டது. இவற்றுள் பதியியல், பசுவியல், பாசவியல் ஆகிய மூன்றும் மூன்று உண்மைப் பொருட்களையும் ஏனையவை முழுமுதற் பொருளை அடைவதற்கான சாதனைகளையும் கூறுவனவாக அமைகின்றன. வேதாகமவியல், சைவபோதவியல், விபூதியியல், உருத்திராஷவியல், சிவலிங்கவியல், நித்தியகருமவியல், சிவாலய கைங்கரியவியல், சிவாலய தரிசனவியல், குருசங்கம சேவையியல், மாகேசுர பூசையியல், விரதவியல், அன்பியல் என்பன ஏனைய இயல்களாகும்.

இறைவனின் பரத்துவம் பற்றி மிகவும் சுருக்கமாகக் கூறி நாவலர்கள் இந்நூல் பொருளின் தன்மைக்கேற்பவும் மாணவரின் உளப்பாங்கிற்கேற்பவும் படிமுறையாக அதனை விளக்கிச் செல்வார். உதாரணமாகக் கூறின்[19]

உலகத்துக்குக் கருத்தா யாவர்?

சிவபெருமான்.

சிவபெருமான் எப்படிப்பட்டவர்?

நித்தியர் (என்றும் உள்ளவர்) சருவவியாபகர் (எங்கும் நிறைந்தவர்) அநாதிமலமுத்தர் (இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்கியவர்) சருவஞ்ஞர் (எல்லாம் அறிபவர்.) சருவகர்த்தா (எல்லாம் செய்பவர்) நித்தியானந்தர் (என்றும் மகிழ்ச்சி உடையவர்) சுவதந்திரர் (தம்வயமுடையவர்)

சிவபெருமான் செய்யும் ஐந்தொழில்கள் யாவை?

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்துமாம். இவ்வைந்தொழிலுஞ் சிவபெருமான் செய்வது தம் பொருட்டோ பிறர் பொருட்டோ? தம்பொருட்டன்று ஆன்மாக்களாகிய பிறர் பொருட்டே. இவ்விடயங்கள் இறைவனின் தடத்த இலட்சணத்தை விளக்குவனவாகும்.

மேலும் சிறுவர்கள் மத்தியில் சைவசித்தாந்தக் கருத்தினைப் புகட்ட வந்த நாவலர் அவர்கள் பொருள் உணர்ந்து தெளிவும் செறிவும் நுட்பமும் வன்மையும் மிக்க நடையைக் கையாண்டு பொருள் உரைப்பார். எடுத்துக்காட்டாகக் கூறின்[20]

''படைத்தலாவது யாது?

ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன, போகங்களை முதற் காரணத்தினின்றும் தோற்று வித்தல்.

காத்தலாவது யாது?

தோற்றுவிக்கப்பட்ட தனு, கரண, புவன போகங்களை நிறுத்தல்.

அழித்தலாவது யாது?

தனு, கரண, புவன போகங்களை முதற் காரணத்தில் ஒடுக்கல்.
(மாயையில் ஒடுக்கல்)

மறைத்தலாவது யாது?

ஆன்மாக்களை இருவினைப் பயன்களாகிய போக்கியப் பொருள்களில் ஆழ்த்துதல்.

அருளலாவது யாது?

ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்தை விளக்குதல்.
உண்மையில் நம்மிற் பலர் இந்த இலக்கணத்தோடு அல்லது வரையறையோடு இவற்றை உணர்ந்து கொள்வதில்லை என்பது வெளிப்படை.
உலகின் தோற்றத்துக்குரிய காரணத்தை நாவலர் பின்வரும் வினாவிடை மூலம் விளக்குவார்.[21]

ஒரு காரியத்துக்குக் காரணம் எத்தனை?

முதற் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என மூன்றாம். குடமாகிய காரியத்துக்கு முதற் காரணம் மண். துணைக் காரணம் திரிகை. நிமித்த காரணம் குயவன்.

தனு, கரண, புவன போகம் எனப்படும் பிரபஞ்சமாகிய காரியத்துக்கு முதற் காரணம் துணைக் காரணம் நிமித்த காரணம் யாவை?

முதற் காரணம் சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி என மூன்று. துணைக் காரணம் சிவ சக்தி, நிமித்த காரணம் சிவபெருமான்.''

நாவலரவர்கள் இங்கு மறைமுகமாக சத்காரிய வாதத்தையும் ''நிமித்த காரணனாகிய முதல்வன் உலகிற்கு முதற் காரணனல்லனாயினும் முதற் காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின் உலகம் ஆண்டொடுங்கி ஆண்டு நின்று தோன்றும்'' என்றும் சைவசித்தாந்த உண்மையையும் கச்சிதமாக உணர்த்துவார்.[22]

சிவசக்தி பற்றிக் குறிப்பிடும் பொழுது சிவசக்தியாவது யாது? என்னும் வினாவை எழுப்பி ''அக்கினியோடு சூடு போலச் சிவத்தோடு பிரிப்பின்றி உள்ளதாகிய வல்லமை'' என விடை இறுப்பார்.[23] சிற்சத்தியே சைவசித்தாந்தத்தில் வினைகளைக் கூட்டுவதற்குக் காரணமாக அமைவது. சிவஞான போதம் இதனை விளக்குகையில் ''ஆணையென்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தியான் வரும் இருவினைகளான் அவை இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிறப்பின்றி நிற்பான்''[24] எனக் குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கதாகும்.

பசுவியல் இருபத்து மூன்று (23) வினாக்களை உடையது. ஆன்மாவின் இயல்பு, பிறப்பு, வினைகள், முத்தி பற்றிய சிந்தனை, நால்வகை மார்க்கம் ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்டவை. ஆன்மாவின் இயல்பை விளக்கமுறச் செய்ய நாவலர் அவர்கள் பின்வரும் வினாவினை வினாவி விடையளிப்பார். வினாவும் வினாவிடையும் வருமாறு:[25]

''வினா : ஆன்மாக்களாவார் யாவர்?

விடை : நித்தியமாய் வியாபகமாய், சேதனமாய்ப் பாசத்தை யுடையோராய்ச், சார்ந்ததன் வண்ணமாய்ச் சாகரந்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப் பயன்களை அநுபவிப்போராய்ச் சிற்றறிவுஞ் சிறுதொழிலும் உடையோராய்த், தமக்கு ஒரு தலைவனை உடையவராய் இருப்பர்.''

இவ்விடையின் மூலமாக நாவலரவர்கள் ஆன்மாவின் இலக்கணம் இயல்பு, வினை, பயன் முதலான விடயங்களை அடக்கிச் சொல்லியுள்ளார்.

பாசவியல் பத்து வினாக்களை உள்ளடக்கியது. அவ்வினாக்கள் மூலம் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் ஐந்து பாசங்கள் பற்றியும் உயிர் அவற்றினின்று விடுபடும் நிலை பற்றியும் மிகவும் இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். எடுத்துக்காட்டாக[26]

''வினா : ஆணவமாவது யாது?

விடை : செம்பிற் களிம்புபோல ஆன்மாக்களின் அநாதியே உடன் கலந்து நிற்பதாய், ஒன்றேயாய் ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாகி அவைகளுடைய அறிவையும்

தொழிலையும் மறைத்து நின்று தத்தங்கால வெல்லையிலே நீக்கும் அநேக சத்திகளையுடையதாய் சடமாய் இருப்பது.''

இதில் ஆணவத்தின் இயல்பையும் குணங்களையும் கச்சிதமாகச் சுட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆன்மாவின் இலட்சியம் ஆணவமலத்தைப் போக்குவதேயாகும். ஆன்மா மலபந்தத் திற்குள் பட்டிருக்கும் வரை ஆன்மா இறத்தல் பிறத்தல் செய்து கொண்டே இருக்கும். இவ்விதத்தில் பிறத்தல் இல்லாதொழிதற்கு மாயாமலத்தைப் பெருக்கி சிற்சத்தியை அதிட்டித்து முத்திப் பேற்றை வழங்குவார் இறைவன் என்பது சைவசித்தாந்த மரபு. இம்மரபினை நாவலர்கள் பின்வரும் வினாவினை எழுப்பி விடையளிப்பதன் மூலம் சிறப்பாக விளக்குவார்.[27]

''வினா : தனு கரண முதலியவைகளும் மலமன்றோ மலமென்பது அழுக்கன்றோ? ஆணவமாகிய அழுக்கை மாயாமலமாகிய அழுக்கினாலே எப்படிப் போக்கலாம்.

விடை : வண்ணான் கோடிப்புடைவையிலே சாணியையும் உவர் மண்ணையும் பிசறி, மிகக் கறுத்தது என்னும்படி செய்து, முன்னையதாகிய அழுக்கோடு பின்னை யதாகிய அழுக்கையும் போக்கி, அப்புடைவையை மிக வெண்மையுடையதாகச் செய்வன். அதுபோலவே சிவபெருமான் ஆன்மாவிடத்தே மாயாமலத்தைக் கூட்டி அநாதி பந்தமாகிய ஆணவமலத்தோடு ஆதிபந்தமாகிய மாயா மலத்தைப் போக்கி, அவ்வான்மாவைச் சிவமாந்தன்மைப் பெரு வாழ்வுடையதாகச் செய்வார்''

ஏனைய இயல்கள் யாவும் சாதனை இயல் சார்ந்தவையாகும்.

பொதுவாக நாவலரவர்கள் எழுதிய இவ்விரு வினா விடைகளும் சைவசமயம் சைவசித்தாந்தம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள முற்படும் ஒருவருக்கு களஞ்சியமாக அமைகின்றன எனலாம். இதனாலேதான் இவ்விரு நூல்களையும் அமிர்தசனாதன சாத்திரம் எனப் போற்றினர் பெரியோர்.[28]

பெரியபுராண சூசனம்

நாவலரவர்கள் பெரியபுராணத்துக்கோர் சூசனம் எழுதி அட்சய ஹூ வெளியிட்டார் என்பர். ந. சதாசிவப்பிள்ளை. 1884ஆம் ஆண்டு திருத்தொண்டர் புராணப் பதிப்புடன் இச் சூசனத்தையும் பதிப்பித்து வெளிப்படுத்தியுள்ளார். பெரியபுராண சூசனம் என்பது பெரியபுராணத்தின் உட்பொருளாய் அமைந்து காணப்படும் சித்தாந்த உண்மைகளைப் பொதுமக்கள் உணரும் வண்ணம் எளிமையான முறையில் வெளிப்படுத்த எழுந்த நூல் எனலாம். நாவலரவர்கள் இந்நூலின் அமைப்பு முறையினை பெரியபுராணப் பகுப்பையோ அமைப்பு முறையினையோ யொட்டி அமைக்காது நாயன்மார் ஒவ்வொருவரையும் ஒரு சூசனமாகக் கொண்டு அவர்களின் சிவத்தொண்டின் மூலம் பெறப்படும் சித்தாந்தக்

கோட்பாடுகளைக் கருப்பொருளாகக் கொண்டு விளக்கிச் செல்வார். இந்நூலின் இடம்பெறும் ''உபோற்காதம்'' என்னும் பகுதி அவர் இந்நூலினை எழுதுவதற்கான நோக்கத்தின் வாயிலாக அமைகின்றது.

(1) திருத்தொண்டர் புராணத்தின் உட்பொருள் சைவசித்தாந்தக் கோட்பாடுகளை உள்ளடக்கி இருத்தல் என்பதை நிறுவுதல்.

(2) சைவசித்தாந்தக் கருத்துக்கள் உபநிடதக் கருத்துக்களோடு இயைபுடையன என்பதை எடுத்துக் காட்டுதல்.

(3) சைவசித்தாந்த முதன் நூல்களான திருமுறைகள், அருட்பாக்கள். மக்கள் அதனால் சமய வாழ்வியலோடு போற்றி வருவதை எடுத்துக் காட்டுதல்.

(4) பிரஞ்சையில்லாத சில பிராமணர்கள் இப்பெரிய புராணத்துக்கு அப்பிராமணியம் பேச முற்படுதலைக் கண்டித்தல்.

இந்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் எழுதப்பட்டதாகத் தெரிகின்றது. ஆயினும் இந்நூலின் முதல் மூன்றினை நன்கு விளக்குவதன் மூலம் திருத்தொண்டர்களின் அநுபூதி நெறியினையும் சாதனைகளையும் துல்லியமாக விளக்கமாகக் காட்டியுள்ளார். அத்தகைய ஆத்மீக சாதனையில் படிப்போரை ஈடுபடுத்தும் வகையில் இச்சூசனத்தை நடத்திச் செல்வார்.

சைவ சமயத்தில் பிறந்து நாற்பாதங்களை அநுட்டித்தே முத்தி பெற வேண்டும் என்றும், வேள்விகளால் கிடைக்கும் இன்பம் முன் பசிக்கு உண்டு பின்னும் புசிப்பவனுக்கு அவ்வுண்டியால் வரும் இன்பத்தைப் போல் அமையும் என்றும், நாற்பாதங்களால் வரும் இன்பமே பதமுத்தியாகிய அவாந்தரப்பலனைத் தருமென்றும் மார்க்கங்களின் சிறப்பை அழுத்தமாகக் கூறுவதோடு சிவத்தொண்டினை நிந்திக்கும் ஸ்மார்த்தப் பிராமணர்களுக்கும் ஆதிசைவர்களுக்கும் சிவத்தொண்டின் திறனை வெளிப்படுத்துவார் நாவலரவர்கள்.[29]

சிவ தர்மம் இரண்டு வகைப்படும். அவை வல்வினை, மெல்வினை என்பனவாகும். இவை சாதனைகளின் அடிப்படையில் அமைவன. மெல்வினையாவது, சைவாகமத்திலே சரியை கிரியைகளுக்கு விதித்தவழி ஒழுகும் விதிமார்க்கம். வல்வினையாவது விதி மார்க்கத்தில் வழுவாது நின்று இந்நிலை முதிர்ச்சியினாலே சிவனிடத்தில் எல்லையின்று முறுவளரும் அன்பின் பெருக்கம். உலகநெறி கடந்து ஒழுகும் பத்திமார்க்கம்.[30] என நாவலரவர்கள் இரு தர்மங்களையும் விளக்குவதோடு அமையாது இச்சூசனத்தின் அடிப்படை நோக்கத்தை அடையவும் முயன்றார். வல்வினை மார்க்கத்தில் நின்று இறையருள் பெற முயன்ற மெய்யடிவர்களாக எறிபத்த நாயனார், கண்ணப்ப நாயனார் போன்றவரைக் குறிப்பிடுவார். மெல்வினையின் பயனாக இறையன்பைப் பெற முயன்றோராக மெய்ப்பொருள் நாயனார், இளையான்குடிமாற நாயனார், ஏனாதிநாத நாயனார் போன்றோரைக் குறிப்பிடுவார்.

சீவன்முத்தர் தத்துவம் சைவசித்தாந்தக் கோட்பாட்டில் முக்கிய உயர்வுடையது. இதனைப் புலப்படுத்த முடியாது. இதனை அனுபூதியால் உணர வேண்டும் அல்லது உணர்ந்தவர்களால் புலப்படுத்தப்பட வேண்டும். நாவலரவர்களும் இத்தத்துவம் பற்றிக் குறிப்பிடும் பொழுது,[31]

> ''சீவன் முத்தராவார் அளத்திபட்ட புற்போலச் சிவப்பிரகாசத்தினாலே போக சாதன மாயுள்ள உட்கரணங்களும் புறக்கரணங்களும் ஆகிய பசுக்கரணங்கள் எல்லாம் சிவ கரணமாய் நிகழப் பெற்றுச் சகல கருவிகளோடும் கூடியிருக்கும் சாக்கிராவத்தையிலே நிருமல துரியாதீதத்தைப் பொருத்தினோர்களாய் பூமியின் கண்ணுள்ள ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டுச் சஞ்சரிக்கும் இயல்புடையயோராம்.''

என வரைவிலக்கணப்படுத்துவார். அத்தோடு அமையாது இக்கோட்பாட்டினை திருநாவுக்கரசு நாயனாரோடு தொடர்புபடுத்தி விளக்கிக் காட்டுவார். திருநாவுக்கரசு நாயனாரை எல்லாச் சித்தாந்த தத்துவமும் தம்முள் கொண்டவராக சைவசித்தாந்த வடிவமாக இச்சூசனத்தின் மூலம் காட்ட முற்பட்டுள்ளார். அதில் வெற்றியும் பெற்றுள்ளார் என்றே கூறுதல் வேண்டும்.

(ʒ) சாதனைகளையும் தத்துவங்களையும் வெளிப்படுத்தும் நூல்களுக்கு உரை எழுதியும் பதிப்பித்தும் வெளியிடல்.

நாவலர்களால், வெளியிடப்பட்ட உரை நூல்களை இரண்டு வகையினுள் அடக்கலாம்.

1) உரை நூல்கள்

2) வசன நூல்கள்

நாவலரவர்கள் தாம் உரை எழுதுவதற்குத் தேர்ந்தெடுத்த உரை நூல்களும் சாதனை நெறிகளையும் பயன் நெறிகளையும் விளக்கும் நூல்களாகவே அமைந்துள்ளன. வாக்குண்டாம், நல்வழி, நன்நெறி, கொன்றைவேந்தன் முதலானவை சைவசித்தாந்தம் கூறும் உலகியல் நெறியை வழிப்படுத்துவன. கொலை மறுத்தல் உரை, சௌந்தரியலகரி உரை, உபநிடத உரை என்னும் உரை நூல்களை நாவலரவர்கள் பதிப்பித்தார். இவற்றுள் உபநிடதவுரை சித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறுவதோடு சைவசித்தாந்த நெறியின் பயன் இயலைச் சுருக்கமாகச் சிறப்பாக விளக்குவது.

நாவலரவர்கள் கந்தபுராணம் (அசுரகாண்டம்வரை - 1861) பெரிய புராணம் வசனம் (1852), திருவிளையாடற் புராணம் (1910), சிதம்பரமான்மியம் (1895), சிவாலய தரிசனவிதி (1961) முதலான நூல்களை வசனநடையில் எழுதியுள்ளார். நாவலரவர்களது வசனநடை முயற்சி சைவசித்தாந்தம் காட்டும் வாழ்வியல் நோக்கை நோக்கி சைவர்களை நெறிப்படுத்தும் பொருட்டு நாவலரவர்கள் மேற்கொண்ட சிறப்பானதொரு பணியாகும். இதன்மூலம் சைவசித்தாந்த வரலாற்றுப் போக்கில் நாவலரவர்களைப் புதிய திருப்பு முனையொன்றினை ஆரம்பித்து வைத்தார். இந்நூலின் முகவுரையில் நாவலர் அவர்கள்,[32]

''பெருஞ்சிறப்பினதாகிய அந்நூலானது பத்திய ரூபமாய் இருத்தலால் நிகண்டு கற்று இலக்கிய வாராய்ச்சி செய்து இலக்கண நூல்களிலே பயின்ற வித்துவான்களுக்கேயன்றி மற்றவர்களுக்குச் சிறிதும் பயன்படாமையாலும் அவ்வித்துவான்களுக்கும் நோய் கவலை முதலிய ஏதுக்களால் விவேகங் கிளராக் காலத்துப் பயன்படாமையானும் நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும், கல்வி இல்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும், நாயினுங் கடையனாகிய என்னை ஒரு பொருளாகக் கருதி ஆட்கொண்டருளிய கிருபா சமுத்திரமாகிய ஸ்ரீமத் குருமூர்த்தியுடைய திருவடிகளைச் சிந்தித்து வணங்கி அவரது திருவருளினாலே, அதனைப் பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை அவசியமாகிய திரிசொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்படும் கத்தியரூபமாகச் செய்து வாசிப்பவர்களை எளிதில் பொருள் கொள்ளும்படி சிறுபான்மையும் சந்தி விகாரமின்றி, அச்சிற் பதிப்பித்தேன்.''

என்று குறிப்பிடுவது சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கை சாதனை நெறிகளில் ஒன்றாக அமைந்த சமய வாழ்க்கைப் படிநிலைக்கு மக்களை வழிப்படுத்தும் திறனை எடுத்துக் காட்டும்.

மற்றும் நாவலரவர்கள் எழுதிய சிவாலய தரிசனவிதி, அநுட்டானவிதி (1866), சிவ பூசாவிதி, குருவாக்கியம் முதலியன சாதனைநெறி சார்ந்தவையாகும். பதினொராம் திருமுறை (1869), அருணகிரிநாதர் திருவகுப்பு (1867), கந்தபுராணம் (1869), கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, சிதம்பர மும்மணிக்கோவை (1866), சிவ கவசம், விநாயகர் கவசம், சக்தி கவசம் (1868), சேதுபுராணம் (1866), நால்வர் நான்மணிமாலை, பெரிய நாயகி திருவிருத்தம், பெரிய நாயகி கலித்துறை, பிஷாடன நவமணிமாலை (1873), பட்டனத்துப் பிள்ளையார் திருவருட்பாத்திரட்டு (1873) முதலான நூல்களை நாவலரவர்கள் சைவம், சைவசித்தாந்த வளர்ச்சியின் பொருட்டுப் பதிப்பித்துள்ளார். இவை அனைத்தும் தோத்திரங்களாகும். இவை சைவசித்தாந்த வளர்ச்சிக்குப் போதகமாக உள்ளவை. இந்நூல்களில் நாவலரவர்கள் பதிப்பித்த அருட்பா தெரிந்தெடுக்கப்பட்ட திருமுறைகளின் தொகுப்பாக அமைவது. பதினொராம் திருமுறை திருவாலவாயுடையார் முதல் நம்பி யாண்டார்நம்பி ஈறாக பன்னிருவர் பாடிய பிரபந்தங்களின் தொகுப்பாகும்.

நாவலரவர்கள் சைவத்தின் வழி சைவசித்தாந்தத்தின் அநுபூதியைப் பெற வேண்டு மானால் அருட்பாக்களையே மாத்திரம் ஓதப்படல் வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். அருட்பாக்களென அவர் கொண்டவை தேவாரம், திருவாசகமும் ஏனைய திருமுறைகளுமேயாகும். இவ்வருட்பாக்கள் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

''தேவாரம் திருவாசகம் முதலியவை பசுகரண நீங்கிச் சிவகரணம் பெற்ற நாயன் மார்களாலே அளிச்செய்யப்பட்டனவென்றும் இவைகளே சிவாலய நித்திய நைமித்தியங் களிலும் சந்தியாவந்தனம் சிவபூசை முதலியவைகளிலும் ஓதத் தகுந்தனவென்றும் இவைகளே வேதத்தினும் பார்க்கத் தமக்கு அதிக பிரீதியுள்ளவைகள் என்றும் எமது

பிதாவாகிய சிவபெருமான் தமது அருட்சத்தியும் நமது உலகமாதாவுமாகிய உமாதேவியார் கேட்கும்படி திருவாய் மலர்ந்தருளினார் என்று சிவரகசியத்தில் கூறப்பட்டு இருக்கின்றன என்பர்.[33]

மேற்கூறிய தோத்திரங்களும் புராணங்களும் சாதனைக்கு வழிகாட்டுபவை. சாதனையின் தளம் தோத்திரங்களே எனலாம். நாவலரவர்கள் இக்கருத்துப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.[34]

சைவர்கள் ஓதி உணர்தற்கு அத்தியாவசியமாய் இருக்கும் நூல்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் என்பனவைகளாம். இவைகள், சிவபிரானது திருவருளினாலே பாடப்பட்டமையால், அருட்பாவென்று சொல்லப்படும். இவைகளுள் முன்னைய நான்கும் பதி, பசு, பாசமென்னும் திரிபதார்த்தங்களின் இலக்கணத்தை உணர்த்துஞ் சைவ சித்தாந்த சாத்திரத்தின் அனுபவப் பயனாகிய தோத்திரமாய் இருக்கும். பின்னையாகிய திருத்தொண்டர் பெரிய புராணம் சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்து முத்தி பெற்ற மெய்யடியார்களுடைய அடிமைத்திறத்தை விளக்குவதாகிய சரித்திர ரூபமாய் இருக்கும்.

சாதனை என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களாகும். தோத்திரங்களும் சாத்திர நூல்களும் சரியை, கிரியை நெறிகளின் பாற்பட்டவை. தோத்திர நெறி நின்றே ஏனைய நெறிகளை அடைய ஒவ்வொரு சமயியும் முயல வேண்டும். அவ்வடிப்படையிலேதான் நாவலரவர்கள் திருமுறைகளின் பெருமையை சைவ உலகிற்குக் காட்டினார். படிக்கும் தோறும் சமய உணர்வினைத் தூண்டி அதன் மூலம் அந்நெறிக்குள் அவனை இட்டுச் செல்லும் தகைமை சான்ற நூல்களையும் அவ்வகையினுள் அடக்கிக் காட்டி அத்தன்மையோடு நூல்களை எழுதியும் பதிப்பித்தும் சைவசித்தாந்த சாதனை நெறியினை வளர்த்துச் சென்றார்.

(4) சைவசித்தாந்தக் கோட்பாடுகளைப் பிழையாக விளங்கியும் வேண்டுமென்றும் கண்டனஞ் செய்வோர்க்கு எதிராகப் பிரதிகண்டனஞ் செய்து சைவசித்தாந்த உண்மையை நிறுவுதல். இராமலிங்க அடிகளார், வேலு முதலியார் முதலியோர் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் பற்றிப் பிழையாக வியாக்கியானம் செய்ய முயன்றபோது அவற்றைச் சுட்டிக் காட்டுவதும், கிறிஸ்தவ மிஷனரிமார்கள் சைவத்தையும் அதன் கருவியாகிய சைவசித்தாந்தத்தையும் உணர்ந்துகொள்ளாது சைவத்தின்மீதும் சைவசித்தாந்தத்தின்மீதும் கண்டனம் செய்த பொழுது நாவலரவர்கள் செய்த பிரதிகண்டனங்களும் சுதேசிகளின் ஆகம விரோதச் செயல்களைக் கண்டித்து வெளிப்படுத்திய பிரசுரங்களும் இதனுள் அடங்கும்.

இராமலிங்க அடிகளார் நாவலரின் சமகாலத்தவர், அனுபூதிமான் என அவர் மாணாக்கர் குழாத்தால் போற்றப்பட்டவர். இன்றும் போற்றப்படுபவர். அவர் பாக்கள் திருவருட்பாவென பெயர் கொடுத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவர் பல நூல்களின் ஆசிரியர். மனுமுறை கண்டவாசகம் (1854), ஜீவகாரணிய வொழுக்கம் (1879), தொண்டை

மண்டலசதகம் (1855) முதலான நூல்களின் ஆசிரியர். அவர் ஒழிவில் ஒடுக்கம் (1851) என்னும் நூலைப் பதிப்பித்தவர். அதில் ''பிரளயாகலர் மும்மலங்களுள் ஒருமலநீத்தோர்'' எனக் குறிப்பிட்டதை நாவலரவர்கள் வெகுவாகக் கண்டித்துள்ளார்.[35]

> ''பிரளயாகலராவார் இருமல முடையவராகிய உருத்திரர்களென்பதும், சகலராவார் மும்மலமுடையராகிய பிரமவிட்டுணு முதற் கிருமியீறாக உள்ள உயிர்கள் என்பதும் சாதாரணமாகிய தத்துவக் கட்டளைகள் வாசித்தவளுக்கும் தெரியுமே! அஃதறியாது பிரளயாகலர் மும்மலங்களுள் ஒரு மல நீத்தோர், அவர் பிரமன் முதலானோர் என்று ஒழிவிலொழுக்கவுரைப் புத்தக முதலிலே பதிப்பித்த இராமலிங்கப்பிள்ளையா ஓதாதுணர்ந்தவர்.''

என நாவலர்கள் ஆன்மாக்களின் இயல்பையும் சித்தாந்த உண்மையையும் எடுத்துக் காட்டுவார்.

இராமலிங்க அடிகளாரின் முதல் மாணாக்கருளொருவர் வேலுமுதலியார். அவர் திருவாவடுதுறையாதீனத்திற்குப் போயிருந்தபொழுது அங்குள்ள சைவப் பெரியோர் ''சிவஞானபோதம் அதிகாரம் - இயல் முதலானவைகளால் எத்துணைப் பகுப்புடையது? முதன் மூன்று சூத்திரங்கள் முறையே திரிபதார்த்தங்களில் எவற்றைச் சொல்லுகின்றன? விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலராவார் யார்? சொல்ல வேண்டும்'' என்று விண்ணப் பித்தனர்.[36] இவ்வினாக்களுக்கு வேலுமுதலியார்,

> ''சிவஞானபோதம் எட்டுப் பிரிவினையுடையது. பெயர்யாதில்லை. முதற் சூத்திரம் சங்காரத்தைச் சொல்லிச் சிருட்டிப்பதைச் சொல்லுமுகத்தாற் பதியுண்டென்று சொல்லு கின்றது. அது பயனுக்குப் பயனாகக் கொள்ள வேண்டும். இரண்டாஞ் சூத்திரம் பசு வுண்டென்று சொல்லுகிறது. மூன்றாஞ் சூத்திரம் பாசமுண்டென்று சொல்லுகின்றது. விஞ்ஞானகலர் பிருங்கி முதலாயினோர். சிலர் சதாசிவவாதிகளாகச் சொல்லுவர். பிரளயாகலர் பிரமன் முதலாயினோர். சிலர் உருத்திரராதியாகச் சொல்வர். இவை மூலாகமபேதம்''

மேற்கண்டவாறு பதிலுரைத்தார்.[37] இப்பதிலினை அப்பெரியோர் 'பாவச்செய்கை' எனக் கூறி நகைத்தனர் என்பதையும் நாவலரவர்கள் எடுத்துக்காட்டுவதன் மூலம், சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைப் பிழையாக விமர்சிப்போரையும் நகைப்பிற்கு உள்ளாக்கினார்.

கிறிஸ்தவர்கள் சைவத்தில் காணப்படும் பல வழிபாட்டு முறைகளையும் சிவசின்னங் களையும், சக்திக் கோட்பாடுகளையும், ஆலயக் கிரியை முறைகளையும், மூர்த்தி தத்துவங்களையும், எள்ளிநகையாடிக் கண்டித்து வந்தனர். அதன் பொருட்டு சிறு சிறு பிரசுரங்களையும் நூல்களையும் வெளியிட்டு வந்தனர். அவ்வகையில் நன்கொடை, மும்மூர்த்தி லஷனம், குருட்டு வழி முதலான நூல்களைக் குறிப்பிடலாம்.

மும்மூர்த்தி லஷணம் என்னும் பத்திரிகையின் மூலம் சிவனின் பரத்துவமும் நற்கொடை என்னும் பத்திரிகை மூலம் முருகக் கடவுளின் பரத்துவமும் விமர்சனத்துக்கு உள்ளாகின.

கந்தசுவாமியிடத்திலே பதிலஷணம் இல்லையென்பதற்குப் பாதிரிமார் காட்டும் நியாயம் வருமாறு.[38]

''கந்தபுராணத்திற் கூறப்படும் அவருடைய சரித்திரங்களுள் அவர் சாகரங் கொண்டு பிறந்தமையும் தெய்வயானையம்மையை விவாகஞ் செய்தமையும், கன்னிகையாகிய வள்ளியம்மையிடத்திற் சென்று அவளைத் தம்மோடு புணர்தற்குடன்படும்படி பிரார்த்தித்து அவள் உடன்படாமை கண்டு, தமது தமையனாராகிய விநாயகக் கடவுளை யழைக்க அவர் யானைவடிவங்கொண்டு வந்தமை கண்டு அஞ்சித் தம்மிடத்தே அடைக்கலம் புகுந்த அவளைப் புணர்ந்தமையுமேயாம். இம்மூன்று முடையார் பதியெனப்படுதல் கூடுமோ!''

சிவனது பரத்துவம் பற்றி விமர்சிக்கும் பொழுதும் ''பரமசிவன் பார்வதியைப் புணர்ந்தார் பிரிந்தார்.[39] ஆதலால் பரமசிவனைப் பதியெனப்படுதல் கூடுமோ'' என்றனர். பாதிரிமார்கள் எழுப்பும் இவ்வினாக்களுக்கு நாவலரவர்கள் சுப்பிரபோதம் என்னும் தனது நூலில் பின்வருமாறு பதிலுரைப்பது அவதானிக்கத்தக்கது.

1) சிவபரத்துவம் - (சிவன் + பார்வதி)

ஆண் பெண் அலி என்னும் மூன்றுமல்லாத அநாதி மலமுத்த பதியாகிய சிவத்தையே சர்வான்மாக்களையும் தோற்றுவித்தலால் ஆண்பாற்படுத்துப் பிதாவெனவும், சூரியனுக்குக் கிரணம்போல அச்சிவத்துக்கு அபின்னமாயுள்ள சத்தியையே நிமித்த காரணமாகிய அச்சிவம் அத்தொழிலியற்றுதற்குத் துணைக் காரணமாயிருத்தலால் பெண்பாற்படுத்து மாதாவெனவும், அச்சிவம் அச்சத்தியோடு கூடி உத்தியோகித்துச் சங்கற்பித்தலையே அவ்வான்மாக்களது தோற்றத்துக்குக் காரணத் தொழிலாகையால், உகந்து புணர்தலெனவும் அச்சங்கற்பம் இல்லாமையையே பிரிதல் எனவும், சொல்லியதென்றறிக.

நாவலரவர்கள் கூறும் மேற்கூறிய கருத்து ஆழ்ந்த சித்தாந்தப் புலமையோடு கூடியதாகும்.[40] சிவஞானபோத உரையாசிரியர்:

> ''உலகம் முழுவதும் ஒடுங்கிய முற்றழிப்புக் காலத்தில் (சருவ சங்கார காலத்தில்) இறைவன் யாதொரு தொழிலையும் செய்யாது வாளா இருப்பான் அதுவே அவனது உண்மைநிலை (சொரூப லட்சணம்) இந்நிலையில் அவன் பரசிவம், பரமசிவன், சொரூப சிவன், சுத்த சிவன் என இவ்வாறு சொல்லப்படுவான். இந்நிலையில் அவனது சக்தி பராசக்தி எனப்பெயர் பெற்று நிற்கும். அப்பொழுது மாயை தனது உண்மை நிலையாகிய காரணநிலையில் சத்தி மாத்திரமாய் சூக்குமமாய் நிற்கும்''

எனக் குறிப்பிடுவதும் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.[41]

இதனையே சிவஞானபோதம் ''போக்கு வரவு புரிய வாணையிற் நீக்கமின்றி நிற்கு மன்றே'' (சி.போ.சூ. 2) எனக் குறிப்பிடும். உலகவொடுக்கத்துக்கு முதற்காரணம் - சிவன், துணைக்காரணம் சத்தி - பராசத்தி, நிமித்த காரணம் - உலகம். சங்காரத்தில் இறைவனிடத்தில் ஏனைய சத்திகள் ஒடுங்குதல் புணர்தல் எனவும் மீளத் தோன்றல் - பிரிதல் எனவும் அவாய்நிலை வழி இயைபு காட்டுதல் சித்தாந்த மரபாகும்.

2) கந்தசுவாமிக் கடவுளின் பரத்துவம்: கந்தசுவாமி + தெய்வானை வள்ளியம்மை

> ''அக்கினி சத்தி ஒன்றாய வழியும், சுடப்படுவதும் விளக்கப்படுவதும் அடப்படுவதுமாகிய விஷயத்தில் சூடு விளக்கம் அடுதலாகிய தொழிலினால் பலவாதல் போல, கந்தசு வாமியினது சத்தி ஒன்றாய வழியும் கிருந்திய பேதத்தால் இச்சாசத்தி, ஞான சத்தி, கிரியா சத்தியென மூவகைப்படும். அவற்றுள் இச்சாசத்தியாவது ஆன்மாக்களை முத்தியடைவிக்க விரும்புதல். ஞானசத்தியாவது அவ்வான்மாக்களுடைய கர்மங்களையும் அக்கர்மங்களுக்கீடாகிய தனு கரண புவன போகங்களை உபாதானத் திரயத்தினின்றும் தோற்றுவிக்கு முறைமையும் அறிதல். கிரியா சத்தியாவது அவ்வான்மாக்களுக்குக் கர்மசமத்துவம் பிறப்பிக்கும் பொருட்டுக் கர்மங்களைப் பக்குவாபக்குவ மறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைப்பித்தல். கந்தசுவாமிக்கு இம்மூன்று சத்திகளுமே புராணங்களில் முறையே வள்ளியம்மை, தெய்வயானையம்மையெனக் கூறப்பட்டன. சைவாகமங்களை ஓதியுணராதார் இவற்றின் உண்மைப் பொருளை யுணராது மயங்குவார்கள்.''

என கந்தசுவாமிக் கடவுளின் பரத்துவம் கூறுவதோடு[42] கந்தசுவாமி சிவனுக்கு வேறாகாரென்பதையும் மூலநூல், வழிநூல், சார்புநூல் முதலானவற்றின் வாயிலாக எடுத்துக்காட்டுவார்.[43] குறிப்பாக:

> *அருவமு முருவுமாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்*
> *பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்*
> *கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே*
> *யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய''*

போன்ற கந்தபுராணம் - திருவவதாரப் பாடலச் செய்யுட்களை எடுத்துக்காட்டி நிறுவுவார்.

கந்தசுவாமியினது சத்தி ஒன்றாய வழியும் கிருத்திய பேதத்தால் இச்சத்திகள் மூவகைப்படும் என்பதைச் சித்தாந்த உரைநூல்கள்,

> ''பரமசிவன் உலகத்தை மீளத் தோற்றுவிக்க விரும்புவான், அவ்விருப்பத்தின் எழுச்சியே அவனது இச்சாசத்தி எனப்படுகின்றது. அங்ஙனம் இச்சாசத்தி அவன் படைக்குமாற்றை எல்லாம் அறியுமிடத்து அவனது சத்தி ஞானசத்தி என்றும், அறிந்தவாறே படைத்தல் முதலியவற்றைச் செய்யுமிடத்து அவனது சத்தி, கிரியா சத்தி என்றும் பெயர் பெறும்.''

எனக் குறிப்பிடுவதும்[44] மேற்கூறிய கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது. பாதிரிமார் பரமசிவன், கந்தசுவாமிக் கடவுளார் ஆகியோருக்கு உலகியல் விளக்கங் கண்ட நிலையில் நாவலரவர்கள் பரமசிவன், கந்தசுவாமிக் கடவுள் ஆகியோருக்குச் சித்தாந்த விளக்கம் அளித்து அக்கடவுளர்களின் ஒருமித்த பரத்துவத்தை நிறுவியிருப்பதில் நாவலரவர்கள் சைவ சித்தாந்தக் கோட்பாட்டில் கொண்டிருந்த அளவற்ற ஈடுபாட்டையும் சைவத்தையும் சைவ சித்தாந்தத்தையும் வளர்த்துச் செல்லும் பாங்கையும் அறிய முடிகின்றது.

மேலும், நாவலரவர்கள் சைவவிரோதம் (1875), சைவசமயி (1875), அநாசாரம் (1875), திருக்கோயிலிலுந் திருவீதியிலுஞ் செய்யத்தகாத குற்றங்கள் (1875), சைவசமயம் (1875), கைவிளக்கு (1877), யாழ்ப்பாணச் சமயநிலை (1872), வண்ணார்பண்ணைக்

கதிரேசன் கோயில் (1879) முதலான பிரசுரங்கள்மூலம் சைவசமயிகளின் புறவயப்பட்ட சமய ஒழுகலாறுகளைச் சரியான வழிகளில் கைக்கொண்டு அவற்றின் மூலம் தம்மை அகவயப்பட்ட ஒழுகலாறுகளிலும் ஆன்மீகத்திலும் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துவார்.

5) சைவசித்தாந்தவாதிகளைத் தமது மானசீகக் குருவாகக் கொண்டு சைவசித்தாந்தக் கோட்பாட்டினை வளர்த்தல்

நாவலரவர்கள் சைவசித்தாந்தக் கோட்பாட்டினை வளர்த்துச் செல்வதற்கு இரு சித்தாந்த வாதிகளைத் தமக்கு முன்னோடியாகக் கொண்டார். ஒருவர் சிதம்பரம் குகைமடம் மறைஞான சம்பந்தர், மற்றவர் சிவஞான சுவாமிகள்.

மறைஞான சம்பந்தவர் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சிவதருமேந்திரம் (மொழிபெயர்ப்பு) சைவ சமயநெறி, சங்கப நிராகரணம், பதிபசுபாசப்பனுவல், சிவராத்திரி கற்பம், மாதசிவாரத்திரிகற்பம், சோமவார சிவராத்திரி கற்பம், வாக்கியவியல், உத்திராக்க வசிட்டம், சகலாகமசாரம், அருணகிரி புராணம் முதலான நூல்களின் ஆசிரியர்.

இவ்வகை நூல்களின் ஆசிரியரான மறையான சம்பந்தரை ஆன்மார்த்தவாதி என்று குறிப்பர். ஆன்மார்த்தவாதம் சைவசித்தாந்தக் கோட்பாட்டின் முத்திநிலைக் கோட்பாட்டினின்று சற்று வேறுபட்டது. இவர் எழுதிய முத்திநிலைக்கு எதிராக திருவாவடு துறையாதீனத்தைச் சார்ந்த குரு ஞானசம்பந்தர் முத்திநிச்சயம் என்ற நூலை எழுதியமை இங்கு நினைவுகூரத் தக்கது. நாவலரவர்கள் தமது சைவசித்தாந்தக் கோட்பாட்டிற்குச் சற்று மாறுபாடான கோட்பாடான ஆன்மார்த்தவாதக் கோட்பாட்டை உடையவராக மறைஞான சம்பந்தர் விளக்கிய பொழுதும் அவருடைய நூல் பல சைவசித்தாந்த சாதன நெறிகளை வளர்த்துச் செல்வதற்குச் சாதகமாக அமையும் என்பதைப் பூரணமாக நம்பினார். அவ்வகையில் நாவலர்கள் தெரிவித்த சாதனையியல் பற்றிய கருத்துக்கள் பல மறைஞான சம்பந்தர் வழி வந்தனவாகும்.

அதுமாத்திரம் அல்லாது அவருடைய நூலான சைவசமய நெறிக்கு நாவலர் அவர்கள் அகலவுரை கண்டார். அந்நூல் பாயிரம் உட்பட (25 + 372) 597 குறள் வெண்பாக்களைக் கொண்டது. ஆசிரியரிலக்கணம், மாணாக்கரிலக்கணம், பொது இலக்கணம் எனும் மூன்று பகுப்புக்களை உடையது. இவ்வகலவுரையில் பல்வேறு உரை நெறிகளையும் பின்பற்றி, ஆகம சைவசித்தாந்த நூல்களைப் பிரமாணம் காட்டி சைவசித்தாந்த சாதனைகளையும் பயனையும் விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாவலரவர்களுக்கு மானசீக குருவாக விளங்கியவர் சிவஞான முனிவர். சிவஞான முனிவர் இயற்றிய நூல்களையும் பாடிய பிரபந்தங்கள் முதலான பலவற்றைப் பதிப்பித்தவர் நாவலர். சிவஞானபோத மூலமும் சிவஞான முனிவர் சிற்றுரையும், தொல்காப்பிய சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, குளத்தூர் அமிர்தாம்பிகை பிள்ளைத் தமிழ் முதலான பிரபந்தங்களையும் பதிப்பித்தவர் நாவலரவர்கள். நாவலரவர்கள் தாம் எடுத்துக் கொண்ட சைவசித்தாந்தக் கோட்பாட்டினை உறுதிப்படுத்துவதற்குச் சிவஞான சுவாமிகளின்

உரைகளில் இருந்தே மேற்கோள்களைப் பெரிதும் காட்டுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். சைவசமய நெறி என்னும் நூலினுள் வரும்.

''பெறினு மபேதம் பிரமத் துலகத்
துறுதியு ளிச்செய்கை விளையும்'' *சை.ச. நெறி. பொ*

என்னும் செய்யுளுக்கு ''பிரமத்துபேதம், ஆசாரியன் சிவத்தோடு அத்துவிதமாய் இருப்பினும் ஆன்மாக்களுக்கு உறுதியை நினைத்து கிரியையையும் விடாது அநுட்டிக்கக் கடவன்'' என உரை வழங்கியதோடு[45] அமையாது ''அத்துவிதம்'' என்பதற்கு சிவஞான முனிவரின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு குறிப்பிடுவது அவதானிக்கத்தக் கதாகும்.[46]

> ''அத்துவித நிலையாவது ஆன்மபோதமும் கண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டற ஒற்றுமைப்பட்டு நிற்றல். பிரமமும் ஆன்மாவுமெனப் பொருளிரண்டில்லை ஒன்றேயெனக் கூறுவர் மாயாவாதிகள். சிவமும் ஆன்மாவும் வேறு பொருளெனவும் அவ்விருபொருளே இரண்டென வேற்றுமைப்படாது அத்துவிதமாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்குமெனவும் கூறுவர் சைவசித்தாந்திகள். அத்துவிதமென்னுஞ் சொற்கு இரண்டின்மையெனப் பொருள் கொள்வர் மாயாவாதிகள், இரண்டன்மையெனப் பொருள் கொள்வர் சைவசித்தாந்திகள்.''

6) சிவானுபூதி நெறியினைத் தத்துவங்களோடு இணைத்துத் தனிப்பாடல்களாகத் தரல்

நாவலரவர்கள் தமிழில் சிறந்த வித்துவான், பாடும் ஆற்றலும் வல்லமையும் படைத்தவர். அவ்வாறு இருந்த பொழுதும் நாவலரவர்கள் கவிதை பாடுவதைத் தவிர்த்துக் கொண்டார். அவ்வாறு நாவலரவர்கள் பாடமைக்கு வரலாற்று ஆசிரியர்கள் பின்வரும் கருத்துக்களை முன்வைப்பர்.[47]

> ''பாட்டுக்கள் தோத்திரம் ஒன்றற்கே யல்லாமல் மற்றவைகளுக்கு அவ்வளவு சிறந்தன அல்ல என்பதும், பாட்டு வடிவமான நூல்களாற் சாமானிய சனங்களுக்குப் பிரயோசன மில்லை என்பதும், தற்காலத்தில் இங்கிலிஷ், சமஸ்கிருதம் முதலிய பாஷைகளிலும் வசனங்களே வழங்குகின்றன என்பதும், இனித் தோத்திரத்துக்கும் தேவார திருவாசகம் முதலிய அருட்பாக்கள் இருக்கும்போது அவற்றுக்கு மேலாக நாம் என்ன தோத்திரத்தைச் செய்யப் போகிறோம் என்பதும் இவர் கருத்துக்களாகும். அதனாற்றான் பாட்டுப் பாடுவதை ஒழித்துக் கொண்டார்.''

ஆயினும், தனது ஆற்றலுக்கு மிஞ்சிய செயலை செய்ய முற்படும் பொழுதும் தனது ஆற்றாமையின் எல்லையிலும் இறையை நொந்து தனது இலட்சியத்தையும் மீறிக் கொண்டு தனது ஆதங்கத்தை இறைவனிடம் முறையீடு செய்யும்பொழுது அவனைக் கவிதை வடிவிலே பாடினார். அப்பாடல்கள் பல்வகை மெய்பாடுகளை உணர்த்தி நிற்கும். அதேசமயம் தத்துவக் கருத்துக்கள் நிறைந்ததனவாகவும் காணப்படுகின்றன. நாவலரவர்கள் தனிப்பாடல்களை முதன்முதலில் தொகுத்தவர் சி. செல்லையாபிள்ளை

அவர்கள்.[48] அவரே நாவலர்களின் சிவாநுபூதித் தன்மையை முதன் முதலில் சைவ உலகிற்கு வெளிப்படுத்தியவர். அச்சிவாநுபூதித் தன்மையைப் பின்வருமாறு புலப்படுத்துவார்.[49]

> ''வண்ணபுரமெனச் சொல்லப்படும் அராலியிலுள்ள சிவன் கோயிலில் நள ஹூ சித்திரை மாதம் (1856) நடைபெற்ற விக்கினேஸ்வரப் பிரதிட்டைக்கு அக்கோயில் ஆதீனஸ்தரும் பிரதிஷ்டாசிரியரும் அருச்சகருள் ஒருவருமாகிய பிரமம் ஸ்ரீ ச. செல்லையா குருக்கள் என வழங்கிய கங்காதரக் குருக்கள் அவர்களால் அழைக்கப்பட்டு நாவலர் அங்கே சென்றார். கோவிலை அடைந்தபோது வழக்கம் போற் றிட்டஞ் செய்து வைக்கப்பட்ட பட்டுவஸ்திரம் பழம் தாம்பூலமாதி நிவேனதப் பொருட்களை வேலகாரன் உடன் கொண்டு மறந்து போனமை தெரிந்து அவற்றை அக்கிராமத்திற் தேடுதற்கேனும் அல்லது ஏழுமைல் தூரத்திலுள்ள தமது கிராமத்திலிருந்து தருவிக்கவேனும் கூடாமையால் ''சீரேறுகருணையுருவாய்'' என்ற தொடக்கத்து மூன்று விருத்தங்களையும் முறையே சித்திவிநாயகர், விசுவநாதசுவாமி, விசாலாட்சி அம்மையாகிய மூவர் பேரிலும் பாடிச் சூட்டி வணங்கினார். புத்திரப் பேற்றைப் பெரிதும் விரும்பியே சித்திவிநாயகரைப் பிரதிஷ்டை செய்த அவ்வாசாரியாரின் உள்ளக்கருத்தை அறியாமலே ''நினதிரண்டு கழல் பணிந்திடின் மகப்பேறு முதலியனையும் கைகூட லரிதாகுமோ'' எனத் தோத்திரத்தில் அமைத்தவாறே அவ்வாசாரியருக்கு ஆண்மகவு கிடைத்ததென்று இவ்வரலாற்றையும் அம் மூன்று பாக்களையும் எமது சிறுவயதில் அவ்வாசிரியர் சொல்லக் கேட்டு அறிந்தோம்.''

அப்பாடல்களுளொன்று வருமாறு.[50]

> *சீரேறு கருணையுறு வாயவிசு வேசனொடு திகழ்விசாலாட்சிதந்த*
> *செல்வமே யடியவர்க ளினிதுண்ண வுண்ணத் தெவிட்டாத தெள்ளமுதமே*
> *பேரேறு மறிவிச்சை தொழிலென்று மதமூன்று பெருகு மானந்த வடிவே*
> *பிரணவப் பொருளே யென்னுறவே யெனுள்ளமே பேசுமிரு கண்ணின் மணியே*
> *காரேறு நெடுமாலொ டயன்முத லியாவருங் காணரிய நினதிரண்டு*
> *கழல் பணிந் திடின்மகப் பேறுமுதலியவையுங் கைகூடலரிதாகுமோ*
> *வாரேறு களபபரி மளமருவு முபயமுலை வலவை யுளமகிழ் கொழுநனே*
> *வண்டுமது வுண்டுலவு தண்டலை யராலிநகர் வாழ்சித்தி வேழமுகனே*

இப்பாமாலை தேவாரங்களோடும் திருவாசகத்தோடும் ஒப்புநோக்கி உணர்ந்து பரவசம் கொள்ளத்தக்கது.

செல்லையாபிள்ளைக்குப் பின் நாவலரவர்களின் வரலாற்றை எழுதியோர்களும் நாவலர்களின் தனிப்பாடல்கள் அவர் சிவாநுபூதி நெறியில் நின்று பாடினவாகவே காட்டிச் செல்வர். நாவலரவர்கள் பாடிய ஆறு கீர்த்தனைகளையும் காசநோய் கொண்டிருந்த விநாயகமூர்த்திச் செட்டியார் கதிர்காமத்துக்குக் கொண்டு சென்று அக்கோயில் முருகன் சந்நிதியில் பாடினாரென்றும் அதன்மூலம் அவர் அந்நோய் நீங்கப் பெற்றாரென்று[51] யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, சைவப்பிரகாச வித்தியாசாலை பிடியரிசி தெண்டியும்

நடத்த முடியாத நிலையில் வித்தியாசாலையில் நிரந்தர வருவாய்க்காக ஒரு வர்த்தக சாலையை வாங்க விரும்பியும் பணமற்ற நிலையில் தம் உடையவரை நோக்கி,

''மணிகொண்ட கடல்புடை கொளிந் நாட்டி லுன்சமய
வர்த்தன மிலாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் வினங்குவான் கருதியிம்
மைப்பொருட் பேறொ ழித்தே
கணிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க்
கயவர்செயு மிடர்கள் கண்டுங்
கல்லூரி யதை நடாத்தப் பொருட்டுணை செயக்
கருதுவோ ரின்மை கண்டும்
அணிகொண்ட சாலைய தொழிப்பினஃ துனையிகழு
மந்நிய மதத்தர் சாலை
யாமென நினைந்தெனெஞ் சற்பகற் றுயருற
வறிந்துமொரு சிறிது மருளாத்
திணிகொண்ட நெஞ்சலினி நின்முன்யானுயிர்விடுத
றிண்ண நீ யறியாதோ
சிறியேன தன்பிலர்ச் சனைக்கிழ கியதிருச்
சிற்றம் பலத் தெந்தையே''

எனும் பாடலை நொந்து பாடினார்.[52] அதன் மறுநாள் இ. நன்னித்தம்பி முதலியார் பாட சாலையின் அபிவிருத்தியின் பொருட்டு ரூபா 400 அனுப்பி வைத்தார் என்பது வரலாறு.[53] நாவலரவர்களின் செயலிற் துறவும், செயலில் உண்மையான பற்றும், இறை சிந்தனையும் பத்தியும் நாவலரவர்களை அநுபூதிநெறிக்கு உட்படுத்தின. இவ்வநுபூதிநெறி சைவசித்தாந்த நெறியில் மிகவுயர்ந்த ஆன்மீக நிலையாகும். முற்கூறியவாறு நாவலர் அவர்கள் மிகுந்த துன்பமான நிலையில் ஆழ்ந்த இறை உணர்வை அநுபவிக்கும் பொழுது அவர் தம்மையறியாது அநுபூதிநிலைக்குத் தள்ளப்படுகின்றார். அப்பொழுது வெளிவந்த அருட்பாடல்களே நாவலர்கள் பாடிய தனிப்பாக்களாகும். ஆனால், நாவலர் அவர்கள் தனது பாடல்களை அருட்பாக்களென்றோ திருவருட்பாவென்றோ கூறியது கிடையாது. ஆயினும், நாவலரவர்கள் பாடல்களை வெளிப்படுத்திய முறையினை நோக்கும் பொழுது நம்மை அவ்வாறே சொல்லத் தூண்டுகின்றது எனலாம்.

7) மாணவ பரம்பரையினரைச் சைவ சித்தாந்த நெறியாளராக வளர்த்துச் சென்று புதிய பரம்பரையினரை உருவாக்குதல்

நாவலரவர்கள் தமது சமய முயற்சிகளால் தமது சமய - சித்தாந்தப் பாரம்பரியத்தில் நம்பிக்கை கொண்ட மாணவ பரம்பரையினரை உருவாக்கினார். அம்மாணவ பரம்பரையினர் குருவாகிய நாவலரவர்கள் காட்டிய வழியைப் பெரிதும் பேணி அவற்றின் விருத்திக்காக உழைத்தனர். இப்பரம்பரையின் வாழ்வியல் முறைமையும் சைவசித்தாந்த மெய்யியல் நோக்கை அடிப்படையாகக் கொண்டிருந்தமையால் அதற்கமைய புதிய முயற்சிகளில்

ஈடுபட்டு உழைத்ததோடு, இம் மெய்யியலை வளர்ப்பதிலும் முன்னின்றனர். அவ்வகையில் வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை, காசிவாசி செந்திநாதையர், இணுவில் நடராச ஐயர், கோப்பாய் ச. பொன்னம்பலப்பிள்ளை, ந.ச. சதாசிவப்பிள்ளை, தர்க்ககுடாதாரி வை. திருஞான சம்பந்தபிள்ளை, கொக்குவில் சபாரத்தின முதலியார், ம.க. வேற்பிள்ளை, த. கைலாசப்பிள்ளை முதலானோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் சமயப் பிரசாரம் செய்தல், சித்தாந்த நூல்களைப் பதிப்பித்தல், சைவ நூல்களுக்கு, சித்தாந்த மரபுகளை மனங்கொண்டு உரை எழுதுதல், புதிய சைவ நூல்களை ஆக்கல் முதலான பணிகளில் ஈடுபட்டு சைவ சித்தாந்த மெய்யியலின் வளர்ச்சிக்கு உழைத்தனர்.[54]

முடிவாக, வளமிக்கப் பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்த நாவலரவர்கள் தாம் பெற்ற கல்வியின் மூலம் தொடர்ச்சியாகத் தம் குடும்பப் பாரம்பரியத்தைப் பேணாது நைட்டிகப் பிரமச்சாரியாக வாழத் தம்மை மாற்றிக்கொண்டு ''சைவத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய சைவசித்தாந்தத்தையும் வளர்த்தல் வேண்டும்'' என்னும் ஆசையை மனத்திற் கொண்டு, சைவ உலகம் புதிய மாற்றங்களில் விருப்பு வைக்காத நிலையில், தாம் ஐரோப்பிய கல்விமுறையாலும் பாரம்பரியக் கல்விமுறையாலும் பெற்றுக்கொண்ட அநுகூலங்களைத் தமது இலட்சியத்துக்கு அடிப்படையாகக் கொண்டு, சைவ சித்தாந்தத்தின் நெறியினையும் கோட்பாடுகளையும் வளர்க்க முற்பட்டார். குறிப்பாக இறைவனின் பரத்துவம், ஆன்மா, ஆணவம், கன்மம், மாயை, சற்காரியவாதம், நாற்பாதங்கள், வல்வினை, மெல்வினை, பத்திநெறி, சிவாநுபூதி நெறி, சீவன்முத்தர், சுத்தாத்வைதம் முதலான சைவ சித்தாந்தக் கோட்பாடுகளில் உறுதியான நம்பிக்கை கொண்டு, பிரசங்கம், புராண படனஞ் செய்தல், பஞ்சபுராணம் ஓதல், நூல்களை வெளியிடல், உரை யெழுதுதல், அநுபூதிநெறியினை உணர்த்தல், திருமுறைகளுக்கு முதன்மையளித்தல், சைவநெறியினை மீளாய்வுக்கு உட்படுத்தல், புதிய சித்தாந்தப் பரம்பரையை உருவாக்குதல் முதலான பணிகளால் சைவசி த்தாந்த மெய்யியல் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றார்.

நாவலரவர்கள் இலங்கையின் வட பகுதியில் பிறந்திருக்கலாம். ஆயினும் நாவலர் அவர்களின் தன்னலமற்ற ஆத்மீக நெறியும் அதன் சத்தியும் உலகளாவிய சைவர்களை அவ்வாற்றலுக்குள் கொண்டுவரும் சத்தியைப் பெற்றிருந்தது. இந்த நூற்றாண்டில் சைவநெறியும் சைவசித்தாந்தக் கோட்பாடும் நாவலரவர்கள் தம் சுயநலத்தை ஆத்மீகம் என்னும் குண்டத்தில் இட்டு எழுந்த ஒளியினால் கிடைக்கப்பெற்றதெனலாம். சைவ சித்தாந்த மெய்யியல் மேலும் வளர வேண்டுமேயானால் நாவலரவர்களைப் போல் தம் சுயநலத்தை ஆத்மீகம் என்னும் ஓமகுண்டலத்தில் போட்டு ஒளிபாய்ச்சக் கூடிய பலர் தோன்றல் வேண்டும். அதுவே சைவ சித்தாந்த மெய்யியல் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையலாம்.

அடிக்குறிப்புகள்

1. சித்தாந்த மரபில் சிவஞான போதத்தின் வழிநூல் சிவஞான சித்தியார் ஏனைய சித்தாந்த நூல்கள் சார்பு நூல்கள் எனவும் கொள்ளப்படும்.
2. கனகரத்தினம், வை., (1994), வே. கனகரத்தின உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ நாவலர் ஆறுமுகநாவலர் சரித்திரம், பக்.
3. ஆறுமுகநாவலர், (1986), பெரியபுராண சூசனம், சிவகாமி அச்சகம், அண்ணாமலை நகர், ப. 138.
4. ஆறுமுகநாவலர், (1986), பெரியபுராண சூசனம், சிவகாமி அச்சகம், அண்ணாமலை நகர், ப. 138.
5. மேலது நூல், பக். 139 - 40.
6. மேலது நூல், பக். 139 - 40.
7. மேலது நூல், சரித்திரம், ப. 62.
8. மேலது நூல், ப. 30.
9. மேலது நூல், ப. 65.
10. மேலது நூல், ப. 52.
11. மேலது நூல், ப. 78.
12. மேலது நூல், பக். 78 - 101.
13. மேலது நூல், ப. 78.
14. கணபதிப்பிள்ளை, சி., (1969), நாவலரும் புராணபடனமும் நாவலர் மாநாடு விழாமலர், ப. 6.
15. மேலது நூல், ப. 6.
16. மேலது நூல், ப. 4.
17. மேலது நூல், ப. 6.
18. மேலது நூல், ப. 7.
19. ஆறுமுகநாவலர், (1991), சைவ வினாவிடை, இரண்டாம் புத்தகம், தவத்திரு ஆறுமுகநாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை.
20. மேலது நூல், ப. 2.
21. மேலது நூல், ப. 3.
22. சிவஞானிமுனிவர், சிவஞானபோதமும், வார்த்திகமென்னும் மொழிப்புரையும், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னைப் பட்டனம், ப. 32.
23. ஆறுமுகநாவலர், (1991), சைவ வினாவிடை, இரண்டாம் புத்தகம், ப. 3.
24. சிவஞானமுனிவர், சிவஞானபோதமும் வார்த்திகமென்னும் மொழிப்புரையும், ப. 32.
25. ஆறுமுகநாவலர், (1991), சைவ வினாவிடை, இரண்டாம் புத்தகம், ப. 5.
26. சைவ வினாவிடை.
27. மேலது நூல், ப. 13.
28. கணபதிப்பிள்ளை, சி., (1968), நாவலர், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.
29. ஆறுமுகநாவலர், (1986), பெரியபுராண சூசனம், ப. 6.
30. மேலது நூல், பக். 6 - 7.
31. மேலது நூல், ப. 144.
32. ஆறுமுகநாவலர், (1953), பெரியபுராண வசனம், வித்துயாநுபாலன யந்திரசாலை, சென்னபட்டணம், முகவுரை.

33. கனகரத்தினம், வை., (1994), வே. கனகரத்தின உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ நாவலர் ஆறுமுகநாவலர் சரித்திரம்.

34. ஆறுமுகநாவலர், (1993), பெரியபுராண வசனம், முகவுரை.

35. கைலாசபிள்ளை, த., (1954), ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, வித்தியாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம், ப. 96.

36. மேலது நூல், ப. 104.

37. மேலது நூல், பக். 104 - 105.

38. மேலது நூல், பக். 104 - 105.

39. மேலது நூல், பக். 7.

40. மேலது நூல், பக். 7 - 8.

41. அருணைவடிவேலு முதலியார், சி., (1991), சிவஞானபோத மகாபாடியப் பொருள் நிலை விளக்கம், ப. 359.

42. கைலாசபிள்ளை, த., (19), ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, ப. 8.

43. மேலது நூல், ப. 6.

44. அருணைவடிவேலு முதலியார், சி., (1991), சிவஞானபோத மகாபாடியப் பொருள் நிலை விளக்கம், ப. 359.

45. ஆறுமுகநாவலர், (1954), சைவசமய நெறி மூலமும் புத்துரையும், வித்துயாநுபாலன யந்திரசாலை, சென்னட்டணம், ப. 79.

46. மேலது நூல், ப. 79.

47. கைலாசபிள்ளை, த., (1930), ஆறுமுகநாவலர் சரித்திரம், கலாநிதி யந்திரசாலை, பருத்தித்துறை, ப. 65.

48. செல்லையாபிள்ளை அவர்கள் நாவலரவர்கள் வரலாற்றைச் சுருக்கி எழுதியும் நாவலரவர்கள் பாடிய பாடல்களைத் தொகுத்தும் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சரித்திரச் சுருக்கம் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும் என்னும் பெயருடன் 1914ஆம் ஆண்டு கொழும்பு மீனாம்பாள் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டார். இது 32 பக்கங்களை உடையது.

49. மேலது நூல், ப. 4.

50. மேலது நூல், ப. 12.

51. ஸ்ரீகாந்தா பதிப்பகம், (1969), கதிர்காமத் திருமுருகன் கீர்த்தனைகள், யாழ்ப்பாணம், முகவுரை.

52. கைலாசபிள்ளை, த., (1930), ஆறுமுகநாவலர் சரித்திரம், ப. 38.

53. மேலது நூல், ப. 38.

54. பார்க்க, கனகரத்தினம், இரா.வை., (1996), நாவலர் மரபு, பூரணம் வெளியீடு, யாழ்ப்பாணம்.


நாவலர்
தமிழியல்

நாவலர் அடிச்சுவட்டில் இலக்கியம்

சி. தில்லைநாதன்

நாவலர் அடிச்சுவட்டில் இலக்கிய வளர்ச்சி என்று பேசும்போது சைவத்தைக் காத்து வளர்ப்பதையும் அதற்குக் கருவியாகிய கல்வியை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்ட நாவலருக்கு இலக்கிய வளர்ச்சியில் ஏது நாட்டம் என்று ஒரு சிலர் கேட்கவும் கூடும். சைவத்தை வளர்ப்பது மட்டுமே நாவலர் நோக்கம் என்பதை நாம் வாதத்துக்காக ஏற்றுக்கொண்டாலுங்கூட, எமது இலக்கிய வளர்ச்சிக்கு அவர் உதவியும் உறுதியும் அளித்தவரென்பதை மறுக்க முடியாது.

ஆட்சித் தலைவரின் கீர்த்தியை நிலைநாட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்ட புறநானூற்றுப் பாடல்களும் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதையும் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதையும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதையும் நாட்ட எழுந்த சிலப்பதிகாரமும் இராமன் கதையை ஆசை பற்றி அறைய வந்த சம்பராயமாணமும் தமிழிலக்கியமானது உருவிலும் உள்ளடக்கத்திலும் வளர உதவியிருக்கின்றனவென்பது எத்துணை உண்மையோ அத்துணை உண்மை ஆறுமுக நாவலரின் பதிப்புக்களும், உரைகளும், உரைநடைநூல்களும் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உதவியுள்ளனவென்பதுமாகும்.

தமிழ் மக்கள் விடுதலை தவறிக்கெட்டு, அரசியல் பொருளாதார ரீதியில் மட்டுமன்றிச் சமய, இலக்கிய, கலாசார ரீதியாகவும் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்திலே தோன்றியவர் நாவலர். ஆங்கிலக் கல்வியையும் கிறித்தவ மதத்தையும் பரப்புவதில் முனைந்து நின்றவர்கள் சுதேச மதங்களை மட்டுமன்றிக் கலாசாரத்தையும் பழக்க வழக்கங்களையும் இலக்கியங் களையும் கூட இழித்துரைத்தனர். இந்து இலக்கியங்களிற் பயனுள்ளவை சிறிதளவாவது உண்டா என்ற சந்தேகத்தினை வெளிப்படையாகவே அவர்கள் எழுப்பினர்.

அந்நியரின் ஆன்மீக கலாசார ஊடுருவல்களினாலும் கீழ்ப்படிவுள்ள எழுது வினைஞர்களை உற்பத்தி செய்யும் ஆங்கிலக் கல்வியினாலும் எமது சமயங்கள் மட்டுமன்றிக் கலாசாரமும் கலைமரபுகளுங்கூட அசைக்கப்பட்டன. அந்நிய ஆட்சியாளரினால்

அளிக்கப்பட்ட சமூக, பொருளாதார இலாபங்களை முன்னிட்டுப் பலர் தமது சமயத்தையும் பழக்கவழக்கங்களையும் பேசும் மொழியையும் மட்டுமன்றி மதிப்பீடுகளையும் மாற்றத் தொடங்கினர். கீழைத்தேயச் சிந்தனைகளும் இத்தகையவர்களினால் உதாசீனம் செய்யப் பட்டன. இந்நிலை நீடித்திருந்தால் நாம் கீழைத்தேயத்தவராயும் இல்லாது மேலைத் தேயத்தவராயும் இல்லாது 'சின்ன இங்கிலாந்தில்' திரிசங்க நிலையிலே தொங்கிக் கொண்டு அந்தரப்பட்டிருப்போம். அவ்வாறாகி இருந்தால், எமது பாரம்பரியம், எமது இலக்கியம் என இன்று நாம் பெருமைப்பட முடிந்திருக்குமா?

அந்தப் பகைப்புலத்தில் நோக்கும்போதுதான் எமது கலாசார மரபுகளைப் பேணுவதில் ஆறுமுகநாவலர் எடுத்துக்கொண்ட முயற்சிகள், எமது இலக்கிய பாரம்பரியம் அறுந்து விடாமற் காப்பாற்றிய பெருமைக்கும், அது காலத்துக்கேற்ற வகையில் வளர்ச்சி கண்ட சிறப்புக்கும் அடிப்படையாக அமைந்ததை அவதானிக்க இயலும். அந்த வகையில் முதலிற் பொதுவாகத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கும், அடுத்து ஈழத்திலக்கிய வளர்ச்சிக்கும் நாவலர் எவ்வெவ்வகையில் உதவினார் என்பதை ஆராய வேண்டும்.

தமிழிலக்கிய வளர்ச்சிக்கு நாவலர் ஆற்றிய பணிகளில் முதலிற் குறிப்பிடப்பட வேண்டியது. அவரது கல்வித்தொண்டு. ஊரெங்கும் கல்வி நிலையங்கள் நிறுவி இலவசக் கல்வியைப் பரப்ப வேண்டுமென்ற அவரது வேட்கை இலங்கையிலும் இந்தியாவிலும் சில கல்வி நிலையங்கள் தோன்றக் காரணமாயிற்று. கல்வி ஒரு சிலரின் ஏகபோக உரிமையாக இல்லாது பொது மக்களிடைப் பரவியதுதான் இலக்கியங்களைப் பலர் கற்க வழிகோலியது என்பதும் இலக்கியம் மக்கள் வளர்ச்சி காணக் காலாயமைந்தது என்பதும் மறுக்கவியலா உண்மையாகும்.

அந்நியராட்சியின்போது ஆங்கிலமூலம் நடைபெற்ற கல்வி எத்தகையதாயிருந்தது? தொடர்பற்ற சில அரச வரலாறுகளையும் புவியியல், கணிதம், அடிப்படை விஞ்ஞானம் போன்றவற்றையும் பாடசாலைகளிற் கற்பித்தனர். அங்கு பயிலும் மாணவர் தமது நாட்டின் கடந்த காலத்தையோ எதிர்காலத்தையோ பற்றிய உணர்வு பெறவில்லை. அவர்கள் பெற்ற கல்விக்கும் அவர்களைச் சூழ்ந்திருந்த மக்கட் சமுதாயத்தின் உணர்வுகளுக்கும் சிந்தனை களுக்கும் தேவைகளுக்கும் இடையே தொடர்பற்றிருந்தது. அதையே மகாகவி பாரதியார்,

''நரியு யிர்ச்சிறு சேவகர், தாதர்கள்,
நாயெ னத்திரி யொற்றர், உணவினைப்
பெரிதெ னக்கொடு தம்முயிர் விற்றிடும்
பேடியர், பிறர்க் கிச்சகம் பேசுவோர்
கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடுங்
கலை''

எனக் கடிந்துரைத்தார்.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலே சுதேசிகளின் இதய நாடியை உணர்த்தக் கூடிய தமிழ்க் கல்வியை ஊட்ட முன்வந்த நாவலர் அம்மக்களின் கலையிலக்கிய மரபுகளையும்

பேணி வளர்க்க உதவியவராவார். மாணவர் தமது பாரம்பரியம். நாடு, சமயம், கலாசாரம், பழக்கவழக்கங்கள் முதலியவற்றை அறிந்து பயிலத்தக்கவகையில் அவரால் ஆக்கப்பட்ட பாலபாடங்களும் இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவையாகும்.

இரண்டாவதாய்க் குறிப்பிடத்தக்கவை நாவலரது பதிப்புக்களும் உரைகளுமாகும். கவனிப்பாரற்றுச் செல்லுக் கிரையாய்க் கிடந்த பல பழந்தமிழ் நூல்களை மக்களுக்கு விருந்தாக்கிய பெருமைக்குரியவர் நாவலர். சைவ சம்பந்தமான நூல்களை மட்டுமே நாவலர் வெளியிட்டார் எனச் சிலர் கூறலாம். அந்நிய மதிப்பீடுகளுக்கு ஆட்பட்டவர்கள் சைவம் சார்பான நூல்களைப் புறக்கணித்த முயற்சி தொடர்ந்து உறுதிபெற்றிருக்குமாயின், தமிழிலக்கியங்களில் ஆகக் குறைந்தது அரைவாசியையாவது யாம் இழந்திருப்போம். அது மட்டுமல்ல. ஆரம்பத்தில் சைவ நூல்களை வெளியிடுவதில் மட்டும் ஆர்வங் கொண்டிருந்த நாவலர், தமிழ் மக்கள் தமது சிறந்த இலக்கியங்கள் இலக்கணங்கள் அனைத்தையும் கற்றுத் தமது மொழியினதும் இலக்கியத்தினதும் தனித்துவத்தையும் பெருமையையும் பேண வேண்டும், பரந்த இலக்கிய அறிவும் உலகானுபவமும் ஈட்ட வேண்டும் என்பதையும் உணர்ந்து கொள்ளாமல் இல்லை.

தாம் வெளியிட்ட திருக்கோவையார் பதிப்பின் அனுபந்தத்திலே,

> ''முற்காலத்தில் உள்ள மகிமை பொருந்திய புலவர்களாலே தமிழிற் செய்யப்பட்ட நூல்களுள்ளும் உரைகளுள்ளும் அளவில்லாதவைகள், அச்சிற் பதிப்பிக்கும் வழக்கம் இல்லாமையால், இறந்துபோயின. இறவாது இக்காலத்தில் எஞ்சியிருப்பவைகளும் கையெழுத்துப் பிரதிகளிலே எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு பிழைபட்டனவாய், சிலவிடங்களில் மாத்திரம் அருகி வழங்குகின்றன... யாவருக்கும் எளிதிற் பயன்படும்பொருட்டு முக்கியமாய் உள்ள நூல்களையும் உரைகளையும் பல இடங்களில் நின்றும் வருவிக்கப்பட்ட பல பிரதிகளைக் கொண்டு ஒருவாறு பரிசோதித்து அச்சிற் பதிப்பித்துப் பிரகடனம் செய்ய வேண்டும். கல்விப் பொருளோடு செல்வப் பொருளும் ஒருங்குடைய மகிமை பொருந்திய மடாதிபதிகளும் பிரபுக்களும் நமது தமிழ் நாட்டிலும் தமிழ்ப் பாஷையிலும் அபிமானமுடையவர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்து இம்முயற்சிகளை நிறைவேற்றுவார்களாயின், நமது நாட்டிலே, எம்மொழியினும் இனிய நமது தமிழ்மொழி வளர்ந்தோங்கும்''

என்று நாவலர் எழுதியுள்ளார். அத்தோடு, இறையனா ரகப்பொருளுரை, தொல்காப்பிய உரைகள், வீரசோழியவுரை, நேமிநாதவுரை, வில்லிபுத்தூராழ்வார் பாரம், கல்லாடவுரை, சீவகசிந்தாமணியுரை, சிறுபஞ்ச மூலவுரை, கார்நாற்பதுரை, களவழி நாற்பதுரை, புறநானூற்றுரை முதலிய ஐம்பதுக்கு மேற்பட்ட இலக்கியங்களை வெளியிடத் தாம் திட்டமிட்டிருந்தமையையும் அவர் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

மேலே காட்டிய நாவலர் கூற்றும் பிரகடனமும் சமய வரம்புகளைக் கடந்த அவரது இலக்கிய நோக்கினைப் புலப்படுத்துவதோடு, தமிழிலக்கியம் சிறந்து வளர உரமிட்ட சமகாலப் பிற்காலப் பதிப்பாசிரியர்களுக்கும் அவரே வழிகாட்டி என்பதனையும் தெளிவாக்கும்.

''இலக்கன இலக்கியப் பிழைகளும் அச்சுப் பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையும் சைவ சமய நூல்களையும் பதிப்பித்து உதவுவார் அரியரான எமது இன்மைக்காலத்தில் ஆறுமுகநாவலர் அவர்களே. அந்நூல்களைப் பிழையறப் பதிப்பித்து உதவினவர்கள்.''

என்று மறைமலையடிகள் கூறியிருப்பது அக்காலகட்டத்தில் நாவலர் பதிப்புக்கள் தமிழிலக்கிய அறிவு வளர எவ்வளவு உதவியாயமைந்தனவென்பதைக் காட்டும்.

மூன்றாவது, ஆனால் மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது நாவலரது உரைநடைப் பணியாகும். செய்யுளிலே எழுதப்படுவதே இலக்கியமெனக் கருதப்பட்ட நிலைமாறி உரைநடை தலைமை பெற்றமைக்கும் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க உரைநடையிற் காலத்திற்கேற்ற இலக்கியங்கள் தமிழிலே தோன்றி வளர்ந்தமைக்கும் நாவலர் உதவியவராவார். 'நம்முடைய சைவசமய நூல்களை எல்லாருக்கும் எளிதின் உபயோகமாகும் பொருட்டு வெளிப்படையாகிய வசனநடையிற் செய்து அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்துவது' தமது நோக்கமென்று தமது கந்தபுராண வசன முகவுரையிற் நாவலர் கூறியுள்ளார். எல்லோருக்கும் எளிதிற் பயன்படுமாறு வசனநடை கையாளப்பட்டமை இலக்கிய வளர்ச்சியில் விதந்து குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். எத்துணைச் சிறந்த தரத்தினவாயினும் இலக்கியங்கள் பெரும்பாலோருக்குப் பயன்படாதிருக்கும்வரை இலக்கியம் வளர்ச்சி பெற்றதாகக் கொள்ளல் சாலாது.

நாவலரைப் பற்றி ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் பின்வருமாறு கூறுகின்றார்:

''சைவ சமயத்தலைவர் என்ற முறையில் ஆறுமுகநாவலர் செய்த சேவைகள் குறிப்பிடத் தக்கவையே ஆயினும், தமிழ்க் கல்விக்காற்றிய பணியின் மூலமே அவர் மிகச் சிறப்பாக நினைவுகூரப்படுவார். தமிழ்ப் புலவர்களும் கல்விமான்களும் மலினப்படுத்தப்பட்ட யாப்புக்களைக் கையாண்டு சம்பிரதாயமான பிரபந்தங்களையும் தலபுராணங்களையும் எழுதிக்கொண்டிருந்த காலத்தில் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உரைநடை முக்கியமென்பதை உணர்ந்த ஆறுமுகநாவலர் தானே அதற்கு வழியும் காட்டினார். அவர் காலத்துக்கு முன் வீரமாமுனிவரின் வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குரு கதை, இராமலிங்க சுவாமிகளின் மனுநெறி கண்ட வாசகம், பண்டை இலக்கிய, தத்துவ உரைகள் போன்ற சில உரைநடை நூல்கள் இருந்தனவெனினும், செய்யுளில் இருப்பது போன்ற சிறந்த இலக்கியங்கள் உரைநடையிலும் அமைய முடியுமென்பதைத் தமிழ்க் கல்விமான்கள் உணர்ந்திருக்க வில்லை. உண்மையில் ஆறுமுகநாவலரே தற்கால இலக்கிய உரைநடையின் தந்தையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மாபெரும் உரைநடை ஆசிரியரும் ஆவார்.''

எனவே, அரைத்த மாவையே அரைக்கும் செய்யுட் பிரயத்தனங்களால் மலினப்பட்டுத் தேங்கிக் கிடந்த தமிழை விடுதலை செய்து மக்கள் சொத்தாக்கிய பெருமையில் ஆறுமுகநாவலருக்கும் கணிசமான பங்குண்டு. உரைநடையிலே சிறந்த இலக்கியங்களை உருவாக்கலாம் என்பதை உணர்த்திய வகையில் நாவல், சிறுகதை, நாடகம் ஆகிய உரைநடை இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் நாவலர் அடிகோலியவராவார்.

நாவலர் அடிச்சுவட்டில் வளர்ந்த ஈழத்திலக்கியம் பற்றி இரு விடயங்களை மிக முக்கியமாகக் கூறவேண்டும். ஒன்று, பொருளுக்கு முதன்மை தந்து தர்க்காகதியான துணிவோடும் உண்மை தேடும் வேட்கையுடனும் வசனத்தைத் தொடர்பு சாதனமாகவே பயன்படுத்திக் கொண்டு இலக்கிய ஆய்வுகள் நிகழ்வதாகும். உரத்த தற்புகழ்ச்சி இன்றி உணர்ச்சிவசப்படாது, அவசியமற்ற ஆடம்பரங்களையும் அலம்பல்களையும் தவிர்த்துத் தக்க ஆதாரங்களுடன் எண்ணங்களை ஆற்றொழுக்காக வெளியிடும் இச்சிறப்பினை சி.வை. தாமோதரம்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், சி. கணேசையர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கலாநிதி சு. வித்தியானந்தன் முதலிய பல ஈழத் தமிழறிஞர்களிடம் காணமுடியும். தமிழ்நாட்டோடு ஒப்பிடும்போது, ஈழத்தின் இம்மரபு உண்மையிலேயே பெருமைக்குரியது. ''தருக்க நூல்களைக் கற்றறிந்து, எடுத்த விடயத்தை நியாயம் வழுவாமல் எழுதவும் பேசவும் பழகுக'' என்ற நாவலர் அடிச்சுவட்டினைத் தழுவிய இம்மரபின் தாக்கத்தினை எமது ஆக்கஇலக்கிய கர்த்தாக் களிடம்கூடக் காணவியலும்.

இரண்டாவதாகக் குறிப்பிடத்தக்கது, நாம் இன்று ஈழத்திலக்கியம் என்றும், தேசிய இலக்கியம் என்றும் எமக்கென ஒரு பாரம்பரியச் சிறப்புண்டென்றும் பெருமையோடு பேச எமக்கு அடியெடுத்துக் கொடுத்தவரும் உறுதியளித்தவரும் நாவலரே என்பது.

> ''ஈழ மண்டலத்துள்ள யாழ்ப்பாண முதலியன தமிழ் வழங்கு நாடாதல் பின்னர்க் காட்டுவாம். ஈழத்தீவென்றிகழ்ச்சி போலக் கூறிய நீர் இது நாவலந்தீவென்பதையும் சற்றே சிந்தியும் சிந்தியும்.''

என்று நரசிங்கபுர வீரசாமி முதலியாருக்கு நல்லறிவுச்சுடர் கொழுத்திய நாவலர் யாழ்ப் பாணத்தாராற் செய்யப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட தமிழ்நூல்களைப் பெருமையோடு அவருக்கு எடுத்துக்காட்டியமை இங்கு நினைவுகூரத்தக்கது.

நாவலர் அடிச்சுவட்டில் நா. கதிரைவேற்பிள்ளை, ந.ச. பொன்னம்பலபிள்ளை, மட்டுவில் க. வேற்பிள்ளை, சாவகச்சேரி ச. பொன்னம்பலபிள்ளை, சி. கணேசையர், பண்டிதர் அருளம்பலவனார் முதலிய சிறந்த உரையாசிரியர்களையும் பதிப்பாசிரியர்களையும் ஈழநாடு கண்டிருக்கிறது. பெரும் சந்தையையும் விளம்பரத்தையும் தமிழ்நாட்டு உரையாசிரியர்களே ஆக்கிரமித்துள்ள போதிலும், அமைதியும் ஆழமும் வாய்க்கப்பெற்ற ஆராய்ச்சிப் புலமையை ஈழநாட்டிலே கவனிக்கவியலும். அப்புலமை, ஆர்ப்பாட்டமும் உணர்ச்சி முனைப்புமின்றித் தர்க்க ரீதியாகவும் வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் ஈழத்தில் இலக்கிய ஆய்வுகள் இன்று நடப்பதற்குத் துணையாய் அமைந்துள்ளது.

இலக்கியத் துறையிலும் நாவலரின் அடிச்சுவட்டு வண்ணத்தினைக் கண்டுகொள்ள இயலும். செய்யுள் இலக்கத்துறையிலே சைவ சமயத்தைக் காத்து வளர்க்கும் உணர்ச்சியோடு நாவலர் காலத்திலும் அவருக்குப் பின்னரும் பல நூல்கள் தோன்றியுள்ளன. ஆறுமுக நாவலர் சைவத்தைப் பேண எடுத்த முயற்சிகளினாலே தூண்டப்பட்டுத் தலங்களையும் விரதங்களையும் சைவ உண்மைகளையும் போற்றும் பாடல்களைப் பாடிய புலவர்களுட்

சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் முத்துக்குமாரக் கவிராயர், சபாபதி நாவலர், சேனாதிராய முதலியார், முருகேச பண்டிதர், ஏரம்பையர், சிவசம்புப் புலவர், குமார சாமிப் புலவர், மயில்வாகனப் புலவர், தெ.அ. துரையப்பாபிள்ளை, சோமசுந்தரப் புலவர் ஆகியோராவர்.

நாடகங்கள் மூலமாகவும் சமயத்தை வளரக்கும் முயற்சி ஈழத்தில் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. சைவ சித்தாந்தத்தை விளக்கும் சோமசுந்தரப் புலவரின் உயிரிளங்குமரன் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியது.

அந்நிய மத ஆதிக்கத்திலிருந்து சைவத்தைப் பேணும் பொருட்டுச் சைவ சமய நூல்களையும் உண்மைகளையும் பரப்பிய நாவலர், அத்தோடு நில்லாது சைவ மக்கள் மத்தியிற் காணப்பட்ட முரண்பாடுகளையும் மூடநம்பிக்கைகளையும் பலவீனங்களையும் கடிந்து நீக்க முயன்றார். சம்பளம், சீதனம், சிபாரிசு, உத்தியோகம் முதலியவற்றின் பொருட்டு மதம் மாறுவதனையும் சமயத் தலைவர்கள் ஒழுக்கம் தவறி நடப்பதனையும் மக்கள் மதுபானம் அருந்துவதனையும் ஆலயங்களில் உயிர்க்கொலை புரிவதனையும் பொதுப் பெண்கள் நடனமாடுவதனையும் வேடிக்கை அலங்காரம் வாண விளையாட்டு ஆகியவற்றிலும் வழக்காடுவதிலும் பொருள் விரயஞ் செய்வதையும் அவர் நேரடியாகக் கண்டித்தார். இவற்றின் தீங்குகள் ஈழத்துச் சிறுகதைகள் பலவற்றிலும் பின்னர் உணர்த்தப் பட்டுள்ளன. வரதர், என்.கே. ரகுநாதன், கனக. செந்திநாதன், சொக்கன் முதலியோர் சிறுகதைகளில் இதனைச் சிறப்பாகக் கண்டு தெளியலாம்.

ஈழத்திலே தோன்றிய நாவல்களிலும் இத்தகைய செயல்கள் கண்டிக்கப்படுகின்றன. ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளையின் கோபால நேசரத்தினம் என்ற நாவலிலும் இடைக்காடரின் நீலகண்டன் ஒரு சாரதி வேளான், சித்த குமாரன் ஆகிய நாவல்களிலும் இதனை நன்கு கண்டுகொள்ளவியலும். ஈழத்திலெழுந்த ஆரம்பகாலத் தமிழ் நாவல்கள் பல, சமயப் பாதுகாப்பினையும் சமய வளர்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தனவே.

மேலே காட்டிய வழிகளிலே தமிழிலக்கிய வளர்ச்சிக்கும் ஈழத் தமிழிலக்கிய வளர்ச் சிக்கும் உதவியவர் நாவலர். அவரது அடிச்சுவட்டிற் செல்வதென்றால், அவர் கையாண்ட உருவங்களையும் முறைகளையும் விடயங்களையுமே திரும்பத்திரும்பக் கையாள வேண்டும் என்பதில்லை.

> ''மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி...'' நமது பூர்வீகர் களுடைய வழிகளில் இந்தக் காலத்திலே நமக்கு உதவக்கூடிய அம்சங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு, பயனில்லாதவைகளை மாற்றுவதனால், நமக்கு முன்னோர்களிடம் பக்திக் குறைவு ஏற்பட்டதாக அர்த்தமில்லை. ''ஒருவன் தனது பூர்வீக ஆஸ்தியிலே நல்ல கழனிகளையும் தோட்டங்களையும் வைத்துக்கொண்டு முள்ளும் புதருமாக இருக்கும் காட்டுவெளியை நன்றாக வெட்டித் திருத்தினால், அவன் பிதுர் துரோகியாவானா?''

என்ற மகாகவி பாரதியின் கருத்து மனங்கொள்ளத்தக்கது.

நாவலர் மக்களோடு அவர்களுக்கு இலேசிற் பொருள் விளங்கத்தக்க மொழியிற் பேச முன்வந்தார் என்பதும் அம்மக்களது வாழ்வை அறவழியிற் சீராக்க முனைந்தார் என்பதும் பஞ்சமும் அநீதியுங் கண்டவிடத்து இரங்கினார், சினங்கொண்டார் என்பதும் ஒப்ப முடிந்தவையாகும். இன்றைய எமது சிறந்த இலக்கிய கர்த்தாக்களும் அவ்வழியிற் செல்வதாகவே தெரிகிறது. நாவலர் கையாளாகாத வடிவங்களை அவர்கள் கையாளலாம். நாவலர் அணுகாத முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் அவர்கள் அணுகலாம். ஆயினும், நாவலரது மனுதாபிமானத்தையும் அநீதியை எதிர்க்கும் துணிவினையும் எமது முன்னணி எழுத்தாளர்கள் முன்னெடுத்துச் செல்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறுவதுபோல்,

> ''நாவலர் மனிதரை மனிதராக்குவதற்கு, அஃதாவது வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கு நூல்கள் எழுதினார்; அச்சிட்டார்; மனிதருக்கு நூல் செய்தார்; வெளியிட்டார்.''

அதனையே எமது இலக்கிய எழுத்தாளர்களும் செய்கின்றனரென்றும் இனிமேலும் செய்வரென்றும் நம்புகின்றோம்.

'புதுமை இலக்கியம்', இதழ் - 16, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், 1974, ஜனவரி, பக். 20-24.

உரைநடைக்கு ஒருவர்

ஆறுமுகநாவலர்

சொக்கன்

தமிழிலக்கிய வரலாற்றாசிரியர்கள் ''பாட்டிடை வைத்த குறிப்பினானும்'' எனத் தொடங்கும் தொல்காப்பியச் சூத்திரத்தை மேற்கோளாய் எடுத்துக் காட்டிப் பண்டைக் காலத்திலேயே தமிழில் நான்கு வகை உரைநடைகள் நிலவின என்பர். ''செங்கோன்றரைச் செலவு'' என்னும் நூலொன்றின் பெயரும் உரைநடை நூலுக்குச் சான்றாய் இவர்களாலே கூறப்படுவதுண்டு. ஆயின் பழைய உரைநடை நூல்களென எமக்கு எவையும் கிடைத்தில. சிலப்பதிகாரத்திலே சிற்சில பகுதிகள் அக்கால உரைநடைக்கு எடுத்துக்காட்டெனக் காட்டப்படுகின்றன. சிலப்பதிகாரத்தின் அமைப்பு உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாய் உள்ளதென்பர். எனினும் அவ்வுரைநடையிலே செய்யுட்டன்மையே கூடுதலாய் அமைந்திருக்கின்றது. இறையனார் களவியலுரையே எமக்கு முழுமையாகக் கிடைக்கும் முதலாவது உரைநடை நூல் எனலாம். இதன் போக்குச் சுவையானதாயும், கம்பீரமானதாயும் விளங்குதல் ஒருதலை. இருப்பினும் இது இக்காலத்தவர் விளங்குதற்கு அரிதானது. இதன் பின்னர், இலக்கண இலக்கியங்களுக்கு உரைகள் வகுக்கப்படுகையில், தெளிவும் இனிமையும் நிறைந்த உரைநடைகள் கையாளப்படலாயின. இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றோர் சிறந்த உரையாசிரியர்களும், உரைநடை வல்லார்களுமாவர்.

இவ்வாறு காலச்செலவில் உரைநடை கையாளப்பட்டதாயினும் அது பதினேழாம் நூற்றாண்டுவரை பெருவரவிற்றாய்க் கையாளப்படவில்லை. செய்யுள்களே தமிழில் ஆட்சி புரிந்து வந்தன. இவ்வாட்சி ஒரு காலத்திற் கொடுங்கோலாட்சியானதும் உண்டு. யமகம், திரிபு, மடக்கு, சித்திரம் என வித்துவச் சிறப்பைப் புலப்படுத்தும் வகையிலே செய்யுள்கள் கடினமடைந்தபொழுது, பெரும் புலவர்க்கும் அவை மலைவைத் தருவன வாயின. அச்சியற்றும் வாய்ப்பில்லாமையாலும், சுருக்கம் கருதியமையாலும், செய்யுளே எத்துறையிலும் மேலோங்கி நிற்க உரைநடை ஒதுங்கி மூலையில் அமர்ந்திருந்தது. நுட்பமான உள்ளுணர்வுகளையோ, ஆழ்ந்த கருத்துக்களையோ புலப்படுத்த உரைநடை வாய்ப்பானதன்று எனவும் அக்காலப் புலவர்கள் கருதும் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் ஐரோப்பியர் தமிழகத்திலே ஆதிக்கம் கொண்டனர். அவர்களிலும் சிறப்பாக மிஷனரிகள் தமிழக மக்களோடு பழகி, அவர்களுக்குத் தம் சமய உண்மைகளைப் போதிப்பதற்குத் தமிழில் உரைநடையைக் கையாளல் வேண்டும் என்பதை உணர்ந்ததால், அவர்களே உரைநடை நூல்களை எழுதி, அச்சியற்றி வெளிப்படுத்தத் தொடங்கினர். இவர்களின் முயற்சியாலும் ஆங்கிலம் கற்ற தமிழறிஞர்கள் உரைநடை நூல்களைச் செய்யத் தொடங்கியதாலும் தமிழிலே உரைநடை விரைவாக வளர்ச்சி பெறத் தொடங்கிற்று. இத்துறையிலே தமிழின் முழுமையான ஆற்றல் புலப்படும் வண்ணம் உரைநடையைக் கையாண்டவர்களுள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதல்வராய்த் திகழ்கின்றார். இதனால் இவரைத் 'தமிழ் வசன நடைக்குத் தந்தை' என அறிந்தோர் உரைப்பர். தமிழ்மொழி வரலாற்றை முதன்முதல் எழுதிய வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் நாவலரை 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்று விதந்தோதுவதும் நோக்குதற்குரியது.

நாவலர் 1822ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆந் தேதி யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரிலே, பிரசித்தி பெற்றிருந்த சைவ வேளாண் குடியிலே, கந்தர் என்பார்க்கும், சிவகாமி அம்மையார்க்கும் புதல்வராய் அவதரித்தார். அவரின் பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பது. இளமையிலே தமிழும் சங்கதமும் சைவமும் நன்கு கற்றுப் பின்னர் அவர் மிஷனரிப் பாடசாலை ஒன்றிலே ஆங்கிலமும் கற்றுத் தேர்ந்தார். அக்காலத்திலே யாழ்ப்பாணத்திற் சைவமக்கள் கிறிஸ்தவ சமயப் பொறியிலே சிக்கி, அறியாமையிலே மூழ்கிக் கிடந்தனர். அவர்களின் அறியாமையைப் போக்க அவர் சமயப் பிரசங்கங்கள் செய்வதையும், சைவசமய உண்மைகளை நூல்கள் வாயிலாய் வெளிப்படுத்துவதையும் சைவப் பாடசாலைகளைத் தாபித்துச் சிறார்களைச் சைவச் சூழலிலே வளர்ப்பதையும் குறிக்கொண்டு இப்பணிகளுக்குத் தம் வாழ்வையே பரித்தியாகஞ் செய்தார். பிரமச் சாரியாகவே வாழ்நாள் முழுவதும் விளங்கி 1879ஆம் ஆண்டு இறையடிசேரும் வரையிலே சைவத்தை இந்நாட்டிலே காத்தார். அவரின் நாவன்மைக்குத் திருவாவடுதுறை ஆதீன உபய சந்நிதானம் அளித்த 'நாவலர்' பட்டமே சான்று. அவர்தம் உரைநடை ஆற்றலுக்கு அவர் எழுதி அருளிய நூல்களே சான்றுகள்.

நாவலர் சிறந்த உரையாசிரியர், உரைநடைவல்லார், பதிப்பாசிரியர், நல்லாசான், நாவன்மை படைத்த பேச்சாளர், சைவ வாழ்வு வாழ்ந்த தண்ணளியாளர். அவர் எழுதியும், பிரசுரித்தும் வெளியிட்ட நூல்களின் தொகை எழுபத்துமூன்று. இவற்றுள், தாமே உரை எழுதிய நூல்கள் உட்பட உரைநடை நூல்களாகக் கொள்ளத்தக்கவை இருபத்திரண்டு. இவற்றுள்ளும் இவரின் உரைநடையாற்றலுக்கு உன்னத எடுத்துக் காட்டுக்களாய்க் கொள்ளத்தக்கவை பத்து. அவை முதலாம் இரண்டாம் நான்காம் பால பாடங்கள், பெரியபுராண வசனம், சைவ தூஷணபரிகாரம் என்ற சுப்பிரபோதம், யாழ்ப்பாணச் சமய நிலை, திருவிளையாடற் புராண வசனம், நல்லூர்க் கந்தசுவாமி கோயில், பெரியபுராண சூசனம், போலி அருட்பா மறுப்பு என்பனவாம். இவை தவிர நாவலர் அவ்வப்போது வெளியிட்ட துண்டுப்பிரசுரங்களின் தொகுப்பாய் 'நாவலர் பிரபந்தத் திரட்டு' என ஒரு

நூலும், அவரின் தமையனாரின் மகனான ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்களால் இக்காலத்திலே வெளியிடப்பட்டது. இந்நூலிலும் நாவலரின் உரைநடை வளம் மிகத் தெளிவாகப் புலப்பட்டவண்ணம் இருக்கின்றது.

(இதன்கண் நல்லூர்க் கந்தசுவாமி கோயில், போலியருட்பா மறுப்பு முதலானவும் மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளன.)

நாவலரின் உரைநடையை நோக்குவதற்கு முன்பு அவர்காலச் சூழ்நிலையை ஓரள விற்குத் தெரிந்துகொள்வது நன்று. அவர் நூல்களை எழுதத் தொடங்கியகாலம் பத் தொன்பதாம் நூற்றாண்டு நடுப்பகுதி. அவர் மறைந்த காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதித் தொடக்கம். ஏறக்குறைய இரண்டு தலைமுறைக் காலம் அவர் வாழ்ந்திருக்கின்றார். எனினும், மொழியிலோ, சமூகத்திலோ குறிப்பிடத்தக்க பெரு மாற்றங்கள் நிகழாத, மந்தத் தனமான, அடிமைக் காலம் என்று இதனைக் குறிப்பிடலாம். ஆங்கிலக் கல்வியின் தொடக்கப் பருவமிது; வடமொழிக் கல்வியிலே புலவர்கள் ஆர்வங் கொண்டிருந்த காலம். ஒருபக்கம் எளிமை நிறைந்த உரைநடையைக் கையாண்டு மிஷனரிகள் சமயப் பிரசார நூல்களை இயற்றி வந்தார்கள். மறுபக்கம் தமிழறிஞர்கள் விளங்குதற்குக் கடினமான நூல்களை வடமொழி விரவிய நடையிலே எழுதிவந்தார்கள். மாதவச் சிவஞான யோகிகளின் திராவிடமாபாடியம், நன்னூல் விருத்தி போன்றவையே அக்காலப் புலமையாளர்களின் மொழி நடைக்கு வழிகாட்டி நின்றன. இவற்றோடு கண்டனங்கள், பிரதி கண்டனங்கள், பிரதி கண்டனங்களுக்குக் கண்டனங்கள் என்பவற்றை எழுதுவதிலேயே அவர்களின் பெரும்பொழுது செலவாயிற்று. மிஷனரிகள் சிறிது சிறிதாக மக்களோடு நெருங்கி நெருங்கி வரத் தமிழ்வல்லாரோ மக்களிலிருந்து விலகி விலகிச் செல்லலாயினர்.

இந்நிலையில் மக்களுக்காக, அவர்களின் நல்வாழ்விற்காக, உயர்சைவநெறியிலே அவர்கள் தலைப்படுதற்காக நாவலர் நூல்களை இயற்றத் தொடங்கினார். இந்நோக்கத்திற் காக எழுதுகையில், பாரம்பரியமாய் வந்து கொண்டிருந்த இலக்கண மரபினையும் பேணல் வேண்டும். தமிழின் ஆற்றலையும் அழித்துவிடல் கூடாது. எனவே, தமிழிற்குப் பொருத்த மான நல்லணியாகத் தமக்கே உரிய தனித்தன்மையோடு நூலாரங்கள் இழைப்பதிலே நாவலர் தலைப்படலானார். ஆக தமிழில் பழைமையாகிய உதயவானிலே விடிவெள்ளியென முளைத்துப் புதுமைப் பாதைக்கு வழிகாட்டிய ஓர் உரைநடையைச் சமைத்தவர் என்பதால் நாவலர் தமிழ் வசன நடைக்குத் தந்தையாகும் பெருமைக்கு உரியவரானார்.

இவ்வேளையில் வேறொன்றையும் இவ்விடத்தில் நாம் நினைவு கூரல் வேண்டும். நாவலர் எழுதிய நூல்கள் யாவும் சாயத்தின் அடிப்படையில் எழுந்தவை. சைவசமய விருத்திக்கு உறுதுணையாவது அவற்றை எழுதியதின் நோக்கம். மெய்கண்ட சாத்திரங்களும் தேவார திருவாசகங்களாகிய தோத்திரங்களும் தமிழிலே இருந்தாலும், சைவசமய மூல நூல்களாகிய வேத சிவாகமங்கள் வடமொழியிலேயே இருந்தன. அவற்றின் பரிபாஷை களைத் தமிழ்ப் படுத்துகையில் மூல பதத்தின் முழுமையான பொருளும் அமையுமென்று

கூறல் இயலாது. ஆணவத்தை அறியாமை என்ற சொல்லாலே புலப்படுத்தல் இயல்வதன்று. இதுபோலவே மாயை, சடம், அருவம், தடத்தம், சொரூபம் முதலாய பிற சொற்களும் எனலாம். இக்காரணத்தினாலேயே அவர் வடமொழிச் சொற்களைத் தம் உரைநடையிலே பெருமளவு கையாளல் நேர்ந்தது. எனினும் அக்காலத்திலே வடமொழிச் சொற்களைக் கையாண்டவர்களுள் நாவலரே குறைந்த அளவு கையாண்டுள்ளார் என்பது ஆராய்வார்க்கு நன்கு புலனாகும். மக்களுக்கு மிக நெருங்கியவராய் அவர் வருவதற்கும் இத்தெள்ளிய உரைநடையே காரணம் எனலாம். இந்த அடிப்படையிலே வைத்து நாவலரின் உரை நடையினை நோக்கும்பொழுது தான் அவரின் சைவ ஆற்றலை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளல்கூடும்.

நாவலரின் முதலாம், இரண்டாம், நான்காம் பாலபாடங்கள் தொடக்கநிலை மாணவர்க் காய் எழுதப்பட்டவை. இவற்றில், சிறுவர்க்கான கதைகள், கல்வி, செல்வம் முதலான விடயங்கள் பற்றிய கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. வசனங்களும் நீண்டவையாய் இல்லாமல், சிறுவர்களும் உளங்கொள்ளக் கூடியனவாய் அமைந்திருப்பது பெருஞ் சிறப்பு. அவர்களின் சொற்கூட்ட அளவிற்கேற்பவே சொற்கள் கையாளப்பட்டன. அவர் களுக்குப் புதியனபோல் முதலிலே தோன்றும் சொற்களும் பிரயோக முறையிலே மீட்டும் மீட்டும் சொல்லப்பட்டுப் பொருட் புலப்பாட்டை ஏற்படுத்துவனவாய் விளங்குகின்றன. உதாரணத்திற்கு நான்காம் பாலபாடத்திலிருந்து ஒரு பந்தி கீழே தரப்படுகின்றது.

> ''அடிமையானவன், தன்னிடத்தே தன் நாயகன் ஒப்பித்த பொருளை அவன் கருத்தறிந்து, அக்கருத்தின்படி செலவுசெய்தல் வேண்டுமன்றோ! அந்நாயகன் கருத்துக்கு மாறாகச் சேமித்து வைத்துக்கொண்டாலும் தன்னிச்சைப்படி செலவு செய்து அழித்தாலும் அவனாலே கண்டிக்கப்படுவானன்றோ! ஆன்மாக்களெல்லாம் சகல லோக நாயகராகிய கடவுளுக்கு மீளாவடிமைகள், தமக்குத் திருத்தொண்டு செய்து பிழைக்கும் பொருட்டு ஆன்மாக்களுக்கு இவ்வருமையாகிய மனித சாகரத்தைக் கொடுத்தருளிய பொருளே.''

இப்பந்தியில் நாயகர் என்ற சொல் மூன்றிடத்திலே கையாளப்பட்டுள்ளது. 'நாயகன்' என்பதன் கருத்தைக் கணவன் என்ற கருத்திலே மட்டும் தெரிந்துள்ள ஒரு சிறுவனுக்கு, அதன் வேறொரு பொருளாகிய தலைவன் அல்லது எசமானன் என்பதை மீட்டும் மீட்டும் சொல்வதாலே புலப்படுத்தும் திறன் நோக்கி இன்புறத்தக்கது. முதல் வாக்கியத்தில் நாயகனைப் பற்றிய தெளிவற்ற கருத்துப் புலப்பாட்டோடு தொடங்கும் மாணவன் மூன்றாவதாகிய ''சர்வலோக நாயகர்'' என்ற சொற்றொடரின் மூலம் அதன் புதுப்பொருளை மிகத் தெளிவாக அறிந்துகொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. இப்பந்தியின்மூலம் நாவலரின் உரைநடையாற்றல் மட்டுமன்றி நல்லாசிரியத் தகைமையும் நன்கு புலனாகின்றது.

அவர் எழுதிய திருவிளையாடற் புராண வசனமும், பெரிய புராண வசனமும் நடுப்பருவ மாணவர் கற்கப் பொருத்தமானவை. சைவ மரபினையும், தமிழ் மரபினையும் நன்கு அறிந்து கொள்ளவும், மூல புராணங்களின் பத்திச் சுவையையும், இலக்கியச்

சிறப்பையும் சுவைக்கவும் இவை வழி வகுக்கின்றன. பாலபாடங்களிலும் நீண்ட வசனங்களிலே, எச்சங்களால் இணைக்கப்பட்ட செறிவோடு, இறுக்கமாக இவை எழுதப்பட்டிருக்கின்றன. மனத்தை ஒருமுகப்படுத்தி ஒரு கருத்தினை முற்றாகக் கிரகித்து மனத்திலே பதியவைப்பதற்கு இந்நீண்ட வசனங்கள் உறுதுணையாவன. பெரிய புராண வசனத்தில், திருக்கைலாயச் சிறப்பில், சிவபெருமான் திருக்கைலாய மலையிலே வீற்றிருந்தருளும் சிறப்பைப் புலப்படுத்தும் பகுதி. இத்தகைய நீண்ட வசனச் சிறப்பிற்கு ஓரெடுத்துக் காட்டு.

பெரிய புராண சூசனம், சைவ தூஷண பரிகாரம், போலியருட்பா மறுப்பு, மித்தியாவாத நிரசனம் முதலானவை கற்றறிந்தார்க்கென எழுதப்பட்டவை. இவற்றிலே வேத சிவாகம நுண்பொருள்கள், சைவசித்தாந்த சாத்திர உயர் கருத்துக்கள், தேவார திருவாசக மேற்கோள்கள் என்பன மிகத் தெளிவாகவும், ஆற்றலோடும் உண்மை ஒளியோடும் கையாளப்பட்டிருக்கின்றன. கண்டனங்களிலே கம்பீரமும், அறிவாற்றலும், தர்க்காகதி கடவாமையும், அங்கதச்சுவையும் நன்கு புலப்படும் இடங்களும் உண்டு. பெரிய புராண சூசனத்திலே பத்திச்சுவை மலிந்து விளங்குகிறது. அதிலிருந்து ஓர் உதாரணத்தினைக் கீழே தருகின்றோம்.

> ''இவ்வருமையாகிய மனிதப் பிறப்பை உண்டாக்கியது பசுபதியாகிய சிவனை வாக்கினாலே துதித்தற்கும், கைகளினாலே பூசித்தற்கும், தலையினாலே வணங்குதற்கும் செவிகளினாலே அவரது புகழைக் கேட்டற்கும், கண்களினாலே அவரது திருமேனியைத் தரிசித்தற்குமாம். மேலுகத்துள்ள பிரமா, விட்டுணு, இந்திரன் முதலியோரும், இப்பூமியின் கண்ணே வந்து சிவனைப் பூசிப்பார்கள். ஆகையல் இம்மனித சாகரம் கிடைத்தற்கரியது. இச்சாகரம் உள்ள பொழுதே சிவபூசையைப் பண்ணி, மோஷத்தைப் பெறாதொழியிற் பின்பு மோஷம் கிடைத்தல் அரிது, அரிது. ஆன்மாக்கள் தாம் நல்ல சாகரம் எடுத்தும், இவையெல்லாம் சிறிதும் ஆராயமால் ஐயையோ, வீணாகத் திரிந்து காலங்கழிக்கும் அறியாமை இருந்தபடியென்னை.''

நாவலர் எழுதிய விக்கியாபனங்கள், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முதலான துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களுக்காய் எழுதப்பட்டவை. அதேவேளையிற் சொல்ல நினைந்த விடயங்களை ஆதாரபூர்வமாய்ப் பல சான்றுகள் காட்டி நிறுவுவதற்கு எழுந்தவை.

> *''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்*
> *வாக்கினிலே ஒளியுண்டாகும்''*

என்று பின்வந்த பாரதியார் உரைத்தற்கிசைய நாவலரின் வாக்கினிலே ஒளி ஏறி இருந்ததற்கு இவ்வசன பகுதிகள் தக்க உதாரணங்களாகும். வசன அலங்காரத்திற்காகச் சொல்ல வேண்டியவற்றைச் சுருக்காதும், தேவையற்ற வருணனைகளை இடைச் சொருகலாயாக்காதும் உண்மைகளை மறைக்காதும் வெளிப்படுத்தும் சிறப்பினை இப்பகுதிகளிலே விரிவாகக் காணலாம்.

ஓர் உதாரணம் காட்டுவோம்.

''தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலும், இங்கிலீஸ் பள்ளிக்கூடங்களிலும் படிக்கப் புகுந்த பற்பல மாணாக்கர்கள் இராத்திரியிலே திருவிழா, திருவிழா என்றோடிச் சனக்கூட்டத்திலே நெருக்குண்டு தள்ளுண்டு அடியுண்டு நுழைந்து தாசிகளுடைய நாட்டிய கீதங்களைப் பார்த்தும் கேட்டும் கெட்ட வார்த்தைகளும் கெட்ட செய்கைகளும் பழகிக் கொண்டதும் அவர்கள் இராப்பாடமும் இழந்து இருபது இருபத்தைந்து நாழிகைவரையும் நித்திரையும் இழந்து மற்றை நாட் பள்ளிக்கூடங்களிலே தூங்கி விழுந்து கல்வியை இழந்து, அவர்கள் வீட்டுவேலை, தோட்டவேலை, வயல் வேலைகளும் பழகாது படிக்கிறோம், படிக்கிறோம் என்று எத்தனையோ வருடம் புத்தகம் தூக்கிக்கொண்டு வித்தியாதஷணை இறுத்துக் கொண்டு பெருமுயற்சியுடையவர்கள் போல ஓடித்திரிந்து கல்வித் தேர்ச்சி பெறாது திரும்பியதும். அவர்கள் உத்தியோகம், உத்தியோகம் என்று கேட்டபொழுதெல்லாம் ஒரு வசனந்தானும் பிழையறத் தொடுக்கத் தங்களால் இயலாமையினாலே பிறரிடத்தே பலமுறை அலைந்து திரிந்து விண்ணப்பம் எழுதுவித்துக்கொண்டு கச்சேரி கோட்டுக் களுக்கு ஓடியும் உத்தியோகம் கிடையாமையினால் ஒரு பிழைப்பும் இன்றி நடைப்பிணங்களாய்த் திரிவதும் அவர்கள் வேலையில்லாதவர்களுக்குப் பிசாசுவேலை கொடுக்கும் என்றபடி கையொப்பமில்லாக் கடிதங்கள் எழுதித் தபாற் பெட்டியிலே போட்டுக்கொண்டும் வசைப்பத்திரங்கள் எழுதி, எழுதி ஓட்டிக் கொண்டும் கைதடியிலே திருவிழா, வேலக்கையிலே திருவிழா, சுதுமலையிலே திருவிழா, மூத்தநயினார் கோயிலிலே திருவிழா, இணுவிலிலே திருவிழா, நயினார்தீவிலே திருவிழா, வேலம் பராயிலே திருவிழா, மாதகலிலே திருவிழா, புன்னாலையிலே திருவிழா, துன்னாலையிலே திருவிழா, மருதடியிலே திருவிழா என்று சொல்லிக் கஞ்சா, லேகியம் உட்கொண்டு தாசிகளுடைய வண்டிகளுக்குப் பின்னால் ஓடிக்கொண்டும், சேணிய தெருவிலே இரணிய நாடகம், கல்வியங்காட்டிலே அரிச்சந்திர விலாசம், கந்தர்மடத்தடியிலே தமயந்தி விலாசம், நெல்லியடியிலே ஏதோ ஒரு கூத்து, பறங்கித் தெருவிலே ஏரோது நாடகம், சங்குவேலியிலே இராமநாடகம், மானிப்பாயிலே தருமபுத்திர நாடகம் என்று கேட்ட கேட்ட உடனே கஞ்சா, லேகியம் தின்று வீராவேசத்தோடு ஈட்டி, வளைதடி, கருங்காலித்தண்டு கைப்பற்றி நடந்து நித்திரை விழித்தல் உலைந்து கொண்டும், நாடோடிகளாய்த் திரிந்து கெடுவது திருவிழாக்களாலே விளைந்த பிரயோசனங்களன்றோ?''

ஒருவரின் ஆளுமையும், தனித்தன்மையும், அறிவாற்றலும் அவரின் உரைநடைமூலம் வெளிப்பட்டுத் தம்மைப் புலப்படுத்துகின்றன என்பது உண்மையானால், அவ்வுண்மைக்கு இலக்கியங்களாக நாவலரின் உரைநடை நூல்கள் விளங்குகின்றன என்று தயங்காது கூறலாம். அவர்தம் உரைநடைச் சிறப்புப் பற்றி ஆராய்ந்து 1933ஆம் ஆண்டில் இரு நூல்கள் வெளியாயின. 'நாவலர் வசன நடை' என்ற நூல், கொழும்பு விவேகாநந்த வித்தியாலயத்து ஆசிரியராயிருந்த பிரம்மஸ்ரீ சோ. இராமசுவாமிசர்மா அவர்கள் எழுதியது. 'நாவலர் நடைப்பாங்கு' என்ற நூல் வேலணை கிழார் திரு. சி. சரவணனார் எழுதியது. இரண்டும் மிகச்சிறிய நூல்கள், அக்கால நிலைக்கேற்ப இவை 'நயங்காண்டல்' முறையிலே

எழுதப்பட்டுள்ளனவேயன்றித் திறனாய்வு வகையிலே நாவலர் உரைநடைச் சிறப்பை ஆராய்ந்து மதிப்பீடு செய்யவில்லை. எனினும் இவ்விரண்டும் இவ்வகையில் முன்னோடிகள் என்பதை மறுத்தல் இயலாது. நாவலரின் உரைநடை நூல்களை இன்றைய இலக்கிய ஆய்வு முறையிலே ஆராய்ந்து அவற்றின் இடத்தினைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டியது, தமிழ்த்திறனாய்வு அறிஞர்களின் இன்றியமையாக் கடனாகும்.

ஆதார நூல்கள்

1. ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு.
2. பெரிய புராணம் என வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம் (நாவலர் சூசனம் எழுதி வெளியிடப்பட்ட பதிப்பு)
3. நாவலரின் நாலாம் பாலபாடம்.

'பைந்தமிழ் வளர்த்த பதின்மர்',
ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன உரைநடை இயக்கமும் ஆறுமுக நாவலரும்

எம்.ஏ. நுஃமான்

முன்னுரை

தமிழ் உரைநடை வரலாற்றிலே ஆறுமுக நாவலரின் பங்கும் பணியும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில், பழந்தமிழ் உரைநடையிலிருந்து பெரிதும் வேறுபட்ட நவீன தமிழ் உரைநடை தோன்றியமைக்கான காரணங்களும் நவீன உரைநடை இயக்கத்தின் பொதுப்பண்புகளும், அதன் பின்னணியில் ஆறுமுக நாவலரின் உரைநடையில் காணப்படும் தனித்தன்மைகளும் இக்கட்டுரையில் ஓரளவு விரிவாக ஆராயப்படுகின்றன.

பழந்தமிழ் உரைநடை

தமிழ் மொழிக்கு ஒரு தொன்மையான உரைநடைப் பாரம்பரியம் உண்டு என்பதைத் தமிழ் உரைநடை வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுவர். தமிழின் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலே உரைநடை நூல்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நான்கு வகையான உரைநடை நூல்கள் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார் (தொல். செய்யுள். 171). இத்தகைய உரைநடை வகைகளுக்கு இப்போது நம்மிடையே உதாரணங்கள் இல்லை எனினும், சிலப்பதிகாரத்திலே செய்யுள் ஓசைமிக்க 'பாட்டிடை வைத்த' உரைநடைப் பகுதிகள் சிலவற்றை நாம் காண்கின்றோம். சங்கப் பாடல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில் (கி.பி. 3ஆம் நூற்றாண்டு அளவில்) அப்பாடல்கள் பலவற்றின் திணை, துறை பற்றிக் கொடுக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்கள் செய்யுள் ஓசையில் இருந்து பெரிதும் விடுபட்ட உரைநடையில் அமைந்திருக்கின்றன. எனினும் இவை சிறு குறிப்புக்களாகவே காணப்படுகின்றன. செய்யுள் ஓசையில் இருந்து விடுபட்ட விரிவான உரைநடை முயற்சியை எட்டாம் நூற்றாண்டில் இருந்தே நாம் காண்கின்றோம். இக்காலப் பகுதியில் எழுந்ததாகக் கருதப்படும் 'இறையனார் களவியல் உரை'யில் இருந்து பின்வரும் பகுதியை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

அரசனும் எதிர் சென்று என்னை; நூற்குப் பொருள் கண்டீரோ! என, அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும் என, போமின்? நுமக்கோர் காரணிகனை நான் எங்ஙனம் நாடுவேன். நீயிர் நாற்பத்தொன்பதின்மர் ஆயிற்று. நுமக்கு நிகராவார் ஒருவர் இன்மையினன்றே! என்று அரசன் சொல்லப்போந்து...

இறையனார் களவியலுரையிலே செய்யுள் ஓசையை ஒட்டிய உரைநடைப் பகுதிகள் பல காணப்படினும் மேற்காட்டிய பகுதியிலே உரைநடை செய்யுள் ஓசையில் இருந்து முற்றிலும் வேறுபட்டுச் செல்வதைக் காணமுடிகின்றது. களவியல் உரையை அடியொற்றி இளம்பூரணர் முதல் நச்சினார்க்கினியர் வரை அதாவது 10ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு உரையாசிரியர்கள் மூலம் தமிழ் உரைநடை வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இவ்வாறு இடைக்காலத்தில் வளர்ச்சியடைந்த தமிழ் உரைநடைக்கு உதாரணமாக 14ஆம் அல்லது 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படும் நச்சினார்க்கினியரின் கலித்தொகை உரையில் இருந்து பின்வரும் பகுதியைக் காட்டலாம்.

இதன் கண்ணே, இவள்தன் பெண்டன்மையாற் கூறத் தகாதது கூறக்கேட்ட யாம், உலக வொழுக்கத்தையறிந்து இவளை உடன் கொண்டு செல்வோமாயின் இவள் தண்ணீர் பெறாத அருந் துயரம் நமக்கு மிக்க வருத்தத்தைத் தருமாதலின் இவடன்னை உடன் கொண்டு சேறல் எவ்வாற்றாலும் தகாதென்றும் யாம் அன்பு பெருகுமாறு சூழ்ந்த காரியத்தினை இவள் அன்பு அறும்படி சூழ்ந்தேமாகக் கருதி இறக்குமாறு கூறினாரென்றும் உட்கொண்டு, இனி இவளை ஆற்றுவித்துப் பிரிவேமெனச் செலவழுங்கின்மை தோன்ற நிற்றலின் வேறுமொரு பொருள் தோன்றி நின்றது.

மேற்காட்டிய உரைநடைப்பகுதி முன்னர் எடுத்துக்காட்டப்பட்ட களவியல் உரைப்பகுதி யில் இருந்து அதிகம் வேறுபட்டதல்ல என்பது வெளிப்படை. கால நீட்சி அதிகமாய் இருப்பினும் உரைநடையிலே அதிக மாற்றங்கள் நிகழாதிருந்தமை கவனிக்கத் தக்கது. இவ்வாறு தொல்காப்பியர் காலம் முதல் உரையாசிரியர் காலம் வரை வளர்ச்சியடைந்த பழந்தமிழ் உரைநடை சில பொதுப் பண்புகளைக் கொண்டிருந்தது.

முதலாவதாக, அது முற்றிலும் இலக்கிய வழக்குச் சார்ந்ததாக, பேச்சு வழக்கில் இருந்து முற்றிலும் வேறுபட்ட புலமை நெறி சார்ந்ததாக, அந்த வகையில் செயற்கையான உரைநடையாக அமைந்தது. பெரும்பாலும் மிக நீண்ட, சிக்கலான வாக்கிய அமைப்பைக் கொண்டிருந்தது. (எனினும் இதே காலப்பகுதியில் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட உரைநடை இதில் இருந்து வேறுபட்ட ஓரளவு பேச்சு வழக்குச் சார்ந்ததாக அமைந்திருப்பதை யும் நாம் இங்கு மனங்கொள்ள வேண்டும். ஆயினும், அது உயர் இலக்கிய மரபுக்குப் புறம்பானதாகவே இருந்து வந்தது.)

இரண்டாவதாக, பழந்தமிழ் உரைநடையின் பயன்பாட்டெல்லை மிகச் சுருங்கியதாக இருந்தது. அதாவது, இலக்கண, இலக்கிய நூல்களுக்கு உரை எழுதுவதற்கும், கல்வெட்டுப் போன்ற சில ஆவணங்களுக்குமே உரைநடை பயன்படுத்தப்பட்டது. இலக்கியம், இலக்கணம், தத்துவம், வைத்தியம், சோதிடம் போன்ற சகல துறைகளைச் சார்ந்த நூல்களும்

செய்யுள் நடையிலேயே எழுதப்பட்டன. அவ்வகையில் செய்யுளே பிரதான பொது ஊடகமாக அமைய, உரைநடை ஒரு துணைச் சாதனமாகவே பயன்பட்டு வந்தது. உரைநடையின் பரந்துபட்ட பொதுப் பயன்பாட்டுக்கான சமூகத் தேவை அதுவரை ஏற்படாமையினால் அது பன்முகப்பட்டு வளர்ச்சியடைய முடியாதிருந்தது.

நவீன உரைநடையின் தோற்றம்

ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்து 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளிலே தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் இதுகாலவரை பயன்படுத்தப்பட்டு வந்த செய்யுளினாலோ அல்லது உரையாசிரியர் வழிவந்த பழைய உரைநடையினாலோ நிறைவேற்றப்பட முடியாத, புதிய மொழித் தேவைகளைத் தோற்றுவித்தன. இதனால் இப்புதிய தேவைகளை நிறைவேற்ற வல்ல புதிய தமிழ் உரைநடை தோன்ற வேண்டி ஏற்பட்டது. இச்சமூக, மொழித் தேவைகளே உரைநடையின் பயன்பாட்டு எல்லையை விரிவுபடுத்தி, உரைநடையையே பிரதான மொழி ஊடகமாகவே மாற்றி, அதன் பன்முகப்பட்ட வளர்ச்சிக்கு வழிகோலின. தமிழிலே இவ்வாறு புதிய உரைநடையைத் தோற்றுவித்த காரணிகளைக் கமில் சுவலபிலை (1978) அடியொற்றி நாம் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

(1) புதிய அரசியல், பொருளாதார அமைப்பின் நிருவாகத் தேவை

பல்வேறு துறைகளையும் உள்ளடக்கிய அரசு நிருவாகத்துக்காகவும் வர்த்தக - தொழில்துறை நிருவாகத்துக்காகவும் பல்வேறு வகையான பதிவுகள், பட்டியல்கள், கணக்கேடுகள், அட்டவணைகள், கடிதத் தொடர்புகள் போன்றவற்றை வைத்துக்கொள்ள வேண்டிய பரந்துபட்ட தேவை முன் எப்போதையும் விட 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய புதிய சமூகச் சூழ்நிலை காரணமாக ஏற்பட்டது. இத்தேவைகளைச் செய்யுளினாலோ, பழைய உரைநடையாலோ நிறைவேற்ற முடியாது என்பது வெளிப்படை. இதன் காரணமாகப் புதிய உரைநடை வளர்ச்சியுற நேர்ந்தது.

(2) கிறிஸ்தவ மதப் பிரசாரமும் எதிர்ப் பிரசாரமும்

18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளிலே கிறிஸ்தவ மதப் பிரசாரமும், கிறிஸ்தவ மதமாற்றமும் மிகப் பரந்த அளவில் நடைபெற்றன. ஐரோப்பியப் பாதிரிமாரும் சுதேச கிறிஸ்தவர்களும் இதில் தீவிரமாக ஈடுபட்டனர். இதன் எதிர் விளைவாக சுதேச மத விழிப்புணர்வு ஏற்பட்டது. கிறிஸ்தவத்துக்கு எதிராகச் சைவ சமயத்தைப் பாதுகாக்கும் இயக்கம் தீவிரப்பட்டது. இலங்கையிலே ஆறுமுக நாவலர் இதில் பிரதான பாத்திரம் வகித்தார். கிறிஸ்தவர்களும் சரி, கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களும் சரி பரந்துபட்ட பொதுமக்களை நோக்கியே தங்கள் பிரசாரத்தை நடத்தவேண்டி இருந்ததால் எல்லோருக்கும் விளங்கக்கூடிய இலகுவான மொழிநடையைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. புதிய உரைநடை வளர்வதற்கு இதுவும் ஓர் உந்து சக்தியாயிற்று.

(3) அச்சு யந்திரங்களின் வருகை

16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளிலேயே தமிழில் அச்சிட்ட நூல்கள் வெளிவரத் தொடங்கி விட்டன. எனினும், 19ஆம் நூற்றாண்டில்தான் அச்சிட்ட நூல்கள் தமிழில் பெருமளவில் வெளிவரத் தொடங்கின. இந்திய அரசாங்கம் 1835ஆம் ஆண்டில் கொண்டுவந்த ஒரு சட்டத்தின்மூலம் சுதேசிகள் சொந்தமாக அச்சகங்கள் நிறுவும் வாய்ப்பு ஏற்பட்டது. அதற்குமுன் கிறிஸ்தவ மிஷனரிகளுக்கே அச்சகங்கள் சொந்தமாக இருந்தன. 1835க்குப் பிறகு சுதேசிகளின் அச்சகங்கள் பெருகின. 1860ஆம் ஆண்டுவரை சென்னையிலும் இலங்கையிலும் சுமார் எழுபது அச்சகங்கள் பிரசுர வேலைகள் செய்தன எனத் தெரிகிறது. புதிய உரைநடையின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் இவை முக்கிய பங்காற்றின.

(4) பத்திரிகைகளின் தோற்றம்

அச்சகங்களின் வளர்ச்சியோடு பத்திரிகைகளின் வளர்ச்சியும் ஏககாலத்தில் நிகழ்ந்தது. 1831ஆம் ஆண்டில் 'தமிழ்ப் பத்திரிகை' என்ற பெயரில் ஒரு மாத இதழ் வெளிவந்தது. 1831 முதல் 1880 வரையுள்ள ஐம்பது ஆண்டுகளில் சுமார் 46 வார, மாத, காலாண்டு இதழ்கள் சென்னையில் வெளிவந்தன. 1880க்கும் 1900க்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் மட்டும் சுமார் அறுபது தமிழ்த் தினசரிகளும் காலாண்டு இதழ்களும் தோன்றின (கமில் சுவலபில், 1978:271). பெருமளவில் வெளிவந்த இப்பத்திரிகைகள் மக்களோடு நேரடியாகச் செய்தித் தொடர்பு கொள்ள வேண்டியிருந்ததால் எளிமையான உரைநடை தோன்றி வளர்வதற்கு அவையும் காரணமாக அமைந்தன.

இவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல்வேறு காரணிகளால், கல்வியறிவு உடையவர்கள் மட்டுமன்றி, குறைந்த படிப்பறிவு உள்ளவர்களும், வாசித்து விளங்கத்தக்க - படிப்பறிவு இல்லாதவர்களும்கூட மற்றவர்கள் படிக்கக் கேட்டு விளங்கிக் கொள்ளத்தக்க - இலகுவான உரைநடை ஒன்று உருவாக வேண்டும் என்ற பிரக்ஞை 18ஆம் நூற்றாண்டிலே அரும்பி 19ஆம் நூற்றாண்டிலே பரவலாகியது. 20ஆம் நூற்றாண்டிலே பாரதி காலம்வரை கூட இப்பிரக்ஞை நிலைபெற்றது. ஆகவே, இதனை ஒரு பிரக்ஞைபூர்வமான நவீன உரைநடை இயக்கம் என வருணித்தல் தகும். இவ்வியக்கப் பின்னணியிலே தான் நாவலரின் உரைநடை முயற்சிகளை நாம் அணுக வேண்டும்.

நவீன உரைநடைக் கொள்கையும் நாவலரும்

ஆறுமுக நாவலர் (1822 - 1879) 19ஆம் நூற்றாண்டு உரைநடை இயக்கத்திலே முக்கியமான இடம்பெறுபவர். 'தற்கால உரைநடையின் தந்தை' என்றும், 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்றும், 'வழங்குநடை வசனநடை எனப் பயிற்றி வைத்த ஆசான்' என்றும் தமிழ் அறிஞர்களால் போற்றப்படுபவர். கிறிஸ்தவமயமாக்கலின் தீவிர எதிர்ப்பாளரான நாவலர், சைவ சமயத்தின் தூய்மையை நிலை நிறுத்துவதற்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். நாவலரது உரைநடை முயற்சிகள் அவரது சமயப் பணியின் உபவிளைவுகளுள் ஒன்றேயாகும். சொந்தமாக ஒரு அச்சகத்தை நிறுவியதோடு, ஏராளமான

நூல்களையும் பிரசுரங்களையும் அவர் வெளியிட்டார். பத்திரிகை ஒன்றை அவர் நடத்தாத போதிலும் 'இலங்கை நேசன்', 'உதய தாரகை' போன்ற பத்திரிகைகளுக்கு அடிக்கடி எழுதியவர். இவ்வகையிலே வெளிவந்த இவரது உரைநடை ஆக்கங்கள் மிகப்பல.

நாவலரது உரைநடை ஆக்கங்கள் எல்லாம் பெரும்பாலும் கற்றறிந்த சிறு உயர் குழாத்தினருக்காக அன்றி, பரந்துபட்ட பொதுமக்களை மனங்கொண்டே எழுதப்பட்டவை. 'யாழ்ப்பாணத்துச் சனங்களே', 'யாழ்ப்பாணத்துச் சைவ சமயிகளே' என்ற தொடர்களை நாவலர் அடிக்கடி பயன்படுத்துகின்றார். 'வெகுசனத்துரோகம்' என்ற கட்டுரையிலே வெகுசனம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். தனது எழுத்துக்கள் சாதாரண படிப்பறிவற்ற பெருந்தொகையானவர்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கம் நாவலருக்கு இருந்ததை இவை காட்டுகின்றன. ஆகவே, சாதாரணர்களும் படித்து விளங்கக் கூடிய முறையில் தனது வசன நடையை அமைக்க வேண்டிய தேவை அவருக்கு இருந்தது. அத்தகைய ஒரு வசன நடையையே அவர் பிரக்ஞைபூர்வமாகப் பயன்படுத்த முயன்றார். 'திருத்தொண்டர் பெரியபுராண வசன நூலு'க்கு எழுதிய முகவுரையில் தனது உரைடைக் கொள்கை பற்றி நாவலர் பின்வருமாறு கூறுகிறார்:

> ''....இவ்வகைப்பட்ட பெருஞ்சிறப்பினதாகிய அந்நூலானது பத்திய ரூபமாய் இருத்தலால் நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கண நூல்களிலே பயின்ற வித்துவான் களுக்கேயன்றி மற்றவர்களுக்குச் சிறிதும் பயன்படாமையாலும், அவ் வித்துவான்களுக்கும் நோய் கவலை முதலிய ஏதுக்களால் விவேகங் கிளராக்காலத்துப் பயன்படாமையாலும், நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும் கல்வியில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும்... அதனைப் பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை ஆவசிகமாகிய திரி சொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்படும் கத்தியரூபமாகச் செய்து வாசிப்பவர்களுக்கே எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்திவிகாரங்களின்றி, அச்சிற் பதிப்பித்தேன்'' (ஆறுமுகநாவலர், 1950:3).

இந்த மேற்கோளிலே செய்யுள் நூல்களைவிட வசன நூல்களின் முக்கியத்துவமும் அவசியமும் வலியுறுத்திக் கூறப்படுகின்றது. அத்துடன் புதிய உரைநடையின் மூன்று முக்கிய பண்புகளும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

1. கல்வியறிவுடைய வித்துவான்கள், கல்வியறிவு குறைந்தவர்கள், கல்வியறிவு இல்லாதவர்கள் ஆகிய யாவருக்கும் எளிதில் பொருள் விளங்குவது.
2. பெரும்பாலும் இயற்சொற்களைக் கொண்டிருப்பது; அவசியமான இடத்து மட்டும் திரிசொற்களும் வட சொற்களும் கலப்பது.
3. பெரும்பாலும் சந்திவிகாரங்கள் இன்றி இருப்பது.

மேற்காட்டிய நவீன உரைநடைப் பண்புகளும் உரைநடை பற்றிய புதிய கொள்கையும் ஆறுமுக நாவலருக்கு மட்டும் உரியதல்ல என்பதையும் நாம் இங்கு மனம்கொள்ள வேண்டும். 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் நவீன உரைநடை இயக்கத்தில் ஈடுபட்டிருந்த அறிஞர்கள் பலரிடம் நாம் இப்பிரக்ஞையைக் காண்கின்றோம். உதாரணமாக, நாவலரின் சம காலத்தவரான விசாகப் பெருமான் ஐயர் 1852இல் தான் எழுதிய 'பாலபோத இலக்கணம்' என்னும் நூலுக்கு எழுதிய பாயிரத்திலே புதிய, எளிய உரைநடையின் முக்கியத்துவம் பற்றிக் கல்வியியல் நோக்கில் பின்வருமாறு கூறியுள்ளார்:

> இலக்கண, இலக்கிய, கணித, பூகோள, ககோளாதி நூல்களையெல்லாம் இக்காலத்து இத்தேசத்தை யாளுகின்ற இங்கிலீஸ்காரர்களும், அவர்கள் வசிக்கும் கண்டத்திலுள்ள ஏனையோர்களும் செய்யுளில் இயற்றிக் கற்பிப்பதை விட்டு வசனங்களிலே தெளியுற இயற்றிச் சிறுவர்களுக்குக் கற்பித்துக்கொண்டு வருகின்றனர். அதனால் அக்கண்டத்தில் வாழும் சிறுவர்கள் சில நாட்களிலே பல நூல்களைக் கற்றுப் பல விஷயங்களையும் உணர்ந்து பல தொழில்களையும் இயற்றும் திறமுடையராகின்றனர்.
>
> இத்தேசத்தார் அந்நூல்களையெல்லாம் செய்யுளிலே செய்து அவற்றிற்குத் திரி சொற்களால் உரையியற்றிச் சிறுவர்க்குக் கற்பித்து வருகின்றனர். இவ்வாறு செய்யுளில் இயற்றப்பட்ட நூல்கள், நிகண்டு முதலிய கருவி நூல்களைக் கற்றன்றிக் கற்கப்படாவாம். ஆகவே, அவற்றுள் ஒரு நூலைக் கற்பதற்கு நெடுநாள் செல்லுகின்றது. செல்லவே பல நூல்களைக் கற்றுணர்ந்து எத்தொழில்களையுஞ் செய்யத் தக்கவர்களாவது அரிதாம்.
>
> இதனால் இந்நாட்டுச் சிறுவர்கள் தங்கள் வாழ்நாட்கள் வீழ்நாட்படாமற் சில நாட்களில் அப்பல நூல்களையும் கற்றறிந்து எத்தொழிலையும் செய்யத்தக்க வல்லமை அடைவதற்கு அந்நூல்களையெல்லாம் உலக வழக்கியற் சொற்களால் உரை வசனமாகத் தெளிவுறச் செய்து கல்விச்சாலைகளிலே உபயோகமுறும்படி செய்தல் நன்று.

இம்மேற்கோளிலே புதிய உரைநடையின் அவசியமும், அது உலக வழக்குச் சொற்களைக் கொண்டு தெளிவாக அமைதல் வேண்டும் என்பதும் வலியுறுத்தப் படுகின்றது. விசாகப் பெருமான் ஐயரைப் போலவே நாவலரின் சமகாலத்தவரும், நாவலருக்குப் பிறகும் சுமார் இருபது ஆண்டுகள் வாழ்ந்தவரும், பத்திரிகை ஆசிரியரும், ஈழத்தின் முதலாவது நாவலாசிரியராகக் கருதப்படுபவருமான அறிஞர் சித்திலெவ்வை (1838 - 1898) அவர்களும் உரைநடை பற்றி இத்தகைய கருத்தையே கொண்டிருந்தார். ''இக்காலத்திலும் அதிகப் பிரயாசப்பட்டு இலக்கண இலக்கியங்களை வாசித்துத் தேர்ந்தவர்களும் அப்படியே பாடல்களைப் பாடுகின்றார்கள். அவைகளெல்லாம் வித்துவான்களுக்கு உபயோகமாயிருக்கும். ஆதலால் யாவருக்கும் விளங்கக் கூடிய வசன நடையாய்ப் புத்தகங்களைச் செய்வது மிகக் குறைவாயிருக்கின்றது. பாஷையானது தம்முடைய கருத்திலே தோன்றிய பொருளைப் பிறருக்கு விளக்குதலாகும்'' என்றும், ''எல்லாரும் விளங்கத்தக்க இலேசான சொற்களைப் பிரயோகிப்பதே மிகவும் அரிதாகும்'' என்றும் அவர் தனது 'முஸ்லிம் நேசன்' பத்திரிகையில் எழுதினார். நாவலரின் சமகாலத்தவர்கள் மட்டுமன்றி நாவலருக்கு முற்பட்ட 18ஆம் நூற்றாண்டு அறிஞர்களும் உரைநடை பற்றி இத்தகைய

கருத்தையே கொண்டிருந்தனர். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டு, 1849இல் அச்சிடப்பட்ட 'சிலுவைப் பாதையின் ஞானமுயற்சி' என்னும் நூலுக்கு அதன் ஆசிரியரனா ஞானப்பிரகாச சுவாமிகள் எழுதிய பாயிரத்திலே தனது நூலில் கையாளப்பட்டுள்ள உரைநடை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> இப்புத்தகத்தை யாவருமெளிதில் வாசித்துணர வேண்டி இலக்கண விதிப்படி எழுத்துக் களும் சொற்களும் மிகுந்த புணர்ச்சி விகாரங்களின்றிச் செந்தமிழுடன் கொடுந்தமிழ் மொழிகளுஞ் சில வாக்கியங்களிலொருமையிற் பன்மையும் பன்மை யிலொருமையும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. (மேற்கோள் பரமசிவானந்தம் 1966 - 174).

ஞானப்பிரகாச சுவாமிகளின் மேற்காட்டிய கூற்றிலே அவரது உரைநடைக் கொள்கையின் நான்கு அம்சங்கள் காணப்படுகின்றன.

1. யாவரும் எளிதில் வாசித்துணரக் கூடியதாய் இருத்தல்.
2. மிகுந்த புணர்ச்சி விகாரங்கள் இல்லாதிருத்தல்.
3. செந்தமிழுடன் கொடுந்தமிழும் கலந்திருத்தல்.
4. சில வாக்கியங்கள் இலக்கண விதிகளையும் மீறி அமைதல்.

18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளிலே தமிழுக்கு ஒரு புதிய உயிரைக் கொடுத்த ஐரோப்பியத் தமிழ் அறிஞர்களும் இத்தகைய கருத்தையே கொண்டிருந்தனர் என்பது பொதுமக்களுக்காக அவர்கள் எழுதிய உரைநடை நூல்களை அவதானிக்கும்போது தெரிகின்றது. பரந்துபட்ட பொதுசனங்களை முன்னிட்டு எழுதும்போது இத்தகைய மொழிக் கொள்கையைக் கடைப்பிடித்தல் யாருக்கும் தவிர்க்க முடியாததாகின்றது என்பதையே இது உணர்த்துகின்றது.

இதுவரை நோக்கியதில் இருந்து ஆறுமுக நாவலர் எல்லாருக்கும் எளிதில் விளங்கத் தக்க, பெரும்பாலும் இயற்சொற்களில் அமைந்த, பெரிதும் சந்தி விகாரங்கள் அற்ற ஒரு புதிய உரைநடையை உருவாக்குவதில் பிரக்ஞைபூர்வமாக ஈடுபட்டார் என்பதும், எனினும், இது நாவலரின் சிறப்புப் பண்பு மட்டுமன்றி அன்றைய புதிய உரைநடை இயக்கத்தில் ஈடுபட்டவர்களின் பொதுப்பண்பாகவும் இருந்தது என்பதும் தெளிவாகின்றது.

நாவலரின் இலக்கணத் தூய்மை வாதம்

19ஆம் நூற்றாண்டில் உருவாகிய புதிய உரைநடையின் பொதுவான போக்கையே ஆறுமுக நாவலரும் பிரதிபலித்தார். எனினும், புதிய உரைநடையை உருவாக்க உழைத்த முன்னோடிகள் பெரும்பாலோரில் இருந்து ஒரு முக்கியமான அம்சத்தில் இவர் வேறுபடுகின்றார். அதாவது, மற்றவர்கள் போலன்றி நாவலர் இலக்கணத் தூய்மைக்கு அதிக அழுத்தம் கொடுத்தவராவர்.

இலக்கணத் தூய்மை என்பது மரபுவழி வந்த இலக்கியக் கொள்கையை வழுவாது கடைப்பிடித்தலையும், மொழி அமைப்பில் ஏற்படும் புதிய மாற்றங்களையும், புதிய வழக்காறுகளையும் நிராகரிப்பதையும் குறிக்கும். குறிப்பாகச் சொல்வதானால், எழுத்து வழக்கில் பேச்சு வழக்கின் செல்வாக்கை முற்றிலும் ஒதுக்குவதோடு பேச்சுவழக்கையும் எழுத்துவழக்கையொட்டி அமைத்துக்கொள்ள வலியுறுத்துவதைக் குறிக்கும்.

இலக்கிய வழக்கும் பேச்சுவழக்கும் இலக்கண ரீதியாகப் பல அம்சங்களில் வேறுபடுகின்றன. தொல்காப்பியர் முதல் நன்னூலார் வரை இலக்கிய வழக்கையே முதன்மையாகக் கொண்டு அதன் இலக்கண விதிகளையே வகுத்துக் கூறினர். உரையாசிரியர் களும் அவற்றையே பேணிவந்தனர். இலக்கிய வழக்கு செந்தமிழ் என்றும், பேச்சுவழக்கு கொடுந்தமிழ் என்றும் கருதப்பட்டது. பேச்சுவழக்குச் சொற்கள் பல திசைச் சொற்கள் என்ற பெயரில் உயர் இலக்கிய வழக்கில் இடம்பெற்ற போதிலும் அதன் இலக்கணக் கூறுகள் அங்கீகரிக்கப்படவில்லை. இவ்வகையில் பேச்சுவழக்கின் இலக்கண அமைதியை ஒதுக்குவதையே நாம் இலக்கணத் தூய்மை எனலாம். வேறு வகையில் சொல்வதானால் இலக்கணத் தூய்மை என்பது செந்தமிழ் மரபினை அல்லது உயர் இலக்கிய மரபினைப் பேணுவதே எனலாம்.

இங்கு நாம் இலக்கணத் தூய்மை என்ற கருத்தை மொழித் தூய்மை என்ற கருத்தில் இருந்து வேறுபடுத்தி நோக்க வேண்டும். மொழித்தூய்மை என்பது பொதுவாகச் சுயமொழிக் கூறுகளை மட்டும் பயன்படுத்துவதைக் குறிக்கும். பிறமொழிச் சொற்கள் கலவாது தனித்தமிழ்ச் சொற்களிலேயே எழுத வேண்டும் என்பது மொழித் தூய்மையின் பாற்படும். நாவலர் இத்தகைய மொழித் தூய்மைவாதியல்லர். அவரது காலத்துப் பிற ஆசிரியர்களைப் போலவே வடமொழிச் சொற்களைத் தாராளமாகக் கையாண்டவர்.

''சமஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டு பாஷைக்கும் முதலாசிரியர் சிவபெருமான்... சமஸ்கிருதமும் தமிழும் சிவபெருமானாலும் இருடிகளாலும் அருளிச் செய்யப்பட்ட இலக்கண நூல்களை உடைமையாலும், ஆன்றோர்களால் தழுவப்பட்டமையாலும் தம்முள் சமத்துவம் உடையனவேயாம்'' என எழுதியவர் அவர் (ஆறுமுக நாவலர், 1969: 185 - 188). அதனால் சமஸ்கிருதச் சொற்களைக் கலந்து எழுதுவதில் அவருக்கு எவ்வித ஆட்சேபமும் இருக்கவில்லை. அதுபோலவே ஆங்கிலச் சொற்களையும் நாவலர் தாராள மாகக் கையாண்டுள்ளார். சமூக, அரசியல் விவகாரம் பற்றிய அவரது எழுத்துக்களில் ஆங்கிலச் சொற்கள் பல பயின்று வரக்காணலாம். 'சமயம் சமயம்', 'இது நல்ல சமயம்', 'வெகுசனத் துரோகம்' முதலிய கட்டுரைகளிலே ஆங்கிலச் சொற்கள் கலந்த உரைநடையைக் காணலாம்.

> ஆக்டிங் கவர்னர், ஆபீசுகள், இங்கிலீசுகாரர், உவைன், எக்சாமினர், எடிற்றர், ஏசண்டு, கம்மிற்றி, கலக்டர், கலீசு, கவர்ண்மெண்டு, கம்மிஷனர், கிறிமினல், கிளார்க்குகள், கொலோனியல் கோடு, சுப்பிறிங்கோடு, டிஸ்திரிக் கோடு, சிவில், பிறக்கிறாசி, மெம்பர், மிஷன், ஹிப்போட்டு, றேட்டு, ஜூரிமார்.

முதலிய சொற்களை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். ஆங்கிலச் சொற்கள் அதிகம் பயின்று வரும் நாவலரின் உரைநடைக்கு உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் காட்டலாம்.

> வெகுசன சம்மதம் பற்றி புறவின்சியல் கோட்டுக் கம்மிற்றி மெம்பராயிருக்கின்ற பரம்பரை உயர் குலப் பிரபுவாகிய குமாரசூரியருடைய சகலன்... இங்கிலீசு வாக்கியத் தொடையிலே சமர்த்தர், டிஸ்ரிறிக் கோட்டுக் கம்மிற்றி மெம்பருள் ஒருவர்.... (ஆறுமுக நாவலர், 1954: 166).

இவ்வகையிலே ஆறுமுக நாவலர் ஒரு மொழித் தூய்மை வாதியல்லர் என்பது தெளிவு. மொழித்தூய்மை வாதம் அவரது காலத்துக்குரியதல்ல. அது இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்து நிகழ்வாகும். ஆனால் நாவலர் மொழித் தூய்மைக்குப் பதிலாக இலக்கணத் தூய்மையையே வலியுறுத்தினார். பேச்சிலும் எழுத்திலும் இலக்கணத் தூய்மை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதே அவரது கொள்கையாகும். ''தமிழ் கற்கப்புகும் சைவசமயிகள் முன்னர்ப் பாலபாடங்களைப் படித்துக்கொண்டு இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து இயன்றவரை பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக'' எனத் 'தமிழ்புலமை' என்னும் கட்டுரையிலே நாவலர் எழுதுகின்றார் (ஆறுமுக நாவலர் 1954: 26). ''இலக்கண நூலாவது உயர்ந்தோர் வழக்கத்தையுஞ் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதுதற்கும் பேசுதற்கும் கருவியாகிய நூலாம்'' என இலக்கண நூலுக்கு அவர் வரை விலக்கணமும் கூறுகின்றார் (ஆறுமுக நாவலர் 1970: 1). ''வைதாலும் வழுவின்றி வைவார்'' என நாவலர் பற்றி வழங்கும் கூற்றும் அவரது இலக்கணத் தூய்மை நோக்கைப் புலப்படுத்துகின்றது. இவ்விலக்கணத் தூய்மை நோக்கின் அடிப்படையிலே, தன் காலத்து ஆசிரியர்கள் சிலர், மரபு ரீதியான இலக்கண விதிகளுக்குப் புறம்பாகப் பேச்சு வழக்கின் செல்வாக்குக்கு உட்பட்டு எழுதியவற்றை நாவலர் காரசாரமாகக் கண்டித்திருப்பதையும் நாம் காண்கின்றோம்.

தம்பையாப் பிள்ளை என்பவர் பாடிப் பதிப்பித்த 'குமார நாயக அலங்காரம்' என்ற நூலைக் கண்டித்து எழுதிய கட்டுரை ஒன்றிலே தம்பையாப் பிள்ளையை விளித்து நாவலர் பின்வருமாறு கேள்விக்கணை தொடுக்கின்றார்.

1. 'தம்பையாப் பிள்ளை', தம்பைய நாவலன்; 'தம்பைய கவிஞன்' என்பன இரு பெயரொட்டுப் பண்புத் தொகைகளன்றோ? இவைகளுள்ளே நிலை மொழி யாது? தம்பையாவா? தம்பையனோ? தம்பையாவாயின், 'தம்பைய நாவலன்', 'தம்பைய கவிஞன்' என்று புணர்ந்ததெப்படி? 'தம்பையனாயின்' 'தம்பையாப் பிள்ளை' என்று புணர்ந்ததெப்படி? ஆகார வீற்று ஐயா வென்பது விளியுருபேற்ற பெயரா? உருபேலாது தன்னியல்பினின்ற பெயரா? உருபேற்ற பெயரும் பின் மொழியுங்கூடி இருபெய ரொட்டுப் பண்புத் தொகையாகுமா? 'ஆழ்வாப் பிள்ளை' என்னும் புணர்ச்சிக்கு விதி என்னை?''

2. ''சுப்பிரமணிய பிள்ளையவர்கள் குமாரன் தம்பையா பிள்ளயவர்கள் என்றிட்டுக் கொண்டீரே, 'குமாரன்' என்னும் ஒருமைப் பெயரோடு 'அவர்கள்' என்னும் பன்மைப் பெயர் புணர்ந்த தெப்படி?'' (ஆறுமுகநாவலர், 1954:25)

நாவலர் எழுப்பும் இக்கேள்விகள் அவரது இறுக்கமான இலக்கணத் தூய்மை நோக்கை நன்கு வெளிப்படுத்துகின்றன. குமாரன்... அவர்கள் போன்ற வழக்குகள் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட பொது வழக்காகிவிட்டதையும் நாம் காண்கிறோம்.

இதுபோன்றே 'போலியருட்பா மறுப்பு' என்னும் கட்டுரையிலே இராமலிங்க சுவாமிகள் பதிப்பித்த 'ஒழிவிலொடுக்க உரை'யிலே காணப்படும் வழுக்கள் என நாவலர் ஒரு நீண்ட பட்டியலைத் தருகின்றார். அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கு சுட்டிக் காட்டலாம்.

> சுழுமுனையைச் சுழிமுனையென்றும், சொப்பனத்தைச் சொற்பனமென்றும்ம கேட்க வென்பதைக் கேழ்க்க வென்றும்... தோன்றிய விருதுகால மென்பதைத் தோன்றப்பட்ட விருதுகாலமென்றும், நூல் கேட்டலை நூற்கேட்டலென்றும், நூற்களறிவிக்க மாட்டா வென்வதை நூல்களறிவிக்க மாட்டாதென்றும்... அத்தமயனத்தை அத்தமானம் என்றும், அவைகளறியா வென்பதை அவைகளறியாதென்றும்... நேதிகளைதலை நியதிகளை தலென்றும், தொடையைத் துடையென்றும், ஆகவென்னும் வினையெச்சங்களை ஆயென்றும் பதிப்பித்திருக்கின்றாரே, இன்னும் அப் புத்தகப் பிழைகளை எடுத்துச் சொல்லப்புகின் மணற் சோற்றிற் கல்லாராயப் புகுதல் போலும். அப்புத்தகத்தில் பல விடங்களில் பெயரெச்சங்களை முற்றெனக் கொண்டு முற்றுக்குறி கொடுத்து வரிமுடிவு செய்து அவை கொள்ளும் பெயர்களை வேற்றுவரிக்கு முதலாகக் கொண்டு தொடங்கி யிருக்கிறாரே. இவ்வியல்புடையவரா ஓதா துணர்ந்தவர். (ஆறுமுகநாவலர், 1954:97)

மேற்காட்டிய கூற்றுக்களிலும் நாவலரின் இலக்கணத் தூய்மை நோக்கு நன்கு புலப்படுகின்றது. இராமலிங்க சுவாமிகளின் பதிப்பில் நாவலர் வழு எனக் கூறுவனவெல்லாம் வழுவல்ல என்று கூறுவதற்கு நான் இங்கு முயலவில்லை. ஆனால், அவர் வழு எனக் கூறுவனவற்றுட் பல பேச்சு வழக்கில் பயின்று வருவன என்பதே நாம் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. நாவலரின் இலக்கணக் கோட்பாட்டில் பேச்சு வழக்குக்கு இடம் இல்லை.

> உரை நடையிலே அன்றாடப் பேச்சு வழக்கு வடிவங்களையும் சொற்களையும் பயன்படுத்துவதற்கு ஆறுமுகநாவலர் திட்டவட்டமாக எதிரானவர். அந்த வகையிலே, இறுகிய, வளைந்து கொடுக்காத, ஒருவகையில் செயற்கையான தமிழ் உரைநடை வகை ஒன்று இன்றுவரைகூட நிலைத்திருப்பதற்கு அவரும் ஓரளவுக்குப் பொறுப்பாளியாக இருக்கிறார்.

என இது தொடர்பாக கமில் சுவலபில் (1973:259) கூறுவதும் இங்கு மனம் கொள்ளத் தக்கது.

17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளிலே, சாதாரண பொதுமக்களை மனங்கொண்டு புதிய உரைநடையை உருவாக்க உழைத்த நவீன தமிழ் உரைநடையின் முதல் முயற்சியாளர்களான தத்துவ போதக சுவாமிகள், சீகன் பாலகு ஐயர், வீரமாமுனிவர் போன்ற ஐரோப்பியத்

தமிழறிஞர்கள் சாதாரண சனங்களுக்காகத் தாங்கள் எழுதிய உரைநடையை 'இலக்கணத் தூய்மை' பேணாது பெரிதும், பேச்சு வழக்குச் சார்ந்ததாகவே அமைக்க முயன்றார்கள். இதுபற்றி பேராசிரியர் வி. செல்வநாயகம் (7951: 78) கூறுவது இங்கு கவனிக்கத்தக்கது.

> பேச்சு வழக்கில் உள்ள மொழியை ஆதாரமாகக் கொண்டு எழுகின்ற நடை எதுவோ அதுதான் சிறந்தது என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதனால் பொதுமக்கள் பேசும் தமிழில் உள்ள சொற்களையும் இலக்கண அமைதிகளையும் பயன்படுத்தித் தமிழுக்கு ஒரு புதிய நடையிலே தம் கருத்துக்களை வெளியிடத் தொடங்கினர்.

இத்தகைய உரைநடைக்கு உதாரணமாக 17ஆம் நூற்றாண்டிலே தமிழ் நாட்டில் வந்து வாழ்ந்த தத்துவ போதக சுவாமிகளின் உரைநடைப் பகுதி ஒன்றைக் காட்டலாம்.

குரு : இரண்டாஞ் சல்லாபத்திலே நம்மாலே உபதேசிக்கப்பட்டதெல்லாம் நன்றாய்த் தெளிஞ்சாயானால் இப்பாலும் அறிய வேண்டியதை சங்கோசப்படாமல் கேழ்ப்பாயாக.

சீஷன் : பராபர வஸ்துவினிடத்திலே படைப்புண்ட புத்திக்குள்ளே அடங்காத சத்தியங்கள் உண்டென்றும், அப்படிப்பட்ட அடங்காத சத்தியங்களை அறிய வேண்டிய தாயிருக்குமென்றும் அருளிச் செய்தீர். பிரத்திய' தெரிசனத்தினாலே யானாலும் (அனுமான தெரிசனத்தினாலே யானாலும்) அதுகளைப் புத்தியானது சென்று படிக்கக் கூடாமலிருக்கச் செய்தே, அதுகளை யெந்தக் காரணத்தினாலே அறியலாம் (மேற்கோள்: பரம சிவானந்தம், 1960:42)

மேற்காட்டிய பகுதியிலே சில பிழைகள் இருப்பினும் பேச்சுவழக்கின் செல்வாக்கை நாம் தெளிவாகக் காண்கின்றோம். 18ஆம் நூற்றாண்டிலே வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குரு கதையும் இத்தகைய உரைநடை முயற்சிக்குச் சிறந்த உதாரணமாகும். கற்றறிந்தோர்க்காக உயர் இலக்கிய நடையில் பல நூல்களை எழுதிய வீரமாமுனிவர் தமிழ் பயிலத் தொடங்குவோரை மனங்கொண்டு பரமார்த்த குரு கதையை இலக்கணத் தூய்மையை மீறிப் பேச்சு வழக்கை ஒட்டியே எழுதினார். இதற்கு உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் காட்டலாம்.

> ஒரு நாய் திருடின ஆட்டுக்கறிக் கண்டத்தை வாயிலே கவ்விக்கொண்டு நடுவாற்றிலே நீந்திப் போகையில் ஆறு கபடாகத் தண்ணீரிலே வேறொரு பெரிய மாங்கிஷத் துண்டைக் காட்டினதாம். நாயோ வென்றால் ஒரு கபடில்லாமல், தான் கண்டது பெரிதாகத் தோன்றினதினாலே கவ்வியிருந்த துண்டை விட்டுப் பெரியதைக் கவ்வ முழுகினபோது அதுவு மிதுவும் போச்சுது; நாயும் வெறுமனே ஊருக்குச் சென்ற தென்றான் (மேற்கோள்: சோசபு சுந்தரராசு, 1973:78)

ஞானப்பிரகாச சுவாமிகளும் செந்தமிழோடு கொடுந்தமிழ் கலந்த 'இலக்கண நெகிழ்ச்சி யடைய' உரைநடை ஒன்றையே கையாண்டார் என்பதையும் ஏற்கனவே பார்த்தோம்.

18ஆம் நூற்றாண்டிலே, கற்றோர் மரபில் இருந்து முற்றிலும் விலகிய, சாதாரணப் பேச்சு வழக்கை நேரடியாகப் பிரதிபலிக்கும் எளிமையான உரைநடை முயற்சியொன்றையும் நாம் காண்கின்றோம். பிரான்சியரின் காலனியாக இருந்த பாண்டிச்சேரியில் முக்கிய பதவி வகித்த ஆனந்தரங்கம் பிள்ளையின் (1709 - 1761) தினக்குறிப்பிலே காணப்படும் உரைநடை இத்தகையது.

> காலமே தரங்கம்பாடி சின்னத்துரை பேர்விளங்கன் வந்தான். ஆள் கழுக்கு மழுக்கென்று மணலிலெ பிடுங்கியெடுத்த வள்ளிக்கிழங்காட்டமா யிருக்கிறான். முகம் பரந்த முகமாய் ஆனவாகனனாய் இருக்கிறான். அவன் சென்னப் பட்டணத்துக்குப் போயிருந்து வந்தவன். மீனாட்சியம்மை சத்திரத்திலே வந்து சொல்லியனுப்பினான்.

ஆனந்தரங்கம் பிள்ளையின் மேற்காட்டிய உரைநடைப் பகுதி முற்றிலும் பேச்சு வழக்குச் சார்ந்தது என்பது வெளிப்படை. ஆயினும் இத்தகைய பேச்சு மொழிசார்ந்த உரை நடைப் போக்கு ஆறுமுக நாவலர் போன்ற கற்றறிந்த சுதேச உயர் குழாத்தினர் மத்தியில் செல்வாக்குப் பெற முடியவில்லை. அவர்கள் செந்தமிழ் மரபு சார்ந்த உயர் இலக்கிய நடையையே பெரிதும் போற்றினர். இந்த வரம்புக்குள் நின்றே நாவலர் தமது உரைநடையில் காலத்துக்கேற்ற சில புதிய மாற்றங்களைப் புகுத்தினார்.

நாவலர் போன்ற சமூக உயர் குழாத்தினர், புதிய தமிழ் உரைநடையின் முதல் முயற்சியாளர்களான ஐரோப்பியரின் மரபைப் பின்பற்றி, பேச்சு மொழிசார்ந்த தமிழ் உரைநடையொன்றை அமைக்க முயன்றிருந்தால் இன்று தமிழ் உரைநடையின் சரித்திரமே வேறாக இருந்திருக்கலாம். பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையே இன்று நிலை பெற்றிருக் கின்ற நீண்ட இடைவெளி சுருங்கியிருக்கலாம். ஆனால், இவ்விடைவெளியைச் சுருக்க மிகப் பரந்துபட்ட வெகுசன இயக்கங்களில் ஈடுபட்ட பிற்காலத்தவர்களே குரல் கொடுத்தனர். மகாகவி பாரதியார் இவ்வகையிலே முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர். வசன நடை பற்றிய தனது கொள்கையை அவர் பின்வருமாறு வெளியிடுகின்றார்:

> தமிழில் வசன நடை இப்போதுதான் பிறந்து பல வருஷமாகவில்லை. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்தப் பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுவதுதான் உத்தமமென்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது (பாரதியார், 1964:142).

பாரதியின் இக்கொள்கை பூரணமாக சாதனையாகாவிடினும் தமிழ்ப் புனைகதைகள் மூலம் அது ஒரு அளவுக்குச் சாத்தியமாகியே வந்துள்ளது. ஆயினும், இலக்கணத் தூய்மை வாதத்தின் செல்வாக்கு இன்னமும் அழுத்தமாகவே உள்ளது.

நாவலரின் உரைநடை

ஆறுமுக நாவலரின் பொதுவான உரைநடைக் கொள்கை பற்றி இதுவரை நோக்கினோம். எல்லாருக்கும் எளிதில் பொருள் விளங்கக் கூடிய, பேச்சு வழக்கில் இருந்து முற்றிலும் வேறுபட்ட, தூய உயர் இலக்கிய மொழி நடை ஒன்றையே நாவலர் போற்றினார் என்பதைப் பார்த்தோம். இதன் அடிப்படையில் அமைந்த அவரது உரைநடை ஆக்கங்களை இனி வகைப்படுத்தி நோக்கலாம். அளவினாலும் தன்மையினாலும் முக்கிய கவனத்துக்குரிய நாவலரது உரைநடை ஆக்கங்களை நாம் பின்வருமாறு நான்கு தொகுதிகளில் வகுத்து நோக்கலாம்.

(1) இலக்கிய, இலக்கண நூல்களுக்கு எழுதிய உரைகள்:
இவ்வகையில் திருமுருகாற்றுப்படை உரை, நன்னூற் காண்டிகை உரை போன்றவை அடங்கும்.

(2) இடைக்காலப் புராண இலக்கியங்களின் உரைநடை ஆக்கங்கள்:
இவ்வகையில் திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண வசனம் முதலியவை அடங்கும்.

(3) கல்வி சார்ந்த உரைநடை நூல்கள்:
பாலபாடம், இலக்கண வினாவிடை, சைவ வினா விடை முதலியவை இப்பிரிவுள் அடங்கும்.

(4) சமய, சமூகக் கண்டனப் பிரசுரங்கள்:
யாழ்ப்பாணச் சமயநிலை, போலியருட்பா மறுப்பு, நல்லறிவுச் சுடர் கொளுத்தல், நல்லூர்க் கந்தசாமி கோயில் போன்ற, பிரபந்தத்திரட்டில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் இப்பிரிவுள் அடங்கும்.

மேற்காட்டிய உரைநடை ஆக்கங்களில் பொருள் வேறுபாட்டுக்கு ஏற்ப அவற்றின் தன்மையிலும் நாம் வேறுபாடுகளைக் காணலாம். இலக்கண, இலக்கிய நூல்களுக்கு எழுதப்பட்ட உரைகள் ஓரளவுக்குப் பழைய உரையாசிரியர்களின் மொழிநடையை ஒத்ததாகவே காணப்படுகின்றன. நன்னூல் காண்டிகை உரையில் வரும் கீழ்க்காணும் பகுதியை இதற்கு உதாரணமாகத் தரலாம்.

> ''ஈங்கே என்ற மிகையால் வருதி என இகர விகுதி நிகழ்காலங் காட்டுதலையும் பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலையின்றி விகுதி காலங்காட்டுதலையும் அமைத்துக் கொள்க. பகுதி விகுதி என்னுஞ் சூத்திர முதல் இச்சூத்திரம் வரையும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டினமையால், முடித்துக் காட்ட லென்னுமுத்தி. முன்னைத் தமிழ் நூல்களில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபதமென முன்னே நாட்டி இச் சூத்திரம் வரையும் அவைகளுக்கு இலக்கணங்கூறி நிறுத்தினமையால் தாஅனாட்டித் தனது நிறுப்பென்னு மதம்'' (ஆறுமுக நாவலர், 1978: 119 - 120).

புராண வசன நூல்களிலே இதிலிருந்து சற்று வேறுபட்ட பிறிதொரு வகையான உரைநடையைக் காண்கின்றோம். இவை புராண நிகழ்ச்சிகளைக் கதையாகக் கூறுவன. இக்கதைக் கூற்று, நிகழ்ச்சிகளை முன்னே இருப்பவர்களுக்கு எடுத்துரைக்கும் முறையில் அமைந்துள்ளது. ''இனி அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் சொல்வோம் கேளுங்கள்'' என்றே நாவலர் தனது திருவிளையாடற் புராண வசனத்தைத் தொடங்குகின்றார். இவ்வகையில் இவ்வசன நூல்களின் மொழிநடையும் எடுத்துரைப்பாங்கானதாகவே உள்ளது. இத்தகைய உரைநடைக்குத் திருவிளையாடற் புராணத்திலே வரும் பின்வரும் பகுதியை உதாரணமாகக் காட்டலாம்.

> முனிவர்களே, கேளுங்கள், விசுவாவசு என்னும் பெயருடைய ஒரு வித்தியாதரன் வித்தியாவதி என்னும் ஒரு பெண்ணைப் பெற்றான். அவள் உமாதேவியிடத்து மிக்க அன்புடையவளாகி, தன் பிதாவை வணங்கி ஐயா, அடியேன் உமாதேவியை வழிபட்டு உய்ய வேண்டும் என்றாள். விசுவாவசு உமாதேவியினுடைய மந்திரத்தை அவளுக்கு உபதேசித்தான். அவள் பிதாவை நோக்கி, உமாதேவியை வழிபடுவதற்குச் சிறந்த புண்ணியத் தலம் யாது என்று வினவ, அவன் அவளை நோக்கி, பூமியிலே மதுரையெனப் பெயர் கொண்ட சிவதலம் உண்டு. அது பூலோக சிவலோகம் எனப்படும். அதுவே துவாத சாந்த தலம் என்றான் (ஆறுமுகநாவலர், 1933:45).

மேற்காட்டிய உரைநடைப் பகுதியிலே ஒரு வரலாற்றை எடுத்துரைக்கும் பண்பே (narrative) காணப்படுகின்றது. நிகழ்ச்சிகளையும் விபரங்களையும் உணர்ச்சிபூர்வமாக, நுட்பமாக விவரித்துச் செல்லும் விபரணப்பண்பு (descriptive) வளர்ச்சி அடையாத 19ஆம் நூற்றாண்டிலே இத்தகைய எடுத்துரைப்பாங்கான உரைநடையே பெருவழக்காக இருந்தது. கோயில், மேடைப் பிரசங்கங்களுக்கும் இத்தகைய உரையே பயன்படுத்தப்பட்டது. இத்தகைய எடுத்துரைப்பாங்கை நாவலரது உரைநடையின் பொதுப் பண்பாகவும் நாம் கருதலாம். உணர்ச்சிபூர்வமான விபரணப்பாங்கான உரைநடையினை 19ஆம் நூற்றாண்டில் மிக அபூர்வமாகவே நாம் காண்கிறோம். சி.வை. தாமோதரம்பிள்ளையின் கலித்தொகை பதிப்புரையிலே இருந்து (1887) பின்வரும் பகுதியை அன்றைய விபரணப் பாங்கான உரைநடைக்கு உதாரணமாகக் காட்டலாம்.

> ஏடு எடுக்கும்போது ஓரஞ்சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோவென்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கிறது... எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன.

அரிய இலக்கியங்கள் தேடுவாரற்று அழியும் நிலை கண்டு கவலையோடும் ஆதங்கத்தோடும் அவற்றின் உண்மை நிலையை தாமோதரம்பிள்ளை சித்திரித்துக் காட்டும் இளவுரைநடைப் பகுதியிலே உணர்ச்சியோடு கூடிய விபரணத் தன்மையைக் காண்கின்றோம். இத்தகைய விபரணத் தன்மை இந்த நூற்றாண்டிலே ஏற்பட்ட புனைகதைகளின் பன்முகப்பட்ட வளர்ச்சியோடுதான் தமிழ் உரைநடையில் நிலைபெற்றது என்பதையும்

நாம் மனங்கொள்ள வேண்டும். நாவலரிடம் இத்தகைய விபரணப்பாங்கை நாம் காண முடியாதது வியப்பல்ல.

> கல்வித்துறை சார்ந்த நூல்களிலே நாவலர் கையாண்ட உரைநடை பிறவற்றில் இருந்து பிறிதொரு வகையில் வேறுபடுகின்றது. 'பாலபாடம்', 'இலக்கண வினா விடை', 'சைவ வினா விடை' போன்ற நூல்கள் மாணவர்களுக்கு மொழி அறிவையும் சமய ஒழுக்க நெறிகளையும் புகட்டும் நோக்குடன் எழுதப்பட்டவை. இவை இளம் மாணவர்களை மனம் கொண்டு எழுதப்பட்ட காரணத்தினால், ஒப்பீட்டளவில் நாவலரின் ஏனைய நூல்களைவிட இவற்றிலே எளிமை அதிகம் எனலாம். சிறு சிறு வாக்கியங்களும் பொது வழக்கில் உள்ள சொற்களும் இந்நூல்களிலே அதிகம் பயின்று வருகின்றன. இதுவே இந்நூல்களில் கையாளப்பட்டுள்ள உரைநடையின் அமைப்பு ரீதியான எளிமைக்குக் காரணமாக அமைகின்றது.

கடவுள் என்றும் உள்ளவர்; அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. அவர் எங்கும் நிறைந்தவர்; அவர் இல்லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிந்தவர்; அவர் அறியாதது ஒன்றுமே இல்லை. அவரது அறிவு இயற்கை அறிவு, ஒருவர் அறிவிக்க அறிபவர் அல்லர், அவர் எல்லாம் வல்லவர், அவரால் இயலாத கருமம் ஒன்றும் இல்லை. அவர் அளவிடப்படாத ஆனந்தமுடையவர். தம்முடைய அநுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவரல்லர் (ஆறுமுகநாவலர், 1969:1).

தெளிவான அமைப்புடைய சிறிய வாக்கியங்களுக்கு நாவலரின் மேற்காட்டிய உரைநடைப் பகுதி சிறந்த உதாரணமாக உள்ளது. நாவலரின் உரைநடை பற்றி எழுதியோர், நாவலர் தமிழ் உரைநடையில் இரண்டு புதுமைகளைப் புகுத்தினார் என்பர். ஒன்று, சந்தி பிரித்து எழுதியமை; மற்றது, பழைய உரையாசிரியர்களின் மரபைப் பின்பற்றி மிக நீண்ட தொடர்வாக்கியங்களை எழுதுவதற்குப் பதிலாகத் தெளிவான சிறுசிறு வாக்கியங்களைப் பயன்படுத்தியமை (கமில் சுவலபில், 1973: 59, செல்வநாயகம், 1957 - 98).

சந்தி பிரித்து எழுதுதல் நாவலரின் எல்லா உரைநடை நூல்களிலும் பொதுவாகக் காணப்படும் பண்பாகும். ஆனால், சிறு சிறு வாக்கியங்களைப் பயன்படுத்துவதை நாம் அவ்வாறு கருதமுடியாது. நாவலரது உரைநடை நூல்களை வாசிக்கும்போது பல சந்தர்ப்பங்களிலே நீண்டு செல்லும் தொடர்வாக்கியங்களை நாம் காணலாம். திருத்தொண்டர் பெரிய புராண வசனத்தின் தொடக்க வாக்கியமே மிக நீண்டதாகும். ''அனாதி மல முத்தராய்ஈ.'' என்று தொடங்கி ''வீற்றிருந்தருளுவர்'' என முடியும் இவ்வாக்கியம் அச்சிலே முப்பத்தாறு வரிகளில் அமைந்துள்ளது. நூற்றி எண்பது சொற்களால் ஆனது. இதை ஒத்த நீண்ட தொடர் வாக்கியங்கள் பலவற்றை நாம் பெரிய புராண வசனத்திலே காணலாம். பழைய உரையாசிரியர் மரபைப் பின்பற்றும் இத்தகைய நீண்டு செல்லும் தொடர் வசனங்களை வெவ்வேறு அளவுகளில் நாவலரின் ஏனைய உரைநடை ஆக்கங் களிலும் பரக்கக் காணலாம். ஆயினும் மாணவர்களுக்காக அவர் எழுதிய பாலபாடங்களிலே சிறப்பாகச் சிறுசிறு வாக்கியத் தொடர்களையே நாம் காண்கின்றோம். அவரது கண்டன நூல்களிலும் இப்பண்பு பெருமளவில் காணப்படுகின்றது. நாவலரிடம் மட்டுமன்றி

18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் புதிய உரைநடை எழுதத் தொடங்கிய வேறு சிலரிடமும் இத்தகைய சிறு வாக்கியங்களைக் கொண்ட உரைநடைப் போக்கினை நாம் ஓரளவு காண்கின்றோம். ஏற்கனவே மேற்கோள் காட்டிய தாமோதரம்பிள்ளையின் உரைநடை இத்தகைய சிறு வாக்கியத் தொடர்களாலேயே அமைந்துள்ளது. கால்டுவெல் ஐயரது (1714 - 1761) 'நற்கருணைத் தியான மாலை' என்னும் நூலிலே பின்வரும் உரைநடைப் பகுதி வருகின்றது.

> தேவ நற்கருணை வாங்கும் போதெல்லாம் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கிற செபத்தியானங்கள் ஒவ்வொன்றையும் முறையாய் வாசிக்க வேண்டுமென்று நினைக்க வேண்டாம். ஒரு மாதத்தில் சில தியானங்களையும் அடுத்த மாதத்தில் மற்றுஞ் சில தியானங்களையும் வாசித்தால் எப்போதும் எழுப்புதல் உண்டாக ஏதுவாக இருக்கும். இப்புத்தகம் உதவியேயன்றித் தடையல்ல, மாலையேயன்றி விலங்கல்ல. (மேற்கோள்: மயிலை சீனிவேங்கடசாமி, 1936: 112 - 113)

இவ்வுரைநடைப் பகுதியிலே சந்தி பிரித்து எழுதுதல், சிறு வாக்கிய அமைப்பு, எளிமை, தெளிவு ஆகிய புதிய உரைநடைப் பண்புகளையெல்லாம் காண்கின்றோம். 18ஆம் நூற்றாண்டிலே அரும்பிய இப்பண்புகள் 19ஆம் நூற்றாண்டிலே நாவலரிடம் பெருமளவில் முனைப்பாக வெளிப்படுகின்றன. அதனாலேயே நாவலரின் உரைநடை முக்கியத்துவம் பெறுகின்றது எனலாம்.

இதுவரை நாவலரின் உரைநடை பற்றி நாம் நோக்கியவையெல்லாம் பொதுவாக வடிவ ரீதியான அம்சங்களே. சந்தி பிரித்தல், இயற்சொற்களைக் கையாளல், சிறு வாக்கியங்களைப் பயன்படுத்தல், இலக்கணத் தூய்மை பேணல் போன்ற வடிவ அமைதி மட்டும் நாவலரின் உரைநடையை மதிப்பிடப் போதுமானவையல்ல. சொல்லும் விசயம், சொல்லப்படும் முறை, உணர்ச்சிக் கலப்பு, ஆளுமை வெளிப்பாடு போன்ற பல்வேறு பொருள் அமைப்பு சார்ந்த அம்சங்களும் கவனத்துக்கு உரியவையாகும். உரைநடையின் ஜீவனை நாம் இவற்றிலேயே காணமுடியும். இவ்வகையிலே நாம் இதுவரை பார்த்த நாவலரின் நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள உரைநடை உயிர்த்துடிப்பு உடையது எனக் கூறமுடியாது. நாவலரின் உரைநடை பற்றி கமில் சுவலபில், (1973:259) கூறுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. ''தமிழ் உரைநடையில் அவர் புகுத்திய பாரிய மாற்றங்களுக் காகவும், தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர்களுக்கு அவர் வழி திறந்து விட்டமைக்காகவும் அவர் மதிப்புக்கும் பாராட்டுக்கும் உரியவராவர்'' என நாவலர் பற்றிக் கூறும் கமில் சுவலபில், ''இன்று நாம் அவருடைய உரைநடையை, வறண்ட, வித்துவப்பாங்கான, சலிப்பூட்டுகின்ற வர்ணங்கள் அற்ற, கட்டு திட்டங்கள் நிறைந்த உரைநடை என வர்ணிக்க முடியும்'' என்றும் கூறுகின்றார்.

நாவலரின் உரைநடை பற்றிய கமில் சுவலபிலின் இம்மதிப்பீடு பொதுவாக ஏற்கத் தக்கதெனினும் நாவலரின் கண்டன நூல்களைப் பொறுத்தவரை முற்றிலும் பொருந்துவதாகக் கருத முடியாது. இக்கண்டன நூல்களிலேயே நாவலரின் தனி ஆளுமை முழு அளவில்

வெளிப்படுவதை நாம் காண்கின்றோம். கிண்டலும், கேலியும், கோபமும் வெளிப்படுவதைக் காண்கின்றோம். தகுந்தது எது; தகாதது எது என்று வலியுறுத்திக் கூறுகின்ற, ஒன்றை ஆதரித்து மற்றதை வன்மையாக நிராகரிக்கின்ற அதிகாரத்துவத்தை நாம் இவற்றில் காண்கின்றோம். இந்த அதிகாரத்துவம் நாவலரின் கண்டன உரைநடையின் முக்கிய பண்புகளுள் ஒன்றாகும். இதை நாம் அதிகார மொழிநடை (Commanding Style) என்றும் அழைக்கலாம். கல்வி நோக்கில் அமைந்த பால பாடங்களில் உபதேசமாகவும், கட்டளையாகவும் ஆங்காங்கே காணப்படும் இப்பண்பு கண்டன நூல்களில் ஆங்காங்கே வெளிப்படுகின்றது. கண்டனம் அல்லது கருத்துரை யாரை நோக்கிக் கூறப்படுகின்றதோ, அவர்களை விளித்தே நாவலர் பெரும்பாலும் தொடங்குகின்றார்.

> இலங்கை நேசன் பத்திராதிபரே, தம்பையாப்பிள்ளையே, நரசிங்கபுரம் வீரசாமி முதலியாரே, நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களே, ஓ, யாழ்ப்பாணத்துச் சனங்களே, கோப்பாய் சபாபதிப்பிள்ளையே, கந்தர் மடப் பிரபுவே, யாழ்ப்பாணத்துச் சைவ சமயிகளே

போன்ற விளிப்புத் தொடர்களே இவற்றின் அதிகாரத் தோரணையையும் பிரசங்க பாணியையும் புலப்படுத்துவனவாக உள்ளன. நாவலரின் விருப்பு வெறுப்புகளும் தன்முனைப்பும் இவற்றில் வெளிப்படுகின்றன. நாவலரின் ஏனைய உரைநடை ஆக்கங்களில் இல்லாத உயிர்த்துடிப்பும் தான் கலந்த தன்மையும் இவற்றிலேயே காணப்படுகின்றன. இந்தத் 'தான் கலந்த தன்மை' தமிழ் உரைநடைக்கு மிகவும் புதிதாகும். தமிழ் உரைநடை வரலாற்றிலே முதன் முதலாக ஒரு தனி ஆளுமையின் வெளிப்பாட்டை நாம் இவற்றில்தான் காண்கின்றோம். நாவலரின் மொத்தமான உரைநடை ஆக்கங்களிலே இது ஒரு சிறு பகுதி எனினும், நாவலர் மூலம் தமிழ் உரைநடை அடைந்த பேறு என நாம் இதனையே கருதலாம். இத்தகைய உரைநடைப் பகுதிகளுக்குச் சில உதாரணங்களை இனிப் பார்க்கலாம்.

(1) பாதிரிமார்கள் இத்தேசத்துச் சில பாலியர்களைக் குருமார்களாக்கி றெவறெண்டுப் பட்டங் கொடுத்து விட்டார்கள். இங்கே நெல் அரிசி முதலியவையெல்லாம் ஒறுக்க றெவறெண்டுப் பட்ட மொன்றே மலிந்தது. இந்தச் சுதேச குருமார்கள் இங்கிலீசும் செவ்வையாக அறியார்கள். தமிழுஞ் செவ்வையாக அறியார்கள். கிறிஸ்து சமயமும் அறியார்கள். சைவ சமயமும் அறியார்கள். தங்களிடத்தே யாராயினும் மதவிஷயத்தைக் குறித்துச் செய்யும் ஆட்சேபங்களுக்குச் சமாதானஞ் சொல்ல வகையறியாத இவர்கள் யார் மனசைத் திருப்ப மாட்டுவார்கள் ('யாழ்ப்பாணச் சமயநிலை').

(2) பரமசிவனுடைய ஐந்து முகங்களுள்ளே, ஈசான முகம் ஊர்த்துவ முகமென்று சொல்லியிருக்கிறதே! ஊர்த்துவமுகமாவது அண்ணார்ந்து கிடக்கிற முகமாமே அப்படியானால் அபிஷேகம் பண்ணும்பொழுது தீர்த்தம் மூக்கினுள்ளே போமே! போனால் சுவாமிக்கு சலதோஷங்கொள்ளுமே! இதற்கு யாது பண்ணலாம் என்கிற அஞ்ஞான சிரோமணிகளுஞ் சைவசமய குருமாராம்! ('யாழ்ப்பாணச் சமயநிலை').

(3) உங்கள் சைவ குருமாருக்கு என்ன வேலை! நீங்கள் வருந்திச் சம்பாதித்துக் கொடுக்கக் கொடுக்க அவர்கள் எளிதில் வாங்கி உண்டுடுத்துக் கொண்டு வெட்கஞ் சிறிதுமில்லாமல் மாப்பிள்ளை மாடுகள் போலத் திரிகிறார்களே! ('யாழ்ப்பாணச் சமயநிலை').

(4) நாவலரவர்களைப் பரீக்ஷிக்கும் பொருட்டு இராமாயணத்தில் ஓர் செய்யுள் வரைந்தீர். 'சபாசு! சபாசு' நீரா வித்துவான்களைப் பரீக்ஷித்துத் தரங்குறித்துப் பட்டங்கொடுக்க புகுந்தீர்! கெட்டி! கெட்டி!!! தான் கிடப்பது குட்டிகைச் சுவர், கனாக்கண்டது மச்சு மாளிகையா? ('நல்லறிவுச் சுடர்கொளுத்தல்').

(5) ஐயையோ! வீரசாமி முதலியாரே! நீர் வயசினாலே மிக முதிர்ந்து விட்டீர். தேகமோ அனித்தியம். இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ; யாது வருமோ தெரியாதே. ஆதலினாலே, நீர் சத்துருக்களை நிந்தித்தலையும் பஞ்சபாசத் தடையோடு கூடிய பசுக்களாலே செய்யப்பட்ட பசு நூல்களைப் பாராட்டிப் பொருள் கோடலையும் ஒழித்துவிட்டு எடுத்த தேகம் விழுவதற்கு முன்னே கடவுளையும் மெய்யடியார்களையும் வழிபட்டு அடங்கி யொழுகி நற்கதி பெற்றுய்யக்கடவீர் ('நல்லறிவுச் சுடர்கொளுத்தல்').

மேற்காட்டிய உரைநடைப் பகுதிகளிலே கிண்டல், கேலி, ஆத்திரம் போன்ற பண்புகள் சிறப்பாக வெளிப்பாடு பெற்றுள்ளதைக் காணலாம். 'மாப்பிள்ளை மாடு', 'தான் கிடப்பது குட்டிகைச் சுவர் கனாக் காண்பது மச்சு மாளிகை' ஆகிய மரபுத் தொடர், பழமொழிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி நாவலர் தனது கோபத்தையும் ஏளனத்தையும் வெளிப்படுத்துவது கவனிக்கத்தக்கது. இது போன்றே 'சபாசு சபாசு', 'கெட்டி கெட்டி' போன்ற இரட்டைத் தொடர்களை உணர்ச்சி வெளிப்பாட்டு வடிவங்களாக நாவலர் அடிக்கடி கையாள்கின்றார். 'நாவலர் பிரபந்தத் திரட்'டிலே இத்தகைய தொடர்கள் அநேகம் உள்ளன. இவ்வகையிலே மற்றவற்றுடன் ஒப்பிடுகையில் நாவலரின் கண்டன உரைநடை வெறும் செய்தித் தொடர்புக் கருவியாக மட்டுமன்றி, ஆளுமை வெளிப்பாட்டுக் கருவியாகவும் அமைந்துள்ளது எனலாம்.

இறுதியாகச் சொல்வதானால் நாவலர் தமிழ் உரைநடை வரலாற்றிலே ஒரு சந்தி எனலாம். உரையாசிரியர் வழிவந்த பழைய உரைநடைக்கும், நாம் பயன்படுத்தும் இன்றைய உரைநடைக்கும் இடையே அவர் இருக்கிறார். இன்றைய உரைநடை பல் வேறுபட்ட காரணிகளால் இந்த நூற்றாண்டிலே பன்முகப்பட்ட வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இன்றைய உரைநடை வளர்ச்சியிலே நவீன புனைகதை இலக்கியங்களுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. நாவலர் மறைந்த 1879ஆம் ஆண்டிலேதான் முதல் தமிழ் நாவலும் வெளிவந்தது என்பது குறிப்பிடத் தகுந்த முக்கியத்துவம் உடையது. நாவலர் விட்ட இடத்தில் இருந்து புதிய மரபு ஒன்று தொடங்குவதை அது குறிக்கின்றது. 19ஆம் நூற்றாண்டிலே நாவலர் காலம் வரை வளர்ச்சியடைந்திருந்த உரைநடையை அடிப்படை யாகக் கொண்டே முதல் தமிழ் நாவல் தோன்றியது. எனினும், தமிழ் உரைநடைப் பரிணாமத்தின் பிறிதொரு கட்டத்தை அது காட்டுகின்றது. நாவலர் விட்ட இடத்தில்

இருந்து நாவல் இலக்கியம் தமிழ் உரைநடையை வெகுதூரம் கொண்டு சென்றது. நாவலர் மறைந்த நூற்றாண்டும், நாவல் பிறந்த நூற்றாண்டும் ஒன்றாக நினைவுகூரப்படுவது தமிழ் உரைநடை வளர்ச்சிச் சங்கிலியிலே ஆறுமுகநாவலர் ஒரு கணுவாக இருக்கின்றார் என்பதையே உணர்த்துகின்றது எனலாம்.

(இக்கட்டுரை 1979இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்திய நாவலர் நூற்றாண்டு நினைவுக் கருத்தரங்கில் முதலில் படிக்கப்பட்டது. பின்னர் மொழியியல், தொகுதி II, இதழ் 1 - 4, 1988 இதழில் வெளிவந்தது)

உசாத்துணை நூல்கள்

ஆறுமுகநாவலர், (1933), 'திருவிளையாடற் புராண வசனம்', வித்தியானுபாலன அச்சகம், சென்னை.

ஆறுமுகநாவலர், (1950), 'திருத்தொண்டர் பெரியபுராண வசனம்', (17ஆம் பதிப்பு), வித்தியானுபாலன அச்சகம், சென்னை.

ஆறுமுகநாவலர், (1954), 'பிரபந்தத் திரட்டு', வித்தியானுபாலன அச்சகம், சென்னை.

ஆறுமுகநாவலர், (1969), 'பாலபாடம்', (நான்காம் புத்தகம்), வித்தியானுபாலன அச்சகம், சென்னை.

ஆறுமுகநாவலர், (1970), 'இலக்கணச் சுருக்கம்', வித்தியானுபாலன அச்சகம், சென்னை.

ஆறுமுகநாவலர், (1978), 'நன்னூல் காண்டிகை உரை', முதற் பாகம், (எழுத்ததிகாரம்), வித்தியானுபாலன அச்சகம், சென்னை.

சுப்பிரமணிய பாரதியார், (1964), 'பாரதியார் கட்டுரைகள்', அருணா பதிப்பகம், சென்னை.

செல்வநாயகம், வி., (1957), 'தமிழ் உரைநடை வரலாறு', சென்னை.

சோசபு சுந்தரராசு, சூ., (1973), 'உரைநடைத்திறன்', எழிலரசுப் பதிப்பகம், பாளையங்கோட்டை.

பரமசிவானந்தம், அ.மு., (1966), '19ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி', தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை.

வேங்கடசாமி, மயிலை, சீனி, (1936), 'கிறிஸ்தவமும் தமிழும்', சென்னை.

Kamil Zvelebil, (1973), The Smile of Murugan: On Tamil Lieterature of South India, Leidon, E.J. Brill.

'மொழியும் இலக்கியமும்', காலச்சுவடு பதிப்பகம், பக். 18 - 71.

ஆறுமுகநாவலர் பதிப்புகள்

மோ.கோ. கோவைமணி

பழந்தமிழ் இலக்கிய வெளியீடுகளுக்குக் கால்கொண்டவர்; உரைநடை நூலாசிரியர்களில் தலைசிறந்தவர்; வசனநடை கைவந்த வல்லாளர்; நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும், சமயத் தலைவராகவும் விளங்கியவர்; யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் என்று பல்வேறு வகையான பாராட்டுதல்களைப் பெற்றவர். அவருடைய பணிகளில் முதலிடம் வைத்து எண்ணத்தக்கது பதிப்புப் பணியே ஆகும். நாவலர்தம் பதிப்புகள் அனைத்தையும் வைத்துக்கொண்டு ஆராயின் ஆய்வு விரியும் என்பதால் ஒரு சில பதிப்புகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

பதிப்புகள்

இவர்தம் பதிப்புகளை இரண்டு வகைகளாகப் பகுக்கலாம். அவை, அவரே இயற்றிப் பதிப்பித்த நூல்கள், சுவடிப் பதிப்புகள் ஆகும்.

I. இயற்றிப் பதிப்பித்தவை

நாவலர் பெருமான் அவர்கள் தேவைக்கேற்பப் பல நூல்களைத் தாமே இயற்றிப் பதிப்பித்திருக்கின்றார். இந்நிலையில், இவர் இயற்றிப் பதிப்பித்த நூல்களை நான்கு வகைகளாகப் பாகுபடுத்தலாம். 1. சைவ சமய நூல்கள், 2. கிறித்துவ மதக் கண்டன நூல்கள், 3. வசன நூல்கள், 4. பாட நூல்கள் ஆகும்.

1. சைவ சமய நூல்கள்

மக்களிடையே சைவ சமயக் கருத்துக்கள் எளிதாகச் சென்றடையும் வண்ணம் பல நூல்களை நாவலர் பெருமான் இயற்றியிருக்கின்றார். இந்நூல்கள் சைவ சமயக் கருத்துக்களை நிலைநாட்டும் தன்மைத்தாய் விளங்குகின்றன. சைவ சமயக் கருத்துக்களை எளிமையாக்கிப் பிற சமயத்தினரும் சைவத்தை எளிமையாக உணரும் வண்ணம் சைவ சமயத்தின் பிழிவாக, 'சைவ சமய சாரம்' என்ற நூலையும், சைவ சமய நூல்களில் காணப்படக்

கூடிய சில முக்கியமான விதிகளை மக்கள் எளிதில் உணரும் வண்ணம் சிவாலய தரிசன விதி, நித்திய கருமவிதி, சிரார்த்த விதி, தர்ப்பண விதி ஆகியவற்றையும் குருவிற்கும் மாணவர்க்கும் உள்ள உறவு நிலைகளைப் பற்றியும் அதற்குற்ற நியதிகளைப் பற்றியும் குரு சிஷ்யக்கிரமம் எனும் நூலையும் இயற்றிப் பதிப்பித்திருக்கின்றார்.

2. கிறித்துவ மதக் கண்டன நூல்கள்

இந்தியாவில் கிறித்துவர்கள் தங்கள் மதத்தைத் தீவிரமாகப் பரப்பிக் கொண்டிருந்த காலத்தில் வாழ்ந்து, சைவ சமயக் கொள்கையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர் ஆறுமுக நாவலர். கிறித்துவர்கள் கிறித்துவம் பரப்புவதற்கு இந்தியாவில் இருக்கும் இந்திய மதங்களான சைவம், வைணவம் ஆகியவற்றை இகழ்ந்து, கிறித்துவத்தின் பெருமையை எளிய மக்களும் உணரும் பொருட்டு எடுத்துக்கூறத் தலைப்பட்டனர். கிறித்துவர்களின் சைவ சமய இகழ்ச்சிகளுக்குப் பதில் தரும் விதமாக நாவலர் பெருமான் சைவ சமயத்தின் பெருமையை உணரும் பொருட்டுக் கிறித்துவமதக் கண்டன நூல்கள் பலவற்றை இயற்றிப் பதிப்பித்திருக்கின்றார். இந்நிலையில் சைவ தூஷண பரிகாரம், மித்தியாவாத நிரசனம், சுப்பிர போதம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை இயற்றிப் பதிப்பிக்கின்றார்.

3. வசன நூல்கள்

இலக்கியங்கள் பெரும்பாலும் செய்யுள் வடிவமாகவே இருப்பதால் அவற்றைப் பெரும் பாலோர் படிப்பதேயில்லை. தமிழறிஞர் ஒரு சிலரிடம் மட்டும் இருந்த தமிழிலக்கியத்தை - குறிப்பாக, சைவ இலக்கியத்தை மக்களிடையே கொண்டு சென்ற பெருமை ஆறுமுக நாவலருக்கேயுரியது. நம்முடைய சைவ இலக்கியங்கள் பலவற்றை எளிய தமிழில் வசனமாக ஆக்கித்தந்தவர் நாவலர் பெருமான். இவ்வகையில் பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், கந்தபுராண வசனம், பெரியபுராண சூசனம் ஆகிய நூல்களை உருவாக்கித் தந்திருக்கின்றார். இதனால் சைவ இலக்கியங்களின் கருப்பொருளை அனைவரும் நுகர்ந்தனர். சைவப் புராணங்களை வசனமாக்கியதன் மூலம் மக்கள் சைவ சமயத்தை எளிதில் உணர முற்பட்டனர். இதுவே, அக்காலக் கிறித்துவமதப் பிரச்சாரத்திற்கு ஒரு முட்டுக்கட்டையாக விளங்கியது எனலாம்.

4. பாட நூல்கள்

எளிய முறையில் சைவ சமயக் கருத்துக்களையும், புராணக் கதைகளையும் எழுதிய ஆறுமுக நாவலர் மாணவர்கட்கும் எளிய முறையில் பாடங்களை இயற்றியிருக்கின்றார். மாணவர்கள் முறையாகக் கல்வி கற்க வேண்டும் என்பதற்காகப் 'பாலபாடம் 1', 'பாலபாடம் 2', 'பாலபாடம் 4' என்ற முறையில் நூல்களை இயற்றிப் பதிப்பித்திருக்கின்றார். இன்றளவும் இப்பாடமுறை சிறந்ததாகக் கருதப்பெற்று, நாவலர் தொடங்கி இன்றுவரை பல பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. இலக்கணம் பயில்வோருக்கு வினாவிடை அமைப்பில் 'இலக்கண வினா - விடை'யையும், சைவம் பயில்வோருக்கு வினாவிடை அமைப்பில் 'சைவ வினா விடையையும் இயற்றிப் பதிப்பித்திருக்கின்றார்.

II. சுவடிப் பதிப்புகள்

நாவலர் பெருமான் அவர்கள் ஓலைச் சுவடிகளிலிருந்து பல நூல்களை அச்சேற்றம் செய்திருக்கின்றார். இவர்தம் முயற்சிக்குப் பிறகே சுவடிப் பதிப்புகள் பெருக ஆரம்பித்தன எனலாம். இவர்தம் சுவடிப் பதிப்புகளை மூன்று நிலைகளாகப் பகுத்துக் காணலாம். அவை 1. மூலப் பதிப்புகள், 2. மூலமும் உரையும் கொண்ட பதிப்புகள், 3. புத்துரைப் பதிப்புகள் ஆகும்.

1. மூலப் பதிப்புகள்

மூல நூலாசிரியரின் கருத்துப்படி ஓலைச் சுவடியில் உள்ளதை உள்ளபடியே செய்யுள் / உரை வடிவமாகப் பதிப்பிப்பதை 'மூலப்பதிப்புகள்' என்பர். இதில் பதிப்பாசிரியரின் குறிப்புகள் - பாடவேறுபாடுகள் ஆகியன அடிக்குறிப்பில் இடம்பெறும். இந்நிலையில் நாவலர் பெருமான் அவர்கள் காவியம், புராணம், திருமுறை, சிற்றிலக்கியம், இலக்கணம் போன்ற பொருண்மைகளில் பதிப்பித்து இருக்கின்றார். அதாவது, காவியப் பதிப்பாக வில்லிபுத்தூரர் பாரதத்தையும், புராணப் பதிப்புகளாகச் சேதுபுராணம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்றவற்றையும், திருமுறைப் பதிப்புகளாகத் திருவாசகம், திருக் கோவையார் போன்றவற்றையும், சிற்றிலக்கியப் பதிப்புகளாகத் திருச்செந்தூரகவல், நால்வர் நான்மணிமாலை, துறைசையந்தாதி, சிதம்பர மும்மணிக்கோவை, குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் போன்றவற்றையும், இலக்கணப் பதிப்புகளாக உவமான சங்கிரகம், இரத்தினச் சுருக்கம் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

2. மூலமும் உரையும் கொண்ட பதிப்புகள்

மூல நூலாசிரியரின் கருத்திற்கு உரையாசிரியர் கூறும் விளக்கங்களையும் ஒருசேரக் கொண்ட சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு பதிப்பிப்பதை 'மூலமும் உரையும் கொண்ட பதிப்புகள்' என்பர். இந்நிலையில் நாவலர் பெருமான் இலக்கணம், நீதிநூல், சமயம், திருமுறை, நிகண்டு போன்ற பொருண்மைகளில் பதிப்பித்திருக்கின்றார். அதாவது, இலக்கணப் பதிப்புகளாக நன்னூல் விருத்தியுரை, நன்னூல் காண்டிகையுரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கணக்கொத்துரை தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம், இலக்கண விளக்கச் சூறாவளி போன்றவற்றையும், நீதி நூற் பதிப்பாகத் திருக்குறள் பரிமேலழகருரை, சமயநூற் பதிப்புகளாகக் கொலை மறுத்தல், தருக்க சங்கிரகவுரை, அன்னபட்டீயம், பிரயோக விவேகம், திருச்சிற்றம்பலக் கோவையுரை போன்றவற்றையும், திருமுறைப் பதிப்பாகத் திருக்கோவையார் நச்சினார்க்கினியருரையையும், நிகண்டுப் பதிப்பாகச் சூடாமணி நிகண்டுரையையும் குறிப்பிடலாம்.

3. புத்துரைப் பதிப்புகள்

மூல நூலாசிரியர் / உரையாசிரியர் ஆகியோரின் கருத்துக்கேற்பப் பதிப்பாசிரியர் தாமே ஒரு புத்துரை எழுதிப் பதிப்பிப்பதைப் 'புத்துரைப் பதிப்பு' என்பர். இந்நிலையில் நாவலர் பெருமான் அவர்கள் நீதிநூல், புராணம், சமயம், சிற்றிலக்கியம் போன்ற

பொருண்மைகளில் பதிப்பித்திருக்கின்றார். அதாவது, நீதிநூற் பதிப்புகளாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்னெறி, நல்வழி, வாக்குண்டாம் போன்றவற்றையும், புராணப் பதிப்பாகக் கோயிற்புராணத்தையும், சமயநூற் பதிப்புகளாகத் திருமுருகாற்றுப் படை, சைவ சமய நெறி, சிவதருமோத்திரம் போன்றவற்றையும், சிற்றிலக்கியப் பதிப்புகளாகத் திருச்செந்தில் நீரோட்ட யமகவந்தாதி, மருதூரந்தாதி, சௌந்தரியலகரி போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

பதிப்புமுறை

சுவடிப்பதிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்று வரையறை செய்தவர்களுள் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலர் முதன்மையாகத் திகழ்கின்றார். ஆறுமுகநாவலர் பதிப்பித்த பல்வேறு வகையான பதிப்புகளில் இருந்து இவர்தம் பதிப்புமுறையைக் காணலாம். பொதுவாக, இவர்தம் பதிப்புமுறையைப் பொதுக்கூறு, சிறப்புக்கூறு என்று இரண்டு கூறுகளாகப் பாகுபடுத்திக் காணலாம்.

(அ)

ஆறுமுகநாவலரின் பதிப்புகளில் பொதுவாகக் காணப்படக் கூடிய சில கூறுகளைப் 'பொதுக்கூறு' எனலாம். அதாவது, தலைப்புப் பக்கம், உள்ளுறை, முன்னிணைப்புகள், நூல் அமைப்பு, எண் அமைப்பு, பின்னிணைப்புகள், கட்டமைப்பு போன்ற கூறுகள் நாவலர்தம் பதிப்புகளில் பெரும்பான்மை பொதுத்தன்மை வாய்ந்தவையாக இருக்கின்றன.

1. தலைப்புப் பக்கம்

நாவலரின் பதிப்புகளின் தலைப்புப் பக்கத்தில் நூல் பற்றிய முழுமையான தகவல்களை ஒரு முன்னுரை போன்று அமைத்திருக்கின்றார். அதாவது, நூற்பெயர், நூலாசிரியர் பெயர், பதிப்பிக்கத் தூண்டியவர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர், வெளியிட்ட அச்சகம் மற்றும் இடம், பதிப்பு விபரம் பதிப்புக் காலம், பதிப்புரிமை போன்ற குறிப்புகளைத் தலைப்புப் பக்கத்தில் அமைத்திருக்கிறார். எடுத்துக்காட்டு பின்னிணைப்பில் உள்ளது.

2. உள்ளுறை

பதிப்பிற்குள் இடம்பெற்றிருக்கும் தலைப்புகள் எந்தெந்தப் பக்கங்களில் அமைந்திருக்கின்றன என்பதை முன்கூட்டியே தெரிவிக்கும் விதமாகத் தலைப்புப் பக்கத்திற்கு அடுத்து அமைவது உள்ளுறையாகும். இந்த உள்ளுறையை ஆறுமுக நாவலர் அவர்கள் 'சூசி பத்திரம்' என்கின்றார். நூலுள் இடம்பெற்றிருக்கும் பல்வேறு வகையான தலைப்புகள் (தலைப்பு, உட்தலைப்பு) அமையப் பெற்றிருக்கும் பக்க எண்ணை இதனுள் சுட்டிச் செல்கின்றார்.

3. இணைப்புகள்

நூலுக்கு அணி சேர்க்கும் விதமாக அமைவன இணைப்புகள். இவ்வினைப்புகள் நூல் பகுதிக்கு அரணாகத் திகழ்பவை. நாவலரின் பதிப்புகளில் பல்வேறு வகையான இணைப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. இவர்தம் பதிப்புகளில்

முன்னிணைப்புகள், பின்னிணைப்புகள் என்ற இரண்டு வகையான இணைப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. முன்னிணைப்புகளாக முகவுரை (பெரிய புராணம் மற்றும் கந்த புராணம் மட்டும்), வரலாறு (நூல் வரலாறு, உரையாசிரியர் வரலாறு ஆகியன தேவை ஏற்படும்போது மட்டும்), சரித்திரச் சுருக்கம், சிறப்புப் பாயிரம் (திருக்குறள் பரிமேலழகர் உரை - 1860ஆம் ஆண்டு பதிப்பிற்குத் தரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சி. தியாகராசச் செட்டியார், ச. தெய்வநாயகம் பிள்ளை, சோடசாவதானம் கப்பராயச் செட்டியார் ஆகியோர் சிறப்புப் பாயிரம் பாடியிருக்கின்றன). சிறப்புப் பாக்கள் (திருக் கோவையார் - 1861ஆம் பதிப்பிற்குத் திருவாவடுதுறையாதீன வித்துவான் தாண்டவராய சுவாமிகள், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, தியாகராசச் செட்டியார், சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார், திரிசிரபுரம் மு. முருகையப்பிள்ளை ஆகியோர் சிறப்புப் பாக்கள் பாடியிருக்கின்றனர்). நூலாசிரியர் வரலாறு, நூல் பற்றிய சிறப்புச் செய்திகள், சருக்கவகராதி, பதிகவகராதி போன்றனவும் பின்னிணைப்புகளாகச் சூத்திர முதற் குறிப்பகராதி, பாட்டு முதற் குறிப்பகராதி, பாவியலதிகாரவகராதி, திருக் குறளகராதி, புராணவகராதி, பிழைதிருத்தம், புத்தகப் பிரகடனப் பத்திரம் போன்றனவும் இடம் பெற்றிருக்கின்றன. இவ்வகையான இணைப்புகள் நூலுக்கேற்றவாறு சிலவற்றை விடுத்துப் பதிப்பிக்கப் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது.

4. நூல்

நாவலர் பெருமானின் பதிப்புகளில் நூல் பகுதி பல்வேறு விதமாக அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. அதாவது, மூலப் பகுதியாகவோ, மூலமும் உரையும் கொண்ட பகுதியாகவோ, உரைப் பகுதியாகவோ, மூலம் உரை (திருமுருகாற்றுப்படை 1849) தனித் தனியாகவோ இருக்கும். மேலும், அடிக்குறிப்புக் கொண்டதாகவும், நூலுக்கு முன்னும் பின்னும் ஆறு + ஆறு வெற்றுத் தாள்கள் கொண்டதாகவும் ஒவ்வொரு பதிப்பும் அமையப் பெற்றிருக்கும். சூடாமணி நிகண்டுப் (1897) பதிப்பில் ஒவ்வொரு அச்சுத் தாளுக்கிடையே ஒரு வெற்றுத்தாள் வைத்துப் பதிப்பிக்கின்ற நேர்த்தியையும் இவர்தம் பதிப்புகளில் காணமுடிகின்றது. 16 பக்கங்கள் கொண்டது ஒரு பாரம். நூல் எத்தனை பாரம் கொண்டது என்பதைக் குறிக்க ஒவ்வொரு பாரத்தின் தொடக்கத்திலும் பாரம் எண்ணை - தமிழெண்ணாகக் கொடுத்திருக்கின்றார்.

5. எண்ணமைப்பு

ஆறுமுகநாவலர் பெருமானின் பதிப்புகளில் எண் பல நிலைகளில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இதனைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் காணலாம்.

1. நூற்பா அல்லது செய்யுளின் தொடக்கத்தில் (இடப்பக்கம்) நூலில் இடம்பெற்ற அனைத்து நூற்பா அல்லது செய்யுளுக்கான தொடரெண் கொடுத்திருக்கின்றார்.

2. நூற்பா அல்லது செய்யுளின் இறுதியில் (வலப்பக்கம்) நூலில் இடம்பெற்ற சருக்கம், இயல், அதிகாரம் போன்றவற்றுக்கான தனியெண் கொடுத்திருக்கின்றார். மேலும், உரை இருப்பின் உரைப்பகுதியையும் சேர்த்துத் தனியெண் கொடுத்திருக்கின்றார்.

3. தலைப்புக்கு என்று தனியெண் கொடுத்திருக்கின்றார். அதாவது உள்தலைப்பு, இயல் தலைப்பு, பாடற்பொருள் தலைப்பு ஆகியவற்றுக்கும் தனியெண் கொடுத்திருக்கின்றார்.

4. தொகை வருமிடங்களிலும் எண் கொடுத்திருக்கின்றார்.

5. எடுத்துக்காட்டுக்கு வரிசை எண் கொடுத்திருக்கின்றார்.

6. முன்னிணைப்பு, நூல்பகுதி, பின்னிணைப்பு ஆகியவற்றுக்கும் தனியெண் கொடுத்திருக்கின்றார்.

7. க, m என்ற முறையில் எண்ணமைப்பு அமைத்திருக்கின்றார். ஆனால் க, ய, m என்ற அமைப்பை நாவலர் பெருமான் கையாளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

கட்டமைப்பு

நாவலர் பெருமான் அவர்கள் வெளியிட்ட அனைத்துப் பதிப்புகளிலும் கட்டமைப்பும் முழு காலிக்கோ பைண்டிங் செய்யப் பெற்றதாகவே இருக்கின்றது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஆறுமுக நாவலர் நூலுக்கு உள்ளும் வெளியும் எவ்வாறெல்லாம் அமைய வேண்டும் என்பதில் கவனத்தோடு இருந்திருக்கின்றார் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.

(ஆ) சிறப்புக் கூறுகள்

ஆறுமுக நாவலர் தம்முடைய பதிப்புகளில் நிகழ்த்திய சில சிறப்புக் கூறுகளை இரண்டு நிலைகளாகப் பகுக்கலாம். அ. அடிக்குறிப்பின் தன்மைகள்; ஆ. நூற் பகுதிக்குள் நாவலரின் பதிப்பு உத்திகள் ஆகும்.

(அ) அடிக்குறிப்பின் தன்மைகள்

ஆறுமுக நாவலர் அவர்களின் பதிப்புகளில் அடிக்குறிப்புகள் எவ்வாறெல்லாம் அமைந்திருக்கின்றன என்பதைப் பட்டியலிட்டுப் பார்க்கும்போது, அவை பதினெட்டு வகைகளாக அமந்திருப்பதைக் காணமுடிகின்றது. அவை பின்வருமாறு:

1. பாடலின் செய்திக்குரிய பதவுரை கூறிய பிறகு அமையொத்த சிலவற்றை அடிக்குறிப்பில் வரிசைப்படுத்துதல். எடுத்துக்காட்டாக, இலக்கணக் கொத்து மூலமும் உரையிலும் முதலாவது வேற்றுமையியலின் 9ஆவது சூத்திரத்திற்கு உரையாசிரியர் இரண்டு

தொல்காப்பியர் சூத்திரங்களை உரைவிளக்கமாகக் காட்டியிருக்கின்றார். இதற்கு நாவலர் அவர்கள்,

''இவ்விரண்டுந் தொல்காப்பியச் சூத்திரம், முன்னையது (வினைசெயிடத்தினிற் காலத்தின்) உருவினையேற்ற சொற்பல பொருள்படுதற்கும், பின்னையது (பொருண்மை சுட்டல் வியங்கோள் வருதல்) உருவு நோக்கிய சொற்பல பொருள்படுதற்குங் காட்டப் பட்டன. முன்னையதற்கு உதாணரம்: தட்டுப்புடைக்கண் வந்தான், மாடத்தின் கணிருந்தான், கூதிர்க்கண் வந்தான் எனவும், பின்னையதற்கு உதாரணம்: ஆவுண்டு, செல்க எனவும் வரும்.''

என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

2. உரையின் நடுவே வரும் சொல்லிற்கு மேலும் விளக்கம் தர முற்படும்போது உடுக்குறியிட்டு அடிக்குறிப்பில் விளக்கம் தருதல். எடுத்துக்காட்டாக, திருக்குறள் பரிமேலழகர் உரைப்பகுதியில் ''இருள்சேர் இருவினை'' என்னும் திருக்குறள் உரைக்கு நாவலர் பெருமான்,

''ஈண்டு நல்வினை என்றது அழிதன் மாலையவாய துறக்கவின்ப முதலிய காமியங்களைப் பயப்பனவாகிய வேள்வி முதலியவற்றை. இவை வீட்டுக்கு நேரே வாயிலாகிய தத்துவ ஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலுமுடையவனவாம். ஆதலால், இந்நல்வினை தீவினை இரண்டும் ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்த முறுத்தற்கண் பொன்விலங்கும் இரும்பு விலங்கும் போலத் தம்முன்ஒப்பனவாம் என்க. சரியை, கிரியை, யோகங்கள் ஞானம் வாயிலாக வீடு பயத்தலின் ஈண்டு நல்வினை என்றது அவற்றையன்றென்க.''

என்று மேலும் விளக்கம் தருகின்றார்.

3. உரையில் வேறுபாடு தோன்றுமிடத்து உடுக்குறியிட்டு அடிக்குறிப்பில் விளக்குதல், நன்னூல் விருத்தியுரையில் வேறுபாடுகள் தோன்றுமிடங்களில் அடிக்குறிப்பாகத் தம்முடைய கருத்தையும் பாடவேறுபாடுகளையும் நாவலர் பெருமான் குறிப்பிடுகின்றார். அதாவது, நன்னூல் சிறப்புப் பாயிர உரையில் சிவஞான முனிவர் 'விமரிசம்' என்ற ஒரு சொல்லைப் பயன்படுத்துகிறார். இதற்கு நாவலர் 'விமரிசனம் - சிந்தித்தல், விமரிசனமெனினுமொக்கும்' என்கிறார். மேலும்,

''ஈண்டு உரையாசிரியரெனப்பட்டார் இளம்பூரணர், ஆதியிலக்கணமாகிய தொல் காப்பியத்திற்கு முன்னருரை செய்தமையால் இவருக்கு உரையாசிரியர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.''

என்று உரையாசிரியர் யார் என்று விளக்குகின்றார்.

4. ஒரு நூலின் விளக்கத்தினை மற்றொரு நூலில் கண்டு கொள்க என்று அடிக்குறிப்பில் உடுக்குறியிட்டு நூற்பெயர் சுட்டுதல் தொல்காப்பியம் சொல்லதிகாரம் வேற்று

மயங்கியல் 31ஆம் நூற்பாவிற்குச் சேனாவரையர் உரையில் ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் ஒன்றே என்று சேனாவரையர் உரை வகுத்திருப்பதற்குச் சிவஞான முனிவர் அவர்களின் தொல்காப்பியச் சூத்திர விருத்தி 34ஆம் பக்கத்தில் ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் ஒன்றென்றல் பொருந்தாகியமையை எடுத்துச் சொல்லியிருப்பதை இங்கு சுட்டிக் காட்டுகின்றார். இதேபோல், வேற்றுமை மயங்கியலில், 'இறுதியுமிடையுமே', 'பிறிது பிறிதேற்றலும்' என்னும் சூத்திரங்களுக்குச் சேனாவரையர் முதலாயினார் உரைத்த உரையை மறுத்துச் சிவஞானமுனிவர் வேற்றுரையுரைத்தார். தொல்காப்பியச் சூத்திரவிருத்தி 38, 39, 34, 35 ஆம் பக்கங்களில் காண்க என்று குறிப்பிடுகின்றார்.

5. உரைப்பகுதியில் இடம்பெற்றிருக்கும் மேற்கோளுக்கு உடுக் குறியிட்டு அடிக்குறிப்பில் நூற்பெயர் சுட்டுதல். அதாவது உரைப்பகுதியில் மேற்கோளாகக் காட்டும் பாடலைக் கொடுத்துவிட்டு அப்பக்கத்தின் அடிக்குறிப்பாக அப்பாடல் இடம்பெற்றிருக்கும் நூற்பெயரையும் செய்யுள் எண்ணையும் குறிப்பிடுகின்றார். குறிப்பாக, திருமுரு காற்றுப் படை - திருச்சீரலைவாய் 'விண்செலன் மரபினர்' என்ற வரிக்கு உரை வரைந்தவர்.

நிலமிசை வாழ்க ரலமா றீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கு
மவிர்சடை முனிவரு மருள

எனும் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார். இம்மேற்கோள் பாடல் எங்குள்ளது என்பதைக் குறிக்க அடிக்குறிப்பில் 'புறநானூறு 43ஆம் செய்யுள்' என்று குறிப் பிடுகின்றார்.

6. உரையாசிரியரின் கருத்துக்கு மேலும் விளக்கம் தேவைப்படும்போது உடுக்குறியிட்டு அடிக்குறிப்பில் விளக்குதல், அதாவது, இலக்கணக்கொத்து (மூலமும் உரையும்)ப் பாயிர உரையில் அகர உயிரானது உருவெழுத்து, ஒலியெழுத்து, உணர்வெழுத்து, தன்மையெழுத்து என்று பொருள் கூறியவிடத்து நாவலர் ''எழுத்துக்கள் உருவெழுத்து முதலிய நான்கு பகுதியவாதலும் அவற்றினிலக்கணமும் வருஞ் சூத்திரங்களாலுணர்க.

க. உருவே ணுணர்வே யொலியே தன்மை
யெனவீ ரெழுத்து மீரிரு பகுதிய

உ. காணப் பட்ட வுருவ மெல்லா
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
வெழுதப் படுவ துருவணழுத் தாகும்

ங. கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை
யுண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும்

ச. இசைப்படு புள்ளி னெழாஅல் போலச்
செவிப்புல னாவ தொலியெழுத் தாகும்

ரு. முதற்கா ரணமுந் துணைக்கா ரணமுந்
துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வு
மவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்
மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை யெழுத்தே''

என்றவர், ''இன்னும் நான்கு பகுதியாவதாலும் அவற்றினிலக்கணமும் வருஞ் சூத்திரங்களாலுணர்க:

க. வடிவுபெயர் தன்மையுண் முடிவு நான்கா
நடைபெறு நாவலர் நாடிய வெழுத்தே

உ. கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
யுட்கொளற் கிடுமுரு பாம்வடி வெழுத்தே

ங. வடிவுமுதன் மும்மையின் வழங்கு மெழுத்திற்
படுபல பகுதிக் கிடுபெயர் பெயரே

ச. தான முயற்சி தரக்கொளச் செவிப்புல
னாயவொலி தன்மை யெழுத்தா கும்மே

ரு. உருவமுதன் மும்மையோ டொன்றிய வியல்பை
மருவுளந் துணிவ துண்முடி வெழுத்தே''

என்று குறிப்பிடுகின்றார்.

7. உரையாசிரியரின் கருத்துக்கு வலிமையூட்டும் விதமாக உடுக்குறியிட்டு அடிக்குறிப்பில் மேற்கோள் பாடல்களைச் சுட்டுதல். 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்னும் திருக்குறள் உரை விளக்கத்தில் ''பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலையறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தடித்தலும் முதலிய பாதகங்களைச் செய்தல்'' என்னும் பரிமேலழகரின் உரையானது புறநானூற்றுப் பாடலான, 'ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்' (புறம். 34) எனத் தொடங்கும் பாடலுக்கு ஒப்பானது என்று அப்பாடலை எடுத்துக் காட்டுகின்றார்.

8. அருஞ்சொற்பொருள் தருதல், எடுத்துக்காட்டாக நாவலர் பதிப்பில் இடம்பெற்ற சில அருஞ்சொற் பொருள்கள் பின்வருமாறு:

இந்திரஞாலங் - இந்திரசாலம் (கீர்த்தித் திருவகவல்)

சோத்தம் - இழிந்தார் செய்யுமஞ்சலி (ஆசைப்பத்து, பா. 4)

தோரியமகளிர் - ஆடிமுதிர்ந்த மகளிர்
(தொல்சூத்திரவிருத்தி, ப. 12)

விமரிசம் - விமரிசனம், சிந்தித்தல்
(நன்விருத்தியுரை சிறப்புப் பாயிரவுரை)

குழல்வாய்மொழியம்மை - திருக்குற்றாலத்தெழுந்தருளியிருக்கும் தேவி திருநாமம் (திருக்கோவையார், பா. 94)

சமயவாயம் - ஒற்றுமை (இலக்கணக் கொத்துரை, நூ. 42)

சையோகம் - கூட்டம் (இலக்கணக் கொத்துரை, நூ. 42)

9. விளக்கவுரை தருதல்

10. இடப்பெயர்களைச் சுட்டுதல்

11. தொகை விளக்கம் தருதல்

12. பிற பிரதிகளில் இல்லாதவற்றைச் சுட்டுதல்

13. பிற நூல்களை மேற்கோள் சுட்டுதல்

அ) மேற்கோள் பாடல்களின் நூற்பெயர் முதலானவை சுட்டுதல்

ஆ) மேற்கோள் தொடரை முழுமை செய்தல்

14. இலக்கணக் குறிப்பு தருதல் நாவலர் பதிப்புகளில் ஆங்காங்கு இலக்கணக் குறிப்பைச் சுட்டும் தன்மையைக் காணமுடிகின்றது. குறிப்பாகத் திருவாசகம் கீர்த்தித்திருவகவல் என்னும் பகுதியில் ''கோடி - கொடி, கொடியென நீட்டல் விகாரம் பெற்றது'' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

15. வடமொழிக் கருத்துரைத்தல்.

16. சிறப்புப் பெயர் சுட்டுதல்

17. பாடவேறுபாடு காட்டுதல்

18. புராணத்தைக் கூறுகளைக் காட்டுதல்

(ஆ) நூற்பகுதிக்குள் நாவலரின் பதிப்பு உத்திகள்

ஆறுமுக நாவலர் பதிப்புகளின் நூற்பகுதி பல உத்திகளைப் பெற்றுள்ளது. அதாவது, பொருளுக்கேற்பப் பாடலமைப்பை மாற்றிப் பொருளுரைக்கும் தன்மை, மாற்றுரை கூறும் தன்மை, திருத்தப் பதிப்பு, உரையில் சொல்லையும் பொருளையும் வேறுபடுத்தும்

தன்மை, மூலத்தினின்றும் பாடலை வேறுபடுத்தும் தன்மை, நூலின் தொடக்கம் - முடிவு அமைப்பு, கூடுதல் விளக்கம் தருதல், பிழை சுட்டும் தன்மை, புறவுரை சுட்டும் தன்மை, புதிய சொல்லாட்சி, அச்சுத் தன்மை, மாணவர் பதிப்பு, நாவலர் பதிப்பில் சில குறைபாடுகள் போன்ற பல்வேறு உத்திகளைக் காணலாம்.

1. பொருளுக்கேற்பப் பாடலமைப்பை மாற்றிப் பொருளுரைத்தல்

> *''புசிக்க பயற்றினையு மில்வாழ்வான் போனம்*
> *புசிக்கலுமா நத்தமெனும் போது''* *(சைவசமய நெறி. 173)*

இ-ள். இல்வாழ்வான் பயற்றினையும் புசிக்க - இல்வாழ்வானாவன் அவ்விரண்டு திதியினும் பயற்றைப் புசித்திருக்கக் கடவன்; - நத்தம் எனும்போது போனம் புசிக்கலும் ஆம் - அது கூடாதாகில் நத்த மென்னுங் காலத்திலே அன்னம் புசித்தலும் தகும். எ-று.

என்பதில் பாடல் அமைப்பை முன் - பின்னாக மாற்றி நேர்ப்பொருளை உணர்த்துவதில் நாவலர் பெருமான் கைவந்தவர் என்பது தெரிகின்றது.

2. மாற்றுரை கூறுதல்

ஒன்றிற்கு மேற்பட்ட பொருளுரைக்குமிடத்துப் பாடலுரையின் உரிய பொருளையும் சருக்கத்தின் இறுதியில் அவ்வுரையின் மாற்றுரையாகச் சுட்டிக் காட்டுகின்றார். அதாவது, கோயிற் புராணம் - திருவிழாச் சருக்கம் 28ஆம் பாடலில்

> ''நண்ணித் தினகரன் முதலோர் கிழமைகொ ணலமார் நவமணி யணிமேவ'' (28:1)

எனும் தொடருக்கு இப்பாடலின் பொருளில் ''தினகரன் முதலோர் கிழமை நண்ணி நலம்கொள் ஆர் நவமணி அணி மேவப் பண்ணி - சூரியன் முதலிய நவக்கிரகங்களுக்கும் உரிமை பொருந்திய அழகு கொண்டு நிறைந்த நவரத்தினங்களினாலும் ஆபரணங்களைப் பொருந்தச் செய்து.''

என்றவர் அச்சருக்கத்தின் இறுதியில்,

> ''நண்ணிக் கொள் நலம் ஆர் நவமணி என்பதற்குப் பானுவார முதலிய ஏழு வாரத்தினும் பொருந்தி ஆராய்ந்து கொள்ளப்படும் தன்மை பொருந்திய நவரத்தினங்கள் எனப் பொருள் கூறலும் உண்டு. மாணிக்கம், முத்து, பவளம், மரகதம், புருடராகம், வச்சிரம், நீலம், கோமேதகம், வைடூரியம் என்னும் நவரத்தினங்களுள்ளும் மாணிக்கம் முதலிய ஏழும் முறையே பானுவார முதலிய ஏழு வாரங்களிலும் பரிஷிக்கற்பாலன. கோமேதகம் பானு வாரத்தினும் வைடூரியம் சோம வாரத்தினும் பரிஷிகற்பாலன.''

என்று மாற்றுரையையும் குறிப்பிடுகின்றார்.

3. திருத்தப் பதிப்பு

நாவலர் பெருமான் வெளியிட்ட பதிப்புகளில் பல பதிப்புகள் திருத்தப் பதிப்புகளாக வெளிவந்திருக்கின்றன. திருமுருகாற்றுப்படை முதற்பதிப்பில் இல்லாதவை இரண்டாம்

பதிப்பில் சேர்த்திருக்கின்றார். ''போர்மிகு பொருள் குரிசிலு மெனப்பல'' (திருமுரு. 276) 'குரிசிலு' மென்ற உம்மை அளவையின் என்பதனோடு கூட்டப்பட்டது என்னும் உரைப் பகுதியும்; ''விளிவின் - றிருணிற'' (திருமுரு. 292 - 93) என்பதில் உள்ள 'இன்றி' என்பது 'இன்று' எனத் திரிந்து நின்றது என்னும் உரைப்பகுதியும் முதற்பதிப்பில் இடம்பெற வில்லை. அதன்பிறகு வந்த பதிப்புகளில் இவ்வுரைப்பகுதி இடம்பெற்றுள்ளதைக் காண முடிகின்றது.

அதேபோல், 1839ஆம் ஆண்டில் 'சூடாமணி நிகண்டு' தாண்டவராய முதலியாரால் விசாகப் பெருமாளையருடைய கல்விவிளக்க அச்சுக்கூடத்தில் அச்சிட்டு முதன்முதலில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதில் வேளாளரை வைசியர் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. நாவலர் அவர்கள் சூடாமணி நிகண்டுரையை 1849இல் பதிப்பிக்கும்போது வேளாளரை வைசியர் என்றே பாடங்கொண்டு பதிப்பித்தார். அதன்பிறகு மறுபதிப்பு வெளியானதில் வேளாளரைச் சூத்திரர் என்று மாற்றி, வைசியருக்குரிய இரண்டு பாடல்களையும் திருத்தி, ''மருவிய எழு' என்பதற்கு 'மருவிய ஆறு' என மாற்றிப் பதிப்பித்திருக்கின்றார்.

4. சொல்லையும் பொருளையும் வேறுபடுத்தும் தன்மை

நாவலர் பெருமான் பல நூல்களுக்குப் புத்துரை வரைந்திருக்கின்றார். அவர்தம் உரைகளில் சொல்லையும் பொருளையும் வேறுபடுத்திக் காட்டும் தன்மை சுவடிப்பதிப்புலகில் தனிச் சிறப்பு வாய்ந்ததாக அமைந்திருக்கின்றது. 'சைவ சமய நெறி' எனும் நூல் ஆசிரியரிலக்கணம், மாணாக்கரிலக்கணம், பொதுவிலக்கணம் என மூன்று இயல்களாக அமைந்துள்ளது. குறிப்பாக விபூதி தரிசிக்கும் தானங்கள் பற்றி,

> *''சிரநெற்றி காது திரண்ட கழுத்து*
> *னுரந்தோளி னாபி தனிலும்''*

இ-ள்: சிரம் - உச்சியிலும் – நெற்றி - நெற்றியிலும் – காது - காதுகளிலும் – திரண்ட கழுத்தின - திரண்ட கழுத்திலும் – உரம் - மார்பிலும் – தோளின் - புயங்களிலும் – நாபிதனினும் - உந்தியிலும் - எ.று (191)

என்று குறிப்பிட்டிருக்கின்றார். இங்கு நாவலரின் பதிப்பு முறையொன்றைக் காண வேண்டும். உரையுள் சிறுகோடு (-) பெருங்கோடு (–) என இட்டிருக்கின்றார். சிறுகோடு, சொல்லுக்குப் பொருளுணர்த்தும் சொல்லுக்கும் இடையில் உள்ளது. பெருங்கோடு, ஒரு சொல்லையும் மற்றொரு சொல்லையும் வேறுபடுத்திக் காட்டவல்லது. இதேபோல், கோயிற் புராணத்தில் ஒன்றினின்று ஒன்றை வேறுபடுத்திக்காட்ட ;- மற்றும் ,- என்ற குறியீடுகளைப் பயன்படுத்தியுள்ளார்.

5. மூலத்தினின்றும் பாடலை வேறுபடுத்தும் தன்மை

நூல் பதிப்பிக்கும் காலத்து நாவலர் பெருமான் மூல நூலாசிரியரின் வாக்கை நுணுகி ஆய்ந்து இவ்வாக்கு நூலாசிரியருடையதல்ல என்பதைத் துணிச்சலாக எடுத்துக் காட்டுகின்றார். திருக்கோவையார் என்கின்ற திருச்சிற்றம்பலக் கோவையாரில் முதலில் இடம்பெற்ற,

''எண்ணிறைந்த தில்லை யெழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே - நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொற் றிருக்கோவை யென்கின்ற
நானூறு மென்மனத்தே நல்கு'' *(விநாயக வணக்கம்)*

''ஆரணங் காரெணன்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
நேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே'' *(நூற் சிறப்பு)*

ஆகிய பகுதிகள் மூல நூலாசிரியர் வாக்கல்ல என்றும், அவை பிற்காலத்தான்றோராற் செய்யப்பட்டன என்றும் சுட்டிக் காட்டுகின்றார்.

6. நூலின் தொடக்கமும் முடிவும்

ஒவ்வொரு நூலின் தலைப்புப் பக்கத்தின் முதலிய பிள்ளையார்சுழி போட்டுக் 'கணபதி துணை' என்று தொடங்குகின்றார். மேலும், சமய நூல்களாயின் 'திருச்சிற்றம்பலம்' என்று கூடுதலாகச் சேர்த்துக் கொள்கின்றார். ஒவ்வொரு நூலின் இறுதியில் 'திருச்சிற்றம்பலம்' என்று முடிப்பவர் 'இலக்கணச் சுருக்கம்' என்னும் நூலின் இறுதிப் பகுதியில் 'பரமபதி துணை' என்று முடித்திருக்கின்றார். நாவலர் பதிப்புகளில் இவ்வாறு ஒரு முறையற்ற தன்மையையும் காணமுடிகிறது.

7. கூடுதல் விளக்கம் தருதல்

நாவலர் பெருமானின் பதிப்புகளில் உரையாசிரியர் கூறிய கருத்துக்கு வலுவூட்டும் வகையில் மேலும் பல கருத்துக்களைப் பல்வேறு இடங்களில் புகுத்தியிருக்கின்றார். குறிப்பாக, நல்வழிப் பதிப்பில், பதவுரை, இதனது தாற்பரியம் ஆகிய பகுதிகளுக்கு மேலும் நீண்ட விளக்கம் தருகின்றார். 'சிவாயநமவென்று' எனவரும் பாடலுக்கு அவ்வாறு விளக்கம் தரும் அவர் நிறைவில் 'அது திருநாவுக்கரசு நாயனார் முதலிய மெய்ஞ்ஞானிகள் சரித்திரங்களாலும் அறிக' எனக் கூடுதல் விளக்கம் தருகின்றார்.

8. பிழை சுட்டும் தன்மை

நூலாசிரியர் கூறிய கருத்தை அப்படியே போற்றும் தன்மை கொண்டவரல்லர் நாவலர். இலக்கண விளக்கத்தில் ஏற்பட்ட மாறபட்ட கருத்துகளைச் சுட்ட சிவஞான முனிவர் இலக்கண விக்கச் சூறாவளி என்றொரு நூலை யாத்தார். இந்நூலின் சொல்லதிகாரப் பெயரியில் 'ஒன்றே பல' எனத் தொடங்கும் நூற் பாவிற்குச் சிவஞான முனிவர் ''ஆண்பால் வெண்பாலென்னும் வழக்கு உயர்திணைக்கேயன்றி அஃறிணைக்கின்றென்றார்''. இக்கருத்தினை நாவலர் பெருமான் ''ஆண்பா லெல்லா மாணெனற் குரிய'', ''பெண்பா லெல்லாம் பெண்ணெனற்குரிய'' என்று மரபியற் சூத்திரங்களையும், ''ஆண்மை சுட்டிய பெயர் பெண்மை சுட்டிய பெயரென்னும் குறியீடுகளையும் களிறு பிடி முதலிய வழக்கு

களையும் மறந்தாற்போலும்'' என்று சிவஞான முனிவரின் கருத்தில் ஏற்பட்ட பிழையைச் சுட்டிக் காட்டுகின்றார்.

9. புறவுரை சுட்டும் தன்மை

நாவலர் பெருமான் புத்துரை வழங்குமிடத்து, மூல நூலாசிரியரின் கருத்துக்கு மாறுபட்ட கருத்தைச் சுட்டும் தன்மையைக் காணமுடிகிறது. அதாவது, ஆத்திசூடி - கொன்றை வேந்தன் புத்துரைப் பதிப்பில் (1853) 'சனி நீராடு' என்பதற்கு நாவலர் பெருமான் உரை வழங்குமிடத்து, 'புதன்கிழமையிலும் முழுகலாம்' என்று உரைக்குப் புறம்பாக விளக்குவதை உணர முடிகிறது. இது உலகத்தோடு ஒட்ட ஒழுகுந் திறனை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ள எனலாம்.

10. புதிய சொல்லாட்சி

நாவலர் தம்முடைய பதிப்புகளில் பல்வேறு வகையான புதிய சொல்லாட்சிகளைப் பயன்படுத்தியிருக்கின்றார். நாவலரின் நல்வழி உரையில் 'ஒருவன் பிறன்மனையாளை இச்சிக்கின்' என்றெழுதுவது இக்காலத்தில் 'பயணித்தல்' என்றெழுதுமாப் போலே அமையக்கூடும் என்கின்றார். அதுபோல, 'வெகுசனம்' என்ற சொல்லை முதன்முதலில் நாவலர்தான் கையாண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

11. அச்சுத் தன்மை

நாவலர் அவர்களின் பதிப்புகளில் அச்சு வேறுபாடு, அச்சுப்படித் திருத்துதல் போன்றவற்றிற்குச் சிறப்பிடம் தந்திருக்கின்றார். இயல் தலைப்பு, உள் தலைப்பு, நூற்பா, உரை, அடிக்குறிப்பு போன்ற ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு வகையான புள்ளிகளில் அச்சுக்களைத் தேர்ந்தெடுத்து அச்சிட்டிருக்கின்றார். மேலும், நாவலர் பெருமான் வசன நூல்களை உருவாக்கும்போது தாமே அச்சுக்கூடத்திற்குச் சென்று, அங்கு இவர் சொல்லச் சொல்ல அச்சக ஊழியர்கள் அச்சுக்கோப்பர் என்பர். நாவலர் பதிப்பித்த நூல்களில் அச்சுப்பிழைகள் இல்லை என்று எல்லோரும் பாராட்டும் அளவுக்கு நூலைப் பதிப்பித்துள்ளார். எவ்வளவு கூர்ந்து கவனித்தாலும் சில அச்சுப்பிழைகள் வருவது இயல்பு. இருப்பினும், அவற்றையும் கண்டெடுத்து நூலின் இறுதியில் பிழைதிருத்தம் என்ற பகுதியில் சுட்டிக்காட்டிப் பிழையற்ற பதிப்பைக் கொண்டு வருவார்.

> ''ஆறுமுக நாவலர் வேறொரு பாஷையிலே நினைத்து ஈழத் தமிழில் எழுதுகிறவரில்லை. வீண்சொல், அடை எதுவும் இல்லை. இன்னோசையை இவரின் நடை இயல்பாய்ப் பெறும்.''

என்கின்றார் பேராசிரியர் கைலாசபிள்ளை (ஆறுமுக நாவலர் சரித்திரம்).

12. மாணவர் பதிப்பு

நாவலர் அவர்கள் பயன்படுத்துவோருக்கு ஏற்பத் தம்முடைய பதிப்பை அமைத்துக் கொள்வார். இவரின் நன்னூல் காண்டிகையுரைப் பதிப்பு மாணவர்களை மையமாகக் கொண்டு பதிப்பிக்கப்பட்டது எனலாம். அதாவது, நன்னூல் காண்டிகை உரைப் பதிப்பில், ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் பரீஷை வினாக்கள் என்ற பகுதியை அமைத்திருக்கின்றார். மேலும் உபாத்தியாயருக்கு அறிவித்தல் என்ற ஒரு பகுதியையும் நாவலர் அமைத்திருக்கின்றார். அதில் ''உபாத்தியாயர் நாடோறும் தம் மாணாக்கர்களுக்குச் சொல்லும் பாடத்தை முன்னரே வீட்டில் அவதானத்தோடு வாசித்துச் செவ்வையாக ஆராய்ந்து உள்ளத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிடுகின்றார். நூலுக்கு இறுதியில், 'அப்பியாசம்' என்னும் ஒரு பகுதியையும் நாவலர் அவர்கள் அமைத்திருக்கின்றார். இலக்கணங் கற்றவர் இலக்கியத்தில் அவ்விலக்கணம் அமைந்து கிடக்கும் முறையை ஆராய்ந்து விதியோடு கூறப் பயிலவேண்டும். அது செய்யப் பயிலாதவிடத்து இலக்கணக் கல்வியால் ஒரு பயனுமில்லை'' என்று இலக்கணப் பயிற்சியின் இன்றியமையாமையையும் குறிப்பிடுகின்றார்.

13. நாவலர் பதிப்பில் சில குறைபாடுகள்

சுவடிப் பதிப்பில் இன்றைய தேவை என்ற அடிப்படையில் பார்க்கும்போது நாவலர் பெருமானின் பதிப்புகளில் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. பதிப்புரை, சுவடிச் செய்தி, (பெரிய புராணம், கந்த புராணம் தவிர) போன்றவை இன்றைய சுவடிப் பதிப்பில் தேவையாகக் கருதப் பெறுகின்றன. ஆனால், இவை நாவலர் பதிப்புகளில் காணப்படவில்லை. பதிப்புரை இல்லாததினால் இவர்தம் பதிப்பு முறை, பதிப்புக் கொள்கை, முந்தைய பதிப்புகள் பற்றிய விபரம், பதிப்பில் செய்துள்ள மாற்றம் ஆகிய எதையும் இவர்தம் கூற்றாக அறிய முடிவதில்லை.

பல்வேறு சுவடிகளை ஆராய்ந்து ஒப்புமை செய்து பாட வேறுபாடுகளைக் குறித்து முழுமையாக்கும் பணி சுவடிப் பதிப்புப் பணிகளில் முக்கியமானதாகும். நாவலர் அவர்கள் எந்தப் பதிப்புப் பணியை மேற்கொண்டாலும் அதற்குப் பல சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு ஒப்புநோக்கி ஆய்வு செய்த பின்னரே அச்சிடுவார். சுவடிகளின் ஆதாரம் இல்லாமல் இவராக எதையும் திருத்துவதில்லை. இது, சுவடிப் பதிப்பின் நேர்மை எனப்படுகின்றது. இவர் பதிப்பித்த நூல்களின் தலைப்புப் பக்கத்தில் ''யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களால் பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டது'' என்னும் குறிப்பிருக்கும். ஆனால், எப்பிரதிகளை ஒப்பு நோக்கினார் என்ற குறிப்பு எந்தப் பதிப்பிலும் குறிப்பிடுவதில்லை. இதனால் நாவலர் அவர்கள் பார்வையிட்ட சுவடிகளை அறிய முடியாத நிலை உருவாகிறது.

முடிவு

நாவலர் பதிப்பில் பல நிறை குறைகள் இருந்தாலும் அவரின் பதிப்பு நோக்கம் இதுதான் என்று வெளிப்படையாகத் தெரிகின்றது. அதாவது, ஓலைச்சுவடியிலுள்ள நூல்களை எப்படியாவது அச்சேற்றம் செய்துவிட வேண்டும். பிழையற்ற பதிப்புக் கொண்டு வரவேண்டும். நூலாசிரியரின் கருத்தறிந்து அடிமாற்றம், சொற்களைத் திரித்தல் போன்ற எவ்வித மாற்றமுமின்றி மூலபாடத்தைத் தந்து திருத்தமான பதிப்பைச் செவ்விய வடிவமைப்புடன் கொண்டுவர வேண்டும் போன்ற நோக்கங்களை ஆறுமுக நாவலருடைய பதிப்புகளில் காணலாம்.

பின்னிணைப்பு

கணபதி துணை

கோயிற் புராணம்

தில்லைவாழந்தணரும் திருக்கைலாசபரம்பரைச்
சைவசித்தாந்த குரவருமாகிய
கொற்றவன்குடி
உமாபதி சிவாச்சாரியார்
அருளிச்செய்தது

இஃது

யாழ்ப்பாணத்து நல்லூர்
ஆறுமுக நாவலரவர்கள்
செய்த புத்துரையுடன்
சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலைத்
தருமபரிபாலகர்
Mudir. G. சுப்பிரமணியம் J.P. அவர்களால்
சென்னபட்டணம்
வித்தியாநுபாலன யந்திரசாலையில்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.
4ஆம் பதிப்பு
விலை ரூபா 140
1952

நந்தன வைகாசி மீ
(Copyright Registered)

துணை நூல்கள்

1. ஆத்திசூடி, கொன்றை வேந்தன், ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 9ஆம் பதிப்பு, சர்வசித்து வருடம், சித்திரை மாதம்.
2. இலக்கணக்கொத்து மூலமும் உரையும், ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 2ஆம் பதிப்பு, விகிதி வருடம், பங்குனி மாதம்.
3. கோயிற் புராணம், ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 4ஆம் பதிப்பு, 1952.
4. சூடாமணி நிகண்டு, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 2ஆம் பதிப்பு, விளம்பி வருடம், மார்கழி மாதம், 1898.
5. சைவ சமய நெறி, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 7ஆம் பதிப்பு, இரக்தாஷி வருடம், தை மாதம்.
6. திருக்குறள் பரிமேலழகர் உரை, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1860.
7. திருக்கோவையார் நச்சினார்க்கினியர் உரை, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திர சாலை, சென்னை, 1861.
8. திருமுருகாற்றுப்படை, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 19ஆம் பதிப்பு, 1967.
9. திருவாசகம், ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, இராஷச வருடம், தை மாதம், 1915.
10. தொல்காப்பியம் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 2ஆம் பதிப்பு, விகிர்தி வருடம், பங்குனி மாதம்.
11. தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம், ஆறுமுக நாவலர் ரூ சி.வை. தாமோதரம்பிள்ளை (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, விய வருடம், ஆனி மாதம், 1886.
12. நன்னூல் காண்டிகையுரை, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 2ஆம் பதிப்பு, சுபகிருது வருடம், மார்கழி மாதம், 1902.
13. நன்னெறி, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 3ஆம் பதிப்பு, இராஷச வருடம், சித்திரை மாதம்.

'ஆறுமுகநாவலர்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2008, பக். 52-72.

பதிப்பாசிரியர்

நாவலர்

க. கைலாசபதி

''.... என்னோடு இங்கிலீஸ் கற்றவர்களுள்ளும் எனக்குப்பின் இங்கிலீஸ் கற்றவர் களுள்ளும் அநேகர் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சக்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின், அது தப்பாது சித்திக்கு மென்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும் உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித்துணை மாத்திரங்கொண்டு செய்யப் படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும் அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமேயாகவும், நான் இல்வாழ்க்கையில் புகவில்லை. இவைகள் எல்லா வற்றிற்கும் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியை யும் வளர்த்தல் வேண்டுமென்றும் பேராசையேயாம்.''

ஆறுமுக நாவலரவர்கள் தமது நாற்பத்தைந்தாவது வயதில் வெளியிட்ட விஞ்ஞாபனத்தில் கூறியுள்ள சுயசரிதைக் குறிப்புகள் இவை. உலகியலையொட்டிப் பெற்றிருக்கக் கூடிய இலாபத்தைப் பரித்தியாகஞ் செய்த நாவலர் கூற்றிலே இறுதி வாக்கியம் கவனிக்கத்தக்கது. சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் பேணுவது நாவலரது இலட்சியம். அவ்விலட்சியத்தை அடைய முனைந்த - காலத்துத் தேவை கருதிச் செய்த - சில முக்கியமான பணிகளுள் ஒன்று புத்தக வெளியீடாகும். இலட்சிய வேட்கையோடும் தர்மாவேச தாகத்தோடும் அல்லும் பகலும் பணி புரிவதற்கென்றே தன்னை அர்ப்பணித்த அவருடைய நூல் வெளியீடுகள் தனிச் சிறப்புடையவையாக அமைந்ததில் வியப்பில்லை. நாவலர் பதிப்பென்றால் நல்ல பதிப்பு என்பது பொருள்! நாவலர் பதிப்பு என்றால் சுத்தமான பதிப்பு என்பது பொருள்! நாவலர் பதிப்பு என்றால் எப்பிழையும் காணமுடியாத பதிப்பு என்பது பொருள்! இச்சிறப்புத் தோன்றிய காரணத்தையும் அதன் பண்புகளையும் ஒரு சிறிது சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாவலரைப் பதிப்பாசிரியராக எண்ணும்பொழுது நாவலருடன் சேர்ந்து பணிபுரிந்த சிலரை மறந்து விடுவது பொருத்தமன்று. எனினும் நாவலருடைய பதிப்புகளின் பண்பும்

பயனுமே இங்கு சிறப்பாக நோக்கப்படுகின்றனவாகலின் பெயர்களைவிட அப்பெயர்கள் குறித்து நிற்கும் பொருளே குறிப்பிடத்தக்கதாகும்.

அடைகாத்துக் குஞ்சுபொரித்த ஒரு கோழியை எடுத்துக் கொள்வோம். ஆபத்தின் அறிகுறிகள் ஏதும் தோன்றியதும் கோழி தனது சிறகுகளுக்குள் குஞ்சுகளை அமுக்கி மூடி மறைத்துக் கொள்கிறது. ஆடாமல் அசையாமல் ஓர் இடத்திலேயே இருந்து விடுகிறது. ஒரு சமுதாயத்திற்கும் ஆபத்துத் தோன்றுங் காலத்து அது தனது உறுப்பினரைப் பாதுகாக்க முனைகிறது. எந்தவிதமான இடைவெளிகளுமின்றி தன்னைச் சுற்றி ஒரு அரண் வகுத்துக் கொள்ள முற்படுகிறது. நாவலர் காலத் தமிழகம் அந்த நிலையிலே இருந்தது. தற்பாது காப்பிற்காக - அந்நியர் ஊடுருவலைச் சமாளிப்பதற்காக - தமிழ்ச் சமுதாயமும் தனது அன்றைய நிலையை அப்படியே கட்டிக்காக்க விரும்பியது. தனக்குச் சிறப்பான கருத்துக்கள், கோட்பாடுகள் நிறுவனங்கள், நம்பிக்கைகள் ஆகிய யாவற்றையும் வலுப்படுத்த முனைந்தது. அந்த முயற்சியின் பயனால் பழைய பல நூல்கள் வெளிவரத் தொடங்கியதன் காரணம் அது. அந்தக் காரண காரியத் தொடர்பிலே முக்கிய பங்கு கொண்டு விளங்கினார் நாவலர்.

நாவலர் காலத்திலே நூல்களைப் பலர் வெளியிடத் தொடங்கியிருந்தனர். ஆனால், எல்லோருக்கும் சமயப் பிரசாரம் முதல் நோக்கமாக இருக்கவில்லை. நாவலருக்கோ சமயக் கல்வியும், பொதுக்கல்வியும் முதல் நோக்கமாக இருந்தபடியால், அத்துறையில் தூய்மையும், தெளிவும், புனிதத் தன்மையும் துலங்க வேண்டும் என்று விரும்பினார்.

கல்வியானது நாவலர் காலத்தில் திடீரென ஒரு சமூக - அரசியல் பிரச்சினையாகியது. பழைய குருகுல முறை புதிய மேனாட்டு முறையைச் சமாளிக்க முடியாதிருந்தது. எனவே, தமிழ் மக்களும் நவீன பாடசாலைகள் நிறுவுவது அத்தியாவசியமானது. இத்தகைய பாட சாலைகள், வித்தியாசாலைகள் முதலியனவற்றில் ''கல்வி கற்கும் பிள்ளைகளுக்குக் கருவி நூல் சமய நூலுணர்ச்சிகளை ஊட்டத்தக்க புத்தகங்கள் இல்லாதிருந்தமையாலும், இருந்த புத்தகங்கள் சிலவும் எழுத்துப்பிழை, சொற்பிழை வசனப்பிழைகளே பொதிந்தனவாய்க் காணப்பட்டமையாலும் அச்சிலும் ஏட்டுப் பிரதிகளிலும் உள்ளவைகளைத் தாம் பரி சோதித்தலும், புதிதாகச் சில நூல்களைச் செய்தலுமாகிய'' இரு பணிகளையும் மேற்கொண்டார் ஆறுமுகநாவலர்.

அவ்வாறே கிறித்தவப் பிரசாரகர் செய்து வந்ததையும் நாவலர் அனுபவ வாயிலாக அறிந்தவர். எனவே, சிறுவயதிலேயே மாணவர் சமய உண்மைகளையும், கருவி நூல் நியதிகளையும் ஐயந்திரிபற அறிய வேண்டுமாயின், அவை பிழையற்ற வடிவில் இருக்க வேண்டும் என்னும் அடிப்படைத் தேவையை விரைவில் உணர்ந்து கொண்டார் அவர். எனினும் அவர் காலத்தில் பலர் அச்சுயந்திரத்தின் இப்பண்பைத் தெளிவாக உணர்ந்தன ரல்லர். நாவலர் நன்குணர்ந்தார். நூல்கள் நன்கு பதிப்பிக்கப்படலாயின. சுருங்கக் கூறின் சமய உணர்ச்சியிலே தொடங்கிக் கல்வித்துறை வாயிலாக இப்பண்பு புலப்பட்டது எனலாம்.

நாவலரவர்கள் பரிசோதித்தும், புதிதாய் இயற்றியும் புத்துரை எழுதியும் வெளிப் படுத்திய நூல்கள் ஏறத்தாழ எழுபது என்று கணக்கிடலாம். ''அவற்றுள், முதற் பாலபாடம், இரண்டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம், சைவ வினாவிடை முதலாம் இரண்டாம்

புத்தகம், பெரிய புராண வசனம், இலக்கணச் சுருக்கம், கந்தபுராண வசனம், இலங்கைப் பூமிசாத்திரம், திருவிளையாடற் புராண வசனம், நால்வர் நான்மணி மாலை, அநுட்டான விதி முதற் புத்தகம், சூடாமணி நிகண்டுரை, போசன விதி முதலிய நூல்களை நோக்கும் போது மாணவர் கல்வியையே மனதிற் கொண்டு அவர் பல நூல்களை இயற்றினார் என்பது தெளிவாகும். ஆங்கிலம் கற்கும் மாணவரை யொப்பத் தமிழ்மூலம் கற்கும் மாணவரும் அறிவு சான்று விளங்க வேண்டும் என்பது நாவலர் கனவாகவிருந்தது. அந்த அற்புதமான கனவு நனவாகுங்காலம் இப்பொழுதுதான் வந்து கொண்டிருக்கிறது. ஆங்கில நூல்களைப் போலவே தமிழ் நூல்களும் அச்சுப் பிழையின்றித் திகழ வேண்டுமென்று விரும்பிய நாவலர் திருந்திய பதிப்பின் இலட்சிய புருஷரானார். எனவே, பாடசாலை மாணவருக்கு மட்டுமன்றி தமிழிலக்கிய இலக்கணங்களில் உயர்கல்வி பயில விரும்பு வோருக்கான நூல்களையும் பதிப்பித்தல் தருக்க ரீதியான வளர்ச்சியாக அமைந்தது.

நன்னூல் விருத்தியுரை, திருமுருகாற்றுப் படையுரை, திருவள்ளுவர் பரிமேலழகர் உரை, திருக்கோவையாருரை, சிவஞான போதச் சிற்றுரை, நன்னூற் காண்டிகையுரை, சிதம்பர மான்மியம், தருக்க சங்கிரகம், உபமான சங்கிரகம், உபநிடதவுரை, இரத்தினச் சுருக்கம், பதினோராந் திருமுறை ஆகியன தமிழிலே உயர்கல்வி பயில்வோர் கற்பதற்காகத் தெளிவாகப் பதிப்பிக்கப்பட்டன. இவ்வாறு தொடக்கப் பள்ளிக்கூட மாணாக்கருக்கும், உயர்தரக் கல்வி மாணாக்கருக்கும் ஏற்ற சுத்தமான பதிப்புக்களை நாவலர் வெளியிடச் சொந்த அச்சுயந்திரசாலை பெரிதும் பயன்பட்டது என்பதையும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும். இறக்கும் தறுவாயில் நாவலர் எழுதத் தொடங்கியிருந்த நூல்களைக் கவனித் தாலும் கல்வித் துறையையே அவர் அடிநிலையாகக் கொண்டிருந்தார் என்பது புலனாகும். அகராதி (தமிழ்), அகராதி (இங்கிலீஷ் - தமிழ்), அகராதி (சமஸ்கிருதம் - தமிழ்) தருக்கபரிபாஷை, இலக்கண வினாவிடை முதற் புத்தகம், சமஸ்கிருத வியாகரணசாரம், இரகுவம்சம் முதலியன அவர் எழுதத்தொடங்கி இருந்த பாடநூல்கள் எனலாம்.

எனினும் நேரடியாகப் பாடநூற் பரப்பிற்கும் அப்பாற்பட்ட நூல்களையும் பதிப்பித்தவர் நாவலர். புரவலர் இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவருடைய கோரிக்கையின் பேரில் சேது புராணத்தையும், திருவாவடுதுறை மகாசந்நிதானம் கேட்டதற்கிணங்க, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கணக் கொத்து என்னும் நூல்களையும் பரிசோதித்து வெளியிட்டார்.

சைவ சமயத்தை எவ்வாறு பேணிப்பாதுகாக்க முற்பட்டனரோ, அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராக அதனை ஒரு கேடயமாகப் பயன்படுத்தினரோ, அவ்வாறே, தாய்மொழியையும் தகுந்த முறையில் பயன்படுத்தியவர் நாவலர். ஆகையினாற்றான் மொழிக்கு வரம்பு காட்டும் இலக்கணத்தையும் போற்றினர். கருத்திலே தூய்மை வாதம் தோன்றும்போது அது வாழ்க்கையின் பல்வேறு துறைகளையும் பாதிக்கிறதல்லவா? அதைப் போலவே சமயக் கல்வி வளர்ச்சிக்காகத் தருக்க நூல்களையும், மொழி இலக்கிய அறிவு வளர்ச்சிக் காக இலக்கண நூல்களையும் சிறப்புற வெளியிட்டனர். பிரயோக விவேக உரை,

தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையருரை, நன்னூல் விருத்தியுரை - இரண்டாம் பாகம் ஆகிய நூல்கள் நாவலர் பதிப்பித்த சிறந்த இலக்கண நூல்களாம்.

நாவலர் மரபையொட்டியே, சி.வை. தா., தி.த. கனகசுந்தரம்பிள்ளை, வ. குமார சாமிப்புலவர், உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், சங்குவேலி சிதம்பரப்பிள்ளை, த. கைலாசபிள்ளை, சுன்னாகம் குமாரசாமிப் புலவர், மாவித்துவான் சி. கணேசையர் ஆகியோர் தமிழ் கூறு நல்லுலகம் பாராட்டும் உயரிய இலக்கண நூற் பதிப்பாசிரியராக மிளிர்ந்தனர்.

நாவலர் பதிப்புகளைப் பற்றி அக்கால சஞ்சிகைகள் கூறியுள்ளவற்றைப் படிக்கும் போதுதான் அவர் நூல்கள் எவ்வாறு மதிக்கப் பெற்றன. ஒப்புயர்வற்று விளங்கின என்பது தெரியவரும். தத்துவ விசாரணி, ஞானாமிர்தம், ஆரியசனப்பிரியன் முதலிய சஞ்சிகை கள் ''நூல்களை அவற்றின் உரைகளோடு பிழையறப் பரிசோதித்து அச்சிடத்தக்க வித்துவான் ஸ்ரீ நாவலர் அவர்களே'' என்று பலவாறு எழுதியுள்ளன.

சுருங்கக் கூறின் மேனாட்டுப் பாதிரிமாருடைய தொடர்பால் நாவலர் அச்சுயந்திரத்தின் முழுப்பயனையும் கிரகித்துக் கொண்டார். அழகு, தெளிவு, எளிமை, சுருக்கம் ஆகிய பண்புகள் காலத்தின் தேவைகள் என்னும் மகத்தான உண்மையை அச்சு சாதனத்தைப் பொறுத்த வரையில் பரிபூரணமாக உணர்ந்தவர் நாவலர். அதன் காரணமாகவே அத்துறை யில் ஈடு இணையற்றவர் என்று கருதப்பட்டார். தனது இலட்சியங்களுக்காகப் பொதுசன இயக்கங்களில் ஈடுபட்டவராதலின் வெகுசனத் தேவைகளை நன்கு அறிந்தார். அது அவருடைய தனித்தகுதிகளில் ஒன்று. அவருக்கும் அவர் காலத்துப் பிற தமிழ் வித்துவான்கள் பலருக்கும் இருந்த சிறப்பான வேறுபாடும் அதுவே. நாவலருடைய பதிப்பு நல்ல பதிப்பு என்றால், அது மக்களுக்கு நல்ல பதிப்புகள்தான் தேவை என்றுணர்ந்த போதத்தின் விளைவாக எழுந்த பயன் என்பதும், அந்தப் போதம் உழைப்பின் மத்தியிலே தோன்றியது என்பதும் நினைவுகூரத் தக்கன. நாவலர் பதிப்பு வரலாற்றுத் தொடர்புடையது.

இதன் காரணமாகவே நாவலர் நூல்களுக்குச் சிறப்புக் கவிகள் வழங்கிய திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் தாண்டவராய சுவாமிகளும் பலவாறு புகழ்ந்தனர்.

''மன்னு பெருந் தமிழ்ப்பாடை
இலக்கணமு மிலக்கியமும்
வரம்பு கண்டோன்.''

என்று மீனாட்சி சுந்தரம்பிள்ளையும்,

''மூலமு முரையு முறைமுறை நோக்கி
யேலவே திருத்தி யெழுதா வெழுத்திற்
பதிப்பித்தளித்தனன்''

என்று தாண்டவராய சுவாமிகளும் கூறிய வார்த்தைகள் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

'மரகதம்', 1962, பக். 17 - 19.

பதிப்பாள மன்னன்
விமரிசனங்கள் தொடர்பான பார்வை

ஸ்ரீ. பிரசாந்தன்

தமிழ் நூற்பதிப்பானது, பதினாறாம் நூற்றாண்டில் தம்பிரான் வணக்கம் எனும் நூலோடு தொடங்கிவிட்டது. எனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் தமிழ்ப் பதிப்புலகம் செழுமையான நிலையினை அடைந்தது எனல் வேண்டும். முதற் பதிப்பில் இருந்து ஆரோக்கியமான பதிப்பு நிலையை அடைவதற்குத் தமிழுக்குக் கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டு காலம் தேவைப்பட்டுள்ளது. இதற்கான காரணங்கள் பல. அவற்றுள் அச்சுக் கூடம் நிறுவும் அனுமதியைச் சுதேசியத் தமிழறிஞர்கள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி வரை பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தமை முக்கியமானதாகும். 1835ஆம் ஆண்டுவரை அச்சகங்களை அமைக்கும் உரிமை விதேசியர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாண்டு அறிவிக்கப்பட்ட அச்சு இயந்திரச் சட்டம்தான், சுதேசிய அறிஞர்கள் புத்தக வெளியீட்டில் பரந்த அளவில் ஈடுபடுவதற்கான வாயிலைத் திறந்துவிட்டது. இவ்வாறு அச்சு முயற்சிகளில் சுதேசியர்களின் வரவு நிகழ்ந்த வேளையில், அச்சியந்திரசாலைகளை ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் நிறுவி, நூல்கள் பலவற்றை வெளியிடுவதைத் தமது தலையாய பணிகளுள் ஒன்றாகக் கொண்டவராக யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் சமுதாய வாழ்விற்கு வந்தார். தமிழ்ப் பதிப்புலகில் நாவலர் பதிப்பு நல்ல பதிப்பு எனப் பெயர் நிறுவிய அவரின் பதிப்புச் சாதனைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

> ''அவர் (நாவலர்) பரிசோதித்தும் புதிய உரை எழுதியும் புதிதாய் இயற்றியும் வெளியிட்ட நூல்கள் 59; அச்சிற் பதிப்பிக்கும் நோக்குடன் எழுதி முடித்தவை 10; எழுதத் தொடங்கியவை 9; அவர் இறக்கும் வரையுள்ள காலப்பகுதியாகிய 35 ஆண்டுகளுக்கு இடையில் பிரங்கஞ் செய்தல், மதப் பிரசாரம் செய்தல், மாணவருக்குக் கல்வி கற்றுக் கொடுத்தல் முதலிய பாரிய வேலைகளுடன் 59 நூல்களை எழுதி அச்சிட்டமை வியக்கத்தக்கது. அச்சுக்கூட வசதிகள் மிகக் குறைவாக இருந்த அக்காலத்திலே இதனைச் செய்து முடித்தமை அரிய பெரிய சாதனையாகும். மேலும், அவர் வெளியிட்ட 59

நூல்களும் ஓர் எழுத்துப் பிழையோ அச்சுப் பிழையோ இலக்கணப் பிழையோ இல்லாதிருந்தமை வேறெவரும் இதுவரை சாதியாததொன்றாகும். அவரை அக்கால பதிப்பாள மன்னன் எனலாம்.''[1]

என்று, ஆறுமுகநாவலர் எனும் ஆளுமை, தமிழ்ப் பதிப்புலகில் பெறும் இடத்தைச் சுருக்கமாகச் சுட்டுகிறார் சு. வித்தியானந்தன். இவரின் இம் மேற்கோளில், அச்சியந்திர சாலைகள் மிகக் குறைவாக இருந்த காலகட்டத்தில் தாமே அச்சியந்திரசாலைகளை நிறுவி, தமது பல்வேறுபட்ட பணிகளுக்கிடையேயும் நூல்கள் பலவற்றை, பிழையில்லாது அச்சுவாகனம் ஏற்றியமை வியக்கப்பட்டு, இங்கு ''பதிப்பாள மன்னன்'' எனும் பட்டம் நாவலருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, நாவலரின் பதிப்புப் பணியானது அறிஞர்கள் பலராலும் போற்றப்பட்டுள்ளது.

''தமிழ் வளர்ச்சியின் பொருட்டு அவர் (நாவலர்) செய்த அருஞ்செயல்களுக்கு அடையாளங்களாக அவர் பதிப்பித்த நூல்கள் விளங்குகின்றன. அவருடைய பதிப்பு முறை தமிழ்நாட்டாராற் பெரிதும் மதிக்கப்படுவது.''[2]

- உ.வே. சாமிநாதையர்

''இலக்கண இலக்கியப் பிழைகளும் அச்சுப் பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையும் சைவசமய நூல்களையும் பதிப்பிட்டு உதவுவார் அரியரான எமது இளமைக் காலத்தில் ஆறுமுகநாவலர் அவர்களே அந்நூல்களைப் பிழையறப் பதிப்பித்து உதவினவர்கள். திருச்சிற்றம்பலக் கோவையாருரையும் திருக்குறள் பரிமேலழகியாருரையும் அவர்கள் திருத்தமாக அச்சிடுவித்து வெளியிட்டமையினாலேதான் யாம் நம் பண்டைத் தமிழின் மாட்சியும் தமிழாசிரியரின் தன்னிகரில்லாத் தெய்வப் புலமையும் ஒருங்குணர்ந்து மேலும் தமிழ் நூல் கற்பதில் அடங்கா வேட்கையுற்றேம்.''[3]

- மறைமலையடிகள்

இவை தமிழ் உலகில் இரு பெரும் சிறப்பு ஆளுமைகளின் கூற்றுகள். ஒருவர், தமிழ்ப் பதிப்புலகின் முக்கிய அடையாளமாக விளங்குபவர். மற்றவர், தனித் தமிழ் இயக்க மூலவராகக் கொள்ளப்படுபவர். இவர்களின் கூற்றுகள் அக்காலத் தமிழ்க் கல்வி உலகில் நாவலர் பதிப்புகள் ஆற்றிய மகத்தான பங்களிப்பை எடுத்துரைக்கின்றன.

இவ்வாறு பண்டைத் தமிழின் மாட்சி தெரியவைத்தவை எனத் தக்க அறிஞர்களால் போற்றப்படும் பதிப்புகளைத் தந்த, நாவலரின் பதிப்புப் பணியைக் குறித்து விமரிசனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையையும் கவனத்திற் கொள்ள வேண்டும். இப் பதிப்பாள மன்னன், தமிழ்ப் பதிப்புலகில் வரலாற்றுப் பிழை இழைத்தவராகச் சிலரால் இனங்காணப் பட்டுள்ளார் என்பது இவ்விடத்தில் சுட்டப்பெறத்தக்கது.

அவரால் இழைக்கப் பெற்ற வரலாற்றுப் பிழையாகக் கூறப்படுவது எது என்பதையும், அவ்வாறு கூறப்படுவது சரியானதுதானா என்பதையும், நாவலரின் பதிப்புக் குறித்த இக்கட்டுரையில், உண்மைத் தரவுகளின் அடிப்படையில் பார்ப்பது அவசியமானதாகும்.

''பெரியபுராணம், திருமுருகாற்றுப்படை முதலான சைவ சமய நூல்களுக்கு உரை எழுதுதல் மற்றும் பதிப்பித்தல் ஆகியவற்றைச் செய்த நாவலர், சங்க நூல்கள் மீது கவனம் செலுத்தாமல் போனது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும். இதனை நாவலர் செய்த வரலாற்றுப் பிழை என்றே மதிப்பிடலாம். 1850களில் தம்மிடம் இருந்த சங்க இலக்கியச் சுவடிகளைத் தமிழ் சைவப் பாரம்பரியத்தில் உருவாகி வந்த நாவலர் பதிப்பித்து வெளிக்கொண்டு வந்திருப்பாரேயானால், பின்னர் 'தமிழ்த் தாத்தா' உருவாக வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது. தமிழ்த் தாத்தாவிற்கு வாய்ப்பளித்து, ஆறுமுகநாவலர் கண்ணை மறைத்தது மதம். மதம் எல்லாக் காலங்களிலும் மதம் பிடித்தே செயல்படுவது என்பது வரலாற்று முடிவு.''[4]

என்பது ஆய்வாளர் வீ. அரசுவின் கூற்று. நாவலர் செய்த வரலாற்றுப் பிழையாக, பதிப்புப் பணியின் பொழுது அவர் சங்க நூல்கள்மீது கவனம் செலுத்தாமை இங்கு கூறப்பட்டுள்ளது. இக் குறிப்பை வசதியும் தெளிவும் கருதிப் பின்வருமாறு மூன்று பிரிவுகளாகப் பகுத்துக் காணலாம்.

(அ)நாவலர் சங்க நூல்கள் மீது கவனம் செலுத்தாமல் போனது வரலாற்றுப் பிழை.

(ஆ) சங்க இலக்கியச் சுவடிகளைத் தமிழ் சைவப் பாரம்பரியத்தில் உருவாகி வந்த நாவலர் பதிப்பித்து வெளிக்கொண்டு வந்திருப்பாரேயானால், பின்னர் 'தமிழ்த் தாத்தா' உருவாக வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது.

(இ) சங்க நூல்கள்மீது கவனம் செல்லவிடாது. ஆறுமுகநாவலர் கண்ணை மறைத்தது மதம்.

நாவலர் சங்க நூல்கள் மீது கவனம் செலுத்தவில்லை எனும் ஆய்வாளர், திருமுருகாற்றுப் படைப் பதிப்பை, சங்க நூலாகக் காணாமல், சைவ சமய நூலாக மட்டுமே அடையாளம் காண்கிறார். பாராயணத்துக்குரிய திருமுறை நூலாக விளங்கியமையால்தான் நாவலர் அதைப் பதிப்பித்தார் என்பதால், அந்நூலை. சங்க இலக்கியப் பதிப்பாகத் தமிழ்நாட்டு ஆய்வாளர் பலரும் பாராட்டவில்லை.

ஆனால், செம்மொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்டு பழந்தமிழ்ச் செவ்வியல் நூல்கள் குறித்துப் பல ஆய்வுகளும் வெளிவந்து கொண்டுள்ள இவ்வேளையில், திருமுருகாற்றுப்படை குறித்த கட்டுரைகள் சில, அதன் பதிப்பு வரலாற்றைப் பேசுகின்றன. இக்கட்டுரைகள் பெரும்பாலும் 1834இல் வெளிவந்த திருத்தணிகை சரவணப் பெருமாளையரின் பதிப்பைத்தான் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு வரலாற்றின் முதற் பதிப்பாகக் கூறுகின்றன.[5]

நாவலர் என்ன நோக்கத்துக்காகப் பதிப்பித்தாரோ அதே பாராயண நோக்கத்துக்காகத் தான் சரவணப் பெருமாளையரும் திருமுருகாற்றுப் படையைப் பதிப்பித்துள்ளார். இங்கு எழுப்பப்படும் வினா என்னவென்றால், பாராயண நோக்கத்துக்காகப் பதிப்பித்த சரவணப் பெருமாளையரின் பதிப்பை சங்க, செவ்வியல் இலக்கியப் பதிப்பாகவும் கொள்ளலாம் என்றால், நாவலர் பதிப்பை ஏன் சங்க இலக்கியப் பதிப்பாகக் கொள்ள முடியாது? என்பதாகும்.

இனி, நாவலர், திருமுருகாற்றுப்படை தவிர்ந்த சங்க நூல்களுள் ஒன்றையேனும் பதிப்பிக்க முயலவில்லையா? என்பதை இவ்விடத்தில் பார்ப்பது அவசியமானதாகும். திருமுருகாற்றுப்படை தவிர்ந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூற்பதிப்பு ஒன்றேனும் நாவலர் பதிப்பாக வரவில்லை என்பது உண்மைதான். எனினும், அவர் பதிப்பித்தற் பொருட்டு சங்க நூல்கள்மீது கவனமே கொள்ளவில்லை என்பது பொய்யான செய்தியாகும். இப்பொய்மையை எடுத்துக்காட்ட 1860இல் வெளிவந்த திருக்கோவையார் பதிப்பில் காணப்படும் பிரகடனப் பத்திரிகையே போதுமானதாகும்.

தாம் பதிப்பித்தளித்த நூல்களை மட்டுமல்லாமல், பதிப்பிக்கத் தயார்ப்படுத்தியுள்ள நூல்களையும் அவ்வப் பொழுது பிரகடனப் பத்திரிகை வாயிலாகக் குறிப்பிட்டுச் செல்லுதல் நாவலர் இயல்பு. இத்தகைய பிரகடனப் பத்திரிகை ஒன்று நாவலரின் மேற்கூறப் பெற்ற திருக்கோவையார் பதிப்பிலும் காணப்படுகின்றது. பதிப்பிக்கத் தயாராக உள்ள நூல்களாக இப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ள பட்டியலில், பின்வரும் சங்க இலக்கிய நூல்களின் பெயர்களும் காணப்படுகின்றன.

கலித்தொகை உரை

புறநானூறு

இப் பிரகடனப் பத்திரிகை கூறும் செய்தி மூலமாக, நாவலர், சங்க இலக்கியங்கள் மீது கவனம் கொண்டு அவற்றில் சிலவற்றைப் பதிப்பிக்கத் தயாராக்கி வைத்திருந்தார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக, அவற்றின் பதிப்புப் பணி நிறைவேறுதற்கு முன்பாக நாவலரது வாழ்க்கை நிறைந்து விட்டது என்பதே உண்மை யாகும்.

அவர் தாம் பிரகடனப் பத்திரிகையில் தெரிவித்த சங்க நூல்களின் சுவடிகளை, பதிப்பிக்கும் பொருட்டு தேடிவைத்திருந்தமையையும், அச்சுவடிகள் பதிப்புக்கு உகந்த நிலையில் திருத்தமுற்று இருந்தமையையும் சி.வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்புரைக் குறிப்பொன்று உறுதி செய்வதையும் இவ்விடத்தில் எடுத்துரைப்பது பொருத்தமானதாகும்.

> ''முதன் முதல் யான் பார்த்தது புதுவை நயனப்ப முதலியாரது மூலபாடப் பிரதி. ஒரு பாட்டின் ஓருறுப்பாவது முற்றும் வாசிக்க முடியாமற் கிடந்ததாற் படிப்பதற்கே வெறுப் புண்டாய் நீக்கி விட்டேன்.
>
> பின்னர்த் தொல்காப்பியப் பரிசோதனைக்காகத் தேடியபோது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் பிரதி அகப்பட்டது. அது கொண்டு கலித்தொகை அருமையுணர்ந்து அதனை எப்படியும் உலகிற்குப் பயன்பட வேண்டுமென்னும் அவாவுற்று...''[6]

என்கிறார். சி.வை.தா. நயனப்ப முதலியாரது பிரதி மூலம் நல்ல கலித்தொகைப் பதிப்பைத் தரமுடியாது என நினைந்து அப்பதிப்பு முயற்சியில் கைசோர்ந்திருந்த சி.வை.த. பின் ஆறுமுகநாவரின் பிரதியைக் கண்டே, கலித்தொகையின் சிறப்பை அறிந்து, அதைப் பதிப்பிக்கும் எண்ணத்தை மீளப் பெற்றுக்கொண்டார் என்பது கவனத்திற்குரியது. சி.வை.

தா. வின் கூற்றை நோக்கும்பொழுது நாவலரின் கலித்தொகைப் பிரதி நன்கு திருத்தமுற்ற நிலையில் இருந்தது என்பது தெளிவு.

இதன்மூலம், நாவலர் தமது திருக்கோவையார்ப் பதிப்பின் பிரகடனத்தில் தெரிவித் திருந்தபடி கலித்தொகையைப் பதிப்புக்குத் தயாராக்கி வைத்திருந்துள்ளார் என்பதையும், பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டுழைத்த அவர், இப்பதிப்பை வெளிக்கொணர்வதற்கு முன்பாகவே, அவர் வாழ்க்கை நிறைந்துவிட்டது என்பதையும், அவர் பதிப்புக்குத் தயாராக்கிய சுவடிப் பிரதி, பின் சி.வை.தா. வின் கலித்தொகைப் பதிப்புக்குப் பயன் பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

இதேவேளை, சங்க நூல்களுள் முதன்மையுடையதாகப் பல தமிழறிஞர்களாலும் கொள்ளப்படும் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தை, புகழ்பெற்ற சேனாவரையர் உரையொடு சி.வை.தா. பதிப்பிப்பதற்காக, சுவடிகளை ஒப்புநோக்கி பரிசோதித்து வழங்கியவர் நாவலர் என்பதையும் இவ்விடத்தில் நினைவிற் கொள்ள வேண்டும். தொல்காப்பிய பதிப்பு வரலாற்றில் சேனாவரையத்துக்கு வந்த முதற் பதிப்பு இதுதான் என்பது சுட்டப்படத்தக்கது.

எனவே, பதிப்பிக்கும் பொருட்டு நாவலர் சங்க நூல்கள் மீது கவனம் செலுத்தவில்லை. அது வரலாற்றுப்பிழை எனக் கூறும் அரசுவின் கூற்றுத் தவறானதாகும். அடுத்து, சங்க நூல்களை நாவலர், பதிப்பித்து வெளிக்கொண்டு வந்திருப்பாரேயானால், பின்னர் 'தமிழ்த் தாத்தா' உருவாக வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது என்று கூறியிருப்பது பற்றி நோக்கலாம். இவ்வாறு கூறுவது மிகவும் வேடிக்கையானதாகும். பாரதி ஏன் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பாடவில்லை. அப்படிப் பாடி இருந்தால் பாரதிதாசன் எனும் கவிஞர் ஒருவர் உருவாக வேண்டி இருந்திராது என்று எவரேனும் கூறினால் எப்படியிருக்கும். அப்படியிருக்கிறது இது.

வரலாற்றில் போற்றப்படும் ஒவ்வொரு முக்கிய ஆளுமையும் தான் வரித்துக் கொண்ட கொள்கைக்கும் தனது சமகாலத் தேவைக்கும் தனது சூழலுக்கும் அமைவாக, தான் அவசியமானவை எனக் கருதும் பணிகளை நிறைவேற்றியுள்ளமையைக் காணலாம்.

இதைப் புரிந்து கொள்ளாமல், ஒரு ஆளுமையை நோக்கி, மற்றப் பணிகளையும் ஏன் செய்யவில்லை. அப்படிச் செய்திருப்பின், அடுத்த ஆளுமை தோன்றியிருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காதே எனக் கூறுவது வரலாற்றுப் புரிதல் இன்மையால் வந்தது.

இந்த வரலாற்றுப் போக்கைப் புரிந்து கொள்ளாமையாலோ, நாவலர் மீது எப்படி யாயினும் குறை சொல்ல வேண்டும் என்பதாலோ, ஒரு ஐயர் (உ.வே. சாமிநாதையர்) இப்படி உருவாகி விட்டாரே என்ற எண்ணத்தாலோதான், நாவலர் சங்க நூல்களைப் பதிப்பித்திருந்தால் பின்னர் 'தமிழ்த் தாத்தா' உருவாக வேண்டி வந்திராது என ஆய்வாளர் கூறியிருப்பதாகக் கருதலாம். இவ்விடத்தில் நாவலர் குறித்து க. கைலாசபதியின் கருத்தொன்றைக் காட்டிச் செல்வது போதுமானதாகும்.

''தனது காலத்துக்கேற்றவை எவை என்பதனையும் இன்றியமையாதன எவை என்பதனையும் சிந்தித்துத் தெளிந்து அவற்றைச் செயற்படுத்தியமையே நாவலரது சிறப்புக்கும் தனித்துவத்துக்கும் அடிப்படையாகும். அதாவது நாவலரின் தற்கால உணர்வே அவரைச் சமகாலத்தவர் பலரினின்று வேறுபடுத்தித் தனிச் சிறப்புடையராய்க் காட்டுகின்றது.''[7]

இனி, மூன்றாவதாக, சங்க நூல்கள் மீது கவனம் செல்லவிடாது ஆறுமுகநாவலர் கண்ணை மறைத்தது மதம் என்று கூறப்பட்டுள்ளதன் வன்மை மென்மைகளை ஆராய்தல் வேண்டும். நாவலர் சைவத்தில் கடும் பற்றுக் கொண்டவர். கிறித்துவத்தைச் சார்ந்த அன்றைய அரசினதும் மத மாற்றத்தை நோக்கமாகக் கொண்டியங்கிய கிறித்துவ மிஷனறிகளதும் நடவடிக்கைகளால் நலிந்து போயிருந்த சைவத்தை மீள எழுச்சி அடையச் செய்ய வேண்டும் எனும் எண்ணத்தில் தமது பலதரப்பட்ட பணிகளுள் சைவப் பணிகளுக்கே அவர் முதன்மை கொடுத்தார். கிறித்தவ மதப் பரப்புகைக்கு எதிரான கடும் கண்டனங்களை வெளிப்படுத்தினார். தாம் தமக்கு ஏற்புடையதாக வரித்துக் கொண்ட சைவ சமய நூல்களைப் பெரிதும் வெளியிடும் பணியில் தலை நின்றார். அது, காலத்தின் தேவையை உணர்ந்து அவர் தெரிவு செய்த வழி. தனக்கான பணிப் புலத்தைத் தெரிவு செய்யும் சுதந்திரம் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.

இவ்வாறு, சைவப் பணிகளுக்கு அவர் முதன்மை கொடுத்தது உண்மை. சைவ மாணவருக்கான பாடத்திட்டத்தில் சைவ நூல்களையே பெரும்பான்மையும் உள்ளடக்கியதும் உண்மை. ஆனால், அவர் பதிப்புலகில், சைவம் சார்ந்த நூல்கள் மட்டும்தான் என்ற எண்ணத்தோடு இயங்கவில்லை. உண்மை அவ்வாறு இருக்கிறபோது, சங்க நூல்கள் மீது கவனம் செல்லவிடாது. ஆறுமுகநாவலர் கண்ணை மறைத்தது மதம் எனக் கூறுவது தவறானதாகும். மதக் காரணங்களுக்காகத்தான் சங்க இலக்கியப் பதிப்புகளை நாவலர் தரவில்லை என்பது உண்மையை உணராமற் கூறப்பட்ட கூற்றாகும்.

சங்க இலக்கிய நூல்களை மதம் காரணமாகப் பதிப்பிக்கவில்லை எனக் கூறுவோர், நாவலர் நன்னூற் பதிப்புக்களை வெளிக்கொணர்ந்தமையைச் சிந்திப்பதில்லை. மேலும் தாம் வெளியிடத் தயாராக்கியுள்ள நூல்கள் பற்றிய பட்டியலில் நாவலர் பிற சமய நூல்களான, சீவக சிந்தாமணியுரை, சிலப்பதிகாரவுரை, மணிமேகலை, வளையாபதி ஆகிய நூல்களையும் குறிப்பிட்டுள்ளதையேனும் சிந்திக்க வேண்டும். இப் பட்டியல் மூலம் மதக் காழ்ப்பற்ற மனோநிலையில்தான் அவர் பதிப்புலகில் ஈடுபட்டமை தெளிவாகிறது. இதனை,

''நாவலர் அவர்கள் தமது அடிப்படை நம்பிக்கைகளுக்கியைய புராணக் கருத்துகளை - சமயப் பொருளை - சிரமேற் கொண்டவர். எனினும் சீவக சிந்தாமணி போன்ற சமணச் சார்புடைய காவியத்தைப் போற்றத் தவறவில்லை. அந்நூலை அவரே பதிப்பிக்க எண்ணியிருந்தார் என்பதும் தெரிந்ததே.''[8]

என, க. கைலாசபதியும்,

"வித்தியாசாலைத் திட்டத்திற்கு வேண்டிய நூல்களை எழுதியும் பதிப்பித்தும் விளக்கியும் நின்ற நாவலர் அவர்கள் சமயப் பிரசாரணத்தைக் கருத்தினில் கொண்டு துண்டுப் பிரசுரங்களையும் கண்டனங்களையும் சிறு நூல்களையும் எழுதிப் பிரசுரித்தனர். ஆயினும் சமய நூல்களை மட்டுமே பதிப்பிக்க வேண்டும் என்ற வரையறைக்குள் அவர் நிற்கவில்லை. இதனால் உலகியல் நூல்களையும் புறச் சமய நூல்களையும் கூட அவர் பதிப்பிக்கத் திட்டமிட்டனர். திருக்கோவையாருரை (1860) பதிப்பில் இடம்பெறும் அநுபந்தமும் பிரகடனப் பத்திரிகையும் இக்கருத்தினை ஆதரிப்பன. சமய நூல்களையும் கருவி நூல்களையும் சமயப் பிரசாரணத்திற்கு வேண்டிய பிரசுரங்களையும் வெளிக் கொணரப் புறப்பட்ட நாவலர் அவர்கள் விதானம் அழிந்து போகும் நிலையில் இருந்த தமிழ் நூல்களையும் உள்ளடக்கியதாக இருந்ததை மனங் கொளல் வேண்டும்."[9]

என. பொ. பூலோகசிங்கமும் முன்னரே எடுத்துக் கூறியுள்ளனர். இவற்றை வைத்து நோக்கும்பொழுது, சங்க நூல்கள்மீது கவனம் செல்லவிடாது ஆறுமுகநாவலர் கண்ணை மறைத்தது மதம் என வீ. அரசு கூறுவதும் தவறான கூற்றுத்தான் என்பது இலகுவில் புலனாகும். எனவே, பதிப்பாள மன்னன்மீது சங்க இலக்கியப் பதிப்புத் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விமரிசனங்கள் உண்மை ஆதாரங்களைத் துணைக் கொள்ளாதனவாகக் காணப்படுகின்றன. தன்னலமற்ற சேவையாற்றி, வரலாற்றில் பெயர் பொறித்துள்ள ஆளுமை மீது ஆதாரமின்றி பழி சுமத்துவதுதான் வரலாற்றுப் பழியாய் முடிந்து விடுகிறது.

அடிக்குறிப்புகள்

1. வித்தியானந்தன், சு., நாவலர் நிலைநாட்டிய சாதனைகள், நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு நினைவு மலர், (1974), பக். 63, 64.
2. சாமிநாதையர், உ.வே., நாவலர் நினைவு மலர், (1938), ப. 7.
3. மறைமலையடிகள், நாவலர் நினைவு மலர், (1938), ப. 103.
4. அரசு, வீ., பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அச்சுப் பண்பாடும் புத்தக உருவாக்கமும், தமிழின் நவயுகம், (2011), ப. 92.
5. அய்யப்பன், கா., (ப.ஆ.), செம்மொழித் தமிழ் நூல்கள், பதிப்புரைத் தொகுப்பு, (2009), ப. 254.
6. தாமோதரம்பிள்ளை, சி.வை., கலித்தொகை பதிப்புரை, செம்மொழித் தமிழ் நூல்கள், பதிப்புரைத் தொகுப்பு, (2009), ப. 198.
7. கைலாசபதி, க., நாவலர் வகுத்த புதுப் பாதை, நாவலர் மாநாடு விழா மலர், (1969), ப. 19.
8. கைலாசபதி, க., நாவலர் பற்றி கைலாசபதி, ப. 71.
9. பூலோகசிங்கம், பொ. நாவலர் பண்பாடு, (2000), ப. 14.

'சங்கத்தமிழ்', இதழ் - 5,
கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு,
2012, பக். 78 - 84.

ஆறுமுக நாவலர் செய்த பைபிள் மொழிபெயர்ப்பு

சோ. பத்மநாதன்

கிறிஸ்தவ வேதாகமமாகிய பைபிள் உலகமொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப் பட்ட சிறப்புக்குரியது. 18ஆம் நூற்றாண்டு தொடக்கம் பைபிளின் பல்வேறு மொழிபெயர்ப்புக்கள் தமிழில் வெளிவந்துள்ளன. இவற்றுள் 'ஆறுமுக நாவலர் மொழிபெயர்ப்பு' என்றும் 'யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு' என்றும் அறியப்பட்ட Tentative version 1850 அளவில் வெளிவந்தது. இந்த மொழிபெயர்ப்புப் பற்றி யாழ்ப்பாண மிஷனரிகளுக்கும் தென்னிந்திய மிஷனரிகளுக்குமிடையில் வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. இதன் பின் வந்த Bower மொழிபெயர்ப்பு தென்னாட்டில் பெருவழக்காயிற்று. நாவலர் மொழிபெயர்ப்பை ஆங்கில மூலமாகிய Authorized King James Version உடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்வதே இவ்வாய்வின் நோக்கம்.

1715இல் தமிழ்நாட்டின் தரங்கம்பாடியில் கிறிஸ்தவ மதப்பிரசாரகராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த Ziegenbalg என்ற ஜேர்மானியரும் அவர் பணியைத் தொடர்ந்த Fhulz என்ற மதபோதகருமே பைபிளை முதன்முதலில் தமிழாக்கம் செய்தோர். இவர்களுக்குப் பின் Fabricius செய்த தமிழாக்கம் Lutheran கிறிஸ்தவர்களிடையே செல்வாக்குப் பெற்றது.

புரத்தாஸ்ந்துக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தக் கூடிய ஒரு தமிழ் பைபிளை உருவாக்க விரும்பிய வேதாகமச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை அப்போது யாழ் மத்திய கல்லூரி அதிபராய் விளங்கிய பீற்றர் பேர்சிவலிடம் அப்பணியை ஒப்படைத்தது.

Tentative version என அழைக்கப்பட்டு வந்த யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு, இப் பொழுது புழக்கத்தில் இல்லாவிட்டாலும், பின்னாளில் ஆறுமுக நாவலர் எனத்தமிழ் கூறும் நல்லுலகில் நிமிர்ந்த அப்பேரறிஞர் மீது கொண்ட மதிப்பால், இன்றும் சில கிறிஸ்தவர்களால் பேணப்பட்டு வருகிறது.

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனத்தின் பேராயராய் விளங்கிய அதி.வண.சபாபதி குலேந்திரன் அவர்களே சீலன்பால்கு, பவர், நாவலர் ஆகியோருடைய

மொழிபெயர்ப்புக்களை ஒப்பிட்டு முதன்முதலில் ஒரு கட்டுரை எழுதியவர். அக்கட்டுரை தந்த உந்தலே என்னை இவ்வாய்வை மேற்கொள்ளத் தூண்டியது. அத்துடன் பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன் எழுதிய 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்திய - யாழ்ப் பாணக் கல்வி கலாசார ஊடாட்டம்: அமெரிக்க மி'னின் பங்களிப்பு' என்ற கட்டுரையும் இவ்வாய்வுக்கு உதவியது.

தேர்ந்தெடுத்த மூலநூலின் பகுதிகளை அவற்றுக்குச் சமாந்தரமான நாவலர் மொழி பெயர்ப்புப் பகுதிகளோடு ஒப்பிட்டு. சொல் மட்டம், சொற்றொடர் மட்டம், வாக்கிய மட்டம் ஆக வகைப்படுத்தப்பட்டு மொழியியல் அடிப்படையில் அம்மொழிபெயர்ப்பு மதிப்பீடு செய்யப்படுகின்றது.

கிறிஸ்தவ வேதாகமமாகிய 'பைபிள்' ஹீப்றூ மற்றும் கிரேக்க மூலமொழிகளில் எழுதப்பட்டது. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நாட்டினரால், தத்தம் மொழிகளில் பெயர்க்கப்பட்டது. பைபிளின் தமிழ் மொழிபெயர்ப்புக்கு ஒரு நீண்ட வரலாறுண்டு.

தமிழ் நாட்டின் தரங்கம்பாடியில் கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்வதில் ஈடுபட்டிருந்த ஜேர்மானிய போதகராகிய சீகன்பால்கு (Ziegenbalg) 1715இல் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து வெளியிட்டார். தரங்கம்பாடியில் வாழ்ந்த இன்னொரு கிறிஸ்தவமதப் பிரசாரகராகிய 'சுல்ற்ஸ் (Shultz) பழைய ஏற்பாட்டைத் தமிழாக்கம் செய்து சீகன்பால்குவின் பணியை நிறைவு செய்தார்.

றோமன் திருச்சபையைச் சேர்ந்த Constantine Beschi என்பவர் 1710இல் மதுரையை வந்தடைந்தார். இவர் தமிழைக் கற்றுப் பெரும்புலமை பெற்று 'தேம்பாவணி' என்ற காவியத்தைப் பாடினார். 'சதுர் அகராதி' என்ற முன்னோடி அகராதியையும் தொகுத்த இவர் 'வீரமா முனிவர்' என்று கொண்டாடப்பட்டார்.

1740ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் வந்திறங்கிய பப்றீஷியுஸ் (Fabricius) என்ற இன்னொரு கிறிஸ்துவ மதபோதகர் வேதாகமத்தைக் தமிழில் மொழிபெயர்த்தார். இது மூலபாடங்களுக்கு மிக விசுவாசமானதெனக் கொண்டாடப்படுவது; லூதரன் பிரிவினரால் இன்றுவரை பயன்படுத்தப்படுவது.

இதனிடையே இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் பணியாற்றிக் கொண்டிருந்த மெதடிஸ்த மிஷன், சேர்ச் மிஷன், அமெரிக்க மிஷன், லண்டன் மிஷனரிச் சங்கம் ஆகியவை, எல்லாப் புரத்தஸ்தாந்துக் கிறிஸ்தவர்களும் பயன்படுத்தக் கூடியதொரு தமிழ் பைபிளின் தேவையிருப்பதை உணர்ந்தனர். சென்னை வேதாகமச் சங்கத்தின் யாழ்ப்பாணத் துணைச் சங்கம் இதை முன்னெடுத்தது. இது கொழும்பில் இயங்கிய வேதாகமச் சங்கத்துக்குக் கட்டுப்படாத, சுதந்திரமான அமைப்பாக விளங்கியது. தென்னிந்திய அறிஞர்களும் யாழ்ப்பாண அறிஞர்களும் சேர்ந்து ஒருசீர்மைத்தான தமிழ் பைபிளைத் தயாரிக்கவேண்டும் என்ற யோசனையை இத்துணைச் சங்கம் சென்னை வேதாகமச் சங்கத்துக்குத் தெரிவித்தது. யாழ்ப்பாண துணைச் சங்கத்தின் தலைவராக விளங்கிய பீற்றர்

பேர்சிவல் 1839இல் சென்னை போந்தார். தமிழ் பைபிளைத் தயாரிக்கும் பணியைத் தாம் ஏற்பதாகத் தெரிவித்தார்.

தென்னிந்திய மிஷனரிகள் இரண்டு காரணங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்துக்கு மொழிபெயர்ப்புப் பணியைத் தருவதில் தயக்கம் காட்டினர்.

1. தென்னிந்தியத் தமிழும் யாழ்ப்பாணத் தமிழும் வேறுபட்டவை.
2. யாழ்ப்பாணம் மிகச் சிறியதொரு குடாநாடு. இப்பாரிய பணியைச் செய்யக்கூடிய திறமைசாலிகள் கிடைப்பது அசாத்தியம்.

இவ்விரு ஆட்சேபணைகளுக்கும் துணைச் சங்கம் பதிலளித்தது. தென்னிந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் செவ்வியல் இலக்கியங்கள் ஒன்றே. கற்கும் நூல்களும் ஒன்றே. இரண்டாவதாக, யாழ்ப்பாணக் குடாநாடு சிறிய பிரதேசமாக இருந்தபோதும் சுதேசத் தமிழ்க்கல்வி மரபும் மேனாட்டு மிஷனரிகளின் புலமை மரபும் அங்கு உச்சத்திலிருப்பது காணலாம் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சென்னை வேதாகமச் சங்கம் பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியை யாழ்ப்பாணத் துணைச் சங்கம் மேற்கொள்ள அனுமதியளித்தது. ஆனால் மொழிபெயர்ப்பின் இறுதி வடிவம் தமக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் அதை ஏற்பதோ நிராகரிப்பதோ தம்மைப் பொறுத்தது எனவும் சென்னை நிபந்தனை விதித்தது.

இதை ஏற்று 1845இல் பீற்றர் பேர்சிவல் பைபிளைத் தமிழாக்கம் செய்யும் பணியைத் தொடங்கினார். அவருடைய உதவியாளராகச் செயற்பட்டவர் நல்லூர் கந்தப்பிள்ளை ஆறுமுகம் என்ற 23 வயது இளைஞர். இவர் பேர்சிவல் அதிபராக விளங்கிய - மெதடிஸ்த திருச்சபையால் நடத்தப்பட்ட - யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் ஏழாண்டுகள் ஆங்கிலம் கற்றவர். அவருடைய அபாரமான திறமையைக் கண்ட பேர்சிவல் 19 வயதில் அவரை அக்கல்லூரியிலேயே ஆசிரியராக நியமித்தார். ஆறுமுகம் உயர்தர வகுப்புக்களுக்குத் தமிழும் கீழ் வகுப்புக்களுக்கு ஆங்கிலமும் கற்பித்துக் கொண்டிருந்தார். கிறிஸ்தவ மதம் புகுந்தவர்களுக்கே உயர்கல்வி வாய்ப்பிருந்த அக்காலத்தில் ஆறுமுகம் மதம் மாறவில்லை என்பதும் பேர்சிவல் அவரை நிர்ப்பந்திக்கவில்லையென்பதும் மனங்கொள்ள வேண்டியவை.

யாழ்ப்பாண (வேதாகம) துணைச்சங்கம் 1845இல் தொடங்கிய மொழிபெயர்ப்புப் பணி 1850 ஆண்டு நிறைவுற்றது. மொழிபெயர்க்கப்பட்ட பிரதிகள் சென்னையிலிருந்து தஞ்சை, மதுரை, திருவனந்தபுரம் ஆகிய நகரங்களிலுள்ள மதிப்பீட்டுக் குழுக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பின் தராதரத்தை மதிப்பீடு செய்யுமாறு சென்னை வேதாகமச் சங்கம் அக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞராகிய மழவை மகாலிங்க ஐயரை அணுகியது. அவர் மகாவித்துவான்களாகிய திருத்தணிகை விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர் ஆகியோருடைய மாணவர். ஆங்கிலமுந் தேர்ந்தவர். ஐயர், மொழிபெயர்ப்பையும் அதில் பயின்ற தமிழ் நடையையும் பெரிதும் பாராட்டினார்.

அந்நாளில் சென்னை வேதாகமச் சங்கத்தின் வெளியீட்டுச் செயலாளராய் இருந்தவர் வின்ஸ்லோ அவர்கள்.[1] இவரே வின்ஸ்லோ அகராதி என்ற புகழ்பெற்ற அகராதியைத் தொகுத்தவர். ''யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு ஏனைய மொழிபெயர்ப்புக்களை விட மூலத்தோடு ஒத்துப்போகிறது'' என்று குறிப்பிட்டார் வின்ஸ்லோ. இது தவிர, 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' செய்த கோல்ட்வெல் அவர்களும் யாழ்ப்பாண மொழி பெயர்ப்பை வியந்து பாராட்டினார்.[2]

தென்னிந்திய மிஷனரிகள் யாழ்ப்பாண மொழிபெயர்ப்பை ஏற்பதில் தயக்கம் காட்டியமைக்கு இரு காரணங்களை முன் வைத்தனர்.

1. இம்மொழிபெயர்ப்பில் சம்ஸ்கிருதச் சொற்கள் விரவியுள்ளன.
2. இம்மொழிபெயர்ப்பு மூலத்திலிருந்து விலகியுள்ளது.

நாவலர் மொழிபெயர்ப்பில் சம்ஸ்கிருதச் சொற்கள் மிகுதியாய்ப் பயின்றுள்ளன என்ற வாதத்துக்கு, பதிலளிப்பதற்கு, சென்னைச் சங்கத்தின் மொழிபெயர்ப்பு வெளிவரும் வரை காத்திருந்த யாழ்ப்பாண மிஷனரிகள், மாதிரிக்கு மத்தேயுவின் நற்செய்தியை எடுத்து ஆய்வு செய்தனர்.

நாவலர் மொழிபெயர்ப்பிலுள்ள 14,965 சொற்களில் 2994 சம்ஸ்கிருதச் சொற்கள்; Fabricius மொழிபெயர்ப்பிலுள்ள 15,575 சொற்களில் 2856 சொற்களே சம்ஸ்கிருத மூலத்தன. இதனால் சம்ஸ்கிருதச் செல்வாக்கு என்ற வாதம் அடிபட்டுப் போயிற்று.[3]

ஆறுமுக நாவலர் தமிழ்ப் புலமையில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாது விளங்கியபோதும், பைபிளின் தமிழாக்கம் சவால் மிக்கதாய் இருந்தது என்பதற்கு சில உதாரணங்களைக் காட்டமுடியும். 'God' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் எது? 16ஆம் நூற்றாண்டில் பைபிளை மொழிபெயர்த்த போர்த்துக்கேயர் 'தம்பிரான்' என்ற சொல்லைப் பயன்படுத்தினர். Ernst Walther என்ற தரங்கப்பாடி மிஷனரியே 'பராபரன்' என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர். இவர் தமது சமகாலத்தவ ராகிய தாயுமானவரிடமிருந்து இத்தொடரைப் பெற்றிருக்கலாம் எனப் பேராயர் குலேந்திரன் ஊகிக்கிறார்.[4] பராபரன் என்ற சொல்லை பப்றீஷியுஸ் ஏற்றுக்கொண்டார். சீலன்பால்கு 'சர்வேசுரன்' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். கடவுளைக் குறிக்க ஹீப்றூ மூலத்தில் 'Elohim' என்ற சொல்லும் கிரேக்கத்தில் 'Theos' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டன. Theos லத்தீனில் 'Deus' என மருவிற்று. இது சம்ஸ்கிருதச் சொல்லாகிய தேவனுக்கு சமீபமானது. எனவே யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு கடவுளுக்கு 'தேவன்' என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தது. இதையே பின் (1871இல்) வந்த Bower மொழிபெயர்ப்பும் பின்பற்றியது. கடவுளைக் குறிக்க நாவலர் பயன்படுத்திய 'தேவன்' என்ற சொல்லையே பிறகு வந்த எல்லா மொழிபெயர்ப்பாளர்களும் பயன்படுத்தினர்.

ஹீப்றூவில், கடவுளுக்கு இன்னொரு சொல்லும் வழங்கியது. ஆதியில் 'Yahweh' என உச்சரிக்கப்பட்ட அச்சொல் காலக்கிரமத்தில் 'ஜெகோவா' என உச்சரிக்கப்படலாயிற்று.

பப்றீஷியுஸ் பயன்படுத்தியதொரு சொல் கர்த்தர். இது சமஸ்கிருத 'க்று' விலிருந்து பிறந்தது. (இதன் பொருள்: செய்பவர் அல்லது ஆக்குபவர்). 23ஆவது சங்கீதத்தை பப்றீஷியுஸ் 'கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்' என்று மொழிபெயர்க்க, நாவலரோ 'யெகோவா என் மேய்ப்பர்' என்று இறுக்கமாக மொழிபெயர்த்தார். பின் வந்த பெரும்பாலான ஆக்கங்கள் நாவலரையே பின்பற்றின.[5]

'Behold' என்ற வியப்பைப் பப்றீஷியுஸ் 'இதோ' என்று மொழிபெயர்க்க, எல்லா மொழிபெயர்ப்பாளர்களும் அவரையே பின்பற்றினர் (''இதோ லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற பராபரனுடைய ஆட்டுக்குட்டி!''). நாவலர் 'behold' என்ற சொல்லை 'சொற்பிறப்பு' அடிப்படையில் 'பாருங்கள்' என்று மொழிபெயர்த்தார் ('பாருங்கள் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டி!').

'Blessed' என்ற சொல்லை சீகன்பால்கு முதலிய எல்லா மொழிபெயர்ப்பாளர்களும் பாக்கியவான்கள் என மொழிபெயர்க்க நாவலர் மட்டும் 'வாழ்வுடையவர்கள்' என மொழிபெயர்த்தார்.

பைபிளை மொழிபெயர்க்கும்போது King James Versionஐப் பின்பற்றவேண்டுமென சென்னை வேதாகம சங்கத்தார் விதித்த நிபந்தனையை ஏற்றே யாழ்ப்பாணத்தார் செயற்பட்டனர். இப்பணிக்குப் பொறுப்பாயிருந்தவர் பீற்றர் பேர்சிவல்; அவருக்கு முக்கிய உதவியாளராய் இருந்தவர் க. ஆறுமுகம் (பின்னாளில் ஆறுமுகநாவலர்). யாழ்ப்பாண மொழிபெயர்ப்பாளர்களுக்கிருந்த அநுகூலம்: பப்றீஷியுஸ், இரேனியுஸ் ஆகிய இருவருடைய மொழிபெயர்ப்புக்களை முன்னே வைத்துக் கொண்டு வேலை செய்யக்கூடியதாயிருந்தது.

பப்றீஷியுஸ் 'பலிபீடம்' என்றதை நாவலர் 'வேதிகை' என்றார்.

பப்றீஷியுஸ் 'வெளிச்சம்' என்றதை நாவலர் 'ஒளி' என்றார்.

பப்றீஷியுஸ் (இரேனியுஸும்) 'பாக்கியவான்கள்' என்றதை நாவலர் 'வாழ்வுடையவர்கள்' என்றார்.

இனி விரிவாகவே, எழுந்தமானமாகத் தேர்ந்தெடுத்த சில பகுதிகளின் (நாவலர்) மொழிபெயர்ப்பை Authorized King James Version மூலத்தோடு ஒப்பிட்டு, மதிப்பீடு செய்வோம்.

சொல் மட்டம் (Word Level)

altar	- வேதிகை	purple	- தூமிரம்
ark	- பெட்டி	ploughshares	- கொழுக்கள்
anoint	- அபிஷெகஞ் செய்தல்	pruning hooks	- அரிவாள்கள்
breastplate	- மார்புப் பதக்கம்	rebuke	- கடிந்து கொள்ளல்
bushel	- மரக்கால்	redeemed	- மீட்ட

camp	- பாளயம்	spears	- ஈட்டிகள்
commandment	- கட்டளை	statutes	- பிரமாணங்கள்
candlestick	- தண்டு	testimonies	- கட்டளைப் பிரமாணங்கள்
firmament	- ஆகாய விரிவு	tabernacle	- ஆவாசம், கூடாரம்
glory	- மகிமை	vanity	- மாயம்
heifer	- கடாரி	void	- வெறுமை
heavens	- ஆகாய மண்டலங்கள்	vow	- சங்கற்பஞ் செய்து
mantle	- வஸ்திரம்	womb	- கருப்பம்
merciful	- இரக்கமுள்ள		

குறிப்பு : 'o – rim', 'thum–mim' 'e-phod' ஆகிய சொற்கள் முறையே 'ஊரிம்', 'தூமிம்', 'எபோத்து' என ஒலிபெயர்ப்பு (transliterate) செய்யப்பட்டுள்ளன.

சொற்றொடர் மட்டம் (Phrase Level)

the poor in spirit	- ஆவியில் எளிமையான
kingdom of heaven	- பரம இராச்சியம்
shall be comforted	- ஆறுதலை அடைவார்கள்
inherit the earth	- பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்
hunger and thirst after righteousness	- நீதியின் மேல் பசிதாகமுடையவர்கள்
peacemakers	- சமாதானத்தை நடப்பிக்கிறர்கள்
shall be filled	- திருத்தி அடைவார்கள்
perfect and upright (man)	- சர்க்குணனும் சன்மார்க்கனுமாகிய
handy work	- கரங்களின் கிரியைகள்
uttereth speech	- வாக்குகளைப் பொழிகின்றது
as a bridegroom coming out of the chamber	- மணவறையினின்று புறப்படுகிற மணவாளனைப் போல
making wise the simple	- பேதைக்கு ஞானத்தைத் தரும்
if the salt have lose his savour	- உப்பானது சாரமற்றுப் போனால்
trumpets of rams' horns	- ஆட்டுக் கடாக் கொம்பாலாகிய எக்களாங்கள்
gold and blue and purple and scarlet	- பொன், நீலம், தூமிரம், சிவப்பு

வாக்கிய மட்டம் (Sentence Level)

Psalms 19 : 1 – 8

The heavens declare the glory of God; and the firmament sheweth his handy work.

Day unto day uttereth speech, and night unto night sheweth knowledge

There is no speech nor language, where their voice is not heard

Their line is gone out through all the earth, and their words to the end of the world. In them hath he set a tabernacle for the sun.

Which is as a bridegroom coming out of his chamber, and rejoiceth as a strong man to run a race.

His going forth is from the end of the heaven, and his circuit unto the ends of it: and there is nothing hid from the heat thereof.

The law of the LORD is perfect, converting the soul: the testimony of the LORD is sure, making wise the simple.

The statutes of the LORD are right rejoicing heart: the commandment of the LORD is pure, enlightening the eyes.

சங்கீதம் 19 : 1 - 8

''ஆகாய மண்டலங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன. ஆகாய விரிவு அவர் கரங்களின் கிரியைகளைத் தெரிவிக்கின்றது - பகலுக்குப் பகலும் வாக்கு களைப் பொழிகின்றது, இரவுக்கு இரவும் ஞானத்தை விளக்குகின்றது - வாக்குமில்லை, பாஷையுமில்லை, அவைகளின் சத்தங்கேட்கப்படுவதுமில்லை - பூமியெங்கும் அவை களின் நூலும், பூமண்டலத்தின் எல்லைவரைக்கும் அவைகளின் வாக்குகளுஞ் செல்லு கின்றன. அவைகளின் மத்தியில் சூரியனுக்கு ஒரு கூடாரம்ஸ்தாபித்தார் - அவன் மணவறையினின்று புறப்படுகிற மணவாளனைப் போலிருக்கிறான், பலவானைப்போலப் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறான் - அவன் ஆகாயத்தின் ஒரு முனையினின்று புறப்பட்டு, அதின் மறுமுனை வரைக்கும் ஓடுகிறான்: அவன் உ';டணத்துக்கு மறைவான தொன்றுமில்லை - யெகோவா அருளிய வேதம் பரிபூரணம், ஆத்துமத்தைச் சீர்ப்படுத்தும் யெகோவாவின் உபதேசம் நிச்சயம், பேதைக்கு ஞானத்தைத்தரும் - யெகோவாவின் பிரமாணங்கள் செவ்வையுள்ளவைகள், அவைகள் இருதயத்தைச் சந்தோ'ப்படுத்தும்: யெகோவாவின் கட்டளை தூய்மை, கண்களைத் தெளிவிக்கும்.''

பைபிளில் சங்கீதம் என்ற பகுதி சிறந்த கவிதை எனக் கொண்டாடப்படுவது. 19ஆவது சங்கீதத்தின் மொழிபெயர்ப்பில் 'handy work' என்பது 'கரங்களின் கிரியைகள்' எனவும் 'uttereth speech' என்பது 'வாக்குகளைப் பொழிகின்றது' எனவும் 'sheweth knowledge' என்பது 'ஞானத்தை விளக்குகின்றது' எனவும் 'tabernacle for the sun' என்பது 'சூரியனுக்கு ஒரு

கூடாரம்' எனவும், 'as a bridegroom coming out of his chamber' என்பது 'மணவறையினின்று புறப்படுகிற மணவாளனைப்போல' எனவும்'Perfect' என்பது 'பரிபூரணம்' எனவும், 'testimony' என்பது 'உபதேசம்' எனவும் 'making wise the simple' என்பது 'பேதைக்கு ஞானத்தைத் தரும்' எனவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

Ecclesiastes Ch. III : 1 – 8

To every thing there is a season, and a time to every purpose under the heaven:

A time to be born, and a time to die; a time to plant, and a time to pluck up that which is planted;

A time to kill, and a time to heal; a time to break down, and a time to build up;

A time to weep, and a time to laugh; a time to mourn, and a time to dance;

A time to cast away stones, and a time to gather stones together; a time to embrace, and a time to refrain from embracing;

A time to get, and a time to lose; a time to keep, and a time to cast away;

A time to rend, and a time to sew; a time to keep silence, and a time to speak;

A time to love, and a time to hate; a

time of war, and a time of peace.

பிரசங்கி அதி. 3 : 1 - 8

''எவ்வெவ்வற்றிற்குஞ் சமயமுண்டு, வானத்தின் கீழ் எந்த அபிப்பிராயத்திற்குங் காலமுண்டு: சனிக்க ஒரு காலம், மரிக்க ஒரு காலம், நட ஒரு காலம், நட்டத்தைப் பிடுங்க ஒரு காலம்; - கொலைசெய்ய ஒரு காலம், சொஸ்தஞ்செய்ய ஒரு காலம்; இடிக்க ஒரு காலம், கட்ட ஒருகாலம்; - அழ ஒரு காலம், நகைக்க ஒருகாலம்; புலம்ப ஒரு காலம், நடனஞ் செய்ய ஒரு காலம்; - கற்களை எறிய ஒரு காலம், கற்களைக் குவிக்க ஒரு காலம்; தழுவ ஒரு காலம், தழுவுதலை விட ஒரு காலம்; - தேட ஒரு காலம், இழக்க ஒரு காலம்; - பேண ஒரு காலம், தள்ள ஒரு காலம்; - கிழிக்க ஒரு காலம், தைக்க ஒரு காலம்; மவுனமாயிருக்க ஒரு காலம், பேச ஒரு காலம்; - நேசிக்க ஒரு காலம்; யுத்தஞ் செய்ய ஒரு காலம், சமாதானப்பட ஒரு காலம்.''

பைபிளின் இந்தப் பகுதி சிறுசிறு தொடர்களால் ஆனது. ஒட்டுமொத்தமாக, கவிதை போல் இருப்பது. நாவலர் இதை மூலத்தின் நடையையொத்த அழகிய நடையில் தமிழாக்கியிருக்கிறார். 'நட - நட்டதைப் பிடுங்க', 'கொலை செய்ய - சொஸ்தஞ்செய்ய', 'இடிக்க - கட்ட', 'அழ - நகைக்க', 'புலம்ப - நடனஞ் செய்ய', 'தேட - இழக்க', 'பேண - தள்ள', 'கிழிக்க - தைக்க', 'நேசிக்க - பகைக்க' என வரும் முரண்கள் மொழிபெயர்ப்புக்கு அழகு சேர்க்கின்றன.

Isaiah Ch. II : 4 – 5

And he shall judge among the nations and shall rebuke many people: and they shall beat their swords into plowshares, and their spears into pruning hooks: nation shall not lift up sword against nation neither shall they learn war any more.

O house of Jacob, come ye, and let us walk in the light of the LORD.

ஏசாயா அதி. 2 : 4 - 5

"அவர் புறத்தேசத்தாரை நியாயம் விசாரிப்பார், அநேக சனங்களைக் கடிந்துகொள்வார்: அதினால் அவர்கள் தங்கள் கட்கங்களைக் கொழுக்களும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களுமாக்குவார்கள்: ஒரு தேசத்தார் மறுதேசத்தாருக்கு விரோதமாகக் கட்கத்தை ஓங்கார்கள், இனி அவர்கள் யுத்தப் பயிற்சி செய்யார்கள்.

யாக்கோபின் வமிசத்தாரே, யெகோவாவின் ஒளியில் நடப்போம், வாருங்கள்."

'கட்கத்தை ஓங்கார்கள்' என்ற தொடர்பற்றி ஒரு குறிப்பு 'sword' என்பது 'கட்கம்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பைபிளின் பல அதிகாரங்களிலும் நாவலர் இச் சொல்லையே பயன்படுத்துகிறார். பேர்சிவல் வெளியிட்ட தமிழ்-ஆங்கில அகராதியிலும் 'கட்கம்' என்பதற்கு 'A sword' என்றே பொருள் தரப்பட்டுள்ளது. சங்கநூல், திருக்குறள் முதலியவற்றிலெல்லாம் 'வாள்' என்ற தமிழ்ச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கவும் நாவலர் ஏன் கட்கத்தைத் தேர்ந்தெடுத்தார் என்பது புரியவில்லை.

Matthew Ch. V : 3 – 15

Blessed are the poor in spirit: for theirs is the kingdom of heaven.

Blessed are they that mourn: for they shall be comforted.

Blessed are the meek: for they shall inherit the earth.

Blessed are they which do hunger and thirst after righteousness: for they shall see God

Blessed are the merciful: for they shall obtain mercy.

Blessed are the pure in heart: for they shall see God

Blessed are the peacemakers: for they shall be called the children of God.

Blessed are they which are persecuted for righteousness' sake: for theirs is the kingdom of heaven.

Ye are the salt of the earth: but if the salt have lost his savour, where – with shall it be salted? It is thence –forth good for nothing, but to be cast out, and to be trodden under foot of men.

Ye are the light of the world. A city that is set on an hill cannot be hid.

Neither do men light a candle, and put it under a bushel, but on a candle- stick; and it giveth light unto all that are in the house.

மத்தேயு அதி. 5 : 3 - 15

''ஆவியில் எளிமையுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்: பரம இராச்சியம் அவர்களுக்கே உரியது.

துக்கப்படுகிறவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் ஆறுதலை அடைவார்கள்.

தாழ்ந்த சிந்தையுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் திருத்தி அடைவார்கள்.

இரக்கமுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் இரக்கத்தைப் பெறுவார்கள்.

சுத்தமான இருதயமுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

சமாதானத்தை நடப்பிக்கிறவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் தேவனுடைய புத்திர ரெனப்படுவார்கள்.

நீதியினிமித்தந் துன்பப்படுகிறவர்கள் வாழ்வுடையவர்கள்: பரம இராச்சியம் அவர்களுக்கே உரியது.

என்னிமித்தம் மனுஷர் உங்களை நிந்தித்து, துன்பப்படுத்தி, சகலவித தீமொழிகளையும் உங்கள் மேல் பொய்யாய்ச் சொன்னார்களானால், நீங்கள் வாழ்வுடையவர்கள்.

சந்தோஷப்பட்டு மிகவுங்களிகூருங்கள்: பரமண்டலத்தில் உங்களுக்கு மிகுந்த பலன் கிடைக்கும்: பூருவகாலத்திலுள்ள தீர்க்கதரிசிகளையும் இவ்விதமாய்த் துன்பப் படுத்தினார்கள்;.

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்: உப்பானது சாரமற்றுப்போனால், திரும்ப யாதினால் சாரமாக்கப்படும். இனி அது வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப் படுவதற்குமேயன்றி வேறொன்றுக்குமுதவாது.

நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள். மலையின்மேலுள்ள நகரம் மறைந்திருக்க மாட்டாது - மனுஷர் விளக்கைக் கொளுத்தி, மரக்காலால் மூடிவையாமல் ஒரு தண்டின் மேல் வைப்பார்கள். அதினால் அது வீட்டிலுள்ள யாவருக்கும் ஒளிகொடுக்கும்.''

ஏசு பெருமானின் மலைப்பிரசங்கம் அல்லது மலைப்பொழிவு விவிலியத்திலேயே மிகவும் புகழப்பெற்ற பகுதி. எல்லாச் சமயத்தாராலும் போற்றப்படுவது. ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி 'Blessed' என்பது 'வாழ்வுடையவர்கள்' என நாவலர் செய்த மொழிபெயர்ப்பே பின் பலராலும் கைக்கொள்ளப்பட்டது. 'inherit the earth' என்ற தொடரை 'பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்' என்றும் 'peacemakers' என்பதை 'சமாதானத்தை நடப்பிக்கிறவர்கள்' எனவும், 'Ye are the salt of the earth' என்பதை 'நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்' என்றும் 'lost his savour' என்பதை 'சாரமற்றுப் போனால்;' எனவும் 'bushel'ஐ 'மரக்கால்' எனவும் 'candlestick'ஐ 'தண்டு' எனவும் நாவலர் மொழிபெயர்த்தார்.

Ephesians Ch. VI : 1 - 4

CHILDREN, obey your parents in the Lord: for this is right.

Honour thy father and mother; (which is the first commandment with promise;)

That it may be well with thee, and thou mayest live long on the earth.

And, ye fathers, provoke not your children to wrath: but bring them up in the nurture and admonition of the Lord.

எபேசியர் அதி. 6 : 1 - 4

''பிள்ளைகளே, உங்களைப் பெற்றவர்களுக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்: இதுவே தகுதி.

'உனக்கு நன்மை உண்டாவதற்கும், பூமியில் உன் ஆயுள் நீடித்திருப்பதற்கும், - உன் பிதாவையும் மாதாவையுங் கனம் பண்ணுவாயாக,' என்பதே வாக்குத ;தத்தமுள்ள முதலாங்கட்டளை.

பிதாக்களே, நீங்களும் உங்களுங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற கண்டிப்போடும், போதகத்தோடும் அவர்களை வளர்க்கக் கடவீர்கள்.''

'Commandment' கட்டளை எனவும், 'nurture and admonition' 'கண்டிப்போடும் போதகத் தோடும்' எனவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

நாவலர் சரித்திரம் எழுதிய கனகரத்தின உபாத்தியாயர், த.கைலாசபிள்ளை, 'நாவலர் பெருமான்' என்ற நூலின் ஆசிரியர் சுத்தானந்த பாரதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலியோர் நாவலர் பைபிளை மொழிபெயர்த்ததையும், மொழிபெயர்ப்புப் பிரதியோடு பேர்சிவல் அவரை அழைத்துக்கொண்டு தமிழ்நாடு போந்ததையும் மழவை மகாலிங்கையர் முதலிய வித்துவான்களின் அங்கீகாரம் கிடைத்ததையும் எழுதினார்களே அன்றி தமிழ் மொழிபெயர்ப்பை மூலத்தோடு ஒப்புநோக்கி ஆராய்ந்தார்களல்லர். 'தமிழ் உரை நடை வரலாறு' எழுதிய வி. செல்வநாயகம் நாவலர் மொழிபெயர்ப்பு என்று மயங்கி 'பவர்' மொழிபெயர்ப்பை மேற்கோள் காட்டியதை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.[6]

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயராயிருந்த அதி. வண. சபாபதி குலேந்திரன் அவர்களே முதன்முதலில் நாவலர் மொழிபெயர்ப்பை Bower மொழிபெயர்ப்போடு ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுதியவர். பேராயர் சபாபதி குலேந்திரன் ஒரு முக்கிய கேள்வியை முன்வைக்கிறார்: ''யாழ்ப்பாண மொழிபெயர்ப்பில் நாவலரின் பங்கு என்ன?'' என்பதே அது. பீற்றர் பேர்சிவல் பிரதம மொழிபெர்ப்பாளர் என்ற பதவியை வகித்தார். நாவலர் அவர் உதவி மொழிபெயர்ப்பாளர். வேற்றுமொழிக்காரர் ஒருவர் எப்பொழுதும் இலக்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவரை உதவியாளராக வைத்திருப்பார். மொழிபெயர்ப்பின் செம்மைக்கு அவரில் தங்கியிருப்பார். வங்காள மொழிபெயர்ப்பைச் செய்த வில்லியம் கேறி ஒரு வங்காளி உதவியாளரை வைத்திருந்தார். Larsenக்கு

ராஜகோபால் உதவியாளர். இவை புரிந்துகொள்ளக் கூடியவை. ஆனால் ஐந்து ஆண்டுகள் கூட இருந்து தமக்காக உழைத்த - தம்மோடு கூட சென்னை போந்து, யாழ்ப்பாண மொழிபெயர்ப்பின் சிறப்பை நாட்டிய - நாவலரை 'எனக்கு உதவிய பண்டிதர்' என்று குறிப்பிட்டுள்ளாரே தவிர, அவர் பெயரைப் பேர்சிவல் குறிப்பிடவில்லை. நாவலர் மொழிபெயர்த்த பைபிளின் முகப்புப் பக்கத்தில் (Title page) கூட அவர் பெயரில்லை.

யாழ்ப்பாணத்தில் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் அக்காலத்தில் புலமை மிக்காராய்த் திகழ்ந்த ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை, வைமன் கதிரைவேற்பிள்ளை, முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை ஆகியோரைப் பட்டியலிடும் பேராயர் குலேந்திரன், இம்மொழிபெயர்ப்புப் பணிக்கு இப்பெரியோருடைய உசாத்துணை நிச்சயம் கிடைத்திருக்கும் என்கிறார்.[7] ஆனால் இவர்கள் பெயர்கள் கூட யாழ்ப்பாண பைபிளில் இல்லை. இந்தப் புறக்கணிப்புக்குக் காரணமென்ன? அந்நாளைய மேனாட்டுப் புலமையாளர்கள் கீழைத்தேயப் புலமையாளர்களுடைய உழைப்பைப் பயன்படுத்துவதில் குறியாயிருந்த அளவுக்கு அவர்கள் பெயர்களைக் குறிப்பிடல்தகும் எனக் கருதவில்லை என்கிறார் பேராயர் குலேந்திரன். அவர்களுடைய அறிக்கைகளில் எல்லாம் 'சுதேச பண்டிதர்களும் உதவினர்' என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பைத் தமிழ் நாட்டின் சில பிரிவினர் ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டியமையால், சென்னை வேதாகமச் சங்கம் இன்னொரு மொழிபெயர்ப்பில் ஈடுபட முனைந்து, அதற்கென ஆறுபேர் கொண்ட குழுவை பவர் (Bower) தலைமையில் நியமித்தது. இந்தக் குழுவில் மைறன் வின்ஸ்லோவும் ஸ்போல்டிங்கும், கில்னரும் உறுப்பினராய் இருந்தனர். இவர்கள் மூவரும் யாழ்ப்பாணத்தில் பணியாற்றியவர்கள்.

''பவர் மொழிபெயர்ப்பு ஆங்கிலத் தமிழாகக் காணப்படுகிறது. சுதேசிகள் இதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்'' என இவர்கள் கருதினர். இந்த விவகாரம் வண்டன் வேதாகமச் சங்கம்வரை போனது. முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக, யாழ்ப்பாணத்தில் இருந்து ஸ்போல்டிங்கும் கில்னரும் சென்னை போய் பவருடனும் கோல்ட்வெல் உடனும் பேச்சு வார்த்தை நடத்தினர். ஈற்றில் இணக்கம் காணப்பட்டது. 1871இல் வெளியிடப்பட்ட இம்மொழிபெயர்ப்பு ஐக்கிய மொழிபெயர்ப்பு (Union Version) என அழைக்கப்படுகிறது.

முடிவுரை

இவ்வாய்வுக்காக, அக்காலத்தில் புரத்தஸ்தாந்த கிறிஸ்தவர்களிடையே பெரு வழக்காயிருந்த Authorized King James Version ஆங்கில பைபிளின் சில பகுதிகளை அவற்றின் நாவலர் மொழிபெயர்ப்போடு ஒப்பு நோக்கியுள்ளேன். இருமொழி வல்லுநர்கள் நாவலர் மொழி பெயர்ப்பை முந்திய தமிழ்மொழி பெயர்ப்புக்களோடு ஒப்புநோக்கி தமது சொந்த மதிப்பீடுகளைச் செய்ய இவ்வாய்வு உதவும் என நம்புகிறேன்.

இவ்வாய்வில் ஈடுபட்டிருக்குங்கால் பேராயர் கலாநிதி சு. ஜெபநேசனுடன் பல்கால் கலந்துரையாடவும் வாய்த்தது. அதற்கும், கிடைத்தற்கரிய நாவலர் மொழிபெயர்ப்பு நூற்பிரதியை என் பார்வைக்குத் தந்துதவியமைக்கும் பேராயருக்கு மிக்க நன்றியுடையேன்.

பின்னிணைப்புக்கள்

Genesis Ch. I : 2 – 14

In the beginning God created the heaven and the earth.

And the earth was without form, and void; and darkness was upon the face of the deep. And the Spirit of God moved upon the – face of the waters.

And God said, Let there be lights in the firmament of the heaven to divide the day from the night; and let them be for signs, and for seasons, and for days, and years.

ஆதியாகமம் அதி. 1 : 2 - 14

''ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருஷ்டித்தார்.

பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. ஆழமான சலமுகத்தின்மேல் இருள் இருந்தது. தேவ ஆவி சலமுகத்தின்மேல் உலாவிக்கொண்டிருந்தது.

பகலுக்கும் இரவுக்கும் வேற்றுமை உண்டாக்குகிறதற்கு, வானவிரிவிலே சுடர்கள் உண்டாக்கக் கடவனவென்றும் அவையே அடையாளங்களையும், பருவ காலங்களையும், தினங்களையும், வருஷங்களையுங் குறிக்கும் பொருட்டாக - பூமியின் மேல் பிரகாசிக்கும்படிக்கு வானவிரிவிலே சுடர்களாகக் கடவனவென்றும், தேவன் சொன்னார்.''

Genesis Ch. 31 – 5, 8 &13

And said unto them, I see your father's countenance, that it is not toward me as before; but the God of my father hath been with me.

If he said thus. The speckled shall be thy wages; then all the cattle bare speckled: and if he said thus. The ringstraked shall be they hire, then bare all the cattle ringstraked.

I am the God of Beth – el, where thou anointedst a pillar and where thou vowedst a vow unto me; now arise, get thee out from this land and return unto the land of thy kindred.

ஆதியாகமம் அதி. 31 : 5, 8, 13

''உங்கள் பிதாவின் முகம் என்மேல் முன்னிருந்ததுபோல இருக்கவில்லையென்று எனக்குத் தோன்றுகின்றது.

அவன், புள்ளியுள்ளவைகள் உனக்குச் சம்பளமென்று சொன்னால், ஆடுகளெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளை ஈனும், பொதுநிறமுள்ளவைகள் உனக்குச் சம்பளமென்று சொன்னால் ஆடுகளெல்லாம் பொதுநிறமுள்ள குட்டிகளை ஈனும்.

நீ தூணுக்கு அபிஷெகஞ் செய்து, எனக்கொரு சங்கற்பத்தைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே, இப்பொழுது நீ எழுந்து இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் சுற்றத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப் போவென்று சொன்னாரென்றான்.''

Void வெறுமை என்றும் face of the waters - சலமுகம் என்றும் firmament வான விரிப்பு என்றும் மொழிபெயர்க்கப்பட்டன. Speckled புள்ளியுள்ளவர்கள் என்றும் ring straked பொது நிறமுள்ளவைகள் என்றும் anointedst அபிஷேகம் செய்து என்றும் எழற சங்கற்பஞ் செய்து என்று மொழிபெயர்க்கப்பட்டன.

Exodus Ch.28 : 5 – 6

And they shall take gold, and blue, and purple, and scarlet, and fine linen.

And they shall make the ē-phŏd of gold, of blue, and of purple, of scarlet, and fine twined linen, with cunning work.

யாத்திராகமம் அதி. 28 - 5 - 6

"அவர்கள் பொன்னையும், நீலம், தூமிரம், சிவப்பென்னும் நிறங்களையுடைய மெல்லிய பஞ்சினூலையுமெடுத்து - பொன்னினாலும், நீலம், தூமிரம் சிவப்பென்னும் நிறங்களுள்ள திரித்த மெல்லிய பஞ்சினூலினாலும், விசித்திர வேலையாக ஒரு எபோத்தைச் செய்யக் கடவர்கள்.

நியாயத் தீர்ப்பின் மார்புப் பதக்கத்திலே, ஊரிமையும், தூமீமையு மிடுவாயாக. ஆரோன் யெகோவாவின் சந்நிதானத்தில் பிரவேசிக்கும்பொழுது, அவைகள் அவனுடைய நெஞ் சின் மேலிருக்க வேண்டும். ஆரோன் தன்னெஞ்சின்மேலே இஸ்ரவேல் சந்ததியாருடைய நியாயத் தீர்ப்பை யொகோவாவின் சந்நிதானத்தில் நித்தமுந் தரித்துக் கொள்ள வேண்டும்."

purple - தூமிரம் எனவும் scarlet - சிவப்பு எனவும் மொழி பெயர்க்கப்பட்டன.

Cunning என்ற சொல்லுக்கு இந்நாளில் சூழ்ச்சி செய்யும் அல்லது தந்திர இயல்புள்ள என்று பொருள். பழைய மற்றும் இடைக்கால ஆங்கிலத்தில் இச்சொல்லுக்கு 'நுட்பமிக்க' என்ற பொருள் வழங்கியது. நாவலர் 'விசித்திர வேலை' என்று மொழிபெயர்த்தார்.

Deuteronomy Ch. 21 – 1 to 8

If one be found slain in the land which the LORD thy God giveth thee to possess it, lying in the field, and it be not known who hath slain him:

Then thy elders and thy judges shall come forth, and they shall measure unto the cities which are round about him that is slain:

And it shall be, that city which is next unto the slain man, even the elders of that city shall take an heifer, which hath not been wrought with, and which hath not drawn in the yoke;

And the elders of that city shall bring down the heifer unto a rough valley, which is neither eared nor sown, and shall strike off the heifer's neck there in the valley:

And the priests the sons of Levi shall come near; for them the LORD thy God hath chosen to minister unto him, and to bless in the name of the LORD; and by their word shall every controversy and every stroke be tried:

And all the elders of that city, that are next unto the slain man, shall wash their hands over the heifer that is beheaded in the valley:

And they shall answer and say, Our hands have not shed this blood, neither have our eyes seen it.

Be merciful, o LORD, unto thy people Israel, whom thou hast redeemed, and lay not innocent blood unto the people of Israel's charge.

உபாகமம் அதி. 21 : 1 - 8

"உன் தேவனாகிய யெகோவா உனக்குச் சுதந்திரமாக அளிக்குந் தேசத்தில், கொலை செய்யப்பட்டுக் கிடக்கிற ஒருவனை வெளியே கண்டு, அவனைக் கொன்றவ னின்னா னென்று தெரியாதிருந்தால் - உன் முதியோரும் நியாயாதிபதிகளும் புறப்பட்டுப்போய், கொல்லப்பட்டவனைச் சுற்றியிருக்கிற பட்டணங்கள் மட்டும் அளப்பார்களாக - அவனுக் கதிசமீபமான பட்டணத்து முதியோர் வேலையிற் பண்படாததும், நுகத்திற் பூட்டப் படாததுமாகிய ஒரு கடாரியைப் பிடித்து - உழுது விதையாத கரம்பான தாழ்ந்த பூமியிலே கொண்டுபோய், அந்தத் தாழ்ந்த பூமியிலே அதின் தலையை வெட்டக்கடவர்கள். கொலை செய்யப்பட்டவனுக்குச் சமீபமான பட்டணத்து முதியோரெல்லாரும், தாழ்ந்த பூமியிலே தலை வெட்டப்பட்ட கடாரியின் மேலே தங்கள் கைகளைக் கழுவி - யெகோவாவே, எங்கள் கைகள் அந்த இரத்தத்தைச் சிந்தவில்லை, அதை எங்கள் கண்கள் கண்டதுமில்லை - உம்முடைய சனங்களாகிய இஸ்ரவேலரில் கடாட்சம் வைத்து, நீர் மீட்ட உம்முடைய சனங்களாகிய இஸ்ரவேலர் மேல் கொலையுண்டவனுடைய இரத்தப் பழியைச் சுமத்தாதிருமென்று சொல்வார்களாக."

heifer - கடாரி எனப்படும். merciful - 'கடாட்சம் வைத்து' எனப்படும். redeemed - 'மீட்ட' எனவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

"Lay not innocent blood unto the people of Israel's charge" என்ற வசனத்தை "இஸ்ரவேல் மேல் கொலையுண்டவனுடைய இரத்தப் பழியைச் சுமத்தாதிரும்" என்று மொழிபெயர்த்தார்.

Joshua Ch. VI – 12 & 21

And Joshua rose early in the morning, and the priests took up the ark of the LORD

And they utterly destroyed all that was in the city, both man and woman, young and old and ox, and sheep, and ass, with the edge of the sword.

யோசுவா அதி. 6 - 12 ரூ 21

"யோசுவா அதிகாலையில் எழுந்திருந்தான், ஆசாரியர்கள் யெகோவாவின் பெட்டியை எடுத்துக் கொண்டு போனார்கள்.

அதிலிருந்த வாலிபமும் விருத்தாபியமுமான ஸ்திரிபுருஷரையும், ஆடு மாடு கழுதைக ளனைத்தையும் கட்கத்தின் வாயினாலே சங்காரம் பண்ணினார்கள்."

Job Ch. I : 1, 20 – 21

There was a man in the land of Uz, whose name was Job; and that man was perfect and upright, and one that feared God, and eschewed evil.

then Job arose, and rent his mantle, and shaved his head, and fell down upon the ground, and worshipped, and said, Naked came I out of my mother's womb, and naked shall I return thither: the LORD gave and the LORD hath taken away; blessed be the name of the LORD.

யோபு அதி. 1 : 1, 20 - 21

"ஊத்சுதேசத்தில் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து தீமையை விலக்குகிறவனுமாகிய யோபென்னும் பெயர்கொண்ட ஒரு மனுஷனிருந்தான்.

அப்பொழுது யோபு எழுந்து, தன் வஸ்திரத்தைக் கிழித்து, தலையைச் சிரைப்பித்து, தரையில் விழுந்து, நமஸ்கரித்து - நான் என்மாதாவின் கருப்பத்தினின்று நிருவாணியாய் வந்தேன், நிருவாணியாய் அவ்விடத்திற்குத் திரும்பிப் போவேன்: யொகோவா தந்தார், யெகோவா எடுத்தார்."

perfect and upright - என்ற தொடர் சற்குணனும் சன்மார்க்கனும் எனவும், mantle - வஸ்திரம் எனவும், shaved his head - 'தலையைச் சிரைப்பித்து' எனவும், out of my mother's womb - மாதாவின் கருப்பத்தினின்று எனவும் மொழிபெயர்க்கபட்டுள்ளன.

Kings 2: 28

Then tidings came to Jō-ăb: for Jō-ăb had turned after Ăd-ō-ni-jăh, though he turned not after Ăb-să-jom. And Jō-ăb fled unto the tabernacle of the LORD, and caught hold on the horns of the altar.

இராசாக்கள் 2:28

"யோவாப் அப்ஸலோம் பட்சம் சாயதிருந்தாலும், அதொனியா பட்சம் சாய்ந்து நின்றபடியால், நடந்த சமாசாரங்கள் தெரிவிக்கப்பட்ட மாத்திரத்தில் யெகோவாவின் ஆவாசத்துக்குள்ளே ஓடிப்போய், வேதிகையின் கொம்புகளைப் பிடித்தான்."

அடிக்குறிப்புக்கள்

1. Kulendran, Rt.Rev.Sabapathy, The Tentative Version of the Bible or 'The Navalar Version', p 239, TAMIL CULTURE, Vol.vii No. 3, July 1958.
2. ibid, p240
3. ibid, p 248
4. குலேந்திரன், அதி. வண. சபாபதி, 'தமிழ் வேதாகமத்தின் வரலாறு', ப. 63, இந்திய வேதாகம சங்க வெளியீடு, (1967).
5. இவ்வுதாரணங்கள் பேராயர் ச. குலேந்திரன் பட்டியலிட்டவை.
6. ஜெபநேசன், பேராயர், கலாநிதி எஸ். 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்திய யாழ்ப்பாண கல்வி கலாசார ஊட்டம்: அமெரிக்க மிஷனின் பங்களிப்பு', 'பழையதும் புதியதும்' பக். 1 - 20, American Ceylon Mission Press, Sept. 2004.
7. Kulendran, Rt. Rev. Sabapathy, The Tentative Version of the Bible or 'The Navalar Version', p. 236, TAMIL CULTURE, Vol.vii No. 3, July, 1958.







கர்த்தரும் இரட்சகருமாகிய

யேசுக்கிறிஸ்து

அருளிய

புதிய உடன்படிக்கை.

இஃத

வெஸ்லெரத்துமுதலியசருவதேசவேதசங்கத்தாரின்

உத்தரவின்படி.

கிரேக்கென்னும்மூலபாஷையிலிருந்துமொழிபெயர்த்த முந்தினமொழி

பெயர்ப்புகளைக்கொண்டு பரிசோதித்தப்பட்டிருக்கின்றது.

சென்னகரம்:

அமெரிகன் மிஷன் அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது

கூஅஎஅடுஅஅ.



NEW TESTAMENT

OF OUR

LORD AND SAVIOUR

JESUS CHRIST,

TRANSLATED OUT OF

THE ORIGINAL GREEK:

AND WITH

THE FORMER TRANSLATIONS DILIGENTLY COMPARED AND REVISED,

UNDER THE AUSPICES OF

The British and Foreign Bible Society.

MADRAS:

PRINTED FOR THE MADRAS AUXILIARY BIBLE SOCIETY,

AT THE AMERICAN MISSION PRESS.

MDCCCL.



THE

HOLY BIBLE

CONTAINING

THE OLD AND NEW TESTAMENTS

Translated out of the original tongues
and with the former translations
diligently compared and revised

BY HIS MAJESTY'S SPECIAL COMMAND

Appointed to be read in Churches

Authorized
King James Version

Printed by Authority

UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE
(LUTTERWORTH PRESS)
4 BOUVERIE STREET
LONDON, E.C.4

Iona Clear-Type Text

கு இப்படிச் சொல்லிமுடிந்தபின்பு, சனங்களே நடத்தும்படி சேனைபதிகள் நியமிக்கப்படக்கடவர்கள்.

ஐ நீ ஒரு நகரத்துடன் யுத்தஞ்செய்யும்படி நேரிடுகையில், அவர்களுக்குச் சமாதானத்தைப் பிரகடனஞ்செய்யக்கடவாய்.—அவர்கள் உனக்குச் சமாதானஉத்தரங்கொடுத்து வாசலைத் திறந்தால், அதிலுள்ள சனங்களெல்லாரும் உனக்குத்திறைதந்து உனக்கு ஊழியஞ்செய்யக்கடவர்கள்.—ஐஉ அவர்கள்உன்னுடனேசமாதானப்படாமல்,உன்னுடனே யுத்தம் பண்ணுவார்களேயாகில், நீ அதைமுற்றுகைபோட்டு,-உன்தேவனாகிய யெகோவா அதை உன்கையிலொப்பித்த பொழுது, அதிலுள்ள ஸ்திரீகளையும், குழந்தைகளையும், மிருகங்களையும் விட்டுப் புருஷர் யாவரையுங் ஐசகட்கத்தின்வாயினால் வெட்டி,—நகரத்திலுள்ள எல்லாவற்றையுங் கொள்ளையிட்டு, உன் தேவனாகிய யெகோவா உனக்கு ஒப்பித்தஉன்சத்துருக்களிடத்திற் கொள்ளையிட்டபொருளை அனுபவிப்பாயாக.—இந்தச்சாதியாரின் நகரங்களுக்குவேறாய் உனக்குஅதிதூரத்திலிருக்கும் சமஸ்த நகரங்களுக்கும் இப்படியேசெய்யவேண்டும்.

ஐசஉன் தேவனாகிய யெகோவா உனக்குச் சுதந்தரமாக அளிக்கும் நகரங்களிலுள்ள எத்தியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னுமிந்தச்சனங்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்கிற அருவருப்பான யாதொன்றையும் நீங்களுஞ் செய்யும்படி உங்களுக்குப் ஐஎபோதியாமலும்;—நீங்கள் உங்கள் தேவனாகிய யெகோவாவுக்கு விரோதமாய்ப்பாவஞ்செய்யாமலுமிருக்கும்பொருட்டு, அங்குள்ள சுவாசமுள்ளவைகளில் ஒன்றையாகிலும் உயிரோடே ஐஅவையாமல்,-உன் தேவனாகிய யெகோவா உனக்குக்கட்டளையிட்டபிரகாரம் சகலரையுஞ் சங்கரிக்கக்கடவாய்.

ஐகநீ ஒரு நகரத்தைப்பிடிக்கும்படி அத்துடனே யுத்தம் பண்ணிநெடுநாளாக அதை முற்றுகைபோட்டிருக்கும்பொழுது, அதின் மரங்களின் கனியைப் புசிக்கக் கூடியதாயிருக்கிறபடியால், கொத்தளத்திற்கு உதவுமென்று நீ கோடரியை ஐஉஓங்கி அவைகளை வெட்டாதிரு.—புசிக்கிறதற்கேற்ற கனிகொடாதமரங்களைக் கண்டால், அவைகளைமாத்திரந்தரித்து, உன்னுடனே யுத்தம் பண்ணுகிற நகரத்தைவசப்படுத்துமளவும் அதற்கெதிராகக்கொத்தளம் போட்டுக்கொள்ளலாம்.

உக. அதிகாரம்.

க.அபூர்வமாய்ச்செய்தகொலைக்குப்பிராயச்சித்தம்: ஆ. சிறைப்பட்டஸ்திரியின் விவாகநியமம்: இஏ. சுயேச்சையின்படி சேஷ்டபுத்திரனைச் சுதந்தரத்தினின்றும் நீக்கலாகாதெனல்: ஐஅ. மூர்க்கமுள்ள புத்திரனைக்கொலைசெய்யக்கட்டளையிடல்: உஉ. தூக்குமரத்தில் தூஷ்டரைத்தூக்குமுறைமை.

[உன் தேவனாகிய யெகோவா உனக்குச்சுதந்தரமாக அளிக்குந்தேசத்தில், கொலைசெய்யப்பட்டுக்கிடக்கிற ஒருவனைவெளியேகண்டு, அவனைக் கொன்றவனின்னானென்று தெரியாதிருந்தால்,—உன் முதியோரும் நியாயாதிபதிகளும் புறப்பட்டுப்போய், கொல்லப்பட்டவனைச்சுற்றியிருக்கிற பட்டணங்கள்மட்டும் அளப்பார்களாக.—அவனுக்கதிசமீபமான பட்டணத்து முதியோர் வேலையிற்பண்படாததும், நுகத்திற்பூட்டப்படாததுமாகிய ஒரு கடாரியைப்பிடித்து,—உழுது விதையாத கரம்பான தாழ்ந்தபூமியிலே கொண்டுபோய், அந்தத்தாழ்ந்தபூமியிலே அதின் தலையை வெட்டக்கடவார்கள்.—உங்கள் தேவனாகிய யெகோவா தமக்கு ஆராதனைசெய்யவும், யெகோவாவின் நாமத்தைக்கொண்டு ஆசீர்வதிக்கவும், லேவியின் புத்திரரையே ஆசாரியர்களாகத் தெரிந்தெடுத்துக்கொண்டபடியினாலே அவர்கள் அத்தருணத்திற் சமீபித்திருக்கவேண்டும்; ஒவ்வொருவிவாதமும், ஒவ்வொருஅடியும்அவர்களுடையவாக்கினாலேயே தீர்க்கப்படவேண்டும்.] கொலை செய்யப்பட்டவனுக்குச் சமீபமான பட்டணத்து முதியோரெல்லாரும், தாழ்ந்தபூமியிலே தலைவெட்டப்பட்ட கடாரியின்மேலே தங்கள் கைகளைக்கழுவி,—யெகோவாவே, எங்கள்கைகளால் அந்த இரத்தத்தைச்சிந்தவில்லை, அதை எங்கள் கண்கள்கண்டதுமில்லை.—உம்முடைய சனங்களாகிய இஸ்ரவேலரில் கடாட்சம்வைத்து, நீர் மீட்ட உம்முடைய சனங்களாகிய இஸ்ரவேலர்மேல்கொலையுண்டவனுடைய இரத்தப்பழியைச்சுமத்தாதிருமென்று சொல்வார்களாக; அப்பொழுது இரத்தப்பழி விமோசனமாகும்.—இப்படியே யெகோவாவுடைய பார்வைக்கு நேர்மையானதை நீ செய்தாயாகில், கொலையுண்டவனுடையஇரத்தப்பழி உன்னிடத்திலில்லாமல் அகன்றுபோம்.

நீ புறப்பட்டு யுத்தஞ்செய்தெதிர்க்குஞ் சத்துருக்களை உன் தேவனாகிய யெகோவா உன்கையிலொப்பித்திருப்பதினால், அவர்களைச் சிறைப்படுத்தும்பொழுது,—அச்சிறைகளில் ரூபவதியான ஒருஸ்திரியைக்கண்டு, அவளைவிவாகம்பண்ணவிரும்பி,—அவளை உன்வீட்டுக்குஅழைத்தபோவாயேயானால், அவள் தன்னுடையதலைமயிரைக்களைந்து, தன்நகங்களைவாங்கி,—தன்சிறையிருப்பின் வஸ்திரத்தையும் நீக்கி, உன் வீட்டில் இருந்து ஒருமாதமட்டுந்தன் பிதாமாதாவை நினைத்துத்துக்கங்கொண்டாடக்கடவள்: அதன்பின்பு நீ அவளோடேகூடி அவளுக்கு நாயகனாகஇரு, அவள் உனக்குமனைவியாவாள்.—அவள் ஐசமேலுனக்குப்பிரியமற்றுப்போனால், நீ அவளைத்

(அ) உ.சாமு.உ.ஏ.ஐஅ,உஏ. (ஐசு) எண்.சுகூ.எ. யோசு.அ.உ. (ஐசு) யோசு.உஉ.அ.(ஐசு) எண்.உக.உ,சுகூ.டு. யோசு. ஐக.ஐசு. அதி.எ.சு. அதி.ஐஉ.சுஏ,சுக. (ஐஎ) யாத்.உகூ.சுகூ.—(உக. அதி. டு.) க.நாளா.உகூ.ஐசு. அதி.ஐஎ.அ,சுக. (சு) சங்.உசு.எ. மத்.உஎ.உசு. (அ) யோனா.க.ஐசு. (கூ) அதி.ஐகூ.ஐசு. (ஐசு) சங்.சடு.ஏ. (ஐசு) ஆதி.சுசு.உ. அதி.உஉ.உகூ. நியா.ஐகூ.ஒசு.

நாவலர் மொழிபெயர்த்த பைபிளின் ஒரு பக்கம்

ஆறுமுகநாவலர்

1850 அளவில் சைவப் பிரசங்க மரபும், சமயத்தின் நிர்ணயமும்

பேனாட் பேற்

தமிழில்: சோ. பத்மநாதன்

''சைவ போதகர்களும் தலைவர்களும் தோன்றி மெதடிஸ்த திருச்சபையின் மாதிரிகையில் ஒரு கற்றை உருவாக்கிப் பணியாற்றலாயினர்''

- E.J. றொபின்ஸன், Hindu Pastors, 1867 -

1847 டிசம்பர் 31இல், சில மாதங்களின் பின் நாவலர் என்று அழைக்கப்பட்ட ஆறுமுகம்பிள்ளை யாழ்ப்பாணத்துக்கு அருகேயுள்ள வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் ஒரு பிரசங்கம் நிகழ்த்தினார்.[1] (றொபின்சன், 1967: 121 - 29, யொங், ஜெபநேசன், 1995: 121 - 22). இதன்மூலம், பிற்காலத்தில் மேடைத்தமிழ்[2] என்று அழைக்கப்பட்ட இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் அரசியல் தொடர்பாடல் நடத்தையை வரையறுக்கும் ஒரு வழக்காற்றை ஆரம்பித்தார் என்று சொல்லப்படுகிறது. பிற தென்னாசிய மற்றும் ஐரோப்பிய தமிழ்ப் பேச்சாளர்கள், இதற்குப் பல ஆண்டுகளின் முன்பே புறொத்தஸ்தாந்து சமயப் பிரசங்கங்கள் செய்துள்ளனர் என்பதை நாமறிவோம். ஆனால், அன்றிரவு ஆறுமுகம் பேசியபொழுது சைவக் கோயில் வழக்காறுகளின் இயல்பை மாற்றியமைக்கும் ஒரு முறைமையை ஆரம்பித்து வைத்தார். அதனால் கிறிஸ்தவ வழிபாட்டு முறைமையின் மாதிரிக்கு அமைவான சமயமாக சைவத்தையே மாற்றியமைக்கும் போக்குத் தொடங்கியது.

1850 அளவில், கிறிஸ்தவ, சைவ வழக்காறுகளில் தமிழ்ப் பிரசங்கம் உருவாக்கம் பற்றியும், பரந்துபட்ட சமூக, வரலாற்று அரசியல் முறைமையின் வழக்கம் மற்றும் புரிதல்கள் மீது நாவன்மையின் தாக்கம் பற்றியும் இக்கட்டுரையில் ஆராய உள்ளேன். நாம் வேறெந்தப் பெயரிட்டு அழைத்தாலும், அரசியல் என்பது தொடர்பாடல் வழக்காறுகளின் தொகுதிதான். அச்சு முதலாளித்துவம் போலவே, நாவன்மையும் பெரும் அளவிலான மக்கட் பொதுக்கள், தேசங்கள் ஆகிய அரசியல் அமைப்புக்களின் விருத்தியோடு சம்பந்தப்பட்டது.[3] (அன்ரசன் 1991, கேபமாஸ் 1989). அச்சு முதலாளித்துவமும் நாவன்மையும் சில வலுவான பகுப்பாய்வுகளைப் பகிர்ந்து கொள்வன. இரண்டுமே சில

குறிப்பிட்ட சமூக, அரசியல் பிரக்ஞை வடிவங்களை உருவாக்குவன. இரண்டுமே சில சமூகவியல் வடிவங்களை உருவாக்கும் தொடர்பாற் பாணிகளாகக் கருதப்படுவன. பொதுத்துறையை அல்லது சமகால தேச அரசை உருவாக்குவதில் அச்சு வகிக்கும் பங்குபற்றி முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ள போதும், நாவன்மை வகிக்கும் பங்கு வரலாற்றினுள் மறைந்து கிடக்கிறது. அச்சுப் பண்பாட்டின் விருத்தியை ஆராய்வது எளிது. ஏனெனில், அவ்விருத்தி எழுத்துக் கலை உருக்களின் வடிவில் ஆவணங்களைவிட்டுச் சென்றுள்ளது. ஆனால், மறுபுறத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டு நாவன்மை இரண்டாம் நிலை எழுத்துருக்களையே - சொற்பொழிவுகளைக் கேட்டு அவற்றை வர்ணிக்க முயன்ற தம் மனப்பதிவுகளைத் தந்தோருடைய ஆக்கங்களையே - விட்டுச் சென்றுள்ளது. ஒலிப் பதிவுகளோ விபரமான மொழியியல் ரீதியிலான பிரதியாக்கங்களோ இல்லை. சொற் பொழிவாளர்களுடைய அல்லது அவையினரின் குறிப்புக்கள் இடைக்கிடை கிடைக்கின்றன. ஒரு சமயப் பிரசங்கம் எவ்வாறு நிகழ்த்தப்பட வேண்டும் என்பது பற்றி சிலாகித்துப் பரிந்துரைக்கும் சங்கிரகங்களும், ஞானோபதேசங்களும், பேருரைகளும் காணக்கிடக் கின்றன.[4] இருந்தபோதும், அமெரிக்க ஐரோப்பிய நாவன்மை மரபுகளோடு ஒப்பிடுகையில் சம்பவங்களின் தூய வடிவிலான சாட்சியமோ, பிரதிகளோ அரிதாகவே உள்ளன.

இது ஒரு பிரச்சினை. மக்களும் முகவர்களும் சமூக உலகங்களுள் வாழும் வெவ்வேறு நபர்களைப் புரிந்து கொள்ளும் (விதத்தின்) சமூக ஒழுங்கின் மீளவரும் மாதிரிகையை, அதன் சடங்குநிலை வருகையை, நாவன்மை உள்ளடக்குகிறது என்று சொல்ல விழை கின்றேன். எந்த நாவன்மை வெளிப்பாட்டிலும் முகவர் பற்றிய பிரத்தியேக அபிப்பிராயமும் அவர்களுடைய உலகியல் உடைமைகள் மற்றும் சமூகநிலை என்பனவும் சம்பந்தப்படும். யாதும் ஒரு பொருளை அல்லது ஒருவரை மாற்ற அக்கணத்தில் பொருள்களிடையேயுள்ள ஒழுங்கை மாற்ற (அதையும் சக்கர உலகியல் ஒழுங்கில் அன்றி மாற்றக்கூடிய நீள்கோட்டு உலகியல் ஒழுங்கில் செய்ய) நாவலன் முயல்வான். மேலும், நாவலன் புறொதஸ்தாந்த மிஷனறியோ, சைவசமயப் பிரசங்கியோ அல்லது அவர்கள் வாரிசாகிய அரசியற் பேச் சாளனோ தன்னால் மாற்றக்கூடியதென்று - தனக்கு அவ்வுரிமையும் அதிகாரமும் உண் டென்னு - கருதும் ஒரு சமூக ஒழுங்கின் மையத்தை உள்ளடக்கியிருக்கிறான். அவ் வொழுங்கின் விக்கிரகமாக அவன் பேசும்போது அதைத் தன்னுள் அடக்குகிறான். அன்டெர்ஸனுடைய தேசிய அரசின் திறமைசான்ற பொருளாகிய அச்சு இலக்கியத்தின் படித்த நுகர்வோனைப் போல நாவலன் தன்னையும், இடைச்செருகலாகிய அவையினரையும் உள்ளடக்கிய தவிர்க்க முடியாத சமூக உலகொன்றை நிகழ்த்திக் கற்பனை செய்கிறான். ஆறுமுகநாவலர், அவரைச் சந்தித்த மனிதர்கள், சகாக்கள், அவரை எதிர்த்தோர் ஆகியோர் பற்றிய உசாவல் அக்காலத்து சமூக உலகு பற்றி மட்டுமல்ல, 'சமய' அனுஷ்டானம் பற்றிய நெளிவு சுழிவுகளின் உருவாக்கம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வெகுஜன 'அரசியல்' பற்றிய தரிசனத்தையும் தருகிறது.

மொழியும் சமய வரம்பை நிர்ணயித்தலும்

1950களிலும் 1960களிலும் கான்ற்வெல் ஸ்மித்தின் பணியைத் தொடர்ந்து, 'சமயம்' என்பது பரந்துபட்ட வழக்காறுகளின் அண்மைக்கால அடையாளப்படுத்தல் என விவாதிக்கப்பட்டது (சிமித் 1962). அண்மைக் காலங்களில் தலால் ஆஸாத், எஸ்.என். பாலகங்காதரா, வலென்டகன் டானியல், றிச்சாட்கிங் உள்ளிட்ட பல புலமையாளர்கள் இந்நிலைப்பாட்டை ஏற்றனர் (ஆஸாத் 1993, பாலகங்காதரா 1994, டானியல் 2002, கிங் 1999). நான் ஏற்றுக்கொள்ளும் இவ்வாதத்தின் அடிநாதம் என்னவெனில் (1) சமயம் மனித இனம் முழுவதையும் தழுவியதல்ல, அது வடிகட்ட முடியாத கிறிஸ்தவ எண்ணக்கரு. (2) சிறப்பாக 19ஆம் நூற்றாண்டில் அது காலனித்துவ அதிகார உறவுகளின் தொழிற்பாடு. (3) அது நம்பிக்கை வழக்காறு சார்ந்த, மற்றைய புலங்களிலிருந்து வேறுபட்ட, செயல் மற்றும் வழக்கங்களின் தொகுதியை அடையாளப்படுத்தி வரையறை செய்யும் தோற்றப் பாடும் செய்முறைப் படிமுறையும் ஆகும். பிரச்சினையின் கடைசிப் பகுதி 'ஒழுங்கை அவாவும் ஆவேசம்' மேலை நவீனத்துவத்தின் இயல்பு என்றும் ஏதோ ஒருவகைத் தொடர்பாடல் வழக்காறுகளின் அடையாளப்படுத்தல் எனவும் நான் வாதிடுவேன். கடவுளுடைய சொல்லோடு முற்கூட்டியே சிந்திக்கப்படாத இறுக்கமான சொற்பொருள் உறவுடைய கிறிஸ்தவ வடிவமே புறொத்தஸ் தாந்திஸம் என்ற கருத்தை ஆராய்க. பரம்பொருளைத் தவறாகப் புரிந்து கொள்ளும் முந்திய கத்தோலிக்க முறையை அமுக்கி வலென்டகன் டானியல் குறிப்பிடும் ஒரு புதியவகை அறிகையை நாட்டியது. இவ்வறிகை விவிலியம் கடவுளின் வார்த்தை, கருத்தூன்றிக் கற்றால், மொழிபெயர்ப்புக்கள் ஊடாகக்கூட அதைப் புரிந்து கொள்ளமுடியும் என்ற கொள்கையின் மீது கட்டியெழுப்பப்பட்டது. அறியக்கூடியது ஆதலின் அறிந்தே ஆக வேண்டும். எனவே எழுத்தறிவும் அதை உரு வாக்கும் பாடசாலை முதலிய நிறுவனங்களும் புறொத்தஸ்தாந்த சமூகங்களில் செழித் தோங்கின. ஈற்றில் குறிகளின் கோட்பாட்டின் அடிப்படையிலான சமூக இயக்கமாக அது பரிணமித்தது.

சமகால தேரவாத பௌத்தம்கூட முந்திய பல தொடர்பாடல் வழக்காறுகளின் புதிய புரிதலாகவே விருத்தியடைந்தது. தேரவாத பௌத்தத்தைப் பொறுத்தவரை 'சமய விளையாட்டு' 1840களில் தொடங்கி 1860களின் பிற்கூறுகளிலும் 1870களின் முற் கூறுகளிலும் நிகழ்ந்த தொடர் பொது விவாதங்களூடாக ஆடப்பட்டது (டானியல் 2002, 45 - 50). அத்துடன் இந்நாளில் 'சமயப்பிரசங்கம்' என மொழியாக்கப்படும். சிங்கள தர்மதேசனவின் மாற்றத்திலும் அது நிகழ்த்தப்பட்டது. எனினும் அநகாரிக தர்மபால (1864 - 1933) பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பித்து வைத்த மறுமலர்ச்சி இயக்கத்துக்கு முன்பு அது உயர் முறைமையிலான சடங்கு ரீதியில் விரிவான பாளிப்பிரதிகளை (சுலோகங்களை) ஓதுவதாகவே இருந்தது. தர்மபாலருடைய காலத்துக்கு முந்திய கேட்போர் பிரதிகள் குறிக்கும் பொருளையோ (சொற்பொருள் இயைபையோ) கருத்தில் எடுத்திருக்க மாட்டார்கள். ஆனால், சுலோகங்களின் ஒலி கிளர்த்தும் அனுபவத்தை - தன்னளவிலேயே நலந்தரும் அழகியல் அனுபவத்தை - விழைந்திருப்பர் என எச்.எல்.

செனிவிரத்ன குறிப்பிடுவார் (செளவிரத்ன 1999: 74 - 76, மேற்கோள் டானியல் 2000:49). தர்மபாலர் முதலியோருடைய 'சீர்திருத்த' இயக்கங்களின் பின்னர்தான் 'தர்மதேசன்' என்ற தொடர், போதனை வடிவம் பெற்ற, இயைந்த சமயப்பிரசங்கம் ஆயிற்று. கிட்டத்தட்ட 12 மணி நேரம் நீண்ட அந்நிகழ்ச்சியின் விரிவான சடங்கு ஃ நாடகக் கூறுகள் நீக்கப்பட்டு புராதன பாளிப்பிரதியின் உட்பொருளில் கவனம் செலுத்தப்பட்டது.

> "எல்லாவற்றுக்கும் மேலாக (இப்புதிய தர்மதேசன) ஒரு தொனிப்பொருள்மீது கவனத்தைச் செலுத்தியது. சமயப்போதகர் தாம்பாடும் ஒரு பாளிச் செய்யுளை தொனிப்பொருளாக (மாத்ருகா) இனங்கண்டு அதைப் பிரசங்கத்தில் இணைப்பார், இதற்கு எழுத்துருவிலான தர்மதேசனம் எனத்தக்க முன்னுதாரணங்கள் மத்தியகால சிங்கள இலக்கியங்களில் உள்ளபோதும், புதிய தர்மதேசனமோ அதன் செறிவிலும் ஒருமையிலும் இளந்தர்மபாலர் திரும்பத் திரும்பக் கேட்ட கிறிஸ்தவ மேடையில் ஒலித்த பிரசங்கத்தை ஒத்திருந்தது" (செனிவிரத்ன 1999: 80 - 81, மேற்கோள் டானியல் 2002: 49 - 50).

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக் கூறில் சிங்கள தர்மதேசனவில் ஏற்பட்ட வடிவமாற்றத்துக்குச் சமாந்தரமாக ஆறுமுகநாவலராலும் அவர் சகபாடிகளாலும் 1840கள் மற்றும் 1850களில் ஏற்படுத்தப்பட்ட சைவப்பிரசங்க இயக்கம் கட்டியம் கூறியது என்பதை இக்கட்டுரை நிறுவும். சைவத்தை ஒரு தனிச்சமயமாக உருவாக்கும் தொடர்பாடல் வழக்காற்றில் இது மையச் செயற்பாடாக இருந்தது என்பதை நிறுவுவேன். பிரதி வழக்குகளை உள்ளடக்கிய ஒருங்கியைந்த வழக்காறுகளின் தொகுதியாக அதற்குமுன் சைவம் இருக்கவில்லை என்பது இதன் பொருளல்ல. ஆயினும் நாம் இன்று அறியும் சைவம் என்கிற சமயம் நாவலர் தொடக்கிய தொடர்பாடல் வழக்காறுகளால் முதன்முறையாக ஓர் இறுக்கமான வடிவத்தைப் பெற்றது என்பேன். இப்புதிய தொடர்பாடல் வழக்காறுகளின் தளங்கள்மீதே புது வகையினவாகிய அரசியல் முகவர்களும் புதிய சமூகக் கற்பிதங்களும் பின்னாளில் எழுந்தன என்று குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாகக் கிறிஸ்தவப் பிரசங்கங்கள் உருவாக்கியதும் சைவத்தால் கடன் வாங்கப்பட்டதுமான பொதுத் தமிழ் சடங்காசாரங்களுக்கு முதலில் பயன்படுத்தப் பட்டு பிற்காலத்தில் தமிழ்ப் பொதுவாக மாறியது.

சைவசமயத்தின் பொருண்மையாக்கலிலும் தொடர்பாடல் வகைகளின் உற்பத்தி மற்றும் மாற்றத்தின் ஊடாக, அதாவது பெயரிடப்பட்ட ஊடாட்ட மாதிரிகைகள் ஊடாகத் தமிழ்ப் பொதுவொன்றை உருவாக்குவதிலும் நாவலன் வகித்த முக்கிய பங்கை முதலில் மீட்டெடுக்கும் முயற்சியே இக்கட்டுரை. 1847 - 48 காலப்பகுதியில் நிகழ்ந்த பேச்சு நிகழ்வுகளை அவற்றின் முன்னோடிகளான கிறிஸ்தவ சமயப் பிரசங்கங்களின் தொடர்பில் ஆராய்வதும் இரண்டையும் ஒன்றாகப் பரிசீலித்து தமிழ் நாவன்மை உருவாக்கத்தின் உன்னத கணத்தைத் தரிசிப்பதும் என் நோக்கம். இவ்வுரையாடல் ஆறுமுகநாவலரும் அவர் வாழ்ந்த காலத்துடனும் தொடங்கி, குறித்த சம்பவங்கள் பற்றிய விரிவான வருணனைகளைத் தந்து, பெரும் அளவிலான அரசியல் அமைப்புகளுக்குத் தக்க சொற்பொழிவு வகைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் முக்கியத்துவம் என நான் கருதுபவற்றோடு நிறைவு

பெறும். அரசியல் மாற்றம், தொடர்பாடல் வழக்காற்றின் பொருள், வடிவ மாற்றங்களோடும் அவ்வழக்காறுகளின் புலக்காட்சியோடும் நெருங்கிய தொடர்புடையதென நிறுவுவேன்.

ஆறுமுகநாவலர்

யாழ்ப்பாணத்திலும் அதன் அயலிலும் 1847 - 1848 காலப்பகுதியில் ஆறுமுகம் செய்த பிரசங்கங்களே தமிழ் நாவன்மையின் தொடக்கம் என பல தமிழ்ப் புலமையாளர் கூறுவர். அவை தமிழ் நாவன்மையின் தொடக்கமல்ல. புறொத்தஸ்தாந்த சூழலுக்கு வெளியே அத்தொடக்கம் முக்கியமானது. அதைத் தமிழின் முதலாவது நாவன்மைப் புரட்சி என்பேன். அது சில முக்கிய வரலாற்று விளைவுகளை ஏற்படுத்தியது.

நவீன தமிழ் வரலாற்றில் நாவலர் ஒரு மாமனிதர். அவர் மறைவுக்குப் பின்னும் (1879), தீவிர தமிழ்ப் புலமையாளர்களுடைய கவனத்தை ஈர்த்து வந்துள்ளார். உண்மையான மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் முகவர் என மார்ஷல் சாலின்ஸ் குறிப்பிடும் (நெப்போலியனை ஒத்த) அவர் தமிழ்ப் புலமையில் வகிக்கும் இடம் காலப்போக்கில் வளர்ந்துவரக் காண்கிறோம். சைவ ஞானியர் வரலாறுகளில் அவர் வழிபடப்படுகிறார். தமிழ் ஈழத்தின் தந்தை எனக் கருதப்படுகிறார். ஏகாபதிபத்திய ஆட்சிக்கு எதிராக எழுந்த அடிநிலை மத்தியதர வர்க்கத்தின் பிரதிநிதி - 'இந்து சீர்திருத்தவாதிகளின் நாயகர்' என்று போற்றப்பட்டவர்.[5] அவர் வகிக்கும் இம் முக்கியத்துவத்துக்குக் காரணம் தமிழ்த் தொடர் பாடல் வழக்காறுகளின் பொருண்மையை மாற்றுவதில் அவர் வகித்த பங்கே என்ற கருத்தை முன்வைக்கிறேன்.

நாவன்மைக்கு மேலாக சைவ மற்றும் கல்வி இலக்கியத் துறைகளுக்கான தமிழ் உரைநடையாக்கத்துக்காகவும் சைவப் பாடசாலைகளை நிறுவியமைக்காகவும் இலங்கையிலும் சென்னையிலும் அச்சியந்திரங்களை நிறுவி, தமிழ் அச்சாக்கத்தை விரிவடையச் செய்தமைக்காகவும் அவர் கொண்டாடப்படுகிறார். பதிப்பாளராகவும், கல்விக் கூடங்களின் நிர்மாணியாகவும், சைவ சீர்திருத்தவாதியாகவும் அவர் வகித்த பங்கும் அவருடைய இலக்கிய நாவன்மை உந்துதல்களும் சுட்டுவதென்னவென்றால் தம் கற்பனையில் விரிந்த ஒரு சமூகத்தை விளிப்பதற்கேற்ற மொழியாக நாவலர் தமிழை உருவாக்கிக் கொண்டிருந்தார் என்பதே. உண்மையில் 'பொது' என்பதையொத்த ஒரு குழாத்தை விளித்துப் பேச ஏற்ற தமிழை அவர் ஆக்கிக் கொண்டிருந்தார் என்றே நம்புகிறேன்.

நாவலர் ஆறுமுகம்பிள்ளையாக 1822இல் பிறந்தார். அவர் தந்தையார் நன்கு அறியப்பட்ட கவிஞர், தமிழறிஞர், சைவத்திருமுறைகளில் நல்ல பரிச்சயமும் அவற்றை ஓதுவதில் பயிற்சியும் உடையவர். இதுவே கிறிஸ்தவ உபதேசத்துக்கு நிகரான பிரசங்கம் ஆயிற்று.

1834 வரை தன் தந்தையிடம் மரபுவழித் தமிழ்க்கல்வியைப் பெற்றுக் கொண்ட ஆறுமுகம் அவ்வாண்டே வெஸ்லியன் மிஷன் பாடசாலை முதல்வராகவும், யாழ். மத்திய கல்லூரி அதிபராகவும் விளங்கிய வண. பீற்றர் பேர்சிவலுடைய அபிமானத்துக்குரிய

மாணவரானார். அங்கே மிக விரைவில் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றார். 14 வயதில் தமிழாசிரியராகவும், 19ஆவது வயதில் (1841இல்) தமிழ் - ஆங்கில ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார். விவிலிய சங்கத்தின் யாழ்ப்பாண உப பிரிவின் தலைவர் என்ற கோதாவில் தாம் மேற்கொண்ட புதிய விவிலிய மொழிபெயர்ப்புக்கு பேர்சிவல், ஆறுமுகத்தை உதவி மொழிபெயர்ப்பாளராக அமர்த்தினார். 1847இன் இறுதியில் கிறிஸ்தவத்துக்கு எதிராகவும் சைவச் சார்பாகவும் ஆறுமுகம் பிரசங்கம் செய்யத் தொடங்கிய அதேவேளை மொழிபெயர்புப் பணியை முடித்துக்கொண்டு பேர்சிவருடன் சென்னை போய் தங்கள் மொழிபெயர்ப்பை விவிலிய சங்க நிர்வாகிகளுக்குக் கையளிக்கத் தயாரானார். இது 1848 மார்ச்சில் நடைபெற்றது.[6]

ஆறுமுகமும், பேர்சிவலும் எடுத்த விவிலிய முயற்சி சென்னையில் வெற்றிபெற வில்லை (25 ஆண்டுகள் கழித்து வெளிவந்த புதிய வடிவத்தில் அதன் கூறுகள் இடம் பெற்றது என்னவோ உண்மைதான்). ஜூலையில் ஆறுமுகமும், பேர்சிவலும் சென்னையிலிருந்து இலங்கை மீண்ட பின்பும், ஆறுமுகம் கோயில்களில் தமது பிரசங்கங்களைத் தொடர்ந்தார். 1848இல் அவரும் பேர்சிவலும் தொடர்புகளை அறுத்துக் கொண்டனர். ஆறுமுகம் விவிலிய மொழிபெயர்ப்பில் ஈடுபட்ட காலத்திலும் சென்னைக்குப் பிரயாணஞ் செய்த காலத்திலும், அங்கிருந்து மீண்ட பின்பும், கிறிஸ்தவ எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை விசித்திரமானது. எல்லோரும் அறிந்த இவ்வர்த்தமானம் வாதப்பிரதிவாதங்களுக்கு இடமளித்தது. இருந்தபோதும் பேர்சிவல் ஆறுமுகத்தை மேலும் ஒன்பது மாதம் பாடசாலையில் வைத்திருந்தார். அவர்கள் சுமுகமாகவே பிரிந்ததாகத் தெரிகிறது. இருவரும் தம் வாழ்நாள் முழுவதும் ஒருவர் மீது ஒருவர் மதிப்பு வைத்திருந்ததாகவே தெரிகிறது (இதனால் என்மனம் இருவரையும் மதிக்கிறது). அன்று தொட்டு ஆறுமுகம் சைவசமயத்தின் முன்னணிப் போராளியாகவும், கிறிஸ்தவம் சாரா கல்வி அச்சக நிறுவனங்களின் சிற்பியாகவும் தமது மரண பரியந்தம் (1879) வாழ்ந்தார்.

பிரசங்கங்கள்

1847 - 48 சம்பவங்களையும், சம்பந்தப்பட்ட பிரசங்கங்களையும் ஆறுமுகத்தின் புகழுக்கான முதற்காரணத்தையும் ஆராய்வோம்.

வெஸ்லியன் மெதடிஸ்த போதகரான வண. எட்வேர்ட் ஜீலிற் றொபின்ஸன் தமது Hindu Pastors என்ற 1867 நினைவுக் குறிப்பில் இச்சம்பவங்கள் பற்றிய விரிவானதொரு வர்ணணையைத் தருகிறார். நடத்தையைப் பற்றிப் பிறகு எழுதப்பட்ட யாவற்றுக்கும் அடிப்படையானது இக்கட்டுரை. யாழ்ப்பாணத்தில் வெஸ்லியன் மதத்தினரைக் கலவர மடையச் செய்த, கிறிஸ்தவத்துக்கெதிராக ஒழுங்கமைக்கப்பட்ட, எதிர்ப்பின் விருத்தியை முதலில் வண. றொபின்ஸன் குறிப்பிடுகிறார். அவர் எழுதுகிறார்:

> சைவ போதகர்களும் பொதுக்கூட்ட ஏற்பாட்டாளர்களும் மெதடிஸ்த மாதிரிகையில் ஒரு வட்டத்தை உருவாக்கிப் பணியாற்றத் தொடங்கினர். தங்கள் புனித நூல்களில் உள்ள பகுதிகளை வாசிப்பது, ஓதுவது தொடர்பாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்

மதிலால் சூழப்பட்ட வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலின் புனித வளாகத்தினுள் ஒரு பெரிய பந்தலில் ஒரு சொற்பொழிவு அல்லது பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது. கிரமமாக இல்லாவிடினும் முக்கிய அயற் கிராமங்களாகிய சுன்னாகம், மானிப்பாய் போன்ற இடங்களில் சந்திப்புக்கள் நடந்தன. 1847 டிசம்பர் 31ஆம் திகதி முதற் பிரசங்கம் தொடங்குமுன் ஆலயக் குருக்கள் தேங்காய் உடைத்துப் பிள்ளையாரை வணங்கி அருள் வேண்டினார். கூட்ட முடிவில் அவர் எழுந்து சங்கத்துக்கு நல்ல சகுனம் ஏற்பட்டுள்ளதாகச் சொன்னார். முதலாவதாக தேங்காய் இரு சமபாதிகளாகப் பிளந்துள்ளது. இரண்டாவதாக சொற்பொழிவின் தொடக்கத்தில் கோயிலினுள்ளே இருந்து மணிகேட்டது. முக்கிய பேச்சாளர்கள் இருவரும் எங்கள் யாழ்ப்பாணப் பாடசாலையில் பகல் நேர மாணவர் களாய் இருந்தவர்கள். முதலாமவர் அவ்வியக்கத்துக்குத் தலைமை தாங்கிய மேதாவி ஆறுமுகவர் ஆவர். மற்றவர் அவர் நண்பர் கார்த்திகேசையர். முன்னையவர் வேளாள சாதியைச் சேர்ந்த கவர்ச்சிகரமான விவேகமுள்ள படிப்பாளி. அடக்கமும் சிந்தனை வயப்படும் இயல்புமுள்ளவர். அப்பழுக்கற்ற வாழ்வு வாழ்ந்தவர். கிறிஸ்துவ ஆகமங் களில் அவருக்குள்ள பரிச்சயம் இந்து சாஸ்திரங்களில் அவருக்கிருந்த ஆட்சிக்குக் குறைந்ததல்ல. அவர் நெடுங்காலமாக, நாள்தோறும், ஆற்றல் சான்ற உழைப்பாளியான பேர்சிவலின் சகாவாகவும், உதவியாளராகவும் இருந்து ஆய்வேடுகளையும், தோத்திர நூல்களையும் செப்பனிட்டும், பிரார்த்தனை நூலையும், பரிசுத்த விவிலியத்தையும் மொழிபெயர்த்தும் உதவினார். கார்த்திகேச ஐயர் உருண்டு திரண்ட எண்ணெய் வழுக்கும் பிராமணர். தன் சகாவின் உடல்வாகோ, தீவிரமோ இல்லாவிடினும் இந்துமத இயலில் அவரளவு பாண்டித்தயமும், அவரளவு தேசபக்தியும் படைத்த அவரால் தனித்து இம்முயற்சியில் ஈடுபட்டிருக்க முடியாது. இதை எழுதியவரின் (றொபின்ஸனின்) மரியாதைக்குரிய விசுவாசி அவர். ஒருமுறை அவரைக் கேலிசெய்த பொழுது ஐயத்துக் கிடமில்லாத வரலாறு என்று தான் மக்களுக்குச் சொல்வதை, தானே நம்பவில்லை என்று தயங்காமல் ஒத்துக்கொண்டார். பாவம்![7] (றொபின்ஸன், 1867)

இந்தப் பிரசங்கங்கள் சலசலப்பை ஏற்படுத்தின. கிறிஸ்துவ அதிகாரிகள் அவை பற்றி வெளியிடப்பட்ட விபரங்களைப் பெற விரும்பிய போதும் ஆறுமுகம் அவற்றை வழங்காது தவிர்த்தார். தமிழ் - ஆங்கில தினசரியான உதயதாரகை Morning Star இன் அமெரிக்க ஆசிரியர் அக்கூட்டங்கள் பற்றிய உத்தியோகபூர்வ அறிக்கைகளுக்கு $20 வழங்குவதாகப் பகிரங்கமாக அறிவித்தபோதும் ஆறுமுகம் மறுத்துவிட்டதாக றொபின்ஸன் அறிக்கை யிடுகிறார் (றொபின்ஸன் 1867:123). எனினும் றிச்சார்ட் உவாற்ஸன் எனும் இளம் தமிழ் மறையாசிரியரிடமிருந்து றொபின்ஸன் கூட்டங்கள் பற்றிய அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டார். கூட்டங்கள் பற்றி ஏட்டுச் சுவடிகளில் குறிப்பெடுத்துக் கொண்ட ஒரு சைவரை லஞ்சம் வழங்கியோ, வசப்படுத்தியோ 'சாத்தானின் சாதுரியத்தோடு' அறிக்கை களைப் பெற்று மொழிபெயர்த்து றொபின்ஸனுக்கு வழங்கினார். றொபின்ஸன் எழுதுகிறார்:

> வண்ணார்பண்ணையில் 1848 பெப்ரவரி 18 தொடக்கம் நவம்பர் 17 வரை நிகழ்த்தப்பட்ட 29 உரைகளின் விரிவான குறிப்புக்கள் என்வசமுள்ளன. கிறிஸ்துவ மனதுக்கு விளக்கமற்றதாய், பொருளற்றதாய்க்கூட அது இருக்கலாம். ஆனால், மிகக் கவனமாகவும்

பொருத்தமாகவும் தயாரிக்கப்பட்டு அவை ஆர்வமாக வழங்கப்பட்டன. சிரத்தையோடு செவிமடுக்கப்பட்டன. ஆர்வமிக்க மறையாசிரியர் (உவாற்ஸன்) எவ்வாறு பிரசங்கங் களைத் தயாரிப்பாரோ அவ்வாறே அவை தயாரிக்கப்பட்டன. மிகவும் புனிதமான நூல் என்று கருதப்பட்ட ஒன்றிலிருந்து ஒரு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு வெவ்வேறு தலைப்புக் களின் கீழ் ஆராயப்பட்டது. இப்பேருரைகள் பின்வரும் பொருள்கள் பற்றியனவாய் அமைந்தன் பூர்வாங்க பிரார்த்தனை, உருத்திராக்கம், சிவபக்தி, புனித நூல்கள், உயிர்க்கொலை, இரு சொற்பொழிவுகள், விழாக்கள், சிவ வழிபாடு (பொது), யாக்கை நிலையாமை, சைவசித்தாந்த முதனூல்கள், பெண்களின் கடமைகள், நடுவுநிலை, மண்ணுலகச் செல்வம், விண்ணுலகச் செல்வம், பிறனில் விழைதல், அறம், நிந்தை இரண்டு, கள்ளுண்ணல், மூன்று செய்ந்நன்றியறிதல், ஈகை, கல்வி, தெய்வம் ஒன்றே, பசுக்களைப் போற்றுதல், அறிஞர்களையும் சான்றோரையும் பின்பற்றல், உலகியல் இன்பங்கள் நிலையாமை, பேதைமை (றொபின்ஸன், 1867: 124 - 25)

வெளிப்படையான புரிந்து கொள்ளக்கூடிய முற்சாய்வுகள் றொபின்ஸனுக்கிருந்த போதும், நான் அக்கறை செலுத்தும் சம்பவங்கள் பற்றிய அச்சொட்டான விவரணத்தை அவர் தருகிறார். ஆறுமுகம் பிரசங்கம் செய்யத் தொடங்கியது வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் 1847 டிசம்பர் 31இல் என்பது வேறு கட்டுரைகள் மூலம் அறியக் கிடக்கிறது (யங். ஜெபநேசன் 1995 - 121, கைலாசபிள்ளை 1955: 25 - 26). இதுவரை வெளிவந்த விவரணங்களுள் முழுமையானது, மானிப்பாய் முருகன் கோயிலில் நிகழ்ந்த பிரசங்கம் பற்றி பெஞ்ஜமின் மெய்க்ஸ் என்ற அமெரிக்க போதகரின் உதவியாளர் எழுதியது. இங்கும் தரப்பட்டுள்ள விபரங்கள் முக்கியமானவை. மெய்க்ஸ் எழுதுகிறார்:

1848 மார்ச் 18 மாலை முருகன் கோயிலில் ஒரு கூட்டம் நடைபெற்றது. 100 பேர்வரை கலந்து கொண்டனர். ஆலயக் குருக்களில் ஒருவரான தம்பரின் திருவாசக ஓதலோடு கூட்டம் தொடங்கியது. சிவ ஆலயங்களில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என அவர் விளக்கினார். முதலில் நீராட வேண்டும். பிறகு நீற்றைத் திரிபுண்டரமாக அணிய வேண்டும். மூன்றாவதாக, தலையில் உருத்திராக்க மாலை அணிய வேண்டும். நாலாவதாகத் தலையில் தலைப்பாகை, துண்டு ஏதும் அணியக் கூடாது. ஐந்தாவதாக, கோயிலை நெருங்கும்போது விழுந்து கும்பிட வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும். இக்கருமங்களை விதிப்படி செய்யாதவர்கள் நரகில் உழல்வர்; கூரான ஊசிகள் மேல் இருந்தும் அடிவைத்து நடந்தும் துன்புறுவர்.

இதன் பின் ஆறுமுகம் மேடையை அணுகினார். தன் பேச்சின் பொருள் தெய்வம் ஒன்றே என நிறுவுதல் என்றார். உலோகாயதர் நிலம், காற்று, தீ, நீர் என்ற பூதங்களே கடவுள் என்பர். இவை கடவுள் அல்ல. சமணரான மகாவீரர் கடவுளே என ஆராயப் புகின் என் கணிப்பில் அவர் எல்லாக் கடவுளரினும் தாழ்ந்த நிலையில் உள்ளவர். புத்தர் கூடக் கடவுள் அல்லர். ஏனெனில், அவர் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர். கிறிஸ்தவ மதம் எல்லாவற்றிலும் கடையானது. எனவே, கிறிஸ்தவம் வழிபடும் கடவுள் உண்மைக் கடவுள்

ஆக முடியாது. உண்மையான கடவுளின் இயல்புகள் நீதியும் கருணையுமாம். சைவர்கள் கும்பிடும் கடவுள் இவ்வியல்புகள் உடையவர். ஆன்மாக்கள் பல பிறவிகள் எடுக்க அவர் அனுமதிக்கிறார். இதனால், மனிதர் தாம் செய்த பாவங்களுக்கான பிராயச் சித்தம் செய்ய வாய்ப்பு உண்டாகிறது. ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல பிறவிகள் எடுத்தபின் அவர்கள் முத்தி அடைவர். இதனால் அவர் நீதியும் கருணையும் விளங்குகின்றன. ஆனால் கிறிஸ்தவர்களுடைய கடவுள் அப்படிப்பட்டவர் அல்லர். ஒருவன் மிக ஒழுக்கமாக அப்பழுக்கற்ற வாழ்வு வாழ்ந்தாலும், தன் பாவத்துக்காக மனம் வருந்தி ஞானஸ்தானம் செய்யாதுவிட்டால் அவன் முத்தியடைய முடியாது. ஆகவே, கிறிஸ்தவர் வழிபடும் கடவுள் கருணையுடையவரல்லர். சைவர்களுடைய கடவுளே உண்மைக் கடவுள். இவ்வாறு கூறி, ஒரு திருவாசகம் பாடி முடித்தார் அவர். அத்துடன் அடுத்துவரும் வாரங்களில் தாம் சிவபரத்துவம் பற்றியும் கிறிஸ்தவர்களுடைய கடவுளுக்கு அவ்வியல்புகள் இல்லை யென்றும் நாட்டவிருப்பதாக அவையினருக்கு முன்னறிவித்தல் விடுத்தார் (மேற்கோள், யங், ஜெபநேசன், 1995: 121 - 22).

பகுப்பாய்வு

இவ்வறிக்கைகளில் தனித்துவமான பல அம்சங்களுள்ளன. கிறிஸ்தவர்களிடையே ஆறுமுகம் கழித்த ஆண்டுகளும் விவிலியத்தோடும் புறொத்தஸ்தாந்த வழிபாட்டுச் சடங்குகளோடு அவருக்கிருந்த பரிச்சயமும் உவெஸ்லிய மெதடிஸ்தம் பற்றி மட்டுமல்ல, தவிர்க்கமுடியாதபடி, ஒரு சமயம் தன்னளவில் எவ்வாறு தொழிற்படுகிறது என்ற உள்ளகப் பார்வையை அவருக்களித்தன. வாழ்க்கையின் ஏனைய துறைகளிலிருந்து அது வரம்புகட்டி அடையாளம் இடப்பட்டு கருத்தியல் ரீதியாக (வேபர் பயன்படுத்தும் அர்த்தத்தில்) நாட்டப்பட்டது. ஆர்வமிக்க மறையாசிரியன் தன் பிரசங்கத்தை அமைத்து நிகழ்த்துவதைப் பின்பற்றி அவர் சொற்பொழிவுகள் அமைக்கப்பட்டன என்றும் அவர் தம் சகாக்களோடு கோயில்களுக்குச் செய்த விஜயம் ''மெதடிஸ்த மாதிரிகையைப் பின்பற்றியது'' என்றும் றொபின்ஸன் குறிப்பிடுகிறார்.

சைவ வழிபாட்டு முறை நோக்கில் இத்தகைய கூட்டங்கள் புதுமையானவை. சைவ முதனூல்களிலிருந்து ஒரு முக்கிய பகுதியைத் தெரிந்தெடுத்து அதற்கு வியாக்கியானமும் ஆய்வும் பிரசங்க வடிவில் ஆறுமுகத்தால் தரப்பட்டன. அது செவிக்கின்பமாயும் எளிதில் விளங்கக் கூடியதாயும் இருந்தது (முத்துக்குமாரசுவாமி, 1965: 20). கார்த்திகேச ஐயருக்கு ஒழுங்கு செய்யப்பட்ட பிரசங்கத்துக்கு அவர் சமுகந்தராத ஒரு சந்தர்ப்பத்தில் ஆறுமுகம் எழுந்தமானப் பேச்சு ஒன்றை நிகழ்த்தியது பற்றியும் ஓர் அறிக்கை குறிப்பிடுகிறது (கைலாசபிள்ளை, 1955: 26 - 28, முத்துக்குமாரசுவாமி, 1965: 18 - 19). பேச்சாற்றலின் அடிப்படையிலும், ஒழுங்கமைப்புத் திறனிலும், கல்விச் செயற்பாடுகளிலும், யாழ்ப்பாண வெஸ்லியன்கள் உருவாக்கிய தலைசிறந்த மெதடிஸ்தர் என்ற புகழை ஆறுமுகம் ஈட்டினார்.[8] இவ்வழக்காறுகள் அதுவரை கோயில்களில் நிகழ்ந்து வந்த ஒருங்கமைவில்லாச் செயற்பாடுகளுக்கு முற்றிலும் மாறுபட்டவையாக விளங்கியிருக்கும். ''பிரசங்கம்'' என்ற

சொல்லை நோக்குக. சைவத் திருமுறை ஓதல் எனவும் புறொதஸ்தாந்திய சமயப் பேருரை எனவும் அதை மொழிபெயர்த்திருக்கிறேன். பழைய காலத்துப் பிரசங்கம் 800 - 1000 வருடங்களுக்கு முன், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வழக்கில் இல்லாத தொரு மொழிநடையில், எழுதப்பட்ட நூல்களை ஓதுவதோடு சம்பந்தப்பட்டது. பெரும் பாலான அவையோர் கதைகளை முன்பே அறிந்திருப்பர். ஆனால், பேசப்படும் ஒவ்வொரு சொல்லின் பொருளையும் விளங்கியிரார். பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சிங்களம் பேசுவோர் பாளி தர்மதேசனத்தைக் கேட்டது போலவும், மத்தியகால மக்கள் தேவாலயத்தில் ஒலிக்கும் லத்தீனைக் கேட்பது போலவும் சமகாலத்தில் குர்ஆனின் பூஷா ஓதலைக் கேட்பது போலவும் இந்தியா அடங்கலும் கோயில்களில் ஒலிக்கும் சமஸ்கிருதத்தைக் கேட்பது போலவும் மொழி, குறிபொருளை உசாவழிப்பொருளை, வினைப்பாட்டுப் பொருளைப் புலப்படுத்துவது அன்றி, உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்துவதாய் இருந்தது. வலென்டகன் டானியலின் சொற்பிரயோகத்தின் படி, அது மனதை வசப்படுத்துவதிலும் பார்க்க உணர்வைத் தூண்டவே முனைந்தது (டானியல், 1996: 104 - 34). மூன்று தசாப்தங்கள் கழித்து, பாளி தர்மதேசனத்தை தர்மபாலர் மாற்றியமைத்த முறைமை பற்றி செனிவிரத்ன குறிப்பிடுவதையொத்ததே சைவ ஓதல் மரபுக்கும் நாவலர் பிரசங்கத்துக்கும் இடையிலான வேறுபாடு என யங் உம் ஜெபநேசனும் தெளிவாகச் சுட்டிக் காட்டுவது:

பிரசங்கம் என்பது கேட்போரை நிகழ்காலத்திலிருந்து தூக்கித் தொன்மத்துக்குள் கொண்டுபோகவல்ல காட்சிகளையும் மனநிலைகளையும் கிளர்த்தவல்லது. ஆறுமுகம் பின்பு நிகழ்த்தும் விரிவுரைக்கேற்ற தொனிப்பொருளை தொன்மம் வழங்கியபோதும், இந்தக் கட்டிடத்தில் வழிபாட்டு வாய்பாடுகளால் கட்டமைக்கப்பட்ட மாணிக்கவாசகர் திருவாசகமும் (பின்னர்) தேவாரப் பாடல்களும் கொண்ட குறையிரக்கும் தோத்திரங்கள் மிகுதியாய் இருந்தன (யங், ஜெபநேசன், 1995: 122 - 23).

இச் சொற்பெருக்கு எப்படி ஒலித்திருக்கும்? கோயிலில் முன்னெக்காலத்தும் கேட்டிராத ஒன்று என்று தயக்கமின்றிச் சொல்லலாம். இவ்வடிவத்துக்கு மக்கள் என்ன கருத்தைத் தந்தார்கள் என்பதை அறிய முடியவில்லை. இது பற்றி மேலும் ஆராய்கையில் இதில் கவனம் செலுத்தப்படும். இப்போதைக்குக் கையாளப்பட்ட உரைநடை பற்றி, திருமுறை களை ஓதும் முறை பற்றி அவர் தரும் அறிவுறுத்தல்களையும் நோக்கலாம். தவிரவும் அவர் பேச்சுச் சரளமாகவும் எளிதிற் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இதன் பொருள் என்னவெனில் அவர் சமகாலத் தமிழை அதாவது தெருவில், தேவாலயத்தில் கேட்கும் பேச்சுத் தமிழைப் பயன்படுத்தினார் என்பதே. இது முக்கியமான சைவ நூல்களின் பழைய நடையிலிருந்து வேறுபட்டது. இருந்தபோதும் அது அழகிய செம்மையான, செந்தமிழ் எனப்பட்டது. அதாவது எழுத்து நடைக்கு அண்மையான - யாப்பு, இலக்கியம் இலக்கணம் உடைய - தமிழ். செந்தமிழ் என்பது கொச்சைத் தமிழுக்கு - கொடுந்தமிழுக்கு - படிப்பறியாப் பாமரன் பேசும் தமிழுக்கு எதிரானது. இவ்வேறு பாட்டின் ஒளியில், நாவலர் உரைநடை பற்றி இருபதாம் நூற்றாண்டின் மூத்த தமிழறிஞர் தொ.பொ. மீனாட்சி சுந்தரம் சொல்வதைப் பார்க்கலாம்:

''ஒரு புறம் சுத்தச் செந்தமிழ் என அறியப்பட்ட உரைநடை. மறுபுறம் கொச்சைத் தமிழ். அதாவது ஏற்றமும் இறக்கமும் மேடும் பள்ளமும். நாவலர் இவற்றைச் சமப்படுத்தினார். பூசி மெழுகி, கவரை மினுக்கினார். ஆம், குன்றுகளில் இருந்த அழகிய ஓவியங்கள் பல மறைந்து விட்டன... ஆனால் ஆறுமுகநாவலர் செய்த சேவை பெரிது. கலப்பை காணாது கலடாய்க் கிடந்த நிலத்தை உழுது, மட்டப்படுத்தி, விதைத்துக் களை கட்டினார். ஆகவே, ஆறுமுகநாவலர் நவீன தமிழ் உரை நடையின் தந்தை எனப்படுகிறார். அவர் இட்ட அடித்தளம் உறுதியானது, பாதுகாப்பானது'' (மேற்கோள் முத்துக்குமாரசுவாமி, 1965: 28 - 29).

நாவலர் தமிழில் குறியீட்டுப் பிரயோகத்தைப் பெருமளவிற் புகுத்தி, அச்சுத்தாளில் சொற் களைச் சொல் எல்லைகளின் அடிப்படையில் பிரித்தார் என்பதை இடைப்பிறவரலாகக் குறிப்பிடுவது பொருத்தமானது. சைவத் திருமுறைகளாகிய செவ்விலக்கியங்களை உரைநடையில் பெயர்த்து அவர் வெளியிட்ட நூல்களின் தலைப்புக்களிலும் நூன்முகங் களிலும் 'எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய' என்ற தொடர் இடம்பெறுகிறது. மௌன வாசிப்போடு தொடர்புடைய அக்காலத்துப் புதுமையான பனுவல் மாதிரிகையான இத்தகைய வழக்காறுகள் தமிழ் நிலமெங்கும் தோற்றம் பெற்றன (வெங்கடாசலபதி, 1994). பிரதியின் சுட்டுப் பொருட் பண்பு, குறிப்பு மற்றும் வினைப்பாடு பற்றி நாவலர் அக்கறை செலுத்தினார். வேறுவிதமாகப் பார்த்தால் பொதுநிலை மக்கள் தாம் வாசிப்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என விரும்பினார்.

இதுவே அவருடைய உரைநடையினதும் கிறிஸ்துவ பிரசங்கத்தையொத்த நாவன்மை யினதும் மேதைமையாகும். தமிழின் எழுத்து மற்றும் பேச்சு வடிவங்களை இணைத்து சைவச் சூழலுக்கேற்ற, திருமுறைப் பாக்கள் போல செவிக்கின்பமாயும், அதேவேளை, அன்றாட இடைவினையில் பயன்படும் தமிழ்போல எளிதில் விளங்கக் கூடியதாகவும் ஒரு புதியவகை ஆற்றுகை மொழியை உருவாக்கியமையாகும். புனித பாசுரங்களைத் தமிழ் நிலமெங்கணுமுள்ள சிவாலயங்களில் சுத்தாங்கமாக ஓதவல்ல ஓதுவார்களை நியமிப்பது பற்றியும் திருமுறையைச் செவிமடுக்கும் அனுபவம் பற்றியும் புகழ்பெற்ற (1860) விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டதற்கு இது மாறுபட்டது (கைலாசபிள்ளை, 1955: 49). முறையாக ஓதுவது பற்றி அவர் அழுத்துவதிலிருந்து, அக்காலத்தில் பிர சங்கம் தெளிவாக ஓதப்படவில்லை என்று அறியக்கிடக்கின்றது. தெளிவு என்பது குறிபொருட்டெளிவல்ல என்று நினைக்கிறேன்.

மொழியின் அழகியலைப் புறொத்தஸ்தாந்த பிரசங்க மாதிரிகையோடு சேர்த்து நாவலர் தேவாலயத்துக்கு வெளியே புதிய களரிகளுக்குக் கொண்டு சென்றபோது, அக்களரிகளைப் புத்தம் புதியனவாக அவர் படைத்தார். இம்மறுவுருவாக்கத்தின் சுட்டியே பிரசங்கம் என்ற சொல். நாவலரின் பெறா மகனாகிய த. கைலாசபிள்ளை, 1916இல் பின்வரும் குறிப்பை வரைந்துள்ளார்.

''பிரசங்கம் என்பது வடசொல். அதற்குச் சமமான தமிழ்மொழியை நாம் இன்னும் காணவில்லை. தமிழ் நூல்களிலே இச்சொல் வேறுபல பொருள்களில் வழங்கி வந்தது.

அஃது, ஒருவர் சாதுரியமாகப் பேசும் விஷயத்திற்கு வந்தது இவர் காலத்திலேயாம். நூல்கள் உரைகள் செய்த மிகச் சிறந்த வித்துவான்கள் பலர் முற்காலத்திலே இருந்தார்கள். அவர்கள் சபைகளிலே எழுந்து ஒவ்வொரு விஷயத்தை எடுத்துக் கொண்டு அதனைச் சனங்களுக்குப் போதித்ததை நாம் கேள்விப்படவில்லை. தமிழிலே பிரசங்கம் என்பது, முதல் இவராலேதான் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்'' (கைலாசபிள்ளை, 1955: 25).

கைலாசபிள்ளையைப் போன்ற அனுபவம் வாய்ந்த அறிஞரால் கூட தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு தனியாள் ஓர் அவையின் முன் எழுந்து நின்று பேசிய சந்தர்ப்பத்தைக் காட்ட முடியாததில் ஆச்சரியமில்லை. 2000 வருடத் தொடர்ச்சியான தமிழ் இலக்கிய ஆக்கத்தில், 1981இல் மனோன்மணீயம் என்ற நாடகம் வெளியிடப்படும் வரை ஒரு மக்கட் கூட்டத்தை உயர் நிலைச் சொல்லாளன் ஒருவன் விளித்துப் பேசியதில்லை.[9] தனிச் சொல்லாளர்கள் மக்கட் கூட்டத்தை விளிக்கவில்லை. கவிஞர் கூட்டங்களே கடவுளர் அல்லது மன்னர்கள் போன்ற உயர்நிலை உருவங்களைப் பாடின. தமிழ் ஏடுகளில் கடவுளரோ அரசரோ (பிற உயர்நிலையினரோ) பேசுகையில் தனியுரைப் பாணியையன்றி உரையாடற் பாணியையே கைக்கொள்வர். தனியுரை வடிவிலான நியாயிக்கும் இடை வினையாக, நாவலர் ஒரு (சைவக்) கோயிற் பிரசங்கம் செய்தபொழுது, அவ்விடைவினையில் அந்தஸ்து வகிக்கும் இடத்தை முற்றாக மறுவுருவாக்கம் செய்யும் - தமிழ் உயர்குடியினர் ஏற்கக்கூடிய வகிபாகங்களை உள்ளடக்கும் - ஒரு குறிமுறை - சமூகநிலைப் புரட்சியை அவர் ஆரம்பித்து வைத்தார்.

நாவன்மையின் பொருண்மையும் சைவத்தின் விடய நோக்கும்

முதற் பிரசங்கங்களை அடுத்து வந்த ஆண்டு, பேர்சிவலுடனான தொடர்பறுந்த பின்பு இந்திய நாட்டின் தமிழ் மண்ணை நாவலர் சென்றடைந்தார். இப்பயணத்தின் உச்சமும் அவர் வாழ்வின் மற்றொரு திருப்பமுமாய் அமைந்த நிகழ்ச்சி தஞ்சாவூர் மாவட்டத்தின் சைவ உயர்கல்வி மையமாகிய ஆதீனத்தில் இடம்பெற்ற நிகழ்வாகும். இங்கேதான் ஆறுமுகம்பிள்ளை ஆறுமுகநாவலர் ஆனார். அவர் புகழ்பாடும் வரலாறுகளுள் ஒன்று, நடந்ததை இவ்வாறு விபரிக்கிறது:

இந்தியாவில் இருந்தபோது நாவலர் பல புனித தலங்களுக்குச் சென்று சமயப் பிர சங்கம் செய்தார். அவர் கும்பகோணத்தில் இருந்தபொழுது திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அவரைக் கௌரவிக்க விரும்பி தம் மடத்துக்கு அழைத்தார். இம்மடாதிபதி சைவ உலகின் ஆத்மீக குருவாக காலாதி காலமாகக் கொண்டாடப்பட்டு வந்தவர். அவர் நாவலரை மிகுந்த மரியாதையோடும் அன்போடும் வரவேற்றார். அவர் வேண்டுகோளின் படி நாவலர் ஒரு சொற்பொழிவு செய்தார். ஆதீன கர்த்தர் அவரைக் கௌரவிக்கும் முகமாக அவருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை அளித்தார். நாவலர் அங்கு சில நாள் தங்கி வேறெங்கும் கிடைத்தற்கரிய ஆகம நூல்களை ஆராய்வதிற் பொழுதைக் கழித்தார். அவர் பட்டத்தை ஏற்றுக்கொண்டபோதும் வேறெந்த வெகுமதியையும் ஏற்க மறுத்துவிட்டார் (சிவபாதசுந்தரம், மேற்கோள் முத்துக்குமாரசுவாமி, 1965: 49)

'நாவலர்' என்ற பட்டம் (நா: நாக்கு + வலம்: திறன்) இப்பொழுது உலகெங்கும் நாவன்மை படைத்தோரைக் குறிக்கிறது. ஆனால் முன்பு இது புலவர்களுக்கும் பிரசங்கங்களின் போது சைவத் திருமுறைகளை ஓதுவோருக்கும் வழங்கப்பட்டது. எனினும் 1848இல் அது ஆறுமுகத்துக்கு வழங்கப்பட்டபோது புதியதொரு வழக்கத்தின் புதியதோர் அழகியல் அடிப்படை பின்பற்றப்பட்டது; அதாவது சொற்பொழிவு அல்லது பிரசங்கம். அந்தக் கணத்திலிருந்து நாவலர் பரபரப்பாகப் பேசப்படலானார். சைவத்தின் மீதும் நாம் இன்று இந்துமதம் என்று குறிப்பிடும் எல்லாப் பிரிவுகள் மீதும் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த புறொத்தஸ்தாந்திகள் பயன்படுத்திய அதே நியாயிக்கும் இடைவினை மாதிரியைப் பயன்படுத்தும் ஒருவராகக் காணப்பட்டார். சைவத்தின் சார்பாக பாடசாலை நிறுவுவது, இலங்கையிலும் சென்னையிலும் அச்சகங்கள் வாங்குவது உள்ளிட்ட தொடர் செயற்பாடுகளுக்கு நிதியுதவி செய்த செல்வந்தர்கள் நாவலருடைய ரசிகர்களாக இருந்தனர். நாவலர் உண்மையில் நாவலர்தான். அவர் தொடக்கி வைத்துப் பின்னர் நிறுவனமயப் படுத்தப்பட்ட தொடர்பாடல் வழக்காறுகளில் அவர் செய்த புரட்சிக்காக சென்னையில் அடுத்துவந்த தசாப்தங்கள் 'நாவலர் காலம்' அல்லது 'யாழ்ப்பாண காலம்' என அழைக்கப்படலாயிற்று.

அத்தொடர்பாடல் வழக்காறுகள், சாராம்சத்தில் கிறிஸ்துவ அல்லது சரியாகக் கூறப் போனால் புறொத்தஸ்தாந்தியப் பண்பின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் மேலாண்மை மறுநிலையாக நாவலரை எதிர்கொண்ட கிறிஸ்துவம் இன்று நாம் 'சமயம்' என்று புரிந்துகொள்ளும் தெளிவாக நிர்ணயிக்கப்பட்ட அறிவுத்துறை / செயல்களால் வரையறுக்கப்படும் ஒரு தொகுதி நியாயிக்கத்தக்க வழக்காறுகளாக யாழ்ப்பாணத்தில் தொடக்கி வைக்கப்பட்டன. ஞானோபதேசம், மெதடிஸ்தர்கள், அங்கிளிக்கர்கள் மற்றும் திருக்கூட்டங்கள் ஆன இறையியற் பயிற்சி நடைமுறைகள், அறப்போதனை, ஆன்ம ஈடேற்றத்துப் பேருரைகள், சுற்றுலா, ஞாயிறுப் பிரசங்கம் போன்றவை. மறுபுறத்தில் அக்காலச் சைவம் நியாயிக்கும் யதார்த்தகால இடைவினையில் உருவாகும் பல்வேறு அனுபவங்களையும் உணர்ச்சி நிலைகளையும் உள்ளடக்கியது. இருந்தபோதும் செயலின் யதார்த்தாதீத நிர்ணயத்தின் நிறுவனமயப்பட்ட புலமோ கருத்தியல்வழி தொகுக்கப்பட்டு பகுத்தறிவு பூர்வமாக ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு சைவர்களிடையே விநியோகிக்கப் படக்கூடிய நடைமுறைத் தொகுதிகளோ இருக்கவில்லை. அந்நாளைய சைவத்தில் வாழ்தலும் உணர்தலும் அறிதலிலும் மேலானவையாகவும், அழகியல் கருத்தியலிலும் மேலானதாகவும் மனநிலை மனதிலும் மேம்பட்டதாகவும் கணிக்கப்பட்டன.

ஆறுமுகத்தின் பிரசங்கங்களும், அவற்றுடன் தொடர்புபட்ட பொதுவழிபாட்டு முறை விளக்கமும் சைவம் தனிச்சமயமாகவும் நித்திய கரும விதிகளை (நீராடல், நீறுதரித்தல், உருத்திராக்கமாலை அணிதல், தலையில் ஏதும் அணியாதிருத்தல், முறையாக விழுந்து கும்பிடல்...) வழக்காறுகளின் தொகுதியை விதிக்கும் அளவுக்கு நிறுவன மயப்படுத்து வதற்கான படிமுறையை ஆரம்பித்து வைத்தன.

தெய்வங்கள், ஆவிகள், மரணத்திற்குப் பிந்திய வாழ்வு, பிரபஞ்ச உற்பத்தி முதலியவை பற்றி மக்களுக்கிருக்கும் நம்பிக்கைகள் பின்பற்றும் வழக்காறுகளின் தொகுதி ஆகிய வற்றிலிருந்து ஒரு சமயத்தைப் பிரித்துக் காட்டுவது நம்பிக்கைகளின் தொகுதியையும் வழக்காறுகளையும் தனித்துவமான நடைமுறைக் குறிகளாக விதிப்பதே. வேறெந்தத் தேவாலயத்திலுமிருந்தும் பிரித்தறியக்கூடிய ஒரு தேவாலயத்தின் விசுவாசிகள் அனை வரையும் ஒன்றிணைக்கும் புனிதத்துவத்தோடு தொடர்பான நம்பிக்கைகள், வழக்காறுகளின் தொகுதியே சமயம் என எமிலி தர்க்கெய்ம் குறிப்பிடுவார் (தர்க்கெய்ம், 1995: 44).

புனிதத்துவத்தோடு தொடர்புள்ள கருத்துக்கள் வழக்காறுகள் எல்லாம் நாம் இன்று சமயங்கள் என்று புரிந்து கொள்வனவாய் (உ+ம்: சமயக் கற்கைப் புலங்களை) இருக்க வில்லை என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். யாழ்ப்பாணம் புறொத்தஸ்தாந்திய (கத்தோலிக்கமும் தான்) மிஷனரி மயப்படுத்தப்படுவதற்கு முன், சிவனோடு தொடர்புள்ள தெய்வங்களை வழிப்பட்டோரெல்லாம் தம்மைச் 'சைவர்' என்று அழைத்துக் கொண்டனர் எனச் சொல்வதற்கில்லை. இன்று போல அவர்கள் தம்மை 'இந்துக்கள்' என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. ஆனால், ஓர் அடியவரை அவர் வழிபடும் விக்கிரகம் கடவுள் என்று அவர் நம்புகிறாரா என்று கேட்டால், அவர் அக்கேள்வி அர்த்தமற்றதென்று கருதியிருப்பார். அவர் நோக்கில் அவர் நம்பினாலும் நம்பாவிட்டாலும் அவ்வுருவம் கடவுளே, கடவுள் இருப்பதும் - ஒருவர் அதை வழிபடுபவராக இருப்பதும் - கடவுள் உண்டென்னும் கோட்பாட்டோடு தொடர்பில்லாதது.

கிறிஸ்துவத்தின் நிலை இதுவல்ல. கடவுட் கோட்பாட்டை வழிபடுவோர் முற்று முழுதாக ஏற்கவேண்டுமென்று கிறிஸ்துவம் எதிர்பார்க்கிறது என டானியல் குறிப்பிடுகிறார் (டானியல், 2002: 36). யேசு தேவ / மனித குமாரன் என்றும், அவர் சிலுவையில் மரித்தார் என்றும், மூன்றாம் நாள் எழுந்தார் என்றும் நம்பாத எவனும் புறொதஸ்தாந்திய நோக்கில், கிறிஸ்தவனாக இருக்க முடியாது. இவ்விஷயத்தில் இஸ்லாம் 'சமயம்' ஆக இருக்கிறது; தென்னாசியாவில் புனிதம் எனக் கொள்ளப்பட்ட பெரும்பான்மையான நம்பிக்கைகள் வழக்காறுகள் அப்படியிருக்கவில்லை. இன்று நாம் பௌத்தம், சைவம் என்று விளங்கிக் கொள்ளும் முறைமைக்கு அடிப்படை, காலனித்துவ கிறிஸ்துவ மயமாக்கலுக்குப் பிரசங்கம் மற்றும் தர்மதேசனம் ஆகிய பழைய வழக்காறுகளை, துல்லியமான கிறிஸ்துவ மாதிரிகைகளின் அடிப்படையில் மாற்றுருவாக்கம் செய்து மேட்டுக் குடியினர் காட்டிய எதிர்வினைகளுமே, இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது போல், இந்து, பௌத்த சமயங்களின் 'புதுப்பண்பு' பற்றிய இவ் வவதானிப்பு ஒன்றும் புதிதல்ல. நான் அழுத்த விரும்பியது என்னவென்றால் சமயத்துக்கு முந்திய புனிதம்சார் தோற்றப்பாட்டிலிருந்து திட்டவட்டமான சமயத்தோற்றப்பாட்டுக்கு மாற்றுருவாக்கம் பெற்ற முறைமை தொடர்பாடல் சார்ந்தது என்பதே. சைவச் 'சீர்திருத்தம்' தொடர்பான ஆறுமுகநாவலரின் செயற்பாடுகள் முழுக்க முழுக்க தொடர்பாடல் வழக் காறுகள் மற்றும் அவற்றின் முதனிலை நிறுவனங்களின் மாற்றுருவாக்கம் சார்ந்தவையே. இன்றைய யாழ்ப்பாணத்தில் நாம் காணும் சைவம், ஆறுமுகநாவலர் தமது கல்வி

நிறுவனங்களிலும், தமிழ் மொழியை அச்சு முயற்சிக்கேற்ப சீராக்கம் செய்ததிலும், எளிதில் விளங்கக்கூடிய செவிக்கின்பம் பயக்கும் பிரசங்க முறைமையாலும் வரையறுக்கப்பட்ட செயல், நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலான தனித்துவ தோற்றப்பாட்டுப் புலத்தினதே. சமயம் என்ற அளவில் சைவத்தின் மறுவுருவாக்கமும் விடயநோக்கும் புறொத்தஸ்தாந்திய குறிக்கோட்பாட்டினதும் உலகியல் நிறுவன வழக்காற்றினதும் அடிப் படையில் மேற்கொள்ளப்பட்டதே.

தனித்துவப் புலங்கள் தொடர்பாடல் வழக்காறுகளின் தோற்றப்பாடுகள் ஆகியவற்றின் கருத்தியல் அழகியல் விடய நோக்கே இக்கட்டுரையின் நோக்கமாகும். எனினும் சமூக - பண்பாட்டு மற்றும் அரசியல் - பொருளாதாரப் புலங்களின் மறுவுருவாக்கம் பற்றிய நீண்ட தேடலின் தொடக்கத்தையும் இது சுட்டுகிறது. சைவத்தை ஒரு சமயமாக மறுவுருவாக்கம் செய்த தொடர்பாடற் புரட்சியை நாவலர் ஆரம்பித்த பொழுது தமிழ் நிலங்களின் 'பொது' வெளிகளை வரையறுக்கப்போகும் நியாயிக்கும் இடைவினையின் தூல வடிவத்தை உருவாக்குவதில் முதல் அடியை எடுத்து வைத்தார். தமிழ் நாட்டில் நிகழ்ந்த விடுதலைப் போராட்டத்தோடு தொடர்புபட்டதாக 1904 அளவில் தமிழில் நிகழ்த்தப்பட்ட பொதுப் பேச்சுக்களுக்கும் இது முதலடி எனலாம்.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தமளவில் - அவரது கடவுளின் பரங்கருணை பற்றி யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள சிவன் கேயிலில் நாவலர் பிரசங்கம் செய்து 70 ஆண்டுகளின் பின் - இந்தியா, இலங்கை இரண்டையும் உள்ளடக்கிய தமிழ் நிலங்கள் நாவலரவர்களின் சாம்ராஜ்ஜியமாகி, அந்நிலங்களில் அரசியற் செயற்பாட்டில் ஈடுபடும் எவரும் நாவலர் என்ற வரைவிலக்கணத்துக்குள் அமைவதில் இருந்து நாவலர் செய்த புரட்சியின் தாக்கத்தை அளவிடலாம்.

அடிக்குறிப்புகள்

இக்கட்டுரை The Indian Economic and Social History Review, 42, 4, (2005), வெளிவந்தது. இதை மொழிபெயர்க்க அனுமதித்த ஆசிரியருக்கு பனுவல் ஆசிரியர் குழுவின் நன்றிகள். மூலக்கட்டுரையில் தரப்பட்ட நூல்பட்டியல் விபரங்களே இங்கு தரப்படுகின்றன.

1. வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் ஆறுமுகநாவலர் முதல் பிரசங்கத்தினை நிகழ்த்திய இடத்தை, இன்று ஓர் பொறிப்பு துல்லியமாக அடையாளப்படுத்துகிறது.
2. பார்க்க Kailasapathy, (1985), K. Sivathampy, (1979), 41 – 75.
3. இந்தக் கட்டுரையில் கூறப்படும் மாற்று அணுகுமுறைகளுக்குப் பார்க்க David Hall, (1996), Silvertein, (2000), Warner, (1990).
4. நான் கண்டு பிடித்த காலத்தால் முந்திய தமிழ் ஆன்மா ஈடேற்றத்திற்கான பிரசங்கம் ஜெம்ஸ் டுதியின் ஆன்மா ஈடேற்றத்திற்கான பிரசங்கம் ஆகும். ஒரு 1865 பிரதி சென்னையிலுள்ள அமெரிக்க திருச் சபை அச்சகத்தில் பிரசுரிக்கப்பட்டது. H.M. Scudder இன், பசார் புத்தகம், உள்ளூர் உதவியாளர்களுக்குச் சந்தைகளிலும், தெருக்களிலும் பயன்படுத்த தமிழ் பிரசங்க மாதிரிகளை வழங்கின.

5. நாவலரது வாழ்க்கை வரலாற்றிற்கும், சைவ சீர்திருத்தங்களுக்கும் நான் Dennis Hudson இன் எழுத்துக்களில் அதிகம் தங்கி இருக்கிறேன். "Arumuga Navalar and the Hindu Renaissance among Tamils, Hindu Responses to Protestants: Ninteenth – Century Literati in Jaffna and Tinnevelly, and "winning souls for Siva: Arumuga Navalar's Transmission of Saiva Religion" நாவலர் வாழ்க்கை பற்றிய சிறந்த சரிதம் அவரது பெறாமகன் கைலாசபிள்ளையால் எழுதப்பட்ட ஆறுமுக நாவலர் சரிதமாகும். மேலும் விரிவான வாழ்க்கை வரலாற்றிற்குப் பார்க்க முத்துக்குமார சுவாமியின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், 1979இல் நாவலரின் வாழ்க்கையையும், செயற்பாடுகளையும் பற்றிய ஆங்கில மற்றும் தமிழ் கட்டுரைகள் 267களை உள்ளடக்கிய நாவலர் நூற்றாண்டு மலர் கைலாசபதியால் தொகுக்கப்பட்டது.

6. இந்த பைபிள் தற்போது ''மேல் எழுந்த வாரியான'' அல்லது பேர்சிவல் மொழிபெயர்ப்பு என்று கிறிஸ்தவர்களிடையே அறியப்படுகிறது. ஆனால், தமிழில் பொதுவாக நாவலர் பெயர்ப்பு ஆகவே அறியப்படுகிறது. பார்க்க Kulendran, (1958).

7. கார்த்திகேய ஐயர் - றொபின்ஸனின் நம்பிக்கையான மொழி ஆசிரியர் உண்மையில் நாவலர் குழுவில் மிக முக்கியமான அங்கத்தவர். சொந்தத்தில் தானே முக்கியமான சைவ புத்திஜீவியாகவும், செயற்பாட்டாளராகவும் உருவானார்.

8. கா. சிவத்தம்பி, தனிப்பட்ட தொடர்பாடல்கள், Young and Jebanesan, (1995: 123).

9. தொ. பரமசிவனுடனான தனிப்பட்ட தொடர்பாடல். நாவன்மை பற்றிய நீண்ட விவாதத்திற்குப் பார்க்கவும் Bate, (2000).

உசாத்துணை நூல்கள்

Anderson, B., 1991, (1993), Imagined Communities, London and New York.

Asad, T., (1993), Genealogies of Religion: Discipline and Reasons of Power in Christianity and Islam, Baltimore: MD.

Balagangadhara, S.N., (1994), The Heathen in his Blindness, Asia, the west and the Dynamic of Religion, Leiden.

Bate, B., (2000), Metaittamil: Oratory and Political Practice in Tamil Nadu, unpublished doctoral dissertation, University of Chicago.

Daniel, V., (1996), Charred Lullabies: Towards an Anthropography of Violence, NJ: Princeton.

Daniel, V., (2002), "The Arrogation of being and the Blind Spot of Religion", In K. Hastrup and G. Ulrich, eds, Discrimination and Toleration Great Britain, 31 – 53.

Duthie, J., (1885), Homiletics, translated M. Lazarus, Madras: Religious Tract Society.

Durkheim, E., 1995, (1912), The Structural Transformation of the Public Sphere, Cambridge, MA.

Hall, D., (1996), Culture of Print: Essays in the History of the Book, Amherst, MA.

Hudson, D., (1992), Arumuga Navalar and the Hindu Renaissance among Tamils, In Kenneth W. Jones ed. Religions controversy in British India: Dialogues in Asian Languages, Albany.

Hudson, D., (1992), "Winning Souls for Siva, Arumuga Navalar's Transmission of Saiva Religion". In Raymond B. William and John B. Carmern eds. The sacred thread, Transmission of Hindu Traditions in Times of Rapid Change, Chambersburg, Pennsylvania.

Hudson, D., (1994), Tamil Hindu Responses to Protestants: Nineteenth Century Literati in Jaffna and Tinnevelly. In Steven Kaplan, ed. Indigenous Responses to Western Christianity, New York.

Kailasapathy, K., (1985), On Art and Literature, Madras.

King, R., (1999), Orientalism and Religion: Post Colonial Theory. India and 'Mythic East', London and New York.

Kulendran, S., (1958), The Tentative Version of the Bible or the "Navalar Version", Tamil Culture, Vol. VII (3), 239 – 50.

Muttukumaraswamy, V., (1965), Sri La Sri Arumuga Navalar, The Champion Reformer of the Hindus, Colombo.

Robinson, Rev. Edward, Jewitt, (1867), Hindu Pastors, A memorial, London.

Scudder, H.M., (1865), The Bazaar Book or Vernacular Preacher's Companion, Madras.

Seneviratne, H.L., (1990), The works of Kings, The New Buddhism in Sri Lanka, Chicago.

Silverstein, M., (2000), Whorfianism and the Linguistic Imagination of Nationality, in Paul Kroskrity, ed. Regime of Language, Santc Fe. NM., 85 – 138.

Sivathamby, K., (1979), Hindu Reaction to Christian Proselytization and Westernization in the Nineteenth Century Sri Lanka, Social Science Review, Vol. (1), 41 – 75.

Smith, C., (1962), The Meaning and End of Religion, London.

Venkatachalapathy, A.R., (1994), Reading Practices and Modes of Reading in Colonial Tamil Nadu, Studies in History, Vol. 10 (2), 273 – 90.

Warner, M., (1990), The Letters of the Republic, Publication and the Public Sphere in Eighteenth Century America, Cambridge, MA.

Young, R. and S. Jebanesan, (1995), The Bible Trembled, The Hindu Christian Controversies of Nineteenth Century, Ceylon, Vienna.

கைலாசபதி, க., (பதிப்பு), (1979), நாவலர் நூற்றாண்டு மலர், கொழும்பு.

கைலாசபிள்ளை, த., 1995, (1918), ஆறுமுகநாவலர் சரிதம், சென்னை.

'பனுவல்', இதழ் - 3, 2005, பக். *166 - 187.*

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் வரலாற்று நாடக மூலவரும்

செ.து. தெட்சணாமூர்த்தி

1955ஆம் ஆண்டு தனது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடினார் கந்தர்மடம் சிறி மான் சுப்பிரமணியபிள்ளை என்ற சுப்பு வாத்தியார். பள்ளிக்கூடத்தில் பாடம் படிப்பித்த வாத்தியார் அல்ல, நாடகம் படிப்பித்த வாத்தியார்.

இவருடைய நூறாவது பிறந்த நாளை யாழ்மதுரகான சபாவினர் கந்தர் மடத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். விழாவுக்குத் தலைமை தாங்கியவர் சேர். பொன். இராமநாதனின் மருகரும் பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரிகளின் முகாமையாளரும், இலங்கை அரசாங்கத்தில் தபால் மந்திரியுமாக இருந்த சைவத்தமிழ் பேரறிஞர் சு. நடேசபிள்ளை. அந்தக் காலத்தில் யாழ் மதுரகான சபாவின் தலைவராக முத்தமிழ் வித்தகர், முதலியார் செ. முத்துத்தம்பியும் செயலாளராகப் பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினமும் இருந்தார்கள்.

சபாவின் போஷகர்களாக வடமாநில அரசாங்க அதிபர், வட மாநிலக் கல்வி அதிகாரி, வட மாநிலக் காவல் துறை அதிகாரி, யாழ் மாவட்ட நீதிபதி, யாழ் மாநகர மேயர் அப்போது இந்தப் பதவிகளை வகித்தவர்கள் முன்வரிசையில் வீற்றிருந்தார்கள்.

இப்பெருவிழாவில் இப்பெருமக்கள் முன்னிலையில் விழாநாயகர் தான் கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்த ''யாழ்ப்பாண நாடக வரலாறு'' என்னும் கையெழுத்துக் காவியத்தைச் செயலாளராக இருந்த பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினத்திடம் கையளித்தார்.

க.சி. குலரத்தினம் அக்கையெழுத்துப் பிரதியை என்னிடம் பிரதி எடுத்துத் தரும்படி தந்தார். நான் படித்துப் படித்துப் பிரதி எடுத்தேன். அப்பெரும் நாடகக் கலைஞர் எழுதிய யாழ்ப்பாண நாடக வரலாறு என் மனதில் அப்படியே பதிந்து விட்டது. மனத்திரையில் தயிர்போல் உறைந்திருக்கும் யாழ்ப்பாண நாடக வரலாற்றை என் நினைவினால் கடையும் போது உருண்டு வந்த வெண்ணெயை நெய்யாக உருக்கி உங்களுக்குத் தருகின்றேன்.

இரண்டு ஊர்வலங்கள்

1879ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 6ஆம் திகதி பிற்பகல் யாழ்ப்பாணத்து நாவலர் வீதியில் (அப்போது வீதியின் பெயர் இருக்கவில்லை) இரண்டு ஊர்வலங்கள் எதிரெதிராக வந்து ஒன்றை ஒன்று சந்தித்தன. தற்போது ஆனைப்பந்திச் சந்தி, இலுப்பையடிச் சந்தி என்று சொல்லப்படுகின்ற இரண்டு சந்திகளுக்கும் இடையில் இச்சந்திப்பு நடந்தது.

ஓர் ஊர்வலம், இரட்டைக் குதிரை பூட்டிய வண்டியில் தங்கத் தலைப்பாகை, தரித்த உத்தரியம், மார்பிலே மரகதப் பதக்கம், காதிலே வயிரக்கடுக்கன் பூண்டு, இரு மருங்கும் உறவினரும் ஊராரும் நடைபவனியில் வர, முன்னால் நாதஸ்வரமேளம் முழங்க மாப்பிள்ளை வந்த திருமண ஊர்வலம்.

மற்ற ஊர்வலம், சிவநாம பஜனையுடன் தேவார திருவாசகம் பண்ணோடு பாடிவர, வாச நறுமண சாம்பிராணி வாசம் கலந்து பரவ, சங்கு சேமக்கலம் சப்திக்க, பூக்களால் புனையப்பட்ட பூந்தேரில் பிரேதமாய் வந்த இறுதி ஊர்வலம்.

திருமண ஊர்வலத்தில் மாப்பிள்ளையாய் வந்தவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் ''ஏ கந்தர்மடம் பிரபுவே'' என அழைக்கப்பெற்ற அம்பலவாணபிள்ளையின் மகனும் ஆறுமுகநாவலரால் எழுத்து அறிவித்து ஏடு தொடக்கப்பட்ட மாணவனுமாகிய கந்தர்மடம் சுப்பிரமணியம்பிள்ளை.

இறுதி ஊர்வலத்தல் பிரேதமாய் வந்தவர் சைவமுந் தமிழும்செய்த தவப்பயனாய் அவதரித்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்.

சைவத்திற்கும் தமிழுக்கும் வாய்க்கரிசி

மாப்பிள்ளையாய் மணவாளக் கோலம் புனைந்து ஊர்வலமாய் வந்தவர் எதிரே வரும் ஊர்வலத்தைக் கண்டார். யார் என அறிந்து கொண்டார். மணவாளக் கோலம் களைந்தார். குதிரை வண்டியை விட்டுக் குதித்தார். இரு கையையும் சிரமேற் குவித்தார். இரு கண்ணும் நீர் சொரிந்தது. நாத்தளதளத்தது. தனக்கு எழுத்து அறிவித்த இறைவனாய் நாடக உலகில் தன்னை நிலைபெறச் செய்த பெருமானாய், தன் வளர்ச்சி கண்டு மகிழ்ந்த வள்ளலாய் வாழ்ந்த தன் குருநாதர் பூவுலக வாழ்வு நீத்துப் பொன்னுலகு செல்லும் பூரதத்தின் பின்னால் நடந்தார். வில்லூன்றி மயானம் அடைந்தார். சைவத்திற்கும் தமிழுக்கும் வாய்க்கரிசி போட்டார். சிவத்திருமேனியில் செந்தழல் பற்றியதும் சிந்தைகலங்கி சிவாயனமவென்று சிந்தித்தவாறு வந்தார்.

நின்ற இடத்தில் திருமண ஊர்வலம் மாப்பிள்ளையை எதிர் பார்த்தபடி நின்றது. மாப்பிள்ளை வந்தார். சவத்தின் பின்னால் சென்றமையால் தோய்ந்து நீராடி வரும்படி உறவினர் கூறினார். ''நான் சவத்தின் பின்னால் போகவில்லை. சிவத்தின் பின்னால் போனேன். இதனால் எனக்குத் துடக்கு இல்லை'' என்று கூறியபடி மீண்டும் மணவாளக் கோலம் புனைந்து மணமகள் வீட்டை நோக்கி ஊர்வலமாகப் போனார். மணமாலை சூடி மாங்கல்ய வாழ்வு பெற்றார்.

சுப்பு வாத்தியார் என்ற சுப்பிரமணியபிள்ளை

1855ஆம் ஆண்டு பிறந்தவர் அ. சுப்பிரமணியபிள்ளை. இவருக்கு ஏடு தொடக்கியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் கல்வி பயின்றவர். ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர். இவரது பூட்டன்மாராகிய நாடகப் பிதாமகர்கள் புராண முத்தர், பாரதவேலர் ஆகிய இருவரும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1970) தொடங்கி 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி (1828) வரை புராண இதிகாச நாடகங்களை எழுதி மேடையேற்றியவர்கள். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் வாழ்ந்த உயர்சைவ வேளாளப் பிரபுக்களை நாடகங்களில் நடிக்க வைத்தவர்கள்.

ஆறுமுகநாவலருடைய பூட்டனார் இலங்கையர், பேரனார் பரமானந்தர், தந்தையார் கந்தப்பிள்ளை, இவர்களது நாடகங்களில் நடித்தவர்களில் முக்கியமானவர்கள். பூட்டன் மாரைப் பின்பற்றி 1875ஆம் ஆண்டு தனது 20ஆவது வயதில் நாடக வாழ்க்கையைத் தொடங்கிய சுப்பிரமணியபிள்ளை 1950ஆம் ஆண்டுவரை தொடர்ந்து நாடகங்கள் எழுதி மேடையேற்றி வந்தவர். அக்கால யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மிகப் பிரசித்திபெற்ற கல்விமான்களும் செல்வந்தர்களும் இவரது நாடகங்களில் நடித்தவர்கள்.

இவருடைய காலத்தில் நாடகங்களில் நடிப்பதை மிகப் பெருமையாக நினைத்த சமூகமாய் இருந்தது யாழ்ப்பாணம். இவரை எல்லோரும் சுப்பு வாத்தியார் என்பார்கள். இவர் பள்ளிக்கூடத்தில் படிப்பித்த வாத்தியார் அல்ல. நாடகம் படிப்பித்த வாத்தியார். தமிழில் புலமையும் ஆங்கிலத்தில் பாண்டித்தியமும் பெற்றவர். மிகவும் கண்டிப்பானவர். இவரது கட்டுப்பாட்டில் பயிற்சிபெற்ற நடிகர்கள் மிகவும் ஒழுக்கசீலர்களாக இருப்பார்கள். அக்காலத்தில் உயர்பதவி வகித்தவர்கள் கூட இவரது நாடகங்களில் நடிப்பதைப் பெரும் பாக்கியமாகக் கருதினார்கள்.

செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்த இவர் ஆங்கிலக்கல்வி கற்றிருந்தும் உத்தியோகம் பார்க்கவில்லை. பிற்காலத்தில் பிரசித்தி பெற்ற நாடகத்தின் கதாநாயகன் பூதத்தம்பி முதலியாரின் ஒரேயொரு மகனான சோதிநாதமுதலியாரின் பேத்தியைப் பெரும் சீதனத்துடன் திருமணம் செய்தவர். இவருக்குப் பிள்ளைகள் இல்லை. பத்து வருட வாழ்க்கையில் மனைவியை இழந்தவர். நாடகத்தையே தனது மனைவியாகவும் பிள்ளை களாகவும் நினைத்து வாழ்ந்து 100ஆவது வயதில் 1955ஆம் ஆண்டு காலமானவர்.

முதலாவது வரலாற்று நாடகம்

யாழ்ப்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் 1556ஆம் ஆண்டு கைப்பற்றினார்கள். கடைசித் தமிழ் மன்னனான சங்கிலியனுடன் யாழ்ப்பாணத் தமிழரசு அழிந்தது. ஆனால் வன்னியரசை 150 வருடங்கள் ஆட்சி செய்த ஒல்லாந்தனாலும், 150 வருடங்கள் ஆட்சி செய்த போர்த்துக்கேயனாலும் வன்னிநாட்டைக் கைப்பற்ற முடியவில்லை.

1796ஆம் ஆண்டு ஒல்லாந்தன் ஆட்சியிலிருந்த இலங்கையின் கரையோர மாகாணங் களை ஆங்கிலேயர் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியுடன் சேர்ந்து கைப்பற்றினார்கள்.

1802ஆம் ஆண்டு பிரித்தானியப் பேரரசன் இலங்கையை முடிக்குரிய குடியேற்ற நாடகப் பிரகடனப்படுத்தினான். ஆட்சி அதிகாரத்தை நடத்துவதற்காகப் பிறட்றிக் நோர்த் என்பவனை மகாதேசாதிபதியாக நியமித்தான்.

கரையோர மாகாணங்கள் அனைத்தும் தன் ஆட்சிக்கு உட்பட்டிருக்க மலைநாட்டிலே கண்டி நாடும் வடபகுதியிலே வன்னிநாடும் தனிநாடாய் இருந்ததை அவனால் பொறுக்க முடியவில்லை.

வன்னியை ஆட்சி செய்தவன் பண்டாரவன்னியன் என்னும் வன்னித்தமிழன். கண்டியை ஆட்சிசெய்தவன் ஸ்ரீவிக்கிரமராஜ சிங்கன் என்னும் தென்னிந்திய தமிழன்.

இரு நாடுகளையும் கைப்பற்ற நினைத்த நோர்த்தேசாதிபதி கண்டிமீது படையெடுத்துத் தோல்வி கண்டான். பண்டாரவன்னியனுடன் பேச்சு நடத்திப் பணிய வைக்கத் திட்டமிட்டான். தூதுவரை அனுப்பினான். ஆங்கிலேயர் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டு ஆள வேண்டுமென்றும், ஆங்கில அரசுக்கு வருடந்தோறும் கப்பம் கட்ட வேண்டும் என்றும் பேச்சு நடந்தது. பண்டாரவன்னியன் ஏற்கவும் அடங்கவும் மறுத்தான்.

பிரித்தாளும் தந்திரத்தில் பேர்பெற்ற பிரித்தானியன் காக்கை வன்னியனைக் கைக்கூலி ஆக்கினான். பண்டாரவன்னியன் தாயார் பெரியநாச்சன் இறந்துவிட்டாள். ஈமச்சடங்கு நடைபெற்று பண்டாரவன்னியன் சுண்ணம் இடிக்கும்போது, ஆங்கிலேயப் படைகள் வன்னியைச் சுற்றி வளைத்துப் போரைத் தொடங்கின. காக்கை வன்னியனின் சூழ்ச்சியால் சுண்ணம் இடித்தலை இடையில் நிறுத்திவிட்டுப் பண்டாரவன்னியன் போர்க்களம் போனான். காக்கை வன்னியன் காட்டிக் கொடுக்க பண்டாரவன்னியன் சுட்டுக் கொல்லப் பட்டான். இதுதான் பண்டாரவன்னியன் வரலாற்றுச் சுருக்கம்.

சுப்பிரமணியபிள்ளையின் பூட்டன்மாராகிய புராணமுத்தரும் பாரத வேலரும் நாடகங்கள் நடத்தும்போது பார்த்து மகிழ்ந்தவர்களில் ஆங்கிலேயருடன் சேர்ந்து ஒல்லாந்தரைக் கலைத்து இலங்கையின் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் அதிகாரியும் ஒருவன். ஆங்கிலேயரும் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியும் சேர்ந்து இரட்டையர் ஆட்சிமுறையை உருவாக்கியது. இதன் மூலம் நிர்வாகம் ஆங்கிலேயரிடமும் வரி வசூலித்தல் வர்த்தகக் கம்பனியிடமும் பிரிபட்டது. அதன்படி யாழ்ப்பாணத்தில் வரி வசூலிக்க வந்த கம்பனி அதிகாரி இந்தியாவில் பலகாலம் இருந்தமையால் தமிழ் தெரிந்தவர். அத்துடன் ஒரு கலைஞன். நல்ல நடிகன்.

புராணமுத்தர் பாரதவேலரின் நாடகங்களைப் பார்த்து மகிழ்ந்தவன் இருவருடனும் நட்புடன் பழகினான். இரட்டையர் ஆட்சி முடிவுற்று இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டதும் நோர்த்தேசாதிபதி ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இந்தக் கம்பனி அதிகாரி முத்தரையும் வேலரையும் கொழும்புக்கு அழைத்துச் சென்று நோர்த்துக்கு அறிமுகம் செய்து வைத்தார். இருவரையும் நோர்த்துக்குப் பிடித்துக் கொண்டது.

இலங்கையில் தமிழர்கள் வாழ்கின்றபடியால் தமிழர்களாகிய இருவரையும் தன்னுடன் வைத்துக்கொள்ளத் தீர்மானித்தான். இவர்கள் மூலம் பண்டாரவன்னியுடன் பேச்சு நடத்தவும்

விரும்பினான். அதனால் இருவரையும் இராகவாசல் முதலியார் என்னும் பதவியில் அமர்த்திக் கொண்டான்.

ஆங்கிலத் தளபதிகளான யுவெல், டிறிபேக் இருவரும் பண்டாரவன்னியனுடன் பேசச் சென்றபோது புராணரும் வேலரும் கூடச் சென்றார்கள்.

பேச்சுவார்த்தைக்குச் சம்மதிக்காத பண்டாரவன்னியனைக் காக்கைவன்னியன் சூழ்ச்சியால் சுட்டுக்கொன்றதும், இருவரும் தங்கள் பதவியை இராஜிநாமாச் செய்து விட்டு கந்தர்மடம் வந்தார்கள்.

இவர்கள் இருவரும் சேர்ந்து பண்டாரவன்னியன் வரலாற்றை நாடகமாக்குவதற்கான வரலாற்றுத் தகவல்களைத் திரட்டி வைத்திருந்தார்கள். நாடகம் எழுதுவதற்கு முன் இருவரும் காலமாகிவிட்டார்கள்.

இவர்களது பூட்டனாராகிய சுப்பிரமணிபிள்ளையிடம் பேரனார் பேரம்பலம் தனது தந்தையாரும் மாமனாரும் எழுதிவைத்திருந்த பண்டாரவன்னியன் வரலாற்றுத் தக வல்களைக் கொடுத்து நாடகமாக எழுதும்படி சொன்னார்.

பேரனார் சொற்படி பூட்டன்மாரின் இலட்சியத்தை நிறைவேற்ற சுப்பிரமணியபிள்ளை வரலாற்று நாடக மூலவர் என்னும் பெயரைப் பெற்றார்.

நாவலர் மேற்பார்வை செய்த நாடகம்

பண்டாரவன்னியன் வரலாற்று நாடகத்தை எழுதிய மூலவர் சுப்பிரமணியபிள்ளை தனக்கு எடுத்து அறிவித்தவரும் மத்திய கல்லூரியில் தன்னைப் படிப்பித்த ஆசிரிருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இல்லத்திற்குச் சென்றார்.

நாவலர் பெருமான் முன் திண்ணையிலே அமர்ந்திருந்தார். அவரின் முன்னால் அரியாலை சின்னத்தம்பி என்பவர் கைகட்டிக் கொண்டு நின்றார். அரியாலையில் பிள்ளையார் கோயில் கட்டும் விஷயமாகப் பேசினார்கள். பேசி முடிந்ததும் சின்னத்தம்பியார் விடைபெற்றார்.

ஓரத்தில் ஒதுங்கி நின்ற சுப்பிரமணியபிள்ளை அடக்கமாகச் சென்று நாவலரின் காலைத் தொட்டு வணங்கியபடி நின்றார். நாவலர் அவரைப் பார்த்து ''வா சுப்பிரமணியா'' என்று அன்புடன் வரவேற்றார்.

சுப்பிரமணியபிள்ளை தான் எழுதிவந்த பண்டாரவன்னியன் நாடகப் பிரதியை நாவலரிடம் கொடுத்து ''ஐயா! பண்டாரவன்னியன் வரலாற்றை நாடகமாக எழுதி வந்திருக்கின்றேன். தாங்கள் இந்த நாடகப் பிரதியைப் படித்துப் பார்த்து திருப்தி சொன்னால் மேடையேற்றலாம்'' என்றார்.

அதற்கு நாவலர் பெருமான் ''நாடகக் கலை உங்கள் குடும்பத்திற்குக் கைவந்த கலை. உனது பூட்டன்மார் புராண முத்தர் பாரதவேலர் எழுதி மேடையேற்றிய நாடகங்கள் பலவற்றில் எனது பூட்டனார், பேரனார், தந்தையார் நடித்திருக்கிறார்கள். எனது தந்தையாரும் பல நாடகங்கள் எழுதியிருக்கிறார் தெரியுமா? என்று கேட்டார். அதற்குச் சுப்பிரமணியபிள்ளை

''தெரியும் ஐயா உங்கள் தந்தையார் எழுதிய 'துரோணர்' என்ற நாடகத்தை எனது பேரனார் பேரம்பலம்பிள்ளை மேடையேற்றியதாக எனது தந்தையார் சொல்லியிருக்கிறார்'' என்றார்.

''சுப்பிரமணியா! உனது பூட்டன்மாரும் உனது பேரனாரும் நாடகக்கலையை ஒரு தெய்விகக் கலையாக உணர்ந்தவர்கள். ஒழுக்கத்தால் உயர்ந்த கல்விமான்களையும் செல்வந்தர்களையும் நடிக்க வைத்தவர்கள். அவர்கள் வண்ணமலர்களால் மாலை தொடுத்தார்களே ஒழிய, இடைச் செருகலாகக் கடதாசிப் பூக்களைச் சேர்த்துத் தொடுக்கவில்லை. அதுபோல் நீயும் பார்த்துக்கொள்'' என்று நாவலர் ஆலோசனை கூறினார். பின்பு சுப்பிரமணியபிள்ளையைப் பார்த்து ''இன்று புதன்கிழமை, சனிக்கிழமை மாலையில் வா. பார்த்து வைக்கிறேன்.'' என்று சொல்லி நாடகப் பிரதியையும் கொண்டு உள்ளே போனார்.

நாவலர் பெருமானின் நாடக விமர்சனம்

நாவலர் பெருமான் சொன்னபடி சுப்பிரமணியபிள்ளை, சனிக்கிழமை பிற்பகல் நாவலர் இல்லத்திற்கு வந்தார்.

நாவலர் பெருமான் தொல்காப்பியம் பொருளதிகார வகுப்பினை நடத்திக் கொண்டிருந்தார். பல மாணவர்கள் தரையில் சப்பாணிகட்டி இருந்தபடி ஆடாமல் அசையாமல் பெருமானின் படிப்பித்தலைக் கேட்டுக் கிரகித்துக் கொண்டிருந்தார்கள்.

சுப்பிரமணியபிள்ளை போகும்போது படித்துக் கொண்டிருந்த மாணவர்களில் த. கைலாசபிள்ளை, சி. செந்தில்நாதையர், தி. சங்கரபண்டிதர், சபாரத்தின முதலியார், வே. கனகரத்தினம், வித்துவசிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளை போன்றோர் பின்னாளில் பிரசித்தி பெற்று விளங்கிய பெரியோர்கள்.

அந்நேரத்தில் சேர். பொன். இராமநாதனும் நல்லூர் சிவன்கோயில் கார்த்திகேயக் குருக்களும் வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து பிறவுண் சின்னத்தம்பியும் முருகேச பண்டிதரும் வந்தார்கள். வந்தவர்களை நாவலர் வரவேற்றார். வந்தவர்கள் தாங்கள் தாங்கள் வந்த விஷயத்தைப் பேசினார்கள். எல்லோரும் திண்ணையில் அமர்ந்தார்கள்.

நாவலர் பக்கத்தில் வைத்திருந்த பண்டாரவன்னியன் நாடகப் பிரதியைக் கையில் எடுத்து, ''சுப்பிரமணியா இரு'' என்றார். சுப்பிரமணியபிள்ளை மாணவர்களுடன் தரையில் சப்பாணிகட்டி அமர்ந்தார். நாவலர் சேர் பொன் இராமநாதனைப் பார்த்து. சுப்பிரமணிய பிள்ளையைக் காட்டி, ''கந்தர்மடப்பிரபு அம்பலவாணபிள்ளையின் மகன் இவர். பண்டார வன்னியன் வரலாற்றை நாடகமாக எழுதியிருக்கிறார். நாடகத்தைப் படித்துப் பார்த்தேன். கற்பனையில் கதை எழுதி நாடகமாக்குவது மிக எளிதானது. ஆனால் நாட்டில் நடந்த கதையைச் சரித்திர ஆதாரங்களுடன் நாடகமாக எழுதுவது மிகவும் கஷ்டமானது. இந்த நாடகத்தைப் படிக்கும்போது கதாசிரியர் இடர்ப்பாடு அடையாமல் கதையை இலகுவாகக் கொண்டு சென்றிருக்கிறார். நமது காலத்திற்குச் சற்று முன்பு வாழ்ந்த கதைமாந்தரை மீண்டும் உயிர்ப்பித்து வாழ வைத்திருக்கிறார். சுருக்க வேண்டிய இடத்தில் சுருக்கியும் விரிக்க வேண்டிய இடத்தில் விரித்தும், சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்ல

வேண்டிய இடத்தில் சொல்ல வேண்டிய பாத்திரங்கள் வாயிலாக, 'நவின்றோருக்கு இனிமை நன்மொழி உணர்த்தல்' என்பதற்கமைய அழகிய தமிழ் நடையில் சொல்லி இருக்கிறார். நாடக மாந்தர்களை மிக அற்புதமாகப் படைத்திருக்கிறார். தொடக்கத்திலிருந்து கதையை விறுவிறுப்பாகவும் சுறுசுறுப்பாகவும் அமைத்திருக்கிறார். கதையில் வீரம் இருக்கிறது. காதல் இருக்கிறது. சைவசமயம் இருக்கிறது.

நாடகத்தின் முடிவில் பார்த்தவர்கள் கண்கள் கண்ணீரைச் சொரிய வைத்திருக்கிறார். ''சுப்பிரமணியபிள்ளையின் நாடகம் வெற்றிபெற என் வாழ்த்துக்கள்'' என்றார்.

சேர். பொன் இராமநாதன் நாவலரைப் பார்த்து, ''நாடகம் அரங்கேறும் நாளை எனக்கும் அறிவியுங்கள். நானும் பார்க்க விரும்புகிறேன்'' என்று சொல்லிவிட்டு கார்த்திகேய ஐயருடன் விடைபெற்றுச் சென்றார்.

சுப்பிரமணியபிள்ளை, நாவலரைப் பார்த்து, ''ஐயா தங்கள் அங்கீகாரம் கிடைத்து விட்டது. நடிகர்களைத் தெரிவு செய்தவுடன் நாடக ஒத்திகையைத் தொடங்குகின்றேன்'' என்றார். நாவலர் சப்பாணி கட்டிக்கொண்டு அமைதியாக நாவலரின் நாடக விமர்சனத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மாணவர்களைப் பார்த்து ''நீங்களும் இந்த நாடகத்தில் நடிக்கலாம்'' என்றார். எல்லோரும் சம்மதித்தார்கள்.

சுப்பிரமணியபிள்ளை யாரை எந்தப் பாத்திரத்திற்குப் போடலாம் என்று சிந்தித்தவாறு தனது ஆசிரியபிரானிடம் விடைபெற்றார். நாவலர் பெருமானின் அங்கீகாரமும் ஆதரவும் கிடைத்த சந்தோஷத்தில் அந்தரத்தில் மிதந்தவாறு நடந்தார்.

நாடக ஒத்திகை ஆரம்பமானது

பண்டாரவன்னியன் நாடகம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் அங்கீகாரத்துடன் அரங்கேறப் போகிறது என்பதை அறிந்ததும் கல்விமான்களும் செல்வந்தர்களும் நடிப்பதற்கு முன்வந்தார்கள். நடிகர்களைத் தேடும் சிரமம் சுப்பிரமணியபிள்ளைக்கு இருக்கவில்லை.

நாவலரின் மருகர் பொன்னம்பலப்பிள்ளை (வயது 39) நாவலரின் தமையனார் மகன் கைலாசபிள்ளை (வயது 20) ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (வயது 17) சி. செந்திநாதையர் (வயது 40) தி. சங்கரபண்டிதர் (வயது 46) இவர்களுடன் நாவலரிடம் கல்வி பயின்ற மாணவர்களும் நாவலர் காலத்துக் கல்விமான்களும் கந்தர் மடம் வேளாளப் பிரபுக்கள் சிலரும் நாடகத்தில் நடித்தார்கள்.

இறுதி ஒத்திசையில் நாவலர்

நாடக அரங்கேற்றத்திற்கு இரண்டு நாட்களுக்கு ஒப்பனையுடன் ஒத்திகை பார்க்கத் தீர்மானிக்கப்பட்டது. சுப்பிரமணியபிள்ளையின் வேண்டுகோளை ஏற்றுத் தனது மாணவர்கள் நடிக்கும் நாடக ஒத்திகையைப் பார்க்க நாவலர் பெருமான் வந்தார். அவருடன் வைமன் கதிரவேற்பிள்ளையும் பிறவுண் சின்னத்தம்பியும், முருகேசு பண்டிதரும் வந்தார்கள்.

ஒத்திகை தொடங்கியது. இடையிடையே நாவலர் சில திருத்தங்களைச் சொன்னார். வந்தவர்கள் பிரமித்துப் போனார்கள். ஒவ்வொரு நடிகரும் தங்கள் கதாபாத்திரத்தின் தன்மை உணர்ந்து அதே பாத்திரமாக மாறினார்கள்.

எத்தனையோ பணிகளுக்கு மத்தியில் தன்னைச் சந்திக்க வந்தவர்களையும் கூட்டிக் கொண்டு வந்து மூன்று மணிநேரத்துக்கு மேல் அமைதியாக இருந்து நாடகத்தைப் பார்த்து ரசித்தார்.

வைமன் கதிரவேற்பிள்ளையும் (தற்போது இருக்கும் வைமன் வீதி இவருடைய பெயரில் அமைந்தது) பிறவுண் சின்னத்தம்பியும் (தற்போது இருக்கும் பிறவுண் வீதி இவருடைய பெயரில் அமைந்தது) மிகவும் மகிழ்ந்து நடிகர்களையும் கதைவசனம் எழுதிப் பழக்கிய சுப்பிரமணியபிள்ளையும் பாராட்டினார்கள். ''நாடகத்தைப் பார்க்கும் போது நாங்களும் நடித்திருக்கலாமே என்ற ஆசை வந்து விட்டது'' என்றார்கள். முருகேசு பண்டிதர் சுப்பிரமணியபிள்ளை எழுதிய நாடகத்தமிழில் எதுகை மோனை ததும்ப எழுதியிருக்கும் உணர்ச்சி ஊட்டும் உரையாடல்களை வெகுவாகப் புகழ்ந்தார்.

வந்தவர்கள் சந்தோஷத்துடன் விடைபெறும் நேரத்தில் நாவலரின் அருகே சென்ற சுப்பிரமணியபிள்ளை நாவலரை நாடகத்திற்குத் தலைமை தாங்கும்படி கேட்டார்.

''எனது அன்பார்ந்த நண்பர் சி.வை. தாமோதரம்பிள்ளை தனது சொந்த ஊரான ஏழாலையில் பாடசாலை அமைப்பதற்காக வந்து நிற்கிறார். நாடகத்தைப் பார்த்தால் அவர் மிகவும் மிகழ்ச்சி அடைவார். நான் உன்னுடன் கைலாசபிள்ளையை அனுப்புகிறேன். நான் சொன்னதாக அவரை அழைத்தால், அவர் தலைமை தாங்க வருவார். அவரது தலைமையில் நாடகத்தை மேடையேற்றுவது பெருமையாக இருக்கும். நாளைக் காலை கைலாயத்துடன் நீ ஏழாலைக்குச் சென்று அவரை அழையுங்கள்'' என்று சொல்லி விட்டுப் போனார்கள்.

நாடகம் அரங்கேறியது

1875ஆம் ஆண்டு கார்த்திகை மாதத் தீபத்திருநாளில் யாழ்மதுரகான சபா நிரந்தரமாக கந்தர்மடம் சிவன்கோயில் தோட்டக் காணியில் 1780ஆம் ஆண்டு புராண முத்தரின் முதலாவது நாடகமான வள்ளிநாச்சி கல்யாணத்தை அரங்கேற்றுவதற்காக அமைக்கப்பட்ட அரங்கில் (தற்பொழுது கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை அமைந்துள்ள இடம்) பண்டாரவன்னியன் நாடகம் அரங்கேறியது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் ஆசியுடன் அவரது மாணவர்கள் நடிக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டதும் யாழ்ப்பாணமே கந்தர்மடம் நாடகக் கொட்டகையில் திரண்டு விட்டது. பார்த்த இடம் சனசமுத்திரமாகக் காட்சியளித்தது.

நாவலருடைய ஆதரவாளர்கள், சமயப் பிரசாரகர்கள், புராணப் பிரசாரகர்கள், தமிழாசிரியர்கள், செல்வந்தப் பிரபுக்கள், நாவலர் கருத்தின் எதிர்ப்பாளர்கள் அனைவரும் கூடிவிட்டார்கள்.

சேர். பொன். இராமநாதன், கார்த்திகேயக் குருக்கள், பிறவுண் சின்னத்தம்பி, வைமன் கதிரவேற்பிள்ளை, முருகேசு பண்டிதர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடன் சி.வை. தாமோதரம் பிள்ளையின் வருகைக்காகக் காத்திருந்தார்கள்.

ஜல்ஜல் என்ற சலங்கைச் சத்தத்துடன் இரட்டை மாட்டு வண்டில் வந்து வாசலில் நின்றது. அந்தக் காலத்து ஜமீந்தார்போல் உடையணிந்து தலையில் தலைப்பாகையுடன் உத்தரியந் தரித்தவாறு வந்து இறங்கினார் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள். நாவலர் பெருமானும் தாமோதரம்பிள்ளையும் கட்டித்தழுவி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். அப்பெருந்தகையாளருக்கு நாவலர் தன்னுடன் வரவேற்பில் கலந்து கொண்டவர்களை அறிமுகப்படுத்தியபின், கொட்டகை வாசல்வரை அழைத்துச் சென்றார்.

கொட்டகை வாசலிலே பூரணகும்பம் வைக்கப்பட்டிருந்தது. சுப்பிரமணிய பிள்ளையின் தந்தையாரான கந்தர்மடம் பிரபு அம்பலவாணபிள்ளை அவருக்கு மலர்மாலை சூடி வரவேற்றார். அவரது மாமனாரான குத்தகைக்காரன் மாப்பிள்ளை வேலுப்பிள்ளை, நாவலர் பெருமானுக்கு மாலைசூடி, அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டார்.

யாழ்மதுரகானசபாவின் நிருவாகப் பிரபுக்கள் சைவமலையையும் தமிழ் மலையையும் அழைத்துச் சென்று அரங்கத்தில் ஏற்றினார்கள்.

நாவலர் பெருமான் ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்'' என்ற தேவாரத்தைப் பாடி சி.வை. தாமோதரம்பிள்ளையைத் தலைமை உரை ஆற்றும்படி அழைத்தார்.

சி.வை. தாமோதரம்பிள்ளையின் தலைமைப் பொழிவில் பெய்த தமிழ்மழையில் சபையினர் நனைந்து தோய்ந்தனர். தலைமை உரை நிறைவெய்தியதும் நாடகம் தொடங்கியது.

மேடையில் நடிகர்களின் குரல்களைத் தவிர வேறொரு குரலொலியும் கேட்கவில்லை. நாடகத்தில் மெய்மறந்த மக்களின் ஐந்து புலன்களில் கண்ணையும் காதையும் தவிர வேறொன்றும் இயங்கவில்லை. அடுத்துவரும் காட்சி என்னவென்று எல்லோரும் ஆவலுடன் மேடையைப் பார்த்தவாறே இருந்தார்கள்.

நாடகத்தில் நடிக்கும் நடிகர்களின் நடிப்பை ரசிப்பதா? அவர்கள் பேசும் நாடகத் தமிழை ரசிப்பதா? காட்சியமைப்பைக் கண்டு களிப்பதா? ஒப்பனை கண்டு வியப்பதா? நடந்த வரலாற்றை நாடகமாக்கிய சுப்பிரமணிய பிள்ளையைப் பாராட்டுவதா?

மக்கள் தங்கள் சுயநினைவையே மறந்தார்கள். பண்டாரவன்னியன் சுட்டுக் கொல்லப் பட்டதும் விக்கிவிக்கி அழுதார்கள். காக்கைவன்னியன் தன் இனத்தவன் என்றும் தன் நிலத்தவன் என்றும் பாராமல் தன்னலத்திற்காக, இந்நிலத்துத் தமிழ் இனத்துக்காகப் பாடுபட்ட தன்னிகரற்ற தலைவனைக் காட்டிக் கொடுத்தான். அன்னியனாம் ஆங்கிலேயன் வன்னியின் மன்னவனாம் பண்டாரவன்னியனைச் சுட்டுக் கொன்றான். பெற்றதாயை விடப் பிறந்த பொன்னாட்டை மேலென நினைத்து, பெற்றதாயின் ஈமச்சடங்கை இடையில் நிறுத்தி, மண்ணைக் காக்க வந்த மறத்தமிழன் துடிதுத்து இறந்தான்.

முன்வரிசையிலிருந்து கண்வெட்டாமல் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பதிப்புச் செம்மல் சி.வை. தாமோதரம்பிள்ளையும் ஆறுமுகநாவலரும் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்கள். கூட இருந்த பிறவுண் சின்னத்தம்பி, வைமன் கதிரவேற்பிள்ளை, முருகேச பண்டிதர் நாடகம் என்பதை மறந்து, தங்கள் முன்னால் ஒருவன் சுட்டுக் கொல்லப்படும் காட்சி கண்டு கதிகலங்கிக் கண்ணீர் சொரிந்தார்கள்.

இவர்களே நாடகம் என்பதை மறந்தபோது பார்வையாளர் விக்கிவிக்கி அழுவதைத் தடுக்க முடியுமா?

கதாசிரியர் சுப்பிரமணியபிள்ளையின் கைவண்ணத்தில் உருவான பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம் யாழ்ப்பாணத்தில் பலமேடைகளில் ஏறிப் புகழ் பெற்றது. இந்நாடகத்தில் நடித்த நடிகர்களில் எல்லோருமே தங்கள் பாத்திரங்களை உணர்ந்து கதாசிரியர் எழுதிய உணர்ச்சிமிக்க உரையாடல்களை உணர்ச்சிபூர்வமாகப் பேசி நடித்து, பார்த்தவர்களின் கண்ணீரைப் பரிசாகப் பெற்றனர்.

நாவலர் நடிக்க ஒப்புக்கொண்ட நாடகம்

கந்தர்மடம் சுப்பிரமணியபிள்ளை பண்டாரவன்னியனைத் தொடர்ந்து பூதத்தம்பி, சங்கிலியன் வரலாற்று நாடகங்களை எழுதி மேடையேற்றினார்.

1789ஆம் ஆண்டு ''தென்னவன் பிரம்மராயன்'' என்ற நாடகத்தை எழுதினார். இது நாயன்மார்களில் ஒருவரான மாணிக்கவாசக சுவாமிகளின் வரலாறு.

இந்நாடகத்தில் பாண்டிய மன்னனுக்குக் குதிரை வாங்கச் சென்ற தென்னவன் பிரமராயனைக் குருந்தமர நிழலில் ஆட்கொள்ளும் ஞானாசாரியாராக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை நடிக்க வைக்க விரும்பினார்.

நாவலர் பெருமானிடம் தன் ஆசையை வெளிப்படுத்தினார். பரமாசாரியரின் சிவஞானபோத விளக்கத்தின் மூலம் சைவசித்தாந்தக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதற்கு, நாடகத்தைச் சாதனமாக அமைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் நடிப்பதற்குச் சம்மதித்தார்.

சுப்பிரமணியபிள்ளை சைவசித்தாந்த விளக்கங்களை மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போத ஏட்டினைக் கொடுத்தார். சுப்பிரமாணியபிள்ளை சுன்னாகம் குமார சாமிப் புலவரிடம் சிவஞானபோதப் பாடங்கேட்டார். தத்துவ விளக்கங்களை மிக அருமையாக எழுதினார்.

நாடகப் பிரதி வழங்குவதற்குரிய நாள் நிர்ணயிக்கப்பட்டது. அதற்காகப் பிரதிகளை எழுதி முடித்திருந்தார். இதற்கிடையில் அவருக்குத் திருமணநாள் டிசம்பர் 6ஆம் திகதி குறிக்கப்பட்டது. திருமணத்தை முடித்துக் கொண்டு நாடகத்தைத் தொடங்கலாம் என நினைத்துத் திருமண வேலைகளைச் செய்யத் தொடங்கினார்.

நாடகம் எழுதி முடிந்ததைச் சொல்லவும், தனது திருமணத்திற்கு அழைக்கவும் சுப்பிரமணியபிள்ளை நாவலர் வீட்டுக்குப் போனார். நாவலரிடம் நாடகப் பிரதியைக்

காட்டினார். நாவலர் பார்த்தார். சில திருத்தம் சொன்னார். நாவலர் சுப்பிரமணிய பிள்ளையைப் பார்த்து, ''நான் சைவ சமயப் பிரச்சாரகன் என்பதால் நாடகத்தில் பேச வேண்டிய வசனங்களை நானாக, எனது நடையில் பேசக்கூடாது. கதாசிரியராகிய நீ எழுதிய வசனங்களைத்தான் பேசவேண்டும். எனக்குரிய பகுதியை எழுதித்தந்தால் நான் அதனையே பேசுகின்றேன்'' என்றார்.

சுப்பிரமணியபிள்ளை டிசம்பர் 6ஆம் திகதி நடைபெற இருக்கும் தனது கலியாணத்திற்கு நாவலர் பெருமானை வரும்படி அழைத்தார். நாவலர் சம்மதித்தார். இது நடந்தது நவம்பர் 28ஆம் திகதி. 1879 டிசம்பர் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவத்தமிழ் மூச்சு நின்றது; சண்டமாருதக் கண்டனப் பிரசங்கம் ஓய்ந்தது. புராண இதிகாச ஆகம கலை அடங்கியது சுவர்க்க வாசல் திறந்தது.

நாவலர் ஐயா இருந்திருந்தால் சொன்னபடி தென்னவன் பிரமராயன் நாடகத்தில் பரமாச்சாரியராக நடித்திருப்பார். பரமாச்சாரியராக நடிக்க உலகத்திற்கு கருத்தாவாகிய சிவபெருமான் விரும்பவில்லை.

நாவலரின் கண்டனம்

கந்தர் மடத்து உயர் சைவ வேளாளர்கள், தங்கள் நாடகங்களில் நடிக்கும் நடிகர்கள் சைவ ஒழுங்கும் ஒழுக்கமும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

கந்தர் மடத்தில் நல்ல நடிகர்கள் சிலர் இருந்தார்கள். ஆனால் அவர்கள் புலால் உண்பவர்களாகவும் கள்ளுச் சாராயம் குடிப்பவர்களாகவும் கஞ்சா அபின் பழக்கம் உள்ளவர்களாகவும் இருந்தமையால், இவர்களைத் தங்கள் நாடகங்களில் நடிக்க வைப்பதை கந்தர்மடம் நாடகத் தயாரிப்பாளர்கள் விரும்பவில்லை.

இதனால் இந்தக் கலைஞர்கள் தாமாகவே நாடகம் நடத்தத் தொடங்கினார்கள். சுப்பிரமணியபிள்ளையிடம் புராணமுத்தர் எழுதி பலமேடையேற்றிய நளதமயந்தி நாடகப் பிரதியை வாங்கி நடிக்கத் தொடங்கினார்கள். இவர்களுடன் சேணியத்தெருவிலும் கள்ளியங் காட்டிலும் உள்ள நடிகர்கள் சேர்ந்தார்கள்.

இவர்கள் நளதமயந்தி நாடகத்தைக் கந்தர் மடத்திலும் கள்ளியங்காட்டிலும் சேணியத் தெருவிலும் மேடையேற்றினார்கள். நடிகர்கள் எல்லோரும் கஞ்சா அபின் பாவித்து போதை ஏறிய நிலையில் நடித்தார்கள். கூடுதலாகப் போதை ஏறியவர்களால் தங்கள் பாத்திரங்களில் சரிவர நிதானமாக நடிக்க முடியவில்லை. இதனால் நாடகத்தை நல்ல முறையில் மேடையேற்ற முடியாமல் போனது.

நாடகக் கலையை தெய்வீகக் கலையாகவும் நடிகர்களைத் தெய்வாம்சம் பொருந்தியவர் களாகவும் நினைத்த நாவலர் பெருமானுக்கு நடிகர்கள் போதையுடன் நாடகம் நடத்தி, நாடகத்தின் தெய்வீகத் தன்மையைக் குறைத்தது பிடிக்கவில்லை. அதனால் ''கந்தர்மடம்

கள்ளியங்காடு சேணியத்தெரு போன்ற இடங்களில் கஞ்சா அபின் தின்று நாடகம் நடத்துகிறார்கள்'' என்று ஆவேசத்துடன் கண்டனம் செய்தார்.

நாவலரைப் பற்றிய தவறான கருத்துப்பிரச்சாரம்

நாவலர் பெருமானின் இந்தக் கண்டன உரையை வைத்து நாவலர் நாடகத்திற்கு எதிரானவர் என்ற விஷமக் கருத்தைப் பரப்பி இருக்கிறார்கள். நாவலர் நாடகத்திற்கு எதிரானவர் அல்ல என்பதைத் தெளிவு படுத்தியிருக்கிறேன். நாவலர் காலத்தில் வாழ்ந்த கல்விமான்களும் செல்வந்தர்களும் நாடகங்களில் நடிப்பதைப் பெருமையாக நினைத்தவர்கள். அந்தக்காலச் சமூகம் நடிகர்களை மதித்தது.

நாவலர் ஒரு கலைக்குடும்பத்தின் கடைசி வாரிசு. நாடகத்திற்கு உறுதுணையாய் இருந்தவர். தனது மாணவர்களை நடிக்க வைத்தவர். தனது நண்பர்களைப் பார்க்க வைத்தவர். சி.வை. தாமோதரம்பிள்ளையை நாடகத்திற்குத் தலைமை தாங்கச் செய்தவர். தானும் கடைசியாக நடிக்கச் சம்மதித்தவர். இப்படியாக நாடகத்துறைக்குப் பங்காற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நாடகத்துக்கு எதிரானவர் என்று சிலர் சொல்ல, அவர்களுக்குப் பந்தம் பிடிப்பவர்கள் ஒத்தூதி வருகிறார்கள். இது ஒரு மாபெரும் வரலாற்றுத் துரோகம்.

'ஓலை' நாடகச் சிறப்பிதழ்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு, 2008.


நாவலர்
கல்வியியல்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கல்வி மறுமலர்ச்சி

ப. சந்திரசேகரம்

''புண்ணிய நாள் நாளெல்லாம் போற்றுநாள் செந்தமிழ்த்தாய்
எண்ணியெதிர் பார்க்கும் இனியறிந்து - மண்ணுலகில்
மேவுபுயர் சைவம் விளங்கிடுநாள் ஆறுமுக
நாவலர் கோன் தோன்றியநல் நாள்.''

(கவிமணி: தேசிக விநாயகம்பிள்ளை)

ஒரு நாட்டின், பெருமை, செழுமை, உயர்வு எல்லாம் அந்த நாட்டிலுள்ள மகான்களின் வாழ்க்கை நெறியைப் பொறுத்திருக்கும். ஒரு நாட்டில், நான், எனது, எனக்கு என்று வாழாமல் பிறர், பிறரது, பிறருக்காக என்று வாழ்ந்து, மனிதத் தன்மைக்கு இலக்கியமாய் வாழ்பவர்கள் மகாபுருடர்கள்: இவர்கள், கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்தவர்கள். நித்தியமாக வாழ்பவர்கள். இவர்கள் தொண்டு பிற்காலத்தவருக்குக் கலங்கரை விளக்கமாக விளங்குகின்றது.

தற்காலத்தில் வாழ்கின்ற நமக்கு, வளருகின்ற உள்ளங்களுக்கு வளம்பெறும் மாணவ சக்திகளுக்கு, பெரியோர் வாழ்க்கைகளையும் அவர்களது இலட்சியங்களையும் வழி காட்டலாக ஞாபகமூட்டும் மரபு நம் நாட்டில் வளர்ந்து வருவது சாலவும் சிறந்தது.

இலங்கை அன்னையையும் ஓரளவில் தமிழகத்தையும் உய்விக்க உதித்தவர்களுள் முன்னோடியாக விளங்கியவர்களுள் முதல் இடம்பெற்றவர் சிரேஷ்ட ஈழத்துச் சுடர்மணி ஆறுமுகநாவலர் பெருமானே.

நமது நாடு நாவலர் பெருமானுக்கு விழா எடுக்கிறது. எனவே, அவரினையிட்டு நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

கல்வி நெறியினைத் தமிழ் மரபு, சமய உணர்வோடு இணைத்து வளர்த்து வந்திருக்கின்றது. இப்பண்பு பொதுவில் சங்ககாலம் தொட்டு, இன்றுவரை வளர்ந்து, விரிவடைந்து கொண்டிருக்கப்பதற்குச் சான்றுகள் பல உள.

மாந்தர்க்கு அறிவு கற்றனைத்து ஊறும், கண்ணுடையர் என்பர் கற்றோர். கல்வி என்பது மனப்பண்பு, செயற்பண்பு, மெய்ப்பண்பு ஆகியவற்றில் உதித்த மனிதப் பண்பு என 'மக்களுக்கு மாநிலத்தில் வாழ்க்கை வழிகளெல்லாம்' காட்டிய வள்ளுவப் பெருந்தகை கூறுவர்.

'அறிவை வளர்த்திடல் வேண்டும் மக்கள் அத்தனை பேருக்கும் ஒன்றாய், பயிற்றிப் பல கல்வி தந்து, இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' 'வீடு தோறும் கல்வியின் விளக்கம், வீதி தோறும் இரண்டொரு பள்ளி, நகர்களெங்கும் பல பல பள்ளி', என ஊரறிய, நாடறிய உண்மையெல்லாம் ஒருவரையும் அஞ்சாமல் எடுத்துரைத்த, அமரகவி பாரதி சொல்லிப் போந்தார்.

செந்தமிழைப் பேணி வளர்த்த பெரும் புலவனும், நீடு சைவம் இவ்வுலகில் நிலவச் செய்த, குருநாதனுமாகிய, நாவலர் பெருமானும் கல்விக்கு வரையறை கண்டு கல்வி விசேடமாகத் தாய்மொழி, சமயப் பண்பு ஆகியவற்றில் உதித்து முழுமை பொருந்திய கல்விச் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று கொண்டவர்.

வித்தியாதானத்துக்குச் சமமாகியதொன்றுமில்லை. வித்தியாதானமே எல்லாத் தானங்களிலும் சிறந்தது என்பர் நாவலர். 'பார் புகழும் வேதாந்தப் பயிரினை வளர்த்த, கூரியமா மதி விவேகானந்த வள்ளலும், இக்கருத்தினை, வாழ்க்கையின் அடிப்படைக் கருத்தாக வலியுறுத்தியது இங்கு நினைவு கூர்தற்பாலது.

நாவலர் கருத்துப்படி கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம்; கல்வியென்பது அறமும், முத்தியுமாகும். கல்வி என்றென்றும் இளமை பொருந்தியது; உண்மையினை அணிகலனாகக் கொண்டது.

எந்த நாட்டையும் எந்த ஊரையும் தன்னாடும் தன்னூரும் ஆக்குவது கல்வி.

கல்வியை, இளமை தொட்டு மரணபரியந்தம் விடாமற் கற்க வேண்டும். 'கற்றுத் தேர்ந்த பண்டிதரும் காணற்கரிய பரம்பொருளை முழுதுங்கொண்ட மா முனிவனான' குருதேவர் இராமக் கிருஷ்ணர், மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் என்று கூறிய அமுத வாக்கையும் நாம் நாவலர் கொண்டிருந்த கருத்தோடு ஒப்புநோக்கலாம்.

நாவலர், மனிதன் கல்வியில் பிறந்து கல்வியில் வாழ்ந்து, கல்வியினை ஒரு வாழ்க்கைப் பழக்கமாகக் கொள்ள வேண்டும் என்று கூறுவர்.

கல்வி, என்பது விளக்கேற்றல் என்றும் நாவலர் கூறுவார். கல்வியாகிய விளக்கில், இருந்து பல கல்வி விளக்குகள் ஏற்படல் வேண்டுமென்பார். இக்கருத்து கல்விப் பொருளை நாம் பிறருக்குக் கொடுக்கும்தோறும், கல்வி பெருகிக் கொண்டு வரும் எனும் கருத்தில் எழுந்தது.

கல்விக்கு வரைவிலக்கணம் கண்ட நாவலர். கல்வியைப் புகட்டும் ஆசிரியர்களுக்கும் வரையறை காண்பார். ஆசிரியர்கள் தாம் கற்றறிந்தபடி நல்வழியில் ஒழுக மாண்புள்ள

மாணவர்களுக்குக் கல்வியைச் சிந்தனையோடு கற்பித்து, அவர்களுக்கு, உறுதியையும் போதிக்க வேண்டும் என்று கூறி நிற்பர். உறுதி என்பது மனத்திலும் செயலிலும் உறுதி கொளல். இதுவே இன்று நமது நாடுவேண்டி நிற்பது. எழுத்தறிவிக்கும் இறைவர்கள் கருணாமூர்த்திகளாகவும் திகழ வேண்டும்.

கல்வி எனும் அனுபவம், முதிர்ச்சியடைந்த ஆசிரியர் மனதுக்கும் முதிர்ச்சியடைந்து கொண்டிருக்கும் மாணவர் மனதுக்குமிடையே அமைகின்ற தொடர்பாகும்.

மாணவர்கள் ஆசிரியருடைய உள்ளத்தில் அருள் உண்டாகும்படி ஒழுகி, ஆசிரியர் களுக்கு வணக்கம் செலுத்திக் கற்றல் வேண்டும். ஆசிரியருக்கு வணக்கம் செலுத்துவது கல்வித் தெய்வத்துக்கு வணக்கம் செலுத்துவதாகும். மாணவர்கள் தாம் கேட்ட பாடங்களை நாள் தோறும் போற்ற வேண்டும். கேட்ட பொருள்களை ஆராய்ந்து சிந்தித்தல் வேண்டும். கேட்ட பொருட்களில் ஐயம் இருக்குமாயின் ஆசிரியரை அணுகி ஐயத்தினைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் மாணவர்கள் தாம் கற்றவற்றை தங்கள் உடன் மாணவர் களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றும் நாவலர் நீதி புகட்டுவார்.

கல்வி வாழ வழி வகுப்பது, அத்தோடு ஆன்ம ஈடேற்றத்துக்கும் கருவியாவது. நாவலர் பெருமான் இங்கு கல்வி ஆத்மீக வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இணைந்த கருவியாக விளங்க வேண்டுமெனும் கருத்தினைத் தெளிவாகக் கூறுகிறார். இக்கருத்தினை வலியுறுத்தும் கல்வி நெறியாளர் விசேடமாக, வறிய மக்களுக்கு வாழ்க்கையில் விமோசனம் அளிப்பது கல்வி என்று கூறி, வறுமை இன்மையும் பிணி இன்மையும் கல்விக்கு அடிகோலும் எனும் சீரிய கருத்தினையும் வலியுறுத்துகின்றார்.

இவ்வகையில் கல்விக்கு வரையறை தந்த நாவலர். ஒரு தத்துவச் செயல் முறைக் கல்வித் திட்டத்தையும் உருவாக்கினார். நாவலர் உருவாக்கிய கல்வித் திட்டத்தை நோக்கும்போது இன்று நமது சமுதாயம் ஏங்கிக் கொண்டு நிற்கும் கல்வி இதுவோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

மனிதனது முருகியல் உணர்வை வளர்க்க, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசை, நடனம் போன்ற கவின்கலைகளும். நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடையக்கூடிய பொருளாதார அபிவிருத்திக்கு உகந்த, அறிவியற் கல்வியும், விவசாயக் கல்வியும், வணிகம், நில நூல். வானசாத்திரம் போன்ற ஒழுக்கங்களும் கலைத் திட்டத்தில் இடம்பெற வேண்டுமெனக் கொண்டதோடல்லாது ஆசிரியர் நாவலர் ஒரு கலைத் திட்டத்தினையும் வகுத்தார்.

நமது மேதை வாழ்ந்த காலம் 18.12.1822 தொடக்கம் 19.11.1879 வரை. ஆசிய நாடுகள் அடிமைப்பட்டு தம் வலியிழந்து பதியிழந்து இரந்து உயிர் வாழும் நிலையில் இருந்த காலம் அது. ஆங்கில ஏகாதிபத்தியம் வீறிட்டு எழுந்தகாலம்.

இலங்கையில், ஆங்கிலம் உத்தியோக மொழியாக்கப்பட்டது. சிங்களமும், தமிழும் பள்ளிக்கூடங்களில் போதனா மொழியாகாமல் இருந்தபோதிலும் ஆங்கிலேய ஆட்சிக் காலம் தொடக்கமே கிறித்தவ ஆங்கிலக் கல்லூரிகள் பல கிறித்தவ சபையினரால் அமைக்கப்

பட்டன. அத்தோடு 1832ஆம் ஆண்டைய கோல்புறூக் சீர்திருத்தக் குழுவின் சிபார் சின்படி அரசாங்க ஆங்கிலக் கல்லூரிகளும் உதயமாகின.

மதத்தைப் பொறுத்தவரையில் கிறித்தவம் அரசாங்க மதமெனச் சட்ட ரூபம் பெறா விட்டாலும் கிறித்தவ மதம் அரசாங்க மதத்தின் இடத்தைப் பெற்றது. ஆட்சியாளர்கள் மதம் கிறித்தவமானதால் கிறித்தவ கல்லூரிகள் ஆட்சியாளரின் அனுசரணையில் வளர்ந்தன.

கிறித்தவ மதம் மனுக்குல நீதிக்காக உதித்த மதம். ஆசியாவின் நவீன இளம் நாகரிகத்துக்கு அடிகோலிய மதம். எனினும், இது ஆட்சியாளராலும் தழுவப்பட்ட மதமாகையால், கிறித்தவமும் ஏகாதிபத்தியமும் ஒன்றோடொன்றிணைந்தவை என்று நினைத்த காலம் இது.

இலங்கையில், படிப்படியாகக் கல்வி, விசேடமாக ஆங்கிலக் கல்வி உழைக்கும் கருவியாக உருவாகியது. எனவே, பௌத்த சைவ இளம் பராயத்தினர் தம் சமய நெறியை இழந்து கல்வி கற்கவேண்டிய நியதி ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

எனவே, சைவ நெறியையும் பௌத்த நெறியையும் கல்விக் கூடங்கள் மூலமே பாதுகாக்க முடியும் எனும் எண்ணம் நாட்டில் உருவாகிற்று. இலங்கையின் தொன்மையும் தொடர்பும் இளமையும் கொண்ட மதப் பண்புக் கலாசாரம் அழியும் நிலையும் இக்காலத்தில் உதித்தது எனக் கொளல் தகும்.

இவ்வித சூழ்நிலையிற்றான் பௌத்த மத, சைவசமய மறுமலர்ச்சி இயக்கங்கள் நமது நாட்டில் உதித்தன. இரு இயக்கங்களும் ஒரே காலத்தில் வளர்ந்தவையானாலும் பௌத்தமத மறுமலர்ச்சி பரந்ததாயிருந்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உதயமான இம் மறுமலர்ச்சியில், காலத்தால் சைவ சமய மறுமலர்ச்சி முந்தியது.

இலங்கை, உலகப் புகழ்பெற்ற ஈழச் சுடர்மணிகளுள் ஒருவரான, கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்களால் இது கலை பாரம்பரியச் சிந்தனை ஊற்றுக்கள் உள்ளநாடு என்று விபரிக்கப்பட்டது. இதுபோன்ற கருத்துக்கள் விசேடமாக இலங்கைப் பௌத்த, சைவ சமய மக்களைச் சிந்திக்கச் செய்தது.

1873ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட வித்தியோதய பிரிவேனைக்கு கிக்கடுவ சுமங்கல தேரோ அதிபராயிருந்தார். 1875ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட வித்தியாலங்கார பிரிவேனைக்கு ரத்மலான தர்மலோக தேரோ அதிபராயிருந்தார். இவை பௌத்தமத புலமைக்கும் கீழைத்தேயக் கல்விக்கும் பெயர் பெற்ற இடங்களாக மதிக்கப்பட்டன. இக்கால பௌத்த மறுமலர்ச்சிக்கு இவர்கள் இருவரும் பலரோடு மூலகர்த்தாக்களாக இருந்தனர். மதிப்புக்குரிய அநகாரிக தர்மபாலா அவர்களின் நாமமும் இம்மறுமலர்ச்சி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். இக்காலத்தில் பௌத்த மறுமலர்ச்சியின் எதிரொலியாக, நடந்த நிகழ்ச்சி 1880ஆம் ஆண்டில், பௌத்த தலைவர் களினதும் மதகுருமார்களின் கண்காணிப்பின் கீழ் பௌத்த பிரமஞான சங்கம் உருவாக்கப் பட்டதாகும். இச்சங்கம் பௌத்த மக்களின் கல்விக்கு ஆற்றிய தொண்டு அளவிடற்பாலது. இச்சங்கமே இன்று சிறந்து விளங்கும் கொழும்பிலுள்ள ஆனந்தாக் கல்லூரி. கண்டியிலுள்ள

தருமராஜாக் கல்லூரி, காலியிலுள்ள மகிந்தாக் கல்லூரி போன்ற கல்லூரிகளையும் இன்னும் ஏறக் குறைய 500 கல்லூரிகளையும் நிறுவிற்று.

இஸ்லாமிய மாண்பையும் மரபையும் பேணி வளர்க்க முற்பட்ட இஸ்லாமிய அறிஞர் சித்திலெப்பை அவர்களால் 1891ஆம் ஆண்டில் கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கம் நிறுவப்பட்டது. அறிஞர் சித்திலெப்பையின் தீர்க்கதரிசன நோக்கினாலும் கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கத்தின், விடாமுயற்சியாலும் இஸ்லாமிய பண்பாட்டுக் கலா சாரத்தினைப் பேணிப் பாதுகாக்கக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. இவ்வியக்கத்தின் முதற் கல்லூரி கொழும்பு ஸாஹிராக் கல்லூரியாகும்.

நாம் இதுவரை கண்ட பௌத்த இஸ்லாமிய இயக்கங்களும் பௌத்த இஸ்லாமிய தலைவர்களும் இந்நாட்டின் சமய மறுமலர்ச்சியிலும் கல்வி மறுமலர்ச்சியிலும் பெற வேண்டிய இடத்துக்கு நம்நாட்டுக் கல்வி வளர்ச்சி வரலாறு சான்று பகரும்.

பௌத்த மறுமலர்ச்சி பெரும் இயக்கத்தினூடாக மலர்ந்தது. இஸ்லாமிய மறுமலர்ச்சி 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மலரத் தொடங்கியது.

சைவசமய மறுமலர்ச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டு முற்பகுதியில் அரும்பத் தொடங்கிற்று. இது இயக்கமாக வளராது ஆரம்பத்தில் ஆறுமுகனாரின் தனிப்பகீரதப் பிரயத்தனத்தாலேயே தொடங்கிற்று.

சைவ சமய மறுமலர்ச்சியின் சின்னமாக எழுந்ததே 1848ஆம் ஆண்டில் நாவலர் பெருமானின் கண்ணீரிலும் வியர்வையிலும் வண்ணார்பண்ணையில் நிறுவப்பட்ட சைவப் பிரகாச வித்தியாசாலை. இன்று இவ்வித்தியாசாலை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை எனும் பெயருடன் இயங்கி வருகின்றது. சைவ நெறியையும் தமிழ் நெறியையும் ஒருங்கிணைத்து வளர்க்க 550 வருட அந்நிய ஆட்சியின் பின் எழுந்த முதற் கல்லூரி இதுவேயாகும். 'தற்காலக் கல்விமுறைக்கேற்ப' எழுந்த இக்கல்லூரி பல கல்லூரிகளுக்கு முன்னோடியாக இருந்தது.

பௌத்த மத மறுமலர்ச்சியாளர்களில் ஒருவரான கல்விமான் பியரத்தின தேரோ 1870ஆம் ஆண்டில் தற்காலக் கல்விமுறைக்கேற்ப பௌத்த கல்லூரி ஒன்றை நிறுவினார்.

நாவலர் பெருமான் அமைத்த கல்லூரிக்கு ஆட்சியாளர்களின் ஆதரவோ ஆசீர்வாதமோ கிடைக்கவில்லை. அடிமை மோகத்தில் தங்கள் சுய உணர்வை இழந்து வாழ்ந்த சைவ மக்கள், இவரது தீர்க்க தரிசனத்தை உணரவில்லை. இப்படியிருந்தும் தமிழுக்காகவும் சைவத்துக்காகவும் 'பிடியரிசி' தண்டி, சைவ சமய, தமிழ் மறுமலர்ச்சிச் சின்னமாக, இப் பள்ளிக்கூடத்தைக் கட்டியெழுப்பிய ஆறுமுகனாருக்கு நாம் எவ்வாறு அஞ்சலி செலுத்தி னாலும் அவர் ஆற்றிய தொண்டுக்கு அது ஈடு இணையாகாது.

1848ஆம் ஆண்டில் வண்ணார்பண்ணையில் நிறுவிய சைவப் பிரகாச வித்தியா சாலையைத் தொடர்ந்து இணுவில் அம்பிகைபாகர் வித்தியாசாலை, கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை ஆகிய இரு கலைக்கூடங்களும் கோப்பாய், கோண்டாவில், புலோலி, முளாய், வேலணை, கொழும்புத்துறை, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும்

சைவத் தமிழ்க் கல்விக்கூடங்கள் எழுந்தன. நாவலர் தொடங்கிய பாடசாலைகளுள் அவர் 1878ஆம் ஆண்டு தொடங்கிய சைவ, தமிழ் - ஆங்கிலப் பாடசாலை சிறக்க இடம்பெற வேண்டும். இக்கல்லூரி தமிழ் மொழியும் ஆங்கில மொழியும் இருக்க முரண்படா நாகரிகப் பண்பினை இணைத்து வளர்க்க முடியும் எனும் தத்துவத்தை எடுத்துக் காட்டியது.

தனது தாய் நாட்டில், தேசிய இயக்கம் பல துறைகளில் வெளிக்கிளர்ந்து தோன்றியதைக் கண்ட நாவலர் சைவ சமய தமிழ் மறுமலர்ச்சி இவ்வியக்கத்தின் ஒரு கன்னம் என்பதை உணர்ந்தார்.

இலங்கை அன்னையின் சமய, மொழி விடுதலை காண விரும்பிய இவர். சைவ நெறியும் தமிழ் நெறியும் கொழிக்கும், நடராஜப் பெருமான் எழுந்தருளியிருக்கும் சிதம்பரத்திலும் 1865ஆம் ஆண்டில் சைவப்பிரகாச வித்தியாசாலையை அமைத்தார். அதைத் தொடர்ந்து மாயு+ரத்திலும் வேதாரணியத்திலும் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இலங்கையில் பிறந்து சைவமும் தமிழும் வளர்க்கத் தம்மையே அர்ப்பணித்த தர்மசீலர். தமிழ்நாட்டிலும் அவர் தொண்டினை ஆற்றினார் என்று நாம் நினைக்கும்போது ஆனந்தக் கண்ணீர் சொரிய வேண்டியவர்களாகின்றோம்.

நாவலர் தொண்டைப் பின்பற்றி விபுலானந்த அடிகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென்று 1928ஆம் ஆண்டில் பாரதத் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து, பின்னர் பல்கலைக்கழகத்தினர் வேண்டுகோளுக்கிணங்கி அண்ணாமலைப் பல்கலைக்கழக முதல் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும் கீழைத்தேயக் கல்விப்பீடத் தலைவராகவும் ஆனார் என்று நினைக்கும்போது இவ்விரு ஈழச் சுடர்மணிகளும் தமிழ் கூறும் நல்லுலகத்துக்குச் செய்த தொண்டினையிட்டு இதயபூர்வமாக நாம் மகிழ வேண்டியவர்களாகின்றோம்.

நாவலர் பெருமான் சைவசமய வளர்ச்சிக்கும் தமிழ்மொழி விருத்திக்கும் ஆற்றிய அளப்பரிய சேவையை மதித்த தமிழகமே அன்னாருக்கு, நாவலர் எனும் பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நாவலருக்குத் திருவாவடுதுறை ஆதீனம் அளித்த நாவலர் எனும் விருது பெருமானாரை அவர் இறந்தும் இறவாது வாழ வழி வகுத்துவிட்டது.

இலங்கையில் இடைநிலைக் கல்லூரிகள் பல அமைத்த கல்வி நெறியாளர், செழுங்கலை நியமங்கள் என்று பண்டைய தமிழ் இலக்கியத்தில் விபரிக்கப்படும் பல்கலைக்கழகங்களும் நமது நாட்டில் அமைக்க வேண்டுமென்று சிந்தித்தார் என்பதற்கும் சான்றுண்டு.

ஒரு நாடு அரசியல் விடுதலை பெறுவதற்குமுன் சமய, மொழி, காலாசார உணர்வு விடுதலை பெற்றால் அரசியல் விடுதலை முழுமை பெறும். சமய, மொழி, கலாசார உணர்வு வளர, பல்கலைக்கழகங்களில் தாய் மொழி போதனா மொழியாக இருத்தல் மிகவும் பயனை அளிக்கும்.

எனவே, தமிழ் மொழியைப் போதனா மொழியாகக் கொண்ட பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் உயர்வுக்கு அத்தியாவசியம் எனும் கருத்து நாவலர் மனத்தில் உதித்தது.

இக்காலம் நாடு முழுவதிலேயும் உயர்நிலைக் கல்வியையிட்டுச் சிந்தித்த காலம். 1870ஆம் ஆண்டளவில் இலங்கை சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற இலங்கைப் பிரதிநிதியாக இருந்தவர், கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்களின் தந்தை முத்துக் குமாரசுவாமி அவர்கள். நாவலர் பெருமானைச் சட்டசபையில் 'சைவநன்மக்களின் உயர் சைவநன்மகன்' என்று வர்ணித்தவர். அவர் இலங்கையின் உயர்தரக் கல்வி நிலையை மறு சீராய்வு செய்வதற்கு அரசாங்கம் ஒரு குழுவை நியமிக்க வேண்டுமெனச் சட்டசபையில் கோரி, அதற்கான குழுவும் அமைக்கப்படலாயிற்று.

நாவலரும் இலங்கையில் உயர்நிலைக் கல்வியையிட்டுச் சிந்தித்த காலமும் இதுதான்.

குழந்தைக்கு இயல்பான மொழி தாய் மொழி. தாய்மொழி மூலம்தான் ஒருவர் தனது உணர்ச்சிகளையும் உயர் கருத்துக்களையும் தெளிவாக வெளியிட முடியும். அவரது படைப்பாற்றல் வளரும்; ஆளுமை வளரும்.

மொழி என்பது, உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் கருவி. அத்தோடு நாகரிகம், பண்பாடு, பாரம்பரியம், மக்களின் எழுச்சி ஆகியனவற்றை எடுத்து இயம்புவது.

ஒரு சமூகம் தனது தாய்மொழி மூலமே தனது முழுமையை வெளிப்படுத்தலாம்.

உளவியலாளர் கருத்துப்படி, உயர்விளக்கம், நினைவாற்றல், அகக்காட்சி, மனஎழுச்சி, ஆராயும் திறன், கற்பனைத்திறன், சிந்தனை ஆற்றல், ஆக்கும் திறன் ஆகிய யாவும் தாய்மொழி மூலமே உயர்நிலையை அடையும்.

ஒவ்வொரு மகனின் தாய்மொழியும் அவனது வாழ்வை மட்டுமல்ல, அவனது இனத்தினது வாழ்க்கைத் தத்துவத்தையுமே நிர்ணயிக்கும். மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் தாய்மொழி மூலமே வளரும்.

ஒரு இனத்தின் போதனா மொழியை மாற்றி வேறு மொழியைப் போதனா மொழியாகப் புகுத்தி ஒரு இனத்தினது தனித்துவத்தையே மாற்ற எத்தனித்த ஏகாதிபத்தியங்கள் தங்களைத் தாமே அழித்துக் கொண்டதற்குச் சரித்திரம் சான்று பகரும்.

தாய்மொழி, போதனாமொழியாய் இருப்பதின் பலாபலன்களையும் பல்கலைக்கழகப் பருவத்தில் தாய்மொழி போதனா மொழியாய் இருப்பதால் நமது நாட்டின் மறுமலர்ச்சியைக் காணமுடியும் எனவும் உணர்ந்த நாவலர் தமிழ்மொழி போதனா மொழியாகவுள்ள பல்கலைக்கழகம், பொதுவில் நாட்டுக்கும் விசேடமாகத் தமிழ் பேசும் மக்களுக்கும் அத்தியாவசியம் என்பதை மக்களுக்கு எடுத்தியம்பினார்.

அவரது குறிக்கோளை அவர் எய்து முன், நாவலர் பெருமான் இறைவனடியெய்தி விட்டார்.

நாவலர் எண்ணக்கரு 1898ஆம் ஆண்டில், அவர் நோக்கின் அடிப்படையில் உதித்த யாழ்ப்பாணத்துத் தமிழ்ச்சங்கம் மூலம் ஓரளவில் சுடர் விட்டது. நாவலர் பரம்பரையில் வந்த பெருமக்களாலேயே இச்சங்கம் உருவாக்கப்பட்டது.

இச்சங்கம் ஐந்து படிவத் தேர்வுகளை நடாத்த ஒழுங்கு செய்தது. பால பண்டிதன், பண்டிதன், புலவன், ஆசிரியன், வித்துவான், கவிராசன், பௌராணிகன், நாவலன் போன்ற பட்டங்களும் இச்சங்கத்தால் வழங்கப்பட்டன. 1906ஆம் ஆண்டில் அகில இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கத்தை உருவாக்கியவர்களுள் முன்னோடியாகத் திகழ்ந்த பொன்னம்பலம் அருணாசலம் துரையவர்களும் இச்சங்கத்தின் பணியைப் போற்றினார் என்பது இங்கு நாம் நோக்கற்பாலது.

இச்சங்கம் சில வருடங்களே இயங்கினாலும் இது தமிழ்க் கல்வித் துறையில் சிறந்த மறுமலர்ச்சியை உண்டாக்கிற்று என நாம் கொளல் தகும்.

இலங்கையில் 1710ஆம் ஆண்டு தொடக்கம் உயர்நிலைக் கல்லூரிகள் பல எழுந்தன. அவற்றினுள் திறம்படச் சேவை செய்த ஸ்தாபனம் தற்பொழுது யாழ்ப்பாணக் கல்லூரியாக விளங்கும் கலைக் கோயிலாகும்.. இலங்கையில் உள்ள பல கல்லூரிகள், விசேடமாகக் கிறித்தவக் கல்லூரிகளும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி போன்ற சில சைவக் கல்லூரிகளும் கல்கத்தா, இன்றைய தமிழ்நாட்டு (மதராஸ்) பல்கலைக் கழகங்களோடு சில பொதுக்கலைத் தேர்வு, கல்விமாணிப்பட்ட, இணைப்புக் கல்லூரிகளாகவும் சில பொதுக்கலைத் தேர்வு இணைப்புக் கல்லூரிகளாகவும் இயங்கின.

பொதுவில் இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி உணர்வை, செழுமை பெற வைத்தவர்களுள் நாவலர் பெருமானும் ஒருவர் என்று கொளல் சாலவும் பொருந்தும்.

ஆசிரியர் நாவலர் மொழிபெயர்த்த நூல் ஒன்றினையும் நமக்கு வசன நடையில் அவர் தந்துதவிய நூல் ஒன்றினையுமிட்டு, குறிப்பிடுவது இலங்கையின் இன்றைய சூழ்நிலையில் பொருத்தமாகும்.

முதலாவது நூல் விவிலியம், புனித பைபிள். பைபிள் எனும் கிரேக்கச் சொல்லுக்குப் புத்தகம் என்பதே கருத்து. உலகத்திலேயே கூடிய தொகையான மக்கள் வாசிக்கும் நூல்களுள் ஒன்று பைபிள். இன்று கிறித்தவ ஆலயங்களிலும் கிறித்தவ மக்களாலும் போற்றி வாசிக்கப்படும் புனிதநூல் பைபிள். புனித பைபிள், 1850ஆம் ஆண்டில் இன்று யாழ்ப்பாணத்தில் பொலிந்து விளங்கும் மத்திய கல்லூரியின் அன்றைய அதிபரான யாழ்ப்பாணக் கல்வி உலகே மறக்க முடியாத பீற்றர் பேர்சிவல் அடிகளின் வேண்டு கோளுக்கிணங்கி நாவலரால் ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. நாவலர் மொழிபெயர்த்த விவிலியம் சென்னை மாநகரிற் கூடிய குழு ஒன்றினாற் பல மொழிபெயர்ப்புக்களில் இதுவே சிறந்தது என்று எற்றுக்கொள்ளப்பட்டு, கிறித்தவத் திருச்ச பையின் அங்கீகாரம் பெற்றதென்றால் இது ஈழத்துக்கு நாவலர் ஈட்டிக் கொடுத்த பெருமை என்றே கொள்ள வேண்டும்.

இலங்கையின் முன்னைநாள் அத்தியட்சகர் அறிஞர் ஒருவர் நாவலர் விவிலியத்தினை மொழிபெயர்த்ததையிட்டு விபரிக்கும்போது நாவலர் இப்பணியினால் தமிழ் வசனநடை வளர்ச்சிக்கு மட்டுமல்ல கிறித்தவ வேத வளர்ச்சிக்கும் அருந்தொண்டு புரிந்துள்ளார் என்று கூறாநிற்பர்.

எனவே, தமிழ் கூறும் கிறித்தவ நல்லுலகம் நாவலருக்குக் கடமைப்பாடுடையது.

நாவலர் வசன நடையிலே தந்துதவிய பல நூல்களுள் ஒன்று சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம். 63 சைவ சமயப் பெருமான்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பான இந்நூல், தமிழ் நாட்டின் கலாசாரப் பண்பாட்டு வளத்தினை, விசேடமாக, சைவசமய நெறியின் வளத்தினை, செவ்விதின் விளக்கிக் காட்டுவது. பல்வகை மரபுகளிலே தோன்றியது சைவநெறி; சைவநெறி என்பது சமரச நெறியே எனும் கருத்தினை எடுத்துக் காட்டுவது. இந்நெறி யாவருக்கும் பொதுவாய் சமய அறநெறி என்று எடுத்துக்காட்டும் நூலை வசன நடையிலே நமக்குத் தந்தருளிய செம்மலுக்கு நாம் என்ன கைமாறு செய்யலாம்?

நாவலர் பெருமான் சிறந்த நாட்டன்பும் உலக நோக்கும் கொண்டவர். தமிழும் சங்கதமும் ஆங்கிலப் புலமையும் கொண்டவர். 1871ஆம் ஆண்டளவிலேயே இலங்கை அன்னையின் முழுமையையும் நிறைவையும் காணவிரும்பிய சீலர் ஆறுமுகனார். சிங்கள மொழியும் தமிழ் மொழியும் இலங்கையின் தேசிய மொழிகள் என்று கொண்டார். ஆங்கிலம் அவர் வாழ்ந்த காலத்தில் தொழில் துறை மொழி.

தாய்மொழி மூலம் ஆளுமை, மொழிப்பற்று, அம்மொழியின் அடிப்படையில் எழுகின்ற கலாசாரம், பண்பாடு வளரும். ஆங்கில மொழி மூலம் உலக அறிவு, உலக நெறி வளரும். நமது சகோதர மொழியாகிய சிங்களமொழி மூலம் நாட்டில் சகோதரப் பான்மையும் கலாசார ஒற்றுமையும் வளரும். நாவலர் கண்டது இந்த மும்மொழித் திட்டமே.

தமிழ்மொழி இந்நாட்டில் சட்டபூர்வமான தமிழ் மக்களின் தனிமையைப் பாதுகாக்கும் மொழியாக உருவாக ஏதுக்கள் இருந்தால் நாவலர் கண்ட மும்மொழித் திட்டத்தை நாம் வரவேற்க வேண்டும்.

நாவலர் பெருமான் கவிதை இயற்றவதிலும் ஆற்றல் பெற்றிருந்தார். ஆனால் இறைவனைப் பாடுவதிலேயே அவர் முக்கிய கவனமெடுத்தார்.

ஞானத்துக்கும் நல்லறிவுக்கும் அறிகுறியாக கணேசப் பெருமான் இருக்கின்றார். ஞானமிருக்குமளவு வாழ்வும் நல்வாழ்வு ஆகும். ஞானத்துக்கும் நல்லறிவுக்கும் சின்ன மான சிவனுக்கும் சக்திக்கும் பிறந்த கணேசபிள்ளையை,

சீர்பூத்த கருவிநூல் உணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிதமாக மங்கள் ஓங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிதுதூங்கப்
பிறைபூத்த சடை மௌலிப் பிரானார்தந்த
வார்பூத்த அறிவிச்சை செயலென்றோதும்
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்

என்று நாவலர் வழுத்துவார்.

ஞானமும், நல்லறிவும் தத்துவரூபத்தில் கணேசரிடம் இடம்பெறுகிறது. ஞானமும் நல்லறிவும் பிரயோக ஞானமாகவும் அறிவாகவும் வளரவேண்டும். செயலில் காட்டப்படாத அறிவு ஓங்கியிருப்பதும் மறைந்திருப்பதும் ஒன்றாய் விடுகிறது. வாழ்வில் அதைப் பயன்படுத்தும் பொழுதே உண்மையில் அது ஓங்கியிருப்பதன் மகிமை முழுதும் வெளியாகிறது. அறிவைச் செயலாக மாற்றுபவர் முருகக் கடவுள் என்பது சைவ நன் மக்கள் கொள்ளும் துணிபு. வாழ்வை ஆற்றல் நிறைந்த செயலைப் புரியும் முருகப் பெருமானையும் நாவலர் இறைஞ்சி நின்றார்.

ஞானத்தை ஓங்குவிக்கின்ற கணேசனையும் வாழ்வை ஆற்றல் படைத்ததாக்குகின்ற முருகவேளையும் கல்வி நெறியாளர் நாவலனார் பாடிப் பாடிப் போற்றியதில் வியப்பில்லை அன்றோ. நாவலர் குலதெய்வம் நல்லூர் முருகமூர்த்தி, என்பதும் தாம் நினைவிற் கொள்ள வேண்டியது.

இறைவனைக் கவிதைமூலம் வழுத்திய நாவலர் இதற்குப் புறநடையாக அவரது ஞானகுரு சரவணமுத்துப் புலவர் மறைந்தவிடத்தும், அவரது உத்தம மாணாக்கராகிய சுப்பிரமணியபிள்ளை மறைந்தவிடத்தும் ஆற்றொணாத் துயரத்தினால் கவிதை பொழிந்தார். இவரது குருபக்தியும் மாணவர் தோழமையும் இதிலிருந்து புலனாகின்றன.

நாவலர் பெருமான் ஞானவிளக்கு, பல்கலைப் புலவன், சொல்லுதல் வல்லான், துணிவுகொள் சிந்தனையான். தம்மை ஈன்றெடுத்த நாட்டிலும் தமது சகோதரர் வாழும் நாட்டிலும் சைவமாம் சமயமும் பொலிந்த தமிழும் சீருறப்பணி புரிந்தவர்.

சைவ நன்மக்களாய்ப் பிறந்த நாம். எல்லோரிடத்தும் கேண்மையுடையோராய் உயர்ந்தோர், தாழ்ந்தோர், அறிஞர், பாமரர் என்ற பாகுபாடுகளை அகற்றி, நமக்குள்ளே ஒரு தன்மையராக வாழ்வது மட்டுமல்லாது இலங்கை அன்னையின் மக்கள் எல்லோரோடும் ஒரு தன்மையராக வாழ வேண்டும்.

தம்மை யீன்றெடுத்த அரசியல் நாட்டிற்
சைவமாம் சமயமும் புலவர்
செம்மைசே ருளத்திற் பொலிந்தமுத் தமிழும்
சீருறப் பணிபல புரிதல்
இம்மையிற் பிறவிக் கியைந்தமா தவமென்
றெண்ணியே விடைபெற்று மீண்டார்
எம்மையும் பயந்த வீழ மரநாட்டின்
இணையிலாப் பெருநிதி யனையார்

என்று சுவாமி விபுலானந்த அடிகள் நாவலர் பெருமானுக்கு அஞ்சலி செலுத்துவார்.

நாவலர் அகத்திலே தோன்றிய 'கற்பனைச் சமுதாயம்' இலங்கையில் உயிர்பெற வேண்டும். நம்மை இன்று வாழவழி வைத்த நாவலர் போன்ற பெருமக்களுக்கு உள்ளக் கமலத்தால் யாம் மலர் சொரிய வேண்டும்.

'இந்துசாதனம்' மறுபிரசுரம்

நாவலர் தொடக்கிவைத்த சைவசமயக் கல்வி மறுமலர்ச்சி

வ. ஆறுமுகம்

அந்நியராட்சிக்குட்பட்டிருந்த இலங்கையில், பத்தொன்பதாம் நூற்றாண்டை, குறிப்பாக அதன் பின்னரைக் கூறினை, சுதேசிய சமய மறுமலர்ச்சிக் காலம் எனக் கொள்ளலாம். பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயருடைய ஆதிக்கத்துக்கு உட்பட்ட காலத்திலிருந்து இலங்கையின் புராதன சமயங்களான பௌத்தமும் சைவமும் இஸ்லாமும் கிறீத்தவத்தின் மதமாற்றுப் பிரசாரத் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்னடைந்திருந்தன. போர்த்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் என்ற ஒழுங்கில் இலங்கையில் அரசாதிக்கம் பெற்றிருந்த மேலைநாட்டார் அனைவரும் கிறீத்தவத்தின் வளர்ச்சிக்கே ஆதரவை அளித்தனர். அதன் விளைவாகச் சொந்த நாட்டிலேயே பௌத்தம், சைவம், இரண்டும் நலியும் நிலை காணப்பட்டது. அவ்வகையான நீண்டகால அமுக்கம் ஏற்படுத்திய பல்வேறு பிரச்சினைகள் மக்கள் மத்தியிலே ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியின் விளைவே பத் தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட சுதேசிய மறுமலர்ச்சி.

அம் மறுமலர்ச்சியின் காரண கர்த்தாக்களாகவும், உந்துசக்திகளாகவும் அதன் பிரதி பிம்பங்களாகவும் விளங்கியவர்கள் பலர். பௌத்தத்திற்கு மீகெதுவத்த குணானந்த தேரோ, ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரோ, கேணல் ஓல்கொட், அநகாரிக தர்மபால போன்றோரும் இஸ்லாத்துக்கு அறிஞர் சித்திலெப்பையும் சைவத்துக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் அதில் குறிப்பிடக் கூடியவராவர்.

இலங்கையில் ஏற்பட்ட சுதேசிய சமய மறுமலர்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில் அதன் ஆரம்ப குரல் தெற்கிலே ஒலித்தது என்று கூறப்படுவதுண்டு. இக்குறிப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஸ்ரீ சுமங்கல தேரோ, குணானந்த தேரோ போன்ற பௌத்த சமயத் தலைவர்களுக்கும் கிறீத்தவப் பாதிரிமாருக்குமிடையே இடம்பெற்ற சமயஞ் சார்ந்த வாதத்தொடர்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஒன்றாகும். தெற்கில் கிறீத்தவத்துக்கு எதிரான முதற் குரல் என அதனைக் கொள்ள முடியும். அதேபோல,

1847ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன் கோவில் சமயப் பிர சங்கமாக ஒலித்த ஆறுமுகநவாலருடைய குரலே வடக்கில் ஒலித்த முதற் குரலெனலாம்.[1]

யாழ்ப்பாணத்துச் சமூக வாழ்க்கை என்னும் வானில் நாவலர் என்னும் 'சூரியன்' தோன்றிய காலம் (1822 - 1879) மிகவும் இக்கட்டான காலமாகும். கிறீத்தவ மிஷனரிமாரின் பிரசாரப் பிடியினுள் சிக்குண்ட இளந் தலைமுறையினர் தமது சொந்த மதம், கலாசாரம் என்பவற்றை மறந்திருந்த காலம் அது. ஆங்கிலக் கல்வி, அரச உத்தியோகம், பட்டம், பதவி என்ற கவர்ச்சிகளுக்கு ஆளாகித் தமது பாரம்பரியத்தையே மறந்து, துறந்து மக்கள் 'இருளில்' தத்தளித்துக் கொண்டிருந்த காலம் அது. அந்த நிலை புராதன சமய ஈடுபாடுடை யோரிடத்து ஒரு வெதும்பலை ஏற்படுத்தியது. தமது பிள்ளைகள் அந்நிய மார்க்கத்தில் மோகங்கொண்டலைவதைப் பார்த்துப் புழுங்கிய சமூகத்தின் 'விடிவெள்ளி'யாகத் தோன்றினார் நாவலர்.

சி.வை. தாமோதரம்பிள்ளையின்,

நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
யாத்தனறி வெங்கே யறை.

என்ற பாடல் நாவலர் பிறப்பின் பொருத்தப்பாட்டை வெகு அழகாகப் பிரதிபலிக்கின்றது.

காலத்தின் தேவை அதற்குகந்த தலைவனைத் தோற்றுவிக்கின்றது என்பர். நாவலர் பெருமானைப் பொறுத்தவரையில் இக்கருத்து முற்றிலும் உண்மை. அவர் தோன்றிய காலம் யாழ்ப்பாணத்துச் சைவ சமயிகளிடையே சமயப் பற்றையும் விழிப்புணர்ச்சியையும் வளர்க்க வேண்டிய காலமாயிருந்தது. அதற்குப் பொருத்தமானவராகவே நாவலர் தோன்றிச் செயற்பட்டார். அவரது இளம் பருவத்தில் கணிசமான பகுதி (பதினான்கு ஆண்டுகள்) யாழ்ப்பாணம் மெதடிஸ்த மத்திய பாடசாலையில் (இன்றைய மத்திய கல்லூரி) கிறீத்தவர் மத்தியில் கழிந்தது. ''உண்மையை நோக்குமிடத்து பதினான்கு வருடக் கிறித்தவச் சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது. பதினான்கு வருடக் கிறீத்தவச் சூழல் அமையாதிருந்தால் ஆறுமுகநாவர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை'' என்ற கூற்று[2] இங்கு கவனிக்கத்தக்கது. கிறீத்தவர்களுடன் கொண்ட நெருக்கமான தொடர்பின் பயனாக நாவலர், அவர்களுடைய நோக்கம், நடைமுறை உத்திகள் யாவற்றை யும் அறிந்துகொண்டார்.[3] அந்த அநுபவம் கிறீத்தவ மிஷனரிமாருடைய பிரசாரத்தை முறியடித்து சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட உதவியது.

இலங்கையில் கிறீத்தவத்தைப் பரப்புவதில் மிஷனரிமார் கையாண்ட உத்திகளில் இரண்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. ஒன்று சிறுவர்க்குக் கல்வி வழங்குவது என்ற முறையில் அவர்களை மதம் மாற்றி, பின்னர் பிள்ளைகளுக்கூடாகப் பெற்றாரையும் மதம் மாற்றுதல், இதில் ஆங்கிலக் கல்வி மிகவும் சக்திவாய்ந்த கவர்ச்சிப் பொருளாக அமைந்தது. ஆங்கிலக் கல்வியைக் கற்று அதற்கூடாக அரச உத்தியோகத்தைப் பெறலாம் என்ற

ஆசையின் நிமித்தம் கிறீத்தவத்தைத் தழுவிய இலங்கையர் தொகை கணிசமானது. யாழ்ப்பாணத்தவருக்கும் இது பொருந்துவதாகும். கிறீத்தவர்கள் கையாண்ட இரண்டாவது உத்தி மேடைப் பிரசங்க முறையாகும். தெய்வ ஆராதனைக் கூட்டங்களிலும் பொது வைபவங்களிலும் தமது கருத்துக்களை வலியுறுத்தியும் எதிர்க் கருத்துக்களை மறுத்தும் கிறீத்தவ சமயப் பிரசாரத்தைப் பாதிரிமார் மேற்கொண்டனர். கிறீத்தவரல்லாதோரிடையே 'காணப்பட்ட குறைபாடுகளை' கோடிட்டுக் காட்டி அவற்றைத் தீர்ப்பதற்குத் தமது 'மார்க்கத்தை'ப் பற்றும்படி மக்களைத் தூண்டினர். இதுவும் ஓரளவு வெற்றியளித்தது.

கிறீத்தவர் மத்தியில் வாழ்ந்த அனுபவம் அவர்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கு நாவலருக்கு வழியைக் காட்டி வலிமையையும் ஊட்டியது. எந்தப் பிரசங்க முறை கிறீத் தவத்துக்காகப் பயன்பட்டதோ, அதே பிரசங்க முறை நாவலருடைய நாவில் சைவப் பிரசாரக் கருவியாக மாறியது. முக்கிய இடங்களில் சைவப் பள்ளிக்கூடங்களை நிறுவுவதும், சைவத்திற்காகப் பிரச்சாரத்தை மேற்கொள்வதும் சைவத்தையும் தமிழ்க் கல்வியையும் வளர்ப்பதற்கேற்ற கருவிகளாகும் என்பது நாவலருடைய கருத்தாயிருந்தது.[4] இவ்வழிகளில் கல்வி வாய்ப்புக்காகச் சைவச் சிறார்கள் கிறீத்தவப் பள்ளிக்கூடங்களை நாடவேண்டிய தேவையை நீக்கலாம் என நம்பினார். இதற்காக ஆங்காங்கு சைவப் பள்ளிக்கூடங்களை நிறுவும் முயற்சியில் இறங்கினார்.

சைவக் கல்வியின் விருத்திக்காக நாவலரால் நிறுவப்பட்ட முதலாவது பள்ளிக்கூடம் 1848இல் வண்ணார்பண்ணையில் அமைக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையாகும். அதனைத் தொடர்ந்து 1865இல் தென்னிந்தியாவில் சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்தில் கோப்பாயிலும் மேலும் இரண்டு சைவத் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் அவரால் தோற்றுவிக்கப் பட்டன. நாவலருடைய முன்மாதிரியைப் பின்பற்றி, அவருடைய அபிமானிகளால், யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலும் சைவப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்விதமாகப் பள்ளிக்கூடங்கள் தோன்றிய இடங்கள் கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித்துறை, மாதகல், உடுவில், வேலணை ஆகிய பகுதிகளாகும்.[5] இப்பள்ளிக்கூடங்கள் நெடுங்காலமாக, அரச உதவியில்லாமல், கஷ்டநிலையில் இயங்க வேண்டியிருந்தது.

இவ்விதம் எழுந்த பள்ளிக்கூடங்கள் அனைத்தும் சைவசமய மரபில், தமிழ் மொழிக் கூடாக, கல்வியளித்தன என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றுக்கூடாகச் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் பேணிப் பாதுகாக்க நாவலர் சைவம், தமிழ் ஆகிய பாடங்களுக்குப் பயன்படக்கூடிய பாடநூல்களையும் எழுதி வெளியிட்டார். சைவ சமயம், சைவ வினாவிடை, பால பாடம், இலக்கணச் சுருக்கம் போன்ற நூல்கள் இவ்வரிசையிற் குறிப்பிடத்தக்கனவாகும். இவை ஒவ்வொன்றும் வகுப்புக்கும் வயதுக்கும் ஏற்பத் தரம் பிரித்து எழுதப்பட்டவை என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

ஆங்காங்கு சைவத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதன் மூலம் சைவப் பிள்ளைகளுக்கு அவர்களுடைய சமயச் சூழலிற் கல்வியளிக்கக் கூடியதாயிருந்தாலும், அவர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்குக் கிறீத்துவ மிஷனரிமாருடைய பள்ளிக்கூடங்

களுக்கே செல்ல வேண்டியிருந்தது. அங்கே அவர்கள் கிறீத்தவ முறைகளைப் பின்பற்றும் படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அவ்விதமான துர்ப்பாக்கிய சம்பவங்கள் நாவலரை உள்ளங் குமுறச் செய்தன. எனவே, சைவ வமய மரபில் ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பதற்காக ஒரு ஆங்கிலப் பாடசாலையை 1872இல் வண்ணார்பண்ணையில் நாவலர் ஆரம்பித்தார். ஒரு ஐரோப்பியரைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அப்பாட சாலை அதிக காலம் நிலைத்து நிற்கவில்லை. சைவச் சிறுவர்கள் கிறீத்தவருடையதல்லாத ஒரு பள்ளிக்கூடத்தில் ஆங்கிலக் கல்வியைப் பெறக்கூடிய நிலையைக் கண்ட கிறீத்தவ மிஷனரிமாரின் கடும் எதிர்ப்பும், அவர்களுடைய செல்வாக்குக்குட்பட்ட அரசு நிதியுதவி வழங்கத் தவறியமையும், பொதுமக்களுடைய ஆதரவு அருகியமையும் அப்பாட சாலையை மூடிவிடும் நிலையை உருவாக்கின.[7]

சைவக் கல்வியை வளர்ப்பதற்கு நாவலர் செய்தவற்றோடு அவர் செய்ய நினைத்த வற்றையும் நோக்குதல் வேண்டும். பள்ளிக்கூடங்களை அமைத்துச் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் கருத்தைச் செலுத்திய நாவலர் அனாதைகளுடைய கல்வியிலும் அக்கறை கொண்டிருந்ததை அவருடைய பேச்சுக்களில் இருந்து அறியக் கூடியதாயிருக் கிறது. அனாதைகளாயிருந்த சைவச் சிறுவர் சிறுமியரை, பேணிப் பாதுகாப்பது என்ற 'போர்வையில்' கிறீத்தவர்களாக மதம் மாற்றும் முயற்சியினை அக்காலக் கிறீத்தவப் பாதிரிமார்கள் கையாண்டு வந்தனர். அதனை உணர்ந்த நாவலர், அந்நிலையைத் தவிர்ப்பதற்கு, சைவச் சிறார்களுக்கென அனாதை இல்லங்களை அமைக்கத் திட்டம் தீட்டியிருந்தார். அத்தோடு சைவ சமய அறிவையும் உணர்வையும் வளர்ப்பதற்குச் சைவ சமயப் பிரசாரகர்களை உருவாக்கிப் பயிற்சியளிக்கவும் திட்டமிட்டிருந்தார்.[8] அக்கருத்துக்கள் கைகூடுமுன் அவர் மறைந்தமை சைவ உலகின் துர்ப்பாக்கியமேயாகும்.

கல்வி முயற்சியாக நாவலர் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொகுத்து நோக்கும் போது அவை இலங்கைக் கல்வி வரலாற்றிலேயே முன்னோடிகளாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி, சமய போதனை என்பவை இன்று நமது கல்வி அனுட்டானத்தில் நடைமுறைக்கு வந்துவிட்டாலும் நாவலருடைய செயற்பாட்டில் அன்றே இடம்பெற்று விட்டன.[9] அவர் மேற்கொண்ட பிரசங்கங்கள், வெளியிட்ட பிரசுரங்கள் எல்லாம் பொது மக்களிடையே சைவசமய உணர்வையும் அறிவையும் வளர்ப்பதில் வகித்த இடம் மறக்கத்தக்கதன்று. இன்றைய வளர்ந்தோர் கல்வி, முறைசாராக் கல்வி முயற்சிகளோடு அவற்றை ஒப்பிட்டு நோக்குவது பொருத்தம் உடையதாகும்.

நாவலருடைய காலத்தில் சைவ மறுமலர்ச்சியில் முக்கிய தேவைகளாக இருந்தவை சைவ சமயிகளிடையே மதமாற்றத்தைத் தடுத்தல், வைதீக நெறியினைச் சைவர்களிடையே பாதுகாத்தல் என்ற இரண்டுமாகும். அவரால் வெளியிடப்பட்ட சைவ சமய நூல்கள் சைவ சமய பாரம்பரியத்தையும் இலட்சியங்களையும் பேணி வளர்ப்பதில் அன்றுமட்டு மல்லாமல் இன்றும் பயனளிக்கின்றன. இது ஒன்றே நாவலருடைய பங்களிப்பின்

பெருமையைக் காட்டப் போதுமானதாகும்.[10] கிறீத்தவ மதமாற்று முயற்சிகளுக்கெதிரான 'பாதுகாப்பு அரண்'களாக அவர் தோற்றுவித்த பள்ளிக்கூடங்கள் அமைந்தன.

1879இல் நாவலர் மறைந்தபொழுது அவருடைய பணி தொடர்வதற்கான உணர்வும் வலுவும் சைவ சமயத்தவர்களிடையே வளர்க்கப்பட்டு விட்டன. அதன் பயனாக, நாவலர் தொடங்கிய பயணம் நிறுவனங்களாலும், தனிநபர்களாலும் தொடரப்படுவதைக் காணலாம். நாவலருடைய மறைவுக்குப்பின் அவரது அபிமானிகள் சிலர் சேர்ந்து 'சைவப் பிரகாச சமாஜீயம்' என்ற ஒரு சங்கத்தையும் 'உதயபானு' என்ற தமிழ்ப் புதினப் பத்திரிகையையும் 16.08.1880இல் தொடங்கினர்.[11] எனினும் இச்சங்கம் நெடுங்காலம் நிலைத்து நிற்கவில்லை. அதனிடத்தில் 1888இல் 'யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை' உருவாகியது. அதுவும் நாவலருடைய அன்பர்கள், அபிமானிகள், மாணவர்கள், உறவினர்கள் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. அதன் நோக்கம், செயற்பாடு எல்லாவற்றிலும் நாவலருடைய முயற்சிகளின் சாயலைக் காணலாம்.[12]

நாவலருடைய பாதையில் தொடர்ந்து சென்ற தனிநபர்களில் முக்கியமானவர், சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆவர். நாவலருடைய காலத்திலேயே, நாவலருடைய ஆசீர்வாதத்துடன், சட்ட நிரூபண சபைக்குத் தமிழரின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பட்டவர். 'இந்துக்களின் தலைசிறந்த சீர்திருத்தவாதி' என்ற நாவலருடைய பெருமையை அந்த அவையில் நிலைநாட்டியவர் அவர். சகல வழிகளிலும் 'நாவலருடைய வாரிசு' என்று மதிக்கத் தக்கவர். அவருடைய முயற்சிகளிலும் சைவ சமயக் கல்வி, கலாசாரம் ஆகியவற்றைப் பேணுவது பிரதான நோக்கமாக இருந்ததைக் காணலாம்.

அவ்விதம் செயற்பட்ட நிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோருடைய உழைப்பு நாவலர் தொடக்கி வைத்த பணியை நாடெங்கிலும், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், பரப்பியது. அது, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புகளினால், இருபதாம் நூற்றாண்டிலும் தொடரப்பட்டது. அத்தொடர்ச்சியின் விளைவே இன்றும் எமது நாட்டில் சைவத்தையும் சைவ சமய மரபுக் கல்வியையும் மிளிரவைத்தது.

அடிக்குறிப்புக்கள்

1. இப்பிரசங்கம் 31.12.1847இல் நடைபெற்றது. ஆதாரம் Morning Star, January 13th,1848.
2. சி. கணபதிப்பிள்ளை, நாவலர் (யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை 1968), ப. 6. பதினான்கு வருட கிறிஸ்தவச் சூழல் எனக் குறிப்பிடப்படுவது நாவலர் அவர்கள் யாழ்ப்பாணம் மத்தியக் கல்லூரியில் மாணவனாகவும், ஆசிரியராகவும், தமிழ்ப் பண்டிதராகவும் கழித்த பதினான்கு வருடங்களாகும்.
3. James Cartman (Rev), Hinduism in Ceylon, (Colombo: M.D. Gunasena, 1957), p. 55.
4. Report of the Hindu, Board of Education for 1929. (Jaffna: The Hindu Board of Education, 1930), p. 2.
5. S. Rajaratnam, "Hindu Education in Jaffna", a paper read before the Hindu Students' Movement, Colombo, Appendix II of the Report of the Hindu, Board of Education for 1929, op. cit., p. 20.
6. Cartman, op. cit., p. 55.
7. Rajaratnam, op. cit., pp. 20 – 21.

8. Ibid
9. K. Lakshmanan, "Foresight in Education" Navalar Conference Souvenir (Colombo: Sri La Sri Arumuga Navalar Sabhai, 1969), pp. 51 – 54.
10. K.M. De Silva, "The Religions of the Minorities" in K.M. De Silva (Ed.), Sri Lanka A Survey) (London C. Hurst & Company, 1977), for Lake House Bookshop, Colombo), p. 389.
11. V. Ragunatha Mudaliyar, A Historical Note (Jaffna: Saiva Paripalana Sabhai, 1973), p. 2.
12. Cartman Op. cit., p. 55.

'சிறப்பு மலர்', தேசிய தமிழ் சாகித்திய விழா,
இந்து சமய தமிழ் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, கொழும்பு,
1991, பக். 1 - 5.

நாவலர் அடிச்சுவட்டில் கல்வி

எம்.எம். சமீம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய சமயத் தொண்டு, இலக்கியப்பணி ஆகியவற்றைப் பற்றிப் பரவலாக ஆராய்ந்து வரும் இக்கால கட்டத்தில் அவரது கல்விக் கருத்துக்கள் இன்றைய சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் கல்விக் கொள்கைகளின் மாற்றங்களுக்கமைய எவ்வாறு பயன்படலாம் என்ற ஆராய்ச்சி நாவலர் பணியின் முக்கியத்துவத்தை இன்னொரு துறையில் அறிந்து கொள்வதுடன் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கும் பயன் அளிப்பதாக அமையும். எனவே, எமது நாட்டுக் கல்விக்கொள்கையில் நின்று ஏற்பட்டு வரும் மாற்றங்களை நாவலரது கல்விக் கருத்துக்களின் பின்னணியில் ஆராய்வது சாலச் சிறந்ததாகும்.

'யுனெஸ்கோ' ஸ்தாபனம் சமீபத்தில் நடாத்திய இரு ஆராய்ச்சிகள் இன்றைய கல்வி வளர்ச்சியினால் மனித சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் சமூக, உளவியல் மாற்றங்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. 'உலகக் கல்வி நிலையில் ஏற்பட்ட நெருக்கடி' என்ற தலைப்பில் வெளிவந்த ஆராய்ச்சியும் சமீபத்தில் வெளிவந்த 'வாழ்வாங்கு வாழக் கல்வி' 'யுனெஸ்கோ' அறிக்கையுமே இங்கு குறிப்பிடப்படும் இரு ஆராய்ச்சிகளுமாகும். கல்வியென்றால் என்ன? கல்வியின் நோக்கங்கள் என்ன? என்பன தொடர்பாகப் பொதுவாக இரு கருத்துக்கள் கூறப்பட்டு வந்தன. கல்வியென்பது பண்டைய பாரம்பரியங்களைப் பேணுவது. கல்வியின் நோக்கம் - ஆற்றல் உள்ள சமுதாயத்தை உருவாக்குதல் என்பனவே இவ்விரு கருத்துக்கள். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நோக்கங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இப்புதிய நோக்கங்களை மூன்றாக வகுத்துக் கூறலாம். முதலாவது கல்வியென்பது மனித சக்தியிற் செய்யும் முதலீடு. அதாவது கல்வியை மனித சக்தியை அதிகரிக்கச் செய்யும் மூலதனமாகக் கணித்தல். இரண்டாவது நாட்டின் சக்திக்கும் வளர்ச்சிக்கும் கல்வியைப் பயன்படுத்துதல். அதாவது நாட்டின் தொழில்களுக்கேற்பக் கல்வியை அமைத்தல். மூன்றாவது அரசியற் கொள்கைகளுக்கேற்பச் சமுதாயத்தை உருவாக்குதல். இப்புதிய நோக்கங்களினால் சமூகத்திலேற்பட்ட விளைவுகள் எவை? என்பதைப் பற்றித்தான் மேற்கூறிய ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதனையே பிலிப்கூம்

(Philip Coomb) என்ற ஆசிரியர் உலகக் கல்வி நிலையில் ஏற்பட்ட நெருக்கடி எனக் கூறுகிறார். இந்நெருக்கான நான்கு முக்கிய காரணங்களையும் அவர் கூறியுள்ளார். கல்வி பயில்வோர் தொகை கூடியமை, கல்வி முதலீடு செய்யப் போதிய வசதியில்லாமை, கல்வித் திட்டத்திலுள்ள செயலடக்கம், சமுதாயத்திலுள்ள செயலடக்கம் என்பனவே அக்காரணங்கள். ஒவ்வொரு நாடும் தனது தொழில் வளர்ச்சிக்குரிய மூலதனமாக மட்டும் கல்வியைக் கணிக்க முற்பட்டதன் விளைவாகச் சமுதாயத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. சி.பி. ஸ்னோ (C.P. Snow) என்ற ஆசிரியர் இரு கலாசாரங்கள் என்ற தமது நூலில் கூறியுள்ளதுபோல் ''விஞ்ஞானத்தை மட்டுமே கற்ற ஒரு சாராரும் கலை இயக்கியத்தை மாத்திரமே கற்ற ஒரு சாராருமாக மனித சமுதாயம் வெவ்வேறாக வளர்ந்த காரணத்தால் ஒருவரை யொருவர் புரிந்துகொள்ளாத நிலையில் இருக்கின்றனர். விஞ்ஞானம் கற்றவர்கள் சமூக உணர்வேயில்லாமல் விஞ்ஞானத்தில் மட்டுமே அக்கறை காட்டியதனால் 'இயந்திர மனிதர்கள்' என்று கூறுமளவுக்கு அவர்கள் உணர்வற்ற ஒரு சமூகமாக வளர்ச்சியடைந்தனர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலாளித்துவ நாடுகள் தொழிலை மையமாக வைத்து விஞ்ஞானக் கல்வியை மட்டுமே புகட்டியதன் விளைவாக இதயமில்லாத இயந்திர சமுதாயம் ஒன்று தோன்றக் காரணமயிருந்தது. இதனையே 'இயந்திரக் கலாசாரம்' எனச் சிலர் கூறுகின்றனர். இதன் விளைவாகப் பண்டைய பாரம்பரியமும் கலாசாரமும் மக்கள் மனதினின்றும் அகன்று வருகின்றன. பயன் கருதியே ஒவ்வொன்றும் கணிக்கப்படும் காலமாக இன்றைய காலம் உள்ளது. மனிதனுடைய வாழ்க்கையில் இன்று 'கொம்யூடர்கள்' ஆட்சி செலுத்தி வருகின்றன. ஆசிரியர்களுடைய உதவியில்லாமல் கல்விப் பயிற்சி பெறுமளவுக்கு இயந்திரமூளை வளர்ந்துள்ளது. இவ் இயந்திர சமுதாயத்தின் வளர்ச்சி எந்த அளவு மனித குலத்தைப் பாதித்துள்ளதெனின் எந்தவொரு கருத்தையும் அல்லது எந்தவொரு பொருளையும் நிரந்தரமாகக் கணிக்காமல் எதனையும் தற்காலிகமானதாகவே கணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் பிரபதிபலிப்புத் தான் முன்னேற்றமடைந்த சில மேனாடுகளிலுள்ள இளைஞர் சமுதாயத்தின் விரக்தியாகும். விரக்தியுற்ற இளைஞர் சமுதாயம் ஆத்மீக வளர்ச்சி என்ற நினைப்பில் காம உணர்ச்சிகளை வளர்க்கின்றனர். இந்தியா போன்ற கீழைத்தேயங்களின் தத்துவத்தில் சரணடைய முயல்கின்றனர். சுருங்கச் சொன்னால் மேனாட்டுச் சமுதாயம் இன்று ஒரு தத்துவத்தைத் தேடி அலைகின்றது.

இப்பயங்கர நிலையைக் கண்டு அஞ்சியே 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தாரின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆயிரத்துத் தொளாயித்து எழுபத்திரண்டாம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் பாரிஸில் நடந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையின் கருத்துக்களை உலக முழுவதும் பரப்புவதற்கு இவ்வாய்வாளர் எண்ணங் கொண்டனர். இவர்கள் பரப்புவதற்கு கருதிய கருத்துக்களைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம். ஒரு சமுதாயம் என்றும் கல்வி கற்கும் சமுதாயமாகவே இருக்க வேண்டும். அதாவது ஆயுள் முழுவதும் ஒரு மாணவன் கல்வி கற்க வேண்டும். கல்வி தொழில் வளர்ச்சிக்கு உரியதாக மாத்திரம் அமையாது அறிவு வளர்ச்சிக்குரியதாகவும் அமைய வேண்டும். கல்வியின் நோக்கம் கற்றவர்களை உருவாக்குதலன்று. கற்பவர்களை உருவாக்குவலே அதன் நோக்கம்.

அடிக்கடி மாற்றமுற்றுவரும் சமூகத்தில் அம்மாற்றங்களுக்கேற்பத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் சமுதாயத்தை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாயிருத்தல் வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ள கருத்துக்களைக் கூர்ந்து நோக்கும்போது மேனாட்டுக் கல்விக் கொள்கை திரும்பவும் கீழைத்தேயத் தத்துவத்துக்கே மீள்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இச்சூழ்நிலையில் ஆறுமுகநாவலர் போன்ற கீழைத்தேய அறிஞர்களின் கல்விக் கொள்கைகள் எம்மை நேர்வழிப்படுத்துவனவாய் அமைதல் கூடும். ஆறுமுகநாவலரின் கல்வித் தத்துவந்தான் என்ன? நாவலர் ஓரிடத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:

> ''சாகர சுகத்துக்கேதுவாகிய அன்னவஸ்திரம் முதலியவற்றையும்,
> ஆன்ம சுகத்துக்கேதுவாகிய ஞானத்தையும் கொடுப்பது வித்தையேயாதலின்
> எல்லாத்தானங்களிலும் வித்தியாதானமே சிறந்தது''

இக்கருத்தை இன்றைய மொழியில் கல்வியின் நோக்கம் உலகாயத வளர்ச்சியையும் ஆன்மீக வளர்ச்சியையும் ஏற்படுத்தல் எனக் கூறலாம். இவ்விரு வளர்ச்சிகளும் இருந்தாற்றான் சமூகம் வளர்ச்சியடையும். மனிதாபிமானங் கொண்டதாகவும் அமையும். இலங்கையில் இன்று ஏற்பட்டுவரும் கல்வி மாற்றமும் இக்கருத்துக்கமையவே உள்ளது. புதிய பாடத் திட்டத்தில் தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேநேரத்தில் அறவழியியல் பாடத்திற்கும் நுண்கலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியினால் ஒரு சமூகம் அழியாமல் இருக்க வேண்டுமெனின் அச்சமூகத்தில் அன்பு, இரக்கம் முதலிய உணர்ச்சிகள் இருத்தல் வேண்டும். பிரஞ்சுத் தத்துவாசிரியர் ஒருவர் கூறுவதுபோல் முற்பகலில் இரசனை அழிந்தால் பிற்பகலில் உலக சமுதாயம் அழிந்து விடும் என்ற கருத்து இரசனை இல்லாத சமூகத்தில் உணர்ச்சிகள் இல்லையென்பதைக் காட்டுகிறது. எனவே, நுண்கலையின் மூலம் ஒருவனுடைய இரசனை உணர்ச்சிகளை வளர்க்கலாம். இதே கருத்தின் அடிப்படையில்தான் பாரத மூதறிஞர் இரவீந்திரநாத் தாகூர் சாந்திநிகேனத்தை அமைத்தார். மனித வளர்ச்சியில் எல்லா உணர்வுகளும் ஒருமித்து வளர வேண்டும். எனவே, விஞ்ஞான அறிவு தொழில்நுட்பம் போன்றவை வளரும் அதே நேரத்தில் கலை நுகர்ச்சியும் அறநெறியும் வளர்ந்தாற்றான் மனித வளர்ச்சியில் முழுமையைக் காணலாம். இக்கருத்தினையே நாவலரும் கொண்டிருந்தார் என்பதை மேற்கூறிய அவரது கூற்றிலிருந்து உணர்ந்துகொள்ள முடியும். பிறிதொரு இடத்திலே நாவலர் கல்வியைப் பற்றிக் கூறுகிறார்:

> ''கல்வியுடையவர் தாம் கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும் நன்மாணாக்கர்க்குக் கல்வி கற்றபித்தலும், எல்லாருக்கும் உறுதியைப் போதித்தலுமாகிய இம்மூன்றையும் எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல் வேண்டும். இவ்வியல்புடையவரே கல்வி யாலாகிய பயனைப் படைத்தவராவார். இம்மூன்றுமில்லாவிடத்துக் கல்வியினாற் பயனில்லை.''

இதன் சாராம்சம் என்னவெனில் கல்வியின் பயன் ஒழுக்கநெறியை மையமாகக் கொண்ட பண்பட்ட சமுதாயமொன்றை ஒருவாக்குதல் என்பதாகும். ஒரு சமூகம், அறிவு, பொருளாதாரத் தொழில் வளர்ச்சிகளும் ஒழுக்க வளர்ச்சியும் அடைந்தால் மட்டும் போதாது. அதற்குக் கடவுள் பக்தியும் அவசியமாகும் என்றும் இரண்டாவது உலக மகா யுத்தத்தில் சில சமூகங்கள் அழிந்தமைக்கான காரணம் கடவுள் பக்தியின்மையேயெனவும் சில அறிஞர் கருதுகின்றனர். நாவலரும் கடவுள் பக்தியை வளர்க்கும் காரணமாகக் கல்வி பயன்படுகின்றது என்னும் கருத்துக் கொண்டிருந்தாரென்பதை அவரது பின்வரும் கூற்றுத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது:

''கல்வி கேள்வியில்லாதவர் கடவுளை அறிந்து வழிபட்டு உய்ய மாட்டார்கள்''

நாவலர் வாழ்ந்த காலத்தில் அரசியல் சமூக பொருளாதார பின்னணியை நாம் நோக்கினால் இவர் தமது சமூகத்துக்கு ஆற்றிய கல்வித்தொண்டின் முக்கியத்துவத்தினை உணரலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையில் மத்தியதர வர்க்கத்தினரிடையே அரசியல் கிளர்ச்சி தோன்றுவதைக் காணலாம். நாவலர் வாழ்ந்த சமூகம் சாதி முறையே அடிப்படையாகக் கொண்ட நிலவுடைமைச் சமூகமாக இருந்தது. பொருளாதாரத் துறையிலே பெருந்தோட்டப் பொருளாதார ஆதிக்கத்தின் காரணமாக விவசாயத்துக்கு மதிப்பற்ற நிலைமை ஏற்பட்டது. தொழிற்றுறையில் அன்று கற்றவர்க்கு வாய்ப்பு இருக்கவில்லை. ஆங்கிலக்கல்வி ஒன்றின்மூலமே அரசாங்க உத்தியோகமும், உயர் பதவியும் சமூக உயர்வும் பெறக்கூடியதாக இருந்தது. ஆங்கிலக் கல்வி மிஷன் பாடசாலைகளின் ஏகபோக உரிமையாக அமைந்தது. இக்கல்வி மத்தியதர வகுப்பினருக்கு மட்டுமே கிடைப்பதாயும் இருந்தது. உத்தியோகம் பெறும் நோக்கத்துடன் இப்பாடசாலைக்கு மாணவர்கள் சென்றாலும் ஆங்கிலக் கல்வி மூலம் கிறித்தவ சமயமும் புகுத்தப்பட்டது. மி'னரிமார்களுக்கு ஆட்சியாளர் எல்லாவகையிலும் உதவியளித்தனர். ஏனெனில் ஏகாதிபத்தியம் தனது ஆதிக்கத்தைப் பரப்புவதற்குக் கையாண்ட கருவியாகக் கல்வி பயன்பட்டது. இதன்மூலம் இந்நாட்டிலிருந்து பண்டைய கலாசாரத்தையும் சமய அனுட்டானங்களையும் - உடைப்பதே அவர்களது நோக்கமாக இருந்தது. 1870ஆம் ஆண்டு அரசாங்க பாடசாலைகளை மூடிவிட்டு நன்கொடைப் பாடசாலைகள் மட்டுமே இயங்குதற்கு அனுமதியளிக்கப்பட்டது. எனவே, கல்வி ஒரு குறிப்பிட்ட உயர் வகுப்பினரின் தனிச்சொத்தாக இருக்கும் நிலையேற்பட்டது. உயர்ந்தோர் குழாத்தின் வளர்ச்சிக்கு மட்டுமே கல்வி பயன்பட்டது. வர்க்க அடிப்படையில் அமைந்த இக்கல்வி வர்க்க வேறுபாட்டை மேலும் மேலும் விரிவடையச் செய்வதாகவே அமைந்தது. இன்றும் கூட இக்கல்வித் தத்துவம் அனேக நாடுகளில் உள்ளது. 1917ஆம் ஆண்டில் ரஷ்யாவில் ஏற்பட்ட சோ'லிஸப் புரட்சியின் பின்னர்தான் கல்வி என்பது பொதுமக்களுடைய சொத்து என்ற கருத்து வேரூன்றியது. ஆனால், நாவலர் ஏழை எழியவர்க்கும் கல்வி உரியது என்னும் கருத்தை உடையவராய் இருந்தார் என்பதற்கு அவர் நடாத்திய இலவசக் கல்விப் பாடசாலைகள் ஆதாரமாகவுள்ளன. சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளுக்கு முக்கிய காரணம் மனிதர்களது எண்ணங்களில்தான் உள்ளது. எனவே, ஏற்றத்தாழ்வு ஒழிய எண்ணங்களில் மாற்றம் ஏற்படவேண்டும்.

எண்ணங்களில் மாற்றம் ஏற்பட கல்வியமைப்பில் மாற்றம் ஏற்பட வேண்டும். அக்கல்வி சகல மக்களுக்கும் உரியதாக அமைய வேண்டும் என அவர் கருதினார். கல்வி பொதுமக்கள் சொத்தாக அமைவதற்கு அவர் தம் தாய்மொழியில் புகட்டப்படல் வேண்டும். இக்கருத்தை மனதில் வைத்துப் போலும் நாவலர் தமிழிலும் இலகுவான வசன நடையை உருவாக்கினார். வசன நடையை வெகுசனத் தொடர்புடையதாக உபயோகித்தார். நாவலரை வசன நடையின் தந்தையென்று கூறுவதற்கு தமிழிலே எளிமையான வசன நடையை ஆரம்பித்தது மட்டும் காரணமன்று. அதனை அறிவு வளர்ச்சிக்கான ஒரு சாதனமாகவும் பயன்படுத்தினார் என்பதும் முக்கிய காரணமாகும். அவரது சமகாலத்தவர்களான வேதநாயகம்பிள்ளை, ராஜம் ஐயர் என்போர் நாவல்களை எழுதிய வேளையில் நாவலரோ இந்து பாரம்பரியத்தையும் தத்துவத்தையும் வெளியிடும் சாதனமாக வசன நடையைப் பயன்படுத்தினர்.

பாடப் புத்தகங்களில் அவர் கையாண்ட முறையைப் பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். பண்டைய இலக்கியங்களையும் சமய நெறிகளையும் புதிய அறிவுக் கருத்துக்களையும் கூறுதற்கு வசன நடையைக் கருவியாக உபயோகித்த அதே வேளையில் இக்கருவியின்மூலம் கல்வியைப் புகட்டுவதற்கு முதன்முறையாக அவர் பாடப் புத்தகங்களை எழுதினார். அவருக்கு முன்னர் தாய்மொழியில் பெற்ற கல்வி வெறும் ஏடுகளிலிருந்து நேரடியாகப் பெறப்பட்டதாகவே இருந்தது. அவரோ பாடப் புத்தகங்களின் மூலம் பிள்ளைகளுக்கு நிகண்டு, திருக்குறள் முதலிய நீதி நூல்கள் சிவபுராணம், இலக்கணம், கணிதம், சுருக்கம், வெளிப்படையாகிய வசன நடையில் செய்யப்பட்ட சைவ சமய நூல்கள், பூகோள நூல்கள், வைத்தியம், சோதிடம், வேளாண்மை நூல், வானநூல், அரச நீதி, சிற்ப நூல் முதலானவைகளைப் படிப்பிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

பாலியற் கல்வி அவசியமா? என்பது இன்றும் தர்க்கத்துள்ளான விஷயம். பாலியற் கல்வி அவசியம் என்பதை ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே நாவலர் உணர்ந்திருந்தார் என்பதை அறிய வியப்பாகவிருக்கின்றது. மூன்றாம் பால பாடத்திலே 'வியபிசாரம்' என்ற தலையங்கத்தில் எழுதிய பாடத்திலிருந்து அவரது பாலியற் கல்வி பற்றிய கருத்து தெளிவாகின்றது. பொதுவாக இத்தகையதொரு பொருளை எழுதுபவர்கள் பெண்களைப் பற்றித்தான் அதிகம் எழுதுவர். ஆனால், நாவலரே ஆண்களுக்குத்தான் புத்திமதிகளைக் கூறுகிறார். இவ்விடத்தில்,

''கற்புநிலையென்று கூறவந்தார் இரு கட்சிக்கும் அதனைப் பொதுவில் வைப்போம்''

என்ற புதுமைக்கவி பாரதியாரின் பாடற் பகுதியை நினைவுபடுத்துவனவாக வாசகங்கள் அமைந்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் கல்வி கற்பிக்கும் முறையில் ஏற்பட்ட ஒரு பெரிய மாற்றம் 'ஜோன் டூலி'யின் யதார்த்தம் என்ற தத்துவத்துக்கமைய கற்பிக்கும் செயல்முறைக் கல்வியென்ற புதிய முறையாகும். இச்செயல்முறை கல்வியே இன்று பொதுவாக எல்லா நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. 'பியாஜே' என்ற உள நூலறிஞர் கூறுவதுபோல ஒரு தத்துவம் ஒருவனுடைய மனதிற் பதிவதற்கே அவனுடைய வயதும் காரணமாயிருத்தல்

வேண்டும். அதாவது ஒரு பிள்ளையின் வயது வளர உடல் வளர்ச்சியேற்படும்போதுதான் அறிவு முதிர்ச்சியும் ஏற்படுகின்றது. ஆறு வயது மாணவனுக்குச் சொல்ல வேண்டிய கருத்தை மூன்று வயது குழந்தைக்குச் சொல்லும் பொழுது அக்குழந்தையின் அறிவு வளர்ச்சியில் தாக்கம் ஏற்படக் கூடும். இக்கருத்தை தே';டன் என்னும் அறிஞர் பரிசோதனைகளின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். ஆகவே, செயல்முறை மூலம் ஒரு கருத்தை இலகுவான மாணவனுக்குப் புலப்படுத்தலாம். இம்முறையிலுள்ள பிரச்சினை யென்னவென்றால் பியாஜே கூறியதுபோல வயது முதிர்ச்சியடையாத ஒரு மாணவனிடம் ஒரு பாரிய தத்துவத்தை இச்செயல்முறை மூலம் புரிய வைக்க முடியுமெனினும் கருத்து வடிவமாக (Theoratical) அவனுடைய மனதில் பதிய வைத்தலில் இருக்கின்றது. எனவே, செயல்முறை மூலம் பெறும் ஒரு கருத்து கருத்து வடிவமாக மாறும்பொழுது அருவமான அத்தத்துவத்தை விளங்க முடியாமலும் போதல் கூடும். ஆகவே, மனனஞ் செய்வதன் மூலம் கருத்தை உணராமலே மாணவனின் மனதில் ஒரு தத்துவத்தைப் பதிய வைக்கலாம். அது அவனது அடிமனதில் உறைகின்றது. அறிவு வளர்ந்த காலத்தில் இக்கருத்து அவனுடைய எண்ணங்களைப் பாதிப்பதுடன் அவனுடைய வாழ்க்கை முறையையும் பாதிப்பதற்கு ஏதுவாகிறது. சமூக உளவியலாளர் கூறும் கருத்து என்னவெனில் தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் சமூகங்களின் பாரம்பரியங்களுள் கலாசார கோலங்களும் இம்முறையினாற் தான் பேணப்பட்டு வருகின்றன. உதாரணமாகப் பெரியோரைக் கனம்பண்ணும் மனப்பாங்கு சிறு வயதிலேயே வளர வேண்டும். இத்தகைய கலாசார வளர்ச்சியில்லாது சமீபத்தில் தோன்றிய சில தென்னமெரிக்கச் சமூகங்களிடையே உள்ள அரசியல் சமூக வாழ்க்கையின் அவல நிலையை இங்கு உதாரணமாகக் கொள்ளலாம். மனனஞ் செய்யும் முறையையே நாவலரது கருத்தாய் இருந்தது. ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'', ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''இ ''கீழோராயினும் தாழ உரை'' என்பன போன்ற ஆழ்ந்த கருத்துக்களை அவற்றின் பொருள் உணராமலே ஐந்து வயது மாணவன் மனனஞ் செய்கிறான். அவனுடைய அறிவு வளர இவைகளின் கருத்துக்களை உணர்வதுடன் ஐம்பது வயதான பிறகும் இக்கருத்துப் பதிவினால் ஏற்பட்ட மனநிலையினின்றும் பிறழாமல் இருக்கின்றான். எனவே, எமது நாட்டுப் பழமொழியான 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்பதற்கு இணங்க ஒரு மாணவனுடைய அடிமனதிலே ஏற்பட்ட தாக்கங்கள் ஐம்பது வயதான பின்னரும் நிலைத்து நிற்கும்.

இன்று துரித முன்னேற்றமடைந்துவரும் எந்திர வளர்ச்சியினால் உருவாகிவரும் இதயமில்லாத மனித சமுதாயத்திற்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்த நாவலர் போன்றோருடைய தீர்க்கதரிசனமான கருத்துக்கள் மனிதாபிமானமுள்ள சமுதாயமாக அமைவதற்கு உதவலாம். எனவே, ஆறுமுக நாவலருடைய கல்விக் கருத்துக்களை மேலும் ஆழமாக ஆராய்ச்சி செய்வது சாலச் சிறந்தது.

'புதுமை இலக்கியம்', இதழ் 16, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், 1974 ஜனவரி, பக். 25-29

நாவலர் கல்வி மரபும் இன்றைய தேவையும்

இ. குமாரவடிவேல்

நாவலர் பெருமான் சமயப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று மிக்க ஒரு அவதார புருஷர். மேலைத் தேசத்து கிறித்தவ மிஷனரிமார்கள், அன்றைய ஆங்கில அரசின் ஒத்தாசையுடன், சைவ சமயத்தவர்களை மதம் மாற்றக் கல்வியை ஒரு ஆயுதமாக உபயோகித்து வருவதைக் கண்டு வேதனையடைந்த நாவலர் பெருமான், சுகபோகங்களை உதறித்தள்ளிவிட்டுத் தமது உடல், பொருள்,ஆவி அனைத்தையும் தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் வளர்ப்பதற்காக முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். நாவலர் பெருமான் தமது இளமைக் கல்வியைச் சுப்பிரமணிய உபாத்தியாயர், சரவணமுத்துப்புலவர், இருபாலைச் சேனாதிராய முதலியார் ஆகியோரிடத்து அக்காலத்து நிலவிய திண்ணைக்கல்வி மரபு வழியிற் பெற்றவர். பத்து வயதின் பின் இப்போது யாழ் மத்திய கல்லூரி எனவழைக்கப்படும் வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்று அங்கு ஆசிரியராகவும் பணிசெய்தவர். அதனால் அக்காலத்து மேலை நாட்டுக் கல்வி மரபையும் நன்கு அறிந்தவர். இரு கல்வி மரபையும் நன்கு அறிந்திருந்த நாவலர் அவர்கள் தமது காலத்தில் வழக்கிலிருந்த தமிழ்க் கல்வி மரபோடு மேலைத்தேசக் கல்விமுறையிற் கண்ட சிறப்பம்சங்களையும் உள்வாங்கி, தமிழ்க்கல்வி மரபில் மாற்றங்களை ஏற்படுத்தி, தமிழ்க் கல்வி மரபைச் செழுமைப்படுத்தியவர். அவ்வாறு செழுமையுற்ற கல்வி மரபையே நாவலர் கல்வி மரபென்கிறோம்.

கிறித்தவ மிஷனரிமார்களின் மதமாற்ற முயற்சிகளைத் தடுத்து நிறுத்து வதற்கும் அவர்கள் செய்த சைவ தூஷணையை மறுத்துக் கண்டனஞ் செய்வதற்கும் பெருமளவு நேரத்தைச் செலவு செய்ய வேண்டியிருந்ததால், தமது குறுகிய வாழ்நாளில் நாவலர் தாம் காணவிழைந்த கல்வியூடான சமய, சமூக மேம்பாடுகளில் ஒரு சிறு பகுதியைத்தான் நிறைவேற்றக்கூடியதாயிருந்தது என்பதை நாவலரது செயற்பாடுகள் பற்றிக் கிடைக்கும் தகவல்களை ஆழமாக ஆராய்ந்தால் புலனாகும். நாவலர் கல்வி மரபின் முக்கிய அம் சங்கள் என்ன, அம்மரபு அவர்காலத்தின் பின் எவ்வாறு கையாளப்பட்டது, நாவலர்

சிரஞ்சீவியாக இன்றும் வாழ்ந்து கொண்டிருந்தால் நாவலர் கல்வி மரபு எவ்வகையான மாற்றங்களை உள்வாங்கிச் செழுமையுற்றிருக்கும், நாவலருக்குப்பின் வாழ்ந்தவர்கள் நாவலர் கல்வி மரபைச் செழுமைப்படுத்தச் செய்த பங்களிப்புகள் யாவை, நாவலர் கல்வி மரபின் இன்றைய தேவை என்ன என்பவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கல்வியென்பது பாடசாலைகளில் ஊட்டப்படும் போதனை மட்டுமல்ல. பாடசாலைகளில் ஊட்டப்படுவது நியமக்கல்வி. பாடசாலைக்கு வெளியிலும் கல்வி நிகழுகின்றது. முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி என இக்காலத்தே அழைக்கப்படும் கல்வியும் இக்கட்டுரையில் கவனத்திற் எடுக்கப்பட்டுள்ளது.

நாவலர் காலத்தில் நிலவிய தமிழ்ச் சுதேசியக் கல்வி மரபின் குறைபாடுகள்

1. தமிழ்க்கல்வியும் சைவசமயக் கல்வியும் ஒரு சில புலமையாளர்களின் ஏகபோகமாயிருந்தமையும் சாதாரண மக்கள் தமது சைவசமய அறிவை வளர்த்துச் சமய அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொண்டு சீரிய வாழ்வு வாழவும் புறச்சமயத்தாரின் பொய்ப் பிரசாரத்தினால் மயக்க மடையாதிருக்கவும் உதவக் கூடிய உண்மைக் கருத்துக்களை வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடிய எழுத்தறிவைப் பெரும்பாலான மக்கள் பெற்றிருக்காமையும்,

   சைவசமயிகள் சைவநூல்களைக் கல்லாமையினாலும் எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமை யாலும், நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகின்றது என 1860 ஆம் ஆண்டு வெளியிட்ட விக்கியாபனமொன்றில் நாவலர் பெருமான் குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது.

2. சமயவாழ்வு என்பது ஏனையோர் - சமுதாயப் பெரியவர்கள் - கடைப் பிடித்து வந்த நடைமுறைகளைப் பாரம்பரியச் சடங்குகள் போலப் பின்பற்றப்பட்டதேயன்றி, சமய தத்துவக் கருத்துக்களைப் படித்தோ, கேட்டோ அறிகின்ற - அவற்றைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்க வேண்டு மென்ற கருத்தைக் கொண்டுள்ளவொரு சமூகத்தைப் பண்படுத்தத் தவறியமை.

   1872 ஆம் ஆண்டு வெளியான 'யாழ்ப்பாணச் சமய நிலை' என்ற பிரசுரத்தில், நாவலர் பெருமான், யாழ்ப்பாணச் சைவ சமயிகள் பற்றிக் கூறிய பின்கண்ட கருத்துக்கள் இதனைக் கோடிட்டுக் காட்டுகிறது.

   யாழ்ப்பாணச் சைவசமயிகள் சிவதீட்சை பெறுகிறார்கள். சமய சின்னங்கள் தரிக்கிறார்கள். ஆலய வழிபாடு செய்கிறார்கள். தல யாத்திரை போகிறார்கள். கோவில் கட்டி பூசை திருவிழாக்கள் செய்விக்கிறார்கள். விரதம் இருந்தும் அங்கப் பிரதட்சணம் செய்தும் உடம்பை வருத்து கிறார்கள். ஆனால் சமய தத்துவக் கருத்துக்களைப் படித்தோ, கேட்டோ அறிகின்றார்கள் இல்லை. இவற்றைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக் கின்றார்கள் இல்லை.

3. கல்வியூட்டலைத் தரங்களாகப் பிரித்து ஒவ்வொரு தரத்திலும் கற்பித்தற் குரிய பாடவிதானங்களை வரையறை செய்து அதற்கேற்ற பாட நூல்களை ஆக்கி கல்வி முறையை ஒழுங்குபடுத்தி மாணவர் எட்டும் தராதரத்திற் கேற்பப் பட்டங்கள் வழங்கித் தராதரத்தை நிர்ணயிக்கும் வழிமுறைகளில்லாதிருந்தமை.

4. பழைய, அரிய, பெரிய நூல்கள் ஒரு சிலரிடையே ஏடுகளில் முடங்கிக் கிடந்தமை.

5. தமிழ், சைவ இலக்கிய ஆக்கங்கள், செய்யுள் நடையிலும் மணிப்பிரவாள (தமிழும் சம்ஸ்கிருதமும் கலந்து) நடையிலுமே, வழக்கிலிருந்தமை. இதனால் குறைந்த அறிவுடைய மக்கள் அவ்வாக்கங்களை வாசித்து உணர முடியாத நிலையிலிருந்தமை.

6. சாதாரண மக்கள் - சிறப்பாகப் பெரும்பான்மையினரான வாசிக்கத் தெரியாதவர்களாக விருந்த மக்கள் - சமய அறிவைப் பெற்றுக் கொள்ளவும் பொருளாதார, சமூக, அரசியல் விடயங்களில் அபிவிருத்திக்குகந்த வழி முறைகளைத் தெரிந்து கொள்ளவும் அவர்களுக்கு மேடைப் பேச்சுக்கள் மூலம் அறிவும் விழிப்புணர்வும் ஏற்படுத்தும் முறை நடைமுறையில் இல்லாதிருந்தமை.

7. திருக்கோவில் அர்ச்சகர்கள், சிவாச்சாரியர்கள், சைவக்குருமார்களை ஒழுங்கு முறையாகப் பயிற்றுவித்துப் பட்டங்கள் வழங்கிச் சைவ சாஸ்திர தோத்திரப் பொருளுணர்ச்சியுள்ளவர்களையே குருமார்களாக அமர்த்தும் ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வித்திட்டமொன்றின்றி, குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த எவரும் விதிக்கப்பட்ட தீட்சைகளைப் பெற்றுக் கொண்டால் குருத்துவம் செய்யலாம் என்ற வரையறை கொச்சைப் படுத்தப்பட்டு, சைவ சாஸ்திர தோத்திரப் பொருளுணர்ச்சியற்றவர்களும் குருமார்களாக இருந்தமை.

   கிறித்தவ சமயகுருமார்கள் மொழியையும் சமய நூல்களையும் படித்து தேர்வுகளில் சித்தியடைந்து எமது சமயத்தைப் பற்றியும் அறிந்து வைத்துக் கொண்டு பிரசங்கிக்கிறார்கள். ஆனால் எமது சமய குருமார்களுக்குள்ளே சிலரொழிய மற்றவர்கள் அந்தியேட்டி பட்டோலைதானும், இன்னுஞ் சொல்லின் அந்தியேட்டி என்னும் பெயர் தானும் பிழையற எழுத அறியாதிருக்கிறார்கள். சிவாக மத்தியில் ஒரு சுலோகமாயினும் தேவார திருவாசகங்களில் ஒரு பாட்டாயினும் திருக்குறளில் ஒரு குறளாயினும் அறியாதவர்களும் சைவ சமயக் குருமாராக இருக்கிறார்கள். சைவ சாஸ்திரம் முதலிய வற்றைப் படித்தற்கு அவர்களுக்குப் போதிய நேரமிருந்தும், படியாமல் வீண்பொழுது போக்குகிறார்கள்.

   என 1872ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'யாழ்ப்பாணச் சமய நிலை' என்ற பிரசுரத்தில், நாவலர் பெருமான் அப்போதைய நிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

8. சைவக்குருமார்கள் சமய போதனை செய்தல், நல்லொழுக்க போதனை செய்தல், சமூகத்தை நல்வழிப்படுத்தல், சமய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடல், புறச்சமயிகளின் சைவ விரோத பிரசாரங்களை எதிர்த்துப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடல், துன்பத்திற்குள்ளாகும் மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறுதல் போன்ற எந்தக் கடமையிலும்

ஈடுபடுவதில்லை. இவற்றை மேற்கொள்ளக்கூடியவர்களாகக் குருமார்களைப் பயிற்றுவிக்கக்கூடிய - அவர்கள் முன்வராதவிடத்து இப்பணிகளைச் செய்யக்கூடிய சைவப்பிரசாரகர்களை உருவாக்கக் கூடிய - கல்வி மரபு இல்லாதிருந்தமை எமது கல்வி மரபின் ஒரு குறிப்பிடத்தக்க குறைபாடாகும்.

முற்குறிப்பிடப்பட்ட 'யாழ்ப்பாணச் சமயநிலை' என்ற பிரசுரத்தில், நாவலர் அவர்கள் இக்குறைபாட்டைப் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்:

மக்கள் குருமாருக்கு மறுப்பில்லாது வந்தனத்தோடு தானியங்களும் உடுபிடவைகளும் தெட்சணையாகப் பணமும் கொடுக்கிறார்கள். ஆனால் குருமார்கள் அம்மக்களுக்கோ அவர்களது பிள்ளைகளுக்கோ எமது சமயத்தையும் நல்லொழுக்கத்தையும் போதிப்ப தில்லை. தீட்சை அளிப்பவர்கள் தெட்சணையை வாங்கிக் கொண்டு உடனே ஓட்டம் பிடிப்பதன்றி சில நாளாயினும் தாமதித்திருந்து அனுட்டான முறையை யும் சமயாச ாரத்தையும் பழக்குகின்றார்களில்லை. சைவசமயத்தின் மகிமையைப் போதிக்கின்றார் களில்லை. மதமாற்றத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்கிறார்களில்லை. தங்கள் பொருள் முட்டுப்பாடுகளையும் வீண் வார்த்தைகளையும் பேசுவதேயன்றி எமது சமயத்தின் பெருமை, வளர்ச்சி பற்றிப் பேசுவதில்லை. எம்மில் யாராவது இறக்கவிருக்கும் போது அங்கு வந்து அவரது ஆன்மா நற்கதி அடையும் பொருட்டு அவருக்கு நல்லறி வுறுத்துவதில்லை.

தமிழ்க்கல்வி மரபில் நாவலர் புகுத்திய முக்கிய அம்சங்கள்

1. சைவப்பிள்ளைகள் தமது சமயத்தையும் மொழியையும் நன்கு அறிந்து உணர்ந்து ஒழுகக்கூடிய சமயக்கல்வியையும் உலகியலுக்கு வேண்டிய கணிதம், வரலாறு, புவியியல், தர்க்கம், ஆங்கிலம் போன்ற பாடங்களையும் கற்கக்கூடியதாக சைவப் பாடசாலைகள் நிறுவி நடத்தியமை, சைவப் பாடசாலைகளை ஆரம்பிக்கத் தூண்டுகோலாக இருந்தமை, இலவச காலம், மாலை வகுப்புகள் நடத்தியமை.
2. பாடசாலைக் கல்வியைத் தரங்களாகப் பிரித்து ஒவ்வொரு தரத்திலும் கற்பித்தற்குரிய பாட விதானங்களை வரையறை செய்து அதற்கேற்பப் பாட நூல்களை இலகு தமிழில் பாலபாடங்கள் என்ற பெயரில் யாத்தமை.
3. வினாவிடை வகையான நூல்களை தமிழில் ஆக்கியளித்தமை.
4. ஒரு சிலரிடையே ஏடுகளில் முடங்கிக் கிடந்த பழைய, அரிய, பெரிய நூல்களைப் பதிப்பித்து அவற்றைப் பலரும் வாசித்துப் பயனடைய வைத்தமை.
5. செய்யுள் நடையிலும் மணிப்பிரவாள நடையிலும் இருந்த ஆக்கங்களைக் குறைந்த அறிவுடைய மக்களும் இலகுவில் வாசித்து விளங்கிக்கொள்ளக் கூடிய முறையில் அவற்றை எளிய வசன நடையில் எழுதியும் உரை யெழுதியும் வெளியிடும் பணியை மேற்கொண்டமை.

"நிறைந்த கல்வி அறிவுடைய வித்துவான்களும் குறைந்த கல்வி அறிவுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்திலும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும் கத்திய ரூபமாகச் செய்து வாசிப்போர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும் பான்மையும் சந்தி விகாரங்களின்றி அச்சிற் பதிப்பித்தேன்" என்பது நாவலர் கூற்று.

செய்யுள் இயற்றும் திறனிருந்தும் செய்யுள் நடை மக்களைக் கல்வி யறிவுடை யவர்களாக்குவதற்கு உகந்த சாதனம் அல்ல எனக் கருதிய எளிய வசன நடையைக் கையாண்டதால் வசன நடை கைவந்த வல்லாளர் என நாவலர் போற்றப்பட்டார்.

6. சைவசமயத்தையும் தமிழரையும் வளர்க்கப் பிரசங்கம் செய்யும் முறையை அறிமுகம் செய்ததுடன் அவ்வாறு செய்ய வேறு பலரையும் பழக்கியமை யும் தமிழ்க் கல்வி மரபில் நாவலர் புகுத்திய செழுமை மிக்கதொரு மாற்றமாகும்.

தமிழ் மரபுக் கல்வியின் ஒரு அங்கமாகவும் முதியோரது சமயக் கல்வியை வளர்ப்பதாகவும் - பொதுசனத் தொடர்பு சாதனமாகவும் - விளங்கிய புராணபடன மரபைப் பலப்படுத்தும் வகையில் அமைந்திருந்த இம்மாற்றம் சாதாரண மக்கள் - சிறப்பாகப் பெரும்பான்மையினரான வாசிக்கத் தெரியாத மக்கள் மத்தியில் சமய, சமூக, பொருளாதார, அரசியல் அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி மதமாற்ற முயற்சிகளை மழுங்கச் செய்ததுடன் அவர்கள் ஒழுக்க வாழ்வு வாழவும், கல்வி கற்க வேண்டும் என்ற ஆவலைத்தூண்டவும் பெரிதும் உதவிற்று.

புராண படனங்களில் கதைகள் வாயிலாக உணர்த்தப்படும் சமய தத்துவங்களும் ஒழுக்க நெறிகளும் கதைகளுடன் சேர்த்து விரித்துரைக் கப்படும். நாவலரின் பிர சங்கங்களோ சிந்தனையைத் தூண்டிச் சமய தத்துவங்களையும் விளக்கங்களையும் ஒழுக்க நெறிகளையும் நேரடி யாகவே மனதிற் பதியச் செய்வனவாக அமைந்தன. நாவலர் பிரசங்கங் களினால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்களையும் விழிப் புணர்வையும் நீண்ட பட்டியலிட்டுக் காட்டிய 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்' என்ற நூலின் ஆசிரியரான த. கைலாசபிள்ளை அவர்கள் அப்பட்டியலை பின்வரும் வாக்கியத்துடன் நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது:

> கல்வியிற் குறைவுடையோரும் கல்வியில்லாதவருமாகிய இரு திறத்தாரும் கல்வியின் மேம்பட்ட செல்வம் பிறிதொன்றுமில்லை எனக் கண்டு கல்வி கற்கத் தொடங்கினார்கள்.
>
> த. கைலாசபிள்ளை அவர்கள் பிறிதோரிடத்தில்,
>
> முன்னிருந்த எங்கள் சமயாசாரியர்கள் தாம் தரிசனஞ் செய்யப் போன தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம் போன இடங்களிலெல்லாம் லோகோபகாரமான சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தார். வசனம் போலப் பாட்டுக்கள் இக்காலத்தில் பிரயோசனமுடையவைகளல்ல என்று கருதியே பாட்டுப் பாடுதலை இவர் குறைத்துக் கொண்டார்.

எனக் கூறியிருப்பது பிரசங்கம் செய்தலும் வசனநடை ஆக்கங்களும் தமிழ்க் கல்வி மரபைச் செழுமைப்படுத்த நாவலர் புகுத்திய புதிய வழிமுறைகள் என்பதைக் கோடிட்டுக் காட்டவேயாகும்.

பிரசங்கவன்மை காரணமாகத் தமிழ்மொழி மேடைப் பேச்சின் தந்தையெனப் போற்றப்படும் பெருமையையும் மிகக் குறைந்த வயதிலேயே திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானமவர்களால் நாவலர் எனும் பட்டம் வழங்கப்பெற்ற சிறப்பினையும் நாவலர் பெருமான் பெற்றுக் கொண்டமை கருத்திற் கொள்ளத்தக்கது.

7. சாதாரண மக்கள் தமது சைவசமய அறிவை, வளர்த்து சமய அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொண்டு சீரிய வாழ்வு வாழவும் புறச்சமயத்தாரின் பொய்ப் பிரசாரத்தினால் மயக்கமடையாதிருக்கவும் வேண்டி சைவசமய உண்மைகளை எளிய வசன நடையில் அமைந்த துண்டுப் பிரசுரங்களை எழுதி வெளியிட்டமை,

புறச்சமயத்தார்கள் சைவசமயத்தை இழிவுபடுத்த முற்பட்டபோதெல்லாம் கண்டனங்களையும் பிரதிக்கண்டனங்களையும் எழுதி வெளியிட்டமை,

குருமார்கள் உட்படச் சைவசமயத்தவர்களே தமது சமயத்தைப் புரிந்து கொள்ளாது சைவத்திற்கு இசைவற்ற காரியங்களில் ஈடுபட்டபோது அவற்றைக் கண்டித்துச் சரியானவற்றைக் கண்டனங்கள் மூலம் வெளிப்படுத்தி அறிவூட்டியமை,

சைவப் பத்திரிகையொன்று நடத்தி மக்களது சமய அறிவை வளர்க்கும் தமது திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கோடு 'உதயபானு' என்னும் பெயரில் பத்திரிகையொன்று வெளியிடும் தமது எண்ணத்தை விளம்பரமொன்றின் மூலம் நாவலர் வெளியிட்டாராயினும் அத்திட்டம் அவரது காலத்தில் நிறைவேறவில்லை.

சைவப் பத்திரிகை மூலமும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அறி வூட்டுவது நாவலர் கல்வி மரபின் பிறிதொரு முக்கிய அணுகுமுறையாகும்.

8. சைவக்குருமார்களையும் சைவப்பிரசாரகர்களையும் சைவாசிரியர்களையும் பயிற்று வித்தல்.

சைவசமயம் நிலைத்துச்செழித்து மக்களை நல்வழிப்படுத்தும் ஒரு வாழ்க்கை நெறியாக விளங்க வேண்டுமாயின் சைவப் பெருமக்களும் திருக்கோவில் அர்ச்சகர்களும், சிவாச்சாரியர்களும், குருமார்களும் சைவ சாஸ்திர தோத்திரப் பொருளுணர்ச்சி பெறுதல் வேண்டும் என்பது நாவலரின் உறுதியான கருத்து.

நாவலர் கிறித்தவ பள்ளிக்கூடத்தில் படித்ததும், படிப்பித்ததும்; பேர்சிவல் பாதிரியாருடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பும் கிறித்தவ மிஷனரிகள் எவ்வாறு தம் சமயக் குருமார்களையும் போதகர்களையும் பயிற்றுவித்துச் சமயப் பிரசாரம் செய்கிறார்கள் என்பதை நன்கு அறிய வைத்தது. சைவ மக்கள் தமது சமய அனுட்டானங்களையும், கிரியை களையும், வழிபாடுகளையும், விழாக்களையும் அவற்றின் அடிப்படைத் தத்துவங்களையும் பொருளையும் அறிந்து கொண்டு செய்தால் மட்டுமே அதன் பெறுபேறுகளைப் பூரணமாகப் பெற முடியுமாதலால் சமய தத்துவங்கள்

அவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டுமென்பது நாவலரது தீர்க்கமான நிலைப்பாடு. சைவாலயக் குருமார்கள் நன்கு பயிற்றுவிக்கப் பட வேண்டுமென்பதையும் அவர்கள் பூசைகள், கிரியைகள், விழாக்கள் நடத்துவதோடன்றி சமயப் பிரசார நடவடிக்கைகளிலும், வாழ்வின் அவலங்களில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு ஆறுதல் கூறி அரவணைக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டியவர்கள் என்பதையும் நாவலர் நன்கு உணர்ந்திருந்தார்.

சைவக்குருமார்களைச் சைவ சாஸ்திரதோத்திரப் பொருளுணர்ச்சி பெற்றுச் சீர்திருத்தியவர்களாய் உண்மைச் சமயிகளாகவும் சைவசித்தாந்த உணர்வுநிலை பதிந்தவர்களாகவும் வாழ வைப்பதற்குக் கல்வியொன்றே சிறந்த சாதனம் என்பதை நன்குணர்ந்திருந்த நாவலர், சைவப்பிரசாரகர்களையும், குருமார்களையும், சைவாசிரியர்களையும் பயிற்றுவிக்கக்கூடிய பெரியதொரு பாடசாலையை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். இது கிறித்தவர்கள் நடத்தும் இறையியற் கல்லூரிகளையும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளையும் ஒத்ததாக அமைய வேண்டுமென்ற நோக்கோடு திட்டமிட்டார். இப்பாடசாலையையும் மடத்தையும் சிதம்பரத்தில் அமைப்பதற்குப் பொருளுதவி கோரி 1868, 1870ஆம் ஆண்டுகளில் பொதுமக்களுக்கு - சிறப்பாக சைவ அபிமானிகளுக்கு - துண்டுப் பிரசுரங்கள் மூலம் வேண்டுகோள் விடுத்தார். அப்பிரசுரமொன்றில் காணப்படும் ஒரு பந்தி பின்வருமாறு:

> நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறை வேறுமோ, நிறைவேறாதோ என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலம் தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிர சாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும், இடையறா முயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீட்சிக்கப் பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் - வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுக்குள்ளே தேர்ச்சி யடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர் களாகவும் நியோகிக்கலாம்.

நாவலர் தனது கருத்து தனது சீவிய காலத்திலேயே நிறைவேறுவதைக் காண ஆசைப்பட்டார். அந்த ஆசை நிறைவேறாது போகுமோ என இரவும் பகலும் கவலைப்பட்டார்.

> இக்கருமத்தை நானே நடத்தல் வேண்டும் என்னும் கருத்து எனக்கு இல்லை. 'யாவர் குத்தினும் அரிசியானாற் போதும்' என்றபடி யாவர் நடத்தினாலும் இத்தருமம் நிறைவேறினாற் போதும் என்பதே என் கருத்து.

என்ற அவரது கூற்று,

அடியவர் குறைவு தீர்த்து ஆண்டருள்வதே விரதம் பூண்ட பெருங் கருணைக் கடலாகிய சிவபெருமான், நான் நல்லறிவும், நல்லொழுக்கமும் தம்மாட்டு மெய்யன்பும் சற்றுமுற்றறியாப் பரம சண்டாளனே யாயினும், தமது சமயங் குன்றுதலைக் காண்டலின் கண்ணே பெருங்கவலையும் அச்சமயத்தை வளர்த்தலின் கண்ணே பேராசையும் உடைமையினாற்றானே என்னிம்மைப் பயன்களெல்லா வற்றையும் இழந்தும் பலராலே பலவகை இடையூறுகளை அனுபவித்தும் வருத்தமுறும் உண்மையைத் திருவுளங் கொண்டிரங்கி, என்கருத்தை யான் எடுத்த தேகம் விழுதுன் நிறைவேற்றியருளும் பொருட்டு, அவருடைய திருவடிகளைப் பணிந்து பிரார்த்திக்கிறேன்.

என முடிவடையும் பிரசுரத்தின் இறுதிப் பந்தியும் அவரது உள்ளக்கிடக் கையை நன்கு படம் பிடித்துக் காட்டுவதுடன் வாசிப்போரை மெய் சிலிர்க்க வைக்கிறது.

இவ்வுத்தமோத்தம தருமத்தை நிறைவேற்ற எண்பதாயிரம் ரூபா (இன்றைய கால கட்டத்தில் பல கோடி ரூபாவுக்குச் சமம்) தேவைப்படுமென மதிப்பிட்டு நிதி திரட்ட ஊர் ஊராகச் செல்லவிருந்தார். ஆனால் இந்தப் பெருமுயற்சி கைகூடுமுன் சிவ பதமடைந்துவிட்டார்.

சைவக்குருமார்கள், சைவப்பிரசாரகர்கள், சைவாசிரியர்கள் பயிற்சி நாவலர் காலத்தில் நிறைவேறாத நாவலர் கல்விமரபின் ஒரு முக்கிய அங்கம் என்பது தெளிவு.

9. சைவசமய மேம்பாட்டில் அக்கறையுள்ளவர்களை ஒன்று கூட்டி சைவப் பிரகாச சமாஜம் என்ற பெயரில் சைவ நிறுவனமொன்றை நாவலர் 1879 ஆம் ஆண்டில் உருவாக்கினார். ஆனால் அதை நிலைகொள்ளச் செய்வதற்கு அவர் அதிக நாட்கள் சீவிதராக இருக்கவில்லை. ஆகவே சைவசமயத்தை நிறுவனப்படுத்தி அதன் மூலம் சைவசமூகத்தின் சமய, சமூக, கல்வி, பொருளாதார அரசியல் நிலையை வலுப்படுத்துவதும் நாவலரின் குறிக்கோளாகவிருந்தது எனக் கருதலாம்.

நாவலர் கல்வி மரபு சைவசமய வளர்ச்சியை மட்டுமன்றிச் சமுதாய வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டது.

நாவலர் கல்விப்பணியைப் பற்றி விமர்சிக்கும் சிலர், நாவலர் சைவ சமயத்தை வளர்க்கும் நோக்குடன் மட்டுமே கல்விப்பணியாற்றினார் என்ற கருத்தை முன்வைப்பதுண்டு. இது சரியான கருத்தல்ல.

நாவலர் காலத்திருந்த சூழ்நிலைகளே நாவலர் சைவசமயக் கல்வியை முதன்மைப்படுத்த வைத்தன. கிறிஸ்து சமயத்தினர் தமது சமயத்தைக் கல்வியை ஊடகமாகக் கொண்டு வளர்த்துவர, சைவ மக்களும் குருமார்களிற் பெரும்பான்மையினரும் தமது சமயக் கருத்துக்களை அறியாதவர்களாய், அறிந்தோர் அறியாதாருக்குப் போதிக்காதவர்களாய் இருந்த நிலைமையே, நாவலரைச் சமயக் கல்விக்கு முதன்மை கொடுக்கும் கல்விக் கூடங்களை ஆரம்பிக்கத் தூண்டியது.

கிறிஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமய நூலைத் தாங்கள் கற்றும், வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும்,

தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவருக்கும் போதித்தும், வருகிறபடியினாலே அவர்கள் சமயம் எத்தேசங்களிலும் வளர்ந்தோங்கி வருகின்றது.

என்பது நாவலர் விக்கியாபனமொன்றிலுள்ள கூற்று.

மிஷனரிகளால் யாழ்ப்பாணச் சமூகம் பெற்ற அனுகூலங்களை மதித்த நாவலர், அவர்கள் கல்வியை மதமாற்ற முயற்சிகளுக்கான ஊடகமாக உபயோகித்ததையே எதிர்த்தார்

நாவலர் பெருமான் ஸ்தாபித்த முதற் பாடசாலையாகிய வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை மிஷனரிகளால் அக்காலத்தில் நடத்தப்பட்ட கிறித்தவ பாடசாலைகளிலிருந்து இருவகையில் வேறுபட்டிருந்தது.

அ) கிறிஸ்து சமயப் போதனைக்குப் பதிலாக சைவசமய போதனை

ஆ) கிறித்தவ பாடசாலைகளில் கிறித்தவ மத போதனை, ஆங்கிலம், லத்தீன், தமிழ் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டிருந்த இடம் சைவப் பாடசாலைகளில் முறையே சைவசமயப் போதனை, தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றிற்கு வழங்கப் பட்டிருந்தது.

நாவலர் பாடசாலையில் கணிதம், தர்க்க சாஸ்திரம், வரலாறு, புவியியல், வானியல் யாவும் தமிழில் கற்பிக்கப்பட்டன. அங்கு பைபிளும் ஒரு பாடநூலாக்கப்பட்டிருந்தது.

தொழில் வாய்ப்புப் போன்ற காரணங்களுக்காக ஆங்கிலமொழி மூலக் கல்வியைப் பொதுமக்களிற் சிலர் விரும்பியபோதும் அக்கல்வியைப் பெற்றுக்கொள்ளச் சைவ சமயிகளுக்கு அவர்களது சமயம் ஒரு தடையாக விருப்பதைக் கண்ட நாவலர், 1872 ஆம் ஆண்டு தை மாதத்தில் வண்ணார் பண்ணையில் முதல் சைவ ஆங்கிலப் பாட சாலையை ஆரம்பித்து நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தியமையும் அது பின்னர் அக்கால ஆட்சியாளர் மிஷனரிமார்களின் நெருக்குதல் காரணமாக நிதியுதவி அளிக்க மறுத்தமையால் மூடப்பட்டமையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது.

சைவசமயிகள் தமது சமயத்தின் மகிமையை அறிந்து அதனைக் கைக்கொள்ளுதற்குரிய கல்வி போதிக்கப்படுதல் வேண்டும் - கல்வியென்ற போர்வையில் வேற்று மதங்கள் சைவ மக்களிடையே திணிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது - என்பனவே நாவலர் பெருமானின் கல்விக்கொள்கை என்பதையும் நவீன தொழில் நுட்பங்கள், அணுகுமுறைகளை உள்வாங்கியும் ஆங்கிலம் போன்றதொரு நல்ல மொழியைக் கற்பித்தும் அதன் மூலம் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் தராதரத்தை உயர்த்த வேண்டுமென்ற கொள்கை யுடைய முற்போக்காளராக நாவலர் விளங்கியவரென்பதையும் அழுத்திக் கூறவேண்டியது அவசியமாகிறது. அதனைக் கோடிட்டுக் காட்டும் நாவலரின் ஒரு சில செயற்பாடுகளை இங்கே நிரைப்படுத்துவோம்:

1. சமயக்கல்வியுடன் தொழிற் கல்வியையும் மாணவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே நாவலர் கொள்கை.

'இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக்காரணமாய் உள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகிக நூல்களைக் கற்பித்தலும், திருக்கோயில்கள் தோறும் சனங்களுக்குச் சமய நெறியைப் போதிப்பித்தலும் மிக மேலாகிய புண்ணியங்களாம்.' என அவர் விக்கியாபனமொன்றில் குறிப்பிட்டிருப்பது இதனைத் தெளிவுபடுத்தும்.

2. அச்சு இயந்திர உதவியுடன் மிஷனரிமார் செய்த சமயப் பிரசார, கல்விப் பணிகளைக் கண்ணுற்ற நாவலர் தாமும் அவ்வாறே செயற்படக் கருதித் தமது இருபத்தெட்டாவது வயதில் யாழ்ப்பாணத்தில் கிறித்தவர் அல்லாத ஒருவரால் தாபிக்கப்பட்ட முதல் அச்சியந்திர சாலையொன்றின் உரிமையாளராகி நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். முதன் முதலாக ஒரு புதிய இடத்தில் ஒரு புதிய இயந்திரத்தைத் தாபித்தவர் அதன் தொழில்நுட்பத்தை நன்கு உள்வாங்கியிருப்பார். என்பதையும் அங்கு பணியாற்றுவதற்குப் பல உதவியாளர்களைப் பயிற்றுவித்திருப்பார் என்பதையும் உய்த்தறிந்து கொள்ளலாம். இதனை ஆவணப்படுத்தப்படாத கல்விப் பணியெனக் கொள்ளலாம்.

3. மேடைப்பேச்சு - பிரசங்கம் போன்றவற்றைச் சமய அறிவூட்டுவதற்கான கருவிகளாக மட்டும் நாவலர் உபயோகப்படுத்தவில்லை. பொதுக்கூட்டங்களைக் கூட்டி மக்களைத் திரட்டி அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், அவர்களைப் பாதிக்கக்கூடிய அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிப் பிரசங்கித்து அவர்களுக்கு அறிவூட்டவும் மேடைப்பேச்சை ஒரு கருவியாக நாவலர் உபயோகித்தார்.

யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் பற்றியவொரு துண்டுப் பிரசுரத்தில்,

> எம்மூரவர்களுக்கு இக்கொம்பனியின் வழிவகையும் அதன் நயமும் சற்றுந் தெரியாததன் நிமித்தம் எமது பத்திரிகையில் தோன்றுகின்ற விளம்பரப்படி ஓர் பிரசங்கம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடக்கும். அங்கு விரித்துக் காட்டப்படும் கூட்டத்தாருடைய நய முதலானவைகளைக் கேட்டுப் பயனடை வீர்களாக.

என நாவலர் குறிப்பிட்டிருப்பது பொருளாதார மேம்பாடடைவது பற்றி மக்களுக்குக் கல்வியூட்டுவதும் நாவலர் கல்விமரபினுள் அடங்குவதைக் காட்டுகிறது.

நாவலர் சமயப் பிரசாரகராக மட்டுமன்றி விவசாயப் பிரசாரகராகவும், அரசிடமிருந்து மக்கள் கோரக்கூடிய நிவாரணங்கள் பற்றி அவர்களுக்கு விளக்கமளிக்கும் பிரசாரகராகவும், அநீதியையும் சமூக ஊழல்களையும் எதிர்த்துப் பிரசாரம் செய்யும் பிரசாரகராகவும், அரசியல் தலைமைத்துவத்தை நிர்ணயிக்கும் பிரசாரகராகவும் செய்த பணிகள், அநீதியை எதிர்க்கும் உரிமை, தொழில் விருத்தி, அடிப்படை உரிமை, அரசியல் உரிமை பற்றியெல்லாம் மக்களுக்கு அறிவூட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தியமை ஆகிய செயற்பாடுகள் அக்கால சூழ்நிலையில் முதியோர் கல்விக்கு நாவலர் ஆற்றிய

குறிப்பிடத்தக்க பங்களிப்பு எனலாம். இதனை நாவலர் அறிமுகப்படுத்திய முதியோர் கல்வி மரபெனக் குறிப்பிடலாம்.

4. யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கத்தில் பங்குகள் பெற்றுப் பயனடையுமாறு 1877 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் இலங்கைநேசன் பத்திராதிபதிரோடு இணைந்து அப்பத்திரிகையில் நாவலர் பெருமான் வெளியிட்ட அறிக்கையில்,

> இம்முயற்சியினாலுண்டாகும் நன்மையின் பெறுபேற்றை எவ்வளவு கொண்டளக்கினும் முடியாது ! முடியாது !!.... இவ்வயற்செய்கை எம்மூரவர்கள் செய்கிற ஏராணி கொண்டு நடத்தப்படுவதென்பது கூடாத காரியம். இங்கிலீசிய மாதிரியான சூத்திரங்களைக் கொண்டே அதிகமாக வேலை நடக்கும்.....

எனக் கூறியிருப்பதிலிருந்து மேல்நாடுகளில் நடைமுறைப்படுத்தப் பட்ட நவீன விவ சாய முறைகளைப் பயின்று - பயிற்றுவித்து - அறிமுகப்படுத்தி - நவீன தொழில் முறைகளை மக்களுக்கு அறிமுகம் செய்து (முறைசாராக்) கல்வியை விருத்தி செய்வதும் நாவலரின் அபிலாசையாக இருந்தது என்பது தெளிவு.

மேற்குறிப்பிட்ட அறிக்கையிலே இன்னுமோரிடத்தில், யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கத்தில் பங்குகள் பெற்றுக் கொள்வதால் 'எத்தனை அறிவாளிகளுக்கு உதவி' எனக் குறிப்பிடுவது இத்திட்டத்தின் கீழ் அறிவாளிகள் நவீன விவ சாயத் தொழிற் பயிற்சி பெறுவர் என்பதைச் சூசகமாகத் தெரி விக்கிறது. நவீன தொழில்நுட்பங்களையும் தொழில் முறைகளையும் உள்வாங்கிக் கொள்ள நாவலர் சிறிதும் பின்னிற்கவில்லை என்பதும் இவற்றிலிருந்து தெளிவாகிறது.

5. நாவலர் இளம் வயதிலேயே அறிவியற் கலைகளையும் பிறவற்றையும் சந்தேகமும் விபரீதமுறக் கற்கும் கருத்துடையவராக விளங்கியமையும் கருத்திற் கொள்வது பொருத்தமானது. தமக்குள்ளே ஐயங்களைப் பிறர் வாயிலாகக் கேட்டுத் தெளிய வேண்டுமென்ற கருத்துடையவராகவும் ஏன்? எப்படி? என வினாவும் அறிவியல் அணுகுமுறையுடையவராகவும் நாவலர் விளங்கினார். இதற்கு 1841 ஆம் ஆண்டு புரட்டாதி - மார்கழி மாதங்களுக்கிடைப்பட்ட காலத்தில் - தமது பத்தொன்பதாவது வயதிலே- உதயதாரகை பத்திரிகையில் ஆசிரியருக்குக் கடிதங்களாக ஒளியியல் பற்றிய வினாக்களை (Optical queries) தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிப் பிரசுரித்து ஆரோக்கியமான விவாதத்தில் ஈடுபட்டமை கோடிட்டுக் காட்டுகிறது.

6. சமயத்தொடர்பற்ற பழைய தமிழ் இலக்கியங்களும் அழிந்து போகாமற் காப்பாற்றப்பட வேண்டுமென்பதுவும் நாவலரின் கொள்கையாக விருந்தது. வளையாபதி என்ற பழம் பெரும் காப்பிய நூலைப் பதிப்பிக்கவிருப்பதாக அறிவித்திருந்தமை இதற்கு நல்ல தொரு எடுத்துக் காட்டு.

மேற்தரப்பட்ட உதாரணங்கள் தொழிற்கல்வி, முதியோர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, விஞ்ஞானக்கல்வி, சமய சார்பற்ற தமிழ் இலக்கியம் ஆகியவற்றிலும் நாவலருக்கிருந்த ஆர்வத்தையும் அக்கறையையும் பிரதிபலிக்கின்றன.

ஆகவே நாவலர் கல்வி பற்றிய நோக்கை உன்னிப்பாகவும் ஆழமாகவும் ஆராய்ந்தால், அது சைவசமயக் கல்வி, தமிழ்மொழிக் கல்வி, தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, முதியோர் கல்வி முறைசாராக்கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்த நோக்குடைய தாகவிருந்ததை அறியலாம்.

நாவலர் காலத்தின் பின் நாவலர் கல்வி மரபு கண்ட வளர்ச்சிகள்

நாவலர் மறைவின்பின் ஐம்பதிற்குக் குறையாத அவரது விசுவாசிகளும் மாணவர்களும் தனித்தனியாக நாவலர் கல்வி மரபின்படி சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கவும் வளர்க்கவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். இன்னுஞ் சிலர் ஒன்று சேர்ந்து இயங்க முயற்சித்தனர். அதன் பலாபலனாக சைவ பரிபாலனசபை என்ற அமைப்பு உருவாகியது. இச்சபையின் நோக்கங்கள் நாவலரின் இலட்சியமனைத்தையும் உள்ளடக்கியிருந்த போதிலும் அச்சபை சைவாங்கிலக் கல்லூரிகள் நிறுவுதல், சைவப் பிரசங்கங்கள் செய்வித்தல், சைவ நூல்களை வெளியிடல், பத்திரிகை நடத்துதல் ஆகியவற்றிலேயே கூடுதல் கவனஞ் செலுத்தியது. யாழ் இந்துக்கல்லூரி உட்பட சில இந்துக்கல்லூரிகளை நிறுவியும் இந்து சாதனம் பத்திரிகையை வெளியிட்டும் பல தமிழ், சைவ பாடநூல்களையும் இதர நூல்களையும் வெளியிட்டும் நாவலர் கல்வி மரபைப் பேணிய பெருமை இச்சபைக்குண்டு.

நாவலர் கல்விமரபை அடியொற்றிச் சைவப் பாடசாலைகளைத் தருமவான்கள் பலரும் தத்தம் ஊர்களில் நிறுவினர். அதற்காக அயராது உழைத்தவர்களுள் காரைநகர் அருணாசல உபாத்தியாரின் பணி மகத்தானது. இவரது பங்களிப்பை நாவலரின் மருகரான தம்பு கைலாசபிள்ளை அவர்கள் பின்கண்டவாறு மதிப்பீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

> யாழ்ப்பாணத்திலுள்ள சைவாசிரிய கலாசாலைக்கு முதற்காரணம் சு. அருணாசலமே. பரோபகாரர்களென்று யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் களுள் இரண்டாவதாக நான் மதித்திருப்பது இவரையே. ஆசிரிய கலாசாலைக்காகத் தங்காலத்தையும் பொருளையும் செலவு செய்து இவர் செய்த முயற்சிகள் பல.

அருணாசல உபாத்தியாயர் அவர்கள் தாமும் பல சைவப் பாடசாலைகளை அமைத்ததுடன் ஊர்கள் தோறும் பாடசாலைகள் அமைக்கப்படத் தூண்டுகோலாகவும் விளங்கினார். 1880களில் அமெரிக்க மிஷன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் கற்றதன் மூலம் பெற்ற அனுபவத்தின் காரணமாக நாவலர் இலட்சியங்களுள் ஒன்றாகவிருந்து அவர் காலத்திலே நிறைவேறாமற்போன சைவாசிரியர்கள் பயிற்சிக்கல்லூரி அமைக்கும் எண்ணத்தை நனவாக்க அருணாசல உபாத்தியாயர் அல்லும் பகலும் அயராது உழைக்கலானார். முதன் முதலில் காரைநகரில் சைவாசிரிய கலாசாலையொன்றை 1910 களில் நிறுவி ஆசிரிய மாணவர்களுக்கு உணவும், உடையும், உறையுளும் கொடுத்துத் தகுந்த ஆசிரியர்களைக்

கொண்டு நடத்தினார். மிஷனரிமார்களின் எதிர்ப்பால் இக்கல்லூரிக்கு அரச அங்கீகாரம் கிடைக்கவில்லை. 1914 ஆம் ஆண்டில் இக்கல்லூரி கீரிமலையில் ஏரம்பையர் குடியிருந்த மடத்திற்கு மாற்றப் பெற்று அங்கு இரண்டாண்டுகள் நடைபெற்றது. இங்கும் அரச அங்கீகாரம் கிடைக்காது போகவே கலாசாலையை வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு மாற்றினார். இங்கும் அரச அங்கீகாரம் கிடைக்கவில்லை. போதிய இடவசதியில்லை எனக் காரணங் காட்டப்பட்டது. இவ்வளவு நடந்தும் உபாத்தியாயர் சளைக்கவில்லை. கீரிமலையில் கல்லூரி நடத்தியபோது அங்கு அடிக்கடி வருகை தந்த இளம் சட்ட வல்லுனரான (பிற்காலத்தில் இந்து போட் இராசரத்தினம் என அழைக்கப்பட்ட) க. இராசரத்தினம் என்பவருடன் ஏற்பட்ட தொடர்புகளை தன் இலட்சியம் நிறைவேற நன்கு உபயோகப்படுத்திக் கொண்டார். திரு. இராசரத்தினம் அவர்கள் மூலம் தமிழ் அரசியல் வாதிகளான சேர். பொன். இராமநாதன், சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, சேர். போன். அருணாசலம், சேர். அம்பலவாணர் கனகசபை போன்றவர்களின் அறிமுகமும் உபாத்தியாயருக்குக் கிடைத்தது. அவர்களின் உதவியுடன் மேற்கொண்ட கடும் பிரயாசையின் பயனாகக் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஐக்கிய போதனாசிரியர் கலாசாலையாக மாற்றம் பெற்று 1916 ஆம் ஆண்டு முதல் அங்கு சைவாசிரியர்களும் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் சைவாசிரியர் பயிற்சிப் பகுதிக்கு முகாமை யாளராகவிருந்த உபாத்தியாயர் அவர்களின் மறைவோடு அப்பகுதி தளர்வுற்று 1923 ஆம் ஆண்டில் அரசினால் மூடப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் 1923ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் திரு (இந்துபோட்) இராசரத்தினம், சேர். பொன். இராமநாதன், சேர். வை. துரைசுவாமி, வட்டுக்கோட்டை எம். எஸ். இராசரத்தினம், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் ஆகியோர் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் என்ற நிறுவனத்தை உருவாக்கி நாவலரது தமிழ்ச் சைவப் பாட சாலைகளும் சைவாசிரிய கலாசாலையையும் அமைக்கும் திட்டத்தைப் பெருமளவில் பூர்த்தி செய்தனர். 1939ஆம் ஆண்டில் சைவசமயிகளுக்கு ஒரு விஞ்ஞாபனம் என்ற துண்டுப் பிரசுரமூலம் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் செயலாளராக விளங்கிய திரு. (இந்துபோட்) இராசரத்தினம் அவர்கள் இச்சங்கத்தைத் தோற்றுவித்ததற்கான காரணங்களைப் பின்வருமாறு விளக்கியிருந்தார்:

> இப்பொழுது கிறித்தவர்கள் இங்கே நடத்துகின்ற வேலை மரத்தை வளர்க்கின்றோம் என்று அதன் வேரிலே மெல்ல மெல்ல வெந்நீர் ஊற்றுகின்ற வேலை. தோளிலேயிருந்து காதிலே தாவுகின்ற வேலையென்றும் சொல்லலாம். ஒல்லாந்தர் போல 'மரங்களைத் தறிக்கிறோம். இதோ முறிக்கின்றோம்' என்று இவர்கள் சத்தம் போடுவதில்லை. சார்ந்திருந்து காரியம் பார்க்கின்றவர்கள் இவர்கள். எங்கள் குழந்தைகளைக் கொண்டே எங்கள் சமயத்துக்குக் கொள்ளி வைப்பிக்க முயலுகிறார்கள் .....
>
> நாவலர்களுக்குப் பிறகு கிறித்தவர்களின் சூழ்ச்சிகளை அறிந்த சைவப் பிரமுகர்கள் சிலர் தனித்துங் கூடியும் பல சைவப் பாடசாலை களையும் கல்லூரிகளையும் தாபித்தார்கள். எவ்வளவு முயன்றும் கிறித்தவர்களின் நெருக்கடியை நீக்க முடியவில்லை. இதனை

உணர்ந்த, சேர். போன் இராமநாதன், சேர். வை. துரைசுவாமி, வட்டுக்கோட்டை எம். எஸ். இராசரத்தினம் முதலியவர்களும் எங்களிற் சிலரும் சேர்ந்து 1923 ஆம் ஆண்டிலே சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தைத் தாபித்தோம்.

திரு. இராசரத்தினமவர்களது இக்கூற்று, அவர் நாவலரின் கல்வி மரபைத் தொடருவதில் எவ்வளவு ஆன்மார்த்தமாகச் செயற்பட்டார் என்பதைக் காட்டு கிறது. நாவலரின் பல இலட்சியங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்தவர் இந்துபோட் இராசரத்தினம் அவர்கள். தமிழில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் என அழைக்கப்பட்ட இந்நிறுவனம் ஆங்கிலத்தில் Hindu Board of Education என அழைக்கப்பட்டதால் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் இந்துபோட் இராசரத்தினம் எனவே அழைக்கப்பட்டார். இவரின் முயற்சியால் 1928 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் திருநெல்வேலியில் அமைந்த தனியார் வீடொன்றில் 22 மாணவர்களுடன் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. இது 1939 இல் சொந்தக் கட்டடங்களுடன் தனியானதொரு கல்வி நிறுவனமாகப் பரிணமித்தது. 1963ஆம் ஆண்டுவரை இது ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான சைவாசிரியர்களை உருவாக்கியது. 'கற்றுவல்ல உபாத்தியாயர்கள் நூற்றுவரை பயிற்றுவித்து நியமித்தல்' என்ற நாவலர் பெருமானின் இலட்சியத்தை நனவாக்கியவர் திரு. இராசரத்தினம் அவர்கள். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் 1958 ஆம் ஆண்டு அறிக்கைப்படி அக்காலகட்டத்தில் இந்நிறுவனத்தின் கீழ் ஏழு ஆங்கிலப் பாடசாலைகளும் நூற்றிநாற்பத்தேழு தமிழ்ப் பாட சாலைகளும் பெண்களுக்கும் ஆண்களுக்குமாக இரு ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகளும் நடத்தப்பட்டன.

1930 களில் திரு. இராசரத்தினம் அவர்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கு மான இரு அநாதை இல்லங்களை உருவாக்கினார். அவ்வநாதை இல்லங்களில் வாழ்ந்த பலரையும் கல்வியூட்டிப் பல்துறை அறிஞர்களாக உருவாக்கினார். நாவலரின் 'அன்னம் வஸ்திரம் கொடுத்து மாணவர்களைக் கற்பித்தல்' என்ற இலட்சியத்தையும் முதன்முதல் நனவாக்கியவர் திரு. இராசரத்தினம் அவர்களே.

திரு. இராசரத்தினம் அவர்கள் மேலும் ஒருபடி சென்று நாவலர் கல்விக் கொள்கையின் ஒரு அங்கமாகவிருந்த தொழிற்கல்வியளித்தல் என்ற இலட்சியத்திற்கும் செயல் வடிவம் கொடுத்தார். 1958ஆம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிய பதினைந்து நெசவுப் பள்ளிகளிலும் பதினாறு கூடை இழைக்கும் பள்ளிகளிலும் நூற்றுக்கணக்கானோர் தொழிற்கல்வி பெற்றனர்.

நாவலர் கல்வி மரபை மேலும் செழுமைப்படுத்துவதில் முக்கிய இடத்தை வகித்த இன்னொருவர் சேர். பொன். இராமநாதன் அவர்களாவர். அவர் 1913 இல் நிறுவிய இராமநாதன் கல்லூரியும், 1921 இல் நிறுவிய பரமேஸ்வரக் கல்லூரியும் நாவலர் மரபைப் பிரதிபலிப்பனவாக அமைந்த இருபெரும் கல்விக்கூடங்களாகும். நாவலர் அமைத்த சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் இராமநாதர் அமைத்த இரு கல்லூரிகளிலும் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய மொழிகள் சிறந்த புலமையுள்ள அறிஞர்களால்

கற்பிக்கப்பட்டன. பரமேஸ்வராக் கல்லூரி யாப்பின்படி அக்கல்லூரியில் "சைவ மாணவர்களுக்கு அளிக்கப்படும் கற்கை நெறிகளிலே வழக்கமாக இடம்பெறும் தமிழ், சமஸ் கிருதம், ஆங்கிலம், லத்தீன் முதலியவற்றுடன் வேதங்கள், சைவாகமங்கள், தர்ம சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றில் கூறப்பட்டுள்ள ஆன்மீக சிந்தனைகள் நடைமுறை உலகியல் வாழ்க்கையில் பின்பற்றப்படும் வகையில் புகட்டப்படும் நால்வர் தேவாரங்களும் தாயுமான சுவாமிகளின் திருப்பாடல்களும் கற்பிக்கப்படும் ....." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இராமநாதன் கல்லூரியிலும் பரமேஸ்வரக் கல்லூரியிலும் சைவ ஆசிரியர் பயிற்சியும் இடம்பெற்றிருந்தது. பரமேஸ்வரக் கல்லூரியில் பண்டிதர் வகுப்புகளும் சித்த ஆயுள்வேத வைத்தியக் கற்கைநெறி வகுப்புகளும் காவியப் பாடசாலை வகுப்புகளும் இடம்பெற்றன.

திருக்கேதீஸ்வரத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களது அயரா முயற்சியாய் அச்சுவேலி குமாரசுவாமிக்குருக்களை அதிபராகக் கொண்டு அமைக்கப்பட்ட சிவானந்த குருகுலம் என்ற சிவாச்சாரியார்கள் பயிற்சிக் கல்லூரி நன்கு திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட பாடதிட்டத்துடன் 1962 ஆம் ஆண்டு ஆரம்பித்துச் சிறப்பாக இயங்கியதாயினும் பல்வேறு காரணங் களால் அதன் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுவிட்டது.

இராமநாதன் கல்லூரிக்கான அறக்கட்டளையின் நோக்கங்களிலே சைவாலயங்களிலே பூசகர்களாக நியமிக்கப்படவுள்ள இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் திட்டமும் இடம்பெற்றுள்ளது. இந்த நோக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் கடந்த சில ஆண்டுகளாக இயங்கி வரும் 'சேர். பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம்' என்ற அமைப்பினால் ஓரளவுக்கு நிறை வேற்றப்பட்டு வருகிறது. நன்கு வடிவமைக்கப்பட்டதொரு பாடத்திட்டத்துடன் மெச்சத் தக்க பணியை இந்நிறுவனம் ஆற்றி வருகின்றபோதிலும் நாவலரின் மனத்திருந்த சைவப் பிரசாரகர்களையும் சைவக் குருமார்களையும் பயிற்றுவிக்கும் பெரியளவினதான தொரு கல்லூரியின் நோக்கத்தை எட்டுமளவிற்கு இது வளர்ச்சியடையவில்லை என்று தான் கூற வேண்டும்.

சைவாசிரிய கலாசாலை முன்னோடி என நாம் ஏற்கனவே குறிப்பிட்ட காரைநகர் ச. அருணாசல உபாத்தியாயர் அவர்கள் கீரிமலையில் சைவாதீன மொன்று அமைத்துச் சைவப் பிரசாரகர்களை உருவாக்கத் திட்ட மிட்டாராயினும் அது கைகூடுமுன் அவர் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

நாவலரின் ஐந்தாண்டுத்திட்டம் என அழைக்கப்படும் சைவக் குருமார் சைவப் பிர சாரகர்கள் பயிற்சிக் கல்லூரி போன்றதோர் திட்டம் சிவயோக சுவாமி களால் 1950 ஆம் ஆண்டளவில் பிரேரிக்கப்பட்டுக் கிளிநொச்சி வடிவேற் சுவாமிகளால் அநுவிக்கப்பட்டுச் சுவாமிகளின் சீடர் ஒருவரால் 'கிளிநொச்சி ஆதாரக்கல்விக் குருகுலம்' என்ற பெயரில் கால்கோள் செய்யப்பட்டு மூன்று ஆண்டு சைவபோதகர் பயிற்சி நாற்பது மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இம்முயற்சி பூரணத்துவம் பெற்றுச் சிறக்க சைவசமூகம் உதவ

முன்வராததாலும் சமகால நிகழ்வுகளாலும் இம்முயற்சி தொடரப்படாது கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் நாவலர் கல்வி மரபைச் செழுமைப் படுத்தியவர்களுள் புலோலியூர் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை ஆற்றியபங்கும் போற்றுதற்குரியது. சைவச் சூழலில் ஆங்கிலக் கல்வியையும் தமிழ்க்கல்வியையும் வளர்த்தெடுப்பதிலும் கிறித்தவ மதமாற்ற முயற்சிகளை முறியடிப்பதிலும் ஆலயங்களிலும், சமூகத்திலும் நிலவிய சீர்கேடுகளைக் களைவதிலும் இளம் பாடசாலை மாணவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் சைவத்தின் மகிமையை விளக்கும் இலகுதமிழ் நடை நூல்களை ஆக்கி அளித்த செயற்பாடுகளிலும் சைவசமய போதனையைச் சீரமைப்பதிலும் கட்டாயச் சமயக் கல்வியை அரசகொள்கையாக அங்கீகரிக்க வைப்பதிலும் அவர் ஆற்றிய பணிகளைச் சீர்தூக்கிப் பார்ப்பவர்கள் இவரை நாவலரின் வாரிசு எனவே கொள்வர். தனது வாழ்வைச் சமய மக்களின் மேம்பாட்டுக்காக முற்றுமுழுதாக அர்ப்பணித்த தவசிரேட்டர் அவர்.

நாவலர் மறைவின் பின் சிதம்பரத்திலும் வண்ணார்பண்ணையிலும் அமைந்த சைவப் பிரகாச வித்தியாசாலைகள் உட்பட்ட நாவலரின் தருமங் களுக்கு நாவலரின் முதன் மாணாக்கன் என்ற ரீதியில் திரு. ந. க. சதாசிவம்பிள்ளை அவர்கள் முகாமையாளராகக் கடமையாற்றினார். அவர்பின் த. கைலாசபிள்ளை அவர்கள் இப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவர்கள் இருவரும் நாவலர் மரபைப் பின்பற்றி நாவலர் தருமச் சொத்துக் களைக் கொண்டு பல நற்பணிகளைச் செய்தனர். இவற்றில் முக்கியமானது வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடத்தப்பட்டுவந்த காவிய பாடசாலையாகும். இக்காவிய பாடசாலையில் சுன்னாகம் குமார சுவாமிப்புலவர், தம்பு கைலாசபிள்ளை, வித்துவான் சுப்பையாபிள்ளை ஆகியோர் ஆசிரியர்களாக விளங்கினர். அக்காவிய பாடசாலையிற் கல்வி கற்று அதன் பயனாக மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் தேர்வில் சித்தி பெற்றவர்களுள் முதன்மையானவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களாவர். காவிய பாடசாலையினாற் பெற்ற அனுகூலங்களை மனதிற் கொண்ட பண்டிதமணி அவர்கள் 1935ஆம் ஆண்டில் இந்துபோட் இராசரத்தினமவர்களின் அனுசரணையுடன் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் காவிய பாடசாலையொன்றை ஆரம்பித்து நடத்தி வந்தார். அங்கு பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் வகுப்புகளும், மதுரைத் தமிழ்ப் பண்டித வகுப்புகளும், வடமொழிப் பண்டித வகுப்புகளும் நடத்தப் பட்டன. இக்காவிய பாடசாலை 1938 வரை சிறப்புடன் இயங்கிப் பல நூற்றுக்கணக்கான பண்டிதர்கள் உருவாகக் காரணமாயிருந்தது.

நாவலர் பாடசாலையிலும், சிறிது காலம் திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலா சாலையிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் நடைபெற்று வந்த காவிய பாடசாலைகளிலே பயின்ற மாணவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்பட்ட பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைகளுக்கும் சென்னை சைவ சித்தாந்த சமாஜத்தினர் நடத்திய இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளுக்கும் தோற்றினர். 1961 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட அகில

இலங்கைச் சைவப் புலவர் சங்கம் அவ்வாண்டு முதல் இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளை நடத்திப் பட்டமளித்து வருகிறது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், சைவ சித்தாந்த பால பண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் தேர்வுகளை நடத்திப் பட்டமளித்து வருகின்றனர். அத்துடன் பாடசாலை மாணவர் களிடையே வருடந்தோறும் சைவநெறித் தேர்வுகளையும் நடத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தினர் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

1960ஆம் ஆண்டில் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட போது, வண்ணார் பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையும் அரசிடம் கையளிக்கப்பட்டது. அப்போது இவ்வித்தியாசாலையுடன் இணைந்த நாவலர் தர்மச்சொத்துக்களைப் பராமரித்து அவற்றால் வரும் வருமானங்களை நாவலரது குறிக்கோள்களையடைய உபயோகப் படுத்தும் நோக்கத்துடன் நாவலர் தர்மகர்த்தா சபையொன்று அமைக்கப்பட்டது. இச்சபை காவிய வகுப்புகள், சமஸ்கிருத வகுப்புகள், பண்ணிசை வகுப்புகள் போன்றவற்றை நடத்தி வந்த போதிலும் அவை செழிப்படையவில்லை.

மேற்கூறியவற்றிலிருந்து 1850, 1900 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட அரை நூற்றாண்டு காலத்தை நாவலர் கல்வி மரபு முகழ்ந்த காலமெனவும் 1900, 1950ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட அரை நூற்றாண்டு காலத்தை நாவலர் கல்வி மரபு ஆழ வேரூன்றிக் கிளைவிட்டுப் பூத்துக் குலுங்கிய காலமெனவும் கூறலாம்.

நாவலர் கல்வி மரபு தற்போது தளர்ச்சி கண்டிருப்பதற்கான காரணிகள்

கடந்த அரைநூற்றாண்டு காலத்தில் நாவலர் கல்வி மரபை மேலுஞ் செழுமைப்படுத்திப் பேணும் முயற்சிகள் தளர்வடைந்துள்ளது என்பது கவலைக்குரிய, ஆனால் மறுக்கமுடியாத உண்மையாகும். அவற்றிற்கான காரணங்கள் கசப்பானவை.

அ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற் றாண்டின் முற்பகுதியிலும் உருவாகி நாவலர் கல்வி மரபை முன் னெடுத்துச் சென்ற நிறுவனங்களுக்குள்ளே நிலவிய உட்பூசல்கள்.

ஆ) தலைமைப்பதவிகளை அவாவிய சிலர் பிறிதொருவரின் தலைமையின் கீழ் நிறுவனச் செயற்பாடுகள் விருத்தியடைவதைக் காணச் சகியாதவராய் நிறுவனத்தின் செயற்பாடுகள் சீராக நடைபெற ஒத்துழைப்பதற்குப் பதிலாக முட்டுக்கட்டை போட்டமை.

இ) பொறுப்பான பதவியிலிருந்தோரிற் சிலர் அப்பதவி தமது ஆயுள் வரை வேண்டும் என்ற நோக்கத்தோடு செயற்பட்டமையும் தமக்குப் பின் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்லக் கூடிய அர்ப்பணிப்பு மிக்க இளந்தொண்டர்களைப் பயிற்றுவித்து, தமது பணி தம் காலத்தின் பின்பும் தொடர்வதுடன் மட்டுமன்றிச் செழிப்படையவும் வேண்டு

மென்ற நோக்கத்துடன் செயற்படாது போனமை. உடல் நிலை தளர்ந்த நிலையில் தமது பொறுப்புக்களையும் பணிகளையும் படிப்படியாக அப்பணிகளைச் செய்யக்கூடியவர்களிடம் காலாகாலத்தில் கையளியாமை.

ஈ) சொத்துக்கள் சேர்ந்திருந்த நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளில் அமர்ந் திருந்தோரிடம், அச்சொத்துக்கள், தங்கள் நண்பர்களும் உறவினர்களுமான ஒரு சிறு கூட்டத்தாரின் கட்டுப்பாட்டிலேயே இருத்தல் வேண்டுமென்ற மனோநிலை உருவானது காரணமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய உண்மைத் தொண்டர்கள் தாமும் தம் நிறுவனத்துள் புகுந்துவிடக்கூடாது என்ற வகையிற் செயற்பட்டமை.

உ) ஆழ்ந்த சமய அறிவும், சமய உணர்வும், பற்றும், தொண்டுமனப்பான்மையும் இல்லாதவர்கள் - பேர் புகழுக்காகச் சமய வாதிகளாகக் காட்டிக் கொண்டவர்கள்- சமய நிறுவனங்களின் பொறுப்பான பதவிகளைத் தம்கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு ஆக்க பூர்வமான நடவடிக்கையெதிலும் ஈடுபடாதிருந்தமை ஆழ்ந்த சமய அறிவும் சமய உணர்வும், பற்றும், தொண்டு மனப்பான்மையும் கொண்டவர்களின் கருத்துக்கள் மதிக்கப்படாது விடப்பட்டமையும் ஏளனஞ்செய்யப்பட்டமையும்.

ஊ) ஆழ்ந்த சமய அறிவும், சமய உணர்வும், பற்றும், தொண்டுமனப்பான்மையும் கொண்டவர்களையன்றி, பெரும் பதவிகளில் உள்ளவர்களைச் சமய சம்பந்தமான விழாக்கள், கூட்டங்களில் தலைமை வகிக்கவும், பேசவும் பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர் என்ற மகுடத்தின்கீழ் பேச அழைக்கப்பட்டும், கௌர விக்கப்பட்டும் சைவசமயம் பற்றி யாரும் எப்படியும் எதுவும் பேச முடியும் என்ற நிலையை ஒரு சிலர் ஏற்படுத்த, அதனைப் பலரும் பின்பற்றியமை, அதன் காரணமாகக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான உண்மைச் சமய உணர்வு கொண்டோரைத் தாமாகவே ஒதுங்கி வாழும் நிலையை ஏற்படுத்தியமை.

இவையும் இவைபோன்ற இதர காரணங்களும் சைவசமய நிறுவனங்கள் பலவும் செயலற்றுப் போனமைக்கு அல்லது குற்றுயிருடன் இயங்குவதற்குக் காரணமாக அமைந்தன என்பது கசப்பான உண்மை.

1961ஆம் ஆண்டில் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டபோது ஒவ்வொரு கிறித்தவ மதப்பிரிவினரும் மிகுந்த தீர்க்கதரிசனத்துடன் நடந்து கொண்டனர். அதற்குக் காரணம் அவ்வொவ்வொரு பிரிவினருக்கும் ஒரேயொரு தலைமைப்பீடம் அமைந்திருந்தமையாகும். இருபெரும் கிறித்தவ மதப் பிரிவின் தலைமைப் பீடங்களும் தத்தமக்கென ஒரு சில பாடசாலைகளை அரசிடம் கையளிக்காது வைத்துக் கொண்டனர். மாணவர் தங்கிப் படிக்கக் கூடிய பாடசாலைகளையே அவ்வாறு வைத்துக் கொண்டனர். அதற்கு வலுவான காரணங்கள் இருந்தன. அவர்கள் பொறுப்பேற்கும் ஆதரவற்ற சிறார்கள் இவ்வீடுகளிற் தங்கியிருந்துதான் கல்வி கற்கிறார்கள். அவர்களுக்கு அங்கு மேலதிக பாடங்கள் போதிக்கப்படுகின்றன. இறுதியில் அவர்கள் நன்கு கற்றுத் தேர்ந்து

நல்ல தொழில் வாய்ப்புப் பெறுகிறார்கள். அல்லது குருமனைகளில் சேர்ந்து போதகர்களாகவும் சமய ஊழியர்களாகவும் மாறி விடுகிறார்கள்.

சைவநிறுவனங்களோ, பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்ட போது தங்கள் கல்விப்பணி அத்துடன் முடிவடைந்துவிட்டதுபோல் நடந்து கொண்டன. அவை தீர்க்கதரி சனத்துடன் நடந்து கொண்டதாகக் கூறுவதற் கில்லை. அவர்கள் தீர்க்கதரிசனத்துடன் நடந்து கொண்டிருப்பின் நாவலர் பெருமான் நிறுவிய வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை அரசிடம் கையளிக்காது அதனை நாவலரின் பெருவிருப்பாக அமைந்ததும் நாவலர் ஐந்தாண்டுத் திட்டம் எனப் பேசப்படுவதுமான சைவப்பிரசாரகர்கள், குருமார்கள் பயிற்சிக் கல்லூரியாக மாற்றியிருந்திருப்பர். சைவபரிபாலன சபையின் புண்ணியநாச்சி தருமச் சொத்துக்கள், மழவராயர், சேர் பொன் இராமநாதன் போன்றோர் கல்விப் பணிக்காக விட்டுச் சென்ற சொத்துக்கள் ஆகியவை விவேகமான முறையிற் பயன்படுத்தப்பட்டு நன்கு திட்டமிடப் பட்டவொரு சைவப் பிரசாரகர்கள், குருமார்கள் பயிற்சிக் கல்லூரியாக அதனை மாற்றியமைத்திருக்கலாம். அவ்வாறானதொரு நிலை ஏற்படாமைக் கான காரணம் ஒவ்வொரு சைவ சமய நிறுவனமும் தாம் - சைவத்தை வளர்ப்பதென்று - பொதுநோக்குடையவொரு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள்; ஆகவே அதே குறிக்கோள்களையுடைய இதர நிறுவனங்களுடன் கலந்து பேசி நன்மை விளைவிக் கக்கூடிய பொதுத் திட்டங்களைத் தீட்டித் தமது பொதுக்குறிக்கோளை அடைய முயல வேண்டும் என்ற பரந்த நோக்கின்றி, தத்தம் சொத்துக்களைத் தாமே 'கட்டியாளவேண்டும்' என்ற குறுகிய மனப்பான்மையோடு செயற்பட்டமையேயாகும். இதன் பலாபலனையும் அவை கண்டு விட்டன; அவையொவ்வொன்றுமே தமது சொத்துக்களிற் பெரும்பகுதியை ஏதொவொரு வழியிற் இன்று இழந்து நிற்கின்றன.

பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டபோது சைவவித்தியா விருத்திச் சங்கத்தினர் தம் நிர்வாகத்தின் கீழிருந்த பாடசாலைகள் அனைத்தையும் அரசிடம் கையளித்தனர். அது தவிர்க்க முடியாததே. ஆனால் அவர்கள் தம்மால் நடத்தப்பட்டு வந்த அநாதையில்லத்தைத் தொடர்ந்து நடத்துவதுடன் திருப்தியடைந்து விட்டனர். ஏறத்தாழ நூற்றியைம்பது பாட சாலைகளையும் இரு அநாதை இல்லங்களையும் முப்பதிற்கு மேற்பட்ட தொழிற் பயிற்சிப் பள்ளிகளையும் நடத்தி வந்த இச்சங்கத்தினர், பாடசாலைகளை அரசிடம் கையளித்த பின்னர் தமது முழு வளங்களையும் பயன்படுத்தி அநாதை இல்லங்களுடன் இணைத்து தொழிற்பயிற்சிப் பள்ளிகளை விரிவுபடுத்தி முறைசாராக் கல்வியை நன்கு வளர்த்தெடுத்திருக்க முடியும். அது நடைபெற வில்லை. இதுவும் ஒரு தீர்க்கதரிசனமற்ற செயற்பாடே. இவ்விடயத்திலும் சைவநிறுவனங்கள் கலந்து பேசி கல்வி மேம்பாட்டிற்கான பல ஆரோக்கியமான செயற்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். கையிலிருப்பதை விவேகமானமுறையிற் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற குறிக்கோளுடன் சைவ நிறுவனங்கள் செயற்படவில்லை என்பது கசப்பான உண்மை. இத்தொடர்பில் கிறித்தவ நிறுவனங்கள் எவ்வாறு நடந்து கொண்டன என்பதை இன்று

யாழ்ப்பாணத்தில் முறைசாராக்கல்வியை வழங்கும் நிறுவனங்களிற் பெரும்பாலானவை யாரால் நடத்தப்படுகின்றன என்பதை ஆராய்ந்தால் தெரியவரும்.

இன்றைய தேவை

1. பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டு எல்லாப் பாடசாலைகளிலும் ஒரேவிதமான பாடவிதானங்கள் நடைமுறைக்கு வந்த பின், நாவலர் கல்வி மரபு அவர் அமைத்த பாடசாலையிற்றானும் நடைமுறைப்படுத்தப் படுவது தளர்ச்சி கண்டது. இன்றைய பாடசாலைக் கல்வி முறையில், சமய அறிவூட்டலிலும் சமய வளர்ச்சிப் பணிகளிலும் பாடசாலைகளின் பங்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். ஆகவே, பாட சாலைகள் தேசியமயமாக்கப்பட்டபின் சமயப் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு பாடசாலைகளிலிருந்து பிறிதோர் வகை நிறுவனமொன்றுக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டுமாயினும், அது நடைபெறவில்லை. அவ்வாறு மாற்றப் பட்டிருக்க வேண்டிய நிறுவனம் நாவலரால் முன்வைக்கப்பட்ட சைவக்குருமார், பிர சாரகர்கள் பயிற்சிக் கல்லூரியே. அது நாவலரின் பாடசாலைகளிலேயே அமைந்திருந்தால் மிகப் பொருத்தமாகவிருந்திருக்கும்.

சைவசமய உண்மைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய பிரசாரகர்களையும் திருமுறை ஓதவல்ல ஓதுவார்களையும் ஆலய வழிபாட்டு விளக்கமுள்ள நிருவாக உத்தியோகத்தர்களையும் சைவாலய நித்திய நைமித்தியங்களையும் சைவ இல்ல பூர்வ அபரக் கிரியைகளையும் செய்வதோடமையாது மக்களுக்குச் சமய தத்துவங்களை விளக்கி அவர்களுக்கு அணுகி மன ஆறுதலளிக்கும் உபதேசங்களைச் செய்து அவர்களை சமயநெறி வாழப் பயிற்றுவிக்கக் கூடிய குருமார்களையும் பிரசாரகர் களையும் பயிற்றுவித்துப் பட்டமளிக்கக் கூடிய பயிற்சிக் கலாசாலையொன்று நிறுவப்படுவது நாவலர் பெருமானின் விருப்பத்தையும் இன்றைய அவசரத் தேவை களுள் ஒன்றையும் நிறைவேற்றுவதாக அமையும்.

காலத்தின் தேவைகளுள் முக்கியமானதொன்றாகக் கருதப்படும் இப் பயிற்சிக் கல்லூரி அதன் தரத்தில் நாட்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் தரமளவினதாகவேனும் இருத்தல் வேண்டும். இக்கல்லூரி வழங்கும் பட்டங்களை வேறெவரும் வழங்கமுடியாத சட்ட வரையறை இருத்தல் வேண்டும். இக் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கௌரவமான ஊதியம் வழங்கப்படவேண்டும். இக்கல்லூரியில் பயிற்சியும் பட்டமும் பெற்று வெளியேறுபவர்களுக்கு, ஆலயங்களில் சிவாச்சாரியர்களாக, சைவக்குருமார்களாக, சமயப்பிரசாரகர்களாக, ஓதுவார்களாக, நிர்வாக அதிகாரிகளாக சேவை செய்யும் வாய்ப்பு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

இக்கல்லூரியில் தமிழ், சமஸ்கிருத, ஆங்கில மொழிகள், கிரந்த இலிபி, சைவ சித்தாந்தம், வேத அத்தியபன ஸ்தோத்திர பாராயணப் பயிற்சி, பண்ணிசைப்பயிற்சி சைவத் தமிழ் இலக்கியங்கள், சைவாகமங்கள், சைவாகமக்கிரியைப் பயிற்சி, சைவ

இந்து சமய வரலாறும் பண்பாடும், சோதிடம், பொதறிவு (சமூகவியல், உளவியல், சுகாதாரக் கல்வி, சமய ஒப்பீட்டுக் கற்கை) ஆகியன போதிக்கப்படல் வேண்டும்.

முயற்சி செய்தால் இப்போது கூட ஒப்புதல் பெற்று நாவலர் பாடசாலையை மேற்குறித்த பயிற்சிக் கலாசாலையாக மாற்ற முடியும். நாவலர் பாடசாலைச் சுற்றாடலில் வேறு பல பாடசாலைகள் இருப்பதும் நாவலர் பாடசாலையில் இப்போ கல்விபயிலும் மாணவர் தொகை குறைவாக விருப்பதும் இதற்குச் சாதகமான அம்சங்களாகும்.

நாவலர் நிறுவிய முதற்பாடசாலை அதன் நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும். இச்சமயத்தில் அதன் நினைவாக நாவலர் தர்மகர்த்தா சபையினர் நாவலரது நூல்களை வெளியிட்டும் அவர் வெளியிட்ட நூல்கள், கண்டனங்கள், ஆவேதனங்கள் யாவற்றையும் உள்ளடக்கிய சைவத்தமிழ் நூல்நிலையமொன்றை இப்பாடசாலையில் அமைத்தும் இப்பாடசாலை நாவலரின் கனவினை நனவாக்குமொரு சைவப்பிரசாரகர் குருமார் பயிற்சிக் கல்லூரியாகப் பரிணமிக்கவும் இதய சுத்தியுடன் கருமமாற்றிப் பெருமுயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

2. சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினரால் இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க முயற்சியின் பயனாக உருவாக்கப்பட்ட, திருநெல்வேலி சைவச் சிறார் இல்லத்தோடு இணைந்ததாக முறைசாராக் கல்வி நிறுவனங்கள் பல உருவாக்கப்பட வேண்டும்.

3. அநாதரவான சைவச்சிறார்களை ஆதரித்து வளர்க்க உருவான முதல் நிறுவனம் திருநெல்வேலி சைவச்சிறார் இல்லம். இப்போது யாழ் குடா நாட்டில் பல சைவச் சிறார் இல்லங்கள் இயங்குகின்றன. இவற்றிற் சில சிறு குழுக்களாலும் சில தனியாராலும் நடத்தப்படுகின்றன. இவ்வாறான இல்லங்களை நடத்துவதற்கு சமீபத்தில் இந் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து மேலை நாடுகளில் வசிக்கும் சைவ மக்களிடமிருந்து பெருந்தொகைப்பண உதவி கிடைக்கிறது என்பது நிறுவனத்தை நடத்துபவர்களது செல் வாக்கிலும் நம்பத்தகுதன்மையிலும் தங்கியுள்ளது. சில இல்லங்களுக்கு மேலதிக பணம் சேருகிறது. சில பண நெருக்கடிக்குள்ளாகின்றன. இவ்வாறான பிரச்சினைகள் கிறித்தவர்களால் நடத்தப்படும் இல்லங் களுக்கு ஏற்படுவதில்லை. அவை யாவும் ஒரு தலைமைப் பீடத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றமையே அதற்கான காரணம்.

இலகுவாக வெளிநாடுகளில் நிதி திரட்டி நடத்தக்கூடிய சமூக மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட- முற்போக்கான சிந்தனையுள்ள - பணி என்பதால் இவ்வாறான இல்லங்கள் அமைத்து நடத்துவது ஒரு நாகரீகமாக (fashion)க் கூட சிலரால் கருதப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இச்சைவச்சிறார் இல்லங்களில் வாழும் பிள்ளைகளது ஆளுமை எவ்வாறு வளர்க்கப்படுகிறது. அவர்களது பிற்கால வாழ்வு எவ்வாறு அமைகிறது. அவர்கள் வளர்ந்தபின் என்ன செய்கிறார்கள் போன்ற விளக்கங்களுக்கு விடை தரக்கூடிய

தகவல்கள் இல்லை. தற்போது சைவசமய தருமப் பணிகளில் பேரார்வத்துடன் செயற்படும் செஞ்சொற்செல்வர் திரு. ஆறுதிருமுருகன் அவர்கள் இதுபற்றி ஆய்வு செய்யும் நல்லதொரு முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறோம். எமக்குக் கிடைத்த சில உறுதிபடுத்தப்படாத தகவல்களின்படி ஒரு சில இல்லங்களில் வாழ்ந்த சிறார்களில் ஒரு சிலர் பல்கலைக்கழகம் வரை சென்றிருக்க வேறு சில இல்லங்களில் வாழ்ந்தவர்கள் ஒரு சில குறிப்பிட்ட வயதின் பின் அங்கிருந்து நீக்கப்பட்டுவிடுவதாக அறியக்கிடக்கிறது. பிற்கூறியது உண்மையாயின் அதுவொரு பிழையான அணுகுமுறை. உணவும், உடையும், உறையுளும் ஆரம்பக் கல்வியும் அளிப்பதுடன் இவ்வில்லங்கள் தம் பணியை நிறுத்திக் கொள்ளக் கூடாது.

இவ்வில்லப் பிள்ளைகள் எவ்வாறு வளர்த்தெடுக்கப்படுகிறார்கள் என்பது முக்கியம். அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களும் சமய உணர்வும் ஊட்டப்படுவதோடு சிறந்த கல்வியும் ஊட்டப்படுதல் வேண்டும். அவர்களது ஆளுகை நன்கு வளர்க்கப்பட வேண்டும்.

இவ்வில்லங்களின் பராமரிப்பாளர்கள் நல்ல ஆளுகையும் அர்ப்பணிப்பும் சமய உணர்வும் தொண்டுள்ளமும் கொண்டவர்களாக மட்டுமன்றி உளவியற் பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்தாற்றான் நற்பயன் தரும். ஆகவே இவ்வில்லங்களைப் பராமரிப்பவர்களுக்குப் பயிற்சியளிப்பது கவனத்திலெடுக்க வேண்டியவொரு முக்கியமான அம்சம்.

இச்சிறார்கள் எந்தத் துறையில் திறமை காட்டுகிறார்கள் என்பதை அவதானித்து அத்துறையில் அவர்களது திறமையை விருத்தி செய்யச் சிறு வயது முதலே ஊக்குவிக்க வேண்டியது அவசியம். உரிய முறையில் வழிகாட்டப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்டால் இவர்களுள் ஒரு பகுதியினர் நாம் மேலே குறிப்பிட்ட சைவப்பிரசாரகர்கள் பயிற்சிக் கல்லூரியினாற் பயிற்றுவிக்கப்பட்டு முழுநேர சைவ ஊழியர்களாகப் பணியிலமர்த்தப்படலாம். ஒரு சிலர் இச்சிறுவர் இல்லங்களைப் பராமரிக்கும் பணியில் அமர்த்தப்படலாம். இன்னுஞ் சிலர் கீழே முன்வைக்கப்படும் சைவத் தலைமைப் பீடச் செயலகத்தின் வெவ்வேறு தரங்களிலமையும் பதவிகளில் அவரவர் தகுதிக்கேற்ப அமர்த்தப்படலாம். இத் திட்டத்தின் வெற்றி நாம் அச்சிறுவர்களை எந்தளவுக்குத் தொண்டுள்ளமும் சேவை மனப்பான்மையும் சமயவுணர்வுமுடையவர்களாக வளர்த்தெடுக்கிறோம் என்பதிற் பெரிதும் தங்கியிருக்கும். இந்தக் கலையில் நன்கு பயிற்றப்பட்டுத் தேர்ந்தவர்களாகக் கிறித்தவ பாதிரிமார்கள் விளங்குகிறார்கள். அவர்கள் தங்கள் குருமனைகளிலோ, சிறுவர் வாழ்வகங்களிலோ பணியாற்ற ஆட்களைத் தேடி விளம்பரம் செய்வதில்லை.

சுருங்கக் கூறுவதாயின், இச்சிறார்கள் உரிய முறையில் வளர்த்தெடுக்கப்படுவார்களாயின், நாம் இக்கட்டுரையில் முன்வைக்கும் சைவப் பிரசாரகர்கள் பயிற்சிக் கல்லூரி, சைவச்சிறார் இல்லங்கள், முறை சாராக் கல்வி நிறுவனங்கள், சைவத் தலைமையலுவலக நிர்வாகக் கட்டமைப்பு ஆகியவற்றின் முதுகெலும்பாகவும்

வாழ்நாட் சொத்தாகவும் அவர்களைப் புடமிட்டெடுக்க முடியும். சைவச்சிறார் இல்லங்களைப் பராமரிப்பவர்களுக்கான நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சியொன்று மேற்குறிப்பிடப்பட்ட சைவப் பிரசாரகர்கள் பயிற்சிக் கல்லூரியினால் நடத்தப்படுதல் வேண்டும்.

சைவச்சிறார் இல்லங்களைத் தாமாக நாடி வருபவர்களை அரவணைப்பது மட்டுமன்றி இவ்வில்லங்களில் சேர்க்கப்படக் கூடிய பிள்ளைகள் எங்குள்ளார்கள் என்பதைத் தேடிக் கண்டுபிடித்து சேர்ப்பதும் விரும்பத்தக்கது.

அடுத்து இன்றைய தேவைகளில் ஒன்றாக நாம் முன்வைக்கும் சைவத் தலைமை நிறுவனம், இச்சிறுவர் வாழ்வகங்களையெல்லாம் பின்னல் வலை போன்றதொரு அமைப்பால் ஒன்றிற்கொன்று உதவக்கூடிய முறையில் இணைத்து வழிநடத்துமாயின் ஒரு சில வருடங்களில் குறித்த சைவ நிறுவனத்தின் பல்வேறுபட்ட பணிகளுக்குத் தேவைப்படும் ஆளணியினரைத் தேடியலைய வேண்டிய தேவை ஏற்படாது.

4. சைவ நிறுவனங்கள் எதுவுமே நீடித்த காலத்திற்குச் செழித்திருக்கவில்லை. இதனைச் சைவ சமயத்தவரின் சாபக்கேடு எனச் சிலர் கூறுவர். இந்த விடயத்தில் சைவ சமூகம் சீர்திருந்தும் என்ற நம்பிக்கை பலருக்கு இல்லை. சைவ நிறுவனங்கள் நீடித்த காலத் திற்கு செழித்திருக்காமைக்கான காரணங்களை நாம் ஏற்கனவே நிரற்படுத்தியுள்ளோம்.

இன்று எதுவித அடிப்படைக் கோட்பாடுகளுமின்றி சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப சமயக் கோட்பாடுகளை வியாக்கியானஞ் செய்பவர்களே தம்மைச் சமயத் தலைவர்களாக குரல்தரவல்ல அதிகாரிகள் போல வெளிப்படுத்தி நடந்து கொள்கின்றனர். அவர்களது செயற்பாடுகளே மக்களிடையே சைவசமய வழிபாட்டுமுறைகள், அடிப்படைக் கோட் பாடுகள் பற்றிச் சந்தேகங்கள் எழக் காரணமாயமைகின்றன.

இவற்றை நிவர்த்திக்கச் சைவசமயத்திற்கு வலுவான கட்டுக்கோப்புள்ள தலைமைத்துவக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

★ இத்தலைமைப்பீடமே யாழ்ப்பாணத்தில் சைவசமய விவகாரங்கள் அனைத்திற்கும் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

★ இத்தலைமைப் பீடத்தின் அந்தஸ்தை இந்து சமய விவகார அமைச்சு அங்கீகரித்தல் வேண்டும்.

★ துறவியொருவரே இத்தலைமைப் பீடத்தின் தலைவராக இருத்தல் வேண்டும்.

★ இத்தலைமைப் பீடத்தின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டுச் சைவர்கள் ஒழுகுதல் வேண்டும்.

★ சைவ சமூகத்தை ஒன்றுபட்டுச் செயற்பட வைத்தல், சைவர்களிடையே சைவ உணர்வு - சைவ அபிமானம் ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளல், சைவ சமூகத்தைச் சுய கௌரவமுள்ளவொரு சமூகமாக உருவாக்க உழைத்தல், நாட்டு விவகாரங்களில்

சைவசமயத்தவர்களின் உணர்வுகள் அபிலாசைகள் மதிக்கப்படவும் கருத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதொன்றாகக் கருதப்படவும் வேண்டியதொரு நிலையை ஏற்படுத்தல், பொது விவகாரங்களில் சைவசமூகம், வெறும் பார்வையாளர்களாக அல்லது பங்காளர்களாகக் கணிக்கக் கூடிய நிலையை ஏற்படுத்தல் ஆகியவற்றை யதார்த்தமாக்கவும் இத்தலைமைப் பீடம் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

★ இத்தலைமைப் பீடம் நலிந்த மக்களுக்கு கைகொடுத்து உதவி, சமூகத்தின் சமய, கலாசார, பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் உழைக்க வேண்டும்.

★ இத்தலைமைப் பீடத்தில் ஓர் அறிஞர் சபை இருத்தல் வேண்டும்.

★ இந்த அறிஞர் சபை மூலம் ஐயப்பாடுகள், பிரச்சனைகள் பற்றி ஆராய்ந்தே தலைமைப்பீடம் தீர்மானங்கள் எடுத்தல் வேண்டும்.

★ இத்தலைமைப்பீடம் வேத சிவாகமங்கள், சைவசித்தாந்த சாஸ்திரங் கள், திருமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்து எழக் கூடிய பிரச்சனைகளுக்கு முடிவு காணும்.

★ பிரேரிக்கப்பட்டுள்ள சைவப்பிரசாரகர்கள், குருமார்கள் பயிற்சிக் கல்லூரி இத்தலைமைப் பீடத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும்.

★ இத்தலைமைப் பீடத்துத் தலைமைத் துறவி (சைவத்தலைமைப்பீடாதிபதி) பின் தலைமையின் கீழ் சைவ நிறுவனங்கள் மாநாடு (Conference of Saiva Institutions) எனும் ஒரு சபை நிறுவப்படுதல் வேண்டும். இம் மாநாட்டின் பொதுச் சபையில் சைவசமய ஆதீனங் களும், பீடங்களும், ஒரு குறித்த வரையறைக்குள் வரும் சைவாலயங் களும் சைவ சபைகளும் அங்கம் வகித்தல் வேண்டும்.

★ சைவத் தலைமைப் பீடாதிபதியை இம்மாநாடு தெரிவுசெய்யும்.

★ சைவத்தலைமைப்பீடத்திற்குச் செயலாளர் நாயகமொருவர் பொதுச் சபையால் நியமிக்கப்பட வேண்டும். ஊழியம் பெறும் முழுநேர ஊழியரான இவரே சைவத் தலைமைப்பீடத்தின் வழிகாட்டுதலுக்கமைய அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்று நிறைவேற்றும் நிறைவேற்று அதிகாரியாயிருப்பார். பொதுச் சபையிலிருந்து தெரிவாகும் பொறுப்பாண்மைக் குழுவொன்று சைவத்தலைமைத் துறவியின் தலைமையில் மாதா மாதம் கூடி நிர்வாகம் சம்பந்தமான முடிவுகளை எடுக்கும்.

★ சைவப்பிரசாரகர்களாகப் பயிற்சி பெற்றவர்களை சைவப்பிரசாரகர்களாகவும் சைவ மக்களின் சமய, சமூக, பொருளாதார தேவைகளைக் கவனிக்கும் அதிகாரிகளாகவும் பிரதேச செயலர் பிரிவுகள் வாரியாகச் சைவசமய விவகாரங்கள் பற்றிய சகல விபரங்களும் பேணப்பட வேண்டும்.

★ சைவ நிறுவனங்களும் ஆலயங்களும் சுயமாக இயங்குமாயினும் அவை இத்தலைமைப் பீடத்தின் கண்காணிப்பிற்கு உட்பட்டிருக்கும்.

மேலே முன் வைக்கப்பட்ட பிரேரணைகள் நடைமுறைச் சாத்தியமானவையா, சைவப் பிரசாரகர்கள் குருமார்கள் கல்லூரியில் போதியளவு மாணவர்கள் சேர்வார்களா, பணத் துக்கு என்ன செய்வது போன்ற வினாக்கள் எழத்தான் செய்யும். ஐயத்துக்கிடமின்றி இது நடைமுறைச் சாத்தியமானது. ஏனைய சமயத்தினர் குருமார்களையும் பிரசாரகர்களைப் பயிற்றுவிக்க கல்லூரிகளை நடத்தவில்லையா? அவர்கள் பணத்தைக் கோவிற் கட்டடங்களில் முடக்குவதில்லை. அவர்கள் ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபட்டுச் செயற்பட்டு முன் னேறுகிறார்கள். சைவசமூகமும் ஆளுக்கொரு திசையிற் செல்லாமல் ஒற்றுமையுடனும் தீர்க்கதரிசனத்துடனும் தியாகசிந்தையுடனும் செயற்படு மாயின் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. பயிற்சிக் காலத்தே உதவிப்பணம், பயிற்சியின் முடிவில் தேர்ச்சி பெற்றபின் வேலை வாய்ப்பு, கௌரவமான ஊதியம் ஆகியவை உறுதிப்படுத்தப்படுமாயின் போதியளவு மாணவர்கள் சேருவார்கள்.

தலைமைப்பீடத்தையும் பயிற்சிக் கல்லூரியையும் உருவாக்கி நடாத்து வதற்கு பல கோடி ரூபா முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இந்நிதியை எவ்வாறு திரட்டுவது? இப்பிரேரணைகளுக்கெனக் கேட்டால் ஒரு சில இலட்ச ரூபாய் தானும் சேராது. ஏனெனில் முன்வைக்கப்பட்டிருக்கும் பிரேரணைகளின் முக்கியத்துவத்தை உணரக்கூடிய நிலையில் சைவசமூகம் விழிப்புணர்வுடன் இல்லை. இவை முற்றாகப் பயன்தரும் காலத்தில் தான் அவ்வாறான விழிப்புணர்வு ஏற்படும்.

இன்று மக்கள் கோவில்களுக்குத்தான் பணத்தை வாரி வழங்குகிறார்கள். கோவில் நிர்வாகங்கள் தீர்க்கதரிசனத்துடனும் விவேகத்துடனும் செயற்பட்டுத் தம்மிடம் சேரும் பொருளைச் செலவு செய்யும் போது பின்வரும் மூன்று விடயங்களில் சமநிலை பேண முயல வேண்டும்:

1. ஆலயத்தைச் சிறந்த நிலையிற் பேணுதல். நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெற ஆவன செய்தல்.

2. ஆலயங்களில் சேவையாற்றும் தகுதி வாய்ந்த, சாஸ்திர பொரு ளுணர்ச்சி பெற்ற, மக்களுக்கு ஆறுதல் கூறி நல்வழிப்படுத்தக்கூடிய குருமார்களையும் சமய தத்துவங் களையும் வாழ்க்கை முறையையும் போதித்து மக்களை சமயவழிப்படுத்தக் கூடிய போதகர்களையும் உருவாக்குதல்.

3. சமூகத்தில் நலிந்தவர்களை இனங் கண்டு அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர உதவுதல்.

மேலே கூறப்பட்ட மூன்று விடயங்களில் இறுதியிரண்டையும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பிரேரிக்கப்பட்டுள்ள தலைமைப்பீடத்திடம் இருக்குமாகையின் அதன் செயற்பாட்டுக்கு ஆலயங்கள் தம் உபரி வருமானத்தின் பெரும் பகுதியைக் கொடுக்க வேண்டும்.

இதர சமயங்களின் செயற்பாடுகளை நோக்கின், அவர்கள் இம் மூன்று விடயங்களுக்கும் சமவளவு முக்கியத்துவம் கொடுப்பதைக் காணலாம். சைவ சமூகத்தைப் பொறுத்தளவில் இச்சமநிலை பேணப்படுவதில்லை. மேலே மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள சமூக சேவையில் ஒரு சில ஆலயங்களே ஈடுபட்டுள்ளன. இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த குருமார்களையும் போதகர்களையும் உருவாக்கும் விடயத்தில் எந்தவொரு ஆலயமும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவுக்கு ஈடுபடவில்லை. இப்போக்கு மாற வேண்டும்.

முன்னைய காலங்கள் போலல்லாது கடந்த பத்து ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திலுள்ள சைவாலயங்களுக்குப் பிரதி வருடமும் பல கோடி ரூபாய்கள் புலம்பெயர்ந்து வாழும் யாழ்ப்பாணத்துச் சைவ மக்களால் அனுப்பி வைக்கப்பட்டன. இன்றும் அனுப்பி வைக்கப் படுகின்றன. அதற்கு மேலதிகமாக சில கோடி ரூபாய்கள் இந்து சமய விவகார அமைச்சி னால் சமீப காலத்தில் ஆலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவை முழுவதும் கட்டடங்கள் கட்டுவதற்கே உபயோகப்படுகின்றன. ஆலயங்களைச் சிறந்த நிலையில் பேணி அங்கு நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெறச் செய்வதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால் தேவைக்கு அதிகமாகப் புதிது புதிதாகக் கட்டடங்கள் கட்டுவிப்பதிலும் அழகூட்டுவதிலும் புதிய ஆலயங்கள் அமைப்பதிலும் பெருந்தொகைப் பணம் செலவழிக்கப்படுகிறது. பிரதி வருடமும் கோடிக் கணக்கான ரூபாய்கள் திருவிழாக்களைப் பெரியளவில் நடத்துவதற்குச் செலவழிக்கப் படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கோவில்களைப் பெரிதாகக் கட்டுவதாலோ பெருஞ்செலவில் விழாக்களை நடத்து வதாலோ சமயத்தின் குறிக்கோளை அடைந்து விட முடியாது. தமது சமய வாழ்வின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட வழிபடுநரும் தகுதி வாய்ந்த குருமாரும் அமையாத கோவில்கள் வெறும் கட்டடத் தொகுதிகளாகவும் களியாட்ட நிலையங்களுமாகி விடும் என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மேலும் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி இன்னும் சில தசாப்தங்களுள் வரண்டுவிடும் என்பதையும் மனத்திருத்தி விவேகமான முறையில் இப்போ கிடைக்கும் பணத்தை ஆலய நிர்வாகங்களில் முதலீடு செய்ய முன்வர வேண்டும்.

முடிவுரை

காலமாற்றத்திற்கேற்ற மாற்றங்களை உள்வாங்கிக்கொள்ளும்போது தான் மரபு செழிப்புறும். நாவலர் பெருமான் தம் வாழ்நாளில் அன்னியர் வருகையால் ஏற்பட்ட நிலைமைகளுக்கு ஏற்ப அப்போது நிலவிய கல்வி மரபில் தகுந்த மாற்றங்களை ஏற்படுத்தி அதனைச் செழுமைப்படுத்தினார். அன்னியராட்சி முடிவுற்று ஜனநாயக ஆட்சிமுறையில் வாழும் நாம் இக்கால கட்டத்துச் சவால்களுக்கேற்ப சில புதிய சிந்தனைகளை உள்வாங்கினாற்றான் எமது மொழியும் சமயமும் எழுச்சி பெறும். நாவலர் பெருமான் நிறுவிய முதற் கல்விக்கூடம் அதன் நூற்றியைம்பதாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் இச் சமயத்தில் நாவலர்

கல்வி மரபைச் செழுமைப்படுத்த மேலே நாம் முன்வைத்த திட்டங்களைக் கவனத்திற் கெடுத்து நாவலர் கல்வி மரபு மீண்டும் வீறு நடை போடவும் இவ்விழா சைவத்தமிழ் வளர்ச்சிக்கான எழுச்சி விழாவாக அமையவும் சைவத்தமிழ்ச்சமூகம் ஒற்றுமையுடன் உதவ வேண்டும். ஒற்றுமையின்றேல் அனைவருக்கும் தாழ்வு. ஒற்றுமையுடன் செயற்பட்டால் லௌகீகநெறி, வைதீகநெறி இரண்டிலும் மேன்மையடையலாம் என்பது நாவலர் வாக்கு:

> தமிழர்களாகிய நம்மவர்கள் யாதாயினும் ஒரு கருமத்தை நடத்துவதற்கு ஒருங்கு கூடுதல் அரிது. ஒரே வழிக்கூடினும் ஐக்கியத்தோடு நிலைபெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல் அரிது. அவர்கள் ஐக்கியமேயின்றிப் பெரும்பான்மையுந் தங்கள் உள்ளத்தில் விளையும் பகையையே பாராட்டிக் கலகம் விளைவித்து, எடுத்த கருமத்தைக் கைவிடுவதே வழக்கம். இதுபற்றியே நம்மவர்கள் லௌகீக நெறி, வைதீக நெறி என்னும் இரண்டினும் மேன்மை அடையாது, அன்னிய தேசத்தார்களும் அன்னிய பாஷையாளர்களுமாய் உள்ளவர்களாலே அவமதிக்கப்பட்டுத் தலை கவிழ்கின்றார்கள்.
>
> நம்மவர்களெல்லாரும் பொறாமை, பகை, முதலியவைகளின்றி ஐக்கியமுடைய வர்களாய் கூடும் பொருட்டும், தங்கள் தங்களால் இயன்ற மட்டும் வாக்காலும், காயத்தாலும், பொருளாலும் சகாயஞ் செய்து உத்தமோத்தம சிவ புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு நிறைவேற்றிப் பெரும் புகழையும் புண்ணியத்தையும் அடையும் பொருட்டுத் திருவருள் சுரக்கும்படி பரம காருண்ய சமுத்திரமாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

'ஆறுமுகநாவலர் - ஒரு பன்முக நோக்கு', நாவலர் நற்பணிமன்றம், ஆலயம் வெளியீட்டகம், 2015, பக். 11-42.

நாவலர் தாபித்த வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை

சி. கணபதிப்பிள்ளை

வரலாறு

நாவலர்ப் பட்டம் வந்தது 1849 இல்;

வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்தது 1848 இல்;

நாவலர் மறைவு 1879.

நாவலர் மறைந்த பின் உண்டானது இப்பொழுது நடைமுறையிலிருக்கும் வித்தியாசாலை. இது சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரைக் கொண்டிருந்தாலும். நாவலர் தாபித்த அது வேறு, இது வேறு. நாவலர் தர்மங்கள் அதற்கேயுரியவை. விளக்கம் பின்வருமாறு:

அபிவிருத்தி

நாவலர் 1845 ஆம் ஆண்டு தொடக்கம் காலையிலும் இரவிலும் வளர்ந்தோருக்குப் பாடம் நடத்தி வந்தார். அவர்களுள் தகுதி வாய்ந்தவர்கள் 1848 இல் சைவப்பிரகாச வித்தியா சாலையில் ஆசிரியர் ஆனார்கள். நாவலர் ஆசிரியர்க்காசிரியராயும், வித்தியாசாலையின் அதிபராயுமிருந்து வந்தார். வித்தியாசாலையின் வளர்ச்சிக் காலத்தில் வடமொழியில் மகா மேதையான நீர்வேலிச் சங்கர பண்டிதர் நாவலருக்கு உசாத்துணையாய் நாவலரின் வலக்கரமாயிருந்தார்.

ஒரு காலத்தில் மகான் செந்திநாதையர் தலைமை உபாத்தியாயர்; உதவி உபாத்தியாயருள் சிரேட்டர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை. இலக்கிய ரசனை பிள்ளைக்குப் பிறவிச் சொத்து. தெருக்கள், தெருத்திண்ணைகள், கோயில் மண்டபங்கள், சில வீடுகள் என்றிவைகள் பிள்ளைக்குக் கற்பிக்கும் பிரத்தியேக இடங்கள். எழுத்தாணியும், ஏடும் தாங்கி ரசிகர்கள் கூட்டம் பிள்ளையை மொய்த்தபடியிருக்கும். நாவலருக்குப் பூசை நேரமே ஓய்வு நேரம். ஏனைய நேரங்களில் ஆனாவிலிருந்து பாட புத்தகங்கள் எழுதுதல், உரையெழுதுதல், வசனப்படுத்தல், பழைய நூற் பரிசோதனை என்றிவைகள் நடக்கும். இவைகளிற் பங்கு பற்றிப் பாண்டித்தியம் பெற்றோர் பலர்.

சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் சித்தியார் பாடங் கேட்டுப் பிரபலஸ்தரானோர் எண்ணிக்கை முக்கியமானது.

சபாபதி நாவலர், சங்கர பண்டிதரிடமும், நாவலரிடமும், வித்துவசிரோமணியிடமும் நேரே பாடங் கேட்டவர். தர்க்க குடாரதாலுதாரி வித்தியாசாலையிற் படித்தவர்; பின்னைய இருவரிடமும் நேரேயும் பாடங்கேட்டவர். தர்க்க குடாரம் தம் தருக்க வன்மையைச் சபாபதி நாவலரோடு கடாவிக் கூர்மை செய்வதுண்டு. தர்க்காமிர்தம் குடாரம் செய்தது; குடாரம் - கோடரி.

நாவலரின் மாணவர்கள், மாணவரின் மாணவர்கள் தத்தம் ஊர்களில் திண்ணைப் பள்ளிகள் நடாத்தினர்.

முக்கிய பாடமான கந்த புராண படனம் சுத்தமான தமிழையும் சைவத்தையும் பரவச் செய்தது.

சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையும் சபாபதி நாவலரும் தமக்குத் தாமே நிகரான சமயப் பிரசங்க சிங்கங்கள்.

செந்திநாதையர் ஆறு வருடத்துக்கு மேல் தலைமையாசிரியாயிருந்தபோது, நாவலரின் வாயிலிருந்து வருபவைகளை எழுதி, எழுத்தெண்ணிப் படித்தவர். பின், வடக்கே போய்த் திருமுறைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள், ஆகமங்கள் யாவற்றையும் பருகி ஏப்பம் இட்டவர். காசியில் பல ஆண்டு வசித்து, சாத்திரிகளிடம் உபநிடதங்களையும், பிரம சூத்திர பாஷியங்களையும் படித்து அரிய பெரிய நூல்களை வெளியிட்டவர். திருப்பரங்குன்றில் இருந்து கொண்டு சைவ மடங்களுக்கும், மாயாவாத கண்டனக்காரர்களுக்கும் ஊன்றுகோலாய் நிகரற்ற கல்விமானாய் விளங்கியவர். எத்தனையோ சைவப் பிரசாரகர்களை உற்பத்தி செய்தவர். கதிரைவேற் பிள்ளைக்கு 'மாயாவாத தும்ச கோளரி' என்ற பட்டம் வழங்கி ஆசீர்வதித்தவர்.

கற்பகதரு

நாவலர் என்ற கற்பகதரு அன்றும் அதன் மேலும், இன்றும் எங்கே சுத்தத் தமிழும் சைவமும் உண்டோ, அங்கே ஒருவாற்றால் தொடர்புடையதாயிருப்பதைக் காணலாம். நாவலரின் அடிச்சுவட்டில் நடந்து பெரிய காரியஞ் செய்தவர் சுவாமி விபுலாநந்தர் என்கிறார் பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தன் அவர்கள். அவர்கள் காட்டும் ஒப்புமை மிகமிக அருமையானது. கற்றுவல்ல உபாத்தியாயர் தொகை அதிகரித்தது. பல துறைப்பட்ட நூலுரைகள் வெளியிடு வோரும் சைவப் பிரசாரகர்களும் உளராயினர்.

ஐந்தாண்டுத் திட்டம்

நாவலர் பெருமானோ இவ்வளவில் திருப்தியடைந்தாரில்லை. கற்று வல்ல உபாத்தி யாயர்களையும், சைவப் பிரசாரகர்களையும் சிறப்பாயதொரு முறையில் உற்பத்தி செய்து, திட்டமான ஒழுங்கு முறையில் மேலாய நிலைத்த பயனை வருவிக்க முயன்றார். அம்

முயற்சியே நாவலர் கருத்தகத்தே குடி கொண்டிருந்த ஐந்தாண்டுத்திட்டம். திட்டவிளக்கம் பின்வருமாறு :

வருடந்தோறும் இருபதின்மர் வளர்ந்த மாணவர் - ஒழுக்க சீலமும், விவேகமும், ஆரோக்கியமும் உடையவர் - தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து வருடம் பயிற்சி பெறுவர். ஐந்தாம் வருடத்தில் நூறு மாணவர்கள் கொண்ட ஐந்து வகுப்புக்கள் இருக்கும். ஐந்தாம் வருட முடிவில் இருபதின்மர் பயிற்சி முடிந்து வெளியேற புதியவர்கள் இருபதின்மர் முதலாம் வருட வகுப்பில் சேர்க்கப்படுவர். பயிற்சி முடிந்த இருபதின்மரில் ஒரு பகுதியார் கற்று வல்ல உபாத்தியாராயிருப்பர். ஏனையோர் சைவப் பிரசாரகராயிருப்பர். முக்கிய ஸ்தலத்தோறும் சைவப்பிரசாரகர்கள் நியமனம் பெற்று கோயிற் பூசை முதலிய கிரமங்களைச் சாத்திர முறைப் பெற்றோருடன் கலந்து பிள்ளைகள் உரிய காலத்தில் சமய தீட்சை பெற்றுச் சமயசாரமுடையவர்களாதற்கு வழி செய்வர். பயிற்சிக் காலத்தும், பின்னும் முட்டுப்பாடின்றி இருத்தற்குப் பொருளாதாரத் திட்டம் புறம்பாக உண்டு.

கற்றுவல்ல உபாத்தியாயர்கள் ஊர் தோறும் சைவப் பாடசாலைகள் தாபித்துச் சமய நூல்களையும், கருவி நூல்களையும் கற்பித்து, சைவப்பிர சாரகரோடும் பெற்றோரோடும் இணைந்து நடப்பர்.

கற்றுவல்ல ஆசிரியர்களுக்குப் பொருள் வருவாய்க்கு நாவலர் வழி செய்திருக்கின்றார். அது அரசினர் நன்கொடை.

நாவலர் செய்த ஒரு பெருங்காரியம் அச்சுக்கூடம் தாபிக்க உத்தரவு பெற்றதும் அரசினர் நன்கொடை பெற்றதுமாம். இந்த நன்கொடை ஐந்து வருடத் திட்டத்துக் கன்று; அதன் ஒரு அம்சமான சிறுவர் பயிலும் பாடசாலைப் பகுதிக்கு உரியது. அது கற்றுவல்ல உபாத்தியாயர்கள் ஊர் தோறும் தாபிக்க வேண்டிய பாடசாலைகளுக்கு முன் மாதிரிகையானது. இத்திட்டம் கற்பனையிலிருக்கும் போது நாவலர் மறைந்து விட்டார்

புதிய சூழ்வினை

வட்டுக்கோட்டைச் செமினரிக்கும் நாவலருக்கும் ஒரே வயசு. சில மாதங் களால் மூத்தவர் நாவலர். செமினரி கிழக்காசியாவின் சர்வகலாசாலை என வர்ணிக்கப்படுவது. அது சர்வசாத்திரசாலை ஆவதற்குத் துணை புரிவது போலத் தோன்றி நடந்தது பேர்சி வல் நடத்திய மத்திய கல்லூரி.

படித்தவர்கள் கிறித்தவராய்த் தானே இருப்பார்கள் என்ற நம்பிக்கை பாதிரிமாருக்கு இருந்தது. அந்த நம்பிக்கையை முற்றிலும் மாற்றிவிட்டார் நாவலர். கிங்ஸ்பரி, சி.வை.தா., கறல், பெரிய நெவின்ஸ், உவைம்மன் போன்றவர்களைப் பறிகொடுத்ததன்றிப் பேர்சி வலையும் இழந்தார்கள் பாதிரிமார். பேர்சிவல் நாவலர் தொடர்பால் ஓர் அபர சாக்கியர் ஆயினர். நாவலர் மறைந்ததும் பாதிரிமார் புதிய சூழ்நிலையிற் புகுந்தார்கள். 'படித்த வர்கள் மதம் மாறார்கள்' என்ற எண்ணம் ஸ்திரமானது.

கிராமந் தோறும் பாடசாலைகள் தாபிக்கப்பட்டன. ஐந்தாம் வகுப்புவரை அங்கே நடக்கும். மேல் வகுப்புக் குறித்த இடங்களில் நடக்கும். பயிற்சி வகுப்பு இரண்டொரு இடத்தில் நடக்கும். மேல் வகுப்பில் உடை உணவு உதவியை நாட மதம் மாறுகை உற்பத்தியாய், பயிற்சி வகுப்பில் பிரவேசித்ததும் ஞான ஸ்நாநத்தில் முடியும்.

சைவர்கள் பாடசாலை தாபிக்க முடியாதபடி சட்டங்களையும் மாற்றி வைத்துக் கொண்டார்கள். ஊர் தோறும் சைவப் பாடசாலை தாபித்தல் முடியாத காரியம் ஆனது. 1900 ஆம் ஆண்டு அளவில் தராதரப்பத்திர ஆசிரியரே தலைமை ஆசிரியராகலாம் என்ற விதியும் உண்டானது. நாவலரின் கற்றுவல்ல உபாத்தியாயர்கள் 'அன்சேட்டிவிக்கற்' என்ற பட்டத்துக்கு ஆளானார்கள்.

நான் அமெரிக்க மிஷன் பாடசாலையிற் படித்தவன். ஞானப்பால், வேத வினாவிடை, மார்க்கு எழுதிய சுவிசேஷம் படித்தவன். அதுவரை சைவ வினாவிடையைக் கண்ணாலும் காணவில்லை, 19 ஆம் வயசில் நாவலர் வித்தியாசாலையை ஒருவர் காட்டியபோது நாவலர் இருக்கிறாரா என்று கேட்ட பேர்வழி நான்.

சைவ பௌத்த பிள்ளைகள் தத்தம் சமயத்தை அறியாத பிரகாரம் செய்வதே கிறித்தவரின் ஆரம்பவேலை. இதற்கு நான் நல்ல உதாரணம். என் சூழலோ நாவலரோடு தொடர்புபட்டது. என்பாடு இங்ஙனமானால் சாதாரண பிள்ளைகளின் கதி என்னாகும்.

தமிழ்ச் சங்கம்

1900 க்கு அண்மையில் த. கைலாசப்பிள்ளை அவர்கள் நாவலரின் மாணவர் என்ற கருத்தில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு மனேஜர் ஆயினார். அவர் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிழலின் நிழலாக ஒரு தமிழ்ச் சங்கம் தாபித்தார். அதன் தலைமைப் புலவர் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள். இச் சங்கம் அரசகேசரி தாபித்த தமிழ்ச் சங்கத்தின் வழித் தோன்றல், இதன் பிறகுதான் நான்காவது மதுரைச் சங்கம் தோன்றியது.

சங்கச் சார்பில் பாரதி, பண்டிதர் முதலிய வகுப்புக்கள் நடத்தப்பட்டன. தலைமை ஆசிரியர் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள், உதவி ஆசிரியரில் முக்கியஸ்தர் சங்கரபண்டிதரின் புதல்வரான சிவப்பிரகாச பண்டிதரும், வடலியடைப்பு அருணாசல சாஸ்திரியும் ஆவர். சாஸ்திரியார் சங்கர பண்டிதரின் மாணவர்.

உதவி நன்கொடை பெறும் கீழ் வகுப்புக்களுக்குப் பாட விதானம், ஆசிரிய நியமனம் அதிபதி பொறுப்பில் இருந்து வந்தது. அரசாங்க நிபந்தனை அற்பம்.

1900 க்கு மேல், மெல்ல மெல்ல ஆசிரிய நியமனத்தில் பாதிரிமாரின் தூண்டுதலால் அரசாங்கம் கை வைக்கத் தொடங்கியது. தலைமை ஆசிரியர் தராதரப் பத்திரமுடையவராய் இருத்தல் வேண்டும். பயிற்சி பெற்றவரானால் மிக நன்று. தராதரப் பத்திரகாரர் என்றால் மத மாற்றம் பெற்றவராயே இருப்பார்.

நாவலர் என்ன செய்திருப்பார்?

நாவலரின் கற்றுவல்ல உபாத்தியாயர் இடத்துக்கு தராதரப் பத்திரமுள்ள உபாத்தியாயர், அதுவும் மதம் மாறிய உபாத்தியாயர் நியமனம் பெற வேண்டியவராயினார். இதற்கு நாவலர் உடன்படுவாரா? அப்படிப்பட்ட உபாத்தியாயர் அந்தத் தானத்தில் கால் வைக்க முடியுமா?

மகான் செந்திநாதையர் அமர்ந்த கதிரை, தராதரப் பத்திரமுடைய மதம் மாறிய ஒருவரைச் சுமப்பதா? இனி என்ன செய்வது என்று கேள்வி எழுந்தது. மனேஜர் த. கை. உதவி நன்கொடையை நிறுத்திவிடுவதென்ற முடிவுக்கு வந்தார்.

பெற்றோரும் வேறு பிரமுகரும் அரிதிற் பெற்ற உதவி நன்கொடையை நிறுத்த விரும்பவில்லை. சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரையும், உதவி நன் கொடையையும் கொடுத்து, புறம்பாக நடக்க வைப்பது என்று தீர்மானித்தார்கள்.

உதவி நன்கொடை பெறும் பகுதி மதம் மாறிய ஒரு தலைமை ஆசிரியரின் கீழ் புறம்பாக நடந்து வந்தது. பண்டித, பாரதி வகுப்புக்கள் வேறான கட்டடத்தில் அ. கு. புலவர் தலைமையில் நடந்தது.

ஒரு தலைமையில் நடந்த வித்தியாசாலையில் இரு தலைமை உதயமானது.

குரு பூசை முதலிய விசேட காலங்களில் உதவி நன்கொடைப் பகுதியும் அதன் தலைமை ஆசிரியர் உள்ளிட்ட ஆசிரியரும் ஒரு நேரத்தோடு போய் விடுவார்கள். புலவர் அவர்களின் தலைமையிற் படிப்பவர்கள் உதவி நன்கொடைக்கு உதவிய இடத்தைக் கழுவிச் சுத்தஞ் செய்து குரு பூசை நடத்துவர். உதவி நன்கொடைக்காரர் பூசையிற் கலப்பதேயில்லை.

காவியப் பாடசாலை

1917 ஆம் ஆண்டில் புலவர் தலைமையில் காவிய வகுப்பு என்ற பெயரைக் கொண்ட வகுப்பொன்று நடந்தது. அதிற் சேர்ந்து படிப்பவர்களுக்கு உண்டி, உறையுள் யாவும் உதவப்படுமென்று விளம்பரஞ் செய்திருந்தார்கள். என்னை உள்ளிட்ட பதினெண்மர் அதிற் சேர்ந்தோம். எங்களில் ஒருவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.

உதவி நன்கொடை

வருடந்தோறும் உதவி நன்கொடையை நிறுத்தும் பிரச்சினை உண்டாவதை நான் நன்கு அறிவேன். வித்தியாதரிசிகளுக்கும் மனேஜருக்கும் ஒத்துப் போவதில்லை. வித்தியாதரிசி சப்பாத்துடன் உள்ளே நுழைந்தாலும் நன் கொடையை நிறுத்தும் பிரச்சினை எழும். வித்தியாதரிசிகளுக்கும் படிப்புக்கும் வெகு தூரம் என்பது மனேஜர் கருத்து. ஒரு முறை புதிய வித்தியாதரிசி ஒருவர் 'நாவலர் பாலபாடத்தில் படம் இல்லை' என்று குறை சொல்லிவிட்டார். அந்த பகுதித் தலைமையாசிரியர் புலவரிடம் ஓடிவந்தார். இதனையறிந்த வித்தியாதரிசி மெல்ல நழுவிவிட்டார்.

ஒரு ஹால்ஸ்யம்

1922 இல் புலவர் மரணப் படுக்கையில் இருக்கிறார். வித்தியாதரிசி சதாசிவ ஐயர் அவரைப் பார்க்க வந்தார். ''நாவலர் வித்தியாசாலையில் பரீட்சை நடத்தி விட்டு வருகிறேன் '' என்றார். அதனைக் கேட்ட புலவரவர்கள் - கருவி கரணங்கள் ஒடுங்குகிற அந்த நேரத்தில் - ''ஏதும் முரண்பாடு எழ வில்லையோ'' என்று கேட்டு விட்டார்கள். அந்த நேரத்தில் அதனை ரசிப்ப தெப்படியென்று தத்தளித்தோம்.

புலவர் மறைந்த பின்பும் உதவி நன்கொடையை நிறுத்தும் பிரச்சினை 1927 வரை இருந்து வந்தது. 1917 தொடக்கம் 1927 வரை நான் அங்கே தானே வசித்து வந்தேன். புலவருக்குப் பின் காவிய வகுப்பு ஒடுக்கம் எய்தியது.

ஒதுங்கியிருந்த உதவி நன்கொடைப் பகுதியே நடந்து வந்தது; சைவ உபாத்தியாயர்களும் கிடைத்தார்கள். ஒதுங்கி வாழ்ந்த பாடசாலையே இப்பொழுதைய பாடசாலை,

அது வேறு - இது வேறு

இது போன்ற பாடசாலைகள் நடத்தக் கற்று வல்ல உபாத்தியாயர்களையும் கோயில் மூலம் சமயம் வளர்க்கச் சைவ போதகர்களையும் உற்பத்தி செய்வதே நாவலர் தாபித்த வித்தியாசாலையின் குறிக்கோள். ஆகவே அது வேறு; இது வேறு.

இனச் சொத்து

1934 ஆம் ஆண்டளவில் நாவலர் தர்மங்கள் இனச் சொத்தாய் விட்டன. மாணவர் பரம்பரையை பரிபாலிக்க வேண்டுமென்கின்ற நாவலர் நோக்கம் மறைந்துவிட்டது.

அரசாங்கம் எடுத்தது

திடீரென்று பாடசாலைகளைச் சுவீகரிக்கும் சட்டம் குதித்தது. நாவலர் தர்ம பரிபாலகர் விழித்தார். அவர் மற்ற மதத்தவர்கள் நடந்த முறையைப் பின் பற்றித் தர்மங்களைப் புறம்பு செய்திருக்கலாம். காரியந் தெரியாமல் அரசாங்க நன்கொடையை வேண்டாமென்ற பழைய கூக்குரலை எழுப்பினார்; வித்தியா சாலையில் யாரும் பிரவேசிக்கக் கூடாதென்று முட்கம்பி வேலியுமிட்டார். அவர் செய்கை சட்ட விரோதமாயிற்று; மெத்த முன்னமே செய்திருக்க வேண்டியது.

அரசாங்கம் பள்ளிக்கூடத்தோடு தர்மச் சொத்துக்களையும் பள்ளிக்கூடச் சொத்து என்ற வகையில் சுவீகரித்து விட்டது.

நினைத்ததொன்று : நடந்ததொன்று

ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்துதற்குரிய நாவலர் வித்தியாசாலைச் சொத்து, நாவலர் கனவிலும் நினையாத 'சேட்டிவிக்கற்' சட்டம்பியார் நடத்துகின்ற வித்தியாசாலைக்காய்விட்டது. இந்நிலை முகாமைக்காரரால் விளைந்தது.

இனிச் செய்வதென்ன?

i) நாவலர் பெயரை உச்சரிக்கும் சபைகள், மன்றங்கள் அரசாங்கத்துக்கு உண்மை நிலையை எடுத்துக் காட்டிச் சொத்துக்களை நாவலர் நோக்கத் துக்குப் பயன்படுத்த வேண்டும்;

ii) (அ) ஐந்தாண்டுத் திட்டத்தை இக்கால நிலையை யோசித்துப் பயன்படுத்த வேண்டும்;

(ஆ) மற்றச் சமயத்து இளைஞர்கள் தத்தம் சமய வழியில் நிற்க, சைவ இளைஞர்க்கு அதில்லாமை சிந்திக்கற்பாலது;

iii) நாவலர் தர்மங்களைப் பரிபாலிக்க ஒரு சபை தோன்றுமாயின், அதற்கு, சிதம்பரத்தில் வெகு மோசமான நிலையிலிருக்கும் நாவலர் தர்மங்களை நல்ல வழிபடுத்திப் பரிபாலிக்கும் உரிமை தானே உளதாம்.

இவை நாவலர் பெருமான் கருத்தைச் சிந்திப்பார்க்கு உபகாரமாகும் சில குறிப்புக்கள்.

'ஆறுமுகநாவலர் - ஒரு பன்முக நோக்கு', நாவலர் நற்பணிமன்றம், ஆலயம் வெளியீட்டகம், 2015, பக். 4-10.

நாவலர் தாபித்த சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை

அனுபவப் பகிர்வு

எஸ். பத்மினி கபாலிமூர்த்தி

இளமையில் கல், பருவத்தே பயிர்செய், செய்வன திருந்தச் செய், முயற்சி திருவினையாக்கும், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும், எல்லார்க்கும் நன்றாம் பணிதல்.

என்ற முதுமொழிகளுடன், சைவத்தையும், தமிழையும், முக்கண்ணாகப் பாவிக்கச் சொல்லிக் கொடுத்தது எம்பள்ளி. பள்ளியால் நாம் பெருமையுற வேண்டும். என்னால் பள்ளியும் பெருமைபெற வேண்டும் என்ற வாசகங்கள் இயல்பாக, ஆனால் அழுத்தமாக எங்கள் பிஞ்சு மனதில் பசுமரத்தாணிபோல் கல்வியுடன் பதியவைக்கப்பட்டது. சரியான நேரத்தில் தவறுகளைச் சுட்டிக்காட்டி (களையெடுத்து) உண்மை, சத்தியம், நேர்மை, கடமை, பண்பாடு, பாரம்பரியம், நல்லொழுக்கம், உயர்ந்த எண்ணங்கள், மனிதநேயம் போன்ற பல்வேறு உரங்களை விட்டு எங்களை வளர்த்து ஆளாக்கியது எம் பள்ளி. உன் வளர்ச்சி எங்கள் பொறுப்பு என்று அக்கறையுடன், பாசத்துடன் எங்களின் வளர்ச்சியைக் கண்டு ரசித்து நயனதீட்சை கொடுத்தவர்கள் எங்கள் ஆசிரியப் பெருந்தகைகள்.

ஒரு பெரிய ஆலமரத்தில் வாழும் பறவைகள்போல சந்தோஷமாகச் சிறகடித்துப் பறந்த இனிய நாட்கள்தான் பள்ளியின் மாணவப் பருவம்.

தொடக்கப் பள்ளிக்கு நானும் அண்ணாவும் சந்தோஷமாகத் தோளில் ஒரு ஜோல்னா காக்கி கலர் பையை மாட்டிக் கொண்டு கையில் ஒரு தூக்கில் மதிய உணவு எடுத்துக் கொண்டு சந்தோஷமாக நடந்து செல்வோம். பள்ளியில் குடிதண்ணீர் குழாயில் தான் தண்ணீர் குடிப்போம். சுத்தமான சுகாதாரமான தண்ணீர். காலையில் அவரவர் பள்ளி வகுப்புச் சுத்தம் செய்யும் பணி, குடிநீரைப் பானையில் கொண்டு வைப்பது, கரும்பலகை, அழிப்பான், சாக்பீஸ் அவற்றைக் கொண்டு வருவது, உட்காருவதற்குப் பலகை சீராக அமைத்தல் என பெறுப்புகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

வகுப்பு தொடங்குவதற்கு முன் தேவாரம், திருவாசகம், பாடுவோம். அன்றைய தின நாளிதழின் முக்கியச் செய்திகள், திருக்குறள், ஆன்றோர் வாக்கு வாசிக்கப்படும்.

நிர்வாகத் திறமையை மேம்படுத்த மாணவர் மந்திரி சபை என்ற அமைப்பு அதில் முதலமைச்சர், உணவு மந்திரி, சுகாதார மந்திரி என பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. மாணவர்களுக்கு ஆசிரியர்களின் வழிகாட்டுதலோடு சந்தோஷமாகப் பணிபுரிந்தோம்.

பாலர் சபை என்ற அமைப்பு, சனிக்கிழமைதோறும் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்த அமைத்த ஒரு மேடை. எங்களின் தனித்தன்மை வெளிப்படுத்தப்பட்டது. மேடை பயம் அகன்றது.

ஆசிரியர்கள் I B டீச்சர் தையல் நாயகி, I A ஆசிரியர் விருத்தாம்பிகை, II A ஆசிரியர் குருநாதன், II B ஆசிரியர் துரைராஜன் என்று இன்றும் அவர்களின் வகுப்பு சொல்லித்தான் குறிப்பிடுவோம். II B Sir என்னைப் பேச்சுப் போட்டிக்குத் தயார் செய்வார். எப்படிப் பேச வேண்டும் என்று நடித்துக் காட்டுவார். இடைவிடாமல் மனப்பாடம் செய்யச் சொல்லி ஊக்குவித்தவர்.

ஆசிரியர் திரு. இராமசாமி அய்யர் எங்கள் வீட்டில் சரியாகக் காலை 4.30 மணிக்குக் குளித்து விட்டு விபூதி சந்தனம் மணக்க வருவார். அண்ணாவும், நானும் அவர் இடம் காலையில் படித்தோம். ''நெஞ்சக்கனகல்லு'' என்ற கந்தர் அநுபூதி, கம்பீரமாகச் சொல்லிக் கொடுத்துவிட்டுத் தான் பாடத்திற்குச் செல்வார்.

உயர்நிலைப் பள்ளியில் திரு. V. சுப்பிரமணியம் தமிழ் ஆசிரியர், தமிழ் ஐயா திரு. T.S. நடராஜன், பெரிய தமிழ் அக்கா, சின்ன தமிழ் அக்கா, சுந்தரி டீச்சர் எல்லாம் எங்களுக்குத் தமிழின்மேல் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தினார்கள். தமிழைச் சரியாக உச்சரித்து, ஏற்ற இறக்கத்துடன் பொருள் புரிந்து படிக்கப் பெரிய உந்துகோலாக இருந்தவர்கள். அவர்களுக்கு எல்லாம் என் நன்றி கலந்த வணக்கங்கள்.

இன்றும் என்னை ஆற்றுப்படுத்திக்கொண்டு இருப்பதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் தமிழ் ஆசிரியை திருமதி (இல. சுந்தரி) சுந்தரி டீச்சர். ஒவ்வொரு போட்டிக்கும் எங்களைத் தயார் செய்து நடராஜர் விபூதி உடன், துர்க்கை கோயில் கல்கண்டுடன் வாழ்த்திவிட்டு எங்களின் வெற்றிச் செய்தியை ஆவலோடு எதிர்நோக்கிப் படபடப்போடு இருப்பார்கள். வெற்றிச் செய்தியைக் கேட்டு மகிழ்வுடன் பாராட்டுவார்கள்.ஆசிரியப் பெருந்தகைகள் எங்களுடன் ஒன்றி வாழ்ந்து, எங்களை வளர்த்தார்கள். இன்று நினைத்தால் ஒரு தாயாகக் கூட என் பெண்களை நான் அப்படித் தயார் செய்யவில்லையோ என்று தோன்றுகிறது. அவர்களுடைய ஈடுபாடு தான் எங்களின் அதிர்ஷ்டம். சுந்தரி டீச்சர் அந்த உச்சரிப்பு அவர்களுக்குத் திருப்தி அடையும் வரை அந்தப் பகுதிகளை விடாமல் எங்களிடம் சொல்லிக் கொண்டே இருக்கச் சொல்வார்கள். கடினமான பயிற்சி நேரம். ஆனால் மிகவும் சந்தோஷமான தருணங்கள்.

திருமதி. திரிபுரசுந்தரி (STS டீச்சர்) மதிய உணவு இடைவேளையில் அவர்களும் வேகமாகச் சாப்பிட்டுவிட்டு எங்களையும் சாப்பிட வைத்துவிட்டுத் தரதர என்று ஓய்வறைக்கு அழைத்துக்கொண்டு போய் இசையைக் கற்றுக்கொடுத்த நேர்த்திதான் என்னே. வகுப்பு

முடிந்தவுடன் அல்லது ஆரம்பத்திற்கு முன்தான் எங்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் போட்டிகளினால் படிப்பு எந்த நிலையிலும் பாதிக்கப்படுவதில்லை.

நூலகம் - S.N. நடராஜன் சார் வாரம் ஒரு புத்தகம் கொடுப்பார். வரிசையில் நின்று பெற்றுக்கொண்டு ஒரு வாரம் கழித்துப் பாதுகாப்பாகத் திருப்பித் தரும் பொறுப்பு எங்களுக்குச் சொல்லித் தரப்பட்டது. புத்தகம் படிக்கும் பழக்கம் ஏற்பட்டது.

பாலபாடம், சைவ வினாவிடை, சிவபுராணம், அபிராமி அந்தாதி போட்டிகள் நடைபெறும். நாவலர் பெருமானின் பாடத்திலிருந்து எப்படி உண்ண வேண்டும், நீர் பருக வேண்டும், உறங்க வேண்டும், குளிக்க வேண்டும் என்று பற்பல வாழ்க்கைக்குத் தேவையான சிந்தனைகள் வகுப்புகளில் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

இப்பொழுது குளத்தைத் தூர் வாருகிறார்கள். மண் சிகிச்சை (Mud therapy) என்று எல்லாம் புதிய விஞ்ஞானம் நமக்குச் சொல்லுகிறது. ஆனால், நாவலர் பெருமான் குளத்தில் குளிக்கும்போது அந்த மண்ணை உடலில் தேய்த்துக் குளிக்கவும், மண்ணை ஒவ்வொருவரும் தம் கைகளால் எடுத்தலே குளத்தை ஆழப்படுத்தவும் (தூர் வாருதல்) என்றும் எடுத்த மண்ணை அதன் கரையில் வைத்து அதனைப் பலப்படுத்தவும், உயரப் படுத்தவும் சொல்லுகிறார் என்றால் இன்றைய அறிவியல் பாடங்கள் அன்றே எங்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

சாதாரணப் படை, தேசிய மாணவப் படை மூலம், தேசநலம், இராணுவம் பற்றிய சிந்தனை பயிற்றுவிக்கப்பட்டது. K.K. சார்தான் NCC Officer. அவரைப் பார்த்தால் பயமாக இருக்கும். போலீஸ் போலீஸ் என்று பயப்படுவோம். சனிக்கிழமை தோறும் அண்ணா கஞ்சிபோட்ட விறைப்பான NCC உடையையும் தொப்பியும் வைத்துக்கொண்டு மிடுக்கான தோற்றத்தில் கம்பீரமாக வருவார். NCC வகுப்பு முடிந்தவுடன் அங்கே கொடுக்கும் பூரி கிழங்கு எனக்குப் பிடிக்கும் என்பதால் அங்கே சாப்பிடாமல் வீட்டிற்கு வந்து என்னுடன் சாப்பிடுவார். அந்த அன்பை நினைத்தால் இன்றுகூட என் கண்ணில் கண்ணீர் வரும்.

அண்ணா மருத்துவராகி, மருத்துவமனையில் வேலை செய்து கொண்டு இருந்த காலம். K.K. சார் தெற்கு வீதியில் மருத்துவமனை அருகே நடந்து செல்லும்போது அவரைப் பார்த்தவுடன் தன் சட்டைப் பொத்தான் எல்லாம் சரியாக உள்ளதா என்று சரி பார்த்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். எந்த அளவுக்குச் சரியாக நாம் இருக்க வேண்டும் என்று எங்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. அது அவ்வளவு ஆழமாக ஆழ்மனதில் விதைக்கப்பட்டது.

குருபூசை ஒரு மாதத்திற்கு முன்பே கொண்டாட்டம் தான். ஒரு மூலையில் இசை, நாட்டியம், நாடகம், கும்மி, கோலாட்டம் என்று அமர்க்களப்படும். பின்னல் கோலாட்டம் நம் பள்ளியின் சிறப்பு நிகழ்ச்சி. பின்னல் கோலாட்டம் ஆடும்போது ஏற்படும் மகிழ்ச் சிக்கு அளவே இல்லை. மாணாக்கர்களாகிய எங்களுக்குள் கடும்போட்டி நடைபெறும் என்றுமே அது பொறாமையாக மாறியது இல்லை. ஒரு போட்டியில் முதல் இடம் கிடைக்கவில்லை என்றால் இடைவிடாத கடுமையான உழைப்பே வெற்றி தரும் என்று

உழைப்புக்கும் முயற்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அந்தக் காலத்திலே மதிப்பிற்கு உரிய தாளாளர் திரு. T.K. இராஜேஸ்வரன் ரூ. 100 பரிசு வழங்கினார். சிறந்த புத்தகங்கள் எல்லாம் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

குருபூசையில் K.K. சார், கோயில்பிள்ளை சார் ஓவிய ஆசிரியர் தலைமையில் மேல்தளத்தில் இருந்து பூகொட்டும் நிகழ்வு. எங்களுக்கு எல்லாம் பிரமிப்பாக இருக்கும். அண்ணா ஒரு வருடம் அந்த நிகழ்வைச் செய்தார். சந்தோஷம் பொங்க பெருமையுடன் நான் பள்ளியில் உலா வந்தேன்.

குருபூசையில் பூந்தி பாக்கெட் மிகவும் ஸ்பெஷல். என்ன சுவையாக இருக்கும் தெரியுமா? இன்றும் தித்திக்கிறது.

தையல் டீச்சர் எலிசபெத் சொல்லிக் கொடுத்த வகைவகையான தையல்கள். முதன் முதலில் கோழி கூவுவதுபோல், காலை வணக்கம் சொல்வதுபோல் நான் போட்ட கை வேலைப்பாடுகள் என்றும் மறக்க முடியாது.

எங்கள் பள்ளி எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்தது. நிறைய எழுத வேண்டும் என்றாலும் பக்க அளவிற்காகக் குறைக்க வேண்டிய கட்டாயம்.

உலக அளவில் எங்கு சென்றாலும் நம் பள்ளி மாணவர்கள். இதைவிட ஒரு மகிழ்ச்சி என்ன இருக்க முடியும். என் காலத்தில் இந்த 150ஆம் ஆண்டு விழா சிறப்புற அமைகிறது என்பது என் பாக்கியம். இந்தப் பள்ளியில், படித்தவர்கள், படித்துக் கொண்டு இருப்பவர்கள், படிக்கச் சொல்பவர்கள் எல்லாம் பாக்கியசாலிகள் என்று கருதுகிறேன்.

எங்கள் குடும்பத்தில் ஒரு தூணாக இருக்கும் அன்புச் சகோதரர் Dr. S. அருள்மொழிச் செல்வன் அவர்கள் பள்ளியின் வளர்ச்சியிலும், மாணவர்கள் வளர்ச்சியிலும் பெரிய பொறுப்புகளை என் தந்தையார் போல் எடுத்துக்கொண்டு தந்தையார் இட்ட பணியைத் தன் பணியாகச் செவ்வனே, புதிய விஞ்ஞான உத்திகளுடன், எந்தப் பிரதிபலனும் பாராமல் பள்ளியின்மேல் கொண்ட ஈடுபாட்டால் உண்மையாக, கடுமையாக, திறமையாக, நேர்மையாக உழைத்துவரும் அவரை வணங்குகிறேன், வாழ்த்துகிறேன் பெருமைப்படுகிறேன். அவரை ஈன்றெடுத்த என் பெற்றோர்களை வணங்குகிறேன்.

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல் *(70)*

அவர் ஒரு உதாரணம்

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
திதனை யவன்கண் விடல் *(517)*

என்ற திருக்குறளுக்கு உதாரணம் என் தந்தையார். குருவருளும், திருவருளும், நிரம்பப் பெற்றவர். பெரிய பெரிய பதவிகளில் இருந்து பணி ஓய்வு பெற்ற மாணவர்கள்கூட இன்றும் அப்பாவின் எதிரே உட்காருவதற்குக் கூச்சப்பட்டுத்தான் உட்காருவார்கள். அப்பாவால் கன்னத்தில் விழுந்த அடி வெளியே தெரிந்தாலும் அவர்களுக்கு ஏற்பட்ட உயர்வை

மாணவர்கள் சொல்லும்போது அவர்கள் கண்களில் தெரியும் உண்மையும் மரியாதையும் கண்டு நான் வியந்து போகிறேன். ''வழிகாட்டுபவன் வாழ்ந்து காட்டுபவனாக இருக்க வேண்டும்'' என்பதற்கு உதாரணம் என் பெற்றோர்கள்.

இப்பள்ளியில் படிக்கும் வாய்ப்புக் கிடைத்ததால்தான், M.B.B.S., M.D. பட்டங்கள் பெற்று மருத்துவராகப் பணி செய்து வருகிறேன் என்பது மட்டும் அல்லாமல் இறை உணர்வுடன், குரு பக்தியுடன், மனித நேயத்துடன் வாழ்கிறேன்.

''கற்றவர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு.'' ஆம் எம் பள்ளி தவத்திரு ஆறுமுக நாவலர் பள்ளியில் படித்து உலகளாவிய பரந்து விரிந்து வசிக்கும் மாணவர்கள் என்றும் எப்பொழுதும் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இனியும் சிறப்புடன் வாழ்வார்கள்.

வாழ்க, வளர்க, நாளும் உயர்க.

சிதம்பரம் ஆறுமுகநாவலர் மேனிலைப் பள்ளி

சு. அருள்மொழிச்செல்வன்

ஒரு தட்டில் நெல்மணிகள் பரப்பி இருக்க எங்கே 'அ'னா போடலாமா என்ற மெல்லிய குரல் ஒலித்தது. நிறைய சிறுவர்கள், சிறுமிகள் சுற்றி இருக்க 'அ' கைப்பிடித்துப் போட உதவிய ஆசான், அறிவுக்கண் திறந்து வைத்தவர் மதிப்பிற்குரிய ஆசிரியர் துரைராஜன் அவர்கள். அனைவரும் கைத்தட்ட இனிப்புக் கொடுத்து என் வாழ்க்கையின் முதல் படியைக் கல்விக் கடவுள் சரஸ்வதி தேவி என்னை வாழ்த்த என் பள்ளி வாழ்க்கை இனிதே துவங்கியது. 1962ஆம் ஆண்டு நான் சென்று அரிச்சுவடி பயின்ற என் பள்ளிக்கு 150 ஆண்டுகள். என் மனம் என் இயல்பு வாழ்க்கையில் லயிக்காமல் சுற்றிச் சுற்றி வந்தது. ஆரம்பப் பள்ளியின் பெரிய வாத்தியார் திரு. பழனிப்பிள்ளை, திரு. சுப்பிரமணியம், திரு. நடனசிகாமணி, ஆசிரியை திருமதி. தையல்நாயகி இவர்களோடு என் வகுப்புத் தோழர் இன்றைய கணக்காளர் என் மூத்த மாணாக்கர் டாக்டர் சந்திரசேகரன் என்று பலர் நினைவில் வந்து செல்கிறார்கள்.

பள்ளிக்குப் பின்னால் ஒரு சிறிய இடம். அதன் அருகே ஒரு குடிநீர்த்தொட்டி. சிறிது தள்ளி ஒரு கொடிமரம். திங்கள் காலை தேசியக் கொடி ஏற்றி எங்களுக்குப் போதனை செய்யும் தலைமை ஆசிரியர். அதே நேரத்தில் நீண்ட கைப் பிரம்போடு மழை நீர் வெளியேற்றும் குழாயில் படபடவென தட்டி ஒலி எழுப்பி எங்களை எச்சரிப்பதும் அந்தப் பெரிய வாத்தியார்தான்.

நாட்கள் சுழன்றன. ஆரம்பப் பள்ளியில் இருந்து உயர்நிலைப் பள்ளி, வகுப்பு '6'. எங்கள் பள்ளி நடுமன்றத்தில் தென்மேற்கு மூலையில் இருந்தது. ''நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க'' என்று நாளைத் துவக்குவார் திரு. இராமசாமி ஐயர். பெயருக்கு ஏற்ற நல்ல தேஜஸ். ஒளி பொருந்திய கண்கள். கணக்கும், ஆங்கிலமும், தமிழும் அடடா என்ன ஒரு பாண்டித்தியம். பின்னாளில் அவரே எனக்குத் தனிப்பயிற்சி அளித்தார். தேவாரம், திருவாசகம், கந்தபுராணம், திருப்புகழ் மட்டுமன்றி தினம் 'ஒரு பக்கம்' ரன்அன் மார்டின் என என்னைப் படிக்க ஊக்கப்படுத்தியவர். பத்து முறை தண்டால், பத்து நிமிடம் பத்மாஸச

னம் பத்து நிமிடம் பிராணயாமம் என்று எல்லா ஒழுக்கங்களையும் எனக்குள் விதைத்தவர். மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவை கண்டிப்பாக ஒப்புவிக்க வைத்த ஒப்பற்ற ஆசிரியர் அவர்.

அடுத்த வகுப்பில் உடல்வாகில் நேர்மாறான ஒருவர். முள்ளங்குடி வாத்தியார் திரு. குஞ்சிபாதம். அவரது ஒல்லியான தேகம், தொட தொட வென்று முழுக்கை சட்டை அணிந்தவர். அவர் மகன் திரு. ரவிச்சந்திரன் என் உடன் பயின்றவர். ''பசங்களா வரிசையாக கழிப்பறைக்குப் போகனும். கை, கால் கழுவாமல் திரும்பிவரக் கூடாது என்று அப்போதே அறிவுறுத்துவார். மூச்சைப் பிடித்துக் கொண்டு சிறுநீர் கழிக்காதிங்கடா கடைசியில் மூச்சை விட்டுடாட்டா எல்லா நாற்றமும் உனக்குத்தான் என்று வேடிக்கை செய்வார்.

வடகிழக்கு மூலையில் எட்டாம் வகுப்பு ஆசிரியர் திரு. கோபாலகிருஷ்ணன் மிகவும் கண்டிப்பானவர். ஒழுக்கம் மிகவும் அவசியம். பாடவேளையில் தவறு செய்து விட்டால் பிரம்படி நிச்சயம். ஒருநாள் மாணவிகள் இரட்டைப் பின்னல் போட்டதற்காகப் போட்ட சத்தத்தில் நாவலரே இறங்கி வந்திருப்பார். இந்த வகுப்பில் எனக்கு விஞ்ஞானம் கற்பித்தவர் மூக்குப் பொடி வாத்தியார் மீதிகுடி திரு. நடராஜன் அவர்கள். கும்பகோணம் விஞ்ஞான கண்காட்சியில் மெழுகில் அனைத்து வகைப் பழங்களையும் பூக்களையும் உருவாக்கி எங்கள் பள்ளி முதலிடம் பெறுவதற்கு உதவியவர். நிஜமான பழங்களை வைத்து அச்சு தயாரித்து அதில் மெழுகை ஊற்றி வண்ணம் சேர்த்து வாளியில் குளிர வைத்துப் பிரித்தால் ஆப்பிள் என்ன! கொய்யா என்ன! அனைத்துப் பழங்களும் தயார்.

அடுத்த வகுப்பில் திருமதி திரிபுரசுந்தரி. பல்வேறு திறமைகள் கைவரப் பெற்றவர். பின்னாளில் தலைமையாசிரியையாகவும், பணியாற்றியவர். பள்ளி விஞ்ஞானக் கழகத்தில் சோதனையில் ஒரு சொட்டு மை விழுந்தால் எப்படி இருக்கும். எண்ணெய், தண்ணீர் என்ற பல பொருட்கள் வைத்து அதே சோதனை செய்யச் சொல்லி திரவப் பொருளின் அடர்நிலையை எங்களுக்குப் பயிற்றிவைத்தார். அருமையான குரல் வளம் உடையவர். அவர் மகனுக்கு அருள்மொழி என்று பெயர். என்னை அவர் ஒருவர்தான் இப்போதும் அருள்மொழி என்று அழைப்பவர். ஒருமுறை இசைப் பயிற்சியின்போது சின்னஞ்சிறு பெண் போலே சிற்றாடை உடையுடுத்தி என்று தொடங்கும் பாடலை அருமையாகப் பாடிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென திருமதி. எலிசபெத் அவர்கள் கண்களில் கண்ணீர் பெருகி அழ ஆரம்பித்தார். அந்த சமயத்தில் தான் திருமதி. எலிசபெத் அவர்களின் மகள் மரணித்திருந்தார் என நான் அறிந்தேன். ஒருவர் மனம் உருகும் வண்ணம் பாடுவார். அப்படி ஒரு குரல் வளம்.

நடுமன்றத்தின் கிழக்கில் இரு ஓரங்களில் இரண்டு அறைகள், ஆசிரியர்கள் அமர்ந்து ஓய்வெடுக்க இருந்தது.

ஒருநாள் 10ஆம் வகுப்பில் நுழைய காத்திருக்கும் நேரம். ஆசிரியைகள் அறைக்கு வரப் பணிக்கப்பட்டேன். ஒருவிதத் தவிப்போடு சென்றேன். எனக்குத் தெரியும் தமிழில் குறைவான மதிப்பெண்கள். மேலும் கையெழுத்தும் மோசம். அப்போது மதிப்பிற்குரிய

திருமதி. ஏகாம்பரம் அக்கா, கண்கள் நீர் கோத்து நின்ற என்னை அழைத்தார். எல்லா ஆசிரியைகளதும் முன் என்னை எழுதப்பணித்தார். என்னால் எதுவும் எழுத முடியவில்லை. அன்று முதல் நான்கு வரி நோட்டில் உயிர் எழுத்துக்கள் எழுதிய பின்தான் மதிய உணவு. எனக்கு மட்டும் அல்ல அவருக்கும் தான். தாய்க்கு மறு வடிவம் எங்கள் ஆசிரியைகள், ஆசிரியர்களும் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் தருவர்.

காலைப் பிரார்த்தனை நேரமானாலும் சரி, மதிய நேரமானாலும் நடராஜப் பெருமானை வணங்கி நுழையும்போது, இன்னொருவரைக் கண்கள் தேடும். அவர்தான் K.K. என்று அழைக்கப்பட்டவர். திரு. K. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். தேசிய மாணவர் படை ஆசிரியரும் கூட. மேல்சட்டை பொத்தான் போடவில்லை என்றால் பளீர் அறை தான். 9, 10, 11 வகுப்புகளில் NCC. விளையாட்டரங்கில் காலை பனி விலகும் நேரம் By the right the quick March என்ற அவரது கட்டளை தொனியில் குளிர் போய் உடலைச் சூடாக்கி விடும். எவ்வளவு முகாம்கள், அடடா! மீண்டும் வராதோ அந்த நாட்கள். நெய்வேலி முகாமில் இலகுரக இயந்திர துப்பாக்கியில் சுட்டபோது சியாச்சின்கே போய் வந்த மகிழ்ச்சி எனக்கு. என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வுகளில் ஒன்று. ஆர்.கே. போர்டிங்கில் இருந்து சூடான பூரி மசாலா சாப்பிட எப்படா அணிவகுப்புப் பயிற்சி முடியும் என்று காத்திருந்ததும் சுகம்தான். இந்திய தேசிய ராணுவத்தில் சேர வேண்டும் என்ற ஆசையை விதைத்தவர் அவர். NCCயில் சான்றிதழால் மருத்துவப்படியில் நேர்முகத் தேர்வில் 2 மதிப்பெண்கள் கிடைத்து மருத்துவப் படிப்பில் நுழையும் வாய்ப்பையும் எனக்கு NCC பெற்றுத் தந்தது.

எனக்குத் தேசிய மாணவர் படை எப்படி ஒழுக்கத்தையும் தேச உணர்வையும் போதித்ததோ அதேபோல சாரண இயக்கம் சேவை மனப்பான்மையைப் போதித்தது. ஓவிய ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்திதான் சாரண ஆசிரியர். காட்டுமன்னார்குடி முகாமில் மறைந்த நண்பர் வெங்கட்ராமன் (திருமதி. ரமா சேதுராமன் சகோதரர்) இசை, பேச்சு, ஓவியம், மிமிக்கிரி போன்ற கலைகள் கைவரப் பெற்றவர். முகாமில் முதலுதவிப் போட்டியில் வென்று எங்கள் பள்ளியினைச் சாரண இயக்கத்தில் முன்னிறுத்தியவர். சமுதாய சேவைகள் பலவும் சாரணர்களாகிய நாங்கள் செய்தோம்.

பெண் ஆசிரியைகளில் திருமதி. சுந்தரி அவர்களும், தமிழாசிரியர் திரு. து.சோ. நடராஜன் அவர்களும் எங்களுக்குப் பேச்சுக் கலையைப் பயிற்றுவித்தவர்கள். என்னோடு பயின்ற பலர் மிகவும் ஆர்வமுடன் போட்டிகளில் பங்கு பெற உதவியவர். குரலில் ஏற்ற இறக்கங்கள் மேடைப் பேச்சுக்கு எவ்வளவு வலிமை சேர்க்கும் என்பதை உணர்த்தியவர்கள். கண்களை மூடிக்கொண்டு பேசாதே உன் கண்களால் எதிரில் உள்ளவரை வீழ்த்தி விட வேண்டும் என்ற துடிப்போடு பேசு என்று பல பேச்சு கலையின் நுணுக்கங்களைப் போதித்தவர்கள்.

திருமதி. ஏகாம்பரம் அவர்கள் பெரிய அக்கா என்றால் திருமதி. பராசக்தி சின்ன அக்கா. இவர்களோடு திருமதி. எலிசபெத், திருமதி. ஜானகி, திருமதி. ஜெயலட்சுமி எனப் பலர் தாய்மையோடு எங்களைப் பயிற்றுவித்தவர்கள். என்னுடன் என் பள்ளியில் இருந்த

மதிப்பிற்குரிய திரு. தி. பொன்னம்பலம் மற்றும் திருமதி. நந்தினி இவர்கள் எல்லாம் கலைக்கழகப் போட்டிக்குச் சென்றார்கள் என்றால் வெற்றியின்றி வந்தது கிடையாது. இவை அனைத்துக்கும் எங்கள் ஆசிரியர்கள் தான் காரணம்.

எங்கள் தலைமை ஆசிரியர் (என் தந்தையார்) ஒவ்வொரு நாளும் நாங்கள் செல்லும் அதே கழிப்பறைக்கு அலுவலகப் பணியாளர்கள் திரு. வெங்கடாசலம் மற்றும் திரு. அப்பாய் உடன் சில நேரங்களில் ஆசிரியர்களோடு கழிப்பறைக்குச் செல்வார். அதனால் அதனை எப்போதும் சுத்தமாக இருக்கச் செய்தனர். ஆசிரியர்களுக்குத் தனி கழிப்பறை கிடையாது.

திருமதி. நந்தினி (கண் மருத்துவர் Dr. வாசுதேவனின் சகோதரி) ''தேரா மன்னா செப்புவதுடையேன்'' என்று ஆரம்பிக்கும் தொனியே வெற்றிக் கனியை எங்களுக்குக் கொண்டு வரும். ஒரு முறை ஆங்கிலப் பேச்சில் வென்று (ஜவகர் பள்ளியை) அவர் ஆள் உயர கோப்பையைப் பெற்ற நாளை எங்கள் பள்ளியே கொண்டாடியது.

பெரிய CVN சார் (இவர் மகள் ரத்னா என் வகுப்பில் படித்தவர்). திரு. S. கதிர்வேலு / M. கதிர்வேலு மற்றும் விஞ்ஞான ஆசிரியர் S. வடிவேலு (இவர் மகன் சந்திரசேகர் என் வகுப்பு தோழர்) இவர்கள் அனைவரும் மிகுந்த திறமையானவர்கள். PRM என்கின்ற திரு. முத்துக்குமரன் அருமையாகப் பாடுவார். ''மாசில் வீணையும்'' என்ற பாடல் ஒலிக்கும் போதெல்லாம் அவர் என் நினைவுக்கு வருவார். நல்ல உடற்கட்டு. நல்ல விளையாட்டுத் திறன் உடையவர். இவரோடு உடற்கல்வி ஆசிரியர் திரு. சண்முகம், சின்ன CVN மற்றும் தமிழ் ஆசிரியர்கள் திரு. சுப்பிரமணியம் (தற்போதைய தலைமையாசிரியர் அவர்களின் மாமனார்), து.சோ. நடராஜன், ஏனைய ஆசிரியர்களும், தலைமை ஆசிரியரும் விளையாட்டு மைதானத்தில் விளையாடுவர். பள்ளி வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர்கள், ஒழுக்க நெறிகளுக்கு முக்கியத்துவம் அளித்தனர். வகுப்பறையில் ஆசிரியர் இல்லாமல் மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் எங்கள் தலைமையாசிரியர் அவர்களே பாடம் போதிப்பார். எங்கள் பள்ளியின் தாளாளர் திரு. க. இராஜேஸ்வரன் தமிழ், ஆங்கிலம் மிகவும் புலமை பெற்றவர். அவரும் பாடவேளையில் வந்து பாடம் போதிப்பார்.

திரு. துளசிலிங்கம் (இலங்கைத் தமிழர்) என்றொரு நூலகர் அருமையான உழைப்பாளி. நூலகத்தில் புத்தகங்களை எப்படிப் பெறவேண்டும் எப்படி உபயோகப்படுத்த வேண்டும் எனப் போதித்தவர்.

நாவலர் குருபூசை விழா எங்களுக்கு மற்றொரு தீபாவளி என்றால் மிகையாகாது. மாணவ மாணவியர் ஆர்வமுடன் பங்கு பெறும்வகையில் பல நிகழ்வுகள். கும்மி, அம்மானை, நாடகம் என பள்ளியே களைகட்டி இருக்கும். நாவலர் நாடகத்தில் நான் திரு. பொன்னம்பலம் சார் என பலர் நடித்துள்ளோம். இந்த நாடகத்தை எழுதியுதவியவர் தலைமையாசிரியப் பெருந்தகை திரு. க. சுவாமிநாதன் அவர்களாவர். திரு. இராம. சுப்பிரமணியன், Dr. வாசுதேவன் ஆகியோர் பற்பல பாத்திரங்களில் நடித்தமை இன்றும் என் நெஞ்சில் நினைக்க நினைக்க இனிக்கின்றது.

சக மாணவர்கள் குருமணி (தினமணி நிருபர்), சாம்ஜிபட்டேல் (நடராஜ் மரவாடி), குருமூர்த்தி (மணிவாசகம் பதிப்பகம்), குப்புசாமி தீட்சிதர் (மேனாள் தமிழாசிரியர், இராணி சீதையாச்சி மேனிலைப்பள்ளி, சிதம்பரம்) விஸ்வநாதன் (Shemford School), முருகேசன் (வாணி மருந்தகம்), ஞானவேல், சக்திவேலு KK அவர்களின் தம்பி பட்டாபிராமன் என் சகமாணவர் உண்மையான விளையாட்டு வீரர் இன்றும் பள்ளி ஆடுகளத்தில் எனக்கு உதவுகிறார். வேலாயுதம் NCC மாணவர் படையின் தலைவர் பின் நாளில் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்தவர். மாணவிகளில் ரத்னா, மாலதி (கண் மருத்துவர் Dr. வாசுதேவனின் சகோதரி), விஜயலெட்சுமி இன்னும் பலர். என்னுடைய பள்ளி வாழ்க்கையில் உறுதுணையாக இருந்து மாணவப் பருவத்தினை மகிழ்ச்சி பொங்க செய்தவர்கள்.

இவர்களைத் தவிர சமகால தோழர்கள் திரு. வெங்கடேசன் (இந்தியா சிமெண்ட்) மற்றும் பாசத்திற்குரிய Dr. S. பரதன் புல முதல்வர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம் ஆகியோர் மாலை நேர விவாதங்களின் தோழர்கள். இன்றும் எனக்கு வழி காட்டியாகப் பாரத்தை இறக்கி வைக்கும் சுமைதாங்கியும் கூட.

முத்தாய்ப்பாக, சாந்தமான உருவமும், அமைதியான பேச்சும் அர்ப்பணிப்பு உணர்வும் கொண்டு பல மாணவர்களுக்கு நல் வழிகாட்டியாக இன்றும் நல் ஆசானாக வாழும் எங்கள் தலைமையாசிரியர், தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற திரு. க. சுவாமிநாதன் அவர்கள். நேரம் தவறாமை, கனிவு நிறைந்த கண்டிப்பு, நேர்மையான நிர்வாக திறமை, பண்பின் சிகரம், கோபத்திலும் அமைதி, மாணவர் அனைவரும் தன் மக்கள் என்று நினைக்கும் பாங்கு. ஆசிரியர்கள் அனைவரும் உடன் பிறவா சகோதரர், என பல வடிவம் கொண்ட அவர் நாவலரின் நேரடி தொண்டராக இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார் என்றால் மிகையாகாது. அப்படிப்பட்ட மேன்மை மிக்க எங்கள் ஆசானும், என் தந்தையும், எங்கள் பிதாமகரும் மேனாள் தலைமையாசிரியருமாகிய திரு. க. சுவாமிநாதன் அவர்கள் பொற்பாதங்களுக்கே இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கிறேன்.

நாவலர்
சமுதாயவியல்

நாவலரும் வேளாண்மையும்

ச. தனஞ்சயராசசிங்கம்

யாழ்ப்பாண மக்கள் 1876, 1877 ஆம் ஆண்டுகளில் மழையில்லாமையினாலுங் கோதாயினாலும் அல்லலுற்றனர். யாழ்ப்பாணத்தில் நிலவிய இப் பஞ்சத்தின் கொடுமை யினை நாவலர் நிறுவிய கஞ்சித்தொட்டித் தருமம் என்னுங் கட்டுரையால் அறியலாம். சேர் வில்லியம் கிறெகறி (Sir William Gregory) என்பவர் 1872 ஆண்டு தொடக்கம் 1877 ஆண்டுவரையும் இலங்கைக்குத் தேசாதிபதியாய் இருந்தவர். இவர் 1872 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு வந்து அங்குள்ள மக்களின் அயரா உழைப்பினை நேரிற் கண்டவர். நாவலரும் தேசாதிபதி தன் சைவப்பிரகாச வித்தியாசாலையினைப் பார்வையிடுவாரென நம்பி அதற்கான ஆயத்தங்களைச் செய்திருந்தார். ஆனால் அக்கால அரசாங்க அதிபர் துவையினந்துரையின் உபாயத்தினால் நாவலரின் வரவேற்புக்குத் தேசாதிபதி பாத்திரராக வில்லையென்பதை,

> 'சிறீ. கிறிகோறி (Gregory) கவர்ணர் இங்கே வந்தபொழுது, சுவாதீனப் பிரபுக்களுடைய (Independent Gentlemen) பந்தல்களுக்கு அவர் போவாரானால், தம்முடைய கொடுமை களைச் சனங்கள் அவருக்கு விண்ணப்பஞ் செய்வார்கள் என்று பயந்து, துவையினந்துரை அவர் அங்கே போகாமைக்கு வேண்டும் உபாயமெல்லாஞ் செய்து தங்கீழ்ப்பட்ட கச்சேரி உத்தியோகத்தர்களைக்கொண்டும் தலைமைக்காரர்களைக்கொண்டும் அங்கங்கே பந்தல் போடுவித்து, அங்கே மாத்திரம் அவரை அழைத்துக்கொண்டுபோய், தம் மிடத்தில் உள்ள குற்றங்களெல்லாவற்றையும் மறைத்தும், தம்மிடத்தில் ஒரு சிறிதாயினும் இல்லாத குணங்களை உண்டென்று கற்பித்தும். அவரெதிரே பிரசங்கம் (Address) எழுதி வாசிக்கும்படி செய்துவிட்டார்.''[1]

என்று நாவலர் எழுதியவற்றாலும் உதயதாரகை 1872 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 18ஆந் தேதி இதழினாலும் அறிகிறோம். நாவலர் அன்று தேசாதிபதியைச் சந்தித்திருப்பின் யாழ்ப்பாண மக்களின் நிலைமையைச் செல்வனே விளக்கியிருப்பார் என்பதற்கு

1. **இலங்கைநேசன்**, 1877 ஜூ ஆனி மீ 27 ஆந் உ

ஐயமுமுண்டோ? ஆயினும், தேசாதிபதி கிறெகறி அவர்கள் யாழ்ப்பாண மக்களின் நிலையினைக் காலப் போக்கில் நன்கு அறிந்தார். அவர்களின் நல் வாழ்விற்குகந்த திட்ட மொன்றனைத் தங் குறுகிய ஆட்சிக்காலத்திற்குள் வகுத்திட விழைந்தார்.

திரிகோணமலை பகுதியிலுள்ள கந்தளாய் என்னுங் குளத்திற்கண்மைப் பிரதேசம் இக்காலத்திற் காட்டுப் பிரதேசமாயிருந்தது. தேசாதிபதி கிறெகறி அவர்கள் இப்பகுதியினைச் சுதேசிகளின் உதவியுடன் பயிர் விளையும் நிலமாக விருத்திசெய்யத் தம் ஆட்சிக்காலத்தில் விழைந்தார்.[2] அவர், இலங்கையில் வாழும் ஐரோப்பியர் அதன் நீர்வளம் நிலவளமுள்ள பகுதிகளில் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களை விளைவித்துப் பெரும் பொருளீட்டு வதனையும் சுதேசிகள் பெரு முயற்சியின்றி வாளாவிருப்பதையுங் கண்டு இரங்கினார். இவர் தம் ஆட்சிக்காலத்திற் சமூகச் சீர்திருத்தத்திலுங் கிராம அபிவிருத்தியிலுமே கண்ணுங் கருத்துமாக இருந்தார்.[3] ஆகையாற் கந்தளாய்க் குளத்திற்கு அண்மையில் உள்ள காட்டு நிலப்பகுதியினை ஐரோப்பியருக்கு மட்டுமின்றிச் சிங்களவர், தமிழர், முகம்மதியர் ஆகிய சுதேசிகளுக்கும் கொடுக்க முயன்றார். 23,000 ஏக்கர் நிலம் கந்தளாய்க்கு அண்மையிற் காட்டு நிலமாயிருந்தது. இந் நிலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட அளவினைச் சுதேசிகள் அரசாங்கத்திடம் பணங் கட்டிப் பெற்று விருத்தி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். இவரின் பேரூக்கத்தினால் யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் (The Jaffna & Batticaloa Commercial and Agricultural Company Limited) என்ற பெயருடன் சங்கமொன்று நிறுவப்பட்டது. இச் சங்கம் பங்கொன்று ரூபா பத்து வீதம் 30,000 பங்குகளை விற்கும் உரிமையைப் பெற்றது. பங்குகளைப் பெற விரும்புவோர் அவற்றிற்குரிய பணத்தினை வங்கியிற் கட்டல் வேண்டும். 200 பங்கிற்குப் பணங் கட்டுவோரிற் பதின்மூவர் சங்க உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படுவர். அப் பதின்மூவரில் மூவர் முகாமைக்காரராகவும் வேறொருவர் செயலாளராகவும் தெரிவு செய்யப்படுவர். இச்சங்கத்திற்கு அரசாங்கம் 20,000 ஏக்கர் நிலத்தினை உதவும். முதல் முறைக்கு அரசாங்கத்திடமிருந்து 10,000 ஏக்கர் நிலம் பெற்றுத் தக்கவாறு செப்பனிட்டுப் பயிர் செய்து காட்டின் எஞ்சிய 10,000 ஏக்கரும் அதற்குக் கொடுக்கப்படும். முதல் முறைக்கு அரசாங்கத்திடமிருந்து 10,000 ஏக்கர் நிலம் பெறுவதற்கு முன்னீடாக ரூபா 100,000 திருப்பிக் கொடுக்கப்படும்.[4]

இச் சங்கத்தின் நோக்கத்தினை விளக்கி யாழ்ப்பாண மக்களைப் பங்கு வாங்கும்படி தூண்ட திரு.போட் (N. Ford) என்பவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.[5] இவர் யாழ்ப்பாண

---

2. 'I am able to inform you that the great works at Kantalai Tank and at Tissamaharama are virtually completed. For the first I am responsible, and as there are 23,000 acres of cultivable Crown land under this tank, and a supply of water adequate to irrigate them. I am satisfied that it will be afford the means for extensive and improved cultivation of rice, thereby augmenting the food resources of the Island' – W. H. Gregory's Address, *Proceedings of the Legislative Council*, 3rd September 1876.

3. B. Bastiampillai, *The Administration of Sir William Gregory*, Tisara Prakasakayo, Dehiwala. 1968. pp. 80-130.

4. **இலங்கைநேசன்**, 1877 ஜூல மார்கழி மீ 12 ஆந் உ.

5. **இலங்கைநேசன்**, 1877 ஜூல மார்கழி மீ 12 ஆந் உ.

மக்களின் நலன் கருதி உழைத்துவரும் நாவலரையும் செல்வ நிலையிலுள்ள நாட்டுக் கோட்டைச் செட்டிமார் முதலியோரையுங் கண்டு சங்கத்தின் நோக்கத்தினையும் பயனையும் விளக்கி அவர்கள் ஒத்துழைப்பினை நாடினார். இதன் பயனாக நாவலரும் சிறீ. ரா. ம. சித. முத்துக் கறுப்பன் செட்டியாரும் பங்கொன்றுக்கு ரூபா பத்து வீதமாக 2000 ரூபா கட்டி 200பங்குகள் பெற்றார்கள். பஞ்சத்தினாலும் கோதாரியினாலும் வருந்தும் மக்களின் பொருளாதார விருத்திக்கு இம் முயற்சி உதவியளிக்குமென நாவலர் கருதினார். கந்தளாய்க்கு அண்மையிலுள்ள காட்டு நிலத்திலுள்ள கருங்காலி, முதிரை, பாலை, சமண்டலை, காட்டாமணக்கு முதலிய மரங்களைத் தறித்துப் பிறவூர்களுக்கு ஏற்றி விற்பின் அவற்றால் பேராதாயம் பெறலாமென நம்பினார். 200 பங்குகள் பெற்றமையினால் வேளாண்மைச் சங்கத்தின் முகாமைக்காரரில் ஒருவரானார். தம்மை ஆதரித்து வந்த இலங்கை நேசன் பத்திராதிபரை இச் சங்கத்தின் நோக்கம், பயன் ஆகியனபற்றித் தலையங்கமொன்றினை விரிவாக எழுதுமாறு தூண்டினார். தாமும் தமது வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கூட்டமொன்றினைக் கூட்டிப் பொதுமக்களை வேளாண்மையில் ஈடுபடுமாறு தூண்ட எண்ணினார். இந் நோக்கத்துடன் கிளைச் சங்க மொன்றினை நிறுவவும் எண்ணினார். இதுகாறுஞ் சமயப் பிரசாரகராக மட்டுமிருந்த நாவலர் இக்காலத்தில் விவசாயப் பிரசாரகராகி அநீதியையும் சமூக ஊழல்களையும் எதிர்த்துப் பிரசாரஞ் செய்யும் பிரசாரகராகவும் விளங்கினார். இலங்கைநேசன் பத்திராதிபரும் நாவலரும் வேளாண்மைச் சங்கம் பற்றி இலங்கைநேசனில் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:

இலங்கைநேசன் 1877 ஆ மார்கழி மீ 12ந் தீ

மாறிப்போன சங்கை போந்த கவர்ணர் கிறெக்கோரி (Governor Gregory) அவர்களே மிகு பிரயாசை எடுத்துச் சுதேச விருத்திக்குத் தலையிட்டனர். இலங்கையிலுள்ள சுதேசி கள் ஒரு பொழுதும், விடாமுயற்சி, ஐக்கியம், நீதி, பரோபகாரம், தொழில் முதலியவைகளில் ஒரு சிறிதும் பயனடையப் பயிற்சி அற்றுப் பரதேசிகள் கைக்குட் சிக்கி அடிமைகளுக்குச் சமானமாக வாணாட்களை வீணாய்க் கழிக்கிறார்கள். ஆகவே, இலங்கைச் சுதேசி களுக்குத் தகுந்த வேலை கொடுத்து மறு சாதியார்போலச் சீர்திருத்தம், ஐக்கியம், விடா முயற்சி, தொழில், வியாபாரம் ஆகிய இவை அதி விருத்தியடைச் செய்யத் தக்க வழி யாதென்று கவர்ணர் அவர்கள் கிருபை வைத்தனர். அவர் வைத்த கிருபை திருக் கோணாமலைக்குச் சமீபமான கந்தளாய்க் காட்டுநிலத்தை இங்கிலிசுகாரருக்கு மாத்திரம் கொடாமல் சுதேசிகளுக்கே எவ்வகையாயேனும் கொடுத்து அவர்கள் விருத்தியடைவிக்க வேணும் என்பதே. எத்தனை இங்கிலீசுத் தோட்டத்துரைமார் கூத்தாடியும் வாதாடியும் கொடாது, கவர்ணர் சுதேசிகளை விருத்தியடைவிக்க இது ஒரு வழி மாத்திர மல்லது வேறொரு வழி அகப்படுவது அரிது! அரிது! எனப் பலவாறு அரசாட்சியாருடன் வாதுசெய்து தன் ஆஞ்ஞைக்குள்ளாக அதற்காக வேண்டிய போதிய பெலப்புச் செய்து போயினர். அதன் பின்பும் எத்தனை இங்கிலீ சுத்துரைமாரும் றைமிஸ், ஒப்சேவர் (Times, Observer) என்னும் இங்கிலிசுப் பத்திரிகைகளும் சுதேசிகளுக்கு மாறாகக்

கணை தொடுத்தும் வாயாது விட்டது. இப்போ வந்த கவர்ணர் அவர்களும், இலங்கைச் சுதேசிகளுக்காகவே உபயோகப் படத்தக்க போதிய பேருதவி செய்து கொம்பனியாருக் குறுதி கொடுத்தனர். இவ்வரிய பெரிய நன்மையை இத்துணைத்தென எம்மூரார் இதுவரையிலும் அறியவே மாட்டார்கள். கொழும்பிலேயுள்ள யாழ்ப்பாணத்துப் பிரபுக் களும் உத்தியோகஸ்தர்களும், சிங்களத்துரைமாரும் மகமதியரும் ஒருங்கு சேர்ந்து கொம்பனி கூடிப் பங்குகள் சேர்த்துப் பணங் கட்டிச் செய்கையிற் துவங்கப் போகிறார்கள்.

23,000 ஏக்கர் காட்டுநிலம். இக் கொம்பனியாருடைய பங்கு 30,000. பங்குத் தொகை 3 லட்சம். கொம்பனியாருக்கு 20,000 ஏக்கர் நிலம் அரசாட்சியாராற் கிடைக்கும். முதல் 10,000 ஏக்கர், கொடுத்துச் செய்கை செய்து அரசாட்சியாருக்குத் திருப்தியாயின் 2 வருடத்துக்குப் பின் மற்ற 10,000 ஏக்கர் கொடுபடும். இப்போ 10,000 ஏக்கர் எடுத்துச் செய்கைசெய்ய 100,000 ரூபா அரசாட்சியாருக்கு முன்னீடாகக் கட்டிவைக்க வேணும். அரசாட்சி யாரும் கொம்பனியாரும் பொருத்திக்கொண்ட பொருத்தப்படி வருஷம் வருஷம் நில விலை கட்டிவரவேண்டியது. அப்படியே கட்டிய கடைசியில் இவர்கள் முன்னீடாகக் கட்டிய 100,000 ரூபாயும் திரும்பக் கொம்பனியாருக்குக் கொடுபடும்.

இலங்கையிலுள்ள சகல சாதியாருக்கும் இவ்வகையான முயற்சி கூடி வருவது வேறொரு வழிவகையாலுங் கிட்டவே மாட்டாது. இம்முயற்சியினாலுண்டாகும் நன்மையின் பெறுபேற்றை எவ்வளவுகொண்டளக்கினும் முடியாது! முடியாது! இலங்கையிலுள்ள சனங்கள் படும் பஞ்ச நோய் உபத்திரவங்களுக்குக் காரணம் தானியக் குறைவு. கந்தளாய் வயற் செய்கையில் மாத்திரம் நெல்லு விழைந்து (விளைந்து) விருத்தியடையுமாயின் பஞ்சம் பறப்பது மாத்திரமா? மறு தேசத் தானிய வரவும் வேண்டுமா? எத்தனை தொழிலாளிகளுக்கு உதவி! எத்தனை அறிவாளிகளுக்குதவி! எத்தனை ஏழை எளியவர்களுக்குப் பேருதவி!! இவ்வயற் செய்கை எம்மூரவர்கள் செய்கிற ஏராணி கொண்டு நடத்தப்படுவதென்பது கூடாத காரியம். இங்கிலீசிய மாதிரியான சூத்திரங்களைக் கொண்டே அதிகமாக வேலை நடக்கும் அல்லது இப்பெரும் வயல்வெளி வேலை முடிக்கிறது மிகப் பிரயாசம். கொம்பனியாருக்கு மாத்திரம் செய்கை பண்ணி நெல்லு விழைவிக்க (விளைவிக்க) முன் காட்டு மரங்கள் தறித்து விற்பனவு செய்வதில் இரண்டு பங்கு நயம் பயக்கும். முன்னுந் தமிழ் ராசாக்கள் காலத்தில் செய்கை செய்த இடம் திரவியமான இடம். காட்டுமரங்கள் அரசாண்டு, எம் நாட்டு இருகாற் பூச்சிகள் அரசுசெய்யவர இன்னாட் (இந்நாட்) சென்றனவோ! விடாமுயற்சியே! ஐக்கியமே! இனி விடாதிருங்கள்.

பங்கெடுங்கள் பங்கெடுங்கள்

தருணம்! தருணம்!

யாழ்ப்பாணம் மட்டக்களப்பு வேளாண்மை வர்த்தகக் கொம்பனியாரிலொருவராகிய மெஸ்.வோட் (Mr. N. Ford) என்பவர் யாழ்ப்பாணப் பல பற்றுகளிலும் மிகு விடா முயற்சியோடு சுற்றிப் பங்கு சேரக் கையிடுபவர்களுக்கு வேண்டிய வழிவகைகளைக் காட்டிவரும் பிரயாசை அதிகம்! அதிகம்! எம்மூரவர்களுக்கு முன்பின் வழக்கமற்ற இவ்வித காரியங்களிற் கையிடச் செய்வது கடினம்! எனினும் நாட்டுக்கோட்டைச்

செட்டிப்பிள்ளைகளுக்குள் சிறீ. ரா. ம. சித. முத்துக்கறுப்பன் செட்டியார் அவர்கள் 200 பங்கெடுத்துக் கட்டவேண்டிய பணம் வங்கியிற் கட்டிப் போட்டார். சிறீ. கதிரவேலுப் பிள்ளை, டாக்குத்தர் சிவப்பிரகாசம், மெஸ். ஆம் ஸ்திறேங்கு இஞ்சினீர் முதலான அனேகர் ஆயத்தப்படுகிறார்களாமென அறிகிறது அளவற்ற சந்தோஷம். ஒருவனோடுகில் கேட்டோடு ஊரோடுகில் ஒத்தோடு என்பது போல, இவ்விதமாகப் பிரபுக்கள் கையிட்டிருக்கிறபோது யாழ்ப்பாணப் பிரபுக்கள் உத்தியோகஸ்தர் யாவரும் ஆளுக்கொரு குட்டுக் குட்டினால் அடியேன் தலைமுடாப்போலே என்றாற்போல் கொம்பனியிலே மூன்று பங்கும் யாழ்ப்பாணத்தாரோடேதான் வரும். வந்தாற்றெரியும் பஞ்சனார் படும் பாடு. எம்மூரவர்களே சுதேசபிமானமும், ஐக்கியமும், விடாமுயற்சியும், எம் மூருக்குக் காலூன்றில் இதை விட வேறு வழியொன்றும் எம் அறிவிற் கிட்டிய மட்டுக்கும் எட்டாது. குறைந்த பங்கு ய ரூபாய்தான் ஒரு பங்கு.

பிந்திய சமாசாரப்படி அறிகிறவரையில் யாழ்ப்பாணத்து சிறீல சிறீ ஆறுமுகநாவலர் அவர்கள் 200 பங்கும் இன்னும் எடுத்தவர்கள் ஏறக்குறைய 700 பங்காய்விட்டதென்றும், வங்கியிற் பணங் கட்டப் பற்றுச்சீட்டுக் கடதாசி இல்லாமல் தடையாகிறதென்றும் பேரிரைச்சலாகின்றன. சிறீல. சிறீ. ஆறுமுகநாவலர் அவர்களுடையவும் சிறீ. ராம. சித. முத்துக்கறுப்பன் செட்டி யாருடையவும் முழு முயற்சியின் நயத்தை இம்மட்டென்று பேச நாவெழாது. அவர்கள் பரோபகாரமாக, யாழ்ப்பாணத்தாருக்கு இதுவே தருணம்! தருணம்! இவ்வயற் செய்கைக் கொம்பனிக்குச் சங்கத்தில் கூடிப் பங்கெடாதவர்கள் பின்னுக்குத் துயரடையப் போகிறீர்களென்று பலவாறு, கொம்பனியாருடைய நன் முயற்சியையும் வயற் செய்கையின் பெரு விருத்தியையும் அக்காட்டிலுள்ள மரங்களால் கொம்பனிக்கு வரும் அளவற்ற பொருள் வரவையும் உள்ளபடி அறிந்து ஊரவர்களுக்குத் தைரியப்படுத்தி விடாமுயற்சி செய்துவரும் இவர்களைப்போலப் பரோபகாரம்கொண்டு மற்றேனை யோரும் இவர்களுடைய அடிச்சுவடெடுப்பார்களென்பதிற் சந்தேகமில்லை. எம்மூரவர்களுக்கு இக்கொம்பனியின் வழிவகையும் அதன் நயமுஞ் சற்றுந் தெரியாத தினிமித்தம் எமது பத்திரிகையில் தோற்றுகிற விளம்பரப்படி ஓர் பிரசங்கம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடக்கும். அங்கு விரித்துக் காட்டப்படும் கூட்டத்தாருடைய நய முதலானவைகளைக் கேட்டுப் பயனடைவீர்களாக.

இலங்கைநேசன் 1877 ஞூ மார்கழி மீ 12ஆந் தீ

யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம்

இந்தச் சங்கத்தினது பயன், வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே இந்த மாதம் ய ரு ந் திகதி சனிக்கிழமை பின்பகல் மூன்று மணிக்குமேலே, பிரசங்கிக்கப்படும். கேட்க விரும்புகிறவர்கள் எல்லாரும் பிரசங்கந் தொடங்க முன்பே வந்து கூடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

க. ஆறுமுகநாவலர்

வண்ணார்பண்ணை
எஎ ஞூ மார்கழி மீ ய ஙூ

நாவலர் இலங்கைநேசனில் வெளியிட்ட யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் பற்றிய விளம்பரத்தினால் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஏறக்குறைய 400 மக்கள் கூடினார்கள். அன்று நாவலர் இச்சங்கத்தின் பயன்பற்றிப் பேசியதும் ஏனைய நிழ்ச்சிகளும் இலங்கைநேசன் மார்கழி 26 ஆந் தேதி இதழில் வருமாறு வெளியிடப் பட்டன.

இலங்கைநேசன் 1877ஞ் மார்கழி மீ 26ந் தீ

யாழ்ப்பாண மட்டக்களப்பு வேளாண்மைச் சங்கப் பிரசங்கம்

எமது சென்ற பத்திரிகையிற்றோற்றிய விளம்பரப்படியே குறித்த சிறீல சிறீ ஆறுமுக நாவலரவர்களாற் பிரசங்கம் ஆரம்பமானது. இங்கு ஏறக்குறைய 400 சனங்கள்வரையிலும் வந்து கூடினார்கள். இவ் வேளாண்மைச் செய்கைக் கூட்டம் கூடி நடைபெறும் வழிவகைகள் அணுவளவேனும் எம்மூரவர் களுக்குத் தெரியாது. இங்கிலிசு பத்திரிகைகளில் மாத்திரம் பேசப்பட்டதுண்டு. அதன் விபரமென்னவென்று கேட்போருக்குப் பாரதம் போலக் கதை நீடிக்குமென்று அறிந்தவர்களும் அதென்னமோவென்று மாறிவிடுவதுண்டு. எம் இலங்கையிலுள்ளவர்களுக்கு அரசாட்சியாகும் சங்கத்தவர்களுங் கூடிச் செய்ய முயன்ற நன்னோக்கத்தை உள்ளபடி முற்றுமறிந்த சீறில சிறீ ஆறுமுகநாவலர் அவர்கள் பரோபகாரங் கருதி எவருக்கும் அதன் விபரங்கள் நல்லாய் மனதிற் படும்படி செய்யும் பொருட்டுத்தான் பிரசங்கம் கூடினது. அப்பிரசங்கத்தில் எம்மூரவர்கள் அக் கூட்டத்திற் சேர்ந்து பங்கெடுத்தாலுண்டாகும் நட்டமில்லாத நயத்தையும் விருத்தியையும் சிறுவரும் விளங்கத்தக்க அளவு வெளிப்படையாய்ப் பேசிப் பிரசங்கத்துக்கு வந்த சகலருக்கும் ஆசி கூறி இவ்வரிய பெரு நய முயற்சிக்குக் கையிடற்குப் போதிய ஆதார வழிவகைகளைக் காட்டி முடித்தனர். அத்துடன் சிறீ. அருணாசலம், சிறீ.ராம. சித. முத்துக்கறுப்பன் செட்டியார் அவர்களும் சில போதிய கவனிப்புகள் யாருக்கும் ஏற்றுக்கொள்ளத் தக்க பெரு நய மொழிகள் பேசி முடித்தனர்கள். இப்போ அறிகிற வரையில் 2000 பங்குவரையில் யாழ்ப்பாணத்தார் எடுத்துப் பணங் கட்டிக்கொண்டார். இன்னுமிடமுண்டானால் அதிகமாய் எம்மூரவர்கள் எடுக்கத்தக்க போதிய நன்மனமும் விடாமுயற்சியும் ஐக்கியமும் குடிகொள்ள இடமுண்டாகிய இவ்வரிய பிரிய பிரசங்கத்தின் நயத்தை இம்மட்டென்றும் இப்போதானே காரியமறிந்தோமென்றும் ஊரவர்கள் இனிது விளங்கிப் பெருமுயற்சி அடைகிறார்கள். ஆகவே, இச் சங்கத்தார் சங்கத்திற் சகல காரியங்களையும் அவ்வவ்வூரிலுள்ளவர்கள் பங்கெடுப்பதற்குப் போதிய உபகரணமாக ஒவ்வோர் பிரதான கூட்டத்தாரை அல்லது காரியஸ்தரை நியமிக்க வேண்டியது அவசிய தேவையென்பது எமக்குப் புலப்படுகிறது.

நாவலர் இச்சங்கக் கூட்டங்களைத் தம் வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடத்திவந்தார். இச்சங்கத்தின் பங்காளிகளுக்கு யாதாயினும் விசேட செய்தி கூறவேண்டின் அதற்காகக் கூட்டமொன்றனைக் கூட்டினார் என்பதை வரும் விளம்பாரத்தினால் அறியலாம்:

இலங்கைநேசன் 1878 ஜூ பங்குனி மீ 13ந் வ

விசேஷ விளம்பரம்

யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம்

யாழ்ப்பாணத்தார்களுள்ளே, இந்தச் சங்கத்திலே பங்கெடுத்தவர்களெல்லாருக்கும் நாம் அறிவிக்கத்தக்க விசேஷ சமாசாரம் ஒன்று உண்டு. ஆதலால் அவர்களெல்லாரும், பங்குனி மீ யி சு வ சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலே வந்து கூடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வண்ணார்பண்ணை, இங்ஙனம்
பங்குனி மீ யி 2 வ. க. ஆறுமுகநாவலர்

இவ்வேளாண்மைச் சங்கத்தின் நிர்வாகம் 1879 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தளர் வுற்றிருப்பதனை இலங்கைநேசன் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைநேசன் 1879 ஜூ தை மீ 13ந் வ

கந்தளாய் கம்பனி

இக் கம்பனியை நடைபெறாமல் இடையூறு விளைய வினைக் கெட்டு வேஷம்போட்டுத் திரிந்த உருத்திராட்சப் பூனைகள் வாயிலிருந்து தப்பி விட்டது! தப்பிவிட்டது! இலங்கையில் சுதேச சாகியத்தார் இவ்வரிய பெரு முயற்சியை இனிது முடித்தல் கூடாதென, ஆட்சேபித்த அளவற்ற மகான்கள் மெச்சிக் கைதட்டிக் குலுங்க நகைக்க இடம் நேரிடுமட்டுக்கும் நெருங்கியும், விடாமுயற்சியும் பெரிது பரோபகார சிந்தையுமுடைய மகான்கள் பேருதவியுடன் நடைபெறத்தக்க நந்நிலையில் (நன்னிலையில்) வந்துவிட்டது! வந்து விட்டது!! கம்பனிக்கு நன்மை செய்ய நினைந்தது டிறெக்ற்றர்மார்களாக சேர்ந்து கம்பனியையும் வயற் செய்கையையும் நடத்த முயன்று விரைந்து நிற்கும் மெஸ் கோல் (செங்கோல்) த்துரையும் மெஸ் குமாரசாமி மெஸ் கதிரவேலுப்பிள்ளை முதலியவர்கள் பெருமுயற்சி அளவிடற்பாலது.

மெஸ் கூல்டுத்துரை அவர்களையும் அவர் பக்கத்தவர்களையும் கம்பனியில் ஒரு சிறிதும் உருத்துமின்றி நீக்கி முயற்சிகளில் கையிட இந்த மீ யி அ வ ஓர் கூட்டம் கூட்டிப் பேச விளம்பரஞ் செய்து கூட்டமும் கூட்டி முடிவெடுத்திருக்கிறார்களென்று நம்புகிறோம். யாவராலும் அளவிடற்கரிய அனந்த நன்மைகட்குறைவிடமாகிய இக் கம்பனியின் முயற்சி நனிசித்தி எய்த ஆசிப்பவருடன் நாமும் விடாமுயற்சியாயிருக்கிறோம்.

1879 ஆம் ஆண்டு மாசித் திங்கள் 12 ஆந் தேதி வெளிவந்த இலங்கை நேசன், யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் என்னும் பெயர் இலங்கை வேளாண்மைச் சங்கமென மாற்றப்பட்ட செய்தியினை அறிவித்தது.

இவ் வேளாண்மைச் சங்கத்தில் நாவலர் பெற்ற 200 பங்குகள் அவருக்குப் பின் எவருக்குப் பின் அளிக்கப்பட்டன என்பதுபற்றி மேலும் நாம் ஆராய்தல் வேண்டும். இச்சங்கம் நாவலர் வாழ்ந்த காலத்துக்குப் பின்னும் இனிது நடைபெற்றதென 1880 ஆம் ஆண்டு இலங்கைநேசன் இதழ்களினால் அறிகிறோம்.

நாவலரின் வேளாண்மைப் பணி இதனுடன் நின்றுவிடவில்லை. 1876 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் மழையில்லாமையாற் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சத்துடன் கோதாரியும் மக்களை வாட்டியது. யாழ்ப்பாணத்து உழவர் விளைவு இல்லாமையால் விதைக்க நெல்லில்லாது அல்லற்பட்டனர். நாவலர் இலங்கைச் சட்ட நிரூபண சபையில் தமிழ்ப் பிரதிநிதியாகக் கடமையாற்றி வந்த சேர் முத்துக்குமாரசுவாமியின் உதவியுடன் யாழ்ப்பாணத்து உழவர்க்கு அரசாங்கத்திடமிருந்து விதைநெல் அளிக்க முயன்றார். இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாண உழவரின் நிலைக்கு இரங்கி அவர்களுக்கு விதைநெல் கொடுக்குமாறு யாழ்ப்பாண மாகாண அதிபர்க்குக் கட்டளையிட்டது. ஆனால் யாழ்ப்பாண உழவர்களுக்கு விதைநெல் வழங்கப்படவில்லை. இதுபற்றி நாவலர் செய்திகளைத் திரட்டிச் சேர் முத்துக்குமாரசாமி மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவிக்க முயன்றதனை அவர் இலங்கைநேசனில் வருமாறு விடுத்த விளம்பரத்தினால் அறியலாம்:

இலங்கைநேசன் 1877ஞ் மார்கழி மீ 26ந் தீ

விதை நெல்

போன வருஷம் விளைவு இல்லாதபடியால் இவ்வருஷம் விதைநெல் இல்லாத சனங்களுக்கு விதைநெல்லுக் கொடுக்கும்படி கவர்ண்மேண்டால் வடமாகாணத்து ஏசண்டுக்குக் கட்டளையிடப்பட்டதன்றோ. அஃதறிந்து விதைநெல்லுக் கேட்டும், விதைநெல்லுக் கொடுக்கப்படாதபடியால் வெகு சனங்கள் தங்களுக்கு நல்ல வேளாண்மை என்று மகிழ்ச்சி கொண்டாடுகிற இந்த வருஷம் விதையாத சனங்களுடைய மனம் என்ன பாடுபடும்! இதனாலே கவர்ண்மெண்டுக்கும் இறைப்பொருள் பெரிதும் நட்டமாமே.

அந்தந்த ஊரிலே பொதுநன்மை விரும்பிய தைரியமுடைய தகுந்த மனுஷர்கள், விதையாத சனங்களுடைய பெயர், ஊர்ப்பெயர், விதையாத அவரவர் வயல்களிருக்கிற ஊர்ப்பெயர், வயல்களின் பரப்புத்தொகை, இவைகளை உள்ளபடி எழுதி அவரவர் கையெழுத்து வாங்கி முடிவிலே தங்கள் கையெழுத்து வைத்து விரைவிலே எனக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வண்ணார்பண்ணை, இங்ஙனம்
1877 ஞ மீ மார்கழி 22 உ. க. ஆறுமுகநாவலர்

நாவலர், விதைநெல்லினைப் பெறாதோர் பட்டியலினைத் தயாரித்து அதனை ஸ்ரீ. குமாரசுவாமிக்கு அனுப்பினார். ஸ்ரீ. குமாரசுவாமி சட்ட நிரூபண சபையிலே கேள்வி நேரத்தில் இதுபற்றிக் கேட்டதையும் அதற்குத் தேசாதிபதிக்குப் பதிலாக கடமையாற்றி வந்தக் கொலோனியல் சக்கடத்தார் (Colonial Secretary) பார்ச்சுத்துரை (A. N. Birch) கொடுத்த மறுமொழியையும் பற்றி நாவலர் வருமாறு எழுதியுள்ளார்:

புதுக் கவர்ணரிடத்தே சிறீ. குமாரசுவாமி யாது செய்வார்! ஆயினும் அந்த மகானுபாவர் ஒன்று செய்தார். அது என்னை! கொழும்புச் சட்ட நிரூபண சபையிலே ஒரு கேள்வி கேட்டார். அது என்னை! போன வருஷம் விளை வில்லாததினாலே இந்த வருஷம் விதைநெல்லுக்கு முட்டுப்படுகிற சனங்களுக்கு விதைநெல்லுக் கொடுக்கும்

பொருட்டுக் கவர்ண்மேண்டு கட்டளை செய்ததன்றோ! அந்தக் கட்டளைப்படியே விதைநெல்லுக் கொடுக்கப்பட்டதா? எங்கெங்கே கொடுக்கப்பட்டது? அவ்விஷயத்திலே செய்து கொண்ட உடன்படிக்கை என்னை?' என்றதுதான் அந்தக் கேள்வி, ஓகோ! இதல்லவோ கேள்வி! இந்தக் கேள்வி லக்ஷம் பொன்பெறுமே. எப்படி? விதைநெல்லுக் கொடுக்கப்படவில்லை என்ற உண்மையை நன்கறிந்த சிறீ. குமாரசுவாமி, துவையினந் துரையுடைய அநீதியையும், வன் கண்மையையும், பொய்யையும் புதுக் கவர்ணருக்கு மெல்லென இனிது விளக்கித் திக்கற்ற ஏழைகளாகிய உங்களுடைய துன்பத்தை நீக்கும் உபாயம் இது என்று கண்டார். நல்லது. இந்தக் கேள்விக்குக் கொலோனியல் சக்கிடுத்தார் கொடுத்த மறுமொழி என்னை! அது இது:- "வட மாகாணத்து ஏசண்டு சந்தேகமில்லாமல் விதைநெல்லுக் கொடுத்திருக்கிறார். விபரமாகிய அறிவிப்பு வேண்டு மானால், வருவிக்கப்படும்" என்பதுதான்..... இங்கே தலைமைக் காரர்கள் சிலர், விதைநெல்லுப் பற்றிக்கொண்டோம் என்று சனங்களிடத்திலே பற்றுச் சீட்டு வாங்கித் தரும்படி, தங்கள் வலிந்து ஏவப்படுகிறார்கள் என்று புலம்பிக் கொண்டு திரிகிறார்கள் இதற்கு முன் எத்தனையோ விஷயங்களிலே சிலரை அச்சுறுத்தியும் சிலரைத் தங்கள் வேலை போய்விடப்போகிறது என்று கண்ணீர் பொழிந்து அழுது கெஞ்சியும், சிலரைக் கைகக்கூலி கொடுத்தும், தங்கள் வசப்படுத்திக் கொண்டு, துவையினந்துரையுடைய காரியங்களை முடித்த தலைமைக்காரர்களும், கச்சேரி உத்தியோகத்தர்களும், இப்பொழுது விதை நெல்லுப் பற்றிக்கொண்டோம் என்று பொய்ப் பற்றுச்சீட்டு வாங்கிக் கொடுக்க மாட்டார்களா! கொடுப்பார்கள். கொடுப்பார்கள். ஏன்! கொடுப்பார்கள் என்பதிலே சந்தேகமா![6]

நாவலர் பொதுநன்மை விரும்பிய தைரியமுடைய தகுந்த தொண்டரென்பதற்கு அவர் யாழ்ப்பாணத்தில் துவையினந்துரையின் ஆட்சியில் உழவர்க்கு இழைக்கப்பட்ட கொடுங்கோன்மை பற்றி எழுதிய இக் கூற்றுச் சான்றாகும் 'வேளாண்மைக்கு மேலாகிய தொழில் வேறு ஒன்றும் இல்லை'[7] என்பதை உணர்ந்தே நாவலர் இவ்வாறு அதன் வளர்ச்சியின் பொருட்டு அயராது உழைத்தார்.

6. **இலங்கைநேசன்**, 1877 ஞூ கார்த்திகை மீ 28 ஆந் தீ.

7. "வேளாண்மை". **இராண்டாம் பாலபாடம்**, க. ஆறுமுகநாவலர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கையில் கிறித்தவ மத மாற்றுகைக்கும் மேற்குமயமாக்கலுக்குமான இந்துக்களின் எதிர்வினை

ஆறுமுகநாவலரின் கல்வி மற்றும் சமயச் செயற்பாடுகள் பற்றிய ஆய்வு![1]

கார்த்திகேசு சிவத்தம்பி

தமிழில் சா. திருவேணிசங்கமம்

I

''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தக்க தருணத்தில் பிறந்தார். சைவ சமயம் அவரை விருப்புடன் எதிர்பார்த்திருந்தது. தமிழ்மொழி அவரின் வருகைக்காகக் காத்திருந்தது. யாழ்ப்பாணம் அவரை வேண்டி நின்றது. இரண்டு நூற்றாண்டுகளாக சைவம் வெளிநாட்டுச் சக்திகளின் கிடுக்குப் பிடியில் அகப்பட்டுத் திணறிக் கொண்டிருந்தது. தமிழ் இலக்கியமும் இலக்கணமும் பனையோலைச் சிறைக்குள் முடங்கிக் கிடந்தன. யாழ்ப்பாணம் ஒரு தலைவர் இல்லாமல் இருட்டில் தடவிக் கொண்டு கிடந்தது. நாவலர் வந்தார்; கண்டார்; யாவற்றுக்கும் விடுதலையளித்தார்''

- சிவபாதசுந்தரம், எஸ்., ஆறுமுகநாவலர் (இலங்கை), 1950, ப. 1 -

''புதிதாக எழுந்த மத்தியதர வர்க்கம் பிரித்தானிய ஆட்சியைப் பிரிவினை இல்லாமல் எதிர்ப்பதற்குப் பௌத்த இந்து மறுமலர்ச்சி இயக்கங்களை ஒரு உபாயமாகக் கையாண்டது. காலனிய பாரம்பரியத்தில் ஒரு பலவீனமான கூறான கிறித்தவம்... கிறித்த எதிர்ப்பியக்கம்... காலனித்துவ ஆட்சியின் மொத்த அமைப்பின் எதிர்ப்பாக மாறி இருந்தது. 'கிறித்தவ மயமாதல்' என்ற பண்பாட்டு மாறுதலை அவை முற்றாக மறுதலித்தன. அது மிஷனரிகளின் மதம் மாற்றல் மற்றும் கல்வி நடவடிக்கைகளுடன் இணைந்த சமய காரியமாக மாத்திரம் இல்லாமல் மத்தியதர வர்க்கத்தின் வாழ்க்கைப் பாங்கையும் சமூக நடத்தையையும் பிரதிபலிப்பதாக இருந்தது.''

- ஜயவர்த்தன, குமாரி, The Rise of Labour Movement in Ceylon, (1972), pp. xi – xii --

இவை 19ஆம் நூற்றாண்டு இலங்கையின் சமூக - சமய தலைவர்கள் பற்றிய ஆய்வில் இடம்பெறும் இரு வரலாற்று எழுத்தியல் பார்வைகளாகும். முதலாவது பந்தி ஆறுமுகநாவலர் பற்றிய இந்து - தமிழ் நோக்கை மாத்திரம் உள்ளடக்கியது. இரண்டாவது பரந்த படுதாவில் அவரைப் பார்க்க வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது.

இக்கட்டுரை மிஷனரிகளின் பெருக்கத்தால் பயமுறுத்தப்பட்ட யாழ்ப்பாணத்தின் பாரம்பரியம் பண்பாட்டுச் சூழ்நிலைகளில் முளைகொண்ட நாவலரின் பணிகளை ஆராயும் எத்தனமாகும். அது மிஷனரிகளின் செயல்பாடுகளுக்கு எதிராக அவரின் கல்வி மற்றும் சமய நடவடிக்கைகளை ஆராய்வதோடு யாழ்ப்பாணப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை அழிவிலிருந்து தடுக்க அவரின் பங்களிப்பையும் எடுத்துரைக்கிறது.

யாழ்ப்பாணத்தில் பலம் பெற்றிருந்த இந்து சமூகத்தில் பிரித்தானிய நிர்வாகம் கொண்டு வந்த மாற்றங்களைப் பல்வேறு செயல்பாடுகள் ஊடாக நாவலர் தடுக்க முயன்றார். அச்செயல்பாடுகளால் பயன்பெற்றோர் அச்சமூகத்தின் உயர்சாதியினராவர். சமூகத்தில் உயிர்ப்புடன் செயல்பட்ட அப்பிரிவினரின் சமூக, அரசியல் சிந்தனையை நெறிப்படுத்துவதில் அவரின் செயல்பாடுகள் தீர்க்கமான பங்கு வகித்தன என்பதையும் இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

★ ★ ★

ஆறுமுகநாவலர் இப்போது எல்லாராலும் சைவத்தின் ஐந்தாம் குரவர் எனப் பார்க்கப் படுவதில்லை. (ஆறுமுகம் என்பது அவரின் இயற்பெயர். நாவன்மை படைத்தவர் என்று பொருள்படும் நாவலர் என்னும் பட்டம் தென்னிந்திய மடம் ஒன்றால் அவருக்கு வழங்கப்பட்டது) நாற்குரவர்களில் முதல் மூவர் 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மூவரும் தேவார முதலிகள் என அழைக்கப்படுபவர்கள். நான்காவதாகக் கூறப்படுபவர் 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாணிக்கவாசகராவர். இந்நால்வரும் அந்நிய மதங்களை எதிர்த்துச் சைவத்தை நிலைநாட்டப் போராடியவர்கள்.

இலங்கைக்கான இலக்கியம் தேசிய தன்மைவாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டியவர் நாவலர்.[2] இலங்கை தமிழ் இலக்கியத்தின் தோற்றம் பற்றிய ஆரம்பகால ஆய்வுகள் நாவலரை இந்திய இந்து 'மீட்புவாதிகளு'டன் ஒப்பிடுகின்றன.[3] இலக்கணி, பதிப்பாசிரியர், கட்டுரையாளர், துண்டுப் பிரசுரகர்த்தா என்ற அவரின் பரந்துபட்ட பணிகள் பற்றி விரிவான ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.[4] அவைகளில் பெரும்பாலானவை தமிழில் உள்ளன. சில மாத்திரந்தான் ஆங்கிலததில் எழுதப்பட்டுள்ளன. இதனால் தமிழ் அறியாதவர்கள் அவர் பற்றிய முழுமையான பார்வையைப் பெற முடியாமலுள்ளது.

தேசிய விடுதலை இயக்க வரலாற்றைப் பூரணமாக மீளமைப்புச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியுள்ள இந்நாளில் தமிழ் தெரியாதவர்கள் நாவலரின் பங்களிப்புப் பற்றிய விபரங்களை அறிய முடியாமல் நிற்கின்றனர்.

ஆகவே இவ்வாய்வின் நோக்கம் நாவலரின் செயல்பாடுகளை வேண்டி நின்ற சமூக வரலாற்றுப் பின்னணியை இயன்ற அளவு விபரித்து அவைகளூடே எவ்வாறு நாவலர் வெற்றி வீரனாக வெளிப்போந்தார் என்பதைக் காட்டுவதாகும்.[5]

II

பிரித்தானிய ஆட்சி இலங்கையில் காலூன்றிய காலத்தில் இந்நாட்டின் வரலாற்றுப் பாரம்பரியத்தின் பங்காளிகளாகக் கத்தோலிக்கத் திருச்சபையும் டச்சுச் சீர்திருத்தச் திருச்சபையும் ஆகியிருந்தன. அத்தோடு புதிய புரொடஸ்தாந்தியர்களும் இந்நாட்டுக்கு வந்து கொண்டிருந்தனர். டச்சு காலத்தில் இல்லாத சமய தாராளவாதத்தைப் பிரித்தானிய ஆட்சி அறிமுகப்படுத்தியது. மே 27, 1806இல் ஆளுநர் கொண்டு வந்த ஒழுங்கு விதிகள் கத்தோலிக்கர்கள் ''பிரித்தானிய குடியேற்றமுள்ள இலங்கையின் எப்பாகத்திலும் தொந்தரவில்லாமல் தமது சமய நடவடிக்கைகளை முன்னெடுக்க வழிசெய்தன.''[6] கத்தோலிக்க சேர்ச்சுகள் மதம் மாறியவர்களிடம் நம்பிக்கை, பக்தி, விசுவாசம் என்பனவற்றை எதிர்பார்ப்பவை. ''போர்த்துக்கீசர் ஆதரவு பெற்ற காலத்திலும் டச்சுக்காரர்களால் தடை செய்யப்பட்ட காலத்திலும் கத்தோலிக்கர்கள் தம் போக்கில் மாற்றமில்லாமல் இறுக்கமாக இருந்தனர்.''[7] 1828ஆம் ஆண்டில் கத்தோலிக்கர்கள் 63 பாடசாலைகளை ஆரம்பித்தனர். மாணவர்களின் எண்ணிக்கை 1358. யாழ்ப்பாணத்தில் 423 மாணவர்களைக் கொண்டு 23 பாடசாலைகள் செயல்பட்டன.[8]

சிங்கள கத்தோலிக்கர்களைப்போல தமிழ்க் கத்தோலிக்கர்களில் பெரும்பான்மையானவர்கள் மீனவ சாதியைச் சேர்ந்தவர்களாவர். தமிழ் சாதிப் படிநிலையில் மீனவர் சாதி (கரையார் - கரையில் வாழ்பவர்) சுத்தமற்றவர்களாகவும் தூய்மையற்றவர்களாகவும் கருதப்படுவதில்லை. ஆயினும், அவர்கள் உயர் சாதியினராகவும் கொள்ளப்படுவதில்லை. கரையார் சாதிகளில் உள்ள பல குழுக்களில் ஆழ்கடல் மீன்பிடிக் குழுவினரே அதிகம் கத்தோலிக் கத்துக்கு மாறியவர்களாவர். யாழ்ப்பாணத்தின் கத்தோலிக்கர் அனைவரும் அச்சாதியினர் என்று கூறுவது பிழையாகும். நாரந்தனை, ஊர்காவல்துறை, மிருசுவில் ஆகிய இடங்களிலிருந்து பறையர்களும் சில்லாலையிலிருந்து வெள்ளாளர்களும் கத்தோலிக்கத்துக்கு மாறியுள்ளனர். பின்னவர்கள் இலங்கை வாழ் தமிழ் சமூகத்தின் சாதி படிநிலையில் உயர்தரத்தைச் சேர்ந்தவர்கள்.[9]

கத்தோலிக்கம் தடை செய்யப்பட்டபின் அது தனது சொந்தக் காலில் நின்று போராடியது. புரொட்டஸ்தாந்துகளால் ஏற்பட்ட தடைகளைத் தூண்டி நிற்க முனைந்தது. இது புரொட்டஸ்தாந்தியர்களுக்கு எரிச்சலை உண்டுபண்ணி அவர்களை முன்னோக்கித் தள்ளியது. ஆயினும், வெளிப்படையான மோதல் ஏற்படவில்லை.[10] அசௌகரியம் நிலவியது. பிரான்ஸிஸ் செமரியாஸ், பிரான்ஸிஸ் பொன்சின் ஆகிய பிசப்புகளால் முறையே 1857 - 1867, 1868 - 1883 ஆகிய ஆண்டுகளில் கத்தோலிக்க கல்வியில் முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

இக்காலத்தில் இந்து சமயம் எதிர்கொண்ட சவாலைப்போல கத்தோலிக்கமும் எதிர்கொண்டது. கத்தோலிக்கமும் இந்து சமயமும் பக்கத்துகுப் பக்கமாக போர்த்துக்கீசர் காலத்திலிருந்து வந்துள்ளன. அதைப்போல டச்சு சீர்திருத்த சபையும் இந்து சமயம் மீது பாரிய எதிர்ப்பெதையும் காட்டவில்லை. அது டச்சு மேலாதிக்க காலத்திலும் ''சமயச் சின்னங்கள் ஏதுமில்லாமல் பைபிள் வாசிப்பு ஒன்றை மாத்திரம் முதன்மைப்படுத்திய சமயமாக இருந்ததால்'' மதம் மாறியவர் மீது தனது பிடியை இறுக்க முடியாததாக இருந்தது.

இந்நிலைமைகளால் சமய மோதல்கள் அதிகம் நிகழாத சூழ்நிலை நிலவி வந்தது. ரென்னற் அப்போது நிலவிய சூழ்நிலையை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> ''1802இல் யாழ்ப்பாணத்தில் புரொட்டஸ்தாந்து கிறித்துவத்துக்கு மாறிய தமிழர்களின் எண்ணிக்கை 136,000. 1806இல் இலங்கைக்கு வந்த புச்சானன் என்பவர் புரொட்டஸ்தாந்து சமயம் அழிவின் விழிம்பில் இருக்கிறது என்றும் ஐந்து பழைய சேர்ச்சுகள் சிதிலமாகிக் கிடக்கின்றன என்றும் இவைகளைப் பராமரித்து வந்த மதகுருவைக் காணவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்து ஒருவர் இம்மாகாணத்தில் சமய போதனை செய்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.''[11]

இந்து சமயத்துக்கெழுந்த முதலாவது அச்சுறுத்தல் பிரித்தானிய ஆட்சியில் புரொட்டஸ்தாந்து மிஷனரி அமைப்புகளால் வந்ததாகும். 1804 - 1805ஆம் ஆண்டுகளில் இலண்டன் மிஷனரி சங்கத்தினரும் 1812இல் பப்ரிஸ்டுகளும் 1814 - 1815இல் வெஸ்லியன் மெதடிஸ்டுகளும் 1817இல் அமெரிக்க மிஷனரிகளும் 1815இல் சேர்ச் மிஷனரி சங்கத்தினரும் வந்தனர்.

இலண்டன் மிஷனரி சங்கத்தினரின் செயல்பாடுகள் வெற்றியளிக்கவில்லை. 1855, பெப்ரவரி 04ஆம் திகதி வந்த அச்சங்கத்தின் நான்கு மிஷனரிகளில் ஒருவரான ஜே.டி. பாம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார்.[12] இலண்டன் மிஷனரி சங்கத்தினர் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி ரென்னற் இவ்வாறு குறிப்பிட்டார். மிஷனரிகள் கடும் முயற்சி எடுத்தும் பயன் இல்லாமல் வடக்குத் தமிழர்களை ஒதுக்கி விட்டனர்.[13]

இலங்கைக்கு வந்த மிஷனரிகளில் தனித்துவமானவர்களான பப்ரிஸ்டுகளுக்கு வடகிழக்குப் பகுதிகளில் ஓர் இடமும் கிடைக்கவில்லை. அவர்கள் தமது பணியைத் தென்மேற்குக் கரையோரங்களிலும் கண்டிப் பிராந்தியத்திலும் நிலைப்படுத்தினர்.[14]

பப்ரிஸ்டுகளைப் போலல்லாது வெஸ்லியன் மெதடிஸ்டுகள் தமது பணியைத் தீவடங்கிலும் பரவலாக மேற்கொண்டனர். அவர்கள் தமது பணியை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் ஆரம்பித்தனர். 1819இல் அவர்களின் மூன்று வருட நிறைவு மாநாடு நடந்தபோது தீவு தமிழ்ப் பகுதி, சிங்களப் பகுதி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 1820இல் இளம் வெஸ்லியன் மதகுருக்கள் வந்து தமது சமய நடவடிக்கைகளைப் பலப்படுத்தினர். 1825இல் வடமாவட்டத்தில் 26 பாடசாலைகள் 795 மாணவர்களுடனும் 26 ஆசிரியர்களுடனும் இயங்கின. 1833இல் வண. பீற்றர் பார்சிவல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பொறுப்பெடுத்துக் கொண்டார்.[15] இங்கே தான் முதலில் நாவலர் மாணவராக இணைந்து கொண்டார். அவ்வாண்டில் ஓர் உள்ளூர் சபையும் உருவாக்கப்பட்டது.

அமெரிக்க மிஷன் தனது பணிகளை வடக்குக்கு மாத்திரம் கட்டுப்படுத்திக் கொண்டது. கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்ட முதல் அணி அமெரிக்க மிஷனரிகளில் ஒருவரான சாமுவெல் நெவெலின் அறிக்கையில் அமெரிக்க ஆணையாளர் சபை 1816இல மிஷனரி குழுவொன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது என்ற தகவல் காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு,

1. இந்த மாகாணத்தில் வாழும் அஞ்ஞானிகள் நன்கு போதிக்கப்பட்டு நல்வழியில் கொண்டுவரப்படல் வேண்டும் என்று ஆளுநர் விரும்பி இருந்தார் என்பதும்,

2. யாழ்ப்பாணத்தின் அமைவிடம் தென்னிந்தியாவுக்கு அருகில் இருப்பதும் இரு இடங்களிலும் ஒரே மொழி பேசும் மில்லியன் கணக்கான மக்கள் வாழ்வதும் காரணங்களாகும்.[16]

அவர்கள் வந்து 10 ஆண்டுகளில் பின்வரும் பணிகளைச் செயல்படுத்தினர்.

i. மிஷனரி ஆஸ்பத்திரி சேவை.

ii. மேற்கு வைத்தியத்தைக் கற்பிக்கும் மத்திய நிலையத்தை நிறுவல்.

iii. வட்டுக்கோட்டை செமினரியில் கல்லூரிப் படிப்பை ஆரம்பித்தல்.

iv. உடுவில் மகளிர் கல்லூரி உருவாக்கல்.

1817இல் சேர்ச் மிஷன் சங்கத்தால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட நான்கு ஆங்கில மதகுருக்களில் ஒருவரான வண. யோசெப் நைற் யாழ்ப்பாணம் வந்து தனது பணிகளை ஆரம்பித்தார். 1850இல் இருந்து சுண்டுக்குளியிலும் கோப்பாயிலும் நன்கு நிலையூன்றிக் கொண்ட சி.எம்.எஸ். அவ்விடங்களைப் பிரத்தியேக மிஷன் மாவட்டங்களாக முறையே 1841இலும் 1849இலும் அறிவித்தது. நல்லூர் மகளிர் விடுதிப் பாடசாலை 1841இல் ஆரம்பிக்கப்பட்டது.[17]

இவ்வாறு பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் வந்த ஐந்து மிஷனரிகளில் மூன்று வடக்கில் நிலையூன்றிக் கொண்டன. அங்கிலிக்கன் சேர்ச் நிறுவப்பட்ட சேர்ச் என்ற ''அந்தஸ்த்தைக் கொண்டிருந்தாலும் அது பெருமையும் முதன்மையும் பெறவில்லை.[18] வடக்கில் அரசாங்கப் பாடசாலைகள் ஒரு குழுவின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடுகளின் கீழ் வந்தன. தஞ்சாவூரில் இருந்து கிறிஸ்டியன் டேவிட் என்பவர் வடக்கு மாவட்டத்தில் இருந்த 40 பாடசாலைகளை மேற்பார்வை செய்ய நியமிக்கப் பட்டார்.[19] ஆயினும் அங்கிலிக்கன் சேர்ச் மற்றவைபோல் மிஷனரிப் பணிகளை முன்னெடுக்கவில்லை என்று கூறமுடியாது.

இந்த மிஷனரிகளுக்கிடையே போட்டி மனப்பான்மையோ பொறாமை உணர்வோ இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். மாறாக அவைகளிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் நிலவின. இதைக் கண்டு பரவசமடைந்து ரென்னற் குறிப்பிட்டார். ''யாழ்ப்பாண மாகாணத்தில் உள்ள மூன்று மிஷனரிகளின் செயல் திட்டங்களில் முக்கிய அம்சங்களில் ஒரே மாதிரியானவை. முப்பது வருடங்களாக இந்த நல்ல மனிதர்கள் 'மிஷனரி ஒன்றியத்'தில் பங்கு பற்றி கலந்துரையாடி வருகின்றனர். ஒன்றிணைந்த நடவடிக்கைகள், கடந்தகால அனுபவம் என்பவற்றைப் பகிர்ந்து எதிர்காலத்தில் செய்ய வேண்டிய நடவடிக்கைகளைக் கலந்துரையாடி முடிவு எடுக்கின்றனர். அவர்களின் வழிமுறைகள் ஒன்றாக உள்ளன. அவர்கள் தமிழர்களின் பார்வையோடு முரண்படாமல் இருக்க மிகக்

கவனமெடுத்துச் செயல்படுகின்றனர். தெற்கில் சிங்களவர்களோடு முரண்பட்டதால் தங்களால் அங்கே வெற்றியடைய முடியவில்லை என்ற பாடத்தை நினைவில் கொண்டுள்ளார்கள்.''[20]

அவர்கள் பின்னர் அமெரிக்க மிஷனரிகளுடன் மாத்திரமல்லாது கத்தோலிக்கர்களுடனும் ஒத்துழைத்துப் பணியாற்றலாம் என்று குறிப்பிட்டனர். புரொட்டஸ்தாந்து மிஷனரிகளுக்குக் கத்தோலிக்கர்களுடன் வெளிப்படையிலான பகையில்லை என்பதைப் பாதர் பொன்ஜீன் சில காணித் துண்டுகளையும் புரொட்டஸ்தாந்து அச்சகங்களில் அடித்த துண்டுப் பிரசுரங்களையும் பெற்றுக் கொண்டமையைக் காட்டுகிறது.[21]

III

இந்த மிஷனரிகளின் கொள்கைகளையும் செயல்களையம் ஆராய்ந்தால் கிறித்துவோடு தொடர்புகொள்வதற்குக் கல்வி சிறந்த ஊடகம் என அவர்கள் கருதியிருந்தது புலப்படுகிறது. மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த வண. நைற் இலண்டனில் இருந்த சி.எம்.எஸ். இன் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார்:

> ''நாங்கள் மெல்ல மெல்லமாக கோஸ்பலின் போதனைகளை எல்லா இடத்துக்கும் எடுத்துச் செல்ல பாதை அமைத்துள்ளோம். நாங்கள் நிறுவிய எல்லாப் பாடசாலைகளிலும் எங்கள் நோக்கம் பலிதமாகிறது. பிள்ளைகள் ஊடாகப் பெற்றோரையும் நாங்கள் அணுகி வருகிறோம். சிறிது சிறிதாக இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எங்கள் செய்தியை அவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்போம். பாடசாலை மெதுவான ஆனால் உறுதியான விளைவை ஏற்படுத்தும். எங்கள் பற்றிய மக்களின் தப்பபிப்பிராயத்தைக் களைவோம்.''[22]

தமிழர்கள் மீது மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பில் கல்வி முக்கிய கருவியாக உள்ள தென்பதை ரென்னற் சுட்டிக்காட்டினார்:

> ''தமிழர்களின் விக்கிர ஆராதனை முறைமைகள் மீது மிஷனரிகள் மேற்கொள்ள எண்ணி இருக்கும் தாக்குதல் முதலில் கல்விச் செயல்பாடுகள் மூலமாகத்தான் நடைபெற வேண்டும். ஆயினும், ஒவ்வொரு கட்டத்தின்போதும் தெய்வீக அறிவுறுத்தல்களை மனதில் பதிந்திருக்க வேண்டும். கிறித்த உண்மைகளின் அடிப்படையில் நோக்கங்களை வரையறுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சாதாரண அவதானிப்பாளருக்கு இவைகள் சமயச் சார்பற்றதாகவும் தெய்வீகப் போதனைக்குப் பொருத்தமில்லாததாகவும் படலாம். ஆனால், இவை அவர்கள் மனத்தில் நிறைந்துள்ள ஐயத்தை நீக்கிப் புத்திசாதுரியமான பிராமணிய நம்பிக்கையைத் தானாகவே....''[23]

மிஷனரிகள் வழங்கிய கல்வியின் கிறித்தவப் பண்புகள் சந்தேகமற்றன. மிஷனரிகள் தங்களது நோக்கத்தையடைய,

a. சிங்களத்தையும் தமிழையும் போதனை மொழியாக்கினர்.

b. ஆங்கிலப் பாடசாலைகளை நடத்தினர்.

கோல்புரூக் ஆணைக்குழுவுக்கு அமெரிக்க மிஷனரிகள் வழங்கிய நினைவுக் குறிப்பில் தாங்கள் சுயமொழிப் பாடசாலைகளை ஆரம்பித்தது தமிழில் படிக்கக் கூடியவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்வதற்காகும் என்று குறிப்பிட்டனர்.[24] தமிழை அவர்கள் படிப்பித்தது இரண்டு நோக்கங்களுக்காகும்.

i. தமிழில் விரைவாகவும் அதிகமாகவும் வாசிப்பதன் தேவை.

ii. மொழிபெயர்ப்புகளினதும் அகராதிகளினதும் தேவை.

இந்தத் தேவைகளை அடைய மிஷனரிகள் அயராது உழைத்தனர். நாங்கள் தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் பங்களிப்புச் செய்த மிஷனரிகள் சிலரின் பெயர்களைக் குறிப்பிட முடியும். நைற்ஸ், ஸ்பௌல்டிங், வின்ஸ்லோ போன்றவர்கள் சிறந்த அகராதி ஆக்குநராகவும் கட்லர், கிறின் பிரபலமான மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கினர்.[25]

மிஷனரிக் கல்வி திட்டவட்டமான செயல்முறை கொண்டது. இலவச சுதேச மொழிப் பாடசாலைகள் கூடியோ குறைந்தோ நவீன தன்மை கொண்டிருந்தன. விடுதிப் பாட சாலைகளில் சேர்ந்த மாணவர்களில் கெட்டித்தனமானவர்களை விக்கிர ஆராதனை செய்யும் மாணவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தி வைத்தனர்.[26] இந்த நடைமுறையை முதலில் ஆரம்பித்தவர்கள் அமெரிக்க மிஷனரிமாராகும். காலகதியில் ஏனைய மிஷனரிகளும் இந்த நடைமுறையைப் பின்பற்றின. பெண்களுக்கான விடுதிப் பாடசாலைகளை மூன்று மிஷனரிமார்களும் ஆரம்பித்ததை இங்கு குறிப்பிடுவது அவசியமானது.

விடுதிப் பாடசாலைகளிலிருந்து அடுத்தபடி ''ஆங்கிலம் போதிக்கும் பாடசாலைகளை ஏற்படுத்துவது முக்கியமானதாக இருந்தது.[27] இங்கே நாம் அவதானிக்கக் கூடியது கல்வி, சமூக தொடர்பற்று மாறி வந்ததையாகும். எஜமான்களின் மொழியான ஆங்கிலத்தைப் படிப்பது மிகவும் ஆர்வமூட்டக் கூடியதாக மாறியிருந்தது. இதன் காரணத்தை ரொபின்சன் விளக்குகிறார்:

> ''ஆட்சியாளர்களின் மொழியை அறிவது பணம் படைத்தவராகவும் கௌரவம் மிக்க வராகவும் வருவதற்கு வழிவகுக்கிறது என்ற எண்ணத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தைப் படிப்பிக்க முனைந்தனர்.''[28]

இந்நிலையில் கல்வி கிறித்தவத்தோடு பிணைந்து நிற்கிறது. முதல் மணித்தியாலம் ஆங்கிலம் படிக்க ஒதுக்கப்பட்டது. தமிழ் - ஆங்கில பாடசாலைகளில் பைபிள் வாசிப்புக்கு நேரம் ஒதுக்கப்பட்டது. இதில் பங்குபற்றுவது மாணவர்களின் தேர்வைப் பொறுத்தது. எனினும் பெற்றோர் ஆங்கிலப் பைபிள் படிப்பது ஆங்கில மொழியைக் கற்பதாகக் கருதினர். அதனால் மாணவர்கள் பைபிள் பக்கங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டனர்.[29]

அமெரிக்க மிஷனரிகள் ''ஆங்கிலப் பாடசாலை மாணவர்கள் வருடாந்தம் கட்டணம் கட்டுவதைக் கட்டாயமாக்கியதோடு கிறித்தவ ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.[30] நெற்றியில் திருநீறு பூசியநிலையில் எந்தப் பிள்ளையும் பாடசாலைக்குள் அனுமதிக்கப்படவில்லை.'' ''நாளாந்தம் சப்பாத் என்னும் பொதுப்

பிரார்த்தனையில் அனைவரும் கலந்து கொள்வதோடு பைபிளை வாசித்துக் கிறித்தவத்தின் அடிப்படைத் தத்துவங்களை அறிந்திருக்க வேண்டும்''[31] என்றும் மாணவர்கள் எதிர் பார்க்கப்பட்டனர்.

மிஷனரிப் பாடசாலை முறைமையின் உச்சத்தில் வடமாவட்டத்தில் கல்லூரிக் கல்வியைச் சேர்ச் ஒஃப் இங்கிலாந்து நல்லூரில் ஆரம்பித்தது. பிற்காலத்தில் அது சுண்டிக் குளிக்கு மாறியது. அதனைத் தொடர்ந்து வெஸ்லியன் மிஷன் அதை யாழ்ப்பாணத்தில் நிறுவியது. அமெரிக்க மிஷன் வட்டுக்கோட்டையில் செமினரியை அமைத்துக் கொண்டது. இந்த மட்டத்துடன் கிறித்தவ மயப்பட்ட கல்வி முழுமை அடைந்தது. வட்டுக்கோட்டையில் ''இந்துக்களின் சின்னங்களை அணிந்திருப்பது ஒழுங்கு குற்றமெனக் கருதப்பட்டது.[32] இந்த நடைமுறை சமய சுதந்திரத்துக்கு எதிரானதாகக் கருதப்பட்டது. ஆயினும், இக்கட்டுப்பாடுகளுக்கு மாணவர்கள் பழக்கப்பட்டுப் போய் இருந்தனர்.''[33]

கோல்புரூக் ஆணைக்குழுவினரும் இங்கு நடைபெறும் கல்விச் செயல்பாடுகளால் கவரப்பட்டிருந்தனர். ''அமெரிக்க மிஷனரிகளும் பொதுவான கல்வி மொழியான ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதை மாணவர்களுக்குப் படிப்பிக்கின்றனர். அதை அறிதல் மக்களுக்கு பல வகைகளில் பயனளிக்கக் கூடியது.''[34] பிற்காலத்தில் பாட சாலை ஆணைக்குழுவின் கீழ்ப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. ஆயினும், சிறிது காலத்தின் பின் அரசாங்கம் ''மிஷன் பாடசாலைகள் நன்கு திட்டமிட்டு உருவாக்கப் பட்டவை. அவைகளோடு போட்டியிடத் தேவையில்லை. அரசாங்கப் பாடசாலைகள் மூடி அவைகளுக்குப் பதிலாக மிஷனரிகளுக்கு மானியம் வழங்கும் நடைமுறை பின்பற்றலாம் எனத் தீர்மானித்தது. அதன்படி ஒவ்வொரு சி.எம்.எஸ். பாடசாலைக்கும் வெஸ்லியன் மிஷன் பாடசாலைக்கும் 150 பவுணும் அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு 200 பவுணும் வழங்கியது. ஆங்கிலக் கல்வியின் பரவலுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக இந்தப் பணம் வழங்கப்பட்டது.''[35]

1848இல் பாடசாலை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக அரசாங்க அதிபர், வண. பார்சிவல், வண. யோண்சன், வண. கொஸிங்டன் ஆகியோர் இருந்தனர். அவர்கள் கத்தோலிக்கம், இந்து பாடசாலைகளுக்கு ஒரு நன்மையும் செய்யவில்லை.[36] இதனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் கல்விக்கு மிஷனரிமாரைச் சார்ந்து இருக்க வேண்டியதாயிற்று.

இந்த இடத்தில் கோல்புரூக் கொமிசன் பரிந்துரைத்த கல்வியின் பொருளாதார முக்கியத்துவம் பற்றி விவாதிப்பது முக்கியமானது. அவர்களின் நோக்கம், கல்வி மூலம் பொதுச் சேவைக்கு ஆட்களைத் தயார்படுத்தித் திரட்டிக் கொள்வதாகும்.[37] ரென்னற் கல்வி நிறுவனங்களில் முக்கியமாக அமெரிக்க செமினரி மாணவர்கள் அடைந்துள்ள பொருளாதார நலன்களைப் பற்றி ஆராய்ந்தார். அவர் கூறுகிறார், வட்டுக்கோட்டை செமினரியில் பயின்ற 600 மாணவர்களில் 400 பேர் வெற்றிகரமாகச் சித்தியடைந்தனர். அவர்களில் அரைவாசிப்பேர் கிறிஸ்தவர்கள். ''அவர்களில் பெரும்பான்மையினர் இலங்கையின்

மாவட்டங்களில் பொறுப்புள்ள பதவிகளில் உள்ளனர். அநேகரை மிஷனரியே ஆசிரியர் களாகவும் போதகராகவும் பாடவிதான மேற்பார்வையாளராகவும் அமர்த்திக் கொண்டது. இன்னும் சிலர் இவ்வாறான பதவிகளை இந்திய மிஷனரிகளில் வகித்தற் பொருட்டாக அங்கு அனுப்பப்பட்டனர். மற்றும் சிலர் இலங்கையின் அமெரிக்க மிஷன் மற்றும் சேர்ச் ஒஃப் இங்கிலாந்து மிஷனரிகளில் பலவகை உதவியாளர்களாகப் பணி புரிகின்றனர். சிலர் காலனித்துவ அரசாங்கத்தில் பலவகை அலுவல்களில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்.''[38]

ஆங்கிலம் படித்த தமிழர்களைப் பிராந்திய நிர்வாக சேவையில் முதலில் இணைத்துக் கொண்டவர் யாழ்ப்பாண அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பி.ஏ. டைக் (1829 - 1869) ஆவார்.[39] டைக்கின் காலம் வரை முக்கிய பதவிகள் போர்த்துக்கீச, டச்சு குடும்பங் களிலிருந்து வந்தவர்களுக்கே வழங்கப்பட்டு வந்தன. அரசாங்க உத்தியோகங்களும் ஆசிரியத் தொழிலுந்தான் வேலைவாய்ப்பென்று கூறமுடியாது. சட்டம் போன்ற தொழில் சார் படிப்புகளும் உள்ளன. கல்வித்திட்டத்தில் இரண்டாம் மூன்றாம் தரத்தில் உள்ளவர்களுக்கு ஆங்கிலம் போதிப்பது முக்கிய தொழிலாக மாறியிருந்தது.

மேற்குமயமாதலின் பரவுகைக்கு வேலைவாய்ப்பும் பங்களித்தது. மேற்கு நாடல்லாத ஒரு நாட்டில் மேற்குமயமாதல் மேற்குமய நிறுவனங்களின் கால் ஊன்றலையும் குறிக்கும். இலங்கையில் கிறித்தவம் சந்தேகமில்லாமல் மேற்குமயமாதலுக்குக் காரணமாகும். ஆனால், ஆங்கிலப் படிப்போ கிறித்தவர் அல்லாத வீடுகளுக்கும் அதைக் கொண்டு வந்து சேர்த்தது. மேற்குமயமாதலின் முக்கிய அம்சம் பொருளாதார அரசியல் அதிகார நடைமுறைகளில் பிரித்தானிய வகை நிறுவனங்களை அறிமுகம் செய்வதாகும். இது தொடர்ந்தது. மற்றப் பிராந்திய மனிதர்களைப் போல யாழ்ப்பாண மனிதனும் இந்தச் சவாலை எதிர்கொண்டான். அவனுக்கு ஆள்பவர்களின் சமயத்தைத் தழுவ அல்லது தழுவியது போன்று பாசாங்கு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது இது முதல் தடவை அல்ல. இது போன்ற நிலைமைகளைப் போர்த்துக்கீச, ஒல்லாந்தர் காலத்திலும் அவன் எதிர்கொண்டான். அப்போதைய நிலைமை இப்போதையும் விட கடுமையாக இருந்தது. நிர்வாகப் பதவிகளில் வேலை செய்தோர் இந்த அழுத்தத்துக்கு அதிகம் உட்பட்டனர்:

> ''புத்திசாலியான தமிழர்கள் மதம் மாறுவதில் உலகியல் நலன்களும் சமய நலன்களும் இருப்பதை உணரத் தவறவில்லை. கிறித்தவத்தின் போதகர்களும் மற்றும் அவர்களோடு இணைந்த அமைப்பினரும் தமது படிக்காத கிறித்தவர்களைவிட நல்ல நிலையில் இருப்பதையும் அவர்கள் காணத் தவறவில்லை.''[40]

அவர்கள் மதம் மாறியவர்போல பாசாங்கு செய்ததால் இரு தோற்றப்பாடுகளைப் பெற்றனர். அதாவது அவர்கள் ஒரே நேரத்தில் போலி கிறித்தவர்களாகவும் போலி இந்துக்களாகவும் தோன்றினர். இந்த பேருக்குக் கிறித்தவர்களாக இருப்பவர்கள் பற்றி ரென்னற் அதிகம் எழுதியுள்ளார். நாவலர் ஒரு இந்துவின் பார்வையில் இதையிட்டுப்

பெரிதும் கவலைப்பட்டார். இவ்வாறு மிஷனரி நடத்தைகளோடு பிணைக்கப்பட்டிருந்த ஆங்கிலக் கல்வி அவர்களின் அடையாளத்தைக் காப்பாற்றிக் கொள்ள பெரும் இடைஞ்சலாக இருந்தது.

பெண் கல்வியில் இந்த மூன்று மிஷனரிகளும் எடுத்த நடவடிக்கைகள் குறிப்பிடத் தக்கனவையாகும். என்ன இருந்தாலும் பாரம்பரிய நிலமானிய அமைப்பில் சராசரி இந்துப் பெண் எழுத்து வாசனை இல்லாதவளாகவே இருந்தாள். உயர்குலக் குடும்பப் பெண்கள் மாத்திரம் தங்கள் குடும்பத்தில் நிலவிய சூழ்நிலைகளால் படித்திருந்தனர். ஆனால், சராசரிப் பெண்கள் நாளும் பாடசாலைக்குச் சென்று கற்கக்கூடிய வாய்ப்பு சமூகத்தில் இருக்கவில்லை. பெண்கள் கல்வியில் மிகுந்த ஈடுபாட்டை அமெரிக்க மிஷன் காண்பித்தது. 1824இல் அவர்கள் பெண்களுக்கான விடுதிப் பாடசாலையை உடுவிலில் ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் அதில் சேர்ந்தவர்கள் கீழ் சாதியினரும் ஏழைகளுமாவர். காலம் போக ''மாவட்டத்தின் வசதியானவர்களினதும் செல்வாக்குள்ளவர்களினதும் பெண் பிள்ளைகளும் சேர்ந்தனர்.''[41]

1842இல் சி.எம்.எஸ். நல்லூரில் ஒரு பெண்கள் பாடசாலையை ஆரம்பித்தபோது பெண் பிள்ளைகளும் படிக்க வேண்டும் என்ற கருத்து எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தது. பெண் பிள்ளைகளைத் திரட்டுவதிலும் பார்க்க அவர்களின் கூச்சத்தைப் போக்குவது பாடசாலை நிர்வாகத்துக்குப் பெரும்பாடாக இருந்தது.[42]

இந்நிலைமைகளை நீக்க அக்காலத்தில் இருந்த ஆற்றல் வாய்ந்த தொடர்பு ஊடகமான அச்சு சாதனத்தை மிகுந்த தாக்கமுடன் மிஷனரிகள் கையாண்டனர். ரென்னற் குறிப்பிட்டது போல் அவர்கள் 'பிரத்தியேகமாகப் படித்தவர்களாகவும் சமய மனப்பான்மை கொண்டோ ராகவும் இருந்தனர்.'[43] நாங்கள் ஏற்கனவே கண்டதுபோல் தமிழ்ப் பொதுமக்களில் வாசிக்கும் தகைமை பெற்றோர் தொகையை மிஷனரிகள் அதிகரித்திருந்தது சாதகமான விளைவைத் தந்தது. அவர்கள் வெளியிட்ட பிரசுரங்கள் கிறித்தவத்தைப் புகழ்ந்துரைப்பதாக மாத்திரம் இருக்கவில்லை. அவைகள் இந்து சமயம் மீது பலத்த கண்டனத்தை வெளியிட்டன. படித்தவர்கள் பெருகி வந்த சூழ்நிலையில் இவ்வகை வெளியீடுகள் கடும் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக இருந்தன. இந்த நோக்கத்துக்காக மோனிங் ஸ்டார் என்ற பத்திரிகை யையும் அவர்கள் ஆரம்பித்தனர். அதன் ஆசிரியர்கள் உள்ளூரவர்களாக இருந்தார்கள். 1850இல் பத்திரிகை 700 சந்தாதாரர்களைக் கொண்டிருந்தது. அவர்களில் ஆறில் ஐவர் தமிழர்கள்.

அச்சு ஊடகங்கள் வெளிப்படுத்திய இணங்கவைக்கும் பாங்கு கல்வி கற்ற பிரிவினரைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் போன்றவைகள் சந்தேகமில்லாமல் இந்துக்களுக்கு ஒரு பாரிய சவாலாக இருந்தன.

மதம் மாற்றல் செயல்பாடு யாழ்ப்பாண இந்து பாரம்பரியச் சமூகத்தின் இருப்பை ஆட்டம் காண வைத்தது. இந்த விடயத்தில் வெஸ்லியன் மிஷன் மற்ற மிஷன்களுக்கு முன்னோடியாக உள்ளூர் மிஷனரிகளை அமைத்துக்கொண்டு செயல்பட்டது. மற்ற

மிஷனரி அவ்வாறு செய்து களத்தில் குதித்தன. வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த ரொபின்சன் கூறினார். ''உள்நாட்டு மிஷனரிகளின் பணிகளை மிகைப்படுத்த முடியாது.[44] இந்தியாவை ஆள விரும்பிய சிப்பாய்களுடன் அவர்களை ஒப்பிடலாம்.'' மதகுருக்கள் உயர் குடிப் பிறப்பாளர்களாக இருக்க வேண்டும் என்று கருதும் ஒரு சமூகத்தில் பக்தியையும் ஆன்மீக அறிவையும் அடிப்படையாகக் கொண்டு 'கடவுளின் மனிதர்கள்' நியமிக்கப்படும் நடைமுறை அவர்களுக்கு விநோதனமாக இருந்தது.

மிஷரிகள் கிறித்தவத்தைப் பரப்புவதற்கு விளக்கைக் கையிலேந்தி மாலையானதும் கிராமங்களுக்குச் சென்றனர். விளக்குக் கூட்டங்களில் விவசாய வேலையில் இருந்து ஓய்ந்திருந்தவர்களுக்குக் கிறித்தவக் கோட்பாடுகளை எடுத்துரைத்தும் பைபிளை வாசித்தும் காட்டினர். அவர்களைப் பல குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்பாக உபதேசி என்றொருவரை நியமித்தனர். அவர் அக்குழுவுக்குக் கிறித்தவத்தைப் பற்றி விளக்கினார். இதைவிட இன்னொரு உத்தியையும் மிஷனரிகள் கையாண்டனர். கிறித்தவத்துக்கு மாறிய பெண்களை மாறாதவர் வீடுகளுக்கு அனுப்பினர். அவர்கள் அவ்வீடுகளில் காணும் அவல நிலையைக் கண்டு கவலைப்பட்டு அவைகளைப் போக்கிக் கொள்ள கிறித்தவத்தக்கு மாறுவதே பொருத்தமான வழியென்று கூறி அவ்வீட்டுப் பெண்களைத் தெண்டித்தனர்.[45] அப்போது அவர்கள் இந்து தெய்வங்களை இழித்துரைத்தனர்.

IV

இந்துக்களின் மீதும் இந்துக்களின் மீதும் இந்து மதத்தின் மீதும் இச்சூழ்நிலைகள் வற்புறுத்திய தாக்கம் என்ன? கடைசியாகக் குறிப்பிட்டது பதிப்பை ஏற்படுத்தவில்லை என்று ஒருவர் கூறமுடியாது. கல்வியையும் எழுத்தறிவையும் அவ்வாறு கருத முடியாது.

பாரம்பரிய இந்து வழிபாடு, சடங்கு சம்பிரதாயங்கள் பிரதானமாகக் கிராமப் புறங்களில் கல்வி அறிவை வேண்டி நிற்கவில்லை. வழிபடுபவர் எந்தப் புனித நூலையும் வாசிக்க வேண்டிய தேவை இல்லை.

காலப்போக்கில் இன்னொரு வளர்ச்சியும் ஏற்பட்டது. தமிழைக் கையாள்வதில் மிஷனரிகளுக்கேற்பட்ட தேர்ச்சியால் தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் தமக்கும் பங்கு உள்ளது என்றனர். தமிழ் புதிய சமயத்தை உள்வாங்கிக் கொண்டமையால் தமக்கும் ஒரு பாரம்பரியம் உள்ளதென்றனர். அதனைத் தமிழும் அதன் இலக்கியமும் ஒதுக்கிவிட முடியாது.[46]

காலப்போக்கில் சாதி அமைப்புக்கு எதிரான செயல்பாடுகள் தீவிரம் பெற்றன. மிஷனரிகள் தமது சமயத்தைச் சாதிப் பிரிவினை ஊடாக முன்னெடுக்க முனைந்தனர். கல்வியில் முக்கியமாகப் பாடசாலைகளில் சாதி பல பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. இந்தப் பிற்போக்கான நிலைமையைக் கத்தோலிக்க சேர்ச் கரையார் தொடர்பில் பயன்படுத்தியதுபோல் மற்றக் கிறித்தவ பிரிவுகள் பயன்படுத்தவில்லை. அமெரிக்க மிஷன் சில விதிவிலக்குகளைத் தவிர உயர்சாதி மாணவர்களைக் கொண்டிருந்தது.

வெஸ்லியன் மிஷனும் மிகக் குறைந்த சாதி மாணவர்களையே தம் பாடசாலைகளில் கொண்டிருந்தன. மிஷனரிகள் இந்தச் சமூக யதார்த்தத்தை உணர்ந்து உள்ளூர் சமூகத்தைக் கையாண்டன என்று சொல்ல வேண்டும். இருந்தபோதிலும் சாதி அமைப்புக்கு எதிரான ஒரு சமூகத்தை நோக்கி மிஷனரிகள் இயங்கின.

யாழ்ப்பாண இந்து சமூகம் மிஷனரிகள் ஏற்படுத்திய பாரிய சவால்களை இந்து சமய நோக்கில் ஆராய்வது அவசியமானது.

இந்தச் சமூகம் இவ்வாறான நிலைமைகளை முதல் தடவையாக எதிர்கொள்ள வில்லை. இவ்வாறான நிலைமைகள் போர்த்துக்கீசர் காலத்தில் இருந்து தொடர்ந்து வருகின்றன. அவர்கள் கடும் நடவடிக்கை எடுத்தபோதும் இந்து சமூகத்தில் 'பேசக் கூடியோர்' மதம் மாறவில்லை. இந்த நிலைமை டச்சு காலத்திலும் தொடர்ந்தது. அரசாங்க உத்தியோகங்களை அவர்கள் கிறித்தவர்களுக்கு மாத்திரமே வழங்கினர். யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களின் தனிப்பட்ட நம்பிக்கை எதுவாகிலும் அவர்கள் பேருக்காகக் கிறித்தவர்களாக இருக்க வேண்டிய நிலைப்பாடு காலகதியில் ஏற்பட்டது. பிரித்தானியர் ஆட்சியில் நிலைமை பரவாயில்லை. வற்புறுத்தல்கள் இருக்கவில்லை. ஆயினும் பாரம்பரிய உயர் குலத்தைச் சேர்ந்தவர்கள் கிறித்தவத்துக்கு மாறி தங்களது அதிகாரத்தையும் கௌரவத்தையும் தங்க வைத்துக் கொள்ளலாம் என்ற ஆசைக்கு ஆளாகினர்.

பிரித்தானிய அரசு வழங்கும் பதவிகளைக் கைப்பற்றிக்கொள்ள அவர்களின் வர்க்க உணர்வு தூண்டியது. ''கொய்கமவும் மற்ற முக்கிய சாதிகளும் வழக்கம், மற்றும் தப் பெண்ணங்களுக்கு ஆட்பட்டிருந்த போதிலும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவும் மற்றச் சாதிகள் அதைப் பெறுவதைத் தடுக்கவும் எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் தயாராக இருந்தனர்.'' கோல்புறூக் இதனை இவ்வாறு குறிப்பிட்டார்:

> ''தங்களது உயர்தரத்தைத் தக்க வைத்துக் கொள்ள அவர்கள் முயன்றனர். அரசாங்கமும் உயர்சாதியினருக்குப் பிரதானமாக வெள்ளாளருக்கு சாதகமாக இருப்பதாகப் பாசாங்கு செய்தது.''[47]

அரசாங்கமும் மிஷனரியும் வழங்கிய வேலைவாய்ப்பும் வசதிகளும் உயர்வர்க்கம் இது காலவரை அனுபவித்துக் கொண்டிருந்த மேன்நிலைக்கு ஓர் அடிகொடுத்தன. மேலும், இவ் வர்க்கத்தின் பண்பாட்டு அடித்தளமும் கேள்விக்கு உள்ளாகியது. இம் மாற்றங்களைத் தடுக்கும் தலைவன் இந்த வர்க்கத்தின் நிலைப்பாட்டை எடுப்பது தவிர்க்க முடியாதது.

யாழ்ப்பாண உயர் சமூக வர்க்கத்தில் இன்னொரு வரலாற்று செயல்பாடு வெளிப்பட்டது. பாரம்பரிய யாழ்ப்பாண சமூகத்தில் உயர் அடுக்குத்தான் பேசக்கூடியது. அதுதான் அதன் சமய - பண்பாட்டு பாரம்பரியத்தைப் பிரதிபலித்தது. இவ்வர்க்கத்தினர் பொருளாதாரம் பிழைப்பூழியம், விவசாயம் என்பனவற்றில் தங்கி இருந்தனர். அவர்களது மேன்நிலையை சமய - பண்பாட்டுச் செயல்பாடுகள் உறுதிப்படுத்தின. பேங்கின் அவதானிப்பு வருமாறு:

''மொத்த அமைப்பும் வெள்ளாளரை மையப்படுத்தி அமைந்தது. மற்றச் சாதிகள் எல்லாம் அவர்களின் சேவையாளராகவும் பரிவாரங்களாகவும் இயங்கினர். இந்தச் சித்திரத்தில் வராதவர்கள் செயலில் இல்லாதவர்களாகவும் (உதாரணம் - மீன் பிடிச் சாதிகள்) அல்லது சமூக மாற்றம் காரணமாக விலகிப் போன சாதிகளாகவும் (உதாரணம் - கைவினை சாதிகள்) கணிக்கப்பட்டனர்.[48] சமூக மற்றும் பொருளாதார மேலாதிக்கமே இவ்வகையில் இயங்கியது. இம்மேலாதிக்க உணர்வே பாரம்பரிய சமய பண்பாட்டு மாற்றத்தை உயிர்ப்புடன் எதிர்த்தது. கத்தோலிக்கர்களின் வெற்றி வெளிப்படுத்துவது என்னவென்றால் இந்து சமயப் பாரம்பரியம் சமூகத்தின் எல்லா மட்டத்திலும் பேணப் படாமல் இருந்தது என்பதாகும். ஒரு சமூகத்தின் சமூக பண்பாட்டு பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் வரலாற்று காரியத்தைப் புரிபவர்கள் உயர்சாதியினர் ஆவர்.''

தவிர்க்க முடியாத அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களூடே அதாவது சகலதையும் தழுவி நடந்த மேற்கு மயமாதலூடே தங்கள் முதன்மையையும் அடையாளத்தையும் காப்பாற்ற அவர்கள் முனைந்தனர். அந்த வர்க்கம் அதற்குரிய வலிமையையும் வரலாற்று அனுபவத்தையும் கொண்டிருந்தது. தனது செயல்முறைகளால் தான் புரிந்துள்ள வழியில் இந்தக் காரியத்தை அது நிகழ்த்தியது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வரமராச்சிப் பிரிவில் உள்ள உடுப்பிட்டியில் கிறித்தவமய கல்விக்கு முதல் எதிர்வினை ஏற்பட்டது. அங்கே பாரம்பரிய இந்து சமய பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்ட பாடசாலை ஒன்று அருளம்பல முதலியாரால் அமைக்கப்பட்டு பத்தாம் வகுப்புவரை 96 மாணவர்களைக் கொண்டு இயங்குகிறது என்று 1841.10.21ஆம் திகதிய உதயதாரகை குறிப்பிடுகிறது.[49] நாவலர் வரலாற்றில் காணப்படும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள காலம் சென்ற எம். இராமலிங்கத்தின் பங்களிப்பு உதவுகிறது. அந்தப் பாடசாலை 1840 ஆரம்பிக்கப்பட்டது எனக் கருதப்படுவதை இராமலிங்கம் மறுக்கிறார். அப்பாடசாலையைப் புகழ்ந்துரைக்கும் பாடல் ஒன்றை அவர் 1844.07.26ஆம் திகதிய உதயதாரவையில் கண்டுபிடித்தார். அப்புகழுரையில் சொல்லப்பட்டவைகளை அப்பாட சாலை நான்கு ஆண்டுகளில் எய்திருக்க முடியாது என்றும் அது 1835 - 1840 ஆண்டு களுக்கிடையில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க மிஷனரிகளின் நடவடிக்கைகளுக்கு உடுப்பிட்டி மையமாக இருந்தது என்பதை நாம் மறக்கக் கூடாது.[50] ஏற்கனவே அங்கு ஒரு ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 1842.12.01ஆம் திகதிய உதய தாரகை அருளம்பல முதலியார் அப்பாடசாலைக்கு ஒரு துண்டுக் காணி வழங்கியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது.[51] 1842இல் வண்ணார்பண்ணையில் நிறுவப்பட்ட சமய பாடசாலைத் தொடர்பில் மிஷனரிமார் இந்து சமயம் மீதான தாக்குதலை முடுக்கி விட்டனர். இந்தப் பாடசாலையை அமைப்பதில் செட்டி சமூகம் முன்னின்றது. அதைத் தொடர்ந்து மற்றச் சமூகத்தவர்களும் இணைந்து கொண்டனர்.[52] இந்தப் பாடசாலை வேதாகம பாடசாலை எனப்பட்டது. இதை அமைப்பதற் கான ஆலோசனைக் கூட்டம் 30.09.1842இல் கூட்டப்பட்டது. 1842.10.22ஆம் திகதி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டோர் இந்து சிறார்கள்

கிறித்தவ பாடசாலைகளில் படிப்பதால் இந்து சமயத்துக்கு ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைத்தனர். இந்து சமயத்தை இந்துக்களுக்குப் படிப்பிப்பதற்குரிய கல்வி நிலையங்கள் இல்லாமையையிட்டு விசனப்பட்டனர்.[53] இப்பாடசாலை நிறுவப்பட்டதற்கு மிஷனரிமார்களின் எதிர்வினையைக் கொண்டு நாங்கள் ஒரு நடுநிலைப் பார்வையைப் பெற்றுக் கொள்ளலாம். வெஸ்லியன் மிஷனரியைச் சேர்ந்த ரொபின்சன் 1867இல் இதைப் பற்றி எழுதினார்:

> "1842 அளவில் வண்ணார்பண்ணை உயர்ந்தோர் குழாமும் அவர்களைச் சேர்ந்தவர்களும் மிஷனரிகள் வெளியிட்ட கருத்துகளையிட்டு மன நிம்மதியின்றி இருக்கின்றனர். பொதுமக்களிடம் இப்போது கிறித்தவம் தனது பிடியைப் பலப்படுத்தி வருகிறது. அது சாதிப் பிடியிலிருந்து மக்களை விடுவித்துள்ளது. அவர்கள் பாரம்பரியத்தில் வந்தவர்களை விடத் திறமையில், ஒழுக்கத்தில், கல்வியில் சிறந்தவர்களாக விளங்குகின்றனர்."[54]

ஏறக்குறைய 20 வருட மிஷனரி செயல்பாடுகளால் 1840 வாக்கில் கணக்கிட முடியாத விளைவுகள் உருவாகி இருந்தன. இவைகளுக்கு எதிராக இந்துக்கள் தம்மை ஒழுங்குபடுத்திக் கொண்டனர். ஆனால், பாரம்பரிய முறைப்படி தமிழ் படிப்பிக்கும் ஆசிரியர்கள் இவைகளைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை.[55]

V

ஒருங்கிணைந்த சவாலும் தாக்கமான எதிர்ப்பும் ஆறுமுகநாவலரின் இயக்கத்தில் இருந்து மிஷனரிகளுக்கு வந்தன. இது கிறித்தவம் விடுத்த சவாலுக்கு நாவலரின் பதிலடி என்று இந்துக்கள் சொல்லிக் கொண்டனர்.[56]

ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆராய்ச்சியாகப் பணிபுரிந்த பி. கந்தப்பிள்ளையின் (1766 - 1842) இளைய மகனாவார். கந்தர் எனவும் அழைக்கப்பட்ட கந்தப்பிள்ளைக்குப் டச்சு, போர்த்துக்கீஸ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் தெரிந்திருந்தன. ஆறுமுகத்தின் சகோதரர்கள் நல்ல நிலையில் இருந்தனர். மூத்தவர் தியாகர் நொத்தாரிஸாகவும் இரண்டாமவர் சின்னத்தம்பி உடையாராகவும் நான்காமவர் பரமானந்தர் நொத்தாரிஸாகவும் அடுத்தவர் மக்களால் ஆராய்ச்சி தம்பர் என மதிப்புடன் அழைக்கப் பட்டவராகவும் இருந்தனர்.[57] மாறிய சூழலில் கிடைத்த வேலைவாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தமது வைதீக பிடியையும் தக்க வைத்துக்கொண்ட குடும்பம் ஒன்றிலிருந்து நாவலர் வந்தார். அதனால் அவர் தனது குடும்பப் பின்னணியில் இருந்து பிரித்தானிய நிர்வாகம் வழங்கிய வாழ்க்கை உயர்வையும் தான் பெற்ற கல்வியால் மிஷனரிகள் முதன்மையைக் கல்வியால் ஈட்டி இருப்பதையும் கண்டுகொண்டார்.

நாவலரின் வாழ்க்கையைக் காலவரிசைப் படுத்திக் கொள்வது முக்கியமானது:

1822 - 1834 குழந்தைப் பிராயம் தமிழ் ஆசிரியர்களிடம் ஆரம்பக்கல்வி.

1834 - 1847 கிறித்துவ அமைப்புகளில் சேர்ந்து முதலில் மாணவராகவும் பின்னர் ஆசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் செயல்படல்.

1848 - 1864 மிஷனரி நடவடிக்கைகளை எதிர்த்து சமய கல்வி செயல்பாடுகளை மேற்கொள்ளல். இந்தியாவுக்கு அடிக்கடி போய் வரல்.

1864 - 1870 தென்னிந்தியா.

1870 - 1879 இலங்கைக்கு மீளல். யாழ்ப்பாணத்தில் சமூக பொருளாதார அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடல்.

அக்காலத்தில் இருந்த தமிழ் அறிஞர்களிடம் நாவலர் இந்து சமயம், தமிழ் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். 1834இல் ஆங்கிலக் கல்விக்கு அவர் வெஸ்லியன் மிஷன் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அவ்வாண்டில் அப்பாடசாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாகத் தரமுயர்த்துப்பட்டு அதன் அதிபராக வண. பார்சிவல் நியமிக்கப் பட்டிருந்தார். அங்கு இருந்த சட்டாம்பிள்ளை நடைமுறையால் நாவலர் கீழ்வகுப்புக்குத் தமிழ் படிப்பிக்கவும் உயர் வகுப்பில் ஆங்கிலம் பயிலவும் முடிந்தது.

1841இல் நாவலர் பார்சிவல் வழங்கிய பைபிள் உதவி மொழிபெயர்ப்பாளர் என்ற பதவியை ஏற்றுக்கொண்டார்.[58] ஆயினும், நாவலர் பிரதான உதவி மொழி பெயர்ப்பாளராகச் செயல்பட்டார். நாவலரைப் பற்றி ரொபின்சன் ''வியாசம் மற்றும் செய்யுள் நூல்களைப் பதிப்பிப்பதிலும் பிரார்த்தனை நூல்கள் எழுதுவதிலும் புனித பைபிளை மொழிபெயர்ப்பதிலும் தகைமை வாய்ந்த உதவியாளர்'' என்று பாராட்டி உள்ளார்.[59] காட்மன் ''இக்காலத்தில் நாவலரால் பல கிறித்த மதம் சார்ந்த குறுநூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு இந்துக்களிடையே விநியோகிக்கப்பட்டன'' என்று கூறுகிறார்.[60] பார்சிவலுடன் அவரது உறவு ராஜிநாமா செய்த பின்பும் உள்ளன்புடன் தொடர்ந்தது. இராமலிங்க சுவாமிகளுக்கு எதிரான வழக்கில் பார்சிவலின் நற்சாட்சிப் பத்திரம் நாவலருக்கு ஒரு சான்றாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

பார்சிவலிடம் நாவலர் பணிபுரிந்தமையால் அவரால் கிறித்தவர்களின் பிரசார உத்தி களையும் முறைமைகளையும் தெளிவாக அறிந்துகொள்ள முடிந்தது. மொழி பெயர்ப்புப் பணி கிறித்தவ இறையியலை ஆழமாகப் புரிந்து கொள்ள உதவியது. மெதடிஸ்டுகளின் தூய்மை வாதத்தால் நாவலர் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அதன் வழியில் நாவலர் தனது கல்வி, சமய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தினார். அதன் அடிப்படையில் இந்து சமய பாடசாலையையும் இந்து சமயத்தையும் நெறிப்படுத்தினார். இருந்தபோதிலும் பார்சி வலின் கீழ் வேலை செய்த காலப் பகுதியில் கிறித்தவ கருத்தியலையும் நடைமுறையையும் நாவலர் பூரணமாகப் புரிந்து கொண்டார் என்று கொள்ள முடியாது.[61] அக்காலத்தில் நாவலர் கிறித்தவத்திற்கு மாற இருந்த இரு தமிழ்க் கல்விமான்களைத் தடுத்ததாகச் சொல்லப்படுகிறது.[62] 1846இல் அவர் சைவம் தமிழ் இரண்டையும் தனிப்பட்ட வகையில் படிப்பித்து வந்தார். 1847 டிசம்பரில் இருந்து வண்ணார்பண்ணை சிவன் கோயிலில், பின்னேரங்களில் பிரசங்கம் செய்யத் தொடங்கினார். பார்சிவலிடமிருந்து விலகுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் 1848 செப்டம்பரில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தோற்றுவித்தார்.

இந்த நிகழ்வுகளின் போக்கு நாவலர் மெல்ல மெல்ல தன்னை இந்து சமயத்தைப் பாதுகாக்கவும் புத்துணர்வூட்டவும் அர்ப்பணித்துக் கொண்டார் என்பதைக் காட்டுகின்றன. அவர் பெற்றிருந்த கிறித்தவத்தின் பாதிப்புகள் அவரது 'மிஷனரி' வேலைகளை நோக்கும் போது தெளிவாகத் தெரிகிறது. தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணம் பிசப்பாக இருந்த சபாபதி குலேந்திரன் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> ''பைபிள் மொழிபெயர்ப்பு வேலையில் நாவலர் ஈடுபட்டது கிறித்தவத்தைவிட சைவத் தின் மீது செல்வாக்குச் செலுத்தியதென்பது விநோதமான ஒன்றாகத் தோன்றலாம். கிறித்த மிஷனரி வேலைகளை நாவலர் அறிந்திருந்தது. நவீன சூழ்நிலைகளில் ஒரு சமயத்தை முன்னெடுக்க உதவியது. அவரின் இலக்கிய ஈடுபாடு தென்னிந்தியத் தொடர்பை அவருக்கு ஏற்படுத்தித் தந்தது. பார்சிவலின் கல்லூரியில் அவரின் சேவையும் உத்தேச பைபிள் பதிப்பும் பெறுமதியான பணிகள். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் மிக்க ஊக்கமுடன் அவர் முன்னெடுத்த சைவ மறுமலர்ச்சிப் பணி 1879இல் அவரின் இறப்புடன் தான் ஓய்ந்தது.''[63]

கிறித்தவம் பரவுகைக்கு எதிரான செயலோடும் சைவத்தை நிலைநிறுத்தும் பணியோடும் சம்பந்தப்பட்டே நாவலரின் முழுக் காரியங்களும் இருந்தன. அவர் செய்த பல்வேறு பணிகளும் இவற்றில் ஏதாவது ஒன்றுடன் அல்லது இரண்டுடனும் சம்பந்தப்பட்டன.

நாங்கள் ஏற்கனவே பார்த்தபடி இச்செயல்பாடுகள் மூன்று முக்கிய கட்டங்களைச் சேர்ந்தன. அவை 1848 - 1864, 1864 - 1870, 1870 - 1879.

முதல் கட்டத்தில் (1848 - 1864) நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையைப் புதிய இடத்துக்கு மாற்றினார். (1849) அப்பாடசாலைக்கு நிதி திரட்டுவதற்காக இந்தியாவுக்குச் சென்று அச்சியந்திரம் ஒன்று வாங்கி வந்தார். முதலில் அவ்வச்சு இயந்திரத்தை நல்லூரில் நிறுவினார். பின்னர் அதை வண்ணார்பண்ணைக்கு மாற்றினார். கிறித்த சமயத்தை எதிர்த்தும் இந்துக் கோயில்களில் நடைபெறும் பொருத்தமில்லாத சடங்கு சம்பிரதாயங்களைக் கண்டித்தும் துண்டுப் பிரசுரங்களையும் குறு நூல்களையும் வெளியிட்டார். தனது பாடசாலை மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களை எழுதி வெளி யிட்டார். முக்கிய இலக்கிய இலக்கண நூல்களைப் பதிப்பித்தார். தனது வாழ்வைச் சமயப் பணிக்காக அர்ப்பணித்து 'நிர்வாண தீட்சையை'ப் பெற்றுக் கொண்டார். (நாவலர் என்னும் பட்டம் அவருக்கு இந்தியாவில் 1845இல் வழங்கப்பட்டது).

இரண்டாவது கட்டத்தில் நாவலரைப் பல கோயில்களிலும் மடங்களிலும் இணைத்துக் கொண்டு செயல்படுபவராகப் பார்க்கிறோம். (சைவப் பாரம்பரியத்தில் புனிதத்திலும் புனிதமான கோயில் இருக்கும் இடம் சிதம்பரமாகும்) இவற்றைவிட நூல்களைப் பதிப்பித்தும் வசன நடை நூல்களை எழுதியும் வெளியிடுபவராகவும் அவர் தோன்றுகிறார்.

நாவலரின் வாழ்க்கையின் இறுதிக்கட்டம் மிக முக்கியமானது. ஏனென்றால் இக்காலத்தில் நாவலர் இராமலிங்க அடிகளாரைப் பின்பற்றுபவர்களோடு முரண்படுகிறார்.

பின்னவரின் பாடல்கள் நாற்குரவர்களில் முதல் மூவரின் பாடல்களுக்குச் சமமானவை என்ற அவர்களின் கருத்தைப் பலமாக எதிர்க்கிறார்.

நாவலரின் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் அவரின் பணிகள் ஆய்வறிவு பூர்வமாக மாறியும் விரிவடைந்தும் உள்ளதைக் காண்கிறோம். அவர் வட இலங்கையின் சமூக, அரசியல் செயல்பாடுகளில் ஆழமான ஈடுபாடு கொள்கிறார். அவைகளின் சுருக்கமான விபரம் வருமாறு:

நாவலர் ஆங்கிலப் பாடசாலை ஒன்றை 1872ஆம் ஆண்டு ஆரம்பிக்கிறார். 'யாழ்ப்பாண சமய நிலை' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுச் சைவத்தை மீளமைப்புச் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். 1876இல் பஞ்சமும் கொலராவும் மக்களைத் தாக்கியபோது நிவாரணப் பணிகளை முன்னெடுக்கிறார். கந்தளாய்ப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்காக முதலீட்டாளர்களை ஊக்குவித்து யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை விவசாயக் கம்பனியை ஆரம்பிக்கத் துணை நிற்கிறார். யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் டபிள்யூ.சி. வைனமின் நடவடிக்கைகளுக்கெதிராக ஆளுநருக்கு (1878) சேர். முத்துக் குமாரசாமியின் இறப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட தமிழ்ப் பிரதிநிதி வெற்றிடத் துக்குப் பொன்னம்பலம் இராமநாதனை நியமிக்கும் படி வேண்டிக் கடிதம் எழுதுகிறார்.

நாவலர் பற்றிய வழமையான தமிழ் ஆய்வாளர்கள் அவர் சைவத்துக்கும் சைவ மக்களுக்கும் பெரும் தொண்டாற்றினார் என்ற பாணியில் எழுதுவது வழக்கம்.[64] அவர்கள் தெய்வீக அருள் பெற்ற தலைவர் என்று அவரைப் பூசிக்கின்றனர். தமிழ்மொழி இலக்கியம், சைவக்கல்வி மற்றும் தமிழ் வசனம் (சைவ சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தோர் அவரைத் தமிழ் வசன நடையின் தந்தை என்று அழைப்பர்) ஆகியவற்றுக்கு அவர் செய்த பணிகள் தனித்துவமானவை எனக் குறிப்பர். மேலும் சைவ நடைமுறையில் உள்ள சீர்கேடுகளை அவர் களைந்தார் எனவும் கூறுவர்.[65]

இந்த வைதிக நோக்குடையோர் அவரின் சமூக அரசியல் செயல்பாடுகள் பற்றியும் அவரின் தேசிய முக்கியத்துவம் பற்றியும் அக்கறை கொள்வதில்லை. முற்போக்க எழுத்தாளர் சங்கம் இலங்கைக்கான தமிழ் இலக்கியம் என்ற பிரத்தியேக அடையாளத்தை முன்னெடுத்த பின்னர்தான் இது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது.[66]

இந்த நோக்கத்துக்காக நாவலரின் செயல்பாடுகள் பின்வரும் தலைப்புகளில் ஆராயப் படுகிறது. கல்வி, சமய, கிறித்தவ இந்து செயல்பாடுகள், சமூக அரசியல் நடவடிக்கைகள். இவைகள் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டவை அல்ல. ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. ஆயினும் இந்த வகையில் பிரிப்பது எங்களுக்கு கிறித்தவ மயமாக்கலுக்கும் மேற்கு மயமாக்கலுக்கும் எதிரான இந்துக்களின் எதிர்வினையை மதிப்பீடு செய்ய இலகுவாகிறது.

ஆனால், இந்த ஒவ்வொரு நடவடிக்கையையும் அலசுவதற்கு முன் நாவலரின் இந்து சமயம் பற்றிய கோட்பாடுகளையும் அவர் இயங்கிய சூழலின் இயல்புகளைப் பற்றியும் தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமானது.

நாவலரின் இந்து சமயம் பற்றிய நோக்கை அறிந்து கொள்வதற்கு அவர் கிறித்துவத் தின் தாக்குதலிலிருந்து சைவத்தை மீட்க முன்வைத்த வாதங்களிலும் சைவ சமய அடையாளங்கள் சிலவற்றை ஒழுங்கற்றதெனவும் பாரம்பரியத்துக்கு மாறாதெனவும் கண்டித்தபோது முன்வைத்த விளக்கங்களிலும் காணலாம்.[67] ஆயினும் இவை உய்ந்துணர்வு முறை சார்ந்தவை. நற்பேறாக எங்களுக்கு மூன்று கட்டுரைகள் வாய்த்துள்ளன. அவை சைவ சமயி, அனாசாராம் (இழிநடத்தை) மற்றது சைவ சமயம் என்பன. இவைகளைக் கொண்டும் அவரின் இந்து சமயம் பற்றிய அவரின் கோட்பாட்டை நேரடியாக அறியலாம்.[68]

அவரின் சைவ நோக்கு இலட்சியவாத அடிப்படையிலானது. அவர் சைவ சித் தாந்தத்துடன் இணைந்த சைவராக இருந்தார். ஆகம பாரம்பரியத்தில் வரும் சடங்கு சம்பிரதாயங்கள் இன்றியமையாததென அவர் கருதினார். அவை பெரு மரபு சார்ந்தவை. சிறு மரபில் காணப்படும் எல்லா நடைமுறைகளையும் கண்டு அவர் முகம் சுளித்தார். அவைகளின் பாதிப்பால் சமூகத்துக்குப் பெருங்கேடு சூழ்கிறதென்றார். இந்து சமய திருவிழாக்களில் இடம்பெறும் இசை, நடன நிகழ்ச்சிகளையும் தீப்பந்தம் சுழற்றல் போன்ற விளையாட்டுக்களையும் அவர் வெறுத்தார். ஆகமங்களில் சொல்லப்படுபவைகளை மாத்திரம் அனுமதித்தார். அவர் கோயில்களில் காணப்படும் சிருங்கார பாணி சிற்பங் களையும் ஓவியங்களையும் நீக்குமாறு சைவர்களிடம் வேண்டிக் கொண்டார்.[69]

இப்பார்வை சமயம் பற்றிய தூய்மைவாத நோக்காகும், இந்த நோக்கு அவர் பதினான்கு வருடங்கள் இணைந்து செயல்பட்ட மெதடிஸ்டுகளுடையதாகும். இந்த வகையில் தூய இந்து சமயத்தை அவர் வேண்டி நின்றார்.

திருவிழாக்களைத் தவிர்க்குமாறு அவர் மக்களை வேண்டிக் கொண்டது. அவைகளால் ஏற்படும் முறை கேடுகளை வைத்து மிஷனரிகள் இந்து சமயம் மீது தாக்குதல் மேற்கொள்வதைத் தடுப்பதற்காகும்.

பெருமரபு நூல்களில் சொல்லப்படும் சாதி ஒழுங்கை அவர் அனுமதித்தார். இந்த வகையில் அவர் சாதியமைப்பைத் தாங்கி நின்றார். அதைத் தனது நூல்களில் குறிப்பிட அவர் தயங்கியதில்லை. பாரம்பரிய சாதி நடைமுறையைக் கடைப்பிடிக்குமாறு நாலாவது பாலபாடத்தில் எழுதினார்.[70] பெரியபுராண சூசனத்தில் சமய முக்கியத்துவமுடைய திருநாளைப் போவார் (நந்தனார்) சரித்திரம் வருகிறது. அதில் சாதிமுறைளைப் பாதிக்காமல் மக்கள் சிவனை வணங்குதல் வேண்டும் என்று போதித்தார்.[71] நாவலரின் மொத்த எழுத்து களையும் ஆராய்ந்தால் பல இடங்களில் சாதி அடுக்கில் கீழ்ப்படியில் உள்ளவர்களை அவர் மரியாதைக் குறைவாகக் குறிப்பிட்டுள்ளமை புலனாகும்.[72] நாவலரைப் பொறுத்த வரையில் ஓர் இலட்சிய சைவ சமூகத்தில் கீழ் சாதியினர்க்கு உயர் சாதியினரின்

அந்தஸ்த்தில்லை. இந்துக்களைப் படிப்பிக்க அவர் வைத்திருந்த திட்டத்தில் வெள்ளாளர் அல்லாதவர்களுக்கு இடமில்லை. அவருடைய கல்வி நிறுவனத்தில் குறைந்த சாதியின ருக்கு ஓர் இடமும் இருந்ததில்லை.

இந்த இடத்தில் யாழ்ப்பாண இந்து சமூகம் தொடர்பான ஒரு சமூகவியல் உண்மையைச் சொல்வது பொருத்தமானது. பிராமணர்கள் சடங்காசாரத்தில் வெள்ளாளரை விட உயர்ந்த வர்களாக இருந்தாலும் உலகியல் நடைமுறையில் அவர்களுக்குக் கீழ்நிலையிலேயே வைக்கப்பட்டனர்.[73] பெரு மரபு பற்றிய அறிவில்லாத பிராமணர்களை நாவலர் கடுமையாகக் கண்டித்தார். இவ்வாறு அவர் உயர்சாதிகளின் முன்னேற்றம் மற்றும் நன்நடத்தை பற்றி மிகுந்த கரிசனை கொண்டிருந்தார்.

19ஆம் நூற்றாண்டு இந்து மீட்புவாத செயல்பாட்டாளர்களோடு தீண்டத் தகாதவர் களையும் குறைந்த சாதியினரையும் நீக்க வேண்டும் என்ற நாவலரின் இந்து சமூக கொள்கை ஒப்பீட்டுக்கு உரியதல்ல. பிரம சமாஜம் ஆங்கிலக் கல்வி பயின்ற சமூகத்தின் உயர் அடுக்கைச் சேர்ந்தவர்களின் இயக்கமாக இருந்தபோதிலும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கான திட்டம் ஒன்றைக் கொண்டிருந்தது.[74] நாவலரிடம் அப்படியான திட்டம் ஒன்றுமில்லை. ஆரிய சமாஜம் சதி ஒழிப்பு இயக்கத்துக்கு ஆதரவளித்துக் கீழ்ப் படியிலிருந்தும் தீண்டத் தகாதவர்களிடம் இருந்தும் கிறித்தவம், இஸ்லாம் மதத்துக்கு மாறி பின்னர் இந்து மதத்திற்குத் திரும்பியவர்களிடம் இருந்தும் இனக்குழுக்களிடம் இருந்தும் ஆட்களைத் திரட்டியது.[75] நாவலரின் திட்டத்தில் பின் குறிப்பிடப்பட்டவர்களுக்கு ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிட வேண்டும்.[76] அது ஏனென்றால் உயர் சாதியில் கணிசமான தொகையினர் கிறித்தவத்துக்கு மாறி இருந்தனர். அதிலும் அவர்கள் புரொட்டஸ்தாந்து சேர்ச்சில் இருந்தனர். அவர்களை மீட்டெடுத்தல் மிக அவசியமானது.

இதிலிருந்து நாவலர் எந்த 'மந்தை'களைக் கடைந்தேற்ற முற்பட்டார் என்பது தெளி வாகிறது. அவர் எல்லா இந்துகளையும் அவ்வாறு செய்ய முற்படவில்லை. 'யாழ்ப்பாணச் சமயநிலை' என்ற குறுநூலில் அவர் தனது 'கேட்போர்' யார் என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

> ''உங்களில், தோட்ட வேலைகளில் ஈடுபடுபவர்கள், வயல் வேலை (நெற்செய்கை) செய்வோர் வியாபாரம் செய்வோர், உத்தியோகம் பார்ப்போர் இருக்கின்றனர். அவர்களில் சிலர் ஒழிந்த நேரங்களில் சைவத்தைப் பற்றி வாசித்து அறிய அல்லது வாசிப்பதைக் கேட்க ஆர்வமாயிருப்பர்''[77]

திருக்கோவையார் பதிப்பில் ஒரு குறிப்பை அவர் இணைத்திருந்தார். அதில் தான் எதிர்பார்க்கும் வாசகருக்காகக் காவிய நூல்களை இலகுபடுத்தி வசன நடையில் வெளியிட்டதாகக் கூறுகின்றார்:

> ''பாண்டித்தியம் பெற்ற சிலரைத் தவிர ஏனையோர்களுக்குச் செய்யுள் நடையில் அமைந்த நூல்களால் எந்தப் பிரயோசனமுமில்லை. ஆகவே, நன்கு கற்காதவர்களுக்கும் தமது நேரத்தை ஆங்கிலம் கற்கச் செலவிடுபவர்களுக்கும் தொழில் துறையில்

ஈடுபடுபவர்களுக்கும் பெண்களுக்கும் நன்மை பயக்கும் பொருட்டாக நாங்கள் சமய நூல்களையும் உலகியல் சார்ந்த நூல்களையும் வெளியிடுகிறோம்.''[78]

இந்த வரிகளை வாசிக்கும் ஒருவருக்கு நாவலர் குறி வைத்த 'மந்தை' யாவர் என்பது தெளிவாகும். நாவலர் யார் வாசிக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தார். வாசிக்கும் தகைமை பெற்றிருந்தவர்களின் சாதி அடையாளம் என்னவென்பது வெளிப்படை. நாங்கள் ஏற்கனவே எவ்வாறு சாதி அமைப்பின் யதார்த்தத்தை விளங்கி மிஷனரிகள் தமது செயல்பாடுகளை முன்னெடுத்தனர் என்பதைக் கண்டோம்.

VII

நாவலர் செயல்பட்ட சமூக சட்டகத்தைக் கண்ட நாம் இப்போது நமது கவனத்தை அவரின் கல்விச் செயல்பாடுகள் மீது செலுத்துவோம்.

தென்னிந்தியாவில், சிதம்பரத்தில் ஒரு சைவப் பாடசாலையை ஏற்படுத்துவதற்காக அவர் வெளியிட்ட அறிக்கையில் அவரின் கல்விச் செயல்பாடு சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

''சைவத்தை வளர்த்தெடுப்பது எனது வாழ்க்கையின் நோக்கமாகும். அதை அடைவதற்கான ஒரே மார்க்கம் கல்வியாகும்.''[79]

மிஷனரி செயல்பாடுகளின் எதிரொலி இவ்வரிகளில் கேட்கிறது. அவரின் பாடசாலையின் பெயரிலும் இது பிரதிபலிக்கிறது. (சைவப் பிரகாச வித்தியாசாலை - சைவம் பிரகாசிக்கு வித்தியாசாலை அல்லது சைவ ஒளிகாலும் கல்வி நிலையம்).

இந்தப் பாடசாலை 1846இல் நிறுவப்பட்டு 1848இல் ஒரு நிரந்தர இடத்திற்கு மாற்றப்பட்டது. நாவலர் வரலாற்றில் அவர் இந்தியாவுக்குச் சென்றது மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு ஓர் அச்சியந்திரத்தை வாங்குவதற்காகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[80] கனகரத்தினம் உபாத்தியாயரும் நாவலர் தொன்னூல்களைப் பதிப்பித்தது அவரின் கல்விச் செயல்பாட்டில் ஓர் அங்கமே ஒழிய அது தனிக்கரியமல்ல என்று குறிப்பிடுகிறார்.[81]

இவைகள் நாவலர் இந்து சமய உணர்வு கொண்ட கல்வி முறையை விரும்பி இருந்தார் என்பதைக் காட்டுகின்றன. இருந்த போதிலும் அவரின் பாடசாலையும் பாடவிதானங்களும் மிஷனரிகளைப் பின்பற்றி இருந்தன.

இந்தப் பாடசாலையைக் கொண்டு நடத்துவதற்கு நாவலர் பல சிரமங்களை எதிர்கொண்டார். உதாரணமாக விடு வீடாகச் சென்று பிடி அரிசி கேட்டார்.[82] தனது மாணவர்களைக் கொண்டு பாடம் நடத்திப் பணம் வசூலிக்க முற்பட்டார். ''நாவலர் தான் எதிர்கொண்ட சிரமங்களைப் பற்றி இலங்கை ஆளுநர் சேர்வில்லியம் அண்டர்சனுக்கு 1852இல் எழுதிய கடிதத்தில் விபரமாக முறையிட்டார்.''[83] இது பற்றி இரு ஆவணங்கள் கிடைக்கின்றன. ஒன்று நாவலர் அனுப்பியது மற்றது நாவலர் பாடசாலை நலன் விரும்பி களால் அனுப்பப்பட்டது. இரண்டும் இப்பாடசாலையின் அவசியத்தை வலியுறுத்தின. தனஞ்செயராசசிங்கம் மிஷனரிப் பத்திரிகையான மோனிங் ஸ்டாரில் பிரசுரமான நாவலரின்

கல்விச் சேவை பற்றிய நடவடிக்கைகளைத் திரட்டித் தந்துள்ளார்.[84] இந்த ஆவணங்கள் எங்களுக்கு அக்கால நிலைமைகளைத் தெரிவிக்கின்றன.

நாவலர் தனது நினைவுக் குறிப்பில் ''அரசாங்கப் பாடசாலைகள் எந்தச் சமயத்துக்கும் முன்னுரிமை கொடுக்காமல் இயங்குமென்றால் தமிழ்ச் சமூகம் அதனை மெச்சும். ஆனால், அவர்கள் புரொட்டஸ்தாந்து பொதுப் பாடசாலைகளுக்கு 500 பவுணும் கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கு 150 பவுணும் ஒதுக்கி பாடசாலைகளை அழிக்கிறார்கள்.''[85] என்று குறிப்பிட்டுள்ளார். நாவலர் தனது கல்வி நிறுவனத்தை 'செமினரி' என்றே அழைத்தார். அவர் சொன்னார்:

> ''தமிழ்ச் சமூகமும் இந்த முறைப்பாட்டாளரும் பாடசாலை ஆணைக்குழுவுக்குத் தெரிவிப்பதாவது பாடசாலை நிர்வாகம் மாணவர்களின் சமய நடத்தையில் தலையிடக் கூடாது.[86] அவர்கள் மனச் சாட்சிக்கு விரோதமாக நடப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்தக் கூற்று யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களின் பொது விருப்பமாகும். உள்நாட்டுச் சக்திகளோ வெளிநாட்டுச் சக்திகளோ தமது சமய பண்பாட்டு நடைமுறைகளில் தலையிடுவதை அவர்கள் விரும்பவில்லை.''

இக்கூற்று யாழ்ப்பாண இந்துக்களின் பொது விருப்பத்தைச் சுருக்கமாகத் தெரிவிக்கிறது. 'மனச்சாட்சிக்கு விரோதமாக' இந்தச் சமூக சட்டகம் பாதிப்புறாமல் அரசாங்கம் வழங்கும் மானியத்தை அவர் எதிர்பார்த்தார். பொதுமக்களின் பொருட்டாக பி. சின்னக்குட்டி என்பவர் கையொப்பமிட்ட இம்முறைப்பாட்டில் மேலும் கூறப்பட்டதாவது:

> ''முறைப்பாட்டாளர்கள் பிறப்பால், சமூக இணைப்பால், சுவையால், பழக்க வழக்கத்தால், சமயத்தால் தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அதேநேரம் அவர்கள் நலன் ஓம்பும் அறிவார்ந்த ஆட்சியாளர்களைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் முற்றும் உணர்கிறார்கள். ஆட்சியாளர் தரும் நலன்கள் நாட்டுமக்கள் சூழலுக்குப் பொருத்த மானவையா என்பதையும் அறிதல் வேண்டும். அவைகளைத் தேர்வு செய்பவர்கள் உள்நாட்டு மனிதர்களாகும். இந்தவகையில் தமது சிறார்களுக்குப் பொருத்தமானவர்களைக் கொண்டு போதிக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு.''[87]

அறிக்கை ஊமைச் சொற்களில் எழுதப்பட்டிருக்கின்ற போதிலும் பண்பாட்டு அடை யாளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற குரல் எதிரொலிக்கிறது.

நாவலர் 1852இல் கேட்ட மானியம் 1870இல் வழங்கப்பட்டது. இந்தப் பாடசாலை ஒரு தமிழ் மொழிப் பாடசாலையாகும். இது எட்டு வகுப்புகளைக் கொண்டிருந்தது. இதனுடைய பாடவிதானம் பூரணமாக இந்து சமயம் சார்ந்ததாக இருந்தது. நான்காம் வகுப்பில் எண்கணிதம் படிப்பிக்கப்பட்டது. வரலாறும் பூகோளமும் உயர்வகுப்பில் (5ஆம் வகுப்பில்) கற்பிக்கப்பட்டன. ஆங்கிலம் ஒரு பாடமாகக் குறிப்பிடப்படவில்லை. குறைந்த மாணவர் வரவுடைய (189 பையன்கள்) பாடசாலையாக இந்த வண்ணார்பண்ணை பாடசாலை இருந்தது.

நாவலருக்குச் சொந்தமான சொத்தொன்று யாழ்ப்பாணப் பட்டணத்தின் மையப் பகுதியில் இருந்தது. அதன்மூலம் கிடைத்த மாதாந்த வருமானத்தைக் கொண்டு இந்தப் பாடசாலையை நடத்தி வந்தார்.

தென்னிந்தியாவில் நன்கு திட்டமிட்ட இந்துக்கல்வி நிலையம் ஒன்றை நடத்தும் திட்டமொன்றை நாவலர் வைத்திருந்தார். இந்தியாவில் இருந்தபோது (1869) 80,000 ரூபாய் திரட்டுவதற்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தென்னிந்தியாவில் மடங்களின் உதவியுடன் அவர் செயல்பட்டார். இலங்கையில் பாடசாலை வளர்ச்சி அது வழங்கும் கல்விப் பயன்பாட்டில் தங்கி இருந்தது. பாடவிதானத்தில் ஆங்கிலம் இல்லாததனால் இப்பாடசாலை சிபாரிசு செய்யப்படவில்லை. இது வெறும் பண்பாட்டு அடையாளத்தை மாத்திரம் நோக்கம் கொண்டதாகக் கருதப்பட்டது. வண்ணார்பண்ணை, கோப்பாய், பருத்தித்துறை போன்ற இடங்களில் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் இயங்கின.[88] இவைகளில் படித்தவர்கள் அரசாங்க தொழிலைப் பெற முடியவில்லை.

மிஷனரிகள் இந்தப் பாடசாலைகளின் கோரிக்கைகளையும் அரசாங்க உதவி பெறுவதையும் தங்கள் முதன்மைக்கு அச்சுறுத்தலாகக் கருதின. மோனிங் ஸ்டார் 1853 மே, ஜூன் வெளியீட்டின் ஆசிரியத் தலையங்கத்தில் நாவலரின் சைவப் பிரகாச வித்தியா சாலைக் கல்வி மிகவும் சுயாதீனமானது என்று குறிப்பிட்டுத் தனது சார்பின் அடிப்படையில் பின்வருமாறு கூறியது.[89] ''இங்கே கல்வி மூன்று மடங்கு பைபிளையும் ஆங்கிலத்தையும் மேற்குலகையும் மறுக்கிறது. இவைகளை மூன்று மடங்கு மறுக்கும் திரு ஆறுமுகத்தின் செயல்பாடுகள் போன்றவைகள் இலங்கை, இந்திய கல்வி நடவடிக்கைகளில் காணக்கூடியதாக உள்ளது.''[90]

இந்தப் பாடசாலைகளில் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்கள் படிப்பித்தனர். சில மாணவர்கள் புகழ்பெற்ற அறிஞர்களாக மலர்ந்தனர். இந்தப் பாடசாலையின் சைவ சித்தாந்தப் படிப்புக்குப் பல அறிஞர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலரைத் தென்னிந்தியாவும் சிறந்த அறிஞர்களாக ஏற்றுக் கொண்டது.

நாவலர் ஓர் ஆங்கிலப் பாடசாலையையும் 1872ஆம் ஆண்டில் தொடங்கினார். யோன் கில்னர் என்ற வெஸ்லியன் மிஷனரி தலைவர் ''பாடசாலைக்கு வரும் சிறார்கள் தங்கள் நெற்றியில் திருநீறு பூசி வருதல் கூடாது'' என்று தடை விதித்தால் தூண்டப்பட்டு இவ்வாங்கில பாடசாலையை நாவலர் ஆரம்பித்தார்.[91] நாவலர் அதற்கு வில்லியம் வரக்கஸ் என்ற ஸ்கொட்லாந்துக்காரரை அதிபராக அமர்த்தியிருக்கிறார். இந்த நிறுவனத்தை இலங்கை தேசப்பற்றாளர்கள் வரவேற்றனர். கத்தோலிக்க மெசேஞ்சர் இதை வரவேற்று நாவலரை ''மேன்மை மிகுந்த ஆற்றல் மிக்க இந்து, சுதேசிய மொழி புலமையாளர். சைவத்தின் நடைமுறையில் சீர்திருத்தங்களை அறிமுகமாக்கியவர்'' என்று பாராட்டியது. மேலும், அது ''இந்து சமூகம் இப்போது தனக்குரிய பாடசாலையைக் கொண்டிருப்பதை யிட்டு திருப்தி கொள்கிறது'' என்று கூறியது.[92] ஆயினும் இந்தத் திருப்தி நீண்ட காலம் நிலைக்கவில்லை. அப்பாடசாலை 1876இல் மூடப்பட்டது. இப்பாடசாலையின் தோல்விக்

கான காரணத்தை அறிதல் முக்கியமானது. தமிழ்ப் பாடசாலை வெற்றியடைய ஆங்கிலப் பாடசாலை தோல்வி கண்டது ஏன் என்று அறிதல் வேண்டும். நாவலர் தனது தனிப்பட்ட தேர்வாக வரக்கெசைப் பாடசாலை அதிபராகத் தேர்ந்தெடுத்ததில் தோல்விக்கான தடயம் உள்ளது. வரக்கெஸ் வெள்ளையராக இருந்தாலும் பாடசாலையில் கிறித்தவ சூழல், நிலவவில்லை. சராசரி யாழ்ப்பாண மனிதன் ஆங்கிலத்தை கிறித்தவ சூழலில் கற்பதே சிறந்தது என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தான். அவன் மேற்கு மயமாதலுக்கும் கிறித்தவ மயமாதலுக்கும் இணங்கிப் போகும் சுபாவம் உள்ளவன். இதுவே பாடசாலை தோல்விக் குக் காரணமாகும். பாடசாலையில் மாணவர் தொகை குறைந்து கடைசியில் பாடசாலை நின்றுவிட்டது. நாவலரின் பாடசாலை தோல்வி பலரின் கண்களைத் திறந்தது. இதன் பிறகு இந்துச் சூழலில் ஆங்கிலக் கல்வி சாத்தியமானது. இவ்வாறு நாவலரின் தோல்வி அவரின் முடிவான நோக்கம் வெற்றிபெற உதவியது.

இங்கு இரண்டு உண்மைகள் உள்ளன என்பதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது. ஒன்று நாவலர் ஆங்கிலப் பாடசாலையை 1870இற்குப் பிறகே ஆரம்பித்தார். அதாவது தனது செயல்பாடுகளைப் பூரணமாக அரசியல், பொருளாதார களத்தில் நன்கு நிலையூன்றிய பிறகு. இரண்டாவது அவர் தனது இலக்கிய நடவடிக்கைகளான பாடப் புத்தகம் எழுதுதல், உரை எழுதுதல், தொன்னூல்களைப் பதிப்பித்தல் ஆகியவற்றைத் தனது கல்வி நட வடிக்கையின் ஒரு பாகம் எனக் கருதினார். ஆளுநருக்கு எழுதிய நினைவுக் குறிப்பில் அவர் குறிப்பிட்டார்:

> ''தமிழ் அச்சகத்தை நடத்துதல் பொருத்தமற்றதெனக் கூறமுடியாது. அதனால் இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு வேண்டிய பாடப் புத்தகங்களையும் சமூகத்துக்கு வேண்டிய பயனுள்ள வெளியீடுகளையும் செய்யலாம்.''[93] கனகரெத்தினம் உபாத்தியாயரும் கூட இந்த அச்சகத்தில் நடந்த கல்வி செயல்பாட்டை எடுத்துரைத்துள்ளார்.[94]

அடிக்குறிப்புகள்

1. For a concise biography of Arumuka Navalar (in English) see:
   (i) Sivapada Sundaram, S. – Arumu kha Navalar
   (ii) Muttucumaraswamy, V. – Sri Arumuga Navalar – Sri Lanka, 1965, In Tamil see (i) Kailasapillai, T. Arumuka Navalar.
2. CARITTIRAM – 4th Edition – Madras, 1950.
   (i) Kanakaratna Upatiyayar, V., SRI LA SRI NALLUR ARUMUKA NAVALAR CARITTIRAM, Navalar Centenary Reprint, Sri Lanka, 1968.
3. Sivathamby, K.
   (i) NAMATU PARAMPARAI, ARUMUKA NAVALAR, Putumai Ilakkiyam, Colombo, November 1961.
   (ii) ILANKAI MUTPOKKU ELUTTALAR CANKAMUM EELATTIN TAMIL ILAKKIYA VALARCCIYUM ORU Varalatru Nokku, Putumai Ilakkiyam, Supplement to the Conference on National Integration, Colombo, 1975.

Kailasapathi, K., Ancall – Northern Provinces Special Supplement, Colombo, September, 1971.

Sivathamby, K., Vallalarum Navalarum Thinakaran Weekly Supplement, Colombo, 11.12.1966.

4. Thananjayarajasingham, S.
   (i) Navalar Panihal (with one chapter in English) Peradeniya, 1969.
   (ii) The Educational Activities of Arumuga Navalar, Jaffna, 1974.
5. Proceedings of the Legislative Council of Ceylon11.2.1884, Ponnambalam Ramanathan referred to Navalar as the Champion Reformer of Hindus. Besides this posthumous reference, there was also a contemporary reference to Navalar in the Legislative Council (19.10.1876) by Sir Muttu Kumaraswami: "His (Navalar) whole life has been spent in preaching and writing against Christianity and he has a following which cannot be despised."
6. Tennent, Sir James Emerson, Christianity in Ceylon – London, 1850, p. 75.
7. Ibid, p. 90.
8. Ruberu, Ranjit, Education in Colonial Ceylon, Kandy, 1962, p. 240.
9. For the caste hierarchy in Jaffna, see
   (i) Banks, M
   (ii) Sivathamby, K., YAR INTA YALPANATTAN Ancali, Colombo, September, 1971.
10. Gnana Prakasar – Rev. S. – XXV Years Catholic Progress, Jaffna, 1962, p. 156.
11. Tennent, p. 83.
12. For a detailed account see Ruberu, p. 140 ff.
13. Tennent, p. 86.
14. de Silva, K.M., Social Policy and Missionary Organizations in Ceylon, 1840 – 1855, London, 1865, p. 26.
15. Martyn, John, H., Notes on Jaffna – Jaffna, 1922, p. 162 ff.
16. Rutnam, James, T., Batticaloa Seminary, Xerox copy of an unpublished article. The quotations are from the text of Newell's report.
17. Martyn, p. 166.
18. de Silva, K.M., (ed.), History of Ceylon, Vol. 3, University of Ceylon, 1973, p. 72.
19. Martyn, p. 204.
20. Tennent, pp. 143 – 4.
21. Ganapragassar, p. 20.
22. Q.V. Ruberu, p. 153. See also pp. 166 – 67.
23. Tennent, p. 165.
24. Q.V. Ruberu, p. 163.
25. Kanapathipillai, K., EELATTU VALAMUM, Madras, 1962, p. 106 ff. de Silva, K.M., (ed.), History of Ceylon, Vol. III, p. 72, de Silva, K.M., p. 151.
26. Tennent, pp. 146 ff.
27. Ibid, p. 147.
28. Robinson, Rev. E.J., Hindu Pastors, London, 1867, p. 78.
29. Ibid, p. 107.
30. Tennent, pp. 147 – 148.
31. Ibid

32. Ibid, pp. 151 – 2.
33. Ibid, p. 153.
34. Q.V. Sumathipala, K.H.M., History of Education in Ceylon, 1796 – 1965, Colombo, 1968, p. 7.
35. de Silva, K.M., p. 157.
36. Rasanayagam, S., YALPANACCARITTIRAM – AANKILEYAR KALAM, Colombo, 1934, pp. 118 – 9.
37. de Silva, K.M., p. 143.
38. Tennent, p. 154.
39. Muthuththambipillai, A., YALPPANACCARITTIRAM, 2nd Edition, Jaffna, 1915, pp. 132 – 3.
40. Tennent, p. 170.
41. Ibid, p. 160.
42. Ibid, pp. 169 ff.
43. Ibid, p. 163.
44. Robinson, p. 107.
45. Tennent, p. 168.
46. ARUMUKA NAVALAR PIRAPANTATTIRATTU, Madras, p. 53.
47. de Silva, K.M., (ed.), History of Ceylon, Vol. III, p. 166.
48. Leach, E.R., (ed. op. cit.), p. 71.
49. Ramalingam, M., NAVALARUKKU MUNTIYA KALVI MUYARCIKAL, pp. 1 & 2, Eelanadu, 2.4.71, 28 – 29, 10. 1971.
50. Martyn, (ed.), pp. 312 – 14.
51. Ramalingam Ioc. cit.
52. Ibid.
53. Ibid, Rasanayagam, op. cit, p. 122.
54. Robinson, op. cit., p. 118.
55. Ramalingam Ioc. cit.
56. Kanapathipillai, S. Panditamani, NAVALAR, Jaffna, 1968.
57. Muttucumaraswamy, op. cit., p. 3.
58. Kulendran, Sabapathy Rev. The Tentative Version of the Bible (The Navalar Version) in Tamil Culture, Vol. VII, No. 3, (India), July 1958.
59. Robinson, op. cit., p. 122.
60. Cartman, J., Hinduism in Ceylon, Colombo, 1957, p. 55.
61. Kailasapillai, T., NAVALAR CARITTIRAM, p. 53, 4th edn. Jaffna, 1955.
62. Muttucumaraswamy, op. cit., p. 9.
63. Kulendran, Ioc. cit.
64. See Sivapalasundaram, op. cit.
65. An illustration of this trend can be well seen in the contributions that appear in section 1 of the NAVALAR MANATU MALAR, Colombo, 1969.
66. Sivathamby, K., op. cit.
67. See e.g., SUPPIRAPOTAM and YALPANCCAMAYA NILAI KAYILASAPILLAI, T., (Comp), ARUMUGANAVALAR PIRAPANTATTIRATTU, (2nd ed.), Jaffna, 1951.
68. Ibid, pp. 69 ff.

69. Ibid, p. 60.
70. Arumuga Navalar, BALAPADAM, (4th Book. 28th edn.), Madras, 1949, pp. 70 – 1, 89, 151....
71. Arumuga Navalar, PERIA PURANA COORANAM, Madras, 1949, p. 113.
72. Kayilasapillai (Comp.), pp. 15, 16, 18, 19, 35, 44 – 5, 71, etc....
73. Banks Ioc. cit.
74. Rao M.S.A. Religious Movements and Social Transformation in India in Religion and Development in Arian Societies, Sri Lanka, 1974, p. 133.
75. Ibid, p. 135.
76. Kayilasapillai (Comp.), p. 30.
77. Ibid, p. 57.
78. Q.V. Arumuga Navalar Vila, Guide book for the Book Exhibition, 1969, p. 13.
79. Kailasapillai, NAVALAR CARITTIRAM, p. 54.
80. Kanagaratna Upathyayar, op. cit., p. 28.
81. Ibid, pp. 31 ff.
82. The System was generally used to collect funds for some puthi purpose.
83. Thananjayarajasingham, S., The Educational Activities of Arumuga Navalar, Colombo, 1974, pp. 13 – 4.
84. Ibid, p. 41 ff.
85. Ibid, pp. 15 – 6.
86. Ibid, p. 18, emphasis added.
87. Ibid, p. 24.
88. The latter two ware established after 1870.
89. Ibid, pp. 41 ff.
90. Ibid, p. 43.
91. Ibid, p. 64.
92. Q.V. Martyn, op. cit., p. 222.
93. Q.V. Thananjayarajasingham, op. cit., p. 18.
94. Kanakaratne Upathyayar, p. 31.

நாவலரை முன்னிறுத்தி இனக்குழுமக் கோட்பாடு

சபா ஜெயராசா

காலனித்துவ காலத்தில் நிகழ்ந்த பன்முகமான பரந்துபட்ட எதிர் விசைகளும் சில நிலைகளில் நேர் விசைகளும் தேசிய இனக்குழுமங்கள் தமது மொழி, மத மற்றும் பண்பாட்டு அடையாளங்களைத் தேடவும், வலுப்படுத்தவும், மீட்டுருவாக்கம் செய்யவும் வல்ல செயற்பாடுகளைத் தூண்டின. அவ்வாறான முயற்சிகளை அடியொற்றி எழுந்ததே இனக்குழுமக் கோட்பாடு (Ethnic Theory) ஆகும். காலனித்துவம் என்ற பெருங் கவிப்புக்கு எதிரான அடையாளப்படுத்தலின் பன்முகப் பரிமாணங்களைக் கண்டறியும் கோட்பாடாக அது அமைகின்றது.

காலனித்துவத்திலிருந்து விடுதலை பெற்றபின் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மேலாதிக்க இனக்குழு மதத்தினர், ஏனைய சிறுபான்மை இனக்குழுமத்தினர் மீது ஆதிக்கத் திணிப்புக் களை ஏற்படுத்திய வேளை உருவாக்கம் பெற்ற கலை இலக்கியக் கோலங்களை விளக்கவும் விளங்கவும் வல்ல கோட்பாடாகப் பின் இனக்குழுமக் கோட்பாடு தோற்றம் பெற்றது.

இனக் குழுமக் கோட்பாடு என்பது குறிப்பிட்ட மக்களின் மொழி, பண்பாடு, சமயம், அறிவாற்றல், வாழ்க்கைமுறை, சடங்குகள், தொன்மக்கள், பழக்கவழக்கங்கள் முதலிய வற்றின் அடிப்படையில் அவர்களின் தனித்துவமான நடவடிக்கைகளையும் ஆக்கச் செயற்பாடுகளையும் கண்டறியும் ஓர் அறிகை முறைமையாகும்.

இனக்குழுமம் மற்றும் தேசியம் பற்றிய ஆய்வை ஆசிய மக்கள் முன்னெடுப்பதற்கு முன்னரே ஆங்கிலேயரும் ஏனைய ஐரோப்பிய ஆய்வறிவாளரும் முன்னெடுத்தனர். காலனித்துவப் பெருநிலை ஆதிக்கத்துக்கும் மாற்றுப் பண்பாட்டுக்கும் எதிரான கிளர்ச்சி 1857ஆம் ஆண்டில் இந்தியாவிலே தோற்றம் பெற்றது. கிளர்ச்சியை அடக்குவதற்கு இந்தியச் சமூக இயல்பை விளங்கிக் கொள்ள வேண்டிய தேவை ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. ஆட்சியை வலுவாகவும் சுமுகமாகவும் முன்னெடுப்பதற்குச் சமூகம் பற்றிய புலக்காட்சியும் விளக்கங்களும் அடிப்படையானவை என அவர்கள் கருதினர்.

சமூகப் பிரிவுகளைக் கண்டறிதல் வாயிலாகப் ''பிரித்தாளும்'' உபாயங்களைப் பயன்படுத்தலும் இலகுவாக இருந்தது. அந்நிலையில் தமது ஆள்புலத்துக்கு உட்பட்ட மக்களின் மொழி, சமயம், சாதி முறைமை, சடங்குகள் முதலியவற்றை அடியொற்றிய தகவல்களைத் திரட்டலாயினர்.

அவற்றின் பிறிதொரு விளைவாக ஆள்புல மக்களும் அந்த அடையாளங்களை அடியொற்றிய சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் வளர்க்கலாயினர். மேலும் இந்தியா மற்றும் இலங்கை ஆகியவற்றின் அரசியலிலும் வாக்குச் சேகரிப்பிலும் இனக்குழும அடையாளங்கள் பலம் மிக்க விசைகளாகத் தொழிற்பட்ட வண்ணமுள்ளன.

பிரித்தானியக் காலனித்துவச் செயற்பாடுகள் ஆழ்ந்து வேர் பரப்பியிருந்த காலத்திலே நாவலரின் செயற்பாடுகள் மேலெழுந்தன. இனக்குழும நிலையிலே நோக்கினால் சைவமும் தமிழும் நாவலரின் செயற்பாடுகளுக்குரிய கருத்தியல் தளமாக இருந்தன. பிரித்தானிய அரசியல் முறை, கல்விமுறை, பண்பாட்டுக் கோலங்கள் முலியவற்றின் அழுத்தங்களால் சைவசமய மரபுகளை அடியொற்றி வாழ்க்கை முறையும் தமிழ்மொழித் தேட்டங்களும் சிதைந்து விடாது பாதுகாத்தல் அவரது நோக்கமாக இருந்தது.

வாழ்நிலையும் மரபுகளும் பேணப்படுவதற்குரிய கருவியாக அவர் சமயத்தை முன்னெடுத்தார். பிரித்தானியர் ஆட்சியில் நிகழ்ந்த சமயம் மற்றும் கல்வி முன்னெடுப்புக்கள் நாவலரின் செயற்பாடுகளுக்குரிய மாதிரிகைகளாக (Models) அமைந்தன. சமயம் பரப்புவதற்கு கிறீஸ்தவ திருச்சபையினர் பயன்படுத்திய பிரசங்க முறை, வினாவிடை வழியான பாடப்புத்தக முறை, நலிந்தவர்களுக்கு உதவும் இலவசக் கல்வி முறை, துண்டுப் பிரசுரமுறை, பாடசாலை முறை மாணவர் பின்பற்ற வேண்டிய சமய விதிமுறை மற்றும் ஒழுக்காற்று முறை (Discipline) முதலியவற்றைச் சைவ நிலையைப் பேணிக் கொள்வதற்கு அவர் பயன்படுத்தினார்.

காலத்துக்குரிய நவீனத்துவத்தை மேற்கொண்டு சைவத்தையும் தமிழையும் நிலைபேறு கொள்ளச் செய்யும் செயற்பாட்டை வலிமைப்படுத்தினார். தமிழ் மரபில் நிலைபேறு கொண்டிருந்த திண்ணைப் பள்ளிக்கூட முறைமை, குருகுலக் கல்வி முறைமை முதலிய வற்றைக் கைவிட்டு நவீன பாடசாலை முறைமையை முன்னெடுத்தார்.

இனக்குழுமங்கள் தமது அடையாளங்களைப் பேணமுற்படும் பொழுது சமூக நிரலமைப்பு அல்லது உள்ளமைந்த அதிகார அடுக்கமைவைச் சிதறவிடாது பாது காத்தலையே செயற்படுத்தின. பின் இனக்குழும காலகட்டத்திலேதான். (இலங்கையைப் பொறுத்தவரை பருமட்டாக 1956ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலகட்டங்களிலே தான்) அகநிலை அதிகாரக் கட்டமைப்பைச் சிதறடிக்கும் கருத்தாக்கங்கள் மேலெழுந்தன. ஆனால் நாவலர் வாழ்ந்த இனக்குழும நிலைக் காலகட்டத்தில் சமூக அடுக்கமைவைச் சிதறடிப் பதற்கான முனைப்புகளோ எழுச்சிகளோ விசை கொண்டு எழவில்லை. மாறாக அவற்றைப் பராமரிப்பதற்கான செயற்பாடுகளே வலுப்பெற்றிருந்தன.

சமூக அடுக்கமைவில் உயர் மட்டங்களில் இருந்தவர்களால் மட்டுமே ஆங்கிலக் கல்வியை அக்காலத்தில் பெறமுடிந்தது. ஆங்கிலக் கல்வி சமூக நிரலமைப்பைப் பாது காப்பதற்கும் பராமரிப்பதற்குமுரிய கருவியாக இருந்தது. நாவலர் மேற்கொண்ட சைவ ஆங்கில கலாசாலையைத் தோற்றுவித்த முயற்சி இவ்வகையிலே சுட்டிக் காட்டப்படத் தக்கது. ஆயினும் கிறீஸ்தவ திருச்சபைகளால் நடத்தப்பட்ட ஆங்கிலக் கல்வித் தரத்தைச் சைவ ஆங்கில கலாசாலைகளினால் எட்ட முடியாதிருந்தது. அதேவேளை யாழ்ப்பாணத்துச் சமூக நிலையிலே மேலுயர்ந்திருந்தோர், கிறீஸ்தவ திருச்சபைகளால் நடத்தப்பட்ட பாட சாலைகளுக்கே தமது பிள்ளைகளைக் கற்பதற்கு அனுப்பியமை அதிகார நிரற்படுத்தல் நோக்கில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும்.

இனக்குழுமத் தனித்துவம் பேணும் செயற்பாடுகளிலே தற்காலத்திலே குறிப்பிடப்படும் ஆசிரியர் உறுவளம் செய்பவராக (Facilitator) இருக்கும் நிலை அல்லது ஆசிரியர் மாணவருடன் இணைந்து கற்போராக (Co-learner) இருத்தல் நாவலர் காலத்திலே காணப்படவில்லை. ஆசிரியர் பணிப்பு நிலையில் இயங்குதலே அக்காலத்தைய கிறீஸ்தவக் கல்விச் சூழலிலே காணப்பட்டது. நாவலரும் அதனையே பின்பற்றினார்.

பாலபாடம் நான்காம் புத்தகத்தில் உள்ள தமிழ்ப் புலமை என்ற வியாசத்திலே குறிப்பிடப்பட்டுள்ளவை இவ்வகையிலே அவதானிப்புக்குரியவை.

> ''திருவள்ளுவர் குறள், நாலடியார் முதலிய நீதி நூல்களைப் பதப் பொருளுடனே கற்றறிந்து கொள்க...
>
> தேவாரம் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும் சுத்தாங்கமாக ஓதவும் பழகிக் கொள்க.
>
> பெரிய புராணம், திருவிடிளாயடற் புராணம், திருவதவூரடிகள் புராணம், கந்த புராணம் உபதேச காண்டம், கோயிற் புராணம், சேது புராணம், பதினோராம் திருமுறையில் பிரபந்தங்கள், குமரகுருபரசுவாமிகள் அருளிச் செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக''

நாவலர் மேற்கொண்ட அவ்வாறான பயிலும் ''பணிப்பு முறை'' பிற்காலத்திலே கனக செந்திநாதன் அவர்களிடத்தும் காணப்பெற்றமைக்குச் சான்றுகள் உள்ளன. ஆர்வம் மிக்க ஒருவர் தாம் எழுத்தாளராக வருவதற்கு யாது செய்ய வேண்டும் என்று கனக செந்திநாதன் அவர்களை அணுகிக் கேட்ட வேளை அவர் ஒரு நூற்பட்டியலை வந்தவரிடம் கொடுத்து அவற்றைப் படித்தபின்னர் எழுதுக என்று குறிப்பிட்டார். அந்தப் பட்டியலை அவர் அச்சு வடிவிலும் வெளியிட்டார்.

நாவலர் மேற்கொண்ட வசன நடை முன்னெடுப்பு இனத்துவ அடையாளம் பேணு கைக்குரிய பிறிதொரு நடவடிக்கையாகும். கருத்துக் கையளிப்பிற் செய்யுளைக் காட்டிலும் வசனம் மேலோங்கிச் செல்லும் நிலையைக் கண்டறிந்தார். அவர் வசனத்துக்கு அதீத முக்கியத்துவமளித்தமை அக்காலத்திலே வாழ்ந்த மரபு வழிப் பண்டிதர்களுக்குப் பிரிய மில்லாத நடவடிக்கையாக இருந்ததென்றும் சொல்லப்படுகின்றது. அதாவது செய்யுளை

மேம்படுத்திய அறிவுப் பாரம்பரியத்தில் வசனம் இரண்டாம் பட்சமாகவே இருந்த காலகட்டத்தில் நாவலரது உரைநடைச் செயற்பாடுகள் மேலெழுந்தன.

பண்பாட்டுக் காப்பு நடவடிக்கைகளின் ஒரு பரிமாணமாக பதிப்பு முயற்சிகள் நடந்தவேளை அறிவுக்கையளிப்பிலே மீள்வரைப்பு (Retold) என்பதன் முக்கியத்துவம் நாவலரால் உணரப்பட்டது. புராணங்களை உரைநடை வாயிலாக மீளச் சொல்லியமையும். பிரசங்கித்தலை பண்படைய பனுவல்களை ''மீளச் சொல்லும்'' செயற்பாடாக முன்னெடுத் தமையும் அறிவுப் பரவலுக்குரிய நடவடிக்கையாக மட்டுமன்றி மொழி, மத அடையாளங் களைப் பராமரிக்கும் நடவடிக்கையாகவும் அமைந்தது.

இனக்குழும நிலையை வலிமை பெறச் செய்யும் ஒரு நடவடிக்கையாக சமயச் சீர்திருத்தச் செயற்பாடுகள் இலங்கையிலும் இந்தியாவிலும் முன்னெடுக்கப்பட்டன. கிறீஸ்தவ சமயத்திலே நிகழ்ந்த சீர்திருத்த முன்னெடுப்புக்களைப் பார்சிவல் பாதிரியார் வழியாக ஆறுமுகநாவலர் அறிந்து கொண்டார். ஆனால் அந்தச் சீர்திருத்த முன்னெடுப்புக் களைச் சமூகக் கட்டுக்கோப்பினுள் மட்டும் அவர் வரையறைப்படுத்திக் கொண்டார். பின் இனக்குழுமப் பிரக்ஞை பிற்காலத்திலே மேலோங்கிய வேளை அந்த நடவடிக்கையை அடியொற்றிச் சமூக சீர்திருத்தம், அரசியற் சீர்திருத்தம் முதலியவை வளரலாயின.

ஆறுமுகநாவலர் சீர்திருத்தங்களை ஆலயங்களோடு மட்டும் கட்டுப்படுத்திக் கொண்டார். ஆலயங்களிலே கேளிக்கைகள் நிகழ்வதை அவர் எதிர்த்தார். அந்நிலையிலே தமது இனக்குழுமத்தின் அடையாளமாக வைதிக வழிபாட்டு முறையை முன்னெடுத்தல் யாழ்ப்பாணத்து எழுகுழாத்தினரிடத்து (Elite) தொடர்ந்து வளர்ச்சியுற்றது. ஆடல், பாடல், கூத்துக்களை உள்ளடக்கிய கிராமிய வழிபாட்டுமுறை சமூக அடுக்கமைவின் அடித்தளங் களில் உள்ளோருக்குரிய இனக்குழும அடையாளங்களாக விசாலித்தன.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இனக்குழும அடையாளத்தைப் பேணுதல் சாதிய முறைமையைப் பேணுதலாகவும் அமைந்தது. யாழ்ப்பாணத்துச் சமூக அடுக்கமைவு சாதியத்தளத்திலே கட்டமைப்புச் செய்யப்பட்டிருந்தது. சாதிய அடுக்கமைவைப் பேணுதல் உயர்நிலையில் இருந்தோருக்குரிய அடிப்படைத் தேவையாக இருந்தது. அதாவது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் அதனை அடியொற்றிய விழுமியங்களை நிலைபேறு கொள்ளச் செய்தவற்குமுரிய தேவை எழுகுழாத்தினருக்கு ஏற்பட்டது.

பிரித்தானியப் பண்பாடு சாதி முறைமையைப் புறந்தள்ளிய வேளை எதிர்கொண்ட நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தவர்கள் சாதி முறைமையைப் பேணுவதற்குத் தீவிர அழுத்தம் கொடுத்தனர். பின் இனக்குழும நிலைவரத்திலேதான் சாதியம், பெண் அடிமைத்தனம் முதலியவை தகர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டன.

மேற்கூறியவற்றின் பின்புலத்தில் இனக்குழுமநிலை மற்றும் பின் இனக்குழும நிலை ஆகியவற்றின் வேறுபாடுகளைப் பின்வருமாறு விளக்கலாம்.

காலனித்துவத்துக்கு எதிரான நடவடிக்கைகள், சமூக அடுக்கமைவைச் சிதைவுறாது பாதுகாத்தல், தொன்மையான நூல்களையும் கலைகளையும் மீட்டெடுத்தல், பண்பாட்டை

நிலைத்த பொருளாகக் கருதியமை முதலியவை இனக்குழும நிலைவரத்துடன் தொடர்பு பட்டிருந்தன. பின் இனக்குழும நிலையில், பின் காலனியத்துக்கு எதிரான நடவடிக்கைகள், இன மேலாதிக்கத்துக்கு எதிரான செயற்பாடுகள், சமூகத்தினதும் பண்பாட்டினதும் மாற்ற நிலைகளைப் பிரக்ஞை கொள்ளல், உள்ளமைந்த பன்மை நிலைகளைக் குவியப்படுத்துதல், தொன்மையான நூல்களை மீள் வாசிப்புக்கு உட்படுத்துதல், நுண்பாக (Micro) அணுகு முறைகளை முன்னெடுத்தல், அனைத்தினதும் பின்புலமான அரசியலைப் புரிந்து கொள்ளல் முதலியவை வலுப்பெறத் தொடங்கியுள்ளன.

ஆறுமுகநாவலரது செயற்பாடுகளை அறிந்துகொள்ளல் இனக்குழும இயல்பையும் அக்கருத்தியலின் வளர்ச்சியையும் தரிசிப்பதற்குரிய அறிகைத் தளமிடலாகின்றது.

'சங்கத்தமிழ்', இதழ் - 5,
கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு,
2012, பக். 64 - 67.

நாவலர்
பொதுவியல்

விஜயத் துவஜம்

சுவாமி விபுலாநந்தர்

ஆரிய சமாஜஸ்தாபகராகிய ஸ்ரீமத் தயாநந்த சரஸ்வதி ஸ்வாமிகள் இவ்வுலகில் உதித்து நூறு ஆண்டுகள் ஆகின்றன. இம்மகான் வட நாட்டிலே வைதிக நெறியை நிலைநிறுத்தினவர்; சமஸ்கிருதக் கல்வியைப் பெருக்கினவர்; முகலாய அரசியலாலும் பிற காரணங்களாலும் சிதைவுற்றுக் கிடந்த ஆசார முறைகளைச் சீர்ப்படுத்தினவர்; இளைஞர்களுடைய கல்வி விஷயத்திற் பெரிதுஞ் சிரத்தையெடுத்தவர்; நெறியினாலும் உரையினாலும் பிரமசரிய நிலையைப் பாராட்டியவர்; தாய் நாட்டின் முன்னேற்றத்துக்காக உடல், பொருள். ஆவி மூன்றையும் தியாகஞ் செய்தவர்; அஞ்சாநெஞ்சு படைத்த ஆடவர். ஸ்ரீமத் ஆறுமுக நாவலரவர்கள் இவ்வுலகில் உதித்து நூற்றொரு ஆண்டுகளும் நான்கு மாதங்களும் ஆகின்றன. இம்மகான் தென்னாட்டிலே வைதிக நெறியையும் சைவ நெறியையும் நிலைநிறுத்தியவர்; தமிழ்க் கல்வியையும் சமஸ்கிருதக் கல்வியையும் பெருக்கினவர்; யாழ்ப்பாணத்தையாண்ட ஒல்லாந்த மன்னரது அரசியலாலும் பிற காரணங்களாலும் சிதைவுற்றுக் கிடந்த ஆசார முறைகளைச் சீர்படுத்தியவர்; இளைஞர்களுடைய கல்வி விஷயத்திற் பெரிதுஞ் சிரத்தையெடுத்தவர்; நெறியினாலும் உரையினாலும் பிரமசரிய நிலையைப் பாராட்டியவர்; தாய் நாட்டின் முன்னேற்றத்துக்காக உடல், பொருள், ஆவி, மூன்றையுந் தியாகஞ் செய்தவர்; அஞ்சா நெஞ்சுபடைத்த ஆடவர். திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க ஸ்வாமிகள் இவ்வுலகில் உதித்து நூறாண்டு களும் ஏழு மாதங்களும் ஆகின்றன. அருட்பெருஞ் ஜோதியாகிய இறைவனை அன்பு கனிந்தொழுகும் இன்னிசைத் தமிழ் பாடலாற் றுதித்த இம்மகானுடைய அருட்பாக்கள் தமிழ்க் கவிக்களஞ்சியத்தினுட் சேர்த்து வைக்கப்பட்ட அருமணிகள் போன்றன. பண்டிதர் பாமரராகிய இரு பாலாராலும் போற்றப்படுவன. பக்திச் சுவை ததும்புவன. பாராயணஞ் செய்வோருக்கு இகபர சுகத்தைத் தருவன. வங்க மொழிக்கவிஞராகிய ஸ்ரீமத் மதுசூதன தத்தர் இவ்வுலகில் உதித்து நூறாண்டுகள் ஆகின்றன. இவர் மேலைத்தேசத்து யவனமொழி, லத்தீன்மொழி, ஆங்கிலமொழி யென்னும் இவற்றையும் தமது தாய் மொழியையும் நன்கு

கற்றுப் பிறமொழியிலுள்ள செழுமை, வனப்பு ஆகியவற்றைக் கிரகித்துத் தம்மொழியில் முன்பில்லாத பலவகை நயங்களோடு கூடிய நூல்களையமைத்தவர். பரந்த கேள்வியும் நுண்ணுணர்வும் வாய்ந்த காப்பியக்கவி, வீரகாவியங்கள் பல இயற்றியவர். ஆங்கில மொழிக் கவிஞராகிய பைரன் (Byron) என்பவர் இவ்வுலக வாழ்வை நீத்து நூறாண்டு களாகின்றன. இக்கவிஞர் யவனபுரத்தார்மீதும், யவன புரத்துக் கவிவாணர் மீதும் பெரிதும் ஈடுபட்டவர், பரந்த கேள்வியும் நுண்ணுணர்வும் வாய்ந்தவர். வீரகாவியங்கள் பல இயற்றியவர். யவன புரத்தின் மீதுள்ள பெருங்காதலினால் தாம் பிறந்த நாடாகிய இங்கிலாந்து தேசத்தினின்று நீங்கி யவன புரத்திலேயே நெடுங்காலம் வசித்தவர். யவன புரத்தின் சுதந்திரத்துக்காகப் போர்க்களத்தில் முனைந்து நின்று யுத்தம் புரிந்து தமது உயிரை அர்ப்பணஞ் செய்தவர். தயாநந்த சரஸ்வதி, மதுசூதன தத்தர், பைரன் என்னும் இவரது நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்குப் பெரிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. நமது தமிழ் நாட்டிலிருந்து நமது தமிழ் மொழிக்கும் வைதிக சைவத்துக்கும் உழைத்தவர்களாகிய நாவலர் பெருமான், திருவருட் பிரகாசவள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள் ஆகிய பெரியாரிருவரது நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்குத் தமிழ் நாட்டினராகிய நாம் அனைவரும் சாதி, சமய வேறுபாட்டின்றி முயற்சிக்க வேண்டும். ''பழமைபாடிச் செழுமைதேடு'' என்னும் முதுமொழிக்கிணங்க நாம் செழுமையடையும் பொருட்டு நம்முடைய பெரியாரது ஞாபகத்தை நாம் பாராட்ட வேண்டும். இக்காரணங் கருதி இவரிருவருடைய சரித்திரத்தையுஞ் சுருக்கமாகத் தருதற்கெண்ணினாம். தயாநந்த சரஸ்வதி சுவாமிகளுடைய சரித்திரமும் இந்தியரான நம்மாற் போற்றத்தகுவது. ஆதலால் அப்பெரியாரது நூறாண்டு நிறைவு விழா ஞாபகச் சின்னமாக அவரது சரித்திரச் சுருக்கத்தை மற்றொரு சஞ்சிகையில் வெளியிடுவோம்.

ஆறுமுகநாவலர்

யாழ்ப்பாணத்து நல்லூரிலே, கார்காத்த வேளாள வருணத்திலே பாண்டி மழவர் குடியிலே, ஞானப்பிரகாச சுவாமிகள் மரபிலே, இலங்கை காவல முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருடைய புதல்வர் பரமானந்தர் என்பவர். அவருடைய பிள்ளைகள் கந்தர், இலங்கையர் என்பவர்கள். கந்தர் என்பவருக்குச் சிவகாமி யென்னும் மனைவியாரிடம் ஐந்து ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் பிறந்தார்கள். இறுதியில் பிறந்த பிள்ளை ஆறுமுநாவலர். இவர் கலியப்தம் 4924க்குச் சமமாகிய சித்திரபானு வருஷம் மார்கழி மாதம் 5ஆம் திகதி (கிறிஸ்தாப்தம் 1822 டிசம்பர் மாதம் 19ஆம் திகதி) புதன்கிழமை இரவு அவிட்ட நஷத்திரமும், பூர்வபக்க பஞ்சமி திதியும் வச்சிரயோகமும் பாலவ கரணமும் கூடிய நேரத்திலே சிங்க லக்கினத்திலே நல்லூரிலே தமது தந்தையார் வீட்டிற் பிறந்தனர். தீவிர புத்தியுடைய இவர் உரிய காலத்தில் வித்தியாப்பியாசஞ் செய்யப்பெற்றுச் சரவணமுத்துப் புலவர், சேனாதிராய முதலியார் முதலிய வித்துவான்களிடத்திலே தமிழ்க் கல்வி கற்றுத் தேறினார். பின்பு பீற்றர் பார்சிவல் என்னும் பாதிரியாருடைய இங்கிலிஷ் பள்ளிக்கூடத்தில் இங்கிலிஷ் கற்றனர். அது முதல் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நாவலரவர்கள்

எழுதி வெளியிட்ட சைவ சமயிகளுக்கு விக்கியாபனம் என்னும் பத்திரிகை வாயிலாக யாம் அறியலாகும். அப்பத்திரிகை வருமாறு:

ஐய வருஷ முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஷ் வித்தியா சாலையிலே இங்கிலிஷ் கற்றேன். பிலவ வருஷம் பார்சிவல் துரைக்குத் தமிழ் பண்டி தனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்ற மட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவராயிருப்பவும், அவர்கள் பொரு ளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக வருஷம் புரட்டாசி மாதம் பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல் துரை 'நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்: தாங்கள் என்னை விடலாகாது' என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தியிலே விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலீஷிலே அற்பவிற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப் பின் இங்கிலீஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும் நானும் என் சத்திக்கேற்ற உத்தியோத்தி யோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கு மென்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித்துணை மாத்திரங்கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச் சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்.

இப்பேராசையினால் இருபது வருகாலம் நான் செய்த முயற்சிகள் பல. அவைகளுள்ளே சித்தி பெற்றவை மிகச் சில. சைவசமயிகள் யாவரும் சைவ சமயத்திலே சிரத்தையுடையர் களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்வார்களாயின், நான் எடுத்த முயற்சி களெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் அங்கங்கே நன்முயற்சி செய்வார்கள்; செய்யிற் கல்வியும் சமயமும் தழைத் தோங்கும்.

இதனை நான் என் சிறுவயது முதலாகச் சிந்தித்துச் சிந்தித்து, சைவசமயத்தை வளர்ப்பதற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வாரில்லையே! இதற்கு யாது செய்யலாம்? சைவசமய விருத்தியின் கண்ணதாகிய பேராசையை அதனை முடித்தற்குச் சிறிதும் சக்தி யில்லாத எனக்குத் தந்தருளிய சிவபெருமான், சக்தியுடைய மற்றையோர்களுக்குக் கொடுத்தருளினாரில்லையே என்று இரவும் பகலும் பெருங்கவலைகொண்டு பெருமூச் செறிதலினும் பலருக்குப் பிதற்றுதலினுமே பெரும்பான்மையும் என் காலத்தைப் போக்கு வேனாயினேன். நான் எனக்கு ஒழிவுள்ள காலத்தைக் கைம்மாறு வேண்டாது உலகத்தாருக்குப் பயன்படக் கழித்தல் வேண்டுமென்று நினைந்து விசுவாவசு வருஷம் தை மாதம் முதலாகச்

சில பிள்ளைகளுக்கு இராத்திரியிலும் காலையிலும் தமிழ்க் கல்வி கற்பித்துக் கொண்டு வந்தேன்.''

நாவலர் தம்முடைய அபிப்பிராயங்களையெல்லாம் பிறர்க்குச் சொல்லவும் நிறை வேற்றவும் விரும்பி, யாழ்ப்பாணத்து வண்ணார்ப் பண்ணைச் சிவன் கோயிலிலே கலியப்தம் 4949க்குச் சரியான பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 18ஆம் திகதி சுக்கிர வாரமும் சுவாதி நஷத்திரமுங் கூடிய சுபதினத்திலே, முதன்முதற் சைவப்பிரசங்கம் புரிந்தார். அதற்கடுத்த கீலக வருஷ ஆவணி மாதத்தில் வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தார். அதற்கடுத்த சௌமிய வருஷத்திலே சென்னப்பட்ட ணத்துக்குப் போய் ஓர் அச்சியந்திரம் வாங்கிக்கொண்டு வந்து வித்தியாநுபாலன அச்சுச் சாலை என்னும் பெயர்கொடுத்து, வண்ணார்பண்ணையிலே தாபித்தார். இவர் சென்னப் பட்டணத்திலே இருந்த காலங்களிலே தமது வீட்டிற் சுக்கிர வாரந்தோறும் பிரசங்கஞ் செய்து வந்தனர். வித்துவான்கள், பிரபுக்கள் முதலானோர் பலர் கிரமமாகச் சென்று இவரது பிரசங்கங்களைக் கேட்டு வந்தார்கள். சௌமிய வருஷத்திலே சென்னப்பட்டணத்தினின்று தஷிணதேச யாத்திரை செய்துகொண்டு போங்காலத்தில் இதற்கு முன்னரே இவருடைய கல்வித்திறமை முதலியவற்றைக் கேள்வியுற்றிருந்த திருக்கைலாச பரம்பரைத் திரு வாவடுதுறை ஆதின உபய சந்நிதானங்களும், திருமடத்துக்கு இவரையழைத்து உபசரித்து வித்துவான்களுக்கெதிரில் இவரிடத்திலே இலக்கண இலக்கியங்களிலும் சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் பல ஆட்சேபனைகளைப் பண்ணினார்கள். சந்நிதானங்களும் வித்துவான்களும் இவருடைய வாக்குவல்லபத்தைக் குறித்து மிகவும் ஆச்சரியமும் சந்தோஷமுங்கொண்டு நாவலர் என்னும் பட்டத்தை இவருக்குச் சூட்டினார்கள். நாவலரவர்கள் சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்தது இரத்தாஷி வருஷம் ஐப்பசி மாதம் 28ஆம் திகதி. அப்போது நாவலரவர்களுக்கும் இராமலிங்க சுவாமிகளுக்கும் இடையே தோன்றிய வேறுபாட்டினை நீக்கும் பொருட்டுத் தில்லை வாழந்தணர்களாற் பேரம்பலத்திலே பெருஞ் சபை கூட்டப்பட்ட தினம் சுக்கில வருஷத்து ஆனியுத்திரமாகும். அஞ்சாமையும் ஆண்மையும், சிவபத்தி அடியார் பத்தியும், வாய்ந்த இம்மகான் தாம் செய்து முடிக்க வேண்டிய வேலைகளைச் செய்து முடித்து ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய குஞ்சிதபாத நீழலை யடைந்ததினம் பிரமாதி வருஷம் கார்த்திகை மாதம் 21ஆம் திகதி (1879 டிசம்பர் 06ஆம் திகதி) ஆகும். நவீன ஆராய்ச்சி முறைகளிற் சிக்குண்டு வேதங்களை இழித்துக் கூறும் போலி வித்துவான்கள் மலிந்த இக்காலத்திலே, வேதநெறியை நிலை நிறுத்திய நாவலர் பெருமானை நினைந்து ''நாவலா! நீ இங்கில்லையே!'' என்று வருந்த வேண்டியிருக்கிறது.

ஆறுமுகநாவலர்

அ. சின்னத்தம்பி

தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் மறுமலர்ச்சி அளித்த சமய குரவர்கள் காலத்துக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு தமிழுக்கும் சைவத்துக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் புத்துயிர் அளித்த பெரியார் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களேயாம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நடராசப் பெருமானைத் தரிசிக்கச் சிதம்பரம் சென்றி ருந்தேன். அங்கே தெற்கு வீதியில் நாவலர் பெருமானால் நிறுவப்பட்ட சைவப் பிரகாச வித்தியாசாலையையும் சென்று பார்த்தேன். தமிழும் சைவமும் பெருமை பெற, தமிழ் மக்கள் உயர்வு பெற, மேன்மை கொள் சைவ நீதி எங்கணும் விளங்க நாவலர் பெருமான் ஸ்தாபித்த அப்பாடசாலையின் எல்லாப் பாகங்களுக்கும் அதன் தலைமை ஆசிரியர் என்னை அழைத்துச் சென்றார். அதைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்பொழுது என் மனத் திரையில் இனிமையான பல காட்சிகள் எழுந்தன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவ் வீதிகளிலே முழங்கிய சமய குரவர்களது அருட் பாடல்கள் - அன்பு நெறியில் நின்ற நம் முன்னோர்கள் திரள் திரளாக அப்பாடல்களைப் பாடிக் கொண்டே வீதி வலம் வந்தமை - நாவலர் பெருமான் ஈழத்திலும் தமிழகத்திலும் ஆற்றிய சைவப் பணிகள், தமிழ்ப் பணிகள் - இவையெல்லாம் என் அகக் கண்ணில் தோன்றி என்னை அஞ்சலி செய்யத் தூண்டின.

நாவலர் பெருமான் செய்த பணிகளை இவ்வளவுதான் என்று வரையறுத்துக் கூறவும் முடியுமா? மேல்நாட்டு நாகரிக வலைக்குள் அகப்பட்டுத் தமது பிறப்புரிமையாகிய தமிழையும் சைவத்தையும் மறந்து புறக்கணித்த நிலையில் உள்ளவர்கள் தமிழினதும் சைவத்தினதும் பெருமையை உணரவும், அவர்களது மனத்தில் உள்ள புறச் சமய இருளைப் போக்கவும், சைவ சமயம் பற்றி அவர்களுக்கு இருந்த கறையை அகற்றவும் அவர் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். அதன்மூலம் அறிவொளியை ஏற்றினார். சைவம் என்னும் ஞான விளக்கைப் பிரகாசிக்கச் செய்தார். தமிழ் மக்களின் குறைபாடுகளுக்குக்

காரணம் அவர்கள் சிறந்த பழந்தமிழ் நூல்களைக் கல்லாமையே என உணர்ந்தார். மக்களுக்கு மெய்யறிவை ஊட்டினால் அவர்கள் சைவநெறியின் மாண்புகளை அறிவார்கள். சைவ சமய நூல்களைப் படிப்பதற்கு நிரம்பிய தமிழ் அறிவு தேவை. ஆதலால் தமிழ் அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய பணிகளைச் செய்வதில் ஈடுபட்டார். நாவலர், தொல்காப்பியம், நன்னூல், திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பெரியபுராணம், கந்தபுராணம். கோயிற் புராணம், சைவ சமயநெறி, திருக்கோவையார் முதலிய நூல்களைப் பல ஏட்டுச் சுவடிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்து அச்சிட்டுத் தமிழ் மக்களுக்குக் கொடுத்தார். அவருடைய பதிப்புக்களே தனிப்பெருமை வாய்ந்தவை.

பார்மதித்த செந்தமிழ்நூல் ஏடுகளை ஆராய்ந்து
பதிப்பித் தோர்கள்
ஆர்பதிப்பித் தாலுமாங்கே பிழைநுழைத லுண்டாகும்
அவைக ளின்றிச்
சீர்பதித்த நற்பதிப்பு நாவலர்தம் பதிப்பென்று
செப்பு மேன்மைப்
பேர்பதித்த பெருங்கல்விச் செல்வனிரு சேவடிகள்
பெரிதும் வாழி

என்று ஓர் அறிஞர் நாவலருடைய பதிப்புக்களைப் பாராட்டுகின்றார். இன்றும் அச்சிற் காணப்படும் பழந் தமிழ் நூல்களின் பாடங்களிற் சந்தேகம் ஏற்பட்டால் அறிஞர்கள் நாவலருடைய பதிப்பைத் தேடிப் பார்த்துத் தங்கள் ஆசங்கைகளைப் போக்கிக் கொள்வார்கள். அவர் இயற்றிய வசன நூல்கள் எக்காலமும் அழியாப் பெருமையுடன் விளங்கக் கூடியவை. அவர் எழுதிய பாலபாடங்களையும் பெரிய புராணம் முதலிய வசன நூல்களையும் மாணவர்கள் கற்றால் அவர்கள் நிரம்பிய தமிழ்ப் புலமை உடையவர்கள் ஆவார்கள். சீரிய முறையில் தமிழ் வசன நடையை எழுத வழிகாட்டியவர் அவரே.

அன்னநடை பிடியினடை அழகுநடை
அல்லவென அகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுணடை
பயின்றதமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
எனப்பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் நாவலன்தன் அழியாநல்
ஒழுக்கநடை வாழ வாழி.

சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சேக்கிழார் விழாவுக்குச் சென்றிருந்தேன். நாவலர் பெருமான் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றிய வண்ணை நகரில் விழா நடைபெற்றது. அவர் இனிய சொற்பொழிவுகள் ஆற்றிய வண்ணை வைத்தீசுவரப் பெருமான் ஆலயத்திலிருந்து ஊர்வலம் தொடங்கியது. வழியில் அவர் நிறுவிய பாடசாலையில் உள்ள கோவிலில் ஒரு பூசை நடந்தது. அக்கோவிலின் அழகான அமைப்பு என்னைக்

கவர்ந்தது. தமிழையும் சைவத்தையும் பொன்னே போற் போற்றிய சமய குரவர்களது திருவுருவங்கள், அடியார்கள் அறுபத்து மூவரின் வரலாற்றைப் பக்திச் சுவை ததும்பும் செந்தமிழ்ப் பாக்களில் பாடித் தந்த சேக்கிழார் சுவாமியின் திருவுருவம் ஆகியவற்றைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இத் திருவுருவங்களை வணங்கிய பொழுது மேன்மை கொள் சைவ சமயத்தின் மாண்பெல்லாம் என் மனத்தில் எழுந்தன. அன்பு நெறியைச் சமய குரவர்கள் காட்டினார்கள். அதனால் உலக மக்களை நன்னெறிப்படுத்தினார்கள். மெய்யடியார்களின் வரலாற்றைப் பாடித் தந்து உலகில் பக்தி நெறியை வளரச் செய்தார் சேக்கிழார் பெருமான். நாவலர் தனது இனிய பிரசங்கங்கள் மூலம் அவ்வடியார்கள் காட்டிய அன்பு நெறியை மக்கள் அறியச் செய்து புறச் சமயங்கள் புகலும் பொல்லா மார்க்கத்தைக் கைக்கொள்ளாது சைவ சமயத்தை மேற்கொள்ளச் செய்தார். அல்லாமலும் அடியார்களின் வரலாறுகளை இனிய வசனநடையில் எழுதித் தந்து கற்றோரும் மற்றோரும் எளிதில் உணரச் செய்தார்.

நாவலர் பெருமானின் திருவுருவத்தைப் பார்த்தேன். அவ்வுருவம் எனக்குப் பல கதைகள் சொல்லிற்று. அது அந்நியரின் கீழான பழக்க வழக்கங்களுக்கு நம் மக்கள் அடிமையாகி அழிந்து போகாது காத்த அன்புருவம், சைவத்தையும் சைவக் கோவில்களையும் பாதுகாத்த அருளுருவம், தனது எழுத்தாலும் பேச்சாலும் மக்களைக் காத்த அண்ணலின் உருவம், எவ்வித இன்னல்கள் நேர்ந்தாலும் அவற்றைத் தனது நேர்மையாலும் மன வலியாலும் வெற்றி கொண்ட வீர உருவம், நைஷ்டிகப் பிரமச்சரியம் கொடுத்த உறுதியால் அசைவிலா ஊக்கமுடைய பேருருவம், கிறிஸ்தவப் பாதிரியாம் பீற்றர் பேர்சிவலுக்குச் சைவ சமய மாண்பை எடுத்துரைத்த பெருமை வாய்ந்த உருவம் என்றெல்லாம் பல சிந்தனைகள் என் மனத்தில் எழ நான் பெருமிதமும் பூரிப்பும் அடைந்தேன்.

இத்தகைய பெருமைகள் வாய்ந்த ஆறுமுகநாவலருக்கு ஆண்டுதோறும் நடக்கும் குருபூசையும் வெறும் புறச் சடங்குகளோடு நின்று விடுகின்றது. அவருக்குக் குருபூசை கொண்டாடுவதென்றால் அவர் செய்த அரும்பெரும் தொண்டுகளை மனத்திற் கொண்டு அவர் காட்டிய வழியில் ஒழுக நாமும் முழு மனத்தோடு முயல வேண்டும். எந்த உயர்ந்த செயலைச் செய்வதற்கும் தியாகம் என்னும் பண்பு தேவை. நாவலர் பெருமானின் வெற்றிக்குக் காரணம் அவருடைய சுயநலமற்ற தியாக உணர்ச்சியேயாம். நாவலர் செய்த ஒப்பற்ற தொண்டுகளை நம்மவர்கள் முற்றும் அறிவதற்கான வகையில் ஒரு வரலாற்று நூல் எழுதப்பட வேண்டும். தமிழ், சமயம், வரலாறு, பொருளாதாரம், சமூகவியல் என்பவற்றில் நிரம்பிய அறிவு கொண்ட அறிஞர்கள் நாவலர் பெருமானது வரலாற்றை இனிய எளிய வசனநடையில் எழுதித் தரல் வேண்டும். நாவலர் எழுதிய நூல்கள், பிரபந்தங்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள், அவரைப் பற்றி இதுவரை எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் என்பன எல்லாம் இவ் வரலாற்று நூலில் இடம்பெற வேண்டும். தமிழர் அல்லாதார் அவருடைய பெருமையை அறிவதற்கு இவ்வரலாற்று நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இப்படி ஒரு நூல் எழுந்தால் அது வருங்கால மக்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக அமையும்.

ஆலயங்கள் பக்தி நெறியை வளர்ப்பதோடு அறிவுப் பணியையும் மேற்கொள்ளல் வேண்டும். அறிவு வளர்ச்சிக்கென அமைந்த பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயரத் தோன்றும் கோவில் தமிழன் பண்டுதொட்டு வணங்கிய முருகன் கோவிலாகும். ஈழத் திருநாட்டில் அவதரித்துத் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் அரும்பெரும் தொண்டாற்றிய ஒப்பற்ற பெரியாரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வாழ்க்கை வரலாறும் இவ்வாலயத்திலிருந்து வெளிவர வேண்டுமென்று முருகப்பெருமானைப் பிரார்த்தனை செய்வோமாக.

'இந்து தருமம்' - கும்பாபிஷேக மலர்,
பேராதனைப் பல்கலைக்கழகம், 1968,
பக். ix - xii

ஆறுமுகநாவலர்

ஏ.வி. சுப்பிரமணிய ஐயர்

தமிழில் திருவேணிசங்கமம்

கடந்த நூற்றாண்டில் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் முகிழ்ந்த அறிஞர் பெருமக்கள் தமிழ் மறுமலர்ச்சிக்கும் கல்விக்கும் கணிசமான பங்களிப்பை நல்கினர். அவர்களில் சமயத் தலைவராகவும் கல்விமானாகவும் இருந்த ஆறுமுகநாவலர் முதன்மையானவர்.

அவர் 1822, டிசம்பர் 15ஆம் திகதி யாழ்ப்பாணம், நல்லூரில் கார்காத்த வேளாள குலத்தினரான கந்தருக்கு இளைய மகனாகப் பிறந்தார். கந்தர் அரசாங்க உத்தியோகத்தராகவும் தமிழ்க் கல்விமானாகவும் இருந்தமையால் ஆறுமுகம் மிக இளவயதிலேயே தமிழ் உணர்வு வாய்க்கப் பெற்றவரானார். தனது ஆரம்பக் கல்வியைத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பெற்ற ஆறுமுகம் பின்னர் இரு பண்டிதர்களிடமிருந்து தமிழைச் சிறப்பாகப் பயின்று கொண்டார். பின்னர் வண. பீற்றர் பார்சிவல் அவர்களால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பாட சாலையில் சேர்ந்து கொண்டார். ஆறுமுகத்தின் தமிழ்ப் புலமையால் கவரப்பட்ட அப் பெருமகன் அவரைத் தனது முன்சீபாக பாடசாலை ஒழிந்த நேரங்களில் வைத்துக் கொண்டார். மேலும் அவரைத் தனது பாடசாலையில் உயர் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் படிப்பிக்கவும் கீழ்வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் படிப்பிக்கவும் அமர்த்திக் கொண்டார்.

வண. பார்சிவல் தனது பைபிள் மொழிபெயர்ப்புக்கு ஆறுமுகத்தின் செயல்திறன் மிக்க துணையைப் பெற்றுக் கொண்டார். இதனால் ஆறுமுகம் கிறித்தவத்தைப் பற்றிய பூரண அறிவைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. அதன் இறையியல் அவரின் சமயப் பணிகளுக்குப் பேருதவியாக இருந்தது. பிரதானமாக நாவலரால் செய்யப்பட்ட அந்த மொழிபெயர்ப்பைச் சென்னைக் கிறித்தவ அமைப்புகள் மழவை மகாலிங்க ஐயர் போன்றவர்களுடன் கலந்தாராய்ந்து பிழையில்லாத தரமான மொழிபெயர்ப்பென்று பரிந்துரைத்தன. தமிழ் இலக்கியம் மற்றும் சைவ சமயம் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த ஆறுமுக நாவலர் கிறித்தவ மிசனரிகளால் மேற்கொள்ளப்பட்ட மத மாற்றத்தைக்

கண்டித்தும் சைவம் மற்றும் சைவ சித்தாந்தத்தின் பெருமையை வலியுறுத்தியும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார். இதனால் அவர் சார்ந்திருந்த நிர்வாகத்தினரின் வெறுப்புக்கு ஆட்பட்டு அதிலிருந்து வெளியேற வேண்டியவரானார்.

இந்த நாளிலிருந்து தனது நேரத்தை சைவத்தையும் தமிழ்க் கல்வியையும் இலங்கையிலும் தென்னகத்திலும் பரப்புவதில் செலவிட்டார். தமிழையும் சைவத்தையும் கற்பிக்க ஒரு பாடசாலையை நிறுவிய அவர் யாழ்ப்பாணத்திலும் பின்னர் சிதம்பரத்திலும் சென்னையிலும் அச்சகங்களை நிறுவித் தனது பணியை முன்னெடுத்தார். அக்காலத்தில் ஆற்றல் மிக்க பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் அவர் விளங்கினார். அவருடைய பணிகள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மயூரம் வேதநாயகம் பிள்ளை, சி.வை. தாமோதரம்பிள்ளை போன்ற பெருமக்களால் பாராட்டப்பட்டன. மேலும், திருவாவடுதுறை மடம் அவருடைய பேச்சு வன்மையைக் கண்டு அவருக்கு நாவலர் என்னும் பட்டம் அளித்துக் கௌரவித்தது. இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை தேவர் அவரது பணிகளுக்குப் பூரண ஆதரவை நல்கினார்.

ஆறுமுக நாவலர் இறுக்கமான வைதீக சைவராவர். இதில் தனக்கென்று ஒரு பாணியையும் அவர் கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்திலும் தமிழ் நாட்டிலும் சைவ மறுமலர்ச்சிக்கு ஆதார சுருதியாக விளங்கிய அவர் சைவர்களிடையே தமது சமயம், கோயில், ஆகமங்கள் பற்றிய பெருமித உணர்வை எழச் செய்தார். அதேநேரம் கிறித்தவ மிஷனரிகளின் மதம் பரப்பும் செயல்பாடுகளுக்கு ஒரு பலமான தடுப்பரணாகவும் செயல்பட்டார். இராமலிங்க சுவாமிகள் தனது கவிதைகளைத் தொகுத்து அருட்பா என்ற தலைப்பில் வெளியிட்டபோது அதைக் கடுமையாக எதிர்த்த நாவலர் நான்கு சமயசாரிகள் அருளிய பாடல்களைத் தவிர வேறு பாடல்கள் அப்பெயரைத் தாங்கி வெளிவருவது ஆபாசமும் பித்தலாட்டமுமாகும் என்றார். இதனால் கடும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்து கடைசியில் நீதிமன்றம் வரை சென்றது.

சைவ சமயத் தலைவராக ஆறுமுகநாவலரின் சேவைகள் கருதத்தக்கனவெனினும் தமிழ்க் கல்விக்கு அவரின் பணிகள் குறிப்பிடத்தக்கனவாகும். தமிழ்ப் புலவர்கள் நைந்துபோன பாவடிவங்களில் பிரபந்தங்களும் தலபுராணங்களும் பாடிக் கொண்டிருந்த காலையில் நாவலர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உரைநடையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். அவருக்கு முன்னர் வசன நூல்களாகப் பெஸ்கி பாதிரியாரின் வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குரு கதை, இராமலிங்க சுவாமிகளின் மனுகண்ட வாசகம் போன்ற இலக்கிய, தத்துவ நூல்கள் இருந்தன. ஆயினும் தமிழ்ப் புலவர்கள் ஒரு சிறந்த இலக்கியம் வசனத்தில் உருவாக முடியாது என நினைத்திருந்தனர். ஆறுமுகநாவலர் உண்மையில் நவீன தமிழ் வசன நடையின் தந்தையாகத் திகழ்ந்தார். அவர் எழுதியவற்றுள் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் என்பன குறிப்பிடும்படியான நூல்களாகும். அவரின் நடை பழைய பண்டித நடையிலிருந்து விலகிய எளிமையும் ஆற்றலும் வாய்ந்த நடையாக இருந்தது. அவர் நிறுத்தற் குறிகளையும் சந்தி பிரித்து எழுதுவதையும் தனது எழுத்தில் கையாண்டார். இவற்றை முதலில் கையாண்ட

முதல் சுதேசி முன்னோடி நாவலர் எனலாம். தற்காலத்தில் பெருவழக்குப் பெற்றிருக்கும் தூய மொழி வழக்கை அவர் கையாளவில்லை. அவர் நல்ல சமக்கிருத மொழி அறிஞனாக இருந்ததால் அம்மொழி அறிவு நமது சமயத்துக்கும் பண்பாட்டுக்கும் இன்றியமையாதது என்று அவர் கருதினார். அவரின் இளமைக்கால எழுத்துக்களைத் தவிர அவர் எழுதிய பிற்கால எழுத்துக்கள் ஒரு ஒருங்கிசைவைப் பேணுபவையாக இருந்தன. அவருடைய வசன நடை அநாவசியச் சொல்களைத் தவிர்ந்து தெளிவானதாக இருந்தது. அவர் கோயிற் புராணம், சிவதர்மோதரம் ஆகிய சமய நூல்களுக்கு விளக்கவுரைகளும் நன்னூல் போன்ற சமயச் சார்பற்ற நூல்களுக்கு உரையும் எழுதினார்.

அவர் சிறந்த உரைநடை வல்லாளராகத் திகழ்ந்த போதிலும் தலைசிறந்த தொன்மை நூல் பதிப்பாசிரியராகவும் விளங்கினார். அவர் பெருந்தொகை இலக்கிய, சமய நூல்களைப் பதிப்பித்தார். அவைகளில் கச்சியப்பரின் கந்தபுராணம், வில்லிபுத்தூரரின் மகாபாரதம், மாணிக்கவாசகரின் திருக்கோவையார், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சேனாவரையர் உரை (இது தாமோதரம்பிள்ளையின் பெயரில் வெளியிடப் பட்டது) சுவாமிநாத தேசிகரின் இலக்கணக் கொத்து, மண்டல புருடரின் சூடாமணி நிகண்டு என்பன குறிப்பிடத் தக்கன. ஒரு தமிழ் மாணவன் முதலில் தேர்ந்து எடுக்கும் பதிப்பாக அவர் பதிப்புகள் இருந்தன. ஒரு நூலைப் பதிப்பிக்கும்போது நூல் அறிமுகம் பின்னணித் தகவல்கள், நூல் சுருக்கம், உசாத்துணைக் குறிப்புகள், சுட்டி போன்றவைகளையும் இணைத்துப் பதிப்பித்தார். இதனால் அவர் பதிப்புகள் முழுமையானவைகளாகவும் செம்மையானவைகளாகவும் திகழ்ந்தன. இவைகள் நூலின் மதிப்பைப் பன்மடங்கு உயர்த்தி கல்விமான்களுக்கும் பொதுவாசகருக்கு மிகுந்த பயன் அளிப்பனவாக விளங்கின. பதிப்புப் பணியில் டாக்டர் சாமிநாத ஐயர் மாத்திரமே இவருக்கு நிகராவார்.

ஆறுமுகநாவலரின் பணிகளைப் பற்றிய குறிப்பு, அவர் சிறுவர்களுக்கு எழுதிய நான்கு தொடர் வரிசை பாலபாடம் நூல்களைப் பற்றிக் குறிப்பிடாவிட்டால் நிறைவு பெறாது. அவைகள் கலைக்களஞ்சியத் தன்மை வாய்ந்தவை. எங்கள் சமயம், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் அறிவுரைகள் பற்றிய விபரங்களை அவைகள் தருகின்றன.

நாவலர் நிலைநாட்டிய சாதனைகள்

சு. வித்தியானந்தன்

தமிழ்மொழியையும் நல்லொழுக்கத்தையும் சைவ சமயத்தையும் வளர்த்தவர் நாவலரைப்போல் ஒருவருமில்லை. மொழிபெயர்ப்புக் கலையில் ஈழத்தவர் தலைசி றந்தவர் என்பதனையும் யாழ்ப்பாணத்தமிழ் செந்தமிழ் என்பதனையும் சென்னைப் பட்டணத்தில் நடைபெற்ற பைபிள் மொழிபெயர்ப்பு அரங்கேற்றத்தின்மூலம் தமிழ் நாட்டிலே நிலைநாட்டியவர் நாவலரே.

1847ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் நாள் வண்ணார்பண்ணை வைத்தீசுவரன் கோயிலிற் சைவ ஆகமங்கள் பற்றியும் சமயகுரவர் பற்றியும் முதன்முதற் பிரசங்கம் செய்ததிலிருந்து தமிழில் விரிவுரையாற்றும் முறையைத் தொடக்கி வைத்தார். அவருக்கு முன் கோயில்களிற் படிக்கும் புராண இதிகாசங்களுக்கு விரிவுரை காணுதலே வழக்கமாக இருந்தது; புறம்பான ஒரு பொருள் பற்றித் தமிழில் விரிவுரை நிகழ்த்துவதை அவரே தொடக்கி வைத்தார். அவரைப்போல விரிவுரை நிகழ்த்துபவர் வேறொருவரும் இல்லை என்பதனாலேயே திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் என்ற பட்டத்தை அவருக்கு அளி த்தது. தமிழகத்திற் பிள்ளையென்றால் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையைக் குறிப்பதுபோல, ஐயர் என்றால் சாமிநாதையரையே குறிப்பதுபோல, நாவலர் என்றால் ஆறுமுகநாவலரையே குறிக்கும். மேலும், பல ஆதீனங்களிலும் வேறு இடங்களிலும் பெரியார்களின் இலக்கிய இலக்கண ஐயங்களைத் தீர்த்து அக்கால வித்துவான்களுக்கு எல்லாம் மேல்வரிச் சட்டமாக அவர் விளங்கினார். அவர் கண்ட முடிபே யாவரும் ஒப்ப முடிந்த முடிபாகக் கொள்ளப்பட்டது.

சைவமும் தமிழும் முன்னேற வேண்டுமாயின் போதனாமொழி தமிழ் மொழியாக அமைய வேண்டுமென்பதனை அவரைப்போல் உணர்ந்தவர் வேறொருவருமில்லை. போதனாமொழி தமிழ்மொழியாக அமையின் அது தமிழ் மக்களுக்குப் பல்வகைப் பயனை அளிக்குமென்பதனையும், அத்தகைய கல்வி தமிழரின் உண்மையான ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு இயற்கையோடு பொருத்தமாயிருக்கும் என்பதனையும் உணர்ந்தமை

யாலேயே ஊர் தோறும் பள்ளிக்கூடங்களை அமைக்கத் திட்டமிட்டார். யாழ்ப்பாணத்தில் அவர் நிறுவிய வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை நூறு ஆண்டுகளுக்கு மேற் சைவத் தமிழ் மாணவருக்குக் கல்வி அளித்து வந்திருக்கின்றது. சிதம்பரத்தில் அவர் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலை அங்கு பின்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோன்ற வழிகாட்டியது. குருகுல முறைப்படி வந்த தமிழ்க்கல்வி ஒரு சிலருக்கே பயனளித் தது. பாடசாலைகளைத் தாபித்ததன்மூலம் இம்முறையை மாற்றிப் பலர் கல்வி அறிவு பெற வழி வகுத்தார். அவரை இலவசக் கல்வியின் தந்தை எனவும் கூறலாம். மாணவர் செலவின்றிக் கற்க வைத்ததுமின்றி, வழி வகையில்லாத மாணவருக்கு உணவும் உடையும் அளித்தார். பாடசாலையில் இலக்கிய இலக்கணத்துடன் கணிதம், தருக்கம், வைத்தியம், வாணிகம், வேளாண்மை, சிற்பம் முதலியவற்றைப் படிப்பிக்க ஒழுங்கு செய்தமையும் அவர் செய்த புரட்சியாகும்.

மாணவருக்கும் பொது மக்களுக்கும் சைவ உண்மைகளை விளக்குவதற்குரிய நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட அச்சகம் நிறுவியதும் அவர் செய்த பெருந் தொண்டாகும். அதன் பயனாகச் சமய அறிவு பலரிடம் பரவியது. மாணவருக்கும் ஏனையோருக்கும் பயன்படக் கூடிய பல நூல்கள் வெளிவந்தன. அவர் பரிசோதித்தும், புதிய உரை எழுதியும், புதிதாய் இயற்றியும் வெளியிட்ட நூல்கள் 59; அச்சிற் பதிப்பிக்கும் நோக்குடன் எழுதிமுடித்தவை 10; எழுதத் தொடங்கியவை 9. அவரது 22 வயதிலிருந்து அவர் இறக்கும்வரையுள்ள காலப்பகுதியாகிய 35 ஆண்டுகளுக்கிடையில் பிரசங்கஞ் செய்தல், மதப் பிரசாரம் செய்தல், மாணவருக்குக் கல்வி கற்றுக்கொடுத்தல் முதலிய பல பாரிய வேலைகளுடன் 59 நூல்களை எழுதி அச்சிட்டமை வியக்கத்தக்கது. அச்சுக்கூட வசதிகள் மிகக் குறைவாக இருந்த அக்காலத்தில் இதனைச் செய்து முடித்தமை அரிய பெரிய சாதனையாகும்.

மேலும், அவர் வெளியிட்ட 59 நூல்களும் ஓர் எழுத்துப் பிழையோ அச்சுப் பிழையோ இலக்கணப் பிழையோ இல்லாதிருந்தமை வேறெவரும் இதுவரை சாதியாத தொன்றாகும். நாவலர் பதிப்பு என்றால் நல்ல பதிப்பு என்ற மதிப்பு அவர் பதிப்பு நூல்களுக்கு இருந்தமையாலேயே திருவாவடுதுறை மகாசந்நிதானம் சுப்பிரமணிய தேசிகர், சி.வை. தாமோதரம்பிள்ளை, இராமநாதபுரத்துப் பொன்னுசாமித்தேவர் முதலியோர் நாவலரைக் கொண்டு பல நூல்களைப் பரிசோதித்து வெளியிடச் செய்தனர். அவரை அக்காலப் பதிப்பாள மன்னன் எனலாம்.

''மூலமு முரையும் முறைமுறை நோக்கி
ஏலவே திருத்தி, யெழுதா வெழுத்திற்
பதிப்பித் தளித்தனன்.....''

எனத் தாண்டவராய முதலியார் பாடியிருப்பது நாவலர் பதிப்பின் மதிப்பிற்குத் தக்க சான்றாகும்.

வசனநடை என்றால் இஃதென்று எழுதிக் காட்டியமையாலேயே அவரை வசனநடை கைவந்த வல்லாளர் எனப் பாராட்டினர். நாவலர் காலத்துக்கு முன் இலக்கியம் பெரும்பாலும் செய்யுள் வடிவத்திலேயே இருந்தது. நுண்ணுணர்வு படைத்த புலமை வல்லார்க்கே அவை பயன்பட்டன. நாவலர் எழுத்தைப் பயன்படுத்தியது பொது மக்களுக்காகவே. தமது படைப்பினாற் பலர் பயனடைய வேண்டுமாயின் அப்படைப்பு வசன நடையில் அமைய வேண்டுமென உணர்ந்தார். எனவே, ஆறுமுகாவலர் வசன நடையைக் கையாண்டதும் பொது நலம் கருதி எனலாம். மேலும், அவ்வசன நடை உரையாசிரியர்கள் நடைபோலவோ, தமக்கு முன்தோன்றிய உரைநடையாசிரியர் நடை போலவோ இருந்தாற் பயனில்லை என்பதனை உணர்ந்து, புதியதோர் உரைநடையினைத் தொடக்கிவைத்தார். சொல்லின் வளமும், தெள்ளிய நடையும், கருத்துச் செறிவும், இன்னோசையும், குறியீடுகளுங் கொண்ட நடையினைக் கையாண்டு இக்கால உரை நடையின் தந்தையாக விளங்கினார்.

ஈழத்திலும் தமிழகத்திலும் சைவம் வாழ ஆறுமுகநாவலர் ஆற்றிய பணி அளப்பரிய தென்ற காரணத்தினாலேயே அவர் ஐந்தாம் குரவராகக் கணிக்கப்படுகின்றார். சைவசமய விருத்தியின் பொருட்டு நாவலர் முயன்றபோதும் கிறித்தவரும் ஆங்கில ஆட்சியும் காட்டிய எதிர்ப்பு ஒரு புறமிருக்க, சைவ சமயிகளாலே அவமதிப்பும் இடையூறும் பலவாறு செய்யப்பட்டன. ''நம்முடைய சைவ சமயிகள், தங்கள் சமயமும் பாஷையும் விருத்தி அடையும் பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கிறார்கள்'' என்று நாவலரே வருந்திக் கூறியுள்ளார். இத்தகைய சூழலிற் சைவத்தை வளர்த்தவர் வேறொருவருமில்லை.

மதசீர்திருத்தவாதியாகவும் நாவலர் விளங்கினார். கோயில்களில் நடக்கும் ஊழல் களையும் அக்கிரமங்களையும் அவற்றிற்குக் காலாகிய தர்ம கர்த்தாக்களையும் கார சாரமாக விமர்சனம் செய்து அம்பலத்துக்கு இழுத்துப் போராடினார். சிவ ஆகம நிந்தனை செய்யும் தீஷிதர்களையும் பிரசங்கங்கள்மூலம் தாக்கினார். இவற்றின்மூலம் ஒரு சீர்திருத்த வாதியாகவும் விளங்கினார்.

இவ்வாறு மிகச் சுருங்கிய கால எல்லையிற் பல துறைகளிலே சாதனைகளை நிலை நாட்டிய தனியொரு மனிதர் வேறொருவரும் இல்லை எனலாம்.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவு மலர்,
யாழ்ப்பாணம், 1974, பக். 63 - 64.

நல்லைநகர்
ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்...

சி.க. சிற்றம்பலம்

19ஆம் நூற்றாண்டில் நமது நாடான இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்தது. அப்போது நாடெங்கணும் லௌகிகக் கல்லியூட்டும் கிறிஸ்தவ பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு நம்மவர் பலரை நன்னெறி ஒழுக்கம் விட்டு புன்னெறி அதனில் செலுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்வி வாய்ப்புப் பெற்று அரச பதவிகளையும் பிற சலுகைகளையும் பெற விரும்பிய நம்மவர் பலர் இப்பாடசாலைகளிற் கற்று மதம்மாறிப் பதவிகளும் பெற்றனர். இந்துக்கள் மத்தியில் கிறிஸ்தவர்களின் இந்நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான தலைவர்களோ அன்றி ஏனைய அமைப்புகளோ காணப்படவில்லை. அத்துடன் தமது கலாசாரத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தின் தாக்கத்தினை உணராது உறங்கிக் கிடந்தனர் பலர். ஆனால் சில தூய உள்ளங்கள் செய்வதறியாது கடவுளின் கருணையை வேண்டி நின்றன.

இவ்வேளையில்தான் ஆறுமுகநாவலர் அவர்கள் நமது கலாசாரத்தின் காவலனாக 1822ஆம் ஆண்டில் நமது பழம் பெருமை வாய்ந்த நல்லூரிலே கந்தப்பருக்கும் சிவகாமி அம்மைக்கும் ஆறாவது குழந்தையாக அவதரித்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் ஆறுமுகம். 'நாவலர்' என்பது இவரது பட்டப் பெயராகும். தமிழ் நாட்டில் இவர் செய்த முதற் பிரசங்கத்தின் மூலம் இவரின் வாக்கு வல்லமையை அறிந்த திருவாவடுதுறை மடத்தார் 'நாவலர்' என்ற பட்டப் பெயரை இவருக்கு இவரது 27ஆவது வயதில் 1849இல் வழங்கினர். இளமையிலே தமிழ்க் கல்வியை முறைப்படி கற்ற இவர் ஆங்கிலக் கல்வியைப் பெறுதற்காக யாழ் மத்திய கல்லூரிக்கு அனுப்பப்பட்டார். அங்கு அப்போது அக்கல்லூரி யின் தலைவராக இருந்த பேர்சிவல் பாதிரியர் அவர்கள் இவரின் திறமையைக் கண்டு கிறிஸ்தவர்களின் நூலாகிய விவிலிய நூலினை இவர் மூலம் தமிழில் மொழி பெயர்த்தார். கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதற்கான பல தூண்டுதல்கள் நாவலருக்கு அளிக்கப்பட்டன. நினைத்திருந்தால் தமது ஆங்கில அறிவைப் பயன்படுத்தித் தமது முன்னோரைப் போல நல்ல ஒரு பதவியைப் பெற்று வசதி படைத்த குடும்பத்தில் திருமணஞ் செய்து சுகமான

வாழ்க்கையை நாவலர் அவர்கள் மேற்கொண்டிருக்கலாம். ஆனால் நாவலரோ அதற்கெதிர் மாறாக இல்வாழ்க்கையிற் புகுந்தால் தமது சமயப் பணிக்கு அது இடையூறாக இருக்கும் எனக் கருதி வாழ்நாள் முழுவதும் தூய பிரமச்சாரியாகவே வாழ்ந்தார். வாழ்வில் பேசு வதுபோல் செயலும் அமைதல் வேண்டும் என்று கூறிச் சைவ ஒழுக்கசீலராகத் தாம் வாழ்ந்ததோடு மற்றவரையும் வாழும் வண்ணம் தூண்டினார். இநது சமயத்தில் மறு மலர்ச்சியை ஏற்படுத்தி அற்ப சலுகைகளுக்காகக் கிறிஸ்தவ மதத்திற்கு மக்கள் சேருவதைத் தடுத்து நிறுத்தி வெற்றியும் கண்டார்.

நாவலர் அவர்கள் சமயத் தூய்மையைப் பேணுதற் பொருட்டு, கோயில் அறங் காவலர்கள், பிராமணர்கள் ஆகியோர் நல்லொழுக்க சீலர்களாக வாழவேண்டுமென விரும்பினார்கள். குறிப்பாகப் பிராமண குருமார் கல்வி அறிவோடு, நமது சமயக் கருத்துக்களை நமது மக்களுக்குப் பரப்புவதிலும் கிறிஸ்தவப் பாதிரிமார்களின் பிர சாரங்களைத் தடுத்து நிறுத்துவதிலும் சுறுசுறுப்பாகச் செயற்பட வேண்டுமென விரும்பினார். சுருங்கக் கூறின் நமது சமுதாயத்தின் அச்சாணியாக விளங்கும் திருக்கோயில்கள் திருஅருள் சொரியும் இடங்களாக விளங்க வேண்டும் என விரும்பினார். அத்துடன் நமது சிவாசாரியர் களும் சமய வாழ்வில் ஊறிச் சமயத்தின் காவலர்களாக நின்று கிறிஸ்தவர்களின் மதப் பிரசார நடவடிக்கைகளுக்கு எதிராகச் சமயம் பற்றி மக்களுக்குப் போதிக்க வேண்டு மென்று விரும்பினார். நாவலரின் இவ்விரண்டு விருப்பங்களும் அன்றும் முற்றாக நிறைவேறவில்லை. இன்றும் நிறைவேற்றப்பட்டாகவில்லை என்பது விசனிக்கத்தக்கது. மின்சார வசதிகள் அற்ற காலத்தில் ஏட்டுச் சுவடிகளில் இருந்த நூல்களைப் புத்தக வடிவில் பிழையின்றிக் கொண்டு வருவது இலகுவன்று. என்றாலும் நாவலர் பதிப்பில் பிழையே இல்லை என்ற பெருமை கிடைக்கும் வண்ணம் பெரியபுராணம், கந்தபுராணம் போன்ற நூல்களைப் பதிப்பித்ததுடன் அவற்றைத் தமது உரை நடையிலும் எழுதிப் பதிப்பித்தார். அத்துடன் சமயத்தை இலகுவாக மக்கள் விளங்கிக் கொள்ள 'சைவ வினாவிடை' போன்ற நூல்களையும் வெளியிட்டார்.

பொதுமக்களுக்குச் சமயத்தின் சிறப்புகளை விளக்க ஆலயங்களில் வெள்ளிக்கிழமை தோறும் சமயச் சொற்பொழிவுகளை மேற்கொண்டார். இவரின் முதற் சொற்பொழிவு 1847இல் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் நடைபெற்றது. கோயில்களில் புராண படனம் செய்வதனையும் அறிமுகப்படுத்தியதோடு சுவாமி வலம் வரும்போது திருமுறை ஓதி வரும் வழக்கத்தையும் ஏற்படுத்தி, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் தாமும் இப்பணியில் ஈடுபட்டார். நல்லூர் ஆலயத் தெற்கு வீதியிற் காணி வாங்கித் தரும சாதனஞ் செய்த நாவலர், சைவப் பிரகாசமடம் ஒன்று ஏற்படுத்த விரும்பி அதற்கான தற்காலிகக் கட்டி டத்தையும் அமைத்துத் தமிழ் நாட்டிலிருந்து ஓதுவார்களை அழைத்து வந்து திருவிழாக் காலங்களில் திருவீதிப் பஜனையில் ஈடுபட வைத்தார்.

மிஷனரிமார்கள் வெளியிட்ட பிரசுரங்களுக் கெதிராகக் கண்டனப் பிரசுரங்களை வெளியிட்டு இந்து தர்மத்தின் ஒப்புயர்வற்ற பெருமையினை நிலைநாட்டினார். அரச ஆதரவும் நிறுவன அமைப்பும் செல்வாக்கும் உடைய மிஷனரி நிறுவனங்களுக்கு எதிராகத்

தன்னந்தனியாக ஒரு அமைப்பாகச் செயற்பட்டதால் ஈழம் முழுவதிலும் ஆங்கிலேயருக்கு எதிராக முதல் முதலில் சுதேச கலாசார எழுச்சியை ஏற்படுத்தியவர் என்ற பெருமைக் குரியவர் இவரேயாவார். இதனால் நமது கலாசார மறுமலர்ச்சியின் தந்தை எனவும் போற்றப்படுகின்றார். ஈழத்தில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும், தமிழ் சமயப் பணியாற்றித் தனது தனித்துவமான ஆளுமையின் முத்திரையை அங்கும் பதித்து வைத்தார். இதனால் தமது தமிழ் - சமய மறுமலர்ச்சியால் ஈழத்தையும் தமிழகத்தையும் இணைத்தார். வழிவழி வந்த பழைய சமுதாயப் பாரம்பரியத்தில் சீர்திருத்தம் அவசியம் என விரும்பி சமய சமூக புனருத்தாரணங்கள் பல செய்தார்.

இவ்வாறு சமய சமூக புனருத்தாரண சீலராய் வாழ்ந்த நாவலர், தமது வாழ்வின் இறுதியில் 1879இல் தமிழ் மக்களின் அபிலாஷைகளை அரசாங்க சபையில் பிரதிநிதித்துவம் செய்யத் தகுதி வாய்ந்தவர் சேர். பொன். இராமநாதனே என்று கூறி அவரைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகச் சட்டசபைக்குப் சிபாரிசு செய்து அத்துறையிற் பெரும் பணியாற்றினார். நாவலரின் இலட்சியத்தைச் சிறப்பாக ஒப்பேற்றிய பெருமைக்குரியவர் சேர். பொன். இராமநாதன் அவர்களாவார். நாவலர் தமது சமயப் பிரசாரங்களைத் தமிழகத்தோடு மட்டும் மட்டுப்படுத்தினார். சேர். பொன். இராமநாதன் அவர்கள் மேற்கு நாடுகள் வரை அதனை விஸ்தரித்து வெற்றியும் கண்டார். அத்துடன் சமயத்திற்காகத் தாம் தேடிய சொத்தின் பெரும் பகுதியையும் செலவிட்டார்.

நாவலரின் சமயப் பணிகளே இவரை நமது ஐந்தாவது குரவர் எனக் கொள்ள வைக்கின்றன. இவர் சிவபதமடைந்தபோது இவரின் பணியை மெச்சிய சி.வை. தாமோதரம்பிள்ளை 'நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே' என்று பாட்டிசைத்து நாவலர் பணியின் அருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொண்டார். இது முழுக்க முழுக்க உண்மையாகும். உண்மையிலே நமது ஈழத்துச் சமுதாயத்தில் தோன்றிய முதல இயக்கவாதி என்று நாவலரைக் கூறினால் மிகையாகாது.

நாவலரும் செந்திநாதையரும்
ஒரு ஒப்பீட்டு ஆய்வு

யோகேஸ்வரி கணேசலிங்கம்

''ஸ்ரீ சி. செந்திநாதையரை யான் ஏழு வருட காலம் அறிவேன். ஆறு வருட காலம் என்னுடைய தமிழ் வித்தியாசாலையிலும் ஒரு வருடம் என்னுடைய இங்கிலீஷ் வித்தியா சாலையிலும் உதவி உபாத்தியாயராக இருந்து தமது கடமையை ஜாக்கிரதையோடு பிறழாமல் நடத்திக்கொண்டு வந்தவர். ஒழிவுள்ள பிற நேரங்களில் நான் பொது நன்மையின் பொருட்டு எடுத்துக் கொண்ட பிற கருமங்களையும் நிறைவேற்றினர்.''[1]

மேற்குறிப்பிட்ட வாசகங்கள் 1879ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் ஆறுமுகநாவலர் செந்திநாதையருக்குக் கொடுத்த நன்னடக்கைப் பத்திரத்தில் எழுதியுள்ளவை. இப் பத்திரத்தைக் கொடுத்த மூன்று மாதங்களில் இவ்வுலக வாழ்வை நீத்த நாவலர் செந்திநாதையர் மீது கொண்டிருந்த அபிமானம், மதிப்பு ஆகியவற்றையும், உலோகோபகாரங் கருதிய தமது பணிகளின் தொடர்ச்சியைச் செந்திநாதையர் பேணியமையையும் குறிப்பாகச் சுட்டியுள்ளார். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஈழத்தின் பல பாகங்களிலும், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் காலத்துக்கேற்றவை எவை என்பதனைச் சிந்தித்துப் பலர் செயலாற்றி உள்ளார்கள். இவர்கள் எல்லோருக்கும் முன்னோடியாக நாவலர் பணிகள் விளங்கின. ஈழத்திற்கு ஆங்கிலேயர் வந்தமை, அவர்கள் சமயப் பிரசாரம், சமயப் பிரசார நோக்கத்தோடு அவர்கள் ஸ்தாபித்த பாடசாலைகள், ஈழத்து அறிஞர் பலரை விழிப்படையச் செய்தன. ஆங்கில அரசின் அனுசரணையுடன் நடைபெற்ற கிறிஸ்தவ இயக்கம் கல்வியின் மூலம் மக்களை விழிப்படையச் செய்தது. மக்களிடம் பரவலாகக் கல்வியறிவை ஏற்படுத்துவதன் மூலமே அவர்களைத் தம்பால் ஈர்க்க முடியும் என்ற நோக்குடன் இயங்கிய மிசனரிமாரின் பன்முகப்பட்ட பணிகள் நாடெங்கும் நடைபெற்று வந்தன. மரபுவழி வந்த கல்வியறிவுடன், வெளியுலக அறிவின்றி இருந்த பாரம்பரிய கல்விப் பரம்பரையினர் பலரும்கூடத் தமது சமயத்தை இழக்க முற்பட்டனர். நாடெங்கும் ஏற்பட்ட இந்தவிதமான சூழலிலே விதேச கலாசாரத்தை எதிர்த்துத் தமிழ் மொழியின் தொன்மயினையும், சைவ சமயப் பெருமையினையும்

மக்களுக்கு எடுத்துக் காட்டி அவற்றை நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் பலர் இயங்க முற்பட்டனர். தமிழ்த் தொண்டினையும், சைவத் தொண்டினையும் செய்வதனையே இலட்சிய நோக்கமாகக் கொண்டு வாழ முற்பட்ட பலருக்கும் நாவலர் முன்னோடியாகவும், ஆதர்சமாகவும் விளங்கினார் என்பதனை க. கைலாசபதி பின்வருமாறு தொகுத்துக் கூறியுள்ளமை அவதானிக்கத்தக்கது.

> ''தனது காலத்துக் கேற்றவை எவை என்பதனையும், இன்றியமையாதவை எவை என்பதனையும் சிந்தித்துத் தெளிந்து அவற்றைச் செயற்படுத்தியமையே நாவலரது சிறப்புக்கும், தனித்துவத்துக்கும் அடிப்படையாகும். நாவலரது தற்கால உணர்வே அவரை அவரது சமகாலத்தவர் பலரினின்று வேறுபடுத்தித் தனிச் சிறப்புடையோராய்க் காட்டுகின்றது. நாவலர் வரலாற்றப் பெருமகன். பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அவசியமாயிருந்த சிற்சில கருமங்களை நிறைவேற்றியவர். நன்கு ஆற்றப்பட்ட அக்கருமங்கள் பிறருக்கு ஆதர்சமாக அமைந்தன.''[2]

நாவலர் பணிகளுட் பல புதுப்பாதை காட்டும் பணிகளாகவும், காலத்தை நெறிப்படுத்துவன வாகவும் அன்றைய சமுதாயத்திற்கு உயிர்ச்சத்தை ஊட்டின. இவ்வாறு காலத்துக்கேற்றவை எவை என்பதனை உணர்ந்து செயலாற்றிய பலரையும் இருவகைப் பாகுபாட்டினுள் அடக்கலாம். முதலாவது வகையினர் நாவலரோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு தொண்டாற்றியவர்கள். இவர்கள் நாவலர் பாடசாலையில் படித்தும், ஆசிரியத் தொண்டு புரிந்தும், அவரோடு சமயப் பிரசங்கங்கள் நிகழ்த்தியும் தம்மைப் பல்வேறு வகைகளுள் நாவலரோடு தொடர்புபடுத்திக் கொண்டவர்கள். மற்றைய வகையினர் அவரோடு தொடர்பு ஏதுமின்றிச் சமூகத்தின் தேவையால் உந்தப்பட்டுச் செயலாற்ற முற்பட்டவர்கள். முதலாவது வகையினருள் செந்திநாதையர் முதலிடம் வகிக்கின்றார்.

அக்காலத்தில் நாவலரின் பரந்துபட்ட ஆளுமையும், செயல்களும் துணிவும் பலரை அவர்பால் ஈர்க்க வைத்தன. மிசனரிமாருடன் நேரடியாக மோதி, சமயப் பணியின் பின்னணியிலே தமிழ்ப்பணியும், சமூகப் பணியும் ஆற்ற முற்பட்ட நாவலரின் வழி வழி மரபு தொடரும் பணி தவிர்க்க முடியாததொன்றே. இந்த வகையில் அக்கால அறிஞர் குழாத்தினரின் பன்முகப்பட்ட பணிகளும் மதிப்பீட்டிற்குரியவை. செந்திநாதையர் நாவலருடன் சமகாலத்தில் வாழ்ந்ததுடன் அவரது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி நெருங்கிய தொடர்பு கொண்டும் வாழ்ந்தவர். சுருங்கக் கூறின் நாவலர் பாதையிற் சென்று அவரது இலட்சியங்களைப் பேணும் தலையாய கடமையிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஐயரவர்களது வாழ்க்கை, சமயப் பணி ஆகியன வளர்ச்சியும், தொடர்ச்சியுமாக இருப்பது ஈண்டு அவதானிக்கத்தக்கது.

நாவலர் பிறந்து இருபத்தாறு ஆண்டுகளின் பின்னரே அதாவது 1848இல், குப்பிழானில் காசிவாசி செந்திநாதையர் பிறந்திருக்கின்றார். நாவலர் பிறந்து மொழி பயின்ற காலம் முதல் பெற்ற அனுபவங்களும், பேர்சிவல் பாதிரியாரிடம் பண்டிதராக இருந்து, அவ்வேலையைத் துறந்து தமிழுக்கும், சைவத்திற்கும் உழைக்க முற்பட்ட சூழ்நிலைகளும்

செந்திநாதையர் பிறந்த காலத்திலே சைவாபிமானம் உள்ள பலரையும் நிதானமாகச் செயற்பட வைத்தன. நாவலரும் செந்திநாதையரும் ஆரம்ப கல்வியைத் தத்தமது சொந்த ஊர்களிற் பெற்றபோதும், ஆங்கிலக் கல்வியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிற் பெற்றிருக்கிறார்கள். ஒரே கல்லூரியில் ஒரேவிதமான சூழலில் இருவரும் கல்வி கற்றபோதும் அவர்கள் வெவ்வேறு காலப் பகுதியில் கல்வி கற்றிருக்கிறார்கள் என்பது உணரத்தக்கது. நாவலர் பெற்ற அனுபவங்கள் பலவற்றையும் செந்திநாதையரும் பெற்றிருப்பார் என்பதில் கருத்து வேறுபாடு இருக்காது. இளமைக் காலத்திலே வெஸ்லியன் மிசனரிமாருடைய சூழலிலே பெற்ற அனுபவங்கள் இருவருக்கும் பிற்காலத்தில் தங்களது இலட்சியப் பணிகளைத் தொடங்குவதற்கு உந்து சக்திகளாக விளங்கின.

19ஆம் நூற்றாண்டிலும், 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஈழத்தவர்களை இந்திய ஆதீனங்கள், மடங்கள், சமஸ்தானங்கள் கவர்ந்தன. திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம் என்பவற்றில் கல்வி கற்றல், தென் இந்தியாவில் உபந்நியாசம் செய்தல் ஆகியவற்றை அறிவு வளர்ச்சிக்குத் தேவையாகவும் கௌரவம் மிக்கனவாகவும் நினைத்த ஈழத்தறிஞர்கள் பலர் தமது வாழ்க்கையைத் தென்னிந்தியாவுடன் தொடர்புபடுத்திக் கொள்ளல் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது. ஆறுமுகநாவலர் மேற்கொண்ட, இந்தியப் பயணங்கள், செந்திநாதையர் மேற்கொண்ட இந்தியப் பயணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்குமிடத்து ஒருவரது இந்தியப் பயணம், இன்னொருவரது இந்தியப் பயணத்திலிருந்து வேறுபட்டிருந்தபோதும் அடிப்படையில் இந்தியப் பயணங்களின் நோக்கம் ஒத்திருத்தலை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. செந்திநாதையர் கல்வி கற்பதற்கு என்றும், ஸ்தல யாத்திரைக்கு என்றும் ஆரம்பத்தில் இந்தியாவிற்குச் சென்றவர். பிற்காலத்தில் தொடர்ச்சி யாகப் பல ஆண்டுகளைக் காசியில் கழித்துக் 'காசி வாசி' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொள்கிறார். அத்தோடு மாணாக்கர்களுக்கு அறிவூட்டும் நோக்கத்தோடு பாடசாலை ஒன்றை ஸ்தாபித்ததும், அச்சுயந்திரசாலை அமைத்ததும் இந்தியாவிலேயாகும். நாவலருக்கு 'நாவலர்' பட்டம் கிடைத்ததும் அவர் சிதம்பரத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலை ஸ்தாபித்ததும், அச்சுயந்திரசாலை நிறுவியதும் யாவரும் அறிந்ததே. இவை போன்ற இன்னோரன்ன காரணங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்க்குமிடத்து நாவலர் அவர்களுடன் செந்திநாதையரை ஒப்பிட்டு ஆய்தல் தவிர்க்க முடியாத ஒன்றாகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிசனரிமாருடைய சமயப் பிரசாரம் அரசாங்க அனுசரணையுடன் யாழ்ப்பாணத்திலும், ஈழத்தின் பிற பாகங்களிலும் வெகு தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பொது மக்களுக்குக் கிறீஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கத்தோடு தமது மத உண்மைகளை எடுத்துக் கூறிய பாதிரிகள், சைவ சமயத்திலுள்ள குறைபாடுகளை எடுத்து விளக்கியதன் மூலம் கிறிஸ்தவ சமயத்தைப் பொதுமக்கள் பின்பற்றும் பணியில் உழைப்பதைத் தமது இலட்சியமாகக் கொண்டு சமயப் பிரசங்கங்களில் ஈடுபட்டார்கள். கிறிஸ்தவ திருச்சபைகளிலே நடைபெற்ற இப் பிரசங்கங் களால் சைவர்கள் பலர் மதம் மாறுதல் தவிர்க்க முடியாததாகியது. இச் சூழ்நிலையில் கிறிஸ்தவர்களைப் பின் பற்றி அவர்களது சமயப் பிரசங்கங்களைப் போன்று கோவில்களில்

பிரசங்கங்கள் நிகழ்த்துவதனால் மக்களுக்குச் சமயத்தின் உண்மைப் பொருளை எடுத்து விளக்கலாம் என்பதனை ஆறுமுகநாவலர் அனுபவ வாயிலாகக் கண்டறிந்தார். 1847 மார்கழி முதலாக நாவலர் பிரசங்க மரபை முதன் முதலாக வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலிலே ஆரம்பித்து வைத்தார். அக்காலம் முதலாக சுக்கிரவாரந் தோறும் வண்ணார் பண்ணையிலே ஆறுமுகநாவலருடைய சமயப் பிரசங்கம் நடைபெற்று வந்தது. பாதிரிமாரும், பிறரும் பேர்சிவல் பாதிரியாரை முற்றுகையிட்டு முறையீடுகள் செய்தனர். பேர்சிவல் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதராக இருந்த நாவலரின் நாவன்மையையும், ஆற்றலையுமறிந்த பேர்சிவல் பாதிரியார் நாவலர் பிரசங்கத்திற்குத் தடை ஏற்படுத்தவில்லை. ஆனால், அக்காலம் மிசனரிமாரது எதிர்ப்புக்கள் நாவலருக்கு இருந்தன. எத்தகைய இடையூறுகள் இருந்தபோதும் காலத்தின் தேவை கருதி மனந்தடுமாறிய மக்களுக்கு சைவத்தின் பெருமை, தொன்மை ஆகியவற்றை விளக்க வேண்டிய தேவை கருதி நாவலர் பிரசங்க மரபைத் தொடர்ந்து தனது இறுதிக் காலம் வரை நடத்தினார். நாவலரைத் தொடர்ந்து இம்மரபு பலராலும் மேற்கொள்ளப்பட்டது. செந்திநாதையர் நாவலர் பாடசாலையில் ஆசிரியராக விருந்த ஏழு ஆண்டுகளிலும் தவறாது இப்பிரசங்கங்களைக் கேட்டுக் குறிப்பெழுதிக் கொண்டவர். இவ்வாறான வாய்ப்பு நாவலர் பணிகளைத் தொடர்வதற்குரிய சிந்தனை விரிவைக் கொடுத்ததுடன் மனோபக்குவ வளர்ச்சிக்குக் காலாகவிருந்தது என்பதனையும் சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பின்வரும் கூற்று உறுதிப்படுத்துகின்றது.

> ''அப்பொழுது வித்தியாசாலைக்குத் தலைமை ஆசிரியர் செந்திநாதையர். ஐயர் நாவலர் செய்த ஒவ்வொரு பிரசங்கத்தையும் குறிப்பெடுத்தெழுதிக் கொண்டார். ஆறு வருடம் அது நடந்தது. ஐயரின் சமயப் பேரறிவுக்கு அருமருந்தானதொரு வித்தாயமைந்தது அது.''

பிராமண குடும்பத்தில் பிறந்து முறைப்படி கல்வி கற்ற செந்திநாதையருக்கு இயற்கையாகவே சமயப்பணி, சைவப்பணி என்பவற்றில் ஈடுபாடு இருந்தது. கூடவே நாவலரோடு கொண்டிருந்த தொடர்பும், தான் பெற்ற கல்விச் சூழலும் நாவலரது பிரசங்க மரபின் தொடர்ச்சியாக வாழ்வின் இறுதிக்காலம் வரை அவரைப் பிரசங்கங்கள் ஆற்றச் செய்தன. கொழும்பு ஸ்ரீமான் தம்பையா முதலியார் வேண்டுகோளுக்கிணங்கி அவருடைய சத்திரத்திலே வைதிக, சைவசித்தாந்த உபந்நியாசங்கள் செய்திருக்கின்றார். ஈழத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவிலும் அவரது சமயப் பிரசங்கங்கள் புகழ்பெற்று விளங்கின. 'ஞானத்தின் திருவுருவை' என்ற பெரிய புராணத் திருவிருத்தத்தைப் பீடிகையாகக் கொண்டு திருநெல்வேலியிலே அவர் நிகழ்த்திய சொற்பொழிவு அவருக்குப் புகழைத் தேடிக் கொடுத்தது. கோயம்புத்தூர் சைவசித்தாந்த சபையினர் இவரை அழைத்துப் பிர சங்கம் செய்யக் கேட்டுக் கொண்டதாகவும், உடுமலைப் பேட்டையிலிருந்து அழைப்பு வந்ததாகவும் அறிவதிலிருந்து செந்திநாதையரது சமயப் பிரசங்கம் எத்தனை புகழ் வாய்ந்ததாக அக்காலத்திலே விளங்கியது என்று அறியலாம். செந்திநாதையரது பிர சங்கங்கள் நாவலர் மரபின் தொடர்ச்சியாக நிகழ்ந்தவை என்பதனைப் பண்டிதமணியே பிறிதோரிடத்தில் பின்வருமாறு கூறுவர்.

''ஆறுமுகநாவலரின் ஒரு மாணவர் செந்திநாதையர், உ.வே. சாமிநாதையர் தமிழுக்குச் செய்தது போன்ற பெரும் பணியை செந்திநாதையர் சைவ சமயத்துக்குச் செய்திருக் கின்றார். நாவலர் புராணப் பிரசங்கம், சைவப் பிரசங்கம் என்னும் இவைகளைக் கேட்டு அதன் மேல் குறிப்பு எழுதி வைத்துவிட்டன்றி உறங்கா விரதம் பூண்டவர் செந்திநாதையர்.''[3]

சமயப் பிரசங்க மரபு தமிழகமெங்கணும் செல்வாக்குற்றிருந்த காலத்தில் செந்திநாதையர் முழுமூச்சுடன் பணியாற்றினார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

''கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமே உடையது என் சென்ம தேசமாகவும் நான் இல்வாழ்க்கையில் புகவில்லை. இவை யாவற்றுக்கும் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையாகும்.''[4]

இது நாவலர் ஆய்வில் ஈடுபட்ட பலரும் அறிந்த பிரபல்யம் வாய்ந்த மேற்கோள். சைவ சமயத்தையும், கல்வியையும் வளர்ப்பது தனது பேராசை என்று தன்னடக்கத்துடன் கூறியவர் நாவலர். இதே நோக்கத்துடன் 1848இல் சைவப் பிரகாச வித்தியாசாலை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலத்திலே அரசியல் அனுசரணையுடன் பரந்துபட்ட செல்வாக்கு, பொருளாதார வளம் ஆதிய அனைத்தும் நிரம்பிய மிசனரிமாருடைய பாடசாலைகளுக்குப் போட்டியாகச் சமயக் கல்வி, தமிழ்க் கல்வி போதிப்பதனை முக்கிய நோக்கமாகக் கொண்டு நாவலர் பாடசாலை ஆரம்பிக்கும் பணியினை மேற்கொண்டார். இதே நோக்கத்தோடுதான் 1864இல் சிதம்பரத்திலும் சைவப் பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். பாடசாலைகளை உருவாக்கிக் கல்வி கற்பிக்கும் தேவை இதே காலத்திற் பலருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆறு வருட காலம் ஆசிரியராகப் பணியாற்றியவர் செந்திநாதையர். திருநெல்வேலியிலுள்ள சைவ வித்தியா சாலையில் ஆசிரியராகவிருந்து சமயம், இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றை நாவலர் மெச்சும் வகையிற் கற்பித்தும் வந்திருக்கிறார். இவ்விதமாக ஆசிரியத் தொண்டோடு மட்டும் நிற்காது 1902ஆம் ஆண்டு திருப்பரங்குன்றத்தில் தானே ஒரு பாடசாலை உருவாக்கினார். அதற்கு 'வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த வித்தியாசாலை' என்று பெயர் சூட்டி அங்கு மாணாக்கர்களுக்கு தமிழ்க் கல்வியோடு சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாஷைகளிலுள்ள நூல்களைக் கற்பித்தார். பாடசாலையிற் சிறுவர்களுக்குச் சமயக் கல்வி கற்பிப்பதனால் சைவச் சிறாரை மாற்றும் முயற்சிக்கு எதிராக இவ்வாறான முயற்சிகள் அக்காலத்தில் அவசியமாகவிருந்தது. இதனை மேற்கொண்டே செந்திநாதையர் இயங்க முற்பட்டிருக்கிறார். செந்திநாதையருக்கு உள்ளத்திலே இருந்த ஆசை காரணமாகவே தன்னளவில் அமைதி ஏற்படுத்தும் முயற்சியாக இக் கல்விச்சாலையை ஆரம்பித்திருக்க வேண்டும். தனது வாழ்வின் பெரும் பகுதியை இந்தியாவிற் கழித்ததனாலேயே இவர் ஈழத்தில் பாடசாலை ஸ்தாபியாது திருப்பரங்குன்றத்தில் ஸ்தாபிக்க வேண்டி வந்தது. சமய

எதிர்ப்பைக் காட்டி சைவ உலகைப் பாதுகாப்பதற்கு ஒரே வழி மிசனரிமார் பாடசாலைக்குச் சிறார்களை அனுப்புவதைத் தவிர்க்கக் கல்வி நிலையங்களை உருவாக்குவதே என்பது நாவலர் காலந் தொடக்கமாகப் பலருடைய உள்ளங்களிலும் அரும்பிவந்த உணர்வாகும். செந்திநாதையரே ஓரிடத்தில் இதனைப் பின்வருமாறு கூறுவார்.

> ''ஆசை முதலியன பெரிதும் துறந்து நின்ற சிறு வயசுடைய சிறு குழந்தையின் மனசை எப்படியும் வசப்படுத்தலாம். அந்த மனசிலே கிறிஸ்து மதத்தையும் ஏற்றலாம். அருக மதத்தையும் ஏற்றலாம். அப்பொழுது எது ஏற்பட்டதோ அது ஓர் பொழுதும் அழிவதில்லையாம். இது நோக்கியே இளமையிற் கல்வி சிலையில் எழுத்தென்றார் பிறரும்.''[5]

செந்திநாதையரால் எழுதப்பட்டதாகப் பல நூல்களின் பெயர்ப் பட்டியல் கிடைத்தபோதும் புத்தக ரூபமாக எமக்குக் கிடைப்பவை சிலவேயாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே மிசனரிமார்களின் சமயப் பிரசாரத் தேவையை ஒட்டி அறிமுகப்படுத்தப்பட்ட அச்சுச் சாதனம் காலப்போக்கிலே நாட்டு மக்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்தற்கும் பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்தவப் பின்னணியைக் கல்வி மூலம் பரப்ப முயன்ற பாதிரிமாரின் முயற்சியை இனங்கண்டு எதிர்நிலையாகப் பணியாற்ற முனைந்த ஆறுமுகநாவலரின் பணிகள் அக்காலத்தில் பலரையும் நிதானமாகச் சிந்திக்க வைத்தன. அமெரிக்க மிசனரி மாரின் உதய தாரகையும், இதனைத் தொடர்ந்து வெளிவந்த இலங்கைப் பாதுகாவலன், இலங்கை காவலன், இலங்காபிமானி போன்ற பத்திரிகைகளும் புற்றீசல் போல அவ்வப் போது வெளிவந்த துண்டுப் பிரசுரங்களும், நூல்களும் உருவாக்கி வந்த சூழல் சைவாபிமானிகள் பலரையும் சிந்திக்க வைத்தது. ஆறுமுகநாவலர் வண்ணார்பண்ணையில் வித்தியானுபாலன அச்சகத்தை உருவாக்கினார். அச்சகத்தைத் தொடக்கிய நாவலர் சைவ நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டார். சைவ உலகின் தேவை நோக்கித் தமிழ் நூல்களைப் பரிசோதித்து வெளியிட்டார். நாவலர் பண்ணையில் உருவாகிய செந்திநாதையர் பல நூல்களை எழுதியும் கண்டனங்களைத் துண்டுப் பிரசுரங்களாகவும் வெளியிட்டமையும் வியப்பிற்கு உரியதொன்றல்ல. தேவகோட்டைச் சைவசீலர்களின் உதவியுடன் 1906ஆம் ஆண்டு 'செந்திநாதைய சுவாமி யந்திரசாலை'யை நிறுவினார். இவ்வச்சுயந்திரசாலை மூலம் தமது நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு வந்தார். ஈண்டு நாவலர் பணிகளைத் தொடர்ந்த ஓர் நன்மாணாக்கனாகச் செந்திநாதையர் இயங்க முற்பட்டமை மனம் கொள்ளத்தக்கது.

செந்திநாதையர் எழுதிய நூல்களிலே கந்தபுராண நவநீதம் (1886) சைவ அறிஞருலகை அதிகம் கவர்ந்த தொன்றாகும். கந்தபுராணமாகிய பாற்கடலைக் கடைந்து எடுத்த வெண்ணெய் என்று இதற்குப் பொருள் கூறுவர். கந்தபுராணத்தின் பெருமையை உணர்ந்து அதனை உச்சிமேற் கொள்ள வைத்தவர் நாவலர் பெருமான். அந்தக் கந்தபுராணக் கடலிலே திழைத்து நவநீதம் தந்தவர் செந்திநாதையர்.

கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற சைவ நூல்களை வசன நடையில் மக்கள் தேவை நோக்கி எழுதியவர் நாவலர். எளிய நடையிலே இலகுவான சொற் பிரயோகங்களைக் கையாண்டு பொதுமக்களின் வாசனை ஆர்வத்தை வளர்க்கும் வகையிலும் அதன்மூலம் சமய உண்மைகளை உணர்த்தும் வகையிலும் நாவலர் எழுதியமை போலவே சமய நூல்களின் உள்ளார்த்தமான கருத்துக்களையும், கொள்கைகளையும் மக்களுக்கு விளக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சைவ நூல்களை ஆராய்ந்து அவற்றின் பிழிவாக இந்நூலைச் செந்திநாதையர் எழுதி வெளியிட்டார் எனலாம். இந்நூலினைப் பொன்னம்பலம் அருணாசலம் முதலிய பல அறிஞர்களின் உதவி பெற்று இந்தியாவிலே அச்சிட்டார். தொடர்ந்து ஞானரத்தினாவளி (1888) சைவ வேதாந்தம், தேவாரம் வேதசாரம், தத்துவ விளக்கம் மூலமும் உரையும் (1918). சிவஞான போத வசனாலங்கார தீபம், வஜ்ரடங்கம், வச்சிரதண்டம், சாண்'த்திரியப் பிரசண்ட மாருதம், ஞானபோத விளக்கச் சூறாவளி, சிவனுந் தேவனா என்னுந் தீய நாவுக்கு ஆப்பு, விவிலிய குற்சிதக் குறிப்பு, தாந்திரிக துண்ட கண்டன கண்டனம், வீரபத்திராஸ்திரம், வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் படம், வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த தத்துவப்பட வினா விடை, ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் ஜீவகாருண்ய மாட்சி, நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு[6] என்பன அவர் நூல்களுட் சிலவாகும். இந்நூல்களுட் சில கண்டன நூல்களாகவும், ஏனையவை உண்மைகளை விளக்கும் ஆழமான தத்துவக் கருத்துக்களின் சாரமாகவும் அமைந்தவை. தத்துவக் கருத்துக்கள், தேவாரத்தின் உட்பொருள் என்பன போன்ற, சாதாரண மக்களுக்கு அப்பாற்பட்ட, ஆனால் தேவையான கருத்துக்களைக் கூறுகின்றன. ஆறுமுகநாவலரது பணிகளில் உணர்ச்சியும் அறிவும் ஒருங்கே செயற்பட்டன. மினசரிமாருடன் நேரடியான போராட்டத்தில் ஈடுபட்ட நிலையிலே மக்களைத் தம்பால் ஈர்த்துத் தெளிவுபடுத்தும் நிலை நாவலருக்கு இருந்தது. நாவலர் சைவ சித்தாந்த உண்மைப் பொருள்களை விளக்கினாலும் பொதுமக்களின் தேவையை மனதிற் கொண்டு செயலாற்றினார். செந்திநாதையர் பொதுமக்களின் சமயத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும், கண்டன முயற்சிகள் ஆகியவற்றில் ஈடுபட்டதுடன் சைவ உலகின் சமய அறிவுத் தேவையைத் தெளிவிக்கும் முயற்சியாகத் தமது உள்ளத்தில் ஊறிய கருத்துக்களை உரையாகவும், பாடலாகவும் வெளிக்கொணர முனைந்தார். இருவரையும் வழி வழி மரபாக இணைத்து நோக்க முற்படும்போது இதனை அவதானிக்க முடிகின்றது. செந்திநாதையரின் நூல்கள் எம்மிடையே அதிக பரிச்சயமின்றியிருப்பதற்கு நூல்களின் ஆழமும் ஓர் காரணம் எனலாம். குறிப்பாக இவரது வடமொழி அறிவு, வடமொழி நூல்களோடு தமிழ் நூல்களை ஒப்பிட்டு நூல்கள் எழுதுவதற்குத் துணை நின்றது. இவ்வறிவே நீலகண்ட பாஷ்ய மொழிபெயர்ப்பினை வெளிக்கொணர்வதற்கும் உதவியது. செந்திநாதையரின் நூல்களில் சித்தாந்தக் கருத்துக்கள் சற்று மேலோங்கி நிற்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அவரது சித்தாந்த அறிவின் ஆழத்தையும் அவர் தொண்டின் மகத்துவத்தையும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் பின்வரும் கூற்று உறுதிப் படுத்துகின்றது.

''அறிவு வளர, வளர - முதிர, முதிர கிறிஸ்தவ நெறி வெறும் புறநோய் - அன்ன விசாரம், ஏகாத்மவாத நெறி பொல்லாத உள்நோய் - ஆத்ம வருத்தம் - என்பதைச் செந்திநாதையர் நன்கு உணர்ந்தார். தமிழ் நாட்டுக்கும் தாம் பிறந்த ஈழநாட்டுக்கும் அந்த மகான் அளப்பில்லாத சேவை செய்திருக்கின்றார். மாயாவாத மாருதத்தை ஆசமனஞ் செய்வதற்கு ஐயர் ஓர் ஆதிசேஷனாகவே காட்சியளித்தார். தென்னிந்தியாவிலே நல்லசாமிப்பிள்ளை அவர்கள் சைவசித்தாந்த சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் பெயர்த் தற்கும், ஆண்டாளம்மையார் சைவசித்தாந்த மழை பொழிதற்கும் நமது ஐயர் உறுதுணை யாயிருந்தார்.... இங்கே மாயாவாத துவம்ச கோளரி திரு. நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் கர்ச்சனைகளுக்கும், சுவாமிநாத பண்டிதரின் வீராவேசத்திற்கும், சிவஞான போத திராவிட மாபாடிய வெளிப்பாட்டிற்கும் மகான் செந்திநாதையரே மூல புருஷர்.''[7]

சமய நூல்களையும், சித்தாந்த நூல்களையும் எழுதிய செந்திநாதையர் அக்கால மரபிலிருந்த கண்டன நூல்களையும் எழுதியிருக்கின்றார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாகிய கண்டன இலக்கிய மரபு இரு வகை அடிப்படைகளைக் கொண்டது. ஒன்று சமய உண்மை களைக் காரண, காரியத் தொடர்போடும் சான்றாதாரங்களோடும் நிறுவுதல், மற்றது இலக்கிய இலக்கண முடிவுகளையும் குறிப்பாக உரைவேறுபாடுகளையும் சார்ந்திருத்தல். ஏறத்தாழ நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் உதய தாரகை சமயக் கருத்துக்களைக் கோட்பாட்டு ரீதியாகவும் சடங்காசார டகதியாகவும் வெளிப்படையாகக் கண்டித்தது. இது தவிரத் துண்டுப் பிரசுரங்களின் மூலமும் கண்டனங்களைக் கிறிஸ்தவர் வெளியிட்டனர். நாவலர் இவற்றுக்கெல்லாம் பதிலளிக்கும் வகையில் கண்டன மரபை உருவாக்கினார். மிசனரிமார் மக்களை அறிவு ரீதியாகச் செயற்பட வைத்த சூழ்நிலையில் நாவலரும் அத்தகைய முயற்சி களைக் கையாள வேண்டிய தேவை உருவாகியது. நாவலரது பிர சங்க கால முதலாக உருவாகிய சூழலிலே கண்டனப் பத்திரங்கள் பெருமளவில் வரத் தொடங்கிவிட்டன. நாவலரது சைவ தூஷண பரிகாரம், சுப்பிரபோதம் என்பன வெளிவந்தன. சைவர்கள் எழுதிய நூல்களுக்குக் கிறிஸ்தவர் மறுப்பு எழுதலும், மறுப்புக்கு மறுப்பு எழுதலும் மரபாக இருந்து வந்தது. செந்திநாதையர் கண்டன பிரசுரங்களைத் தனது பெயரிலும், கி.கா.கு. (கிறிஸ்துமத கானன குடாரி) என்ற பெயர்களில் மறைந்து நின்றும் எழுதியுள்ளார். சிவனுந் தேவனா என்னுந் தீய நாவுக்கு ஆப்பு, வஜ்ரடங்கம், விவிலிய கண்டன திக்காரம் என்பன அவர் வெளியிட்ட பிரசுரங்களிற் சில.

''போதகரே! திருநெல்வேலிச் சில்லாவைச் சார்ந்த நான் கூனேரியிலே சிற்சில வருஷங்களுக்கு முன்னே ஸ்ரீ. வேதாந்தையா என்பார் தங்கிய தானத்திலே, நீர் கிறிஸ்து மதப் பிரசங்கம் செய்தபோது கூட்டப்பட்ட சபையாருள்ளே 'விவிலிய குஞ்சிதம்' எழுதிய செந்திநாதையரும் ஒருவர் என்றீர். வேதாந்தையா வீட்டிலே பிரசங்கம் முடிந்து சிற்சில தினம் சென்ற பின்னரே என்னை விவிலிய குஞ்சிதம் எழுதியதாக அறிந்து கொண்டீர் என்று கூறும் நீவிரே அது நான் எழுதினமை, அறியாதிருந்த சபை கூடியகாலத்திலே அது நான் எழுதினமை அறிந்தார் போல எனது பெயருக்கு முன்னே அடைமொழி அடுத்துக் கூறினமை எங்ஙனம் அடுக்கும்?''[8]

என்று போதகரை விளித்து செந்திநாதையர் கேட்கும் வினாவும்,

> ''போதகரே... இதுவரையும் நீவிர் அனுப்ப ஒரு மறுமொழியும் பெற்றிலேம். ஆதலினால் நாம் எழுதிய கடிதப்படி பொய்யும் புழுகும் பொதிந்த ஊத்தைக் கதைகளுக்குச் சமாதானம் சொல்லுதல் எங்ஙனமாகும்?''[9]

என்று கூறும் அவர் வாக்கியங்களும் கிறிஸ்தவ மிசனரிமாருடன் செந்திநாதையர் நேரடித் தாக்குதல் நடத்தியிருக்கிறார் என்பதனை நிரூபிக்கின்றன.

இதுவரை கூறியவற்றிலிருந்து நாவலர் பெருமானின் முயற்சிகளும், பணிகளும், மகான் செந்திநாதையர் பணிகளுடனும், முயற்சிகளுடனும் தொடர்பும் ஒருமைப்பாடும் கொண்டுள்ளனவாக விளங்குகின்றன என்பதனைக் காணலாம். செந்திநாதையரின் வாழ்க்கையும் பணிகளும் மேற்கொண்டு ஆய்வு செய்வதற்கு வேண்டிய தரவுகள் பல கொண்டுள்ளதென்ற குறிப்பை மட்டும் இவ்விடத்தில் கூறுதல் பொருத்தமானதாகும்.

அடிக்குறிப்புகள்

1. கணேசையர், சி., ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், ப. 166.
2. கைலாசபதி, க., நாவலர் மாநாடு விழா மலர், (1969), நாவலர் வகுத்த புதுப்பாதை, ப. 19.
3. கணபதிப்பிள்ளை, சி., கந்தபுராண கலாசாரம், ப. 49.
4. கைலாசபிள்ளை, த., ஆறுமுகநாவலர் சரித்திரம், ப. 23.
5. காசிவாசி செந்திநாதையர், வஜ்ரடங்கம்.
6. கணபதிப்பிள்ளை, மு., ஈழநாட்டின் தமிழ் சுடர் மணிகள், ப. 135.
7. கணபதிப்பிள்ளை, சி., கந்தபுராண கலாசாரம், ப. 78.
8. காசிவாசி செந்திநாதையர், விவிலிய குற்சித கண்டன திக்காரம்.
9. மே.கு.

'காசிவாசி செந்திநாதையர் மலர்',
செந்திநாதையர் ஞாபகார்த்த சபை, குப்பிழான்,
1978, பக். 34 - 46.

மேனாட்டு பாதிரிமார் பார்வையில் ஆறுமுகநாவலர்

எஸ். ஜெபநேசன்

ஆறுமுகநாவலர் 1822ஆம் ஆண்டு பிறந்து 1879ஆம் ஆண்டு மறைந்தார். அவருடைய வாழ்நாள் முழுவதம் புரட்டஸ்தாந்து மிஷன்களின் காலம் எனப்படும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே கழிந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலைத்தேயங்களில் புரட்டஸ்தாந்து நாடுகள் அரசியலிலும், செல்வத்திலும் படைமாட்சியிலும் மேலோங்கின. கத்தோலிக்க நாடுகளான பிரான்ஸ், ஸ்பானியா, போர்த்துக்கல் என்பவை வலி குன்ற, இங்கிலாந்து, ஒல்லாந்து, அமெரிக்கா, டென்மார்க் போன்ற புரட்டஸ்தாந்து நாடுகள் முதன்மை பெறலாயின. பதினெட்டாம் நூற்றாண்டின் கடைக்காற் பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் புரட்டஸ்தாந்து நாடுகளில் பக்தி இயக்கம் தோன்றியது. பிறநாடுகளுக்குச் சென்று இயேசுபிரானை அறியாத மக்கள் மத்தியில் மரப்பிரசாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மக்கள் உள்ளத்தில் உதயமாயிற்று. எனவே, ஒவ்வொரு சபைப் பிரிவும் நற்செய்திப் பிரகடனக் குழுக்களை (Missions) அமைத்து பிரசாரகர்களை ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பலாயின. மெதடிஸ்த திருச்சபையார் 1786ஆம் ஆண்டிலும், பப்டிஸ்ற் திருச்சபையார் 1792ஆம் ஆண்டிலும், அங்கிலிக்கன் திருச் சபையார் 1789ஆம் ஆண்டிலும் இங்கிலாந்து கொங்கிறிகேஷனல் திருச்சபையார் 1795ஆம் ஆண்டிலும் அமெரிக்க கொங்கிறிகேஷனல் திருச்சபையார் 1810ஆம் ஆண்டிலும் தமது மிஷன் அலகுகளை உருவாக்கியிருந்தனர்.

இந்த மிஷன் அமைப்புக்களிலே முதன்முதலாக யாழ்ப்பாணம் வந்த குழு லண்டன் மிஷனரிச் சங்கம் எனப்படும் இங்கிலாந்து கொங்கிறிகேஷனல் திருச்சபையின் குழுவாகும். இந்த அணியைச் சேர்ந்த (L.M.S) தொண்டர்கள் 1805ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தனர். அவர்களில் ஒருவரான வண. ஜே.டி. Palm (பாலன் பாதிரியார்) 1805 தொடக்கம் 1812 வரை தெல்லிப்பளையிற் பணியாற்றினார்.

அவர் சென்றபின் அவர்களுடைய தெல்லிப்பளைப் பணிக்களம் மூடப்பட்டது. அமெரிக்க கொங்கிறிகேஷனலிஸ்ட் தொண்டர்கள் 1816ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்

வந்தனர். 1814இல் மெதடிஸ்த திருச்சபைத் தொண்டர்களும் 1817இல் அங்கிலிக்கன் திருச்சபைத் தொண்டர்களும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். மிஷன் சங்கங்களில் அமெரிக்க கொங்கிறிகேஷனலிஸ்ட் தொண்டர்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமே பணியாற்றினர் என்பதும் பப்டிஸ்ட் தொண்டர்கள் சிங்களப் பகுதிகளில் மட்டும் பணியாற்றினர் என்பதும் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

எனவே, யாழ்ப்பாணத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மெதடிஸ்த, அங்கிலிக்கன், அமெரிக்க மிஷன் தொண்டர்கள் உற்சாகத்துடன் மதப்பிரசாரம் செய்து வந்தனர். இத்தொண்டர்களில் பெரும்பான்மையினராக இருந்தவர்கள் அமெரிக்க கொங்கிறிகேஷனல் அமைப்பைச் சேர்ந்தவர்கள். அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்த கோவிற் பற்றுக்கள் (Parishes) முப்பத்திரண்டு அமெரிக்க மிஷன் தொண்டர்கள் பதினேழு கோவிற் பற்றுக்களிலும் அங்கிலிக்கன் தொண்டர்கள் (C.M.S) பத்து கோவிற் பற்றுக்களிலும், மெதடிஸ்த தொண்டர்கள் மூன்று கோவிற் பற்றுக்களிலும் பணியாற்றி வந்தனர்.

இந்தக் குழுக்களுக்கிடையே எந்தவிதமான போட்டி மனப்பான்மையும் இருக்க வில்லை. கோமிற்றிச் சட்டம் பிணக்குகள் வராது பாதுகாத்தது. கோமிற்றிச் சட்டம் (Comity Rule) என்பது ஒருவகைப் புரிந்துணர்வு ஒப்பந்தம். இதன்படி ஒரு மிஷன் ஓர் இடத்திற்குப் போனால் இன்னொரு மிஷன் அங்கு செல்வதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பட்டினப் பகுதிகளில் இப்படியான தவிர்ப்பு ஏற்படுத்தப் படவில்லை. அங்கு யாரும் பணியாற்றலாம் என்பது விதி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மெதடிஸ்த மிஷன் வடமராட்சியிலும் யாழ். நகரிலும், அங்கிலிக்கன் மிஷன் சுண்டிக்குளி, நல்லூர், கோப்பாய், பளை, உடுத்துறை ஆகிய பகுதிகளிலும், அமொரிக்க மிஷன் வலிகாமம், தென்மராட்சி, தீவுப்பகுதி, உடுப்பிட்டி போன்ற பகுதிகளையும் தெரிந்து கொண்டனர்.

நாவலர் வாழ்ந்த காலத்தில் பெரும்பகுதி விக்ரோரியா மகாராணியார் (1837 - 1901) காலமாகும். இங்கிலாந்தின் புகழ் உச்சக்கட்டம் அடைந்திருந்த இக்காலத்தில் உலகின் நான்கில் ஒரு பகுதி ஆங்கிலேயர் வசம் இருந்தது. ஆங்கிலக் கல்வி, பல விதமான சிறப்புக்களையும் அந்தஸ்தையும் மக்களுக்கு வழங்கிற்று. புரட்டஸ்தாந்து மிஷன்கள், கல்வியையே தமது சமயப் பிரசாரத்தின் கருவியாகக் கொண்டன. கல்வி கிறிஸ்தவ மதப் பரம்பலுக்குத் துணை புரியும், ஒருவனுக்குக் கல்வியளித்து விட்டாற் போதும், அப்பொழுது அவன் தானாகவே பழஞ்சமயத்தை விட்டுவிட்டு கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொள்வான் என்று திடமாக நம்பினர் (The light of erudition had been always favourable to Christianity).

உலகெங்கும் பரந்து பணியாற்றிய மதத் தொண்டர்கள் பெரும்பாலும் ஒரேவிதமான கல்வித் திட்டத்தையே பின்பற்றினர். முதலில் சுதேச மொழிகளில் ஆரம்பக் கல்வி, பின்னர் ஆங்கிலக் கல்வி, அதனைத் தொடர்ந்து ஓர் உயர் கலாபீடம் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரி.

யாழ். நகரில் பணியாற்ற வந்த மெதடிஸ்த மிஷன் தொண்டர்கள் இப்பொழுது யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி அமைந்திருக்கும் இடங்களைத் தமது தலைமை ஸ்தானமாகக் கொண்டனர். இவ்விடத்திற் பணியாற்ற வண. பீற்றர் பேர்சிவல் 1826ஆம் ஆண்டு வந்துசேர்ந்தார். இவர் 1803ஆம் ஆண்டு இங்கிலாந்திற் பிறந்து 1886ஆம் ஆண்டு இந்தியாவில் மறைந்தவர். 1851ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்திற் பணி யாற்றினார். மூன்று வருடங்கள் மட்டும் யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கி வங்காளத்திற் பணியாற்றினார் (1829 - 1832). அங்கு அலக்ஸாண்டர் டஃப் (Alexander Duff) என்பவரின் அப்பழுக்கற்ற கல்விப்பணி அவரை மிகவும் கவர்ந்தது. யாழ்ப்பாணம் திரும்பியதும் கல்விப் பணியில் புத்தூக்கத்துடன் ஈடுபட்டார்.

பல ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பப் பள்ளிகள் உயர்தர பாட சாலைகளாக்கப்பட்டன. இவ்வாறு வளர்ச்சியுற்றதுதான் யாழ். மத்திய கல்லூரி. பருத்தித்துறை பெண்கள் கல்லூரியின் தரம் உயர்த்தப்பட்டது. வேம்படி மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி என்பனவற்றைத் தொடக்கி வைத்தார்.

ஆறுமுகநாவலர் மத்திய கல்லூரிக்குப் படிக்கச் செல்லுதல்

ஆறுமுகநாவலர் யாழ். மத்திய கல்லூரியில் சேருமுன் இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடமிருந்து தமிழை ஐயந்திரிபறக் கற்றிருந்தார்.

1834ஆம் ஆண்டு ஆவணி மாதம் யாழ். மத்திய கல்லூரியில் சேர்ந்து கொண்டார். இவருடைய தமிழ்ப் புலமையைக் கண்ட பீற்றர் பேர்சிவல் அவரை மனதார விரும்பினார். அவரின் தேனூறு சொல்லுக்கு வாயூறி நின்றார். 1841ஆம் ஆண்டு பீற்றர் பேர்சிவல் நாவலரை உயர் வகுப்புக்களுக்குத் தமிழும், ஆரம்பப் பிரிவுக்கு ஆங்கிலமும் கற்பிப் பதற்கும் நியமித்தார். அங்கு கற்பித்த காலத்தில் அதாவது 1847ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் சைவப் பிரசங்கத்தைத் தொடங்கினார். இதனைப் பற்றி கிறிஸ்தவர்கள் முறையிட்ட பொழுதும் பீற்றர் பேர்சி வல் அசையவேயில்லை. நாவலர் 1848ஆம் ஆண்டு தாமாகவே மத்திய கல்லூரியினின்றும் நீங்கினார். அதன்பின் கிறிஸ்தவத்திற்கு எதிரான இயக்கத்தின் தலைமையை ஏற்றார். அதுவரை பிராமணர்களே கிறிஸ்தவ மதப் பிரசாரத்தை எதிர்த்தனர். முத்துக்குமாரக் கவிராயர் தவிர மற்றையவர்கள் பிராமணர்களாகவே இருந்தனர். கிறிஸ்தவ மதப் பிர சாரகர்களும் பிராமணர்களுக்கெதிராகவே துண்டுப் பிரசுரங்களை எழுதி வெளியிட்டனர்.

''சைவ சமயக் குருமாருக்கும் புரோகிதராகிய பாப்பாருக்கும் கிறிஸ்து மார்க்கப் போதகர் பட்சமாய் எழுதுவது'' என மகுடமிட்டு பிரசுரங்களை வெளியிட்டனர். 1847ஆம் ஆண்டு நாவலர் கிறிஸ்து சமய எதிர்ப்புக்குத் தலைமை தாங்கியதும் அந்த இயக்கம் வேளாளர் இயக்கமாக மாறியது.

பீற்றர் பேர்சிவலுக்கும் நாவலருக்குமிடையிலான தொடர்பைப் பற்றி பல சுவாரஸ்ய மான கதைகள் கூறப்படுகின்றன. நாவலர் தொடர்பால் பீற்றர் பேர்சிவல் இந்து சமயத்தைத்

தழுவினாரென்றும், பீற்றர் பேர்சிவல் தொடர்பினால் நாவலர் கிறிஸ்தவரானார் என்றும் கூறப்படுகின்றன. தமிழ்நாட்டில் இராமலிங்க அடிகளுக்கு எதிராக நாவலர் போராட வேண்டியதாயிற்று. அப்பொழுது இராமலிங்க அடிகளாரின் ஆதரவாளர்கள் நாவலர் கிறிஸ்தவரென்று எழுதினர்.

நாவலரைப் பற்றி எழுதியதனைப் போலவே பீற்றர் பேர்சிவலைப் பற்றியும் எழுதினார்கள். ஓர் அமெரிக்கப் பேராசிரியர் ''எமக்கு இங்கு தோன்றிய பெரிய பிரச்சினை என்னவென்றால் பீற்றர் பேர்சிவல் இந்துவாக மாறினார் என்று கூறப்படுவதனைப் பொய் என்று நிரூபிப்பதாகும்'' என்று எனக்கு எழுதினார்.

பீற்றர் பேர்சிவல் இந்துவாக மாறினார் என்பதற்குச் சான்றுகள் இல்லை. ஆனால், யாழ்ப்பாணத்திற் பணியாற்றிய பின்பு கிறிஸ்தவ மதப்பிரசாரத்தின்மீது கொண்டிருந்த ஆர்வம் முற்றாக மறைந்தது. கல்விப் பணியில் ஈடுபட்டு சமஸ்கிருத பேராசிரியராக இராஜதானிக் கல்லூரியில் பணியாற்றினார். 1856இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் நாயகம் என்ற பதவியை ஏற்றார். 1855இல் தின வர்த்தமானி என்ற வாரப் பத்திரிகை ஆரம்பித்தார். இதற்கு ஆசிரியராக, யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவராகப் பிறந்து பின்னர் அதிதீவிர சைவப் பற்றாளரான சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களையே நியமித்தார். பீற்றர் பேர்சிவலுக்கு மதப்பிரசாரத்தில் ஆர்வம் குன்றியமைக்கு நாவலர் மட்டுமே காரணமன்று. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஏற்பட்ட விஞ்ஞான அறிவு விருத்தியும் காரணமாகும்.

1833இல் சார்ள்ஸ் லயலின் மண்ணியற் கோட்பாடுகள் என்ற நூலும், 1859இல் சார்ள்ஸ் டார்வின் எழுதிய இயற்கையான தேர்வின்மூலம் உயிர் இனங்களின் தோற்றம் என்ற நூலும் வெளிவந்தன. இதனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்தவ மதரப்பிரசாரம் உயர்ந்த முறையில் நடைபெறவில்லை.

மேனாட்டு கிறிஸ்தவ பாதிரிமார் நாவலரின் எழுச்சிவரை பலமான எதிர்ப்பைச் சந்திக்கவில்லை. சிறந்த கல்விமான்களும் உயர் குடியிற் பிறந்தவர்களும் கிறிஸ்தவர்களாகிக் கொண்டிருந்தனர். நாவலர் இயக்கம் இதற்கு முற்றுப்புள்ளி வைத்தது. மிஷனரிமாரின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய கறோல் விஸ்வநாதபிள்ளையும் நாவலர் இயக்கத்திற் சேர்ந்துகொண்டார். 1855இல் வட்டுக்கொட்டை செமினரி மூடப்பட்டது. கிறிஸ்தவ மிஷன்கள் தமது ஏடுகளில் மிகுந்த கவலையுடன் எழுதியுள்ளனர்.

வண. உவில்லியம் ஸ்கடர் கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்புத் தீவிரமாகப் பரவி வருகின்றன என்று எழுதுகின்றார்.

> ''இதுவரை காலமும் அவர்கள் மிஷனரிமாரின் முயற்சிகளை ஏளனத்துடன் பார்த்து வந்தனர். ஆனால், இப்பொழுதோ கிறிஸ்தவத்தின் உத்வேகத்திற்குக் கண்மூடிகளாக இராமல் தமது முறைகளைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு அச்சகத்தை அமைத்துப் பாடசாலைப் புத்தகங்களை வழங்கி வருகின்றனர். அப்பாடசாலைப் புத்தகங்கள் பெரும்பாலும் நாம் வழங்கும் நூல்களைப்

போலவே இருக்கின்றன. ஆனால், அவற்றில் ஜீவனுள்ள மெய்யான ஒரே கடவுளின் பெயரை நீக்கி விட்டுத் தமது கடவுளரின் பெயர்களையே போடுகின்றனர். அவர்களிடம் பாடசாலைகளும் இருக்கின்றன. அப்பாடசாலைகளுக்குத் தேவையான நிதியைத் திறமையாகவும் ஒழுங்காகவும் சேர்த்து வருகின்றனர்''

- மிஷனரி ஹெரல்ட், மே, 1851 -

வண. மைக்ஸ் அவர்கள் வண்ணார் பண்ணையிலுள்ள அச்சகத்திலுள்ள அஞ்ஞானத் திற்குச் சார்பாகவும் நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்படுவது யாழ்ப்பாணத்தில் இப்பொழுது தோன்றியுள்ள ஒரு புதுமையாக இருக்கின்றது என்று எழுதுகின்றார்.

- மிஷனரி ஹெரல்ட், ஜூலை, 1855 -

உவில்லியம் ஸ்கடரும், பென்ஜமீன் மைக்ஸ் என்பவரது அமெரிக்க கொங்கிறிகேஷனல் மிஷனைச் சேர்ந்தவர்கள். நாவலரின் ஊடாட்டம் மெதடிஸ்த மிஷனோடுதான் நடைபெற்றது.

இங்கிலாந்தில் மெதடிஸ்த ஆவணங்களைப் பார்வையிட்ட ஆய்வாளர் ஒருவர் பீற்றர் பேர்சிவல், நாவலரைப் பற்றி விரிவான குறிப்புக்களை எழுதவில்லையென்று கூறினார். ''என்னோடு இணைந்து பணியாற்றும் அந்தப் பண்டிதர்'' (The Pundit with whom I work) என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார் என்றார். ஆனால், இலங்கையில் பணியாற்றிய E.J. றொபின்சன் என்ற மெதடிஸ்த மதகுரு நாவலரைப் பற்றி எழுதியுள்ளார்:

சைவ சமய போதகர்களும் ஊழியர்களும் மெதடிஸ்த பாணியில் ஊழியர் குழுக்களை அமைத்துள்ளனர். இது தொடர்பாகத் தமது சமய நூல்களிலிருந்து பகுதிகளை வாசித்தும் பராயணம் செய்தும் வருகின்றனர். வெள்ளி தோறும் மாலைப் பொழுதில் ஒரு விரிவுரையோ அருளுரையோ வழங்கப்படுகின்றது. வண்ணை சிவன் கோவில் பிரகாரத்தில் உயர்ந்த சுவர்களுக்குள் இருக்கும் விசாலமான கொட்டகையில் இவை நடைபெறுகின்றன. ஒழுங்காக நடைபெறாவிட்டாலும் முக்கியமான கிராமங்களான சுன்னாகம், மானிப்பாய் என்பனவற்றிலும் இவை நடைபெறுகின்றன. 1847ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி நடைபெற்ற முதலாவது சொற்பொழிவுக்கு முன்னர் ஆலயத்தின் பிரதான குரு பிள்ளையாரைப் போற்ற ஒரு தேங்காயை உடைத்தார். கூட்டத்தின் முடிவில் அவர் பக்திபூர்வமாக எழுந்து, சபை அமைத்த சகுனம் மிக நன்றாக இருக்கின்றது. தேங்காய் சரி பாதி பாதியாக உடைந்தது. இரண்டாவதாகச் சொற்பொழிவு ஆரம்பமாகுமுன் ஆலயத்திற்குள் மணியோசையைக் கேட்டேன். பிரதான பேச்சாளர்கள் இருவரும் நமது யாழ்ப்பாணப் பாடசாலையில் தினவரவு மாணவர்களாக இருந்தவர்கள். தலைமை தாங்கும் விற்பன்னர் ஆறுமுகநாவலர். இவரே அடிக்கடி சொற்பொழிவு ஆற்றுகின்றார். இயக்கத்தின் முன்னோடி மற்றையவர் அவருடைய நண்பர் கார்த்திகேச ஐயர். ஆறுமுகநாவலர் வேளாளர், அழகானவர், குற்றமற்ற பண்பினர்.

மேனாட்டுப் பாதிரிமார் நாவலருக்கு அதிக மதிப்பளித்தனர் என்பது வெள்ளிடை மலை. ஓர் இயக்கத்தை நடத்துபவன் தூயவனாக இருத்தல் வேண்டும். மிஷனரிமார் நாவலரை மதித்ததற்கு இது முக்கிய காரணமாகும்.

‘நாவலர் பிரபந்தத் திரட்டு’ ஊடாக நாவலரை விளங்கிக் கொள்ளல்

க. இரகுபரன்

‘ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு’ நாவலரால் வேறு வேறு காலங்களில் வேறு வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டவற்றின் தொகுப்பு நூல். அதில் உள்ளவை பெரும் பான்மை வசனமாயும் சிறுபான்மை செய்யுளாயும் அமைவன. பத்திரிகைகளிலும் தனிப்பிரசுரங்களாயும் வெளிப்படுத்தப்பட்டவை; இவற்றைத் திரட்டியவர் நாவலரின் மாணவரும் பெறாமகனுமாகிய த. கைலாசபிள்ளை.

கைலாசபிள்ளையால் திரட்டப்பட்ட நாவலர்தம் இவ்வெழுத்துக்கள் நாவலரின் போதனைகளையும் சாதனைகளையும் சோதனைகளையும் வேதனைகளையும் என்றும் வெளிப்படுத்தி நிற்கும் தன்மைய.

தனியொருவராக நின்று நாவலர் நிகழ்த்திய சாதனைகள் ஏராளம். அவற்றை நிகழ்த்துவதில் அவருக்கிருந்த இடைஞ்சல்களும் ஏராளம். அவர் காலத்துச் சமுதாய நிலையை விளங்கிக் கொள்ள ‘யாழ்ப்பாணச் சமயநிலை’யைப் படிக்க வேண்டும்.

தனக்கிருந்த பன்மொழிப் புலமையும் ஆளுமையும் செயற்றிறனும் அவற்றால் வந்த மேல்வர்க்க தொடர்புகளும் வாய்ப்புகளும் நாவலருக்கு அக்காலத்து அதியுன்னத வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் தேவையானதைவிட அதிகமாகவே வாய்த்திருந்தன. எனினும் தன்னிரு கண்ணென மதித்த சைவத்தின் பொருட்டும் தமிழின் பொருட்டும் வாழ்வை அர்ப்பணித்துத் தாஞ்செய்யும் கருமங்களுக்கு அவ்வுத்தியோக வாழ்க்கை இடைஞ்சலானதென்றே பட்டதால் தனக்கு அமைய வேண்டிய வளமான வாழ்க்கையைப் பரித்தியாகஞ் செய்தவர் நாவலர். தன் இலட்சியங்களை ஈடேற்றும் பொருட்டு வாழ்நாள் முழுவதையும் பிரமசாரியாகவே வாழ்ந்து கழித்தவர் அவர்.

அவர் போக்கு இவ்வாறாக, அவர் வாழ்ந்த சமூகம் எதிர்மாறாகக் கிடந்தது. அது கண்டு கசிந்த கண்ணீரால் எழுதியதே யாழ்ப்பாணத்துச் சமயநிலை. அந்தச் சூழ்நிலையில் நாவலர் வாழ்க்கைப் போராட்ட மயமாகவே மாறிவிட்டது.

அந்தப் போராட்டத்தின் மத்தியிலேயே நூல்களை எழுதியும் அச்சிட்டும் வெளிப் படுத்தல், பழைய நூல்களைப் பரிசோதித்துப் பதித்தல், பாடசாலைகளை நிறுவுதல், கற்பித்தல், தக்கவர்களை அப்பணிகளில் ஈடுபடுத்தல் என்று இன்னோரன்ன சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டு தன் வாழ்நாளில் ஒரு நாளேனும் வீண் நாள் என ஆகிவிடாதவாறு வாழ்ந்தவர் நாவலர். இலங்கையில் மாத்திரமன்றி இந்தியாவிலும்கூடத் தன் சேவைகள் இன்றியமையாதனவாகும்படி வாழ்ந்தவர் அவர்.

இவற்றுக்கெல்லாம் அவருக்குக் கிடைத்த ஒத்துழைப்புக்கள் சொற்பமே; இடையூறுகளே அதிகம்; அன்னியரைவிட நம்மவரே பலர் அவர்க்கு இடையூறு செய்தனர். அநீதிகண்டு பொறாமனத்தினரான நாவலர் யாருக்கும் அஞ்சியதில்லை. பிராமணராகட்டும் பிரபுக் களாகட்டும் அரச அதிகாரிகளாகட்டும் ஆதீன கர்த்தாக்களாகட்டும் யாரேனும் பிழை செய்கிறார்கள் எனக் கண்டால் அவர் அவர்களை விட்டு வைத்ததில்லை. கண்டித்தே தீருவார். அத்தகு கண்டனங்களே இத்திரட்டில் அதிகம்.

நாவலர் சாதனைகளின் வெற்றிக்கு அடிப்படையானவற்றில் இக்கண்டனங்களின் பங்கு கணிசமானது. எனினும் அக்கண்டனங்களே நாவலரைப் பற்றியதொரு ஒரு தலைப்பட்சமான அபிப்பிராயத்தையும் தோற்றுவித்து விட்டன. நாவலர் பெருங்கோபி என்பதே அவ்வபிப்பிராயம். ஒரு சந்தர்ப்பத்தில் நாவலரே அது குறித்துக் கூறியிருக்கிறார். தன் வாரிசாகக் கருதியிருந்த வி. சுப்பிரமணியபிள்ளை காலமானபோது கையறுநிலையில் நாவலர் பாடிய பாடல்களிலொன்றில் அதனைக் காணலாம்.

இருநிலத்தோர் கோபியென எடுத்துரைக்கும் என்சினத்துக்
கொரு பொழுதும் இலக்காகா தொழுகியென துளமுழுதும்
உருகிய காதலிற் கொள்ளை கொண்ட உறவினன் சீர்
பெருகிய சுப்பிரமணிய பெருந்தகையோய் நீயன்றே!

நாவலர் பெருங்கோபக்காரர் என்ற எண்ணத்தை இன்றும் நிலைநிறுத்தி நிற்பன அவர்தம் கண்டனங்களே.

இத்திரட்டினை வெளியிட்டபோது கைலாசபிள்ளை எழுதிய முன்னுரையில் நாவலரின் கண்டனப் போக்குக்குச் சமாதானங்கூறும் பாவனை தொனிக்கிறது.

> ''இக்கண்டனங்களாலே கண்டிக்கப்பட்டவர் சிலர் இப்போதும் உயிரோடு இருக்கலாம். சிலருக்குப் பந்துக்களிருக்கலாம். இவர்களுக்கு இந்நூல் ஒரு போது வெறுப்பைத்தரும். அவர்கள் அப்போது செய்தவைகளையும் எழுதியவைகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பார்த்தால், இவர்களுக்கு ஒருபோதும் வெறுப்பு உண்டாகாது. துவைனந் துரைக்கு எதிராக எழுதப்பட்ட விஷயங்களுக்கு 1877ஆம் ஆண்டு பேதிநோயும், பஞ்சமும் உண்டானபோது, நோயுற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் அவர்கீழ் உத்தி யோகத்தர் சிலர் அத்துரை பிரியப்பட்டுக் கொள்ளுவாரென்டு நினைந்து செய்த கொடுமைகளும் துவைனந்துரை அவைகளைக் கவனியாமல் விட்டவைகளுமே காரணமாகும். அந்தக் காலத்தில் கொழும்பிலே நடந்த Examiner என்னும் பத்திரிகையை

யும் இங்குள்ள கத்தோலிக்கப் பாதுகாவலன் என்னும் பத்திரிகையையும் பார்ப்பவர் களுக்கு நாவலரவர்கள் எழுதியவைகள் பெருங்கண்டனமாகத் தோன்றா. அந்தக் காலமிருந்தபடிக்கு இந்தக் கண்டனங்கள் வேண்டியவைகளேயாம். மற்றவைகளும் இப்படியே. இவ்விஷயங்களிற் குற்றஞ் சொல்வோர் அவை எழுதப்பட்ட சந்தர்ப்பங் களையும் காலங்களையும் நோக்க வேண்டும்.''

பிழைகளைக் கண்டும் பாராமுகமாக இருந்துவிடுகிற போக்கு நாகரிகமாகக் கருதப்படுகிற சூழ்நிலை மாற்றத்தில் நாவலரின் கடும் போக்கான கண்டனங்களுக்கு இத்தகு சமாதானங் கள் அத்தியாவசியமாகிவிட்டன போலும்!

ஆனால் மறைகள் நிந்தனை சைவ நிந்தனை பொறா மனத்தினராகிய நாவலருடைய போக்கில் சமாதானத்துக்கு இடமில்லை. சரியென்றாற் சரி; பிழையென்றாற் பிழையே.

தன் வாழ்க்கையை ஒறுத்தொறுத்து ஒழுக்கத்தையே மேலாகக் கருதி தன் சமய நூல்களுக்கு விசுவாசமாக நீதியை நிலைநாட்டுவதே குறிக்கோளாகக் கொண்டு லோகோபகாரமாய் வாழ்ந்த நாவலரிடம் போலித்தனங்களுக்கு இடமில்லை. போலியான தன்னடக்கங்கூட அவரிடம் இருந்ததில்லை. நீதிக்குப் புறம்பாக நடந்துவிட்டார் என்ற காரணத்தால், கூரிய விவேகத்தால் தன் அன்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமாய், மருகரும் மாணாக்கருமாய் விளங்கிய பொன்னம்பலபிள்ளை என்றும் பாராது அவரைச் சிறைசெல்லப் பண்ணியவர் நாவலர்.

நாவலரின் இத்தகு குண இயல்பினை உணர்ந்து அதன் அடிப்படையிலேயே அவருடைய கண்டனங்களை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

நாவலரின் கண்டனப் பிரபந்தங்களிலே வெளிப்படும் சாதிபற்றிய அவர்தம் நிலைப்பாடே உண்மையில் நாவலர் மேலுள்ள பெரியதொரு மறுவாகக் கருதப்படுகிறது. அது காரணமாக இப்பிரபந்தங்கள் இந்த நூற்றாண்டினரின் முணுமுணுப்புக்கு ஆளாகின. அதனால் அவரது இத்தகு நூல்கள் புதியதொரு பதிப்பினைக்காணும் வாய்ப்பினை இழந்த சந்தர்ப்பமும் உண்டு. நாவலர்மேல் அபிமானம் உள்ளவர்களும் நாவலரின் சாதி நிலைப்பாடு பற்றிய பேச்சையே எடுக்காமல் விட்டுவிடுவ தொன்றையே செய்ய வல்லவர்களாயுள்ளனர். நாவலரை நியாயப்படுத்த யாரும் முயல்வதில்லை; யாராலும் அது முடிவதும் இல்லை. எனினும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நாவலர் பக்கத்து நீதியை எடுத்துரைக்கத் தவறியதில்லை.

சாதி பற்றிய நாவலரின் நிலைப்பாட்டுக்கு அடிப்படையாயமைவது உண்மையில் அவர் பரிபூரணமாய் நம்பிய ஆகமப் பிரமாணமே. ஆகமத்துக்கு அவர் காட்டிய 'கற்பு நிலை'யின் வெளிப்பாடே சாதி பற்றிய அவர்தம் கருத்துக்கள். சாதி நிருணயத்தில், தன் சாதியைக் கூட உயர்த்திப் பேச அவர் முனைந்ததில்லை. தான் வேளாளர் என்றும் வேளாளன் நாலாவது வருணமான சூத்திர வருணத்தினன் என்றும் நம்பி நடந்தவர் நாவலர். வேறு சிலர் வேளாளரைச் சூத்திரரின் உயர்ந்த வருணமாகிய வைசிய வருணத்தார் என்று நிருணயிக்க முனைந்தபோது அதைக் கடுமையாகக் கண்டித்தவர் நாவலர். இவ்வாறு

தன் சாதியை உயர்த்திப் பேசக் கண்டு மௌனியாகத்தன்னும் இராது அதனைப் பிரமாண விரோதமாய் கண்டு எதிர்த்துப் போர்க்கொடி தூக்கியவர் அவர்.

சாதி விடயத்தில் நாவலர் இத்தகு நிலைப்பாட்டினராய் இருந்தாரெனினும் சாதியா சாரத்திலும் சமயாசாரமே மேல் என்பதில் அவருக்கு அசையாத உறுதிப்பாடு இருந்தது. 'சைவ விரோதம்' கண்டு கொதித்தெழுந்த நாவலர்.

''இங்கே நளவருள்ளே சிலர் கள்ளுக்குடிப்பதை விட்டும், பறையருள்ளே சிலர் மாட்டிறைச்சி தின்பதை விட்டும், திருத்தமடைகிறார்கள். இவர்கள் யோக்கியர்களா? கிறிஸ்தவர்களோடு கூடி மாட்டிறைச்சி தின்று சாராயங்குடிக்கும் லலாட சூனியர்களாகிய வேளாளர்களும், இவர்களுக்கு அந்தியேட்டி கலியாண ஓமஞ் செய்யுங் சைவ குருமார்கள் பிராமண குருமார்களும் யோக்கியர்களா?''

என்று கேட்கும் கேள்விகள் அத்தகைய உறுதிப்பாட்டிற் பிறந்தனவே.

இன்னுஞ் சமய ஆசாரமாவது வெறும் புறவாசாரங்களல்ல அகவாசாரங்களே என்பது நாவலர் கொள்கை. அதனைச் 'சைவசமயி' என்ற தலைப்பில் அவர் எழுதியவற்றால் உணரலாம். அது இவ்வாறு தொடங்குகிறது.

''விபூதி தரிப்பது மாத்திரமே சைவ சமயிகட்கு இலக்கணம் என்று அநேகர் எண்ணுகிறார்கள்.

விபூதி தரிப்பது, மற்சமாமிசம் புசியாது விடுவது, இந்த இரண்டு மாத்திரமே சைவசமயிகட்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகிறார்கள்.

விபூதி தரிப்பது, மற்சமாமிசம் புசியாது விடுவது மற்சமாமிசம் புசிக்கிறவர்கள் காணாமற் போசனஞ் செய்வது இந்த மூன்று மாத்திரமே சைவ சமயிகட்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகிறார்கள்.

சைவ சமயிகட்குரிய முக்கிய லக்கணங்களாவன

1. கொலை, களவு, கள்ளுண்ணல், மற்சமாமிசம் புசித்தல், விபச்சாரம், பொய் முதலாகிய பாவங்களை மரணபரியந்தம் விலக்கி நடப்பது.
2. உயிர்களுக்கு இரங்குதல், மெய்பேசுதல், வறியவர்களுக்கு ஒரு பிடி அன்னமாவது கொடுத்தல். செய்நன்றியறிதல் முதலிய இந்தத் தருமங்களை மரண பரியந்தம் பாது காத்து நடப்பது.
3. பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியார், குரு, இராசா முதலிய பெரியோர்களை மரணபரியந்தம் உபசரிப்பது.''

இவற்றின் பின்னரே அவர் புற ஆசாரங்களை வரிசைப்படுத்துகிறார். இன்னும் கல்வியை, குறிப்பாகத் தமிழ்க் கல்வியைப் பொறுத்தவரையில் சைவன் என்ற நிலையில் நின்றும் விடுபட்டுச் சிந்திக்கவும் தயாரானவராகவே நாவலர் இருந்திருக்கிறார்.

தமிழ்ப் புலமை என்ற தலைப்பில் தமிழ்ப் புலமை நிமித்தம் கற்கவேண்டிய நூல்களையும் கற்க வேண்டிய முறைகளையும் ஒரு பாடத்திட்டமாகவே வகுத்துரைத்த நாவலர், கற்க வேண்டிய நூல்களாக வரிசைப்படுத்தியவை சைவ சமய நூல்களே. எனினும் இறுதியில் மேல்வரும் குறிப்பையும் சேர்த்துக் கொண்டார்.

> ''வைணவ சமயிகள் மேற்கூறப்பட்டவற்றுள் சமய நூல்களொழித்து ஒழிந்தவற்றையும் தங்கள் சமய சித்தாந்தங்களையும் கற்றறிந்து அவைகளின் விதிப்படி ஒழுகுக.''

இவ்வார்த்தைகள் பிறர்தம் சமய சுதந்திரத்தில் தலையிடாத தனிப்பெரும் நாகரிகத்தை உணர்த்திநிற்பன. தம் சமயத்தவரல்லாத பிறரையெல்லாம் அஞ்ஞானிகள் என அழைக்கும் அநாகரிகம் அவரிடத்திருந்ததில்லை. அத்தகையரான நாவலர் பொருள் கொடுத்தும் பதவி கொடுத்தும் மக்களை மருட்டித் தம்சமய வழிக்கிழுப்போரைக் கண்டியாதிருப்பாரோ?

சைவம், வைணவம் என்ற பேதங்களுக்கப்பால், கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களையும் கடந்து நீதியையும் மனிதாபிமானத்தையுமே நோக்க வேண்டிய இடத்து மானிடத்தையே பெரிதாக மதித்துத் தம் சமயப் பிடியினின்று தளரவும் நாவலர் பின் நின்றதில்லை. சமயம் வாய்த்தபோது சைவ சமயிகள் என்று பார்க்காது அனைத்துச் சனங்களையும் ஒன்றாகக் கருதியவர் நாவலர்.

அக்காலத்து அரச பிரதிநிதியாக யாழ்ப்பாணத்திருந்த துவைனந்துரையும் அவருக்குச் சார்பாக நின்றோரும் செய்த அநீதிகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்து மக்கள் அனைவருக்கு மாகக் குரல் கொடுத்தவர் நாவலர்.

> ''இது நல்ல சமயம்! சைவருக்கும் நல்ல சமயம்! வைஷ்ணவருக்கும் நல்ல சமயம்! கிறிஸ்தவர்களுக்கும் நல்ல சமயம்! மகமதியருக்கும் நல்ல சமயம்! ஒரு சமயமும் இல்லாதாருக்கும் நல்ல சமயம்! எல்லாருக்கும் நல்ல சமயம்!
>
> ஒருவரும் சந்தேகிக்காத சமயம்! இது நல்ல சமயம்! சொன்னேன் சொன்னேன் சொன்னேன்! இந்தச் சமயத்தைக் கைவிடாதேயுங்கள். கச்சேரி உத்தியோகத்தர்களுக்கும் தலைமைக்காரர்களுக்கும் உண்மைக்கு மாறாகப் பயப்படாதேயுங்கள்.''

என்று நாவலர் அனைத்து மக்களையும் ஒருசேர அணிதிரட்டினார். துவைனந்துரைக்குச் சார்பாக எழுதிய உதயதாரகை பத்திரிகையைக் கண்டித்தபோதும் எல்லாச் சமயங்களையும் ஒரு சேர நோக்கிய அவர்தம் பொது நோக்குப் புலப்படும்.

இன்னும் நியாயம் பேசியவர்கள் எந்தச் சமயத்தாராக இருந்தாலும் நாவலர் பாராட்ட மறுத்ததில்லை. துவைனந்துரைக்கு எதிராக நீதிக்குச் சார்பாக நின்ற பெஞ்சமீன் சந்தியாகு பிள்ளை என்னும் கிறிஸ்தவரைப் பாராட்டும் நாவலர் வாசகங்கள் இவை.

> ''இவர் டிஸ்திறிக்கோட்டுப் பிறக்கிறாசி; கொழும்பு எக்டேமியிலே படித்துத் தெளிந்தவர்; பரம்பரைச் செல்வர்; வெகு சுற்றத் தொடர்புடையவர்; கரையூர் மணியகாரருடைய மருமகன்; தமிழிலே இலக்கணம், இலக்கியம், வைத்தியம், யத்திர சாத்திரம் மந்திர சாத்திரம் முதலிய பலவும் படித்த கதிர்காமப் புலவருடைய வமிசத்தவர்; கரையூர்க்

கலக வழக்கிலே அநீதியாகத் துன்பம் அனுபவித்த ஏழைகள் பக்கம் நின்று அதிதைரியத் தோடு வாதித்த மகாதயாளு.''

யாழ்ப்பாணத்துச் சனங்களை நோக்கி அவர்களுக்கு நன்மை செய்த பெருமக்களை எந்த மதவேறுபாடும் பாராட்டாது விதந்து பேசிய பேச்சு இது:

''இவ்வியாழ்ப்பாணத்துப் பிரபுக்களும், கத்தோலிக்க குருமார்களும், பாதிரிமார்களும், இவ்வியாழ்ப்பாணத்துச் சனங்கள் பஞ்சத்தினாலே படுந்துன்பமெல்லாம் விவரமாக எழுதிய கடிதங்கள் கவர்ணருக்கு அனுப்பப்பட்டன. வன்கண்மை, பொய், வஞ்சனை, கோள், கைக்கூலி வாங்கல் முதலியவைகள் நிறைந்த மகாபாவிகளாகிய உத்தியோகத்தர் களுடைய முகமனுக்குப் பயந்து, உங்கள் தலையிலே நீங்களே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளாமல், மேற்சொல்லிய பரோபகாரிகளை நம்பி அவர்களை அநுசரித்து நடந்து வாழுங்கள்.''

சமய விடயத்தில் தனக்கு எதிரான பத்திரிகைகளும் சமூக நன்மைக்காகப் பாடுபடும்போது அவற்றைப் பாராட்ட நாவலர் தவறியதில்லை.

''இனி மற்றொருவருடைய கேள்வியொன்று உண்டு. அதற்குத் துனவனந்துரையும் கம்மிஷனர்களும் யாது செய்வார்கள்! கேள்வியாருடைய கேள்வியோ! யாழ்ப்பாண கத்தோலிக்க பாதுகாவலனுடைய கேள்வி. அந்தக் கேள்வி என்னையோ! தமக்குக் கொடுக்கப்பட்ட துவிபாஷிகர் (Intepreter) சனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரரல்லர் என்பதை நன்றாக அறிந்த கம்மிஷனர்மார் தம்முடைய றிப்போட்டில் அதனைக் குறித்துப் பேசாது விட்டதென்னோ? என்றதுதான் அந்தக் கேள்வி அடடா! இந்தக் கேள்வி கோடி பொன் பெறுமே!....''

இவ்வாறு சரியைச் சரியென்றும், பிழையைப் பிழையென்றும் பேசுவதில் நாவலர் சாதி, சமயம், இன பேதம் யாவும் கடந்தவர் என்பதே உண்மையாகும்.

''யோக்கியருக்கும் கும்பிடு அயோக்கியருக்கும் கும்பிடு. யோக்கியருக்கும் பாதகாணிக்கை அயோக்கியருக்கும் பாதகாணிக்கையானால் திருத்தம் எப்படி உண்டாகும்; யோக்கியரை உயர்த்தி அயோக்கியரைத் தாழ்த்தினாலன்றோ அயோக்கியர் தொகை குறையக் குறைய யோக்கியர் தொகை அதிகப்படும்.''

இதுதான் நாவலரின் கோட்பாடு.

நாவலர் பிரபந்தங்கள் பலவும் இவ்வாறு சமூக நோக்கினவாயிருக்க அவற்றால் அவருக்கு மிஞ்சியது கோபி என்ற பெயரேயாய் முடிந்தது. நாவலரின் பிரபந்தங்களால் அவரின் சுபக்கம் மறக்கப்பட்டு பரபக்கமே மிக்கு நோக்கப்படுவதாயிற்று.

நாவலரின் சுபக்கம் என்பது நீதியைப் பாராட்டி லோகோபகாரஞ் செய்த பக்கம்; பரபக்கமாவது அநீதியைக் கண்டித்து லோகோபகாரம் செய்த பக்கம்.

போலியருட்பா மறுப்பு, 'நல்லூர்க் கந்தசுவாமி கோயில்' முதலானவற்றையும் இந்த அடிப்படையிலேயே விளங்கிக் கொள்ள வேண்டும்.

அருட்பா மறுப்புப் போராட்ட வரலாறு இராமலிங்கர் விசுவாசிகள் சிலரால் தலைகீழாக மாற்றியெழுத்தப்பட்டதும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பேராசிரியர் பொ. பூலோக சிங்கம் முதலானோர் புரட்டுகளை அம்பலப்படுத்தி உண்மை வரலாற்றைத் தக்கபடி நிலைநிறுத்தியதும் தனிவரலாறு. அதற்கெல்லாம் உறுதுணையாக அமைந்தவற்றுள் இப்பிரபந்தங்களும் அடங்கும்.

நாவலரின் சிவாகம விசுவசிப்புக் காரணமாகவும் நீதியுணர்வு காரணமாகவும் விளைந்த போராட்டமே நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முகாமைக்கெதிரான போராட்டம். அப்போராட்டம் யாழ்ப்பாணச் சைவ வழிபாட்டு மரபுகளில் சிலபல சீர்திருத்தங்களைத் தோற்றுவித்தன. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் ஆகம வழிபாட்டு முறையை நிலைநிறுத்துவதில் நாவலர் வெற்றி கண்டாரா அல்லது வெற்றி காண வேண்டுமா என்பது வேறு விடயம். எனினும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விடயத்தில் நாவலர் பக்கத்து நியாயங்களை இப்பத்திரிகைகள் இன்றும் நிலைநிறுத்த வல்லன.

'யாழ்ப்பாணச் சமயநிலை'யில் நாவலர் கூறிய கீழ்வரும் வாசங்கள் இன்றும் இந்த மண்ணுக்கு நாவலரின் தேவையை வலியுறுத்தி நிற்பதைப் படித்து உணர்ந்து கொள்ளலாம்.

> ''சைவ சமயிகளே! உங்கள் கோயில்களிலே பொது மகளிருடைய நடன சங்கீதம் வாண விளையாட்டு முதலியவைகளை ஒழித்து விடுங்கள். நிருவாணமாயும் காமத்தை வளர்த்தற்கு ஏதுவாயுமுள்ள பிரதிமைகளையும் படங்களையும் அமைப்பியாதொழியுங் கள். கோயில்களிலே சைவப் பிரசங்கம், வேத பாராயணம், தேவார திருவாசக பாராயண முதலியவைகளைச் செய்வியுங்கள். உங்கள் குடும்பத்தோடு நியமமாகப் போய்ச் சைவப் பிசங்கங்கள் கேளுங்கள். கிலமாயுள்ள கோயில்களைப் புதுக்குவியுங்கள். ஒன்றுக்கொன்று சமீபத்தினதாகப் பல கோயில்களைக் கட்டுவியாதொழியுங்கள். நித்திய பூசைக்கு முதற்பொருள் சேருமுன் கோயில் கட்டுவிக்கத் தொடங்காதொழியுங்கள். நித்திய பூசைக்குப் பொருள் இல்லாத கோயில்களிலே இடம்ப நிமித்தத் திருவிழாவைத் தொடங்காது நித்திய பூசையைக் கிரமமாக நடத்துவியுங்கள். சைவ சமயத்துக்கு முழுதும் விரோதமாகிய மதுபானம், மாமிசபோசன முதலிய தீமைகள் தலைப்படாவண்ணம் விலக்குங்கள். நீங்கள் வெயர்வையொழுகப் பலவித முயற்சிகளினால் வருந்திச் சம்பாதித்த பொருளைக் கூத்து முதலிய வேடிக்கைகளிலும் பொய் வழக்குகளிலும் செலவு செய்து, பழி பாவங்களைத் தேடிக் கொள்ளாது, இம்மை மறுமைகளுக்கு உபயோகமாகிய கல்வி விருத்தியிலே செலவு செய்து, புகழ் புண்ணியங்களைத் தேடிக் கொள்ளுங்கள். கல்வி அறிவில்லாதவர்களையும் நல்லொழுக்கம் இல்லாதவர்களையும் குருமாரெனக் கொள்ளாது தள்ளிவிடுங்கள். உங்கள் குருமரபினருள்ளே கல்வி அறி வில்லாதவர்களுக்கு அன்ன வஸ்திரங் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அவர்களைத் திருநந்தனவனம் வைத்தல், புஷ்பமெடுத்துத் திருமாலை கட்டித் திருக் கோயிலுக்குக் கொடுத்தல், திருக்கோயிலிலே திருவலகிடுதல், திருமெழுகிடுதல், திருவீதியிற் புல்லைச் செதுக்குதல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்யப் பண்ணி, அவர்களுக்கு அன்ன வஸ்திரங் கொடுங்கள். சிவாகம உணர்ச்சியால் அன்றிப் பெறப் படாத குருத்துவஞ் செய்ய ஒட்டாதேயுங்கள். அவரவர் தகுதிக்கேற்ற வேலை கொடுத்து

அவரவரைப் போஷிப்பதே நீதி. பரம சற்குருவாகிய திருஞான சம்பந்த மூர்த்தியனார் பதினாறாயிரந் திருக் கூட்டத்தோடு சிவாலயங்களெங்குந் தாளந் தட்டித் தேவார மோதியருளினமையைப் பெரியபுராணத்தால் அறிந்திருந்தும், தாங்கள் சுவாமி உற்சவங் கொண்டருளும் பொழுது தாளந்தட்டித் தேவாரமோதக் கூசுகின்ற பெரும் பாவிகளைச் சைவ குருமாரெனக் கொண்டு வழிபடாமலுங் காணிக்கை கொடாமலும் வெறுத்து ஓட்டி விடுங்கள். ஆலயப் பிரதிட்டை முதலிய கிரியைகளைச் சிவாகமத்தில் வல்ல பெரியோர்கள் பலரையிருத்திக் கொண்டு, அவர்களோடு கலந்து ஆலோசித்து, மந்திரக் கிரியா பாவனைகள் வழுவாவண்ணம் நடத்துவியுங்கள்.''

கண்டனகாரராகவே பெயரெடுத்து விட்ட நாவலரின் கண்டனங்களுக்கு ஆளானவர்கள் சாதாரணர்களில்லை. அரச அதிகாரிகள், பிரபுக்கள், வெகுசனப் பத்திரிகைகள், செல்வாக்கு மிக்க தீட்சிதர்கள், பிராமணர்கள் என்று சமூக மேல் மட்டத்தினரே நாவலரின் கண்டனங்களுக்கு ஆளானவர்கள். அவர் தன் தேவை கருதி எந்தப் பிரபுவையும், கண்டு வணங்கியதில்லை. ஆதீனத்தார்க்கு அடி பணிந்ததில்லை. தேவையின் நிமித்தம் நரஸ்துதி செய்ததில்லை. தன் மனச்சாட்சிக்குச் சரியானதென்று பட்டதை வெளிப்படுத்தியதும் அவற்றைச் செயற்படுத்தியதும் நன்மை செய்தோரைத் தட்டிக் கொடுத்ததும் பிழையென்று கண்டவற்றைச் செய்யாது விடுத்ததும் செய்தவரைக் கண்டித்ததுமே நாவலரின் வாழ்க்கை.

ஆனால், அவருடைய வாழ்நாளில் அவராற் கண்டிக்கப்பட்டவர்களே அவரைக் கண்ணியப்படுத்தியிருக்கிறார்கள். ஆகமப் பிரமாண நிமித்தமாய் நல்லூர்க் கோயிலாரோடு முரண்பட்டு இருபது வருடத்துக்கு மேலாக அக்கோயிலுக்குச் செல்வதையே விடுத்து வாழ்ந்த நாவலரை எப்படியேனும் தம் கோயிலுக்கு வரச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அவர் கருத்துக்கெல்லாம் தாம் உடன்படுவதாகக் கூறி அவரை வரவேற்று மரியாதை செய்தார்கள் அக்கோயிலார்கள்.

நாவலர் காலமானபோது அவரின் அந்தியக்கிரியை நாளை விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தினார் நாவலரின் பெருங்கண்டனங்களுக்காளான துனவனந்துரை.

யாரையும் சமய குரவர்க்குச் சமமாகப் பேசுவதைச் சகியாதவரான நாவலரை ஐந்தாங் குரவரெனப் போற்றத் தலைப்பட்டார்கள் அவரின் விசுவாசிகள்.

இவையெல்லாம் நாவலரின் ஆத்ம சத்தியின் பலாபலன்கள்.

நாவலரின் போக்குகள் சில இன்றைய சூழ்நிலையில் பிற்போக்கானவையாகக் கொள்ளத் தக்கவை. ஆனால் இலங்கையில் முற்போக்கெழுத்தாளர் என்று தம்மை வரித்துக் கொண்டவர்களே நாவலர் பணியில் முன்னிற்கும்படியான சூழ்நிலை ஒன்று இந்த நாட்டிலே வந்து வாய்த்தது. முற்போக்கெழுத்தாளர்களே நாவலரின் உண்மை வாரிசுகள் என்ற பாங்கில்,

''கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக சமுதாய நோக்கும் தேசாபிமானமும் தமிழிலக்கிய ஆர்வமும் கொண்ட இன்றைய தேவைகளை இலக்கியத்திற் கலந்து ஈழத்துத் தமிழெழுத்

தாளர்கள் இயங்கி வருவதும் நாவலர் மரபின் நவீன வெளிப்பாடுகள் என்றே எண்ணத் தோன்றுகிறது.''

என்று தம்மை நாவலரின் வாரிசுகளாகக் கூறிக்கொள்வதில் பெருமைகொள்கிறார் இலங்கை முற்போக்கெழுத்தாளர் அணியின் தானைத்தலைவராக விளங்கிய பேராசிரியர் கைலாசபதியவர்கள்.

இதுவும் நாவலரின் ஆத்மசுத்திக்குக் கிடைத்த வெற்றியேயன்றி வேறில்லை.

யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்த நாவலர் தமிழ் கூறும் நல்லுலகமெங்கணும் தன்னை வியாபித்துக் கொண்டதும் இலங்கையின் தேசிய வீரராய் விளங்கப்பெற்றதுமான வரலாறுகள் இப்பிரபந்தத்திரட்டிலே விளக்கம் பெறுகின்றன. அவை என்றும் நாவலரை இவ்வுலகிலே நிறுவவல்லன.

நாவலர் பிரபந்தத்திரட்டு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1997. (பதிப்புரை)

கட்டுரையாளர்கள்

- பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை
  முன்னைநாள் தலைவர், தமிழ்த்துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- பிரேம்ஜி
  முன்னைநாள் பொதுச் செயலாளர்
  இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்.

- பேராசிரியர் வி. சிவசாமி
  முன்னைநாள் தலைவர், சமஸ்கிருதத்துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- திரு. மு. இராமலிங்கம்
  ஆய்வாளர்
  வட்டுக்கோட்டை / வெள்ளவத்தை.

- தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன்
  வேந்தர்
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- பேராசிரியர் பொ. பூலோகசிங்கம்
  முன்னாள் பேராசிரியர், தமிழ்த்துறை
  பேராதனைப் பல்கலைக்கழகம்

- ஏ. பெரியதம்பிப்பிள்ளை
  முன்னைநாள் தலைமைத் தமிழாசிரியர்
  அரசினர் கல்லூரி, மட்டக்களப்பு.

- தகைசார் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
  முன்னைநாள் தலைவர், இந்து நாகரிகத்துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- பேராசிரியர் மௌ. சித்திரலேகா
  முன்னைநாள் தலைவர், மொழித்துறை
  கிழக்குப் பல்கலைக்கழகம்.

- பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்
  இந்துநாகரிகப்பிரிவு, தமிழ்த்துறை
  பேராதனைப் பல்கலைக்கழகம்.

- தகைசார் பேராசிரியர் சி. தில்லைநாதன்
முன்னைநாள் தலைவர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

- சொக்கன் (திரு. க. சொக்கலிங்கம்)
முன்னைநாள் விரிவுரையாளர்
ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, கோப்பாய்.

- பேராசிரியர் எம். ஏ. நுஃமான்
முன்னைநாள் தலைவர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

- திரு. மோ. கோ. கோவைமணி
ஆராய்ச்சி உதவியாளர், ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

- பேராசிரியர் க. கைலாசபதி
முன்னைநாள் தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- திரு. சோ. பத்மநாதன்
முன்னைநாள் அதிபர்
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி.

- பேராசிரியர் பேனாட் பேற்
மொழியியல் மற்றும் சமூக கலாசார மானிடவியல்துறை
யேல் பல்கலைக்கழகம், அமெரிக்கா.

- புலவர் செ. து. தெட்சணாமூர்த்தி

- பேராசிரியர் ப. சந்திரசேகரம்
முன்னைநாள் தலைவர், கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- பேராசிரியர் வ. ஆறுமுகம்
முன்னைநாள் தலைவர், கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- திரு. எம். எம். சமீம்
  முன்னைநாள் கல்விப்பணிப்பாளர்.

- பேராசிரியர் இ. குமாரவடிவேல்
  முன்னைநாள் தலைவர், பௌதிகத்துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
  முன்னைநாள் தலைமைத் தமிழ் விரிவுரையாளர்
  சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை, திருநெல்வேலி.

- வைத்தியகலாநிதி எஸ். பத்மினி கபாலிமூர்த்தி
  இணைச் செயலாளர், தவத்திரு ஆறுமுகநாவலர் அறக்கட்டளை
  சிதம்பரம்.

- வைத்தியகலாநிதி சு. அருள்மொழிச்செல்வன்
  தலைவர், தவத்திரு ஆறுமுகநாவலர் அறக்கட்டனை
  சிதம்பரம்.

- பேராசிரியர் ச. தனஞ்சயராசசிங்கம்
  முன்னைநாள் தலைவர், தமிழ்-இந்துப் பண்பாட்டுத்துறை
  வித்யாலங்கார பல்கலைக்கழகம்.

- பேராசிரியர் காத்திகேசு சிவத்தம்பி
  முன்னைநாள் தலைவர், தமிழ்த்துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- பேராசிரியர் சபா. ஜெயராசா
  முன்னைநாள் தலைவர், கல்வியியல் துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- சுவாமி விபுலாநந்தர்

- பேராசிரியர் அ. சின்னத்தம்பி
  முன்னாள் பேராசிரியர், மகப்பேற்று மருத்துவத்துறை
  இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை.

- ஏ. வி. சுப்பிரமணிய ஐயர்

- பேராசிரியர் சு. வித்தியானந்தன்
  முன்னைநாள் துணைவேந்தர்
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

- பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்
  முன்னைநாள் தலைவர், வரலாற்றத்துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- திருமதி. யோகேஸ்வரி கணேசலிங்கம்
  முன்னைநாள் விரிவுரையாளர், தமிழ்த்துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழம்.

- வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
  முன்னைநாள் பேராயர், தென்னிந்திய திருச்சபை
  யாழ்ப்பாணம்.

- கலாநிதி க. இரகுபரன்
  சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை
  தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மொழிபெயர்ப்பாளர்கள்

- திரு. சோ. பத்மநாதன்
- திரு. சா. திருவேணிசங்கமம்




நாவலர் பெருமான் அவர்களால் அனுதினமும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்;
அன்னாரது உறவு வழியினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

நாவலர் பெருமான் அவர்களால் அனுதினமும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்;
அன்னாரது உறவு வழியினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வண்ணார் பண்ணை நாவலர் பாடசாலையில் பாதுகாக்கப்பட்டுவரும்
புராதன அச்சு இயந்திரமும் ஏடுகளும் (நாவலர் பெருமான் பயன்படுத்தியவை)

நாவலர் சகோதர வழிக் குடும்பத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வரும்
நாவலர் பயன்படுத்திய நூல்களும், கையெழுத்துப் பிரதிகளும்.



நாவலர் வாழ்ந்த வீட்டின் எச்சம்

சைவப்பிரகாச அச்சியந்திர சாலை

நாவலர் பாடசாலையில் நாவலராற் கட்டுவிக்கப்பட்ட கிணறு

நாவலர் வழிக் குடும்பத்தாரால் நாவலர் நினைவாகப் பாதுகாக்கப்பட்டு வரும் படம்.

யாழ் இந்துக் கல்லூரியில் நாவலர் சிலை

நாவலர் பெயரில் நாவலர் பரம்பரையாக நடாத்தப்பட்டு வரும் முன்பள்ளி

யா/வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை
- நாவலர் மகா வித்தியாலயமாக இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலின் இன்றைய தோற்றம்.
இங்கு தான் நாவலர் பெருமான் முதற் பிரசங்கியானார்.

நாவலர் கலாசார மண்டபம்

நாவலர் மணி மண்டபம்.
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தாற் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இல் நாவலரால் சிதம்பரத்தில் நிறுவப்பட்ட
சைவப்பிரகாச வித்தியாசலையின் இன்றைய பதிவுகள்

கோப்பாய் நாவலர் பாடசாலை



Printed by Kumaran Press (Pvt) Ltd. 0112 364550